அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும்

பதிப்பாசிரியர்கள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்:

அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும்

பதிப்பாசிரியர்கள் :

பேராசிரியர் சி. பத்மநாதன்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2011

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை.

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,

48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.

பக்கங்கள் : XX + 494

பிரதிகள் : 1000

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத் தாள்

விலை : ரூபா. 500/=

Title :

The Period of Ethical Literature and Cultural Traditions of Tamil Society

Editors:

Prof. S. Pathmanathan

K. Raguparan

Dr. S. Pirashanthan

First Edition: 2011

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo 4, Sri Lanka.

Printers:

Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road, Colombo 13. Tel : 2330195

No. of Pages: xx + 494

No. of Copies: 1000

Size: 1/8

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 500/=

ISBN: 978-955-9233-18-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message

Hon. M. K. A. D. S. Gunawardana,
Deputy Minister
of Buddhasasana & Religious Affairs

I have the pleasure of sending this message of felicitation for the Souvenir to be released by the Department of Hindu Religious and Cultural Affairs at the inaugural session of the Annual Research Seminar, 2011.

This Department conducts Research Sessions themes related to Hinduism, Hindu Culture and Tamil Literature. The Scholars from India and Sri Lankan Universities submit research papers at these Seminars. These papers are edited and published by the Department regularly.

Such research Seminars and publications are very much beneficial to the teachers, students of Universities and others who are keen to gather knowledge on the fields.

As Deputy Minister in charge of Religious Affairs I wish all the success for the Seminar.

M. K. A. D. S. Gunawardana
Deputy Minister of Buddhasasana & Religious Affairs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message

Secretary, Ministry of
Buddhasasana & Religious Affairs

I have the pleasure in forwarding this message to the publication consisting of Research Articles submitted during the Seminar held in 2010 organized by the Department of Hindu Religious and Cultural Affairs.

The Research Seminars on various themes were organized annually by the Department of Hindu Religious & Cultural Affairs. Eminent Scholars and Professors from Indian and Sri Lankan Universities were invited to present Research Papers in the Seminar and those Research Papers are compiled and published in the form of books.

I hope that the articles contains in this book titled 'The Period of Ethical literature and Cultural Traditions of Tamil Society' will be very useful to the researchers and the students of the universities and colleges.

I wish all success for the efforts and the endeavours carried out by the Department of Hindu Religious and Cultural Affairs which comes under the purview of the Ministry of Buddhasasana and Religious Affairs.

H. P. Cashian Herath
Secretary, Ministry of Buddhasasana & Religious Affairs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பல்லாண்டுகளாக இந்துசமயப் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான ஆய்வரங்குகளை வருடாந்தம் நடத்தி வருகின்றது. தமிழக நாகரிக வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சென்ற வருடம் செப்ரம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் நடைபெற்ற ஆய்வரங்கம் நீதிநூல்கள் எழுந்த காலமாகிய கி.பி 300-600 ஆண்டுக்காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

இருண்டகாலம் என வர்ணிக்கப்படும் இக்கால வரலாறு தொடர்பாக பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு தலைப்புக்களின்கீழ் தென்னிந்திய அறிஞர்களாலும் இலங்கைப் பேராளர்களாலும் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. வரலாறும் தொல்லியலும், சமயம், தத்துவம், கலைகள், இலக்கியம் முதலான பதின்மூன்று அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 40 கட்டுரைகளில் முப்பது கட்டுரைகளுக்குமேல் இந்நூலில் இடம் பெறுகின்றன.

திணைக்களம் நடத்தும் ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கம் செய்யப்பட்டு அடுத்து நடைபெறும் ஆய்வரங்கில் வெளியீடு செய்து வைக்கப்படும். இவ்வாறான நூல்கள் தொடர்பாக ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உயர்தர வகுப்பிற் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோரிடமிருந்து பெருமளவு வரவேற்புக் கிடைத்துள்ளமை கடந்த வருடங்களில் அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

இந்நூலைச் செம்மையுறத் தொகுக்கும் பணியில் தம்வேலைப்பழுவின் மத்தியிலும் ஈடுபாட்டோடு உழைத்த எமது ஆலோசகர் பேராசிரியர் சி. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.இரகுபரன், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

ஆண்டுதோறும் கருத்தரங்கினைச் சிறப்பாக ஒழுங்கு செய்து நடாத்துவதிலும் பின் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதிலும் அக்கறையோடு ஈடுபட்ட உதவிப்பணிப்பாளர் திரு.ம.சண்முகநாதன், சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன், முகாமைத்துவ உதவியாளர் திருமதி பிறேமா நந்தகுமாரன் ஆகியோருக்கும் எமது பாராட்டுக்கள்.

எமது இவ்வெளியீட்டைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளர் பொன். விமலேந்திரனுக்கும், ஊழியர்களுக்கும் எமது நன்றிகள் உரியன.

அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும் எனும் இந்நூல் இத்துறை சார்ந்த ஆய்வினை மேற்கொள்வோரின் அறிவுத்தேடலைப் பெருமளவு பூர்த்தி செய்யும் என்பது எமது நம்பிக்கையாகும்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

தென்னாசிய துணைக் கண்டத்திலே பேச்சு வழக்கில் உள்ள மொழிகளிலே தமிழ் மொழி மிகவும் புராதனமானது. அதற்கு இரண்டாயிரத்து இருநூறு வருடங்களுக்கு மேற்பட்ட இடையறாத வரலாறு உண்டு. இந்திய இலக்கிய மரபில் தமிழ் இலக்கிய மரபுக்கு பல சிறப்புகள் உண்டு. உலகளாவிய ரீதியிலும் தமிழ் இலக்கியப் படைப்புகள் சில முதன்மையானவற்றுள் அடங்கும். தமிழை ஒரு செம்மொழியாகக் கொள்ளும் மரபு நெடுங்காலமாக நிலைபெற்று வருகின்றது. இந்திய வழக்கில் இரண்டு மொழிகள் மட்டுமே செம்மொழியாகும். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டுமே அவை. இவற்றுள் சமஸ்கிருதம் மிகவும் தொன்மையானது. ஆதியான வேதப்பாடல்களில் உள்ள இருக்கு வேதப் பாடல்கள் இற்றைக்கு மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆதிகாலம் முதலாக ஒரு தொடர்ச்சியான இலக்கிய வரலாறு சமஸ்கிருத மொழிக்கு உண்டு. உலகளாவிய ரீதியில் அதற்கு அடுத்து கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனமொழி ஆகியனவும் மிகவும் பழமையானவை. இவை அனைத்திலும் உள்ள தொல்லிலக்கியங்கள் தமிழ் இலக்கியத்தைக் காட்டிலும் பழமையானவை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை அவை பலதரப்பட்டவை. வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறான பண்புகள் உடைய நூல்கள் எழுந்திருக்கின்றன. இவை தமிழகத்தினுடைய மொழி, இலக்கிய வளர்ச்சி, சமூக பொருளாதார பண்பாட்டு நிலைகள், அரசியல் வாணிப நிலைகள், பன்னாட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகள் என்பன பற்றிய முக்கிய வரலாற்றுக் கருவூலமாக அமைகின்றன. இதனை எவ்வாறு உரிய முறையிலே பயன்படுத்தவேண்டும் என்பது பற்றிய விசாரங்கள் இன்றும் பூர்வாங்க நிலையிலேயே உள்ளன. பிரபல்யமான ஆய்வாளர்கள் பலர் வெவ்வேறான கருத்துக்களைக் கூறுகின்ற பொழுதிலும் அவை எல்லாம் தெளிவான விளக்கங்களாகவோ உறுதியான முடிவுகளாகவோ அமையவில்லை.

ஒரு காலகட்டத்து இலக்கிய வரலாற்றை ஆராய முற்படுமிடத்து அந்தக் காலத்து சமுதாயம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறுவது அத்தியாவசியமானதாகும். தமிழில் எழுந்த இலக்கிய வரலாறுகள் எல்லாம் தமிழகத்து சமூக நிலைகளை ஆழமாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளாத நிலையில் எழுதப்பட்டவை ஆகும். தமிழிலக்கிய வரலாறு பற்றி இதுவரை எழுதப்பட்டவற்றுள் இருவரின் படைப்புகள் முதன்மையானவை. எஸ்.வையாபுரிப்பிள்ளை வெவ்வேறு காலங்களுக்குரிய தமிழ் நூல்களைத் தனியாகவும் ஒப்பீட்டு அடிப்படையிலும் ஆராய்ந்து பெருந்தொகையான நூல்களைப் படைத்துள்ளார். அவர் தமிழ் மொழியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இலக்கியத்தில் அபிமானம் கொண்டவர். சட்டம் பயின்றதனால் அறிவியல் அடிப்படையில் தனது வாதங்களை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய தகைமைகளை இன்றுவரை தமிழில் இலக்கிய வரலாறு எழுதிய எவரும் பெறவில்லை. அதுமட்டுமின்றி ஓரளவிற்கு இந்திய வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் பண்பாட்டு நிலைகளைக் கருத்திற் கொண்டும் அவர் இலக்கிய வடிவங்களையும் வரலாற்றையும் விளக்க முற்பட்டனர். நூல்களின் காலம் பற்றி வையாபுரிப்பிள்ளை சொன்ன கருத்துக்கள் அறிவியல் பூர்வமான சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டவை. அக்காலத்தில் மரபுவழிச் சிந்தனையாளர்களிடையே அவற்றாற் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் இந்நாட்களில் சர்வதேச மட்டத்தில் புலமையாளர்கள் அவற்றை ஒப்புக் கொள்கின்றனர். வையாபுரிப்பிள்ளை தமிழிலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை ஒரு தொடர்ச்சியான சரிதமாக எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களில் முதன்மையானவர் செக்கோசிலாவாக்கிய அறிஞரான கமில் சுவலபில். அவர் சில காலத்திற்குரிய இலக்கியங்களை ஆழமாகக் கற்று கவர்ச்சிகரமான முறையில் எழுதியுள்ளார். பழந்தமிழ் நூல்களைப் பற்றி அவர் எழுதிய விரிவான வரலாறு பிரசித்தமானது. அது பிறர் சொன்னவற்றைக் காட்டிலும் பலவகையிலும் சிறந்தது. தமிழ் செம்மொழிகள் வரிசையில் இடம் பெறுவதற்கு. தகுதியுடையது என்பதைச் சுவலேபில் எதுவித ஐயத்திற்கும் இடமின்றி நிறுவினார். இவருடைய நூல்கள் ஆங்கில மொழியில் அமைந்துள்ளதால் ஈழநாட்டு மாணவர்களும் போதனாசிரியர்களும் அதனைப் படித்துப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை. அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளாது தமிழிலக்கியம் பற்றிச் சொல்லும் கதையெல்லாம் புலமையாளர் மத்தியில் வீண்வார்த்தையாகக் கொள்ளப்படும்.

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருக்கும் காலத்தில் வி.செல்வநாயகம் 'தமிழிலக்கிய வரலாறு - ஒரு சுருக்கம்' என்ற நூலை எழுதினார். இதுவே தமிழிலக்கிய வரலாற்றில் ஆதிகாலம் முதல் நவீன காலம்வரை தொடர்ச்சியாக விளங்குகின்ற முதலாவது நூலாகும்.

நூலாசிரியர் தமிழ் மொழியிலும் இலக்கியங்களிலும் மிகுந்த புலமையுடையவர். ஆங்கில மொழியிலே பயிற்சியுடையவர். ஆங்கில இலக்கியம் பற்றிய விமர்சன நூல்களைக் கற்றறிந்தவர். தலை சிறந்த போதனாசிரியர். அவருடைய நூல் மீண்டும் மீண்டும் பல பதிப்புக்களைக் கண்டது. காலப்போக்கில் விரிவாக்கம் பெற்றது. இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் இந்நூல் எழுதப்பட்டது. அக்காலத்தில் தமிழகத்து வரலாறு தொல்பொருளியல் என்பன வளர்ச்சியடையாத நிலையில் இருந்தன. நூலாசிரியருக்கும் தமிழக வரலாறு பற்றிய பயிற்சி இல்லை. அதனால் அவருடைய நூலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பிரச்சினைகள் இயல்பாகவே எழுகின்றன. காலப்பிரிவு, அவற்றைப் பற்றிய வர்ணனைகள் என்பன பற்றிய பிரச்சினைகள் முக்கியமானவை. சங்க காலம், சங்கம் மருவிய காலம் என ஆரம்ப காலங்களுக்கு மகுடம் இட்டுள்ளார். சங்கம் என்ற புலவர் கழகம் இருந்தமை பற்றி சங்க இலக்கியத்தில் அகச்சான்று இல்லை. சங்கம் பற்றிய கதை எட்டாம் நூற்றாண்டுக்குரிய இறையனார் களவியல் உரையில் வருவது. அந்தக் கதையில் சில அம்சங்கள் பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளிலும் இடம்பெற்றுள்ளன. சங்கம் என்று ஒன்று இல்லாதவிடத்து சங்கம் மருவியது பற்றிப் பேச இயலாது. பல்லவர் காலம் கி.பி.600 முதல் 900 வரை என்பது அவரது வரையறை ஆகும். ஆனால் அதற்கு முன்பு மூன்று நூற்றாண்டுகளாக பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் இருந்து தொண்டை நாட்டில் மேலாதிக்கம் செய்தமையினை அவர்களின் பட்டயங்கள் மூலம் அறிகின்றோம். எனவே தமிழ்நாட்டில், அதன் வடபகுதியில் பல்லவரின் ஆட்சி ஆறு நூற்றாண்டுகள் நிலை பெற்றுள்ளது. இந்த நெடுங்காலத்தை முற்காலப் பல்லவர் காலம், பிற்காலப் பல்லவர் காலம் என இரு பிரிவுகளாக வேறுபடுத்தலாம். ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்றைப் படிக்கும் மாணவர்களிடம் புதிய சிந்தனைகளைப், புரிந்து கொள்ளும் பான்மை ஏற்படுவதில்லை. ஆசிரியர்களும் அதனை ஒப்புக்கொள்வதில்லை. அண்மைக்காலத்து ஆய்வுகளின் முடிவுகளும், ஆங்கில நூல்களிலே சொல்லப்பட்ட தமிழ் இலக்கிய வரலாறுகளும் அவர்களுக்கு அந்நியமானவை. இது பல்கலைக்கழக மட்டத்தில் இந்நாட்களில் ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது. முற்போக்குச் சிந்தனையாளர்களாக பாவனை செய்பவர்களும் மிக இறுக்கமான பின்நோக்கிய பார்வையைக் கடைப்பிடிக்கின்றனர்.

புராதனமான தமிழிலக்கியம் பற்றி ஒரு பிரச்சினை இருந்து வருகின்றது. அகம், புறம் என்னும் வகைகளில் அடங்கிய இலக்கியங்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டன, தொகுப்பவர்களுக்கு எவ்வாறு கிடைத்தன என்பது புரிந்து கொள்ளமுடியாதவையாக உள்ளன. இவை வேதங்களைப் போலவும் திரிபிடகங்களைப் போலவும் மனனம் செய்து செவிவழியாக தலைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையாகப் பேணப்பட்டவை என்று கொள்ளக்கூடியன அன்று. இவ்விடயம் பற்றி ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வது அவசியமாகும்.

சோழர் காலம் தொடர்பாகவும் தமிழிலக்கிய வரலாற்றில் தடுமாற்றம் ஏற்படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை சோழர் காலம் என்று பேராசிரியர் செல்வநாயகர் வர்ணித்துள்ளார். அதன் அடிப்படையில் மெய்கண்டசாஸ்திரம், கந்தபுராணம் முதலிய நூல்களும் சோழர் காலத்தவை என்று குறிப்பிட்டுள்ளார். இதனை எந்த வகையிலும் ஒப்புக்கொள்ள இயலாது. 1215ஆம் ஆண்டு ஆட்சியதிகாரம் பெற்ற மாறவர்மன் சுந்தர பாண்டியன் சில வருடங்களின் பின் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று சோழர்களின் நகரங்களை அழித்து அவர்களின் அபிஷேக மண்டபத்திலே வீராபிஷேகம் செய்து 'சோழநாடு வழங்கி அருளிய பெருமாள்' என்னும் பட்டம் புனைந்து சோழர்கள் மீது மேலாதிக்கம் பெற்றுவிட்டான். இதற்குப் பிற்பட்ட காலத்தை சோழர் காலம் என்று கொள்வது எவ்வாறு பொருந்தும்?. அந்தக் காலம் பாண்டியரின் புத்தெழுச்சிக் காலமாகும்.

கி.பி 300-600 வரையான காலப்பகுதியில், பதினென் கீழ்க் கணக்கு வரிசையில் உள்ள நூல்களில் பெரும்பாலானவை தோன்றின. அவற்றுட் பெரும்பாலானவை அற நூல்களாகும், சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் காவியங்களும் அக்காலத்திலே தோன்றின. அவையும் பெரும்பாலும் அறங் கூறும் தன்மை உடையனவே. இக்காலத்திலே பழந்தமிழ் இலக்கியங்கள் பிரதி பலிக்கும் மொழிநடையும் இலக்கிய மரபும் பெருமளவிற்கு வழக்கற்று விட்டன. பொருள் மரபு மாற்றத்தின் தெளிந்த திருந்திய வடிவமாக திருக்குறள் அமைகிறது. அறநூல்களிலெல்லாம் தலையாயது என்ற சிறப்பினை அது பெற்றுவிடுகின்றது. இந்திய அறநூல்களிலே முதன்மையானது என்ற நிலை அதற்குக் கிடைத்து விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சென்ற ஆண்டு நடாத்தப்பட்ட கருத்தரங்கிலே இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இந்தியப் பல்கலைக்கழகங்களையும் பிற உயர் நிறுவகங்களையும் சேர்ந்த அறிஞர்களும் பங்குகொண்டு கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

கருத்தரங்கு நான்கு நாட்களாக நடைபெற்றது. அவற்றிலே பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டமை சிறப்பம்சம். அவர்கள் பயனடையவேண்டும் என்பதற்காகவே அவர்களை இவற்றிற்கு அழைக்கின்றோம். கருத்தரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளிலே பல கட்டுரைகள் உயர் ரகமானவை. கட்டுரையாசிரியர்களில் இருவர் எழுதிய கட்டுரைகள் குறிப்பிடப்படவேண்டியன. பாண்டிச்சேரி பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் க. இராஜன் எழுதிய கட்டுரைகள் தொல்லியல் நோக்கில் பழந்தமிழ் நூல்களை ஆராய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. அந்தக்காலத்து நூல்களிற் சொல்லப்படும் சமூக வர்ணனைகளைப் புரிந்து கொள்வதற்கு தொல்லியல் பற்றிய அறிவு இன்றியமையாதது என்பதனை உணர முடிகின்றது. உறுகுணைப் பல்கலைக்கழகத்து சிங்கள மொழித்துறை விரிவுரையாளரான திரு. தம்மிக்க ஜயசிங்க அவர்களுடைய கட்டுரை இளம் ஆய்வாளர்களின் கட்டுரைகளில் உன்னதமாக விளங்குகின்றது. அவர் தமிழ் மொழியைப் படித்து தமிழ் நூல்களிலுள்ள கருத்துக்களை அடையாளம் கண்டு அவை சிங்கள இலக்கியத்தில் எத்தகைய செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளன என்பதனைத் தகுந்த உதாரணங்களோடு விளக்கியுள்ளமை பாராட்டிற்குரியதாகும். பண்பாட்டுப் பரிமாற்றம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு அது சிறந்த உதாரணமாகும்.

பேராசிரியர் சி. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

தொல்லியலியலும் வரலாறும்

- **புதிய அரசுகளும் சமய மரபுகளும்: தமிழகத்தில் பௌத்தம்** 03
  சி. பத்மநாதன்

- **களப்பிரர் வரலாறு** 33
  சொ. சாந்தலிங்கம்

- Memorial Stones of Tamil Nadu - A Case Study of Life after Death 57
  K. Rajan

- Archaeological Excavations at Porunthal 81
  K. Rajan

சமயமும் சமூகமும்

- **அறநெறிக்கால இலக்கியங்களில் வைணவம்** 97
  சு. வேங்கடராமன்

- **பலதேவன் வழிபாடு** 109
  சு. வேங்கடராமன்

- **சிலப்பதிகாரம் மணிமேகலை சித்திரிக்கும் விழாக்கள்** 119
  வசந்தா வைத்தியநாதன்

- **அறநூல்களில் பெண்கள்** 132
  செ. யோகராசா

- **சிலப்பதிகாரம் புலப்படுத்தும் சைவ நெறி** 145
  மா. வேதநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✣ **பக்தி இலக்கிய மரபில் காரைக்கால் அம்மையார்** 157
ம. நதிரா

✣ **சங்கம் மருவிய காலத்தில் சைவம்** 181
விக்னேஸ்வரி பவநேசன்

✣ **களப்பிரர் ஆட்சியில் வைதிக சமயம்** 190
சைவப்புலவர் சு. துஷ்யந்

✣ **நாலடியாரில் பெண்கள்** 208
செல்வகுமார் சிவலிங்கம்

இலக்கியமும் கலையும்

✣ **அறநெறிக் கால இலக்கியங்கள் – சில விவாதங்கள்** 227
சு. வேங்கடராமன்

✣ **கவிதையாக்க நோக்கில் அற இலக்கியங்கள்** 240
பழ. முத்துவீரப்பன்

✣ **அறநெறிக்கால அழகியற் சிந்தனை** 258
ஏ. என். கிருஷ்ணவேணி

✣ **அறநெறிக்கால இலக்கியங்களின் அழகியலில் அரசியல்** 272
க. இரகுபரன்

✣ **ஆய்வு நோக்கில் திருக்குறள் அதிகாரங்கள்** 290
ஸ்ரீ. பிரசாந்தன்

✣ **திருக்குறளில் இழையோடியுள்ள அறிவாராய்ச்சியியல் நுட்பங்கள்** 312
ச. முகுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமும் அறமும்

✣ பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் அரசியல் அறம் 333

பழ. முத்துவீரப்பன்

✣ நான்மணிக்கடிகை 348

பழ. முத்துவீரப்பன்

✣ அறம்: தமிழிலும் வடமொழியிலும் 362

வி. சிவசாமி

✣ ஆசாரக்கோவையும் அறமும் 375

வ. மகேஸ்வரன்

✣ பழமொழி நானூறும் சமூக நோக்கும் 382

செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

✣ அற இலக்கியங்களில் நட்பு 394

றூபி வலன்ரீனா பிரான்ஸிஸ்

✣ சிறுபஞ்சமூலம் சித்திரிக்கும் ஒழுக்கவியல் 415

சுகந்தினி சிறிமுரளிதரன்

✣ அறநெறிக்கால இலக்கியங்கள் காட்டும் விருந்தோம்பற் பண்பு 428

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

✣ கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் 442

ம. பாலகைலாசநாதசர்மா

✣ ஏலாதியும் மனித நேயமும் 458

சாந்தி கேசவன்

✣ நன்றே வாழ்க அன்றேல் மாழ்க 472

மா. ரூபவதனன்

✣ சிங்கள இலக்கியங்களில் தமிழ் நீதி இலக்கியங்களின் செல்வாக்கு 482

தம்மிக்க ஜயசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையாளர்கள்

- கலாநிதி சி. பத்மநாதன்
  தகைசார் பேராசிரியர்,
  வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

- சொ. சாந்தலிங்கம்
  முதுநிலை ஆய்வாளர்,
  சொல்லியல் துறை, தமிழ் நாடு.

- கலாநிதி கே. இராஜன்
  பேராசிரியர், வரலாற்றுத்துறை,
  பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி சு. வேங்கடராமன்
  முன்னைநாட் தலைவர்,
  தமிழ்த்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,.

- வித்துவான் வசந்தா வைத்தியநாதன்
  ஆலோசனைக் குழு உறுப்பினர்,
  இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

- கலாநிதி செ. யோகராசா
  பேராசிரியர் மொழித்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் மா. வேதநாதன்
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- ம. நதிரா
  தலைவர்,
  மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

- விக்கினேஸ்வரி பவநேசன்
  முதுநிலை விரிவுரையாளர்,
  இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செல்வகுமாரி சிவலிங்கம்
  உதவி விரிவுரையாளர்,
  தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.

- சைவப்புலவர் சு. துஷ்யந்த்
  எழுத்தாளர் குழு உறுப்பினர், இந்துக் கலைக் களஞ்சியம்,
  இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

- கலாநிதி பழ. முத்துவீரப்பன்
  பேராசிரியர், தமிழ்த்துறை
  அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி
  தலைவர்,
  நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- க. இரகுபரன்
  முதுநிலை விரிவுரையாளர்,
  மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
  விரிவுரையாளர்,
  ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

- கலாநிதி வ. மகேஸ்வரன்
  முதுநிலை விரிவுரையாளர்,
  பேராதனைப் பல்கலைக்கழகம்.

- ச. முகுந்தன்
  விரிவுரையாளர்,
  இந்து நாகரிகக் கற்கைகள் புலம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி வி. சிவசாமி
  முன்னைநாள் பேராசிரியர்,
  சமஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ கலாநிதி சி. செல்வரஞ்சிதம்
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✤ றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை, கிழக்குப் பல்கலைக் கழகம்.

✤ சுகந்தினி சிறிமுரளிதரன்
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✤ ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✤ ம. பாலகைலாசநாத சர்மா
முதுநிலை விரிவுரையாளர்,
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

✤ சாந்தி கேசவன்
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகக் கற்கைகள் புலம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

✤ மா. ரூபவதனன்
விரிவுரையாளர்,
ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்.

✤ தம்மிக்க ஜயசிங்க
விரிவுரையாளர்,
சிங்களத்துறை, ருஹுணு பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசுகளும் சமய மரபுகளும்: தமிழகத்திற் பௌத்தம் (கி.பி 300 - 650)

சி. பத்மநாதன்

களப்பிரரும் பல்லவரும்

கி.பி. நான்காம் நூற்றாண்டு முதலாகவுள்ள மூன்று நூற்றாண்டுகளிலே தமிழகத்திற் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. சோழ, பாண்டிய நாடுகளிற் பாண்டியரதும் சோழரதும் ஆட்சி மறைந்தது. களப்பிரர் என்னும் புதியவொரு வம்சத்தவரின் ஆட்சி அவற்றில் ஏற்பட்டது. வடக்கிலே தொண்டை நாட்டிற் பல்லவர்கள் ஆதிக்கம் பெற்றனர். காஞ்சிபுரம் அவர்களின் இராசதானியாக விளங்கியது. அது படிப்படியாக வளர்ச்சி பெற்றுத் தமிழகத்தின் முதன்மை நகரமாக எழுச்சி பெற்றது.

உலகியலையும் இயற்கை நெறியினையும் கருப்பொருளாகக் கொண்ட இலக்கிய மரபு வழக்கொழிந்தது. அதனிடத்திலே அறவியலை முன்னிலைப் படுத்தும் இலக்கிய நெறி கிளர்ந்தது. அது மாறிவரும் சமூக நிலையைப் பிரதிபலித்தது. மன்னர்களையும் வேளிர்களையும் போற்றிப் பாடும் பாணரும் பிற பாவலரும் ஒதுங்கிவிடுகின்றனர். பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்களை எழுதக்கூடிய சூழ்நிலை மறைந்து விடுகிறது. அகத்திணை நூல்களை எழுதுவதற்கும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் இக்காலப் பகுதியில் முன்வரவில்லை. பழந்தமிழ் நூல்களை இலக்கிய ஆர்வலர் தொடர்ந்தும் கற்றனர். அவற்றை அழிவிலிருந்தும் பேணுவதற்கான வழிவகைகளையும் கண்டறிந்தனர். ஆயினும் பழைய இலக்கிய மரபு வரலாற்று அம்சமாகிவிடுகின்றது.

இக்காலத்திலே இலக்கியநெறி சமயவாதிகளோடு பந்தமாகிவிடுகின்றது. சைவம், வைணவம், சமணம் ஆகிய நெறிகள் இக்காலத்திலே பெருவளர்ச்சி அடைந்தன. பௌத்தமும் இக்காலத்திலே பரவியது. இந்நால்வகைச் சமயங்களும் இந்தியப் பரிமாணங் கொண்டவை. பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய தொடர்பு மொழிகளின் செல்வாக்குப் பரவியது. அந்தணர் அக்கிரகாரங்களிலும் சமண, பௌத்தப் பள்ளிகளிலும் அம்மொழிகளைப் பயின்றனர். சமயநெறிகளின் மேலோங்கிய செல்வாக்கினாலும். இக்காலத்தில் வளர்ச்சிபெற்ற கல்வி நிறுவனங்கள் மூலமாகவும் சமஸ்கிருத இலக்கியத்தின் செல்வாக்கு வேகமாகப் பரவியது. வேதம், ஆகமம், வேதாங்கம், புராணம், இதிகாசம், காவியம், வியாகரணம், அணியிலக்கணம், அர்த்தசாஸ்திரம், தர்மசாஸ்திரம் ஆகியவை கற்றோரிடையில் அறிமுகமாகின. அவற்றின் செல்வாக்கினால் இலக்கியநெறியிற் பெருமாற்றம் ஏற்பட்டது. புதியதோர் இலக்கிய மரபு உருவாகியது. அதன் பொருள்மரபும் வடிவமைப்பும் முன்னையதிலிருந்தும் வேறுபட்டதாகும். பதினெண் கீழ்க்கணக்கு என்று வரிசைப்படுத்திய நூல்களில் பெரும்பாலானவை அப்புதிய மரபைப் பிரதிபலிக்கின்றன. அறநூல்களும் முதலிரு காப்பியங்களும் அவற்றுள் அடங்கும். அவை மன்னர்களைப் பற்றிப் பாடவில்லை. மன்னரின் ஆதரவுடனும் அவை பாடப்படவில்லை.

அரசியல் மாற்றங்கள்

புறநானூறு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி போன்ற பழந் தமிழ் நூல்கள் வாயிலாக அறியப்படும் சோழ, பாண்டிய வம்சங்கள் அதிகாரம் இழந்தன. அவை மீட்சிபெற நெடுங்காலஞ் சென்றது. அவர்களின் நாடுகளிற் களப்பிரரின் ஆட்சி ஏற்பட்டது. அவர்களைப் பற்றிய வரலாறு தெளிவற்றது. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சாளுக்கியர், பல்லவர், பாண்டியர் ஆகியோரின் சாசனங்கள் களப்பிரரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றன. அச்சாசனக் குறிப்புகள் களப்பிரர் வம்சத்து மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை; அவர்கள் மீதான போர் வெற்றிகளைக் குறிப்பிடுகின்றன. தமிழகத்திலே களப்பிரர் ஆதிக்கஞ் செலுத்தியமைக்கு அத்தகைய குறிப்புகள் சான்றாகலாம்.

பௌத்த துறவியான புத்ததத்தர் **விநயவிநிச்சய** என்ற தனது நூலில் அச்சுத விக்கிராந்தன் என்னும் களப்பிர மன்னனைக் குறிப்பிடுகின்றார்.[1] இது ஒன்று மட்டுமே களப்பிர மன்னன் ஒருவனின் பெயரைக் குறிப்பிடும் சமகாலக் குறிப்பாகும். புத்ததத்தர் **விநயவிநிச்சய**வை கி.பி 500ஆம் ஆண்டளவில் எழுதினார் என்பர். காவிரிக் கரையினிலே வேணுதாசன் என்னும் பெருவணிகனால் அமைக்கப்பட்டதும் மரச்சோலைகள் சூழ்ந்ததுமாகிய விகாரமொன்றில் வாழ்ந்த காலத்தில் இந்நூலை எழுதியதாகப் புத்ததத்தர் குறிப்பிடுகிறார்.[2] அவரது காலத்திலே கி.பி. ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற் சோழ நாட்டிற் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டிருந்தமைக்கு அவரது குறிப்பு ஆதாரமாகும்.

களப்பிரர் காலம் பற்றிய ஆய்வுகளிற் பூலாங்குறிச்சிச் சாசனங்கள் மிகுந்த முக்கித்துவம் பெறுகின்றன. பூலாங்குறிச்சி என்பது இராமநாதபுர மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். அங்குள்ள நீர்ப்பாசனக் குளமொன்றின் வாய்ப்பகுதியின் அண்மையிலுள்ள கற்பாறை ஒன்றின் சரிவில் மூன்று சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன.[3] அவற்றின் வரிவடிவங்கள் வட்டெழுத்தின் ஆரம்பநிலைக்கு உரியவை. அதனால் அவற்றை கி.பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுக்கு உரியவை எனக் கொள்ளலாம் என்பது சாசனவியல் விற்பன்னரான பேராசிரியர் எ. சுப்பராயலுவின் கருத்தாகும்.[4] சாசனங்களில் எழுதப்பட்டுள்ள விபரங்களும் அக்கருத்தினை வலியுறுத்துவனவாகும்.

பூலாங்குறிச்சியிற் காணப்படும் கல்வெட்டுகளின் விபரங்கள் சில தெளிவற்றனவாகும். அவற்றின் பகுதிகள் சிலவற்றில் எழுத்துகள் சிதைவுற்றுள்ளதால் சாசனங்களின் முழுமையான, தொடர்ச்சியான வாசகங்களைப் பெறமுடியவில்லை. முதலாவது சாசனம் ஓரளவு நன்கு பேணப்பட்ட நிலையிற் காணப்படுகின்றது. இரண்டாவது சாசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகவே சிதைவாகிவிட்டது. மூன்றாவது சாசனத்திற் சிதைவின் காரணமாகச் சில பகுதிகள் அழிந்துவிட்டன.[5] ஆயினும் சாசனப் படிகளைப் படித்து அறிந்த விபரங்கள் வேறெங்கும் கிடைக்காதவை; அவை தென் தமிழ்நாட்டு அரசியல், பொருளாதார அமைப்புகள் பற்றியும் சமய, சமூக நிலைகள் பற்றியும் புத்தொளி பாய்ச்சும் பாங்கிலானவை.

முதலாவது கல்வெட்டு 192ஆவது வருஷத்திலே சேந்தன் கூற்றன் என்னும் அரசனுடைய 36ஆம் நாளைக் குறிப்பிடுகின்றது.[6] அந்நாள் தை மாதம் முன்பக்கத்து 12 ஆம் நாளாகும். வேள் மருகனின் மகனாகிய எங்குமான் என்னும் **கடலகப் பெருந்தலைவன்** அமைப்பித்த மூன்று ஆலயங்களைப் பற்றிச் சாசனங் குறிப்பிடுகின்றது. அவையாவன:

(1) ஒல்லையூர்க் கூற்றத்து வேள் – கூரு என்னுமிடத்துப் பச்சேறிச்சில் என்னும் குன்றிலுள்ள தேவகுலம்,

(2) முத்தூற்றுக் கூற்றத்திலுள்ள விளமறுவிலுள்ள தேவகுலம்,

(3) மதுரை உலவியத்தான் குளத்து வடபால், அமைந்த தாபதப் பள்ளியிலுள்ள வாசுதேவனார் கோட்டம்.[7]

அவற்றின் பாதுகாப்பும் அறங்காவலும் அத்திகோய(க)த்தார், உள்மனையார், நால்வகைத் திணையார் என்போரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் கோயில்களில் வழிபாடுகளையும் தான தருமங்களையும் பாண்டங்கர், சேவு(க்)கர், விருமச்சாரிகள், தருமிகள் ஆகியோர் மட்டுமே செய்யக்கடவராகவும் என்று சாசனத்திலே சொல்லப்படுகின்றது.[8]

பச்சேறிச்சில் குன்றத்துத் தேவகுலத்தைப் பொறுத்தவரையில் குழலூருத் துஞ்சிய உடையார் வேள்கூரிற் குடியிருத்திய குடும்பிகளே பரம்பரை வழியாக எல்லாக் கடமைகளையும் செய்யவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.[9] அரசனது கட்டளையைக் கேட்டவர்கள் உலவியப் பெருந்திணை என்னுங் குழுவிலுள்ள நல்லன் கிழான் எயினன் குமணன்...று கிழான் கீரன் காரி அம்பரு கிழான் குமாரன் போந்தை என்போராவர். அந்தக் கட்டளையை ஒலை எழுதும் தாமன் காரி கண்ணன் கொடுக்க அதனை வேண்ணாட்டான் நரியன் காரி கடைப்பு ஒலையாக எழுதினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது சாசனம் 190ஆவது ஆண்டைக் குறிப்பிடுகின்றது. இதிலும் வேள்மருகனது மகனான கடலகப் பெரும்படைத் தலைவன் செய்த ஏற்பாடுகள் பதிவாகியுள்ளன. சேந்தன் என்னும் அரசனைப் பற்றிச் சொல்லப்படுகின்றது. எழுத்துகள் சிதைவுற்றதால் அவனைப் பற்றிய அடைமொழிகளை அறிய முடியவில்லை. அச்சாசனம் குறிப்பிடும் மன்னர்கள் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆதிக்கம் பாண்டிநாடு, கொங்குதேசம் ஆகியவற்றில் ஏற்பட்டிருந்தது.

தமிழகத்தில் ஏற்பட்டிருந்த ஒரு முறையான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட முடியாட்சி முறையினை அறிமுகப்படுத்தும் முதலாவது தமிழ்ச் சாசனங்கள் என்ற சிறப்பு பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளுக்கு உரியதாகும். அவ்வாறான ஒரு நிர்வாக முறையினைத் தொண்டை நாட்டிற் பல்லவர்கள் உருவாக்கினார்கள். அவர்களின் ஆதியான சாசனங்கள் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள தேவகுலங்களுக்கும் பிரமதேயங்களுக்கும் அரசர் வழங்கிய நன்கொடைகள் பற்றியவை.

படையிலும் நிர்வாகத்திலும் சேவை புரிந்த பிரிவினர் சிலரின் பெயர்கள் இவற்றிலே காணப்படுகின்றன. **அத்திகோயத்தார், உள்மனையார்** என்பன காவல்புரிந்த படைப்பிரிவுகளின் பெயர்களாதல் வேண்டும். பத்தாம் நூற்றாண்டு முதலாக எழுதப்பட்ட ஐந்நூற்றுவர் என்னும் வணிக கணத்தாரின் சாசனங்களில் யானைப்படை அத்திகோசம் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்திகோயம் என்பதை அத்திகோசம் என்பதன் முன்னோடியான வடிவம் என்று கொள்ளலாம்.[10] **உள்மனையார்** என்பது **அகம்படி** என்னும் காவற்படைப் பிரிவினரின் பெயரை ஒத்தது.[11] இச்சாசனங்கள் குறிப்பிடும் கடலகப் பெருப்படைத் தலைவன் என்னும் பட்டம் சேனாதிபதி ஒருவனுக்கு உரியதாகும். **கடலகப் பெரும்படை** என்பது சேந்தன் வசமாயிருந்த கடற்படையினைக் குறிக்கும் என்று கருதலாம்.

நிர்வாகக் கட்டமைப்பிலே நால்வேறு துறைகளுக்குப் பொறுப்பானவர்களை இச்சாசனங்கள் நால்திணை என்று குறிப்பிடுகின்றன.[12] அவர்களில் ஒரு சாரார் **உலவியப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்திணையார். அக்குழுவைச் சேர்ந்த நல்லன் கிழான் எயினன் குமரன், அரசன் மொழிந்த கட்டளையைக் கேட்டவன் என்று முதலாவது சாசனம் குறிப்பிடுகின்றது. அவனது பதவி நிலை சோழப் பேரரசர் காலத்து ஆவணங்கள் குறிப்பிடும் திருவாய்க்கேள்வி என்பதற்கு ஒப்பானது. கிழான் கீரன் காரி, அம்பரு கிழான் குமரன் போந்தை என்போரும் அவனோடு இருந்தனர். அவர்களும் உலவியப் பெருந்திணையார். அவர்களின் முன்னிலையில் அரசனது கட்டளையினை எழுதியவன் தாமன் காரி கண்ணன் என்னும் பெயருடையவன். அதனை இறுதி ஆவணமான **கடைப்பி ஓலையாக** வேணாட்டான் நரியன் காரி எழுதினான்.

நிலப்பாகுபாடு, நிலபோகம் என்பன பற்றிய வரையறையான பிரிவுகள் இச்சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் உருவாகிவிட்டன. நன்செய், புன்செய் என்னும் விவசாய நிலங்களின் பாகுபாடு இக்காலத்தில் வழமையாகிவிட்டது. கிழமை, காராண்மை, மீயாட்சி என்னும் நிலபோக உரிமை பற்றிய சொற்கள் இவற்றிலே காணப்படுகின்றன.[13] வெள்ளாற்று மங்கலம், கடலூர் நாட்டுப் பிரமதேயமான சிற்றையூர் என்னும் இரு பிரம தேயங்கள் குறிக்கப்படுகின்றன. அவர்களின் உடைமையான நிலங்கள் பிரமதேயக் கிழமை என்று சொல்லப்படுகின்றன.

கோயில்களுக்குப் பரந்த அளவில் நிலங்கள் மானியமாக வழங்கும் முறை இக்காலத்திலே தோன்றிவிட்டது. பச்சேறிச்சில் குன்றத்துத் தேவகுலம் பாண்டி நாடு, கொங்கு தேசம் என்பனவற்றில் விளைநிலங்களை நன்கொடைகளாகப் பெற்றிருந்தது. அவற்றில் அதற்குக் **காராண் கிழமை, கலக் கிழமை, மெல்லாண்மை** என்னும் உரிமைகள் இருந்தன. பயிர்களைச் செய்கை பண்ணும் உரிமை, குடிகளுக்குரியது என்பதும் அவ்வுரிமையினை அனுபவிப்பதன் காரணமாக, குடிகள் கோயிலிற் கடமை புரியவேண்டும் என்பதும் நியதியாகும்.

பூலாங்குறிச்சிச் சாசனங்கள் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரச உருவாக்கத் தின் ஒரு பிரதானமான படிநிலையைக் குறிக்கின்றன. அந்நிலை பழந்தமிழ் நூல்களிற் காணப்படுவதிலும் மிகவும் முன்னேற்றமானது; அரசு பலமானது; அதன் பிரதேச ஆதிக்கம் பரவலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில மானியங்களை வழங்கும் அதிகாரத்தை அரசர் கொண்டிருந்தனர். குடிகளின் உரிமைகளையும் நிலபோக முறை தொடர்பான உரிமைகளையும் அவர்களால் வரையறை செய்ய முடிந்தது. தேவார முதலிகளினதும் முதலாழ் வார்களதும் காலத்திற்கு முன்பு தமிழகத்துக் கோயில்கள் சில நில மானியங்களைப் பெற்றுவிட்டன. நிலங்களிற் காராண்மை உரிமை பெற்ற உழவர் குடிகள் ஆலய சேவைகளோடு பந்தமாகிவிட்டன.

சைவ, வைணவ ஆலயங்களுக்கு நன்கொடை வழங்கி ஆதரவு புரிந்த அரசரும் பிரதானிகளும் சமணம், பௌத்தம் முதலான சமயங்களுக்கும் ஆதரவு புரிந்தனர். கி.பி. **300 – 600** ஆகிய காலப்பகுதியில் எல்லாச் சமய நெறிகளும் வளர்ச்சி அடைந்தன. அவற்றிலே சைவம், வைணவம் ஆகியனவே முதன்மை பெற்றிருந்தன என்பதைத் தமிழ் இலக்கியக் குறிப்புகளால் உணரமுடிகின்றது. சுவன் சாங் எழுதிய குறிப்புகளாலும் இது உறுதியாகின்றது.

காவிரிப்பூம் பட்டினத்து இந்திரவிழாவின்போது பல்சமய நிறுவனங்களும் பங்கு கொண்டன. அவற்றுள் வைதீக சார்புடைய கோயில்களை இளங்கோ முதன்மைப் படுத்துகின்றமை மேல்வரும் அடிகளாற் புலனாகின்றது.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்

....

அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத்தானமும்
திறவோர் உரைக்குஞ் செயல்சிறந்து ஒருபால்.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரிப்பூம்பட்டினத்துக் கோயில்கள் சிவன், திருமால், பலராமன், முருகன் ஆகியோரை வழிபடற்குரியவை என்பது இவற்றினாலே புலனாகின்றது. அங்கு வேதாகம நெறிப்படி அந்தணர் ஆராதனை செய்தனர். சிலப்பதிகாரம் தேவார முதலிகளுக்கு முற்பட்டதெனின் அதன் காலம் களப்பிரரின் காலமாகும். காவிரிப்பூம் பட்டினமும் அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி.பி. 500 ஆம் ஆண்டளவிலே அந்நகரில் வாழ்ந்தவரான புத்ததத்தர் அங்கு களப்பிர குல நந்தனனாகிய அச்சுத விக்கிராந்தனின் ஆட்சி நடைபெறுவதாகக் குறிப்பிடுகின்றார்.

களப்பிரர் காலத்தில் நால்வேறு சமயங்களும் பரவியிருந்த போதும் வைதீக சமயங்களே மேலோங்கிய நிலையிற் காணப்பட்டமைக்குச் சிலப்பதிகாரம் சான்றாகும். பௌத்த சமயப் பிரசார நூலான மணிமேகலையும் காவிரிப்பூம் பட்டினத்துக் கோயில்களிற் சிவன் கோயிலை முதன்மைப் படுத்தி மேல்வருமாறு வர்ணிக்கின்றது.

நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக,
வேறு வேறு சிறப்பின் வேறு வேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்.[15]

மேலும், சிலப்பதிகாரத்திற் பல இடங்களிலே குமார கோட்டம், திருமால் கோட்டம், அம்மன் கோயில் என்பன பற்றிய விபரங்கள் சொல்லப்படுகின்றன. களப்பிரர் ஆட்சியிலே சைவம், வைணவம் ஆகியவை வலிகுன்றிவிட்டன, அவைதீக சமயங்களே மேலோங்கியிருந்தன என்ற கருத்து, அடிப்படையில் ஆதாரமற்றது. அது கிடைக்கின்ற பலவேறு சான்றுகளையும் ஒப்பிட்டு, அவதானமாக மதிப்பீடு செய்யாமையால் எழுந்த ஒன்றாகும்.

நாயன்மார்க்ளும் ஆழ்வார்களும் போற்றிப் பாடுகின்ற திருத்தலங்கள் பிற்காலப் பல்லவர் காலத்திற்கு (600–850) முற்பட்டவை. அவை நீண்ட கால வரலாறு கொண்டவை. அவை செங்கல், சுதை, மரம், உலோகம் என்னும் கலப்புப் பொருள்களால் உருவாக்கப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை தொடர்பான மங்கல நிகழ்ச்சிகளில் வைதீக சடங்குகள் வழமையாகி விட்டதற்குக் கோவலன், கண்ணகி ஆகியோரின் மணவினை பற்றிய சிலப்பதிகார வர்ணனை ஓர் உதாரணமாகும். இளங்கோ அதனை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

இருபெருங் குரவரும் ஒரு பெரு நாளால்
மண அணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துளி,
யானை எருத்தத்து, அணி இழையார்
மேல் இரீஇ மாநகர்க்கு ஈந்தார் மணம்
அவ்வழி,
முரசு இயம்பின; முருடு அதிர்ந்தன:
முறை எழுந்தன பணிலம்; வெண்குடை
அரசு எழுந்ததோர் படி எழுந்தன
அகலுள் மங்கல அணி எழுந்தது,
மாலை தாழ் சென்னி வயிரமணித் தூணகத்து,
நீல விதானத்து, நித்திலப்பூம் பந்தர்க் கீழ்,
வான்ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை. [16]

கோவலன், கண்ணகி ஆகியோரின் பெற்றோர்கள் சிறப்பான நாளொன்றில் அவர்களுக்குத் திருமணஞ் செய்ய ஏற்பாடு செய்தனர். அழகிய ஆபரணங்களை அணிந்த பெண்களை யானை மேல் ஏற்றி அவர்கள் மூலம் நகரில் மணவினை பற்றி அறிவித்தனர். அரசன் உலாப் போனவாறு, பல்லின வாத்தியங்களோடு மணமகனை அழைத்துச் சென்றனர். சித்திரக் கோலமான மண்டபத்திலே வனப்பு மிகுந்த மணவறையிலே திருமணம் நடந்தது. மாமுது பார்ப்பான் வேதவிதிப்படி சடங்கினைச் செய்ய, மணமக்கள் தீ வலம் வந்தனர். அந்தக் கோலத்தைப் படிப்போர் வியக்கும் வண்ணமாக இளங்கோ நயம்பட வர்ணிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவரும் தொடர்பு மொழிகளும்

சோழ, பாண்டிய நாடுகளிற் பழைய அரசர் குலங்கள் மருவிக் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டிருக்கையிலே தமிழகத்தின் வடபகுதியான தொண்டை நாட்டிற் பல்லவர்கள் பலம் மிக்க இராச்சியம் ஒன்றை உருவாக்கினார்கள். அந்த இராச்சியத்தின் ஆரம்பகால வரலாறும் தென்னிந்தியாவில் ஏற்பட்ட அரச உருவாக்கத்தில் ஒரு சிறப்புமிக்க கட்டமாகும். தொண்டை நாடு முற்காலங்களில் முல்லை நிலப் பகுதியாக விளங்கியது. அங்கு ஆயர், இடையர், முல்லையர், அண்டர், குறும்பர் முதலிய பூர்வகுடியினர் வாழ்ந்தனர். அவர்கள் மந்தைமேய்க்கும் வழக்கமுடைய புதிய கற்காலப் பண்பாட்டு மக்களின் வம்சாவழியினர். பெருங்கற்படைக் காலப் பண்பாடு அவர்களிடையிற் பரவியதால் பரந்தளவிலே பயிர்களை உண்டுபண்ணி வேளாண்மை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. நெல், பயறு, உழுந்து, வரகு, தினை முதலிய தானியங்களையும் பெருமளவில் உற்பத்தி செய்தனர். கரும்பு, பருத்தி ஆகியவற்றின் செய்கை பெரு முன்னேற்றங் கண்டது. மேலதிகமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதாற் பண்டமாற்று நிலையங்களான பெருஞ் சந்தைகள் உருவாகின. காஞ்சிபுரம் அவற்றில் முதன்மை நிலை பெற்றது. அங்கு பருத்தி, எண்ணெய், வெல்லம், தானியம் என்பன பெருமளவிலே விற்பனையாகின. நெடுந் தூரம் பிரயாணங்களில் ஈடுபடும் வணிகரும் உள்ளூர் வணிகரும் அங்கு கூடினார்கள். காஞ்சிபுரம் வணிக நகரமாகித் தமிழகத்தின் மாநகரம் என்ற நிலையை அடைந்தது.

காஞ்சிபுரத்திலே திரையருக்குப் பின் பல்லவர் ஆட்சியதிகாரம் பெற்றனர். அது எவ்வாறு நடந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. வரலாற்றாசிரிய ரிடையிலும் பல்லவரின் உற்பத்தி பற்றி ஒருமிதமான கருத்தில்லை. பல்லவரின் பட்டயங்கள் அவர்களைப் பிரம்ம–க்ஷத்திரியர் என்றும் சிரஞ்சீவியான அஸ்வத்தாமனின் வழிமுறைச் சந்ததியினரென்றும் வர்ணிக்கின்றன. அப்பட்டயங்களில் வரும் ஆதியான பல்லவ மன்னரின் பெயர்கள் புராணங்களிலுள்ள பட்டியல்களிற் காணப்படுபவற்றை ஒத்தவை. பல்லவரைக் **காடவர்கோன்** என்று தமிழ் நூல்கள் குறிப்பிடும்.

கி.பி. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலே, தொண்டை நாட்டிலே, பல்லவரின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. குப்தப் பேரரசின் ஸ்தாபகனாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரகுப்தன் தக்ஷிணாபதம் மீது படையெடுத்துச் சென்றபொழுது காஞ்சி அரசனாகிய விஷ்ணு கோபனை வெற்றிகொண்டான் என்று அல்லாஹபாத் பிரசஸ்தி குறிப்பிடுகின்றது. பல்லவரின் பட்டயங்களில் விஷ்ணு கோபனின் பெயர் காணப்படுகின்றது. அவற்றிலே காணப்படும் பல்லவ மன்னர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலில் அவனுக்குமுன் ஆட்சி புரிந்த பல்லவர் சிலரின் பெயர்கள் அடங்கியுள்ளன. ஆகவே விஷ்ணுகோபன் பதவி பெறுவதற்குச் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே காஞ்சியிற் பல்லவரின் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. அக்காலம் முதலாக ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அவர்களின் ஆட்சி நிலைபெற்றது. முற்காலப் பல்லவர் பலம் மிக்கவர்கள். அவர்களின் ஆட்சிப்புலம் மிகவும் பரந்தது. தெலுங்கு தேசத்தின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றி, பல்லவர் அங்கு தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினார்கள். சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசி, ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மகேந்திரவர்மனிடமிருந்து வேங்கி தேசத்தைக் கைப்பற்றிவிட்டான். கங்கபாடி, நுளம்பபாடி என்னும் இராச்சியங்களிலும் பல்லவரின் மேலாதிக்கம் ஏற்பட்டது. அதியரசன் என்ற வகையிலே பல்லவராசன் தளைக்காட்டுக்குச் சென்று கங்க இளவரசனுக்கு முடி சூட்டிய வரலாறுண்டு.

பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகியவற்றின் செல்வாக்கு முற்காலப் பல்லவரின் ஆட்சியிலே தமிழகத்திற் பெருமளவில் ஏற்பட்டது. வடக்கில் அமைந்த இராச்சியங்களோடும் சமுதாயங்களோடும் நெருங்கிய தொடர்புகள் பல துறைகளிலும் ஏற்பட்டதாலே தொடர்பு மொழிகளாக விளங்கிய பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகியவற்றைப் பல்லவர்கள் பெருமளவிற் பயன்படுத்த வேண்டியிருந்தது. முற்காலப் பல்லவரின் பட்டயங்கள் முதலிற் பிராகிருத மொழியிலும் அதனையடுத்த காலப்பகுதியிற் சமஸ்கிருத மொழியிலும் எழுதப்பட்டன. அவை அனைவரும் சைவசமயச் சார்புடையோராய் விளங்கினர். சிவ சின்னங்களான கட்வாங்கமும் நந்தியும் அவர்களின் இலச்சினைகளாக விளங்கின.[17] முற்காலப் பல்லவர்கள் ராஜசூயம், அக்கினிஸ்தோமம், வாஜபேஜம் முதலான வேள்விகளைச் செய்வித்தனர்.[18] காஞ்சிபுரத்தில் அவர்கள் அமைத்த கடிகைத்தானம் விந்தியத்திற்குத் தென்பால் அமைந்திருந்த உயர்கல்வி நிலையங்களில் உன்னதமானதாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவரின் இராச்சியத்தில் இக்காலத்தில், பாண்டி நாட்டிற் போல பலவகைச் சமயங்களும் பரவியிருந்தன. சைவரான பல்லவர் வைணவம், சமணம் ஆகியவற்றுக்கும் ஆதரவு புரித்தனர்.[19] திருப்பருத்திக் குன்றத்துச் சமணப் பள்ளிக்குப் பல்லவராசன் வழங்கிய நன்கொடைகள் பற்றிய விபரங்கள் பள்ளன்கோயிற் செப்பேடுகளிற் பதிவாகியுள்ளமை குறிப்பிடற்குரியது.[20] பௌத்த விகாரங்களுக்குப் பல்லவர் நன்கொடை வழங்கியமை பற்றிய சாசனக் குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் அவர்களின் தலைநகரான காஞ்சிபுரத்திலே பல பௌத்த விகாரங்கள் அமைந்திருந்தன.

பௌத்த அறிஞரும் பௌத்தப் பள்ளிகளும்

கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட, பௌத்த சமயம் தொடர்பான தொல்பொருட் சின்னம் எதுவும் இதுவரை தமிழகத்திலே கிடைக்கவில்லை. நான்காம் நூற்றாண்டுக்குரிய விகாரமொன்றின் அடித்தளப் பகுதிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. தமிழ்ச் சாசனங்களில் மிகவும் புராதனமான பிராமிச் சாசனங்களில் பௌத்தம் பற்றிய குறிப்பு எதுவுங் காணப்படவில்லை. பழந் தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலும் பௌத்தம் பற்றி எதுவுமே கூறப்படவில்லை. எனவே கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திற் பௌத்த சமயச் செல்வாக்கு தமிழகத்திலே குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டிருக்கவில்லை என்று கருதலாம். தமிழகத்திலே பௌத்தம் அடைந்த வளர்ச்சியை நான்காம் நூற்றாண்டு முதலாக இலக்கியக் குறிப்புகள் மூலமாகவும் தொல்பொருட் சின்னங்கள் மூலமாகவும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். அவ்வாறு கிடைக்கும் அறிவும் மிகச் சுருக்கமானது.

இலங்கை, ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றிலுள்ள பௌத்த விகாரங்களுடன் ஏற்பட்ட தொடர்புகளே தமிழகத்திற் பௌத்தம் பரவி வளர்ச்சி அடைவதற்கு அடிப்படையாக இருந்தன. நீண்டகால வரலாற்றைக் கொண்ட சமணம் பரந்தளவிலே பரவியதோடு கிராமப்புறங்களிலுஞ் செல்வாக்குப் பெற்றது. வேறுபட்ட அளவுகளில் அரசர், பிரதானிகள், வணிகர் ஆகியோரின் ஆதரவைப் பெற்ற சமண முனிவர்கள் மக்களோடு நெருங்கிய தெடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்கள் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றிருந்ததோடு உபாசகரின் நன்மை கருதித் தமிழிற் பல அறநூல்களை எழுதினார்கள்.

பௌத்தமானது சமணத்தோடு போட்டியிடக் கூடிய பலம் பெற்றிருக்கவில்லை. பௌத்தர்கள் இக்காலகட்டத்திலே சமூகத்தோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கவில்லை. நகர்ப்புறங்களில் அடங்கிய ஒரு சமயப் பிரிவினராகவே பௌத்தர் காணப்பட்டனர். காவிரிப்பட்டினம், காஞ்சி, வஞ்சிமாநகர் ஆகிய பெருநகரங்களில் அமைந்த பௌத்தப் பள்ளிகளை மையமாகக் கொண்டே பௌத்தம் இக்காலத் தமிழகத்தில் நிலைபெற்றது. நாகபட்டினம், மாயூரபட்டினம் போன்றவற்றிலுள்ள பள்ளிகள் பற்றியும் சில சமகால நூல்களிலுள்ள குறிப்புகளால் அறிய முடிகின்றது. நகர்ப்புறங்களிலும் பௌத்தர்கள் ஒரு சிறுபான்மையினராகவே காணப்பட்டனர். பௌத்தம்மீது பேரபிமானங் கொண்ட அரசரும் உயரதிகாரிகளும் இல்லாதமையாற் சமுதாயத்தின் ஆதரவிலும் நல்லெண்ணத்திலும் சங்கத்தார் தங்கியிருக்க நேர்ந்தது. அவர்களுக்கு அன்னதானம் வழங்கி ஆதரிக்கக் கூடிய அளவிலே உபாசகர் காணப்படவில்லை. அவர்கள் பௌத்தரல்லாத மக்களிடையே தங்கியிருக்கும் நிலை காணப்பட்டது. சமூகத்திற் பெரும்பாலானோர் சைவராயும் வைணவராயும் விளங்கினர். ஏழாம் நூற்றாண்டிலே பௌத்த நிறுவனங்கள் சீர்குலைவதற்கு இது ஒரு பலமான காரணமாகலாம். பௌத்தரின் சமயப்பிரசாரம் வலுவடைந்த பொழுது பரசமய கண்டனம் அதன் ஓரம்சமாகியது என்பதை மணிமேகலை மூலம் அறிய முடிகின்றது. அதனாற் சமணர், சைவர், வைணவர் ஆகியோரின் கடுமையான எதிர்ப்புக்களைப் பௌத்தம் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. பிற சமயங்கள் பொதுமக்களின் உணர்ச்சி பூர்வமான ஆதரவைப் பெற்றிருந்ததால் பௌத்த சங்கம் அனாதரவான நிலையினை அடைந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்களின் மீது கடுமையான கண்டனங்களை ஏற்படுத்தியபோது சங்கத்தார், உணவு, உடை, மருந்து முதலான அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் வாய்ப்புக்களை ஏழாம் நூற்றாண்டில் இழக்க நேர்ந்தது. அக்காலத்திலே தமிழகஞ் சென்ற சீன யாத்திரிகரான சுவன் – சாங் (Tsuan-Tsang) அவ்வாறான ஒரு நிலை உருவாகிவிட்டதை அவதானிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலே, தமிழகத்துப் பௌத்தரிடையே தேரவாதம், யோகாசாரம், வச்சிரயானம், தியான சம்பிரதாயம் என்னும் நான்கு பிரிவுகளைச் சேர்ந்தோர் காணப்பட்டனர்.[21] அவர்கள் இலங்கையிலும் ஆந்திர தேசத்திலுமுள்ள விகாரங்களோடு தொடர்புகளைக் கொண்டிருந்தனர். தேரவாதப் பிரிவினர் தங்கள் நூலாக்கங்களைப் பாளி மொழியில் எழுதினார்கள், பாளி மொழி தமிழகத்தாருக்கு அந்நிய மொழி என்பதால் தேரவாதிகளின் போதனைகள் இலகுவிலே பரவமுடியாத நிலை காணப்பட்டது. தமிழகத்திலே தேரவாதம் தோன்றி நிலை பெறுவதற்கு இலங்கையிலுள்ள விகாரங்களின் தொடர்புகள் ஏதுவாயிருந்தன. யோகசாரம், வச்சிரயானம், தியான சம்பிரதாயம் என்பன மகாயானச் சார்புடையவை. அமராவதி, நாகார்ஜுன கொண்ட போன்ற ஆந்திர நாட்டுத் தலங்களின் மூலம் ஏற்பட்ட செல்வாக்கின் விளைவாகத் தமிழகத்து விகாரங்களில் மகாயான சிந்தனைகள் வலுப்பெற்றன.

ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளிலே தமிழ் நாட்டில் வாழ்ந்த சங்கத்தாரிற் சிலர் அவர்களின் புலமை, வாதத்திறன், சிந்தனைத் தெளிவு, பிடகநெறி மீது கொண்ட உறுதியான ஈடுபாடு ஆகியவற்றால் பெரும் புகழ் பெற்றனர். அவர்களின் புகழ் தூரதேசங்களுக்குப் பரவியது. அவர்களின் உன்னதமான சாதனைகள் பௌத்த சமய வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றன. அவர்களிற் காலத்தால் முற்பட்டவர் சங்கமித்த தேரர். அவர் சோழ நாட்டவர். மகாயானத்தை நிலைநிறுத்தும் நோக்கத்தோடு அவர் அநுராதபுரத்திற்குச் சென்றார். அவரது சமயஞானமும் வாதத்திறமையும் அரசனாகிய கோட்டாபயனைப் பெரிதுங் கவர்ந்தன. அரசன், தனது குமாரர்களாகிய ஜேட்ட தீஸன், மகாசேனன் ஆகியோரின் போதனாசிரியராகச் சங்கமித்தரை நியமித்தான். சங்கமித்தரின் மகாயானச் சார்புடைய சமயபோதனைகள் இளைய அரசகுமாரனாகிய மகாசேனனைப் பெரிதுங் கவர்ந்தன.[22] மகாசேனன் அரசனாகியதும் தேரவாதப் பெரும்பள்ளியான மகாவிகாரத்தைச் சீர்குலைத்து, மகாயானச் சார்புடைய அபையகிரி விகாரம், ஜேதவன விகாரம் ஆகியவற்றை மேலோங்கச் செய்தான். பௌத்த கோயில்களில் மிகவும் பிரமாண்டமான ஜேதவன சேதியம் அவனுடைய திருப்பணியாகும்.

தமிழகத்திலே, பௌத்த சமய வளர்ச்சியிலும் அதன் இலக்கிய அபிவிருத்திகளிலும் பங்கு கொண்டிருந்த சங்கத்தாரில் முதன்மையானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்ததத்தர். ஐந்தாம் நூற்றாண்டில் அவர் எழுதிய நூல்கள் பௌத்த சமய இலக்கிய வரலாற்றிலே பிரசித்தமானவை. ஐந்தாம் நூற்றாண்டு பாளிமொழி இலக்கிய வரலாற்றில் உன்னதமான காலம். அது புத்ததத்தர், புத்தகோஷர் ஆகியோரின் காலம். புத்ததத்தர், அநுராதபுரத்து மகாவிரையிலே சங்கத்தவராக ஞானஸ்நானம் பெற்றவர். மகாவிகாரைக்குரிய நூல்நிலையங்களிலுள்ள பாளி இலக்கியங்களை அவர் ஆழமாகப் படித்தார். அவரது பணிகளின் பயனாகத் தமிழகத்திலே தேரவாதச் சார்புடைய பாளிமொழியில் அமைந்த இலக்கியம் வளர்ச்சியடைந்தது. **அபிதம்மாவதார(ம்), மதுரத்தவிலாஸினி, விநயவிநிச்சய, உத்தரவிநிச்சய** என்னும் நூல்கள் அவரால் எழுதப்பட்டன.[23] அவற்றை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் அமைந்திருந்த விகாரங்களில் வசித்தவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் படித்தனர்.[24]

புத்ததத்தர், அநுராதபுரத்திலே தங்கியிருந்த காலத்தில் உத்தர விநிச்சய என்னும் நூலை எழுதினார் என்பர்.[25] மற்றைய நூல்கள் எல்லாவற்றையும் அவர் தமிழகத்திற்குத் திரும்பிச் சென்ற பின் எழுதினார். **விநயவிநிச்சய** நூலின் முடிவில் நூலாசிரியரைப் பற்றிச் சொல்லுமிடத்து, "உறையூரினரான புத்ததத்த என்னும் யான்" (உரகபுரேன புத்ததத்தேன ரசிதோயம்) என்று சொல்கிறார்.[26] எனவே, அவரே அந்நூலின் ஆசிரியர் என்பது தெளிவாகும். இவ்வாறான குறிப்பு அபிதம்மாவதாரத்தின் முடிவிலுங் காணப்படுகின்றது.

சோழ நாட்டிலே, களப்பிரனாகிய அச்சுத விக்கிராந்தனுடைய ஆட்சியில், பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாஸன் நிர்மாணித்த விகாரத்திலே தான் வசித்த காலத்தில் **விநய விநிச்சய** என்னும் நூலை எழுதியதாக, அதன் பாயிரச் செய்யுளிற் புத்ததத்தர் குறிப்பிடுகின்றார். **மதுரத்தவிலாஸினி, ஜினாலங்கார** ஆகியவற்றையும் புத்ததத்தர் எழுதினார் என்பது இலங்கையில் நிலவிய ஐதிகமாகும் .[27]

உரையாசிரியர் என்ற வகையிலே புத்ததத்தரைப் போலப் பிரசித்தி அடைந்தவர் தர்மபாலர். சீன யாத்திரிகரும் பௌத்த சமயப் பேரபிமானியுமான சுவன்–த்ஸாங் (Tsuan-Tsang) தென்னிந்தியாவிற்குச் சென்ற பொழுது, தர்மபாலர் காஞ்சிபுரத்தில் வசித்தார். **நெத்திபகரண**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூலை நாகபட்டினத்து விகாரை ஒன்றில் இருந்த காலத்திலே தர்மபாலர் எழுதினார். குட்டக நிகாயத்தின் உரைநூலான **பரமத்த—தீபனி,** புத்தகோஷர் எழுதிய **விசுத்திமக்க** என்பதன் விருத்தியுரையான **பரமத்த மஞ்ஜூஸ** என்பன தர்மபாலரின் நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.[28]

தர்மபாலர் என்னும் பெயருடைய வேறொருவரும் தமிழகப் பௌத்த துறவிகளிற் பிரசித்தமானவர். அவர் 'சகலாகம பண்டிதன்'; புலமையிலும் வாதத்திறமையிலுந் தலை சிறந்தவர். வட இந்தியாவிலே பல தலங்களுக்குச் சென்று சமயவாதம் புரிந்தவர். அவர் போகுமிடங்களில் எதிர்த்தரப்பினரை வாதங்களில் வென்று பெரும் புகழ் பெற்றார். அதனால் அவரை நாலந்த மகாவிகாரத்து நாயகராகத் தெரிவு செய்தனர். [29]

தமிழகத்துப் பௌத்த சங்கத்தாரில் மகாபண்டிதராக விளங்கிய வேறொருவர் திந்நாகர். அவர் வட இந்தியாவிற் பிரயாணஞ் செய்த காலத்தில் மகாயானப் பெருவிற்பன்னரான வசுபந்துவின் சிந்தனைகள் அவரைப் பெரிதுங் கவர்ந்தன. பௌத்த மரபிற்குரிய அளவைக் கோட்பாடுகளை வரையறை செய்தமை அவருடைய சிறப்புமிக்க சாதனையாகும். [30] காஞ்சிபுரத்துப் போதிதர்மர் வேறொரு துறையிற் சாதனை புரிந்தவர். தியான சம்பிரதாயத்தின் தலை சிறந்த விற்பன்னராக விளங்கிய அவர் சீனாவிற்குப் போய் அங்கு பௌத்த சமய போதனையில் ஈடுபட்டார்.[31] ஜப்பானிலே, பின்பு, அதிக செல்வாக்குப் பெற்ற பத்ம சம்பிரதாயம் (Lotus School) என்பது போதிதர்மரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது[32]

தென்னிந்தியாவில், ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த அறிஞர்களில் மற்றொருவர் வச்சிரபோதி. நாலந்தாவிற் கல்வி பயின்ற வச்சிரபோதி வட இந்தியாவிலுள்ள பல பௌத்த தலங்களுக்குப் பிரயாணஞ் செய்தனர். அவர் இலங்கைக்குச் சென்று, அங்கு ஆறு மாதங்கள் வரை தங்கியிருந்து மகாயான சிந்தனைகளைப் போதித்தார். அதற்குப் பின்பு அவருடைய சீடரான அமோகவச்சிரர் மகாயானத்தை வளர்க்கும் பணிகளில் ஈடுபட்டார்.[33]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாம் மகேந்திரவர்மன் **மத்தவிலாச பிரகஸனம், ஜகதஜ்ஜுகம்** என்னும் நாடக நூல்களை எழுதினான். அவற்றிலே குறிப்பிடப்படும் கதாபாத்திரங்களும் கதைகளும் கற்பனா பூர்வமானவை; சமகாலத்துச் சமுதாயத்திற் காணப்பட்ட சமயவாதிகளையும் அவர்களின் இயல்புகளையும் ஏளனம் பண்ணும் வகையில் இந்நாடக நூல்கள் அமைந்திருக்கின்றன. மத்தவிலாசத்திலே காஞ்சிபுரத்தில், அரண்மனைக்குச் சமீபமாகவுள்ள ராஜவிகாரம் பற்றிய குறிப்புண்டு. இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் நால்வர். ராஜ விகாரத்திலே வாழ்ந்த, மகாயானச் சார்புடையவரான, நாகசேனர் என்னும் சாக்ய பிக்ஷு ஒருவர். ஏகாம்பர நாதர் கோயிலில் வாழ்ந்த காபாலிக சந்நியாசியான சத்திசோமர் இன்னுமொருவர். அவரோடு தேவசோமா என்னும் பெண் கூடியிருந்தாள். மூன்றாமவர் சுரநந்தி என்னும் பாசுபத ஆசாரியார். உன்மத்தன் ஆகிய ஒருவர் நான்காமவர்.

நாடகத்தில் வரும் கதை சுவாரஸ்யமானது. ராஜ வீதி வழியே செல்லும் நாகசேனர் விற்பனையாளரிடமிருந்து வாங்கிய மச்ச மாமிசங்களைப் பிக்ஷாபாத்திரத்தில் வைத்து, அதனை தனது ஆடையினால் மூடி மறைத்து விடுகிறார். வாயில் வந்தவாறு அவர் பேசிக் கொண்டு போகிறார்:

"கருணாநிதியான சம்புத்தர் சங்கத்தாரின் நலனுக்காகப் பல உரிமைகளை வழங்கியுள்ளார். மாளிகைகளில் வசித்தல், பஞ்சணை மெத்தைக் கட்டில்களிற் படுத்து நித்திரை கொள்ளுதல், காலைப் போசனம், மாலையிற் சுவையான பானங்கள், ஐந்து வகையான வாசனைப் பொருட்கள் சகிதமான தாம்பூலம், பெறுமதி மிக்க தரமான ஆடைகள் முதலானவை கிடைக்கின்றன. மதுவினையும் மாதர்களையும் அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் ஏன் விதிகள் காணப்படவில்லை? சம்புத்தர் எக்காரணத்தால் இவற்றை விலக்கினார்? இளைஞராகிய எங்கள் மீதுள்ள பொறாமையினால் ஆண்மையற்ற பாவிகளான தேரர்கள் மது, மாதர் தொடர்பான விதிகளைப் பிடகநெறியிலிருந்து மறைத்திருக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேன். எனவே, சங்கத்தாரின் நலன் கருதிச் சம்புத்தருடைய போதனை முழுவதையும் உலகம் முழுவதிலும் நான் பரப்புவேன்"[34]. இந்தக் கதை ஒழுக்க ஆசாரம் (விநய) தொடர்பான தகராற்றினை, தேரவாதிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாயான பௌத்தர்களுக்கும் இடையிலான தகராற்றை, அடிப்படையாகக் கொண்டது.

நாகசேனர் யோகாசார நெறி சார்ந்தவராகவன்றி பஞ்ச மகரங்களைப் பற்றிய சிந்தனைகளில் ஈடுபாடு கொண்ட தந்திரயானத்தின் பிரதிநிதியாகவே காணப்படுகின்றார்.

நாகசேனரின் கூற்றுகளை அவதானிக்குமிடத்துப் பௌத்தம் சார்ந்த அனைத்துப் பிரிவுகளையும் ஆசிரியர் ஏளனம் பண்ணுகிறார் போலத் தெரிகின்றது. காபாலிக, பாசுபத ஆசாரியரின் செயற்பாடுகளையும் ஆசிரியர் ஏளனம் பண்ணுகிறார். ஆனால் நாகசேனரைப் பற்றிய வர்ணனையிற் பௌத்த சங்கத்தாரின் சுகபோகங்களும் அவர்களின் ஆவல்களுமே கேலிக்குரியனவாகிவிட்டன. பௌத்தம் பல்லவரின் ஆதரவைப் பெற்றிருந்தமைக்கு எதுவிதமான சான்றுகளுங் கிடைக்கவில்லை. மாமல்லபுரத்து ஆதிவராகக் குகைக் கோயிலின் சாசனம் ஒன்றிலே திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாகப் புத்தரைக் குறிப்பிட்டுள்ளனர். தங்கள் ஆட்சிப் புலத்திலே பௌத்தம் நிலைபெறுவதற்குப் பல்லவர் அங்கீகாரம் வழங்கினார்கள் என்பதை இச்சாசனம் உணர்த்துகின்றது.

பௌத்த விகாரங்களும் பௌத்த சின்னங்களும்

இக்காலப் பௌத்த சமயம் பற்றி ஆராயுமிடத்து, பௌத்தப் பள்ளிகள் கோயில்கள் என்பன பற்றிய குறிப்புகளையும் அவற்றின் தொல்பொருட் சின்னங்களையும் அவதானித்தல் அவசியமானது. வரலாற்று ஆவணங்கள் என்ற வகையில் இலக்கியக் குறிப்புகளின் தராதரம் அவற்றின் இயல்புகளுக்கேற்ப வேறுபடும். புத்ததத்தர், புத்தகோசர் போன்றவர்கள் தங்கள் நூல்களில் அவர்கள் தங்கியிருந்த விகாரங்களைப் பற்றிய சில விபரங்களைக் குறித்துள்ளனர். அவை சமகாலக் குறிப்புகள்; ஆதாரபூர்வமானவை. **சிலப்பதிகாரம், மணிமேகலை** என்னும் நூல்களில் பௌத்த விகாரங்கள், சேதியங்கள் பற்றிய குறிப்புகள் சில உள்ளன. ஆனால் இந்நூல்கள் கதைப்பாங்கில் அமைந்தவை. ஆயினும், அவை ஆசிரியரின் காலத்துச் சமய நிறுவனங்களைப் பற்றியதால் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் கற்பனா பூர்வமானவை ஒன்று ஒதுக்கி விடலாகாது. சீனப் பிரயாணியான சுவன் – சாங் (Tsuan Tsang) பௌத்த சமயத்தில் அபிமானங் கொண்டவர். கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிற்கு வந்திருந்த காலத்திலே, கன்னோசியிலே, ஸ்ரீஹர்ஷவர்த்தனனின் ஆதரவைப் பெற்றவர். அவர் கி.பி. 642 ஆம் ஆண்டளவிற் காஞ்சிபுரம் வந்தார். தமிழகத்திலுள்ள பௌத்தம் பற்றியும் அதன் நிறுவனங்களைப் பற்றியும் அவர் சில விபரங்களைக் குறிப்பிடுகின்றார். அவர், கண்டவற்றையும் பிறர் மூலம் கேட்டறிந்தவற்றையும் விசார நோக்கின்றி எழுதும் வழக்கமுடையவர்; சில விடயங்களை மிகைப்படுத்திச் சொல்வதும் அவருடைய இயல்பாகும்.

இலக்கியங்கள் வாயிலாக அறிமுகமாகின்ற இக்காலத்துப் பௌத்த நிறுவனங்கள் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி ஆகிய நகரங்களில் அமைந்தவை. புத்தகோஷர் தமிழகத்திற்கு வந்த காலத்தில், ஒரு சமயம் காஞ்சிபுரத்திலுள்ள விகாரமொன்றில் வாழ்ந்த ஜோதிபாலரோடு தங்கியிருந்தார். ஆனால் விகாரத்தின் பெயரை அவர் குறிப்பிடவில்லை. அந்நகரிலுள்ள **கந்ததம்ம விகாரம்** பற்றி **வச்சிரபுத்தி டீகா** என்ற நூல் குறிப்பிடுகின்றது.[36] அதன் ஆசிரியரான வச்சிர புத்தி என்பார் தர்மபாலரின் (550–600) காலத்தவர். இங்கு முன்னர் குறிப்பிட்ட திந்நாகர் காஞ்சிபுரத்திலுள்ள பிராமண குலம் ஒன்றிலே பிறந்தவர் என்றும் வாத்ஸிபுத்திரிய என்ற சம்பிரதாயத்திற் **பரவிராச்சிய** என்னும் பட்டம் பெற்றுப் பின்னர் **ஸ்ராவக** திரிபிடக ஆசாரியரானார் என்றும் திபெத் நாட்டுப் பௌத்த சமய வரலாற்றாசிரியரான தாரநாதர் கூறுவார். திந்நாகர் எந்த விகாரத்தில் வாழ்ந்தாரென்பதைத் தாராநாதர் குறிப்பிடவில்லை. **புத்கல** என்னும் கோட்பாட்டில் அவர் ஈடுபாடு கொண்டதால் அவர் தனது உபாத்யாயரோடு தகராறு கொண்டு காஞ்சியிலிருந்தும் வெளியேறி, வட இந்தியாவை நோக்கிப் பிரயாணஞ் செய்து நாலந்தாவை அடைந்தார்.

சோழநாட்டு விகாரங்கள் தொண்டை நாட்டு விகாரங்களைக் காட்டிலுஞ் சிறப்பானவை. சோழ நாட்டிலே, காவிரியின் கரையிலுள்ள பூதமங்கலம் என்னும் ஊரிலே, வேணுதாசன் என்பவன் அமைத்த விகாரத்திலே வாழ்ந்த காலத்திலே **விநயவிநிச்சய** என்னும் நூலைத் தான் எழுதியதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்ததத்தர் குறிப்பிடுகின்றார்.[38] ஆனால் **மதுரத்த விலாசினி** என்னும் நூலை எழுதிய காலத்தில் அவர் காவிரிப்பட்டினத்திற் கண்ணதாசன் என்பவன் அமைப்பித்த விகாரத்தில் வாழ்ந்தார். அங்கு அவர் கோடாசலிலசம்பாத என்னும் வனப்புமிக்க கட்டடத்தில் இருந்தார்.[39] குடித்தொகை பெருகியிருந்த நகர்ப்புறத்தில் அவ்விகாரம் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் அழகான பல சுவர்களும் வாசற்புறங்களும் அமைந்திருந்தன. விகாரத்திற்கு அண்மையிற் காவிரியின் வெள்ளம் பெருகிப் பாய்ந்த வண்ணமாயிருந்தது. மாயூரரூபபட்டினத்திலுள்ள விகாரமொன்றிலே புத்தகோஷர் சில காலம் தங்கியிருந்தார். அங்குள்ள புத்தமித்திரரோடு கூடியிருந்த காலத்திலே **மஜ்ஜிம நிகாய** என்பதற்கு உரையெழுதுமாறு அவர் தன்னை வேண்டியதாகப் புத்தகோஷர் கூறுவர். [40]

பாண்டி நாட்டிலும் சேரநாட்டிலும்அமைந்திருந்த விகாரங்கள் எதனைப் பற்றியும் சமஸ்கிருத நூல்களிலும் பாளி நூல்களிலுங் கூறப்படவில்லை. இவ்விடத்தில் இக்காலத்துத் தமிழ் நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவற்றிலுள்ள பௌத்த விகாரங்களைப் பற்றிய குறிப்புகளைக் கவனிப்பது பொருத்தமானது. சமயப்பிரசார நோக்கற்றதான சிலப்பதிகாரம் காவிரிப்பூம் பட்டினத்து இந்திரவிகாரம் பற்றி மேல் வருமாறு வர்ணிக்கின்றது.

பணை ஐந்து ஓங்கிய பாசிலைப் போதி
அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி
அந்தசாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர விகாரம் ஏழ் உடன் போகி [41]

இந்திர விகாரம் ஏழுடன் போகி என்ற தொடர் சற்று விமர்சனத்திற்குரியது. இந்திர விகாரம் எனப் பெயரிய ஏழு விகாரங்களை அது குறிக்கும். ஒரே பெயரைக் கொண்ட ஏழு விகாரங்கள் ஒரே தலத்தில் இருந்திருக்க முடியுமா? அல்லது இந்திர விகாரம் ஏழு தனிப்பிரிவுகளைக் கொண்டிருந்ததா? என்ற வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன. இவ்வினாக்களிற்கான விடைகளை எம்மாற் கூற முடியவில்லை. ஏடுகளைப் பிரதி செய்த பொழுது ஏழ் என்ற சொல் வேறொன்றிற்குப் பதிலாகத் தோன்றியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சி மாநகரத்து இந்திர விகாரம் என்பதை மணிமேகலை மேல்வருமாறு வர்ணிக்கின்றது.

இந்திர விகாரம் எனவெழில் பெற்று
நவையறு நாதன் நல்லறம் பகர்வோர்
உறையும் பள்ளி. [42]

சாத்தனார் விகாரம் என்பதைப் பள்ளி என்று சொல்வது கவனித்திற்குரியது. அவர் காஞ்சியிலுள்ள சேதியம் ஒன்றினைப் பற்றியுஞ் சொல்வார். அதனை அவர் "சுகதற்கு இயற்றிய வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்தம்" என வர்ணிக்கின்றார்.[43] சாத்தனார் மணிமேகலையினை எழுதிய காலத்திற் காஞ்சியிலே பௌத்த நிறுவனங்கள் இருந்தமை மறுக்கொணாத ஒன்றாகும். ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிரபலமான சங்கத்தார் சிலரைப் பற்றிய விபரங்களால் அக்கருத்து உறுதியாகின்றது.

கச்சி மாநகருள் அமைந்த சேதியம் ஒன்றினையும் சாத்தனார் வர்ணிக்கின்றார். அது "தொடுகழற்கிள்ளி துணையிளங் கிள்ளி செம்பொன் மாச்சினைத் திருமாணிப் பாசடைப் பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய சேதியம்." மணிமேகலை "சேதியந் தொழுது, தென்மேற்காகத் தாதணி பூம்பொழில் தான் சென்று" எய்தினாள்.[44] சோழ இளவரசனாகிய கிள்ளி காஞ்சியில் எவ்வாறு எப்போது சேதியம் செய்வித்தான் என்பன தெளிவற்ற விடயங்களாகும். மணிமேகலையினைச் சாத்தனார் எழுதிய காலத்திலே கண்ணகியைப் படிமக் கோலத்தில் வழிபடும் வழக்கம் தோன்றிவிட்டது. கண்ணகியின் படிமம் அமைந்த கோட்டத்தை மணிமேகலை கண்டாள் என்பது கதை. தெய்வ நிலையாகி விட்ட கண்ணகி "நங்கை நீயும் முறைமையின் இந்த மூதூரகத்தே அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு, மெய்வகை இன்மை நினக்கே விளங்கிய பின்னர்ப், பெரியோன் பிடக நெறி கடவாய்" என்று பத்தினித் தெய்வம் அறிவுரை பகன்றதால் பத்தினி பௌத்தசமயத் தெய்வம் என்பது தேற்றம்.[45] ஆனால் வஞ்சியிலே பத்தினிக் கோட்டமிருந்த பௌத்தப் பள்ளியின் பெயர் நூலிற் சொல்லப்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன யாத்திரிகரான சுவன் சாங் கி.பி. 637–640 ஆகிய காலப்பகுதியில், முதலாம் நரசிங்கவர்மனுடைய ஆட்சியிலே (630–668) தென்னிந்தியாவிற்குப் பிரயாணஞ் செய்தார். அங்குள்ள திராவிட தேசம், சோழ நாடு, மல(ய)கூடம் என்னும் மூன்று பிராந்தியங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். அவர் காஞ்சிபுரம் சென்ற பொழுதிலும் அவர் அங்குள்ள அரசனைப் பற்றியோ பல்லவர்களைப் பற்றியோ எதுவுங் குறிப்பிடவில்லை. எனவே அவர் பல்லவ அரசனோடு எந்தவிதமான தொடர்பையும் ஏற்படுத்தவில்லை என்று கருதலாம். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட திராவிடதேசத்திலே 100 சங்காராமங்களும் 10,000 சங்கத்தாரும் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். அங்குள்ள சங்கத்தார் மகாயானப் பிரிவினர்; அவர்கள் தேரவாத நூல்களைப் படிக்கின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.[46] இது ஒரு முரண்பாடான குறிப்பாகத் தோன்றலாம். ஆயினும், விநயம் தொடர்பாக அவர்கள் தேரவாத மரபுகளைப் பின்பற்றினார்கள் என்பதையும் மகாயானச் சார்புடைய தத்துவக் கோட்பாடுகளைப் பின்பற்றினார்கள் என்பதையும் சுவன் சாங் கருதியிருக்கலாம்.[47]

காஞ்சி நகரைப் பொறுத்தவரையில் அங்குள்ள விகாரங்கள், சேதியங்கள் என்பன பற்றிச் சுவன் சாங் குறிப்பாக எதனையுங் கூறவில்லை. அந்நகருக்குத் தென்பாலமைந்த சங்காராமம் ஒன்றினைப் பற்றியே அவர் குறிப்பிடுகின்றார். சங்கத்தாரதும் சங்காராமங்களினதும் எண்ணிக்கை பற்றி சுவன் சாங் கூறுபவை மிகவும் மிகைபாடானவை. இருப்பினும் அவர் பிரயாணஞ் செய்த காலத்திற் தொண்டை நாட்டிலும் காஞ்சியிலும் சில பௌத்த விகாரங்கள் இருந்தன என்பதை மறுக்க முடியாது.

சோழ நாட்டிலே, பெரு நகரமொன்றின் தென்கிழக்கிலே, அசோகனால் அமைக்கப்பட்ட விகாரம் பற்றியும் ஆர்யதேவர் சில காலம் தங்கியிருந்த விகாரமொன்றினைப் பற்றியும் சுவன் சாங் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் விகாரங்கள் காவிரிப்பூம் பட்டனத்தில் உள்ளவை.[48] அங்கு அசோகன் முற்காலத்திலே விகாரம் அமைத்தான் என்பது ஒரு புனைகதை. அவர் மலகூட பற்றிச் சொல்லும் விபரங்கள் ஆதார மற்றவை. கதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கிலானவை. அசோகன், மகேந்திரன் ஆகியோர் தமிழகத்தில் விகாரங்களை அமைத்தனர் என்ற குறிப்புகள் எந்தவிதமான ஆதாரமுமற்றவை.[49] ஆயினும், தென்னிந்திய விகாரங்கள் பொதுவாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்தனவென்று சுவன் சாங் சொல்வன யதார்த்த பூர்வமானவை.[50] காவிரிப்பூம்பட்டினத்திலே பூகம்பத்தின் விளைவாக விகாரங்கள் சீரழிந்தன என்ற கருத்து மணிமேகலையிற் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் இங்கு கவனித்தற்குரியது.[51]

காவிரிப்பட்டினத்துத் தொல்பொருட் சின்னங்கள்

இக்காலத்திற்குரிய (கி.பி 300–650) பௌத்த சமயம் தொடர்பான தொல் பொருட் சின்னங்கள் காவிரிப்பட்டினத்தில் மட்டுமே கிடைத்துள்ளன. அவை பல்லவனீச்சுரம் என்ற பகுதியிலே தொல்லியல் அகழ்வுகளின் போது கிடைத்துள்ளன. பௌத்த சமயம் தொடர்பான இரண்டு கட்டடங்களின் அத்திபாரங்களை அங்கு அடையாளங் கண்டுள்ளனர். அவற்றிலொன்று புத்தவிகாரம். மற்றையது பௌத்த சேதியம். இவற்றுள் முதலாவது நான்காம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. அதில் ஒன்பது (9) அறைகளும் அவற்றின் முன்பாக ஒரு நெடுஞ்சாலையும் இருந்தன. அவைகள் சராசரியாக 3.10 மீ. நீளமும் 2.40 மீ. அகலமுங் கொண்டவை. சுவர்கள் பெருஞ் செங்கற்களினால் அமைந்தவை. அலங்கார வேலைப்பாடுகள் அச்சில் வடிவமைக்கப்பட்ட செங்கற்களினாலும் சுதையினாலும் உருவாக்கப்பட்டிருந்தன. சுதை வேலைப்பாடுகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஐந்தாம் நூற்றாண்டிலே கட்டுமான வேலைகள் தடைப்பட்டிருந்தன என்பதை அகழ்வாராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. மணிமேகலையிற் கூறப்படும் பூகம்பம் பற்றிய கதை இதனால் ஒருவாறு நிரூபணமாகின்றது. ஆறாம் நூற்றாண்டில் மீண்டும் வேலைகள் ஆரம்பமாகின. சதுரவடிவமான அடித்தளங்கொண்ட சேதியம் ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளுக்கு உரிய கட்டுமானமாகும்.[52] அதனருகிலே எட்டாம் நூற்றாண்டுக்குரிய கட்டடம் அமைந்திருக்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்திற் பௌத்த சமயம் ஐந்தாம் நூற்றாண்டிலே பின்னடைவு ஏற்பட்ட பொழுதிலும் ஆறாம் நூற்றாண்டு முதலாக அது படிப்படியாக மீட்சி பெறத் தொடங்கியது என்பதைத் தொல்பொருட் சின்னங்கள் மூலம் அறிய முடிகின்றது.[53]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தவிகாரத்தின் அழிபாடுகளிடையே தியான முத்திரையிலுள்ள புத்தரின் வெண்கலப் படிமமொன்றும் ஒரு தேவதையின் சுடுமண் படிமமும் கிடைத்தன. அத்துடன் புத்தபாதம் ஒன்றும் சுதையிலமைந்த படிவமொன்றின் தலைப்பாகமும் பெறப்பட்டுள்ளன. 1997 இற் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கிலே, மூன்று கி.மீ. தூரத்திலுள்ள சின்னமேடு என்னுமிடத்தில் புத்தர் சிலையொன்றை மீனவன் ஒருவன் கண்டெடுத்தான். அது 53 சென்றிமீற்றர் உயரமான நின்றகோல வடிவமாகும். ஆந்திர தேசத்துப் பால்நாட்டுக் கல்லில் அது செதுக்கப்பட்டுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திற் கண்டெடுக்கப்பட்ட ஆதியான புத்தர் படிமங்களும் புத்தர் பாதமும் ஆந்திர கலைப்பாணியில் அமைந்தவை. அவை ஆந்திர நாட்டுப் பௌத்தம் தமிழகத்துப் பௌத்த சமய வளர்ச்சியில் ஏற்படுத்திய மேலோங்கிய செல்வாக்கின் சான்றுகளாகும்.

அடிக்குறிப்புகள்

1. K. Sivaramalingam, Archaeological Atlas of the Artique Remains of Buddhism in Tamil Nadu, Institute of Asian Studies, Chennai, 1977, P.40; V. Balambal, "Buddhism In Tamil Nadu During The Kalabhra Period", *Buddhism In Tamil Nadu* Collected Papers, Institute of Tamil Studies, Chennai, 1998, p.35.
2. Ibid, Peter Schalk, "Pallava Policy on Buddhism", *Buddhism among* Tamils in Pre-Colonial Tamilakam and Ilam Part 1, Uppsala, 2002, Pp. 388-389.
3. "The Pulangurichchi Inscriptions", KAVERI Studies on Epigraphy, Archaeology and History (Professor Y. Subbarayalu Felicitation Volume Editor S. Rajagopal, Chennai, 2001, Pp. 1-6.)
4. மேலது. ப. 2.
5. மேலது.
6. முதலாவது சாசனம் 192 ஆம் வருஷத்தையும் சேந்தன் கூற்றனுடைய 36 ஆம் நாளையும் குறிப்பிடுகின்றது. இச்சாசனங்களைப் படித்த ஆர். நாகசுவாமி இங்கே குறிப்பிடப்படுவது சக வருஷம் 192 ஆம் ஆண்டு எனக் கொள்கிறார். எனவே இச்சாசனங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை என்பது அவரது கருத்தாகும். ஆனால், வரிவடிவங்களின் வளர்ச்சி நிலையினை அடிப்படையாகக் கொண்டு, அவை ஏறக்குறைய கி.பி. 500 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டவை என்பது எ. சுப்பராயலுவின் முடிபாகும். சமுத்திரகுப்தன் தென்னிந்தியாவிலே காஞ்சிவரை படையெடுத்துச் சென்று பல்லவனாகிய விஷ்ணு கோபனிடம் திறை கொண்டதால் சோழ-பாண்டிய நாடுகளில் அந்நாட்களில் ஆட்சி புரிந்த அரசன் குப்தரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டு அதன் அடையாளமாகக் குப்தவர்ஷத்தைத் தனது ஆவணங்களிலே குறிப்பிட்டிருக்கலாம். அவ்வாறாகில் 192 ஆம் வருஷத்தை குறிப்பிடும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு கி.பி. 510–11 ஆகிய ஆண்டிற் குரியதாகும்.

7. வாசுதேவனார் கோட்டம் சமணப்பள்ளியொன்றில் அமைந்திருந்தது. சமணமரபிலே வாசுதேவருக்குச் சிறப்பிடம் உண்டு. சமணக் கோயில்களில் வாசுதேவரை வழிபடுவதற்குக் கோட்டம் அமைப்பது வழமை.

8. Pulanugurichchi Inscriptions, Kaveri, Pp. 2-3.

9. குழலூருத் துஞ்சிய உடையார் சேந்தன் கூற்றனுக்கு முற்பட்ட அரசனொருவனாதல் வேண்டும். அரசர்களைப் புராதன காலத்திலே கோ என்றும் உடையார் என்றும் குறிப்பிடுவது வழக்கம்.

10. சோழப்பெருமன்னர் காலத்துச் சாசனங்கள் பல அத்திகோசத்தார் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவர்கள் ஐந்நூற்றுவர் என்னும் வணிக கணத்தாரின் காவற்படையாகச் சில சமயங்களிற் சேவை புரிந்தனர். அந்திகோசத்தாரின் சின்னங்கள் செதுக்கிய சிற்பங்களுங் கிடைத்துள்ளன. திருச்சி மாவட்டத்திலே, திருச்சி–சேலம் நெடுஞ்சாலையிலே, திருச்சியிலிருந்து 15 கி.மீ. தொலைவில் துடையூர் என்ற ஊர் உள்ளது. அங்குள்ள முற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைத்த கோயிலின் சமீபத்தில், ஒரு வாழைத்தோப்பில் ஒரு கற்பலகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதில், ஒரு பக்கத்தில், மேல் வரிசையின் நடுவில் யானையின் வடிவமும் அதன் இரு பக்கங்களில் இரு விளக்குகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. கீழ்வரிசையில் விளக்கு, பாம்பு, அரிவாள், வாள், கோடரி ஆகியவற்றின் உருவங்கள் செதுக்க்ப்பட்டுள்ளன. கல்லின் தலைப்பாகத்தில் **அத்திகோசத்தார்** என்று எழுதப்பட்டுள்ளது. வடிவங்கள் 12 ஆம் நூற்றாண்டுக்கு உரியவை.

இச்சிற்பத்தைப் பற்றி விளக்குமிடத்து ஸ்ரீதரன் மேல்வருமாறு எழுதுகிறார்:

"அத்திகோசத்தார் என்ற குழுவைப் பற்றிக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் பேசுகின்றன. அத்திகோசத்தார் பற்றிய தமது ஆய்வுக்கட்டுரையில் ஆர். பூங்குன்றன் அத்திகோசத்தார் என்பது யானைப்படைத் தலைவர்களின் குழு என்பதைக் குறிப்பிடுகிறார். *அத்திகோசத்தார்* பற்றிய கல்வெட்டுகள் பெருவழிகளின் அருகிலேயே கிடைக்கின்றன. பூலாங்குறிச்சி, நல்லூர் (பெரியார் மாவட்டம்), வேப்பறை (பொள்ளாச்சி மாவட்டம்) ஆகிய இடங்களிற் பெருவழிகளிலே கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நல்லூரிற் காணப்படும் கற்பலகையிற் கத்தி, அரிவாள், குறுவாள், யானை, குதிரை, போன்றவை செதுக்கப்பட்டுள்ளன. அத்திகோசத்தார் என்பவர் யானை வீரர்; வணிகக் குழுவினர் வைத்திருந்த படைப்பிரிவினர். அவர்கள் வாழ்ந்த பெருவழி ஊர்களிலே தானம் அளிக்கும் போது அவர்களைப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டுகிறார்கள் எனப் பூங்குன்றன் குறிப்பிடுகிறார்." முன்னே சொல்லப்படுவனவற்றில் ஒரு முரண்பாட்டைக் காணமுடிகிறது. *அத்திகோசம் என்பது யானைப்படைத் தலைவர்களின் குழு* என்று ஓரிடத்திலும் *அத்திகோசத்தார் யானை வீரர்* என்று வேறொரு இடத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது. இவற்றில் எது சரியானது என்ற வினா வாசகரின் உள்ளங்களிலே தோன்றுவது இயல்பானதாகும். அதனை யானைப்படைத் தலைவர்களின் குழு என்று கொள்வதற்கு எதுவிதமான ஆதாரமுமில்லை. *அத்திகோசம்* என்பது யானைப்படை வீரரைக் குறிக்கும் என்று கொள்வதே பொருத்தமானது. ஐந்நூற்றுவரின் வீரசாசனங்கள் அவர்களுக்குச் சேவை புரிந்த வீரர்கணங்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. அத்தகைய சாசனங்களில் ஒன்று பதவியாவிலுள்ள வீரசாசனம். அதிலே கொங்கவாள் எழுநூறும்... பராந்தக வீரரும் அத்திகோசமும் தென்தளிநங்கை வீரமும் வடதளி நங்கை வீரரும் எனப் பல வீரர்கணங்களின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இங்கு அத்திகோசம் என்பது படைப்பிரிவுகளின் பெயர்களோடு இணைத்துச் சொல்லப்படுவதால் அது ஒரு படைப்பிரிவினர் பெயர் என்பது உறுதியாகின்றது. அவர்கள் யானைவீரர் என்பதால் *அத்திகோசம்* என்ற சிறப்புப் பெயர் அவர்களுக்கு உரியதாகியது. ஆவணம் இதழ்: 6, 1995, பக். 66–67; சி. பத்நாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006, ப. 418.

11. உள்மனையார் பற்றி எ. சுப்பராயலு மேல்வருமாறு குறிப்பிடுவார்:
"*Ulmanaiya* recalls to our mind the term *ulvidu* mentioned in some eighth century Pandya inscriptions and also the termakam padiyar found in several inscriptions of the 10th to 13th centuries. Most likely they were the bodyguards of the king."
உள்மனையார் என்றதும் எட்டாம் நூற்றாண்டுப் பாண்டியர் சாசனங்கள் குறிப்பிடும் உள்வீடு, பத்தாம் நூற்றாண்டு முதலாக 13 ஆம் நூற்றாண்டு வரையான சாசனங்களிற் காணப்படும் **அகம்படி** என்பன பற்றிய நினைவுகள் எம் மனங்களில் வருகின்றன. அவர்கள் அரசனது மெய்க் காப்பாளராதல் வேண்டும்" **Kaveri..** Editor S. Rajagopal, p.4.

12. இச்சாசனங்களிற் காணப்படும் திணை என்பது பிற்காலத்து திணைக்களம் என்ற நிர்வாகத்துறையினைக் குறிக்கும் சொல்லின் ஆதிவடிவமாகக் கொள்ளத் தக்கது.

13. Kaveri. Editor S. Rajagopal, p.5.

14. சிலப்பதிகாரம் புலியூர்க் கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, பதினைந்தாம் பதிப்பு, 1993 (முதற் பதிப்பு, 1958), இந்திர விழவு ஊர் எடுத்த காதை, வரிகள் 169–178, ப. 78.

15. மணிமேகலை புலியூர்க் கேசிகன் தெளிவுரையுடன், பாரி நிலையம், சென்னை (முதற் பதிப்பு, 1969) ஒன்பதாம் பதிப்பு, 1994, விழாவறை காதை வரிகள் 54–57. ப. 28.

16. சிலப்பதிகாரம், மேலது. மங்கல வாழ்த்துப் பாடல், வரிகள் 41–53, பக். 28–29.

17. C. Menakshi, Administration and Social life under the Pllavas, University of Madras, Madras, Pp.43.

18. சக்கரவர்த்திகளாகத் தங்களைக் கருதிய பல்லவ மன்னர்கள் மகாராஜாதிராஜ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மமகாராஜ, தர்ம மகாராஜாதிராஜ என்னும் பட்டங்களைக் கொண்டிருந்தனர். அத்துடன் அவர்களின் விருதுப் பெயர்களும் பெரும்பாலும் சமஸ்கிருத மொழிப் பெயர்களாகும். *லலிதாங்குரன், விசித்திரசித்தன், லக்ஷிதன், மத்தவிலாசன்* முதலியவை அத்தகையனவாகும். ராஜசிம்மனுடைய நூற்றுக்கும் மேலான விருதுப் பெயர்கள் யாவும் சமஸ்கிருத மொழியில் அமைந்தவை. மேலது, ப. 39. சி. பத்மநாதன், இலங்கையில் இந்து சமயம், *அகில இலங்கை இந்து மாமன்றம்* – குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2005, ப. 66.

19. பல்லவரின் பிராகிருத மொழிப் பட்டயங்கள், சமஸ்கிருத மொழிப் பட்டயங்கள், தமிழ் மொழிப் பட்டயங்கள் ஆகியவை எல்லாமே பிரம்மதேயம், சிவாலயம், விஷ்ணு கோயில் என்பனவற்றுக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றியவை. பள்ளன் கோயிற் செப்பேடுகள் மட்டுமே புற நடையானவை. அவை சமணப்பள்ளி ஒன்றுக்கு வழங்கிய மானியங்கள் பற்றியவை.
20. மேலது.
21. S. Pathmanathan, Buddhism in Sri Lanka and South India : Interactions among Monastic Centres, Fourth Vesak Commemoration Lecture-2006. Chennai, May 14, 2006.
22. கோட்டாபயன் என்னும் அரசனின் காலத்தில் மகாவிகாரையினருக்கும் அபையகிரி விகாரையினருக்கும் இடையிலே சமயத்தகராறு ஏற்பட்டது. வழமை போல, மகாவிகாரையினர் மீது பக்கச்சார்புடையவனாகிய வைதுல்யவாதம் எனப்படும் மகாயானம் சார்ந்த கோட்பாடுகளைப் பரப்பிய சங்கத்தார் மீது கொடுமையான நடைவடிக்கைகளை மேற்கொண்டான். அபையகிரி விகாரத்திலுள்ள அறுபது சங்கத்தாரைச் சங்கத்திலிருந்தும் வெளியேற்றினான். அவர்களை நாடு கடத்தினான். அவர்கள் கடல் கடந்து தமிழகஞ் சென்றனர். சோழநாட்டுத் துறவியான சங்கமித்திரர் அவர்களுக்கு அரசனால் இழைக்கப்பட்ட சித்திரவதைகளைப் பற்றி அறிந்து, ஆவேசமுற்று, பழிவாங்கும் எண்ணத்தோடு இலங்கைக்கு வந்தார் என்று *மகாவம்சம்* கூறும். மகாவம்சம், 36: 111–117.
23. G. P. Malalasekera, the Pali Literature of Ceylon, Kandy, 1994, p. 104.
24. மேலது. ப. ?
25. மேலது.
26. மேலது.
27. மேலது.
28. தர்மபாலர் கி. பி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பலவிடங்களில் வாழ்ந்தவர். அவர் உயரதிகாரி ஒருவரின் மகன் என்றும் காஞ்சியிற் பிறந்தவரென்றும் சுவன் சாங் குறிப்பிடுகின்றார். தர்மபாலர் தஞ்சை, நாகபட்டினம் என்றும் ஊர்களில் வாழ்ந்தவர். பதரதித்த விகாரத்திலே தான் வாழ்ந்தமை பற்றித் தர்மபாலர் கூறுவார். பதரதித்த விகாரம் தமிழரட்டவில் உள்ளதென்று *சாசனவம்சம்* குறிப்பிடுகின்றது. ஆயினும், நாகபட்டணத்து அசோகாராமத்திலே வாழ்ந்தமை பற்றித் தர்மபாலர் தனது *நெத்திஅட்டகதா* என்னும் நூலிற் குறிப்பிடுகின்றார். **பரமத்த தீபனி,** *பரமத்த மஞ்ஜூஸ,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெத்திப கரண அட்ட சம்வண்ணனா முதலிய நூல்கள் அவரின் பெயரால் விளங்குகின்றன. *K. Sivaramalingam, Archaelogical Atlas & the Antique Remains of Buddhism in Tamil Nadu, Institute of Asian Studies, Chennai, 1997, p. 41. Buddhism among Tamils..... Part 1, p. 390.*

29. கோசாம்பியில் மகாபண்டிதர்களான பல வைதீக சமயத்தவர் பலரை வாதில் வென்று, தர்மபாலர் பெரும் புகழ் பெற்றார். அதன் பின்னர் அவரை நாலந்த மகாவிகாரத்துச் சங்கத்தார் மகாநாயகராகத் தெரிவு செய்தனர். K. Sivaramalingam, Archaelogical Atlas... Pp. 43-44.

30. திந்நாகர் காஞ்சிபுரத்திலே, பிராமண குலமொன்றிற் பிறந்தவர். அங்கு அவர் **வாத்ஸீயபுத்திர** என்னும் பிரிவில் ஞானஸ்நானம் பெற்றுப் பின்னர் ஸ்ராவக திரிபிடகத்தின் ஆச்சாரியாராயினார். அவர் சேர்ந்திருந்த சமயப்பிரிவு தேரவாதச் சார்புடையது. வாத்ஸீபுத்திரர் **புத்கல** பற்றிய கோட்பாட்டைப் போதித்தனர். அது ஆன்மா உண்டென்பதை ஒப்புக்கொள்வதற்கு நிகரானது. எனவே, திந்நாகரின் உபாத்தியாயர் விகாரத்திலிருந்து வெளியேறுமாறு திந்நாகரைப் பணித்தார். அவர் வடதேசஞ்சென்று வசுபந்து என்ற பிரபல மகாயான ஆசாரியாரின் சீடரானார். Buddhism among Tamils... p. 384.

31. போதிதர்மர் இளமைக் காலத்திலே காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர். அவர் இளமைக் காலத்திலேயே சீனாவிற்குப் போய்விட்டார். அவர் சீனமொழியைக் கற்று அம்மொழியிலே தனது நூல்களை எழுதினார். அவரைப் பற்றி சுவன் சாங், ஈ–சிங் ஆகிய இருவருங் குறிப்பிடுகின்றனர். அவருடைய போதனைகள் புதுமையானவை. அவை ஜப்பானிற் பெரும் செல்வாக்குப் பெற்றன. அங்கு நிலைபெறும் ஸென் பௌத்தம் போதிதர்மரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது. K. Sivaramalingam, Archaeological Atlas Pp. 42-43.

32. K.A. Nilakanta Sastri, *Foreign Notices of South India,* Pp. 102-103.

33. D. Denis Hudson, "The Courtesan and her Bowl: An Esoteric Buddhist Reading of the Manimekalai, A Buddhist Woman's Path to Enlightenments *proceedings of a workshop on the Tamil Narrative Manimekalai,* Uppsala Unversity, May 25-29, 1995, Editor-on-Chief : Peter Schalk, Acta Unversitatis Upsaliensis, Uppsala, 1997, Pp. 160-161.

34. மேலது. ப.

35. K. Sivaramalingam, Archaelogical Atlas... p.40

36. A Buddhist Womans path to Enlightenment ......, p. 387.

37. மேலது, ப. 384.

38. மேலது, ப. 389.

39. மேலது, ப. 388.

40. மேலது.

41. **சிலப்பதிகாரம்,** புலியூர்க்கேசிகன், பாரிநிலையம், 1993, நாடுகாண் காதை, வரிகள் 11–14, ப. 142.

42. *மணிமேகலை,* புலியூர்க் கேசிகன் தெளிவுரையுடன், பாரி நிலையம், சென்னை, 1994, கச்சிமாநகர் புக்க காதை, வரிகள் 70–72, ப. 347.

43. மேலது, வரிகள் 131–133, ப. 352.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. மேலது, வரிகள் 172–175, ப. 355.
45. மேலது, கச்சிமாநகர் புக்க காதை வரிகள் 62–66, ப. 313.
46. Buddhism among Tamils....... Part 1, p. 401.
47. மேலது, ப. 402.
48. மேலது, ப. 401.
49. மேலது.
50. மேலது, பக். 402–403.
51. அந்நிகழ்ச்சி மேல்வருமாறு சொல்லப்படுகின்றது. "மாநகர் கடல்கொள; அறவண அடிகளும் தாயரும் ஆங்குவிட்டு, இறவாதிப்பதி புகுந்தது கேட்டதும்.." இதனை உரையாசிரியர் மேல்வருமாறு விளக்குகின்றார்; பெருநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தைக் கடலானது தன்பாற் கொண்டுவிட, அறவண அடிகளும், மாதவி, சுதமதி ஆகிய தாய்மாரும் இறந்துபோகாமல், அவ்விடம் விட்டு வஞ்சி நகரத்துக்கு வந்துள்ளதனைக் தான் கேள்வியுற்றது. *மணிமேகலை*, பாரிநிலையம், ஒன்பதாம் பதிப்பு, 1994, வரிகள் 80–82, ப. 348.
52. இவ்விபரங்கள் பீற்றர் கூஷல்க்கின் விரிவான ஆய்வின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டவை. Buddhism among Tamils. Part 1 Pp. 430-444.
53. பௌத்த விகாரத்தின் அருகிலுள்ள சேதியமும் அதன் சமீபத்தில் காணப்படும் கட்டிடங்களும் ஆறாம், ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளுக்கு உரியவை. காவிரிப்பூம்பட்டினத்தில் மீட்சி பெற்ற பௌத்தம் செழிப்புற்று விளங்கியதா என்பது ஆய்ந்து அறிதற்குரியது. ஆனால் இதுவரை அதற்கான தகுந்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பிரர் வரலாறு

சொ. சாந்தலிங்கம்

தமிழக வரலாற்றைச் சங்ககாலத்திலிருந்து தொடங்குவதே மரபாக இருந்து வருகிறது. சங்ககாலத்தை அதாவது கடைச்சங்க காலத்தை கி.மு. 300 முதல் கி.பி. 300 வரையான காலம் என்று தமிழக வரலாற்றுக்குழு அறிஞர்கள் வரையறை செய்துள்ளனர். இக்காலத்திற்குப் பின்னர் சுமார் கி.பி. 250 முதல் கி.பி. 550 வரையான காலத்தைக் களப்பிரர்காலம் என்றும், அது ஒரு வகையில் இருண்டகாலம் என்றும் கருதி வருகின்றனர். இக்கால இடைவெளியில் வரலாற்றுச் சான்றுகள் எவையும் கிடைக்காமையும், இவ்விடைக்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர் மரபு பற்றிய வெளிச்சம் போதிய அளவு இல்லாமையுமே இவ்வாறு கருதுவதற்கு காரணங்களாக அமைந்தன. எனவே இக்காலத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிய வரலாற்று அறிஞர்களிடையே ஆர்வம் தோன்றுவது இயல்பு. அந்த வகையில் பல வரலாற்று, இலக்கிய ஆய்வு அறிஞர்கள் இக்காலம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கே. ஆர். வெங்கட்ராமன் (1956–57), பி. ஜி. எல். சுவாமி (1976), கே. பி. அறவாணன் (1974), மயிலை. சீனிவேங்கடசாமி (1975), மு. அருணாசலம் (1976), நடன காசிநாதன் (1977) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தவிர சோழர் வரலாற்றை எழுதிய நீலகண்ட சாஸ்திரி, பல்லவர் நிர்வாகம் பற்றி எழுதிய மீனாட்சி, பாண்டியர் வரலாறு எழுதிய சதாசிவபண்டாரத்தார் ஆகியோரும் களப்பிரர் பற்றித் தங்களது ஆய்வுகளில் தொட்டுச் சென்றுள்ளனர். அண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பிரர் பற்றிய விரிவான ஆய்வு நூலை எழுதியுள்ள திருமதி. ஆ. பத்மாவதி அவர்களின் நூல் இன்னும் வெளியிடப்படாமல் உள்ளது. நூற்றாண்டுகள் பல கடந்தும் இன்னும் ஆய்வுக்குரியதாகவே இருக்கும் சுவையான வரலாற்று இடைவெளிக் காலத்தை மேலும் கூர்ந்துப்பார்ப்பதே இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

களப்பிரர் பற்றிய வரலாற்றுச் சான்றுகள்

வேள்விக்குடிச் செப்பேட்டிலேயே முதன் முதலாக இரண்டு இடங்களில் களப்பிரர் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. 'களப்பிரன் என்னும் கலி அரசன்'[1] (வரி 40), 'களப்பிரரால் இறக்கப்பட்டது' (வரி 111). ஆகிய இரண்டு சொற்றொடர்கள் இச்செப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. இச்செப்பேட்டை வெளியிட்ட மன்னன் பராந்தக நெடுஞ்செடைய வரகுணன் (கி.பி. 768–815) என்னும் பாண்டிய மன்னன் ஆவான். இந்த இரண்டு இடங்களிலும் களப்பிரர் என்னும் சொல் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

அடுத்த குறிப்பு தளவாய்புரம் செப்பேட்டில் இடம் பெறுகிறது. இச்செப்பேடு பராந்தக வீரநாராயணன் என்னும் பாண்டிய மன்னனால் வெளியிடப்பட்டது. (கி.பி. 860–905) இதில் 'களப்பாழர் குலங்களைந்தும்' 'களப்பாழரைக் களைகட்ட' என்னும் தொடர்கள் இடம் பெற்றுள்ளன. இச்சொல், தமிழ் மொழியில் வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளது.[2]

அடுத்து பல்லவர்கள் செப்பேட்டிலும் களப்பிரர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நந்திவர்ம பல்லவ மல்லனால் வெளியிடப்பட்டுள்ள காசாக்குடி செப்பேட்டில் சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ மன்னன் வெற்றிகண்ட அரசர்கள் பலரைக் குறிப்பிடும்போது களப்பிரர், மாளவர், சோழர், பாண்டியர், சிங்களரை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. (காசாக்குடிப் பட்டயம் சுலோகம் 20).[3] அடுத்ததாக கூரம் செப்பேடுகளில் சோழ, கேரள, களப்பிர, பாண்டிய மன்னர்களை வென்றதாகக் (வரி 15) கூறப்பட்டுள்ளது.[4] இச்செப்பேட்டை வெளியிட்டவன் பரமேஸ்வர வர்மன் ஆவான் (கி.பி. 668.700). அடுத்து நந்திவர்ம பல்லவனால் வெளியிடப்பட்ட (கி.பி. 730–795) பட்டத்தாள் மங்கலம் செப்பேட்டில் வல்லபர், களப்பிரர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளர், பாண்டியர், சோழர், துளுவர் கொங்கணர் முதலியோர் அவன் அரண்மனை வாசலில் காத்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது (வரி. 17)[5]. முற்கால இலக்கியங்களில் எங்கும் களப்பிரர் பற்றிய நேரடிக் குறிப்பு இடம்பெறவில்லை.

களப்பிரர் யார்?

இச்செப்பேட்டுச் சான்றுகளில் குறிப்பிடப்படும் களப்பிரர் என்பார் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தனர், எச்சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதிலே வரலாற்றறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. சங்க இலக்கியங்களில் களப்பிரர் என்னும் சொல் இடம்பெறவில்லை. ஆனால் வேங்கடமலைப் பகுதியின் தலைவனாகக் கள்வர் கோமான் புல்லி குறிக்கப்படுகிறான்.

"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண்புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்" (அகம் 61)

என்ற குறிப்பின் மூலம் இப்புல்லி வேங்கடத்தை அடுத்துள்ள மழநாட்டை (இன்றைய சேலம், தர்மபுரிப்பகுதிகள்) வென்றதாகக் கருதப்படுகிறது. இவனைக் கள்வர் கோமான் என்று சுட்டுவதாலே கள்வர் > களவர்>களபிரர் என மருவியிருக்கலாம் எனக் கருதி இவனே களப்பிரரின் முன்னோன் ஆக இருக்கலாம் எனக் கருதுவர்.[6] இதனை அடிப்படையாகக் கொண்டு களப்பிரர் தமிழர்களே என்றும், பிராமணர்களின் வைதீகச் சடங்குகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தவர்கள், இவர்களும் இந்துக்களே என்றும் சிலர் கருதுகின்றனர்.[7] களப்பிரர்களின் ஆட்சி தமிழகத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அது ஓரிரண்டு ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. அவர்கள் கர்நாடகப் பகுதியின் கங்கமரபினரே. அவர்களைப்பற்றிய செய்திகள் முற்றிலும் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்பார். பி. ஜி. எல். சுவாமி அவர்கள்[8]. இச்சூழலில் நாம் ஒன்றை மனங்கொள்ளல் வேண்டும். வேங்கடப் பகுதியை ஆண்டு வந்த கள்வர் கோமான் புல்லியோ, அல்லது கர்நாடகப்பகுதியின் கங்கமரபினரோ, களப்பிர மரபினரோ தமிழ்நாடு முழுவதையும் வெற்றிகண்டு சேர, சோழ, பாண்டிய மண்டலங்களை ஒரு குடைக்கீழ் ஆளும் வல்லமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களா என்பதை நாம், எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள், தங்களுக்குள் ஒற்றுமையின்றி ஓயாத போர்களில் ஈடுபட்டிருந்தும், தமிழ்ச் சமூகம் மது, மாமிசம், மங்கை என்னும் புலனுகர்வில் ஆர்வம் காட்டி ஒழுக்கம் சிதைந்திருந்ததும் அயலவர் எளிதில் ஊடுருவக் காரணமாகயின என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் அரசுகள் நிலைகுலைந்து, பொருளாதார ரீதியாக வலிமை குன்றியிருந்தமைக்கு அதுகாலம் வரையில் மேம்பட்டிருந்த தமிழக ரோமானிய வணிகம் வீழ்ச்சியடைந்ததுமே அதற்குக்காரணம் என்று கருதும் அறிஞர்களும் உண்டு.[9] எனவே ஏற்கனவே நிலகுலைந்திருந்த தமிழக ஆட்சியாளர்களை, களப்பிரர் என்னும் ஒரு மரபினர், இங்கிருந்த பிற வேளிர் மரபினரின் உதவியோடு எளிதாகக் கைப்பற்றியிருக்கலாம். ஏனெனில் எல்லாக் காலத்திலும் வேளிர் என்னும் குறுநிலமன்னர்கள் சோழ, பாண்டிய மன்னர்களுக்கு முற்றிலும் அடங்கியும், விசுவாசமாகவும் இருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. தமிழகத்திற்கு வடக்கிலிருந்து கங்கர், பாணர், களப்பிரர், முத்தரையர் எனப் பல கிளைக்குடியினர் ஊடுருவியுள்ளனர் என்பதற்கு தகடூர்ப்பகுதியில் பல சான்றுகள் உள்ளன. பண்டைய இலக்கியங்களில் களப்பிரர் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. மேலும் வராகமிஹிரரால் (505–587 கி.பி) வெளியிடப்பட்ட தென்னிந்திய அரசர்கள் பற்றிய குறிப்புகளில் களப்பிரர் பெயர் இல்லை. எனவே களப்பிரர் என்பார் ஒரு தொன்மையான அரசகுடியினர் அல்லர் என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது.[10] கங்க அரசர்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் (அகநானூறு பாடல் 44) சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன. இவர்கள் எருமைநாடு என்னும் இன்றைய மைசூர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையிலும், இவர்கள் அப்பகுதியில் ஆட்சி செய்தனர் என்பதும் அனைவரும் அறிந்த செய்தி. எனவே இவர்கள் களப்பிரர்களாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. களப்பிரர் என்பதனை களப என்னும் சொல்லின் திரிபாகக் கொண்டு அதற்கு யானை எனப்பொருள் கண்டு கங்கர்கள் யானைச்சின்னத்தைக் கொடியாகக் கொண்டவர்கள். எனவே களப்பிரர்கள் கங்கர்களே என்னும் முடிவுக்குச் சிலர் வந்தனர். ஆனால் களப்பிரர்கள் யானைக் கொடிக்கு உரியவர்கள் என்று எங்கும் அறியப்படாததால் இக்கருத்தும் ஏற்பதற்கு உரியதாக இல்லை. [11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிகுலமா?

வேள்விக்குடிச் செப்பேட்டில் இடம்பெறும் 'களப்பிரனென்னும் கலியரசன்' என்னும் தொடரைக் கொண்டு களப்பிரர் என்பார் கலி குலம் என்னும் தனிக்குலப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் கொப்பரம் செப்பேட்டில் குறிப்பிடப்படும் கலிகுலம் என்பதோடு ஒப்பிடத்தக்கவர்கள் என்றும் ஓர் அறிஞர் கருதுகிறார்.[12] ஆனால் இக்கருத்து எவ்வகையிலும் ஏற்புடைத்தன்று. தளவாய்புரம் செப்பேட்டில், 'களப்பாழர் குலங்களைந்தும்', எனத் தெளிவாகக் கூறப்படுவதால் களப்பிரர் என்பவரே ஒரு குலமாகக் கருதப்பட்டனர் என்பதே பொருத்தம். மேலும் பல்லவர் செப்பேடுகளில் மளவர், களப்பிரர், சோழர், பாண்டியர் எனப் பிறகுலங்களோடு சேர்த்துப் பேசப்படுவதாலும் கலிகுலம் என்பது களப்பிரர்க்குப் பொருந்தாது. எனவே கலி அரசன் என்னும் சொல்லுக்கு தீய அரசன், அச்சந்தரும் அரசன் என்றே பொருள் கொள்ளுதல் நலம்.

களப்பிரர் தமிழுக்கு அந்நியரே

கள்வர் கோமான் புல்லி தமிழ்மன்னனே என்பதால் அவனைக் களப்பிரகுல முன்னோனாக ஏற்க இயலாது. கங்கர்களுக்கும் களப்பிரர்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதும் உறுதி. மேலும் களப்பிரர்கள் தமிழ் மண்ணுக்கு அந்நியர்களே என்பதற்கு செப்பேடுகளில் அவர்கள் பெயர் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். குறிப்பாக வேள்விக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதிகள் முழுவதும் வட்டெழுத்து என்னும் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ள நிலையில் 'களப்பர' என்னும் சொல்லாட்சி மட்டும் இடம்பெறும் இரண்டு இடங்களிலும் (வரி, 40, 111) கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டிருப்பது கொண்டே அவர்கள் தமிழர்கள் அல்லர்; தமிழுக்கு அந்நியர்களே என்பதை உறுதிப்படுத்தலாம். இவ்வாறு பல வடசொற்கள், அந்நிய மொழிச்சொற்கள் பிரித்துக்காட்டும் வகையில் கிரந்த எழுத்துக்களால் எழுதப்படுவது பிற்காலக் கல்வெட்டுகளிலும் காணத்தக்கது.

களப்பிரர் கருநாடகத் தொடர்பு

'பல்லவ அரசர் ஆண்ட தொண்டைமண்டலம் தவிர, சோழ பாண்டிய, சேர நாடுகளைக் கைப்பற்றியாண்ட களப்பிரர்நாட்டுக் கன்னடரே என்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமில்லை' என்பார் மயிலை. சீனி, வேங்கடசாமி.[13] பாண்டியநாட்டில் வாழ்ந்த மூர்த்தி நாயனார் காலத்தில் பாண்டிய நாட்டை அரசாண்டவன் கன்னடநாட்டு அரசனே என்பதை "கானக்கடி சூழ் வடுகக் கருநாடர் காவல் மானப்படை மன்னன்" எனப் பெரிய புராணம் சுட்டுகிறது.[14]

இதற்கும் சற்று முந்திய காலத்திய கல்லாடம் (கி.பி. 10–11) என்னும் நூல் "மதுரை வவ்விய கருநடர் வேந்தன்"[15] என்று குறிப்பிடுகிறது. இவ்விரண்டு இலக்கியங்களும் குறிப்பிடுகின்ற வடுகர், கருநட வேந்தர் என்பார் ஒரே இனத்தவரே. தமிழகத்துக்கு வடக்கில் இருந்துவந்த பல அரசர்களும் வடுகர் என்றே கருதப்பட்டனர். கலிங்கத்துப்பரணி கடைத்திறப்புப் பகுதியில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கொண்டி மகளிரைக் கதவு திறக்குமாறு கூறும்போது, "மழலைத் திருமொழியில் சிலவடுகு சில தமிழும் குழறித்திரிகருநாடியர் குறுகிக்கடை திறமின்" என்று பாடுவார் ஜெயங்கொண்டார்.[16] இக்கூற்றிலிருந்து வடுகு என்னும் மொழி தமிழகத்திற்கு வடக்கில் அணித்தாக இருந்த நிலப்பரப்பில் பேசப்பட்ட ஒரு பழமையான மொழி எனவும், அது பழங்கன்னடம் அல்லது பிராகிருதம் கலந்த கன்னடம் என்றும் கருதலாம். எனவே இவ்விலக்கியங்களில் குறிப்பிடப்படும் வடுகர், கருநடர் ஆகியோர் கர்நாடகத்தின் ஒரு பகுதியில் ஆட்சி செய்த களப்பிரர் என்றே கருதலாம். வடவர் என்பதே வடுகர் என ஆகியிருக்கலாம். எனவேதான் தமிழகத்திற்கு வடக்கிலிருந்து வந்த பிந்தைய ஆந்திரரும் வடுகர் எனப்பட்டனர்.

களபப்பு நாடு

கர்நாடகப் பகுதியில் 'சரவணபௌகொளம்' என்னும் புகழ்பெற்ற சமணத்தலம் அமைந்துள்ள நிலப்பரப்பு முற்காலத்தில் களபப்பு நாடு என அழைக்கப்பட்டது. கன்னட நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்தும், கன்னட நூல்களிலிருந்தும் களபப்பு நாட்டையாண்ட சிற்றரசு மரபினரே களப்பிரர்கள் என அறியப்படுகிறது.[17]

சந்திரகுப்த மௌரியன் தன் நாட்டில் ஏற்படப்போகும் 12 ஆண்டு பஞ்சத்தை முன்கூட்டியே அறிந்து பத்ரபாகு என்னும் சமண முனிவருடனும் அவரைச் சார்ந்த துறவிகளுடனும் தென்னாடு நோக்கிவந்து களபப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் களபப்பு மலையில் தங்கினார் என்பதை வட்டாரவததென என்னும் சமண நூல் கூறுகிறது (மயிலைசீனி). களபப்புநாட்டில் உள்ள சந்திரகிரி மலையின் பழைய பெயர் 'களபப்பு பெட்ட' என்பதாகும்.

சரவணபெளகொள பகுதியின் அருகில், பேலூர் மாவட்டத்தில் 'ஹல்மிடி' என்னுமிடத்தில் கிடைத்துள்ள ஒரு பழங்கல்வெட்டு களபோர என்னும் தொல்குடியினரைக் கூறுகிறது. இதில் கதம்பகுல அரசன் காகுஸ்தவர்மன் (கி.பி. 425–400) களபோரரின் பகைவனாகக் கூறப்படுகிறான் . இக்காலத்தில் களப்பிரர்கள் தமிழகத்தில் ஆட்சிசெய்துள்ளனர். களப்பிரர், களபகுலத்தவர், களபோரர் என்னும் சொற்கள் யாவும் ஒரே சொல்லே. வட்டார வேறுபாடு காரணமாகவே சற்றே மாற்றி ஒலிக்கப்பட்டுள்ளன. எனவே இக்கல்வெட்டு சுட்டும் களபோரரும், சமண நூலாகிய வட்டாரவதென கூறும் களபப்பு நாட்டவரும், ஒரு குலத்தவரே எனக் கொள்வதே பொருத்தம். இவர்களே தமிழகத்தை ஆண்ட களப்பிரர்கள்.

வேள்விக்குடிச் செப்பேட்டின் நம்பகத்தன்மை

வேள்விக்குடிச் செப்பேட்டிலேதான் முதன்முதலாக 'களப்பிரர்' என்னும் சொல் குறிப்பிடப்படுகிறது. இச்செப்பேட்டை வெளியிட்டவன் பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் (கி.பி. 768–815). களப்பிரர் வரலாறு பற்றி ஆய்வு செய்த அனைத்து முன்னோடி அறிஞர்களும் இச்செப்பேட்டை முதன்மைச் சான்றாதாரமாகக் கொண்டே ஆய்வு செய்துள்ளனர். இச்செப்பேடு பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் சிலர் இச்செப்பேட்டின் நம்பகத் தன்மையைக் கேள்வி எழுப்பி விவாதிக்கின்றனர்.[18]

முதுகுடுமிப்பெருவழுதி என்னும் சங்ககாலப் பாண்டிய மன்னன் நாகமலைச்சரிவில் பாகனூர்க் கூற்றத்துள் அடங்கிய வேள்விக்குடி என்னும் ஊரைக் கொற்கை கிழான் நற்கொற்றன் என்னும் பார்ப்பனர்க்கு கொடையாக வழங்கினான். இக்கொடை களப்பிரர் காலத்தில் திரும்பப் பெறப்பட்டது. கடுங்கோன் (கி.பி.550–575) என்னும் பாண்டியமன்னன் களப்பிரரை வெற்றிகண்டு பாண்டிய நாட்டை ஆண்ட இருநூறு ஆண்டுகட்குப்பின் வந்த பராந்தக நெடுஞ்சடைய வரகுணனிடம், நற்கொற்றனின் வழிவந்த நற்சிங்கன் முறையிடுகிறான். தாங்கள் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடைக்குச் சான்றும் காட்டுகிறான். வேந்தன் அதனை ஏற்று முன்பெற்ற வேள்விக்குடியை மறுபடியும் அவர்களுக்கே வழங்குகிறான் என்பதே வேள்விக்குடிச் செப்பேடு கூறும் செய்தி.

இச்செப்பேடு தொடர்பாக சில கேள்விகள் எழுவது நியாயமானதே. சங்ககாலத்திய முதுகுடுமிப் பெருவழுதி கொடைவழங்கியதற்குச் சான்றாகக் காட்டப்பட்ட ஆவணம் மூல ஆவணமாக வழங்கப்பட்டு சுமார் ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வரகுணனிடம் காட்டப்பட்டு அது சரிபார்க்கப்பட்டிருந்தால் அக்காலம் வரையில் (கி.பி.770) தமிழ்பிராமி எழுத்துக்களைப் படித்து அறியக்கூடியவர்கள் யாரேனும் வாழ்ந்திருந்தார்களா? என்பதும் முதன்மையான கேள்வியாக அமைகிறது. அவ்வாறு இல்லாவிடில் இந்த ஆவணம் மறுபடியும் மறுபடியும் (பரம்பரையாக) படி எடுத்து எழுதப்பட்டு வட்டெழுத்து அல்லது தமிழில் எழுதப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறெனில் 'நாட்டான் தன் பழமையாதல் காட்டி' என்பதற்கு எவ்விதம் பொருள் கொள்வது.

வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறும் நிகழ்வுகளை எவ்விதப் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தாமல் ஏற்றுக்கொண்டிருப்பது வரலாற்றியலுக்கே முரண்பாடானதாகும். இருப்பினும் தொடக்ககால ஆய்வாளர்கள் அறிந்தோ அறியாமலோ இத்தவறைச் செய்துள்ளனர் [19] என்பார் வீ. மாணிக்கம் (2010). இதற்கு பி. ஜி. எல். சுவாமி அவர்கள் இச்செப்பேட்டின் உட்பொருளை நன்கு விவாதித்து பல புதிய செய்திகளை வலுவாக முன்வைத்துள்ளார் (1976). இதனை மாணிக்கம் கவனிக்கத் தவறியுள்ளார். மேலும் "பிரமதாய நிலக்கொடைகள் சங்ககாலத்தில் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. கி.பி. 500 அளவில் தான் இத்தகைய கொடைகள் வழங்கப்பட்டன. எனவே களப்பிரர் இறக்கியதாகக் கூறுவதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. களப்பிரரால் பறிக்கப்பட்ட நிலக்கொடைக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிமை கோரியதாகக் கூறப்படும் செய்தி நம்பத்தக்கதன்று" [20] என்பார் மாணிக்கம். இவ்வாறு வேள்விக்குடிச் செப்பேட்டின் உட்பொருளை ஒரேயடியாகத் தள்ளிவிட முடியாது. நிலக்கொடைகள் சங்ககாலத்தில் சீருர் தலைவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருப்பதைப் பதிற்றுப்பத்து காட்டுகிறது. [21] பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்கு சோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிகாலனால் வழங்கப்பட்ட ஊரைப் 13 ஆம் நூற்றாண்டுச் சோழன் எரியூட்டியபோது16 கால் மண்டபம் ஒன்று மட்டும் எஞ்சி நின்றதாகக் கூறும் பாடல் கல்வெட்டும்[22] இதனை உணர்த்தும். எனவே நிலக்கொடை கொடுக்கப்பட்டதா இல்லையா? சான்றாவணம் சரியானதுதானா, போலியா? என்ற சந்தேகங்கள் ஒரு புறம் இருந்தாலும் இச்செப்பேடுகள் கூறும் பிற வரலாற்றுச் செய்திகளை நாம் எவ்விதம் புறந்தள்ள முடியும். கடுங்கோன் முதலாக வரகுணன் ஈறாக வரிசைப்படுத்தப்படும் மன்னர்களின் வரலாறுகள், அவர்கள் மேற்கொண்ட போர்கள், அடைந்த வெற்றிகள் யாவும் நம்பத்தக்கனவல்லவா? அந்த வகையில் 'களப்பிரர்' என்னும் சொல்லை அச்செப்பேடு தருகிறது என்றால் அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? களப்பிரர் வரலாறு பற்றிய ஆய்வுக்கு இச்சொல்லை மட்டுமே நாம் எடுத்துக் கொள்வதே போதுமானது. கொடைபற்றிய பிற செய்திகள் விவாதிக்கப்பட வேண்டிய இடம் இதுவல்ல என்பதால் வேள்விக்குடிச் செப்பேட்டின் நம்பகத்தன்மை, பற்றிய ஐயப்பாடு நமது ஆய்வுக்குத் தடையாக இல்லை.

தமிழகத்தை ஆண்ட களப்பிர மன்னர்கள்

தமிழ் மூவேந்தர்களிடையே நிலவிய ஒற்றுமை இன்மை, அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட போர்களால் பொருளாதாரச் சீரழிவு, குறுநில மன்னர்கள், வேளிர் போன்றோர் சுய உரிமைபெற்று பேரரசர்களுக்குக் கட்டுப்படாத சூழல், ரோமானிய வணிகம் வீழ்ச்சி அடைந்ததால் ஏற்பட்ட நகரிய வீழ்ச்சி, அன்னியப்படையெடுப்பைத் தடுத்து நிறுத்தும் வலிமை படைத்த சரியான தலைமை இல்லாத நிலை இவற்றின் காரணமாகவே களப்பிரர் எளிதில் தமிழ்மண்ணைக் கைக்கொண்டனர். இது நிகழ்ந்த காலம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாக இருக்கலாம் என்பதில் பல வரலாற்றறிஞர்கள் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர் (சாஸ்திரி, பண்டாரத்தார், மயிலையார்).

களப்பிரர் மரபில் எத்தனை அரசர்கள் ஆண்டனர், எவ்வளவு காலம் ஆண்டனர். அவர்களின் பெயர்கள் என்ன என்பது பற்றி யெல்லாம் அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பாண்டிய நாட்டில் அவர்கள் கடுங்கோன் என்னும் பாண்டிய அரசனின் எழுச்சிவரை (கி.பி. 550) ஆண்டிருந்தபோதும் அவர்கள் ஆண்டதற்கான சான்றுகள் எதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் விட்டுச் செல்லவில்லை. மாறாக அவர்கள் ஆட்சி நிலவியபோது மூர்த்திநாயனார் என்னும் வணிகர் சிலகாலம் மதுரையை ஆட்சி செய்தார் என்ற பெரியபுராணக் குறிப்பே நமக்குக் கிடைக்கிறது. பாண்டிய நாட்டில் அப்போது ஆட்சி செய்த களப்பிரமன்னன் பிள்ளைப் பேறின்றி இறந்து போனதால், அமைச்சர்கள் பட்டத்து யானையிடம் மாலையைக் கொடுத்து மன்னனைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றும், அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர் மூர்த்தியார் என்றும், அவர் வணிகர், சைவசமயப் பற்றாளர் என்றும் பெரியபுராணம் கூறும். மணிமுடி சூடாமல் திருநீறும், ருத்ராக்கமும், சடை முடியும் சூடி அரசாண்டதால் அவர், 'மும்மையால் உலகாண்ட மூர்த்தியார்' எனப்பட்டார். மூர்த்தி நாயனார்க்குப் பின் எந்தக் களப்பிர மன்னர் ஆண்டார் என்ற குறிப்புகள் எதிலும் கிடைக்கவில்லை.

அச்சுதவிக்கந்தன்

யாப்பருங்கலம் என்னும் செய்யுள் இலக்கண நூலின் விருத்தியுரையாசிரியர் தம்முடைய உரையில் பல வெண்பாக்களையும், பிற செய்யுள்களையும் கொடுத்துள்ளார். அவற்றுள் நான்கு வெண்பாக்கள் அச்சுதன் என்னும் களப்பிரமன்னன் சேர, சோழ, பாண்டியரை வென்றதாகக் கூறுகின்றன. மூவேந்தர்களும், அச்சுதன் என்றும் களப்பிர மன்னனைப் புகழ்ந்து பாடியதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

தினைவிதைத்தார் முற்றம் தினையுணங்கும் செந்நெல்
தனைவிதைத்தார் முற்றம் அதுதானாம் – கனைசீர்
முரசுணங்கும் சங்குணங்கும் மூரித்தேர்த் தானை
அரசுணங்கும் அச்சுதன் முற்றத்து [23]

என்பது சேரமன்னன், களப்பிரன் அச்சுதனைப்பாடிய பாடலாகும். பாலிமொழியில் எழுதப்பட்ட ஒரு பௌத்தச் செய்யுள் களப்பிர அரசரை அச்சுதன் என்று கூறுகிறது. எனவே அச்சுதன் என்பது களப்பிர குலத்தவரின் பொதுப்பெயராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோள்களாகக் காட்டப்படும் நான்கு செய்யுட்களில் அச்சுத்த களப்பாளனைக் காக்கவேண்டும் என்று திருமாலையும், அருகக்கடவுளையும் வேண்டுவதாகப் பாடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரிய புத்தத்ததேரர் என்னும் பௌத்தப் பெரியார் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சோழநாட்டில் வாழ்ந்த தமிழர். பாலிமொழிப் பண்டிதரான இவர் பாலி மொழியில் புத்தவம்சத்கதா; அபிதம்மாவதாரம், வினயவினிச்சியம் உத்தரவினிச்சியம், ரூபாரூபவிபாகம், ஜினாலங்காரம் முதலான நூல்களை எழுதியுள்ளார். சோழநாட்டுப் பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாசர் கட்டிய பௌத்த விகாரையில் இவர் தங்கியிருந்தபோது வினயவினிச்சியம் என்னும் நூலை அச்சுதவிக்கந்தன் என்னும் களப்பிர அரசன் காலத்தில் எழுதிமுடித்ததாக அந்நூலில் குறித்துள்ளார்.

"அச்சுதச்சுதவிக்கந்தே களப்பகுலநந்தனே
மஹிம் ஸமனு ஸாஸந்தே ஆரத்தோ சஸமாபிதோ"

என்னும் அடிகளில் இக்குறிப்பு உள்ளது.[24] இந்த அச்சுதவிக்கந்தன் சோழநாட்டுப்பகுதியை ஆண்டவனாகவே காட்டப்படுகின்றான். பாண்டிய மன்னன் பாடியதாகக் கூறப்படும். 'குடகர் குணகட லென்றார்த்தார்' என்று தொடங்கும் வெண்பாவின் முடிவில் அமைந்த 'தில்லையச்சுதானந்தன் முன்கடைநின்றார்க்கும் முரசு'[25] என்ற குறிப்பையும் காணும் போது, இவன் சோழநாட்டுப் பகுதியை, சிதம்பரத்தை உள்ளடக்கி அரசு செய்தான் என்பதும் பெறப்படும்.

கூற்றுவ நாயனார்

சோழநாட்டை ஆண்ட களப்பிர அரசர்களில் கூற்றன் என்பவரும் ஒருவர். இவரைக் கூற்றுவநாயனார் என்று பெரியபுராணம் கூறும். 'ஆர்கொண்ட வேற் கூற்றன் களந்தைக் கோன்' என்று சுந்தரமூர்த்திநாயனார் தனது திருத்தொண்டத்தொகையில் குறித்துள்ளார். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் இவரைக் களப்பாள குலத்தவர் என்றே சுட்டுவார். 'காதை நெடுவேற் களப்பாளனாகிய கூற்றுவனே'[26] என்னும் அடியால் இதனை அறியலாம்.

களப்பிரர்கள் சைன, பௌத்த சமயங்களையே பெரிதும் சார்ந்திருந்தனர், ஆதரித்தனர் என்று கூறப்பட்டுள்ள நிலையில் கூற்றுவ நாயனார் சைவசமயப் பற்றாளராகக் காட்டப்பட்டுள்ளார். சோழநாட்டு அரசனாக ஏற்கப்பட்ட இவர் சோழ அரசர்களுடைய முடியைத் தரித்து அரசாள விரும்பினார். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ அரசர்களுக்கு வழக்கமாக முடி சூடும் உரிமை பெற்ற தில்லைவாழ் அந்தணர்கள் சோழர்க்கன்றி பிறர்க்கு முடிசூட்ட மாட்டோம் என மறுத்து தமது தாயகமான சேரநாட்டிற்குச் சென்றுவிட்டதாக அறியப்படுகிறது. எனவே கூற்றுவ நாயனார் முடி சூடாது சிவபெருமானின் கழல்களையே முடியாக ஏற்று ஆட்சி செய்தார் என்று கூற்றுவ நாயனார் புராணம் கூறும் (கூற்றுவ நாயனார் புராணம் : பாடல் 4,5).இக்குறிப்பின் மூலம் ஒரு செய்தியை உய்த்துணரலாம். சோழர் குடியே அரசகுடியென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. களப்பிரர் குடி அரசகுடிக்குத் தகுதியானதல்ல என்பது பின்னாளில் பாடப்பட்ட காராளர் குல திலகன் எனும் கொங்கு நாட்டுப் பாடல் ஒன்றின் மூலம் உறுதிப்படுகிறது. சோழர்கள் சூரிய குலத்தவர்கள் என்பதால் காராளர் குலத்தவர்க்குப் பட்டங்கட்ட தில்லைவாழ் அந்தணர் மறுத்திருக்கலாம். களந்தைகோன் கூற்றன் என்று இவன் சுட்டப்படுவதால் களந்தை என்னும் ஊர் எங்கிருந்தது என்று அடையாளம் காண்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

இன்றைய திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள சிற்றூர் களப்பால். இவ்வூரே கூற்றவ நாயனார் ஆண்டதாகக் கூறப்படும் 'களந்தை' என்பார் மு. அருணாசலம். இவ்வூர் தொன்மையான ஊர் என்பதற்கும் சில சான்றுகளை அவர் முன்வைக்கிறார். ஆதித்த சோழனால் (கி.பி. 871–907) கட்டப்பட்டுள்ள சிவன்கோயில் ஒன்று இவ்வூரில் உள்ளது. இதனைப் பாடிய கருவூர் தேவர் களந்தை – ஆதித்தேஸ்வரம் என்றே குறித்துள்ளார். மேலும் இங்குள்ள கூற்றுவன்திடல், கூற்றுவன்குளம் என்னும் இரண்டு இடங்கள் கூற்றுவ நாயனார் பெயரை நினைவுபடுத்துவனவாக உள்ளன. எனவே இக்களப்பால் என்னும் ஊரே முந்தைய களந்தை என்பது அவரது முடிவான கருத்தாக உள்ளது. மேலும் தொண்டை மண்டலத்தில் உள்ள களத்தூர் என்னும் ஊரை களந்தையாகக் கொள்வது ஏற்புடையதல்ல என்னும் அவர் கருதுகிறார். இதுவே ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாகும்.

ஆனால் இவரது இந்த முடிவுக்கு மாறாக களந்தை என்னும் ஊர் பாண்டிய நாட்டில் இருந்த களக்குடி என்பதே என்றும் அதன் மற்றொரு பெயர் கரவந்தபுரம் என்றும் கூறுகிறார் நடன காசிநாதன்[29]. அண்மையில் களப்பிரர் ஆய்வைச் சமர்ப்பித்துள்ள பத்மாவதி அவர்களும் இக்கருத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படுகிறார். ஆனால் இவ்விருவரது கருத்தும் மீளாய்வுக்குரியதே. கரவந்தபுரம் என்னும் ஊர் களக்குடி நாட்டில் உள்ளதாகப் பாண்டியர் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் களக்குடி அல்லது கரவந்தபுரம் எவ்வாறு களந்தை என மருவியது என்பது ஐயத்திற்குரியதே. மேலும் வரகுணனின் அமைச்சனாக இருந்த மாறங்காரி வைத்திய குலத்தைச் சேர்ந்தவர். எனவே அங்கே களப்பிர குலத்தவர்கள் இருந்திருக்கச் சான்றுகள் இல்லை. பாண்டிய நாட்டுக் களக்குடியிலிருந்து ஒரு தலைவன் (கூற்றுவன்) சோழநாட்டுக்கு மன்னன் ஆனான் என்பது சற்றும் பொருத்தமற்றது. எனவே மு. அருணாசலம் அவர்களின் கருத்தான களப்பால் என்பதே களந்தை என்பதை அவர் தரும் களந்தை ஆதித்தேஸ்வரம் என்னும் நேரடிச் சான்று கொண்டே நாமும் ஏற்கலாம். ஆனால் கூற்றுவநாயனார் களப்பாளர் குலத்தவர் அல்லர் என்னும் மு. அருணாசலம் அவர்களது கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது.

பூலாங்குறிச்சி சேந்தன் கூற்றன்

களப்பிரர் வரலாற்றில் புதிய ஒளியைப் பாய்ச்சும் வகையில் அமைந்துள்ளன பூலாங்குறிச்சி என்னும் ஊரில் கண்டறியப்பட்ட மூன்று வட்டெழுத்துக் கல்வெட்டுகள்.[28] 1979 இல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் கண்டறியப்பட்ட இக்கல்வெட்டுகளை நாகசாமி, நடன காசிநாதன், சுப்பராயலு, சேதுராமன் போன்ற அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். மயிலை சீனி வேங்கடசாமி, மு. அருணாசலம் முதலான அறிஞர்கள் காலத்தில் இக்கல்வெட்டுகள் அறியப்படவில்லையாதலால் அவர்கள் இவற்றைத் தம் ஆய்வுக்கு உட்படுத்த முடியாமல் போயிற்று.

இக்கல்வெட்டுகள் அடுத்தடுத்து மூன்று தனிக்கல்வெட்டுகளாக வெட்டப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு முழுமையாகவும், மற்ற இரண்டும் சற்று சிதைந்தும் காணப்படுகின்றன. வட்டெழுத்தில் அமைந்த இக்கல்வெட்டுகளை கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் எழுத்தமைதி கொண்டு கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இருவகையான கருத்துக்களின் அடிப்படையிலும் இது களப்பிரர் கால எல்லைக்குள் அடங்குவதாகவே நாம் கொள்ளலாம். மேலும் இக்கல்வெட்டு ஒன்றின் தொடக்கம், "கோச் சேந்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றற்குயாண்டு நூற்றுத்தொன்னூற்றிரண்டு நாள் முப்பத்தாறு பக்கந்தைப் பிறை நாள் பன்னிரண்டு" என அமைந்துள்ளது.

யாண்டு 192 என்பதைச் சக ஆண்டாகக் கொண்டு இதனை கி.பி. 270 க்கு உரியது என்று சிலர் கருதுவர் (நடன காசிநாதன்). இவ்வாண்டு 192 என்பதை களப்பிரர் ஆட்சிக் காலத்தின் தொடர் ஆண்டு எனக் கொண்டு களப்பிரர் ஆட்சியின் தொடக்கத்தைச் சுமார் கி.பி. 250 எனக் கொண்டு இக்கல்வெட்டின் காலத்தை கி.பி. 442 எனக் கருதலாம் என்பார் திரு. ஐ. மகாதேவன்.[29] கல்வெட்டுகளின் எழுத்தமைதியும் இதற்கு ஏற்பவே அமைந்துள்ளது. இக்கல்வெட்டுகள் பலவகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்காலத்திற்கு முற்பட்ட தமிழ்பிராமி கல்வெட்டுகள் பெரும்பாலும் சமணர் படுக்கைகளிலும், சில நடுகற்களிலும் கிடைத்துள்ளன. அவை தரும் செய்திகள் மிகச் சொற்பமே. ஆனால் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள் ஒரு நிலை பெற்ற அரசின் (State) செயற்பாட்டை, அதிகாரவாக்கத்துடன் செயற்படுத்திய ஒரு ஒரு சமூக அல்லது சமய நிகழ்வைப் பதிவு செய்வனவாக உள்ளன. எனவே இவற்றின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது.

கல்வெட்டுகள் தரும் செய்தி

சேந்தன் கூற்றனும், அவன் மகன் சேந்தனும் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்கள். இவர்களின் ஆட்சியின் கீழ் பாண்டிய நாடும், கொங்கு நாடும் இருந்தன. இவர்கள் வலுவான படையும் அலுவலர் கூட்டமும் கொண்ட அரசைக் கட்டமைத்திருந்தனர். இவர்களே பாண்டியன் கடுங்கோனுக்கு முன்பு பாண்டிய நாட்டை ஆட்சி செய்த களப்பிர மன்னர்கள் ஆவர்.[30]

சேந்தன் கூற்றன் காலத்தில் அவனது கடலகப் பெரும்படைத் தலைவனாக இருந்த வேள்மருகனின் மகன் எங்குமான் என்பவன் கூற்றத்து வேள்கூரு பச்செறிச்சில் மலைமேல் செய்வித்த ஒரு தேவகுலம், முத்தூற்றுக் கூற்றத்து விளமரின் செய்வித்த தேவகுலம், மதுரை உலவியத்தான் குளத்தின் வடபக்கத்தில் செய்வித்த தாபதப்பள்ளியுள் அமைந்த வாசிதேவனார் கோட்டம் ஆகியவற்றின் பாதுகாவலர்களாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திகோயத்தார், உள்மனையார், நாற்பாற்திணைகள் ஆகிய அமைப்பினர் கூறப்படுகின்றனர். இத்தேவகுலங்களின் பூசை மற்றும் அறக்கொடை நிர்வாகப் பணிகளைப் பாண்டங்கர், சேவுகர், விருமச்சாரிகள், தருமிகள் ஆகியோர் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. பச்செறிச்சில்மலைமீது எழுந்துள்ள தேவகுலத்தின் பிற எளிய பணிகளை குழலூரில் துஞ்சிய உடையாரால் (அநேகமாக முந்தைய அரசன்) வேள்கூறில் குடியமர்த்தப்பட்ட குடிகளே மேற்கொள்ள வேண்டும். வேறு குடும்பியரை (குடிகள்) இப்பணிகளில் அமர்த்தக்கூடாது என ஆணை இடப்பட்டது. இவ் அரசாணையை முன்னின்று கேட்டவர்கள் எயினன் குமரன், கீரங்காரி, குமாரம் போந்தை ஆகிய உலவியப் பெருந்திணை அலுவலர்கள். இவ்வாணையை ஒலை எழுதுவான் தமன் காரிக்கண்ணன் எழுதியதாகவும் கல்வெட்டு கூறுகிறது.

மற்றொரு கல்வெட்டு மேற்கூறிய தேவகுலங்களுக்கு வழங்கப்பட்ட அறக்கொடைகளைக் கூறுகிறது. வெள்ளேற்றான் மங்கலத்தில் பிரமதாயக்கிழவர் வழங்கிய நிலமும், கூடலூர் நாட்டு பிரமதாயம் சிற்றையூர் கடைவயலில் பிரமதாயக் கிழவரிடம் விலை கொள்ளப்பட்ட நிலங்களும் மற்றொரு பிரமதாயத்தின் பிரமதாயக் கிழவர் அனுபவித்துவரும் நிலமும் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன தேவகுலங்களில் பச்செறிச்சில் மலைமீது கட்டப்பட்ட தேவகுலமும், முத்தூற்றுக் கூற்றத்து விளமரில் எடுக்கப்பட்ட தேவகுலமும் சைவ அல்லது வைணவ சமயத்திற்குரியனவாக இருக்கலாம். மதுரையில் எடுக்கப்பட்ட வாசுதேவனார் கோட்டம் சமணம் சார்ந்ததாக இருக்கலாம். இதன்மூலம் சுமார் கி.பி. 500 ஆண்டு வாக்கில் இருந்த அரசு அமைப்பு, அதிகார வர்க்கம், கோயில் கட்டும் நிலை, அதில் பணியாற்றும் பல சமூகத்தார் என்று பல விரிவான செய்திகளை அறிய முடிகின்றது. மேலும் இக்கொடைக்குரிய அரசர்கள் களப்பிரர்களாக இருந்தாலும் வைதீக சமயக் கோயில்களையும் பராமரித்தனர் என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஆனால் இக்கல்வெட்டுகளின் உள்ளடக்கத்தை வேறு மாதிரியாகப் பொருள் கொள்கிறார் வேறு ஒரு ஆய்வாளர் (பத்மாவதி). இவர் வேள் கூரு பச்செரிச்சில் மலை மேல் கட்டப்பட்டது பௌத்த கோயில் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்றன. இராமன் கதை உவமையாக இரண்டு இடங்களில் (சிலம்பு,II, 13: 63–65, 14: 46–49) இடம்பெற்றுள்ளன. கண்ணன் பற்றிய தொன்மங்கள் இடம்பெற்றுள்ளன. கண்ணனும் நப்பின்னையுமாக முறையே கோவலனும் கண்ணகியும் ஆய்ச்சியருக்குத் தோன்றுவதாக இளங்கோ குறிப்பிடுகிறார். மேலே குறிப்பிட்ட 6 கோயில்களில் திருமால் அர்ச்சை வடிவில் கூறப்படுகிறான். திருவேங்கடத்தில் நின்ற வண்ணமும், திருவரங்கத்தில் கிடந்த வண்ணமும் 'கண்மணி குளிர்ப்ப' வருணிக்கப்படுகின்றன. வையைக் கரையில் உள்ள திருமால் கோயிலில், நீராடி வழிபட ஆயர் பெண்கள் போயினர். திருமாலை, 'உள்ளம் பொருந்துமின்' எனவும் 'சிந்தையில் வைத்து' எனவும் அவனை அந்தர்யாமியாக வணங்கும் நிலையை இளங்கோ கூறுகிறார். [15]

இறைவன் மிகவுயர்ந்த பரம் பொருள்: அவன் பெரியவன்; அடிப்படிப்பட்ட ஒருவன் தன் அடியாருக்குக்காகத் தன் திருவடி நோகத் தூது நடந்தான். இது அவனுடைய எளிவந்த (சௌலப்யம்) நிலை. தன் 'இரண்டு அடியால் மூவுலகும் இருள் தீர நடந்தவன், பஞ்சவர்க்குத் தூது நடந்தான்' (சிலம்பு II, 17 அடி 3.2–3). இது மாயமோ எனப் பெண்கள் வியக்கின்றனர். கண்ணனாக வந்தபோது யசோதை கயிற்றால் கட்டத் தன்னைக் கொடுத்தான் என்றும் சிலம்பு அவனைப் புகழுகிறது. இது அவன் பண்பு.[16]

திருமால் ஆடிய குடம், குடை, பாவை (திருமகள்), பேடி (காமன்) ஆகிய கூத்துக்கள் சிலம்பில் இடம்பெற்றுள்ளன. [17] ஆயர் பெண்கள் தீய சகுனம் தோன்றத் தீமை வராமல் தங்களைக் காக்க வேண்டும் எனத் தங்கள் வழிபடு கடவுளான மாயவனைக் குரவைக் கூத்தாடி வழிபடுகின்றனர். 7 பெண்கள் வட்டமாக நின்று கைகோர்த்து ஆடுவது குரவைக் கூத்து. கண்ணன், பலதேவன், நப்பின்னை, யசோதை, இடைப்பெண்களாக, இசையில் 7 சுரங்களாக தங்களைக் கருதி, அவர்கள் ஆடுவர். இக்கூத்தில் அப்பெண்கள் கண்ணனின் 'வால சரிதை' நிகழ்வுகளைக் கூத்தாக ஆடுவதாக இளங்கோ குறிப்பிடுகிறார். குரவைக் கூத்து, பிற்கால இந்திய மரபில் இராசலீலை ஆடலாக வளர்ந்தது.[18] இக்கூத்து முழுவதிலும் உணர்ச்சி மயமான பக்தி மரபைக் காண்கிறோம். கண்ணனைப் பரவும் ஆய்ச்சியர் பெண்கள், அவனுடைய எளிமைப் பண்பை வியந்து வழிபடுகின்றனர். 'வடவரையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தாக்கி ....' என்று தொடங்கி 'நாராயணா என்னா நாவென்ன நாவே' (சிலம்பு II, 17. 1–6) என்ற பகுதி முழுவதிலும் உணர்ச்சி மயமான பக்தி மரபைக் காண்கிறோம். 'திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே', 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே', 'நாராயணா என்னா நாவென்ன நாவே' என்ற அடிகள் ஆழ்வார் பாடல்களுக்கு மூலமாக உள்ளன. 'நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்ற ஆழ்வார் [19] குரலை இளங்கோ அடிகள் குரலில் கேட்கிறோம்.

திருமாலின் திருவடிச் சிறப்பு, திருநாமம் என்பன சிலம்பில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. திருமாலின் எட்டெழுத்து மந்திரம் ஓதுவதை மாங்காட்டு மறையவன் கூறுகிறான். எட்டெழுத்து மந்திரம் பற்றிய முதல் இலக்கியப் பதிவு இது.[20] சிலம்பு இவ்வாறு வைணவம் வளர்த்த நிலையை, ஆழ்வார்கள் பக்தி மரபை உருவாக்க ஏற்ற அடிப்படையை விளக்குகிறது.

மணிமேகலை

மணிமேகலை, தத்துவ நிலையில் வைணவக் கோட்பாடுகளைக் கூறுகிறது. அன்றைய புகாரில் இருந்த திருமால் கோயில் வழிபாடு பற்றிக் கூறுகிறது. கண்ணன், பலதேவன், நப்பின்னை பற்றியும் குரவைக் கூத்து பற்றியும் மணிமேகலை கூறுகிறது (மணி 19: 61–66). வாமனன் கதை, கண்ணன் கதை என்ற அவதாரக் கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. வைணவ வாதி, மணிமேகலையிடம் தன் சமய தத்துவங்களைக் கூறுமிடத்தில்[21] வைணவத்தை விளக்குகிறான்.[21] அவன் கடல் வண்ணன் புராணம் ஓதினான். 'நாரணன் காப்பு' என்று கூறி வாதத்தைத் தொடங்குகிறான். கடவுள், உயிர், உலகு பற்றிய தத்துவப் பார்வை, வைணவ சார்பில் அன்றைய தமிழகத்தில் அறியப்பட்டிருந்ததைச் சாத்தனார் இப்பகுதியில் பதிவு செய்துள்ளார். எனவே, திணைத் தெய்வ மரபு வளர்ந்து பெருஞ்சமய ஒற்றை அடையாளத்தில் சமய, தத்துவ மரபுகளோடு விளங்கியதை இந்நூல்களிற் காண்கிறோம்.

முதலாழ்வார் மூவர்

பொய்கை , பூதம், பேய் ஆகிய மூவரும் முதல் ஆழ்வார். இவர்கள் பாடிய முறையே முதல் மூன்று திருவந்தாதிகள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பில் இயற்பா பகுதியில் நான்காது ஆயிரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இசையின்றி இவை வேதம் ஓதும் மரபில் பாடப்படுவதால் இயற்பா எனப்பட்டது. வைணவ பக்தி இலக்கியத்தின் தோற்றுவாயாக இவை உள்ளன. திருமாலையும் சிவனையும் இணைத்துப் பாடும் நிலை – சிவனை விட திருமால் உயர்ந்தவன் எனப் பாடாத நிலை – இவர்களிடம் உள்ளது. இறைவனின் பரம், வியூகம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி என்ற 5 நிலைகளை இவர்கள் பாடுகின்றனர்.

அரங்கம், வேங்கடம், கோட்டியூர், கச்சி, வெஃகா, திருமாலிருஞ்சோலை மலை, குடந்தை, மாமல்லை முதலிய தலங்களைப் பாடியுள்ளனர். 'வாய் அவனை அல்லாது வாழ்த்தாது' (முதல் திரு.11) [22] என்ற பொய்கையார் பாடல் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையின் தொடர்ச்சியாக உள்ளது. 'சுவர்மிசைச் சார்த்தியும் வைத்தும்' (முதல் திரு. 14) என்பது இறை திருவுருவைச் சுவரில் எழுதியும் அப்படியே வைத்தும் வழிபடும் அன்றைய வழிபாட்டுச் சடங்கு முறையை விளக்கும்.[23] திருமாலின் நாமம் ஓதுதல் பெருந்தவம் என்கிறார் பூதத்தார் (பாடல் 6). இது பக்தி இலக்கிய மரபின் உயிர்க் கருத்து, 'மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு' (2 ஆம் பாடல் 39)[24] என்கிறார் பூதத்தார். வேதத்தின் சுருக்கமாக, பெருளாக திருமால் பெயர் உள்ளது என்பது தமிழ் பக்தி மரபின் தனித் தன்மை. அவர் 'இளங்கோயில்' (பாடல் 54) எனக் கோயில் அமைப்பைக் கூறுகிறார். பிற்கால ஆகம மரபு 'பாலாலயம்' என்பதை இளங்கோயில் எனக் குறிப்பதற்கு மூலம் இது.

திருமாலின் திருவடிக்குத் தமிழ் மாலை சொன்ன 'பெருந் தமிழன்' (பாடல் 74) என அவர் தன்னைக் குறிப்பிடுகிறார். தமிழன் என்ற சொல்லின் முதல் வரவு இது. பேயார், திருமால் நமக்கு 'மருந்தும் பொருளும் அமுதமுமாக' (3 ஆம் பாடல் 4) இருப்பதாகச் சொல்லுகிறார்.[25] இவர் திருவல்லிக்கேணி, வேளுக்கை ஆகிய தலங்களையும் குறிப்பிடுகிறார். திருமால் 'உள்ளுவார் உள்ளத்து உளன்' (பாடல் 40) என்கிறார். இதுவும் பக்தி மரபின் அடிப்படை, இறைவன் உணர்வினால் மட்டும் உணரப் படுபவன் (பாடல் 82) என்பது உணர்ச்சி மயமான பக்தியின் அடிப்படையாகத் தமிழ் மரபு தந்த நெறியாகும். 'அவனை வலைப்படுத்தேன்.... அவன் என் நெஞ்சில் நின்றான் இருந்தான் கிடந்தான்' (பாடல் 94) என்று பேயார் பாடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் நின்ற, இருந்த, கிடந்த கோலங்களைச் சுட்டுகிறது. அவனைத் தன் மனத்துள் வலைப்படுத்தியது, பிற்காலத்தில் நம்மாழ்வார் 'வாசுதேவன் வலையுளே'[26] எனவும் மணிவாசகர் 'பக்தி வலையில் படுவோன்'[27] எனவும் பாடுவதற்கு அடிப்படை. முதலாழ்வார் மூவரும் தொடக்க நிலையில் தமிழ் வைணவ பக்தி மரபைப் பல நிலைகளில் உருவாக்கித் தந்தனர்.

அடிக்குறிப்புகள்

1. பரிபாடல், இரா. சாரங்கபாணி (உரை). கோவிலூர் மடாலயம், 2003, பாடல் 4, அடி 67–70.
2. மேலது, பாடல் 5, அடி 55–70.
3. ஈசுவரனுக்குக் குணம் இல்லை, அவன் நிர்குண பிரம்மம் என்பாரின் மிடற்றைப் பிடிப்பாரைப் போலே, சுடரடி என்றார் என்று திருவாய் மொழி (1.1.1) முதல் உரையில் (ஆறாயிரப்படி) கூறப்படுகிறது. இந்த அடிப்படையில் இக்கருத்தாக்கம் வளர்ந்தது. காரணம் இராமாநுசர் இதை மையமிட்டு ஸ்ரீ பாஷ்யம் எழுதினார்.
4. திருவாய் மொழி 1.1.1, 1.1.7, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், வேங்கட சாமி ரெட்டியார் (ப.ஆ) சென்னை திருவேங்கடத்தான் திருமன்றம், 1973.
5. பரிபாடல், பாடல் 3, அடி 81–82.
6. பரிபாடல், பாடல் 13, அடி 57–60.
7. பரிபாடல், பாடல் 4, அடி 10–21.
8. பரிபாடல், பாடல் 15, அடி 19–29. பிற்காலத்தில் திருமால் மட்டுமே இருக்கும் சன்னதியாக மாற்றம் பெற்றது ; நின்ற கோலம்.
9. பரிபாடல், பாடல் 3, அடி 34. திருமால் அறநெறி தவறிய கையை உடையவன் எனப் புலவர் பழிப்பது போலப் புகழ்கிறார். பிற்கால நிந்தாஸ்துதி பாடுவதற்கு இது மூலம்.
10. திருஞானசம்பந்தர், தேவாரம், 1. 128, சிவகாசி சிவனடியார் அறநெறிக் கழகம்.
11. ஐந்திணை ஐம்பது, பாடல் 1, பதினெண்கீழ்க்கணக்கு, சென்னை, என்.சி.பி.எச். 1981.
12. பலதேவனை அவன் வண்ண அடிப்படையில் வெள்ளை என்கிறார். பரிபாடலும் இவ்வாறு சுட்டுகின்றது. இன்றும் வெள்ளை, வெள்ளைச்சாமி என மக்களுக்குப் பெயரிடப்படுகிறது.
13. திருவாய்மொழி. 4.4.8.
14. சிலம்பு II, 17.2 சென்னை, கழகம், 1947 (மூலம் மட்டும்).
15. மேலது, II 18 அடி 1–5.
16. வைணவ மரபில் திருமாலின் உயர்ந்த குணங்களைக் கூறும்போது அவனுடைய இந்த 'எளிமைப் பண்பை' (ஸௌலப்பியம்) மிகவும் கொண்டாடுவர்.
17. சிலம்பு I, 6 அடி 52–61.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சு.வேங்கடராமன், தமிழர் சமய மரபுகள், ப.125–127, மதுரை மீனாட்சி புத்தக நிலையம், 2007.

19. திருமங்கை, பெரிய திருமொழி. 1.1.1.

20. சிலம்பில் முதன்முதலாகத் தமிழ் மரபில் எட்டெழுத்து மந்திரம், துர்க்கை (பாய் கலைப் பாவை) மந்திரம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

21. மணிமேகலை, 27 அடி 98–107, உ.வே.சா. (ப.ஆ), 1981.

22. முதல் திரு. பாடல் 11.

23. மேலது 14. ஆண்டாள் நாச். திருமொழியில் மன்மதன் உருவத்தைச் சுவரில் வரைந்து வழிபடும் மரபைப் பாடுகிறார் (நாச். திருமொழி, 1.4).

24. 2 ஆம் திரு பாடல் 39. பூதத்தாரைத் தொடர்ந்து பக்தி இலக்கியக் காலத்தில் திருஞானசம்பந்தர், 'வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமசிவாயவே' எனப் பாடுகிறார்.

25. 3 ஆம் திரு. பாடல் 4.

26. திருவாய்மொழி, 5.3.6.

27. திருவாசகம், திருவண்டப்பகுதி அடி 42 திருவாவடுதுறை , ஆதீனம், 1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலதேவன் வழிபாடு

சு. வேங்கடராமன்

அறநெறிக் காலத்தில் (கி.பி. 3–6) தமிழ் மரபில் இடம் பெற்றிருந்த பலதேவன் வழிபாடு பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம். பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கீழ்க்கணக்கு நூல்கள், சிலம்பு, மணிமேகலை, முதலாழ்வார் மூவர் பாடல்கள் ஆகிய இக்கால இலக்கியங்களில் பலதேவன் வழிபாட்டு மரபைக் காண்கிறோம். இந்த இலக்கியங்களோடு வரலாற்றுச் சான்றுகளையும் சேர்த்து இக்கட்டுரை அமைகிறது. பலதேவன் வழிபாடு தொடக்கத்தில் தனித்த மரபாக இருந்து, படிப்படியாக திருமால் வழிபாட்டு மரபில் வியூகம், அவதாரம் என்ற நிலைகளில் உள்வாங்கப்பட்டது. தனித்த அடையாளத்தோடு இருந்த தொன்மையான சமய மரபு காலப்போக்கில் வைணவப் பெருஞ்சமய ஒற்றை அடையாளத்தில் கலந்து மறைந்துள்ளது என்பதை இக்கட்டுரை விளக்கும்.

பலதேவன் மரபு - தொடக்கநிலை

பலதேவன், பலராமன், சங்கர்ஷணன், பலபத்ரன் ஆகிய பல்வேறு பெயர்களால் பழங்காலத்தில் அறியப்பட்டான். உழவுத் தொழில் செய்து வாழும் (க்ருஷி) மக்களால் வணங்கப்பட்ட, இனக்குழுத் தலைவன் சங்கர்ஷணன், தன் கையில் கலப்பை (நாஞ்சில்) உடையவன் – ஹல் (கலப்பை) தேவன். அவன் பலதேவன் எனப்பட்டான். பலம் (வலிமை) உடையவன் எனவும் விளக்கம் கூறுவர் தமிழ் மரபில். அதனால் அவன் 'வாலியோன்'[1] – வாலி – வலி –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையுடையவன் என இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளான். பிற்காலத்தில் அதனால் பலதேவன் வலிமையும் (பலமும்), ஞானமும் நல்கும் கடவுளாகப் போற்றப்பட்டான். திருமாலின் பரத்துவ நிலைக்குரிய குணங்களில் ஞானம், பலம் இரண்டும் முக்கியமானவை. நரசிம்ம அவதாரத்தோடு பலதேவனைத் தொடர்புபடுத்தினர். தொடக்க நிலையில் பலதேவன் நாகர் இனத்தவரோடு (பாம்பு) தொடர்புபடுத்தப்பட்டுள்ளான். சிலப்பதிகாரத்தில் 'வெள்ளை நாகர் கோட்டம்'[2] (கோயில்) என்று அவன் உறையும் கோயில் குறிப்பிடப்படுகிறது. அவன் சிற்பங்களில் நாகத்தோடு அமைக்கப்பட்டுள்ளான்.[3] அரவக்கொடியுடைய துரியோதனனை அவன் சார்ந்திருப்பதாக மகாபாரதம் இந்த அடிப்படையில் கூறுகிறது. அதனாலே அவன் ஆதிசேடன் அவதாரம் எனவும் இராமாவதாரத்தில் இலக்குவனாகப் பிறந்த ஆதிசேடன், கண்ணன் அவதாரத்தில் மூத்தவனாக – பலதேவனாகத் தோன்றினான் எனவும் அமையும் தொன்மைக் கதைகள் இந்த அடிப்படையில் கட்டமைக்கப்பட்டன.

இந்திய மரபில் மிகப்பழங்காலத்தில் வருஷிணி, சாதவாகனர் என்னும் பெயர்களோடு வாழ்ந்த வடபுல இனக்குழு மக்களின் தலைவன் பலதேவன். அவன் கையில் கலப்பை, உலக்கை (முசலம்) ஆகிய கருவிகளை உடையவன். அவன் தனித்த வீரனாக, குழுத் தலைவனாக இருந்து காலப்போக்கில் வேளாண் குழுவினரால் வலிமை தரும் கடவுளாக வணங்கப்பட்டான். இதுதான் பலதேவனின் தொடக்கநிலை. அந்த அடிப்படையிலே அவன் கையில் கலப்பையோடு படிமம் சமைக்கப்பட்டு, தனிச் சன்னிதி, தனிக் கோயில் உடையவனாக இருந்தான். பின்னர் அவன் சங்கர்ஷணனாகி, வாசுதேவ கண்ணனுடன் இணைக்கப்பட்டுள்ளான்.

வட இந்தியாவில் ராஜஸ்தான் பகுதியில் பழைய உதயப்பூரில் கிடைத்துள்ள கி.மு. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதி சார்ந்த கல்வெட்டில் முதன் முதலாகச் சங்கர்ஷணன் வழிபடப்பட்ட சான்று உள்ளது.[4] கோயிலில் படிமம் சமைக்கப்பட்டு அவன் அர்ச்சையாக வழிபடப்பட்டான். அர்ச்சை என்ற சொல் வடமொழி மரபில் பதஞ்சலியின் பேருரையில் இடம்பெறுகிறது. பின்னர் வைணவ பாஞ்சராத்திர ஆகம மரபு இதே சொல்லை ஆளுகிறது. தமிழ் மரபில் திருமேனி, படிமம், பாவை என்று பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்த்துவிற்கு முற்பட்ட காலத்தில் வடபுலத்தில் காணப்பட்ட பஞ்சவீர வழிபாட்டில் சங்கர்ஷணன் பனைக் கொடியோனாக அறியப்பட்டான். கி.மு. முதல் நூற்றாண்டு சார்ந்த மத்தியப் பிரதேச குவாலியர் மாவட்ட பவயா கல்வெட்டு இதைக் குறிப்பிடுகிறது. [5]

தக்கணப் பகுதியில் சாதவாகன அரச மரபு சார்ந்த ஸ்ரீசதகர்ணி அரசியின் கல்வெட்டில் சங்கர்ஷணன் இடம்பெறுகிறான். இது மிகப் பழைமையான வரலாற்றுக் குறிப்பு. அறநெறிக்கால இலக்கியங்களுக்கு முன்பாகச் சங்ககால மரபிலே பலதேவன் வழிபாடு குறித்து தமிழ் மக்கள் அறிந்திருந்தனர். இதைப் புறநானூறு, கலித்தொகை, நற்றிணை[6] ஆகிய இலக்கியங்களிற் காண்கிறோம். பனைக்கொடி உடையவனாக, கையில் மேழியை (கலப்பை) ஆயுதமாகக் கொண்டவனாக, வெண்மை நிறத்தவனாகப் பலதேவன் இந்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளான். அவன் இவற்றில் வியூக, அவதாரக் கோட்பாடுகளில் காட்டப்படவில்லை. தனித்த அடையாளமுடைய ஒரு கடவுள் என்ற நிலையிலேயே சங்ககால மரபில் அவன் அறியப்பட்டுள்ளான். அவன் வலிமை மிக்கவன் என்பதால் வாலியோன் என அழைக்கப்பட்டான். இந்த மரபு அறநெறிக் காலத்திலும் தொடருகிறது.

இலக்கியச் சான்றுகள்

அறநெறிக்கால இலக்கியங்கள் பலதேவன் வழிபாடுகள் குறித்த பல செய்திகளைத் தருகின்றன.

பரிபாடல்

பலதேவனையும் கண்ணனையும் இணைத்துப் பாடும் மரபையும், பலதேவனுக்குக் கோயிலில், அர்ச்சை வடிவில் திருமேனி இருந்ததையும் பரிபாடல் குறிப்பிடுகிறது. அவன் வெண்ணிறம் உடையவன். வெண் சங்கு போன்ற அவன் வண்ணம், 'வால் வளைமேனிச் செய் உயர் பணை... நாஞ்சில் ஒரு குழை ஒருவனை' (பரி. 1 : 3–5) என்று குறிப்பிடப்படுகிறது.[7] சங்கு போன்ற மேனியையும் பனைக் கொடியையும் நாஞ்சில் (கலப்பை) ஆயுதத்தையும் உடையவன் அவன். அவன் ஒரு காதில் மட்டும் குழை அணிந்தவனாக உள்ளான். கண்ணனையும் பலதேவனையும் இணைத்து இப்புலவர் பாடுகிறார். ஆனால், திருமாலின் அவதாரமாக அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறவில்லை. 'நாவல் அந்தணர் அருமறைப் பொருள்' (பரி. அடி 13) என்பதில் பலதேவனும் கண்ணன் போலவே அந்தணர் ஓதும் வேதத்தின் பொருளாகக் கூறப்படுகிறான். இனக்குழு மக்கள் – முல்லைநில இடையர்களின் திணைக் கடவுள், வைதிகச் சமய உருவாக்கம் பெறுவதை இங்கே காண்கிறோம்.

கலப்பையை ஆயுதமாகக் கொண்ட வேளாண்மைத் தொழில் செய்வோருக்குரிய பலதேவன், வேதம் ஓதும் அந்தணர் கடவுளாக வளர்ச்சி பெற்றுள்ளதை இப்பாடல் காட்டுகிறது. பரிபாடல் 2ஆவது பாடலில் சங்கு போன்ற வெண்ணிறமுடைய வலிமைமிக்க பலதேவன் மூத்தவன். கண்ணன் இளையவன் என்பதாகக் கூறப்படுகிறது (பாடல் 2 : 20–21). கண்ணன் அவதாரத்தில் பலதேவன் மூத்தவன் என்ற தொன்மக்கதை தமிழகத்தில் பரவி நிலைபெற்ற காலத்தில் இப்பாடல் பாடப்பெற்றுள்ளது. பலதேவன் வலிமை மிக்கவன் (வாலியோன்) என்ற பழைய கருத்தாக்க மரபு இதில் தொடருவதைக் காண்கிறோம். திருமாலின் 4வகை வியூகங்களின் ஒன்று – சங்கர்ஷணன் – 'கருங்கண் வெள்ளை' (பரி. 3. அடி. 81) எனக் கூறப்படுகிறது.

கண்ணனையும் பலதேவனையும் இணைத்துத் திருமாலிருங் குன்றத்தில் (இன்றைய அழகர் கோயில்) உறையும் கடவுளாகப் பரிபாடல் (பாடல் 15) காட்டுகிறது. காதில் ஒரு குழை அணிந்து கையில் வளைந்த கலப்பையை ஏந்திய வெண் நிறத்தவனாக இப்பாடலில் போற்றப்படுகிறான். அவன் அக்குன்றில் உள்ள கோயிலில் அமர்ந்த கோலத்தில் உள்ளான். (பரி. 15 : 55–64). கண்ணனோடு அவன் இணைந்து வீற்றிருக்கும் திருமாலிருங் குன்றம் வீடுபேற்றைத் தரக்கூடியது. அக்குன்றை வணங்கினாலே போதும். இருவரையும் தொழுது பரவுவதன் மூலம் வீடுபேறு பெறலாம். அவ்விருவரும் பெரும் பெயருடையவர். இதன்மூலம் இருவரும் இணைந்த பரம்பொருள் நிலை புலவரால் கூறப்படுகிறது. பலதேவன் வழிபாடு வளர்ச்சி பெற்ற காலத்தில் இப்பாடல் உருவாகி உள்ளது. அடுத்துவரும் ஆழ்வார்கள் காலத்தில் பலதேவன் வழிபாடு வைணவப் பெருஞ்சமய ஒற்றை அடையாளத்தில் கலந்து பின்னர் மறைந்து விட்டது. பிற்கால மரபில் திருமாலிருங்குன்றம், திருமால் மட்டுமே உறையும் திவ்ய தேசமாக நின்ற கோலத்தில் திருமால் இருப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்டது. படிப்படியான இந்த வளர்ச்சி எப்போது நடந்தது என்பது ஆய்விற்குரியது.

பரிபாடலில் திருமாலின், பலதேவனின் அர்ச்சை வடிவம் போற்றப்படுவது, அவன் உறையும் தலம் சிறப்பிக்கப்படுவது என்பவை தமிழகச்சமய இலக்கிய மரபில் புதிய வரவு. பின்வரும் ஆழ்வார்கள் பாடும் மரபிற்கு இது அடிப்படையாகிறது. பரிபாடல் திரட்டு முதல் பாடலில் பலதேவனைப் பற்றிய குறிப்பு இல்லை. அது பிற்காலப் பாட்டு என கொள்வதற்கு இதுவும் நல்ல சான்று.

சிலப்பதிகாரம்

பரிபாடலை அடுத்து, கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின்னால் சிலம்பு அமையும். சிலம்பிலும் கண்ணனின் முன்னோனாகப் பலதேவன் (ஆய்ச்சியர் குரவையில்) குறிப்பிடப்படுகிறான். பலதேவன் வெண்சங்கு போன்ற வண்ணம் உடையவன். ('வால் வெள்ளை') அவன் கண்ணனுக்கு மூத்தவன். வலிமை உடைய வெண்நிறத்தவனான அவன் குரவைக்கூத்தில் 'இளி' என்ற அடிப்படைச் சுரமாக உள்ளான். [8] (சிலம்பு. 11 : 12 – 16). பலதேவனுக்குப் புகார் நகரில் தனிக்கோயில் இருநதது. 'வால்வளை மேனி வாலியோன் கோயில், (சிலம்பு : 15. 171) என்று அது சுட்டப்படுகிறது. வெண்மையான சங்குபோன்ற மேனியை உடைய வலிமைமிக்க பலதேவன் என அவன் போற்றப்படுகிறான். மற்றோர் இடத்தில் (கனாத்திறம் உரைத்த காதையில்) அழகு மிக்க வெண்மை நிறமுடையவன் பலதேவன். அவன் நாகர் இனத்தவரால் வழிபடப்படுபவன் (சிலம்பு : 1: 9 : 10)[9] என்று இளங்கோ அடிகள் கூறுவது மிக நுட்பமானது. பழைய மரபில் நாகர் இனத்தவரால் பலதேவன் வழிபடப் பெற்றான் என்பதற்குத் தமிழ் மரபிலுள்ள வலுவான சான்று இது. இனக்குழு மக்களின் வழிபடு கடவுளாக இருந்த பலதேவன் வழிபாடு படிப்படியாக வைணவ மரபில் கலந்து பெருஞ்சமய அடையாளம் பெற்றதை வரலாற்றுப் போக்கில் அறிய இச்சான்று உதவும்.

கீழ்க்கணக்கு நூல்கள்

கீழ்க்கணக்கு நூல்களில் சமயச் செய்திகள் இரு வகையில் இடம்பெற்றுள்ளன. நூலிற்குள் இடம் பெறுவது ஒரு வகை. நூலிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே, கடவுள் வாழ்த்தில் இடம்பெறுவது மற்றொரு வகை. இந்த இரு வகைகளிலும் பலதேவன் பற்றிய குறிப்பை நாம் காண்கிறோம். 'கார் நாற்பது' நாஞ்சில் படையை உடைய பலதேவன் வண்ணம் போல (பாடல் 19) என்று வருகிறது.[10] கண்ணனின் முன்னவனான பலதேவனின் வெண்மை நிறம் போல நிலவு ஒளி வீசுவதாக (பாடல் 96) 'திணைமாலை நூற்றைம்பது' கூறுகிறது. 'இன்னா நாற்பது' நூலில் கடவுள் வாழ்த்தில் தனித்து நிற்கும் பலதேவன் குறிப்பிடப்படுகிறான். வெண்மை நிறமுடைய பலதேவனை 'வெள்ளை' என்றே அப்பாடல் குறிப்பிடுகிறது. 'வெள்ளையை உள்ளாது ஒழுகு இன்னா' பாடல் 1,அடி 2)[11] என்று கூறுகிறது. பலதேவனை மனத்தால் நினைக்காத ஒழுக்கம் துன்பம் தரும் என இப்பாடல் குறிக்கிறது. சிவன், பலதேவன், திருமால், முருகன் ஆகிய நால்வரையும் இணைத்துக் கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு இதில் உள்ளது. புறநானூறு, சிலம்பு இரண்டிலும் காணப்படும் இந்த மரபு வடபுலப் பஞ்சவீரர் வழிபாடு[12] போலத் தமிழ் மரபில் தனித்துக் காணப்பட்டது. இது மேலும் ஆய்விற்குரியது.

மணிமேகலை

மணிமேகலையில் இரண்டு இடங்களில் பலதேவன் குறிப்பிடப்படுகிறான். கண்ணனின் மூத்தவனாக, அவதார நிலையில் மட்டுமே இரண்டு இடங்களிலும் அவன் சுட்டப்படுகிறான். கண்ணன், நப்பின்னை, பலதேவன் ஆகியோர் குரவைக் கூத்து ஆடியது, 'மாமணி வண்ணனுந் தம்முனும், பிஞ்ஞையும் ஆடிய குரவை (மணி : 19 : 65–66)[13] எனக் குறிப்பிடப்படுகிறது. பலதேவன் அன்னப் பறவையாக உருவகிக்கப்படுகிறான். குரவைக் கூத்து சிலம்பின் தொடர்ச்சி. முல்லைநில ஆயர் இனக்குழு மக்களின் வழிபாட்டுச் சடங்காக நிகழ்த்தப்பட்டது குரவைக் கூத்து. அதில் பலதேவன் கண்ணனின் முன்னோனாகச் சுட்டப்படுவது திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகப் பலதேவன் கருதப்படும் பிற்கால மரபு இது என அறியலாம்.

மற்றோர் இடத்திலும் நெடியோனின் முன்னோனாகப் பலதேவன் குறிப்பிடுகிறான் (மணி : 19 : 77). எனவே தனிக்கடவுளாக வணங்கப்பட்ட நிலை, தனிக்கோயில் இருந்த நிலை, கண்ணனோடு இணைத்து வணங்கப்பட்ட கோயில் அமைப்பு என்ற படிநிலைகளைத் தாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர்ஷணன், நான்கு வகை வியூகங்களின் ஒன்றாகப் போற்றப்பட்ட நிலையைக் கடந்து திருமாலின் அவதாரமாகக் கொள்ளப்பட்ட வளர்ச்சியை மணிமேகலையில் காண்கிறோம்.

முதல் ஆழ்வார் மூவர்

பொய்கை, பூதம், பேய் ஆகிய முதல் ஆழ்வார் மூவரும் வைணவ பக்தி இலக்கிய மரபைத் தோற்றுவித்த முன்னோடிகள். இவர்களின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர் வரலாற்று ஆசிரியர்.[14] இவர்கள் மூவரும் பாடிய முதல் மூன்று திருவந்தாதிகளில் பலதேவன் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. இவர்களுக்குப் பிற்பட்ட காலத்தவர்களான பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்[15] போன்றோர் பலதேவனைக் கண்ணனின் மூத்தவனாக, அவதார நிலையில் மட்டுமே குறிப்பிடுகின்றனர். எனவே பலதேவன் தன் தனித்த அடையாளத்தை இழந்து, திருமால் வழிபாட்டில் உள்வாங்கப்பட்டுக் கலந்து மறைந்தான்.

வரலாற்றுச் சான்றுகள்

வடபுலத்தில், கி.மு. 2 அல்லது 1 ஆம் நூற்றாண்டு சார்ந்த பலதேவன் சிற்பங்கள் கிடைத்துள்ளன. ஒன்று திருமாலின் தசாவதார வரிசையில் ஒன்றாக உள்ளது. மற்றொன்று தனிக்கடவுளாக உள்ளது. தனித்த நிலையில் உள்ள பலதேவன் 6 நாகங்கள் தலைக்குமேல் குடைபிடிக்க நின்ற கோலத்தில் இரு கரங்களோடு உள்ளான். வலக்கையில் உலக்கையும் (முசலம்), இடக்கையில் கலப்பையும் (ஹல) அவன் தரித்துள்ளான். மதுராவில் கிடைத்த இவ்விரு சிற்பங்களும் லக்னோவில் அருங்காட்சியகத்தில் தற்போது உள்ளன.[16] பாம்பு குடைப்பிடிப்பது நாகர் இன மக்களின் வழிபாட்டுக் கடவுளைக் காலப்போக்கில் வைணவம் உள்வாங்கியதைக் காட்டும். நாகர் இனத்தவர் வேளாண்மை, தண்ணீர் இவற்றோடு தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மரபில் இலக்கியங்கள் பலதேவனைக் கையில் கலப்பையை (நாஞ்சில்) உடையவனாகவும் புகார் நகரில் நாகர் கோயிலில் அவன் உறைபவனாகவும் குறிப்பிட்டுள்ளன என மேலே கண்டோம். இதோடு அவற்றை இணைத்தால் கருத்து வலிமை பெறும். படிப்படியாக கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பலதேவன் சிற்பங்கள் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபில் ஏறத்தாழ கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலச் சிற்பத்தில் பலதேவன் இடம்பெறுகிறான். மாமல்லபுரம் கிருஷ்ண மண்டபத்தில் கண்ணன் கோவர்த்தன குன்றத்தை ஏந்தி குடைபிடிக்கும் சிற்பத்தில் பலதேவன் இடம் பெறுகிறான். பின்னர் மிகப் பிற்பட்ட காலத்தில் தஞ்சை மாவட்ட திருகண்ணமங்கை, மதுரை மாவட்ட தாடிக்கொம்பு, திருச்சி மாவட்ட அரியலூர் ஆகிய இடங்களில் பலதேவன் சிற்பங்கள் உள்ளன. இவை மிகப் பிற்பட்டவை.

மகாபாரதம், ஹரிவம்சம், பாகவத புராணம், அக்னி புராணம் போன்றவை கண்ணன் வரலாறோடு இணைத்துப் பலதேவனை அவதார நிலையில் குறிப்பிடுகின்றன. மகாபாரதம் சபா பருவம் (சிசு பாலவத) பகுதியில் கண்ணன் – பலதேவன் இளம் பருவ விளையாட்டுக்களை விரிவாகக் கூறுகிறது. கி.பி. 2,3 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் எழுதிச் சேர்க்கப்பட்ட இடைச் செருகல் பகுதி இது எனக் கூறுவர்.[17] திருமாலின் அவதாரமாகப் பலதேவன் கருதப்பட்ட காலத்தில் இக்கதையாக்கமும் இதன் சேர்க்கையும் நிகழ்ந்திருக்கக்கூடும்.

ஆகம நூல்களில் பலதேவன்

ஆகமங்கள், கடவுள் திருமேனி எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கூறும் இலக்கண நூல்களாகும். பலதேவன் திருமேனி அமைக்கப்பட வேண்டிய முறை காலத்தால் முற்பட்ட வைணவ பாஞ்சராத்திர ஆகம நூல்களின் ஒன்றான பிரகத் சம்ஹிதை நூலில் அவன் நின்ற கோலத்தில் இரு கைகளோடு அமைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. [18] கையில் கலப்பை ஏந்தி அவன் அலை பாயும் கண்களோடு இருப்பான். காதில் ஒரு குழை அணிந்திருக்க வேண்டும். அவன் உடல் வண்ணம் வெண்மையாக, சங்கு, நிலவு, வெண்ணிற அல்லி மலர் போன்ற வண்ணத்தில் இருக்கும். காலத்தால் முற்பட்ட இந்த ஆகம நூல் கூறும் இலக்கணம் அப்படியே தமிழ் இலக்கிய மரபிற்கு இயைந்து வருகிறது. நின்ற கோலம், (கலப்பை) நாஞ்சில் ஆயுதம், சங்கு போன்ற வெண்மேனி, ஒரு குழை என்பன நாம் மேலே பார்த்த தமிழ் இலக்கியச் சான்றுகளோடு முழுவதும் இணையும்படி தந்துள்ளது. எனவே பிரகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஹிதை நூல் தமிழ் மரபை ஒட்டித் தமிழ் நாட்டில் எழுதப்பட்டதா? இது ஆய்வதற்குரியது.

பலதேவன் கையில் கலப்பையை ஆயுதமாக ஏந்தி இருக்கும் வடிவை அனேகமாக எல்லா ஆகம நூல்களும் குறிப்பிடுகின்றன. வேளாண் தொழில் செய்யும் இனக்குழு மக்களின் வழிபடு கடவுளாக அவன் இருந்த தொன்மையான நிலையை இது உறுதி செய்யும். அவன் 4 கைகளை உடையவனாக அமைக்கப்படும்போது பின் இரு கைகளில் சங்கும் சக்கரமும் இடம்பெறும். இது திருமாலின் வியூகமாக, அவதாரமாக (விபமாக) அமையும் நிலை. வைகாசை ஆகமமும் அவன் கைகளில் உலக்கையும் கலப்பையும் உடையவனாக நின்ற கோலத்தில் வெண்மை நிறத்தில், செவ்வாடை அணிந்து குழை உடையவனாக இருப்பான் என்கிறது. வலக்கையில் தாமரை மலரை ஏந்தி அவன் மனைவி ரேவதி அவன் வலப்பக்கத்தில் இடம்பெறுவதை வைகாசை மரபு மட்டுமே குறிப்பிடுகிறது.[19] இது பிற்கால வளர்ச்சி எனக் கூறலாம். தொடக்க நிலையில் காணப்பட்ட இனக்குழு மக்களின் தலைவனாக, வழிபடும் கடவுளாக இருந்த பலதேவன் எல்லா நிலைகளிலும் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்துள்ளார். கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அநேகமாக பலதேவன் மரபு படிப்படியாக வைணவப் பெருஞ்சமய ஒற்றை அடையாளத்தில் கலந்து தனித்தன்மையை இழந்து மறைந்துவிட்டது. பொதுவாக கி.பி. 6 முதல் 9 முடிய தமிழகத்தில் உருவான பக்தி இயக்கம் சைவ, வைணவப் பெருஞ்சமயமாக இறைவனைப் பரம்பொருள் நிலையில் அமைத்து ஒற்றைத் தன்மையோடு உருவாக்கப்பட்டது. எனவே, தனித்தனியாக இருந்த கடவுளர்கள், வெவ்வேறு சமயப் பிரிவுகளின் உள்கலந்து ஒன்றாகின. தொடர்ந்து வந்த பேரரசு காலங்களில் சிற்பம், இலக்கியம், ஆகம நூல்கள், கல்வெட்டுக்கள் என அனைத்திலும் பரம்பொருள் தன்மை ஒற்றை அடையாளப் பண்பு வெளிப்பட்டது. பலதேவன் வழிபாடும் படிப்படியாக இதே தன்மையில் ஆனது.

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு, 56; சிலம்பு, I,5 அடி 171.
2. சிலம்பு I,9, அடி 10.
3. R. Champakalakshmi, Vaishnava Iconography in the Tamil Country, P.126, New Delhi, Orient Longman, 1981.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மேலது, ப. 24.

5. மேலது, ப. 25.

6. புறநானூறு, 124, 56; நற்றிணை, 35; கலித்தொகை, 104.

7. பரிபாடல், 1. அடி 3–5, பரிபாடல், இரா. சாரங்கபாணி (உரை), கோவிலூர் மடாலயம், 2003.

8. சிலம்பு, II,17, ப. 151, கழகம், சென்னை, 1947 (மூலம் மட்டும்).

9. சிலம்பு I,9 அடி 10.

10. கார் நாற்பது, பாடல் 19, பதினெண்கீழ்க்கணக்கு, சென்னை, NCBH, 1981.

11. இன்னா நாற்பது, கடவுள் வாழ்த்து, மேலது. இப்பாடலில் பலதேவன் வெள்ளை எனக் குறிப்பிடப்படுகிறான். நாட்டுப்புறச் சிறு தெய்வ வழிபாட்டில் வெள்ளை, வெள்ளைச்சாமி என்ற பெயர்களில் இன்றும் வணங்கப்படும் மரபு உள்ளது. இது பலதேவன் வழிபாடுதானா? என்பது மேலும் ஆராய்வதற்குரியது.

12. சம்பகலட்சுமி நூல் காண்க (ப. 25).

13. மணிமேகலை, 19, அடி 65–66, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1981.

14. B.V. Ramanujam, History of Vaishnavism in South India upto Ramanuja, Annamalai University, 1973. pp.174 - 175.

15. Ibid., p. 215, p. 234.

16. சம்பகலட்சுமி நூல் காண்க (ப.126).

17. மேலது, ப. 127.

18. மேலது, ப. 129.

19. மேலது, ப. 129.

இக்கட்டுரையில் ஆளப்பட்டு உள்ள நற்றிணை, கலித்தொகை, புறநானூறு மூன்று நூல்களும் சென்னை, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் 1981 இல் வெளியிட்ட (மூலம் மட்டும்) பதிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம், மணிமேகலை சித்திரிக்கும் விழாக்கள்

வசந்தா வைத்தியநாதன்

மக்களின் அகவிழைவை – மன மகிழ்ச்சியை புறவிழைவாகத் தோற்றுவித்தனவே விழாக்கள். விழாக்களைப் பொதுவாக சமயவிழாக்கள் எனவும், சமூக விழாக்கள் எனவும் பகுக்கலாம்.

சிலம்பிலும் மேகலையிலும் விழாக்களின் பெருக்கம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அவற்றில் சிறப்பாகக் கூறப்படுவது இந்திர விழாவே. நூற்றாண்டுகள் பல சென்றும் இன்னும் தைப்பொங்கற் திருநாளுக்கு முந்தைய தினம் கொண்டாடப்படும் போகிப்பண்டிகை இந்திரவிழாவின் எச்சமாகவே காணப்படுகின்றது. மேலும், சிலம்பில் காணப்படுகின்ற வேட்டுவவரி குறிப்பிடும் கொற்றவை விழா இன்று ஒன்பது இரவுகள் கொண்டாடப்படும் நவராத்திரி பண்டிகையாக உருப்பெற்றுவிட்டது. ஆய்ச்சியர் குரவையிலே போற்றப்படும் கண்ணனுக்கு இன்று மக்கள் ஆவணி மாத தேய்பிறை அட்டமியில் 'ஜன்மாஷ்டமி' அல்லது 'கோகுலாஷ்டமி' என்று கிருஷ்ண ஜயந்திப் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். குரவைக் கூத்தும் அப்படியே. இனி இவ்விழாக்களின் தோற்றம், அமைப்பு, பயன்பற்றி சிறிது சிந்திப்பதே இத் தலைப்பின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களின் தோற்றம்

அச்சம், அன்பு இரண்டினாலும் எழுந்ததே இறைவழிபாடு. தொல்காப்பியம் அச்சம் நான்கு நிலைகளில் எழும் என்று கூறுகின்றது.

அணங்கே, விலங்கே, கள்வர் தம் இறை எனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே. (தொல். – 1198)

விலங்கினங்களையும், கொலைகாரனையும், கொள்ளைக்காரனையும் காணுமிடத்து எழுகின்ற அச்சம் தெய்வத்தைக் காணும் போதும் எழுகின்றது. இதுகுறித்தே 'பயபக்தி' எனும் தொடரே எழுந்தது. இறைவனிடம் அச்சமும் வேண்டும். அன்பும் வேண்டும். இதனை அப்பர் பெருமான் தனது 'திருநின்றியூர்' தேவாரத்துள்

அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினை நின்றியூரை நீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே (5: 233)

பயத்துடனும், பக்தியுடனும், தெய்வங்களின் மனங்களைக் குளிர்வித்து, அத்தெய்வங்களின் சீற்றத்தினின்று தங்களைக் காத்துக் கொள்ளவே விழா எடுத்தார்கள்.

இந்திரவிழா

தூங்கெயில் எறிந்த கொடித்தோட் செம்பியன் அகத்தியன் ஆணையால் இந்திரனை வணங்கி புகாரில் இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடினர்.

சிலம்பிலும், மேகலையிலும் நூல் ஆசிரியர்கள் இவ்விழாவின் சிறப்பினை விரிவாகக் கூறுகிறார்கள்.

சித்திரை மாதத்து சித்திரைத் திருநாளாகிய சித்திராபூரணையில் புகார் நகர மாந்தர் இந்திரவிழா செய்ய முனைந்தனர். புகார் நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரு பகுதிகளை உடையது. அவ்விரு பாக்கங்களுக்கும் இடையே சோலையில் நாளங்காடி எனும் இடத்தில் உள்ளது சதுக்க பூதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசுகுந்தன் எனும் சோழவேந்தனுக்குத் துணையாக இந்திரனாலே ஏவப்பட்டு நாளங்காடியில் குடிகொண்டதே இச்சதுக்கபூதம். இப்பூதத்திற்கு மறக்குடிப் பெண்டிர் அவரை, துவரை, முதிரை பண்டங்களை வேகவைத்த புழுக்கலையும், எள் உருண்டையினையும், நிணத்துடன் கூடிய சோற்றையும், பொங்கலினையும் புகையும் பூவும் சொரிந்து படையலிட்டு,

பழுப்புடை யிருகை முடக்கியடிக்க
தொடங்கிய நடையது கொண்ட

துணங்கைக் கூத்தும், கைகோர்த்து ஆடுகின்ற குரவையும் ஆடி, தெய்வமேறி,

பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

முரசு முழங்க உயிர்ப்பலி யூட்டுகின்றனர்.

யானை எருத்தத்தின் மேலேற்றி வள்ளுவன் முழங்குகின்றான்.

வச்சிரக் கோட்டத்து மணங்கொழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை
முரசுகடிப் பிகூஉம் முதுகுடிப் பிறந்தோன்

கூற்றுவனுக்கு அறைகூவல் விடுக்கும் முழக்கத்துடன், தொல்குடிப் பிறந்தோனாகிய அவ்வள்ளுவன்,

திருவிழை மூதூர் வாழ்க! என்றேத்தி
வானமும் மாரி பொழிக! மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலான் ஆகுக!

என வாழ்த்தினான்.

தீவகச் சாந்தியாகிய இவ்விழாவைச்செய்யும் பொழுது கண்ணோனாகிய இந்திரனுக்கும், மேலும் அட்டவசுக்கள், ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர் ஆகிய தேவர் முப்பத்து மூவருக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் தோரணங்கள் கட்டி, பூரண பொற்குடங்கள், பொற்பாலிகைகள், பாவைவிளக்குடனே மங்கலமான பொருட்களைப் பரப்புங்கள். குலைகளோடும் கூடிய கமுகும், வாழையும், வஞ்சியும், பூக்கொடியும், கரும்பும் நட்டு வையுங்கள். பசும்பொன் தூண்களில் முத்துமாலைகளைத் தொங்கவிடுங்கள். வீதிகளில் பழமணலை அகற்றி புதுமணலைப் பரப்புமின். காழூன்று கொடியும் கதலிகைக் கொடியுமாக கொடுங்கைகளிலும் வாயிலிலும் சேருங்கள்.

நுதல்விழி நாட்டத்து இறைவனான சிவபெருமான் கோயில் முதலாக, சதுக்க பூதம் ஈறாக தெய்வம் உறையும் கோயில்களில் அவ்வத் தெய்வங்களின் வழிபாட்டுமுறைகளை அறிந்தோர்களைக் கொண்டு வழிபாடு செய்யுங்கள்.

சமயதத்துவங்களை நன்கறிந்த சமயவாதிகள் சமய உண்மைகளைத் தெளிவிக்கும் பொருட்டு பட்டிமண்டபம் பாங்கறிந்து ஏறுங்கள்.

பகைமையையும், பூசலையும், பகைவராகிலும் கொள்ளாதீர்கள். இயற்கையழகு பொலிந்த ஆற்றிடைக்குறை, நீர்த்துறை முதலிய கவின் மிக்க இடங்களில் மக்களும் தேவர்களும் மகிழ்ந்து உலவும் விழாக்காலமான இருபத்தெட்டு நாட்களிலும் சிறப்பான இவ்விழாவினை மேற்கொள்ளுங்கள் என வள்ளுவன் முரசறைந்து இந்திர விழாச் செய்தியினை அறிவிக்கின்றான்.

இனி விழாநாயகன் நீராட்டும் செய்தியையும், மக்கள் மனத்துள் புரண்டெழும் உவகையையும் சிலப்பதிகாரம் விவரிக்கின்றது.

ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரச குமாரரும், பரத குமாரரும்
கவர் பரிப் புரவியர், களிற்றின் தொகுதியர்
இவர் பரித்தேரினர், இயைந்து ஒழுங்கு ஈண்டி
அரைசு மேம் படீஇய, அகநிலை மருங்கில்
உரைசால் மன்னன் கொற்றம் கொள்க என
மாஇரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்து ஓர்எட்டு அரசு தலைக் கொண்ட
தண்நறுங் காவிரி, தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நல்நீர் பொற்குடத்து ஏந்தி
மண்ணகம் மருள, வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி.

இல்லங்கள் தோறும் இந்திரனை வரவேற்று மகிழ்கின்றனர்.

கைதிகளாக இருந்த, சோழமன்னனின் பகைவர்கள் விலங்குகள் அகற்றப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அறவோர் பள்ளியும், அறம்பேணும் அறச்சாலைகளும்,துறந்தோர் வதியும் புண்ணியத்தானமும் சிறப்புற்று விளங்கின.

கூத்தரும், குயிலுவக் கருவியாளரும், யாழ்மீட்டும் பாணரும், இடையாளரும் கூடி அளிக்கும் இசை நிகழ்வுகள் ஒருபுறம், இரவும் பகலும் ஓவாத முழவின் ஓசை, முழங்க பொதியத்துப் பிறந்த தென்றற் காற்று மெல்லென வீசி மக்களின் மனங்களை மகிழ்வித்தது. ஆண்களும், பெண்களும் ஊடலும், கூடலுமாக களிப்பெனும் கடலிலே மூழ்கினர்.

சிலம்பு கடலாடு காதையில் விஞ்சையர் வீரன் ஒருவன் தன் காதலியுடன் புகார் நகரம் வந்து அங்கு நடைபெறும் இந்திரவிழாக் காட்சிகளைக் காண்பதாகச் சித்திரிக்கப்படுகின்றது. இதில் முசுகுந்தன் விண்ணவர் கோமானுக்குச் செய்த உதவியையும், அதன் பொருட்டு இந்திரனால் அளிக்கப்பட்ட ஐவேறு மன்றங்களின் சிறப்பையும், நாளங்காடி பூதத்தின் தன்மையையும், தன் காதலிக்கு உணர்த்துகின்றான் விஞ்சை வீரன்.

மாதவி ஆடும் பதினோரு ஆடலையும், தன் காதலியுடன் இந்திர விழாநாளில் கண்டு உளம் மகிழ்கின்றான்.

விழாவிலே மாதவி ஆடியது கண்டு கோவலன் சற்று வெறுப்புக் கொண்டிருந்தான். கோவலன் தன்பால் கொண்டிருந்த புலவியைத் தீர்க்க வேண்டித் தன்னைப் பலவகையாகப் புனைந்து எழில் நங்கையாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் மாதவியை இளங்கோ சுட்டும் இடம் சிறப்பானது. இதில் பழங்காலத்து அணிவகைகள், அதனை அணியும் முறைகள், அதன் சிறப்புக்கள் போன்றவை காணப்படுகின்றன.

இருபத்தெட்டு நாட்கள் விண்ணவர் கோமானுக்கு மக்கள் மகிழ்வுடன் எடுத்த இந்திரவிழா எடுத்ததாக, சிலப்பதிகாரம் கூறுகின்றது.

வேட்டுவ வரி - கொற்றவை நிலை

ஐயைக் கோட்டத்தில்லை ஒருபுறமாக, கவுந்தியடிகளும், கோவலனும் கண்ணகியும் சற்று இளைப்பாறியிருந்த பொழுது தெய்வ மேறிய சாலினி கோவலனோடு இருந்த கண்ணகியைப் பார்த்து,

இவளோ கொங்கச் செல்வி; குடமலையாட்டி
தென்தமிழ்ப்பாவை செய்தவக் கொழுத்து
ஒரு மாமணியாய், உலகிற்கு
ஓங்கிய திருமாமணி

எனத் தெய்வம் உற்று உரைப்ப கண்ணகி நாணினாள்,

பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி என்று
அரும்பெறல் கணவன் பெரும் புறத்தது ஒடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள்

தங்கள் பழங்குடியைச் சார்ந்த குமரிப் பெண்ணிற்கு கொற்றவை கோலம் புனைந்தனர்.

அவள் கூந்தலை சிறுவெள்ளைப் பாம்புக்குட்டி போன்று பொன் கயிற்றால் சுற்றினர். குட்டையான அவளது கூந்தலை நெடுமுடியாகத் தலைமேல் உயர்த்திக் கட்டினர். காட்டுப் பன்றியினைக் கொன்று அதன் வளைந்த கொம்பை அவளது சடைமுடியின் மேல் 'திங்கட் பிறை' எனச் சூட்டினர். மறப் புலியின் வாயைப் பிளந்து பெற்ற வெண்பற்களை நிரலாகக் கோத்துப் 'புலிப்பல்' தாலியாக அவள் கழுத்தில் கட்டினர். வரியும் புள்ளியும் கவந்த புலித்தோலினை அவளிடையில் மேகலையாகக் கருதினர். மிக முயன்று வயிரவில்லினை வளைத்து, அவளது கையிலே கொடுத்தனர். முறுக்குண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பினையுடைய கலைமானின் முதுகிலே அவளை ஏற்றிவைத்தனர். பாவையும், கிளியும் கானங்கோழியும், நீலநிற மயிலும், பந்தும் கழங்கும் ஆகியவற்றைத் தந்து அவளைக் கொற்றவையாகவே கண்டுபோற்றிப் பணிந்து வழிபட்டனர்.

வண்ணக்குழம்பும், சுண்ணப் பொடியும், குளிர்ந்த நறுஞ்சந்தனமும், புழுக்கலும், எள்ளுருண்டையும், தினைச்சோறும், பூவும், புகையும், விரையும் ஆகியவற்றை, பணிசெய்யும் மறக்குலப் பெண்கள் தாங்கி வந்தனர்.

அவ்வளவிலே வழிப்பறிக்கமுழங்கும் பறையும் சூரையிடுங்காலத்திலே ஊதும் சின்னமும் கொம்பும் குழலும், மணியும் ஒருங்கே சேர்ந்து ஒலியெழுப்புமாறு அக்குமரியின் முன்னாலே நிறுத்தப் பெற்றன. பின்னர் தான் தந்த வெற்றியின் விலையாக பலிஏற்று உண்ணும் ஐயையின் மலரிட்ட பலிபீடத்தை முதலிலே தொழுதனர். அதன்பின் மானை ஊர்தியாகக் கொண்ட கொற்றவையைக் கைதொழுது போற்றினர். கொற்றவையின் சுரவிலில், கொற்றவைக்கு அணிவிக்கும் அணிகலன்களைப் பார்க்கும் பொழுது வேறுபடுத்திக் காட்டியிருப்பது இளங்கோவின் நுண்மாண்நுழை புலத்தைப் புலப்படுத்துகின்றது.

பலி பீடத்து முன்னே மணந்தரும் சுரபுன்னை நரந்தை சந்தனமரம் முதலியனவும் மாமரமும் உழிஞ்சிலும் நிறைந்திருந்தன. செம்பொன் மலர்களை வேங்கைகள் சொரிந்தன. புன்க மரங்கள் வெண்பொரிகளாக மலர்களைத் தூவின. வெண்கடம்பும், பாதிரியும், புன்னையும், மணங்கமழ் குரவமும் கோங்கமும் மலர்ந்து மணம் பரப்ப மரக் கொம்புகளின் மேல் வண்டுகள் யாழிசையாக ரீங்காரமிடுகின்றன.

கொற்றவையாகக் கோலங்கொண்ட பெண்ணின் புண்ணியத்தைப் பாராட்டுகின்றனர்; வாயாரப் புகழ்கின்றனர்.

ஆனைத்தோலை போர்த்துப் புலியின் உரியுடுத்துக் கானகத்து எருமை மேல் நின்றவளை ஞானக் கொழுந்தாயும், வரிவளைக்கை வாளேந்தி மகிடனைச் செற்று, கரிய கலைமானின்மிசை நின்றவளை விரிகதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்காயும், சங்கமும் சக்கரமும் தாமரைக் கரத்தில் ஏந்தி, சினத்துடன் கூடிய சிங்கத்தின் மேல் அமர்ந்தவளை கண்ணுதலோன் பாகத்துக் கரந்துறையும் மங்கையாகவும் கண்டு அளவற்ற மகிழ்வு கொள்கின்றனர்.

அசுரர் வாட அமரர் மகிழ காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாள் மாயவன் ஆடிய மரக்கால் ஆடலை ஆடிய தேவியைப் பரவுகின்றனர்.

வெட்சிமலர் சூடி மறவர்கள் ஆநிரை கவரச் செல்லும் பொழுது பகைவர் நாட்டிலே அவர்க்கு வரும் கேட்டினை அறிவிக்க கரிக்குருவியை கடுங் குரலில் கூவச் செய்தும், அவன் வில்லின் முன்பாக அமர்ந்துகொண்டு துணையாகவும் வருபவளைப் போற்றி அவள்கொடுத்த வெற்றிக்கு விலையாகத் தங்கள் கழுத்தினைத் தாங்களே அறுத்துக்கொண்டு பொங்கி வரும் உதிரத்தை அவிப் பலியாகக் கொடுக்கின்றனர்.

ஆய்ச்சியர் குரவை

ஆயர் சேரியிலே குடப்பால் உறையவில்லை. திரண்ட திமில்களை உடைய ஆனேற்றின் கண்களினின்றும் நீர்வழிந்தது. முதல் நாள் உறியிலே வைத்திருந்த மணமுள்ள வெண்ணெய் உருகவைத்தும் உருகவில்லை. துள்ளிவிளையாடும் ஆட்டுக்குட்டிகள் சோர்ந்து கிடந்தன. பசுநிரைகள் உடல் நடுங்க நின்று கதறுகின்றன. அவற்றின் கழுத்திலே கட்டியிருந்த மணிகள் அற்று நிலத்திலே வீழ்கின்றன.இத்தீய நிமித்தங்களைக் கண்டு அஞ்சிய ஆயமகளிர் தமக்குத் தீமை வந்துறும் என்று எண்ணி தம் குலதெய்வமான மாயவனை வேண்டி, குரவைக் கூத்து ஆடுகின்றனர். தனது தமையனாகிய பலராமனுடன், கண்ணன் ஒரு மன்றத்தின்கண் தனது பாலசரித நாடகங்களுள் வேற்கண்ணி நப்பின்னையுடன் ஆடிய குரவைக் கூத்தினை பசுக்களும், கன்றுகளும் துன்பம் ஒழிய யாம் ஆடுவோம் என்றனர். குரவையாவது எழுவரேனும், ஒன்பதின்மரேனும் கை கோத்தாடும் கூத்தாகும்.

ஏறுதழுவல் என்பது அக்கால வீரவிளையாட்டு. யாராலும் அடக்க முடியாத காளைகளை அடக்கியவர்களையே பெண்கள் தங்கள் கணவனாகத் தேர்ந்தெடுப்பார்கள். இந்த முறைப்படி இடைக்குலக் கன்னியரான எழுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கென ஒவ்வொரு ஏற்றினை தம் மணவினைப் போட்டிக்காக வளர்த்த முறையினை மாதரி தன்மகள் ஐயைக்குக் கூறுகிறாள்.

மாதரி அவ்வேழு பெண்களையும் வரிசையாக நிறுத்தி, அவர்களுக்குப் 'படைத்துக் கோட் பெயர்' (புனைபெயர்) தனித் தனி இசைப் பெயர்களை மரபுமுறை வழுவாமல் இட்டாள்.

குரல் நரம்பின் பெயருடையவன் மாயவன்.

இளி நரம்பின் பெயருடையவன் பலராமன்.

துத்தம் நரம்பின் பெயருடையவள் நப்பின்னை

மற்றையவர்கள் முன்காலத்து அவளோடிருந்த ஆயமகளிர் என அழைக்கப்பட்டனர்.

இவ்வேழுமகளிரும் முறைப்படி நின்றபின் மாயவனின் கழுத்திலே துளபமாலையை பின்னை இட்டனள். இட்டபின் கூத்தநூல் இயல்பினின்றும் மாறுபடாத வகையில் குரவையாடத் தொடங்கினர்.

ஆய்ச்சியர் குரவையுள் இசையின் நுணுக்கங்களை பன்னிரு இராசிகளுடன் இணைத்து இளங்கோ சுட்டியிருக்கும் அற்புதம் வியக்கத்தக்கது.

குரவைஆடும் முறை

குடமுதல் இடமுறையாக், குரல், துத்தம்
கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

மேற்கு எதிர்முகமாக என்றபடி பன்னிரண்டு இராசிகளுள்ளே இடபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம் என்னும் ஏழினும் குரல் முதலிய ஏழும் முறையே நிற்பது ஒருமுறை. துலாம், தனசு, கும்பம், மீனம், இடபம், கடகம், சிங்கம் என்னும் ஏழினும் குரல் முதலாய ஏழு சுரங்களும் நிற்பது மற்றொரு முறை. இவற்றை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்து மிடப சுலவனுடன் சீயம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை – பார்த்துக்
குரல் முதற் றார மிறுவாய்க் கிடந்த
நிறலேழுஞ் செம்பாலை நேர்.
துலைநிலைக் குரலுந் தனுநிலைத் துத்தமும்
நிலை பெறு கும்பத்து நேர் கைக் கிளையும்
மானக் கடகத்து மன்னிய விளரியும்
அரியிடைத் தாரமும் அணைவுறக் கொளலே.

என்பவற்றானறிக. குரவையில் இவ்விருமுறையானும் எழுவரும் நின்று கைகோத்துப் பாடுகின்றனர். ஆதலின் ஒருகால் இடத்தில் நின்றவர் மற்றொருகால் வலத்திலும், வலத்தில் நின்றவர் இடத்திலுமாக மாறிநிற்றல் இயல்பு.

அடியார்க்கு நல்லார் தனது உரையுள் மூலத்தில் காட்டப் பெறாத இசை நுட்பங்களை யெல்லாம் மிகவிரிவாகவும், செம்மையாகவும் காட்டுவது இசை ஆய்வாளர்களுக்குப் பெருவிருந்தாகும்.

குரவையாடும் ஏழு மகளிரும் முதலில் சமநிலையாக நின்று பின் வளையமாக நண்டு போற் கைக்கோத்து, மாயவனாகக் குறிக்கப் பெற்றவள் தன்கிளையாகிய பின்னையாகக் குறிப்பிட்டவளை நோக்கி "அகன்ற கொல்லையாகிய புனத்தின்கண் குருத்தினைச் சாய்ந்த நம் கண்ணன் முல்லைப் பண்கொண்டு பாடிக் குரவை யாடுவோம் வருக" என்றாள்.

அங்ஙனம் பாடத்தொடங்கியவர்களுள் குரல் தானத்திலிருந்தவளின் குரல் மந்தசுரமாகவும், இளி தானத்திலிருந்தவளின் குரல் சமசுரமாகவும் வரன் முறைப்படி துத்தத் தானத்திலிருந்தவளின் குரல் வல்லொலியாகவும், ஒலித்தன. வலியில்லாத மந்த சுரத்தினைப் பற்றி மாயவன் தானத்திலிருந்தவள் விளரிபாட, அவளுக்கு நட்பாகிய துத்த நரம்பினையும் பின்னைப் பிராட்டியைக் குறித்து நின்றவளும், அவளைத் தொடர்ந்து பாட்டெடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன் வாயிற்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ, தோழீ!

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்கும்நம் ஆனுள் வழுமேல் அவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ, தோழீ!

கொல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி!

கண்ணனையும், பின்னைப் பிராட்டியையும் பாராட்டி கண்ணன் செய்த மாய லீலைகளைப் புகழ்ந்து பாடுகின்றனர். ஆயர் மகளிர் குரவையாடு கின்றனர். சோழ, பாண்டிய, சேர மன்னர்களைத் திருமாலாகவே கருதி அவர்களையும் வாழ்த்தி உள்வரி வாழ்த்திசைக்கின்றனர்.

கண்ணன் முன்னிலைப் பரவலாகவும் போற்றி யாம் தொடுத்த குரவையுள் போற்றிய தெய்வம், நம் பசுக்களுக்கு நேர்ந்த துயரங்களை நீக்குமாக! வெற்றி தரும் இடியைப் படையாகவுடைய இந்திரனுடைய திருமுடியை உடைத்த தொடியணிந்த தோளோனான பாண்டியனது, குறுந்தடியால் எறியப்படும் வெற்றி முரசமானது வேற்றரசர்கள் மருளுமாறு நாள் தோறும் வெற்றி விளைத்து முழங்குவதாக என்று வாழ்த்திசைக்கின்றனர்.

கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம்
ஆத்தலைப்பட்ட துயர் தீர்க்க! வேந்தர்
மருள வைகல் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ – கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை உடைத்த
கொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே!

குன்றக் குரவை

இனி வஞ்சிக் காண்டத்தில் குருவியோப்பியும், கிளிகடிந்தும் அருவியாடியும் திரியும் வேட்டுவர் முன்பு, துயர்மிகுந்து வேங்கை மர நிழலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற கண்ணகி, மணமதுரை நகரிலே அரசனும் கெட்டொழிய என் கணவனை இழந்த தீவினையுடையேன் என்று கூறியதும் குன்றக் குரவர்கள் இருகரம் குவித்து வணங்க வானவர் மலர் மாரி பொழிய அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதினில் விண்ணினின்று இழிந்த விமானத்தில் கண்ணகி தன் கணவனோடு விண்ணகம் சென்றனள்.

கண்ணகியையே தங்கள் குலதெய்வமாகக் கொண்ட குறவர்கள் தொண்டகச் சிறுபறை முழக்கியும், கொம்புகளை ஊதியும், மணியினை ஒலித்தும் குறிஞ்சிப் பண்ணைப் பாடி நறும்புகை எடுத்து, மலர் தூவி பரவிடுங்கள் என்று கூறி "தாயே! இப்பெரிய மலை நாடானது ஓயாது வளஞ்சுரக்க அருள்வாய்" என்று வேண்டி வழிபட்டனர்.அருவியில் நீராடித் தூயோராய் வந்த அவர்கள்,

சீர்கெழுசெந்திலும் செங்கோடு வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலை
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரில் நெடுவேலை
அணிமுகங்கள் ஓர்ஆறும், ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலை
பிணிமுக மேற்கொண்டு அவுணர்பீ டழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலை
சரவணப் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலை
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலை

வாழ்த்தி மலைவாழ் வெற்பனுடன் தாம் கொண்ட காதல் நிறைவேற வள்ளிக் கொழுநனையும், கோவலன் மீது கொண்ட காதலால் மதுரை நகரையே எரித்த கண்ணகி அருளையும் வேண்டிப்பாடும் குறமகளிரின் நினைவலைகளை சிறப்பிக்கும் இளங்கோவடிகளின் கவித்திறம் பாராட்டிற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்பு காட்டும் குன்றக் குரவையும் செவ்வேட் பரமனுக்கு எடுக்கும் விழாவாகவே நாம் கொள்ளலாம்.

நிறைவாகக் கடவுள் மங்கலம் திருச்செங்கோட்டில்...

வடபுலமன்னரான கனகவிசயரை வென்று இமயத்திலே கல்லெடுத்து கங்கையிலே நீராட்டி தமிழ்மன்னரை மதிக்காத அவ் வடபுல மன்னரின் தலையிலே அக்கல்லினை எற்றி, மக்களின் ஆரவார முழக்குடன் வஞ்சிவந்து

''பாடல்சால் சிறப்பிற் பாண்டி நன்னாட்டுக்
கவிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகம் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து

''நித்தல் விழாவணி நிகழ்க'' என்று ''பத்தினியின் கோயிலிற்கு வேண்டிய படிப்புறங்களை வகுத்த பின்னர்'' நித்தலும் விழாவும் அலங்காரமும் நிகழ்க என்று சேரன் செங்குட்டுவன் ஆணையிட்டான். 'பூவும் புகையும் மேவிய விரையும் செய்க' என்று தேவந்திகைப் பணிந்தபின் மும்முறை பத்தினியின் படிமக்கோட்டம் வலம் வந்து பணிந்தான்.

நிறைவுரை:-

மக்களின் மனங்களிலே மகிழ்ச்சி கனல் கொள்ளவும், தெய்வ நினைவு எண்ணெய் ஒழுக்குப் போல இடையறாது நிற்கவும், அவ்வத் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள், கோலங்கள், புராண வரலாறுகள், இசை, நடன நுட்பங்கள் இவைகளை அழியாது நெஞ்சில் பதிக்கவும் சுருக்கமாக மக்களை மனிதத் தன்மையுடன் வாழ்பவர்களாகச் செய்யவும் எழுந்ததே விழாக்கள். என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநூல்களில் பெண்கள்

செ. யோகராசா

தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பலராலும் சங்கமருவிய காலம் (கி.பி 300 – 650) என்று அழைக்கப்பட்டு வருகின்ற காலப்பகுதி அண்மைக்காலமாக 'அறநெறிக்காலம்' என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.[1] அறநூல்கள் அதிக எண்ணிக்கையில் எழுந்தமையே அதற்கான காரணமாகும்.

அறநூல்கள் அக்காலப்பகுதியில் அதிகமெழுந்தமைக்குப் பல காரணங்களுள்ளன. அகத்திணை, புறத்திணை மரபு தழுவிய சங்ககால வாழ்க்கை முறையானது அக்காலத்தின் இறுதிப்பகுதி தொடக்கம் மாற்றங்களுக்குள்ளாகத் தொடங்கியமை[2], (அத்தகைய நிலையில்) அறவாழ்க்கைக்கு முதன்மை கொடுக்கும் சமண, பௌத்த மதங்களின் வரவும் செல்வாக்கும்[3], அந்நியராகிய களப்பிரரது ஆட்சிமுறை[4], சைவ, வைணவ சமயங்களின் வரவு[5], வடமொழி இலக்கியச் செல்வாக்கு[6] முதலியன அத்தகைய காரணங்களுள் முக்கியமானவையாகின்றன.

மேற்கூறிய சூழலில் எழுந்த அறநூல்களாக திருக்குறள், நாலடியார், ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை, ஆசாரக் கோவை, முதுமொழிக்காஞ்சி ஆகியவை உள்ளன. இவற்றோடு 'இன்னிலை' என்றொரு நூலையும் சிலர் சேர்த்துக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அறநூல்களை அடிப்படையாகக் கொண்டு (I) அறநூல்கள் இனங்காட்டும் பெண்கள், (II) ஆடவரின் செயற்பாடுகளும் பெண்களும், (III) பெண்களின் உணர்ச்சியும் அழகும் உயர்ச்சியும் ஆகிய அடிப்படைகளில் சுருக்கமானமுறையில் அறநூல்களில் பெண்கள் பற்றிய இவ்வாய்வு அமைகின்றது.

அறநூல்கள் இனங்காட்டும் பெண்கள்

இல்லாள்

அறநூல்கள் முக்கியப்படுத்துகின்ற பெண்களுள் இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்கள் முதன்மையிடம் பெற்றுள்ளனர். 'இல்லாள்'[7] இல்லத்தை ஆள்பவள் என்ற விதத்தில் சிறப்பிற்குரியவளாகின்றாள். அறநூல்களுள் திருக்குறள் இல்லாள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

இல்லாள் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு அவனைத் தொழுது நித்திரை விட்டெழுதல் வேண்டும், அத்தகையவள் மழையை நோக்கி 'பெய்' எனக் கூறினால் மழைகூடப் பெய்யும் என்கிறது திருக்குறள். (இவ்வாறு திருக்குறள் குறிப்பிட, திரிகடுகம், விரதங்களை முறையாகச் செய்கின்ற தபசி, குடிமக்களுக்கு நன்மை செய்கின்ற அரசன் ஆகியோரையும் அந்நிலைக்கு உயர்த்துவது கவனத்திற்குரியது).

இல்லாளின் முக்கியத்துவம் பற்றி விவரிக்கின்றபோது, நாலடியார், மாட்சியுள்ள மனைவியில்லாத வீடு, மேகம் தவழும் மாடிகொண்டதாயிருந்தாலும் அணிகலன்கள் விளங்க ஒளி வீசினாலும் அது காடு என்று குறிப்பிடுகிறது.

இல்லாளின் விருந்தோம்பற் கடமையை அறநூல்கள் பலவும் வற்புறுத்துகின்றன. இவ்வழி சிறுபஞ்சமூலம், ஒருகுடம் நீரைக் காய்ச்சிக்குடிக்கத்தக்க துன்பம் வந்தபோதும் கடல் நீர் முழுவதும் பருகத்தக்க உறவினர் வந்தாலும் விருந்தோம்பலாகிய தன்குணத்தை ஒழுக்கமாகக் கொண்டு ஒழுகும் பெண்ணே இல்வாழ்க்கைக்குப் பெருமை தரக்கூடியவள் என்று அக்கடமைக்கு முதன்மை இடம் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் நடத்தும் திறமைபற்றி வற்புறுத்தும் போது, சிறுபஞ்சமூலம், ஒரு பெண்ணிற்கு எத்தகைய நிலையிலும் – அதாவது சுவரிடிந்தமையால் நான்கு பக்கமும் வழிகளையுடையதாய் மிகவும் சிறியதாய் எல்லாப்பக்கமும் மேல்வழியால் தன்மேல் மழைநீர் ஒழுகினாலும் – இல்லறம் நடத்தும் திறமையைப் பெற்றிருக்க வேண்டுமென்று குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

திரிகடுகம், பெண்ணிற்குரிய கடமைகள் பற்றி விளக்கும்போது, கடமை ரீதியில் பெண்ணை தாய், மனைவி, நண்பி ஆகிய மூன்று நிலைகளில் காண்கின்றது. விருந்தினரை உபசரிப்பவள் 'நண்பி' என்றும், இல்லறத்தைக் கவனிப்பவள் 'தாய்' என்றும், கணவனைப் போற்றி அவனுக்குரிய கடமைகளை ஆற்றுபவள் 'மனைவி' என்றும் கூறுகிறது. இல்லறம் ஆற்றினால் பெருஞ்சிறப்புடைய மேல் உலகவாழ்க்கை பெண்ணுக்குக் கிட்டுமென்று திருக்குறள் குறிப்பிடுவது யாவருமறிந்ததொன்றே!

பெண்ணுக்குரிய இயல்புகளாக அடக்கமுடைமையை அறநூல்கள் பலவும் வற்புறுத்த, அதனோடு, சிறுபஞ்சமூலம் கணவன் உண்ட மீதி உணவை மனைவி உண்ணுதல் பற்றியும், வற்புறுத்துகின்றது. இத்தகைய இயல்புகளை மீறியோர் கண்டனத்திற்குள்ளாகுகின்றனர். 'அடி' என்று எதிர்த்து நிற்பவள் 'யமன்' என்றும், அதிகாலை சென்று சமைக்கத் தொடங்காதவள் '(நீக்க) அரிய நோய்' என்றும், சமைத்த பொருளைப் படையாதவள் 'வீட்டிலிருக்கும் பேய்' என்றும், இம்மூவரும் தம்மை மனைவியாகக் கொண்ட கணவருக்கு 'கொல்லும்படை' என்றும் குறிப்பிடப்படும் இடங்கள் இதற்குச் சான்றுகளாகின்றன.

பெண்ணுக்குரிய நல்லொழுக்கம் பற்றி விவரிக்கின்றபோது திருக்குறள் உட்பட பல நூல்களும் கற்புடைமையைப் பேணவேண்டுவது பற்றி முக்கியமாக வற்புறுத்துகின்றன. கற்பு என்பதற்கு திருக்குறள் கூறும் வரைவிலக்கணம் 'மனஉறுதி' என்பது. கற்பின் முக்கியத்துவம் கருதி தனி இயலே வைத்துள்ள நாலடியார், கற்பு என்பதற்கு 'தன்னைப் பெறவேண்டும் என்னும் ஆசையால் விரும்பித் தன் பின்னே நிற்பவர் (ஒருவரும்) இல்லாதபடி செய்துகொள்ளும் குணம்' என்று விளக்கம் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கற்பின் காவல்' பற்றிக் குறிப்பிடும் திருக்குறள், 'பெண்ணை வீட்டுச் சிறையிலிட்டு காவல் செய்வதால் பயனில்லை; பெண்ணே தனது நிறையால் தன்னைக் காப்பதே சிறந்தது' என்று குறிப்பிடுகின்றது. இக்கருத்திற்கு முற்றிலும் மாறாக, 'இல்லறப் பெண்ணின் காவலுக்கு அறிவில்லாதவர்களை (நண்பர்களாகக் கருதி) ஏற்படுத்தினால் சோற்றுக்குக் காக்கையைக் காவல் வைத்தது போலாகும்' என்றும் 'கற்பினை அழிவு வராமல் காப்பவர்கள் கணவன், கணவனுடன் பிறந்தவன், தன் மாமன், மகன், தந்தை ஆகிய ஐவருமாவர்' என்றும் சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகின்றது. நாலடியார் 'காவல்' என்பதனைத் தீவிரமான விமர்சனத்திற்கு உட்படுத்துகின்றது. அதாவது 'தவறு சிறிதுமற்ற வாள்வீரனின் காவலுக்குள்ளிருப்பினும் அத்தகைய பெண்கள் குற்றம் சிறிதும் செய்யாதிருக்கும் காலம் சிறிது; ஒழுக்கமற்ற காலமே பெரிது' என்று விவரிக்கின்றது!

நன்மக்களைப் பெறுவதனை இல்வாழ்க்கையின் நல்ல அணிகலனாக திருக்குறள் கருதுகின்றது. அதே வேளையில் சிறுபஞ்சமூலம், குழந்தை வளர்ப்புப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. வயிற்றின்கண் கருவை அழியாது பாதுகாத்தல், கரு சிதையாமல் பாதுகாத்தல், நோய்வரின் மருந்து கொடுத்தல், குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் என்றவாறு அது அமைகின்றது.

காதலி

'காதலி' நிலையில் பெண்களைக் காணுதல் என்கின்றபோது அத்தகைய நோக்கு முற்றுமுழுதாகக் கற்பனை வழிப்பட்டது என்பதனை முதலில் மனங்கொள்ள வேண்டியது அசியமாகும். காதலி நிலைநின்று பெண்களைக் காண்பன திருக்குறள், நாலடியார், இன்னிலை ஆகிய மூன்று நூல்களுமாகும். இத்தொடர்பில், திருக்குறளில் இடம்பெறும் கருத்துக்களே ஏனைய நூல்களைவிட முக்கியமானவையாகவும் விரிவானவையாகவும் உள்ளமை கவனத்திற்குரியது.

திருக்குறள் கூறும் கருத்துக்கள் யாவை என்று சுருக்கமாக நோக்குவதற்கு முன்னர், வள்ளுவர் பற்றி சிறிது நினைவு கூரவேண்டியுள்ளது. சமண தத்துவமரபு, பௌத்த தத்துவமரபு, இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமரபு, வடமொழி நீதிநூல் மரபு, அகத்திணை மரபு என பல்வேறு மரபுகளின் ஆதிக்கம் நிலவிய சூழலின் மத்தியில் அறநூல்கள் எழுந்த வேளையில், வள்ளுவர் அவை அனைத்திற்கும் முகங்கொடுத்து தனக்கே உரிய தனித்துவமான வழி நின்று அவை பற்றிய தனது பார்வையை வெளிப்படுத்தியவர் என்பதே நமது கவனத்திற்குரியது. இவ்வழியில், திருக்குறளின் காமத்துப்பால் அகத்திணை மரபின் செல்வாக்கிற்குட்பட்ட வள்ளுவரை இனங்காட்டுகின்றது. அறநூலாசிரியரான வள்ளுவர் காமத்துப்பாலில் அறநூலாசிரியராக மட்டுமன்றி தமிழ்ப் புலவராகவும் வெளிப்படுகின்றார்.

வள்ளுவர் தமிழ்ப்புலவர் என்ற நிலையில் காமத்துப்பாலினை அகத்திணை மரபில் நின்று அணுக முற்படுகின்றார். காதலியை அதாவது தலைவியை அவ்வழியில் இனங்காண்கின்றார். எனினும் சங்ககால அகத்திணைக் காதலியைவிட, இக்காதலியின் உணர்ச்சி வெளிப்பாடுகள் மிக நுட்பமாகவும் விரிவாகவும் வெளிப்படுத்தப்படுகின்றமை கவனத்திற்குரியது.

மேற்கூறிய போக்கினை ஓரிரு காரணங்களினூடாக விளங்கிக் கொள்வது பொருத்தமானது.

பசலை நோய், அகநானூற்றில் 'பழங்கண் கொண்ட பசலை மேனியின்', 'நல்நிறம் பரந்த பசலையன்' என்றவாறு பேசப்படுகின்றது. பிரிவுத்துயரால் தலைவிக்கு ஏற்படும் இப்பசலை நோய் காமத்துப்பாலில் 'பசப்புஉறு பருவரல்' என்னும் தலைப்பில் பத்துப்பாடல்களில் விளக்கப்படுகின்றது.

தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாது கண்ணீர் விடுகின்றாள். அவள் கண்ணீரை 'வழிபடர் உழந்த பணிவார் உண்கண்' என்றும் பெருந் துயரால் வருந்திக் கண்ணீர் விடும் மையுண்ட கண்கள் என்றும் அகநானூறு கூறுகிறது. நற்றிணையில் 'அழல் தொடங்கினளே ஆயிழை' என்பதாக இக்கருத்து வருகின்றது. இவ்வாறு காதலர் பிரிவால் அழும் தலைவியின் கண்ணீரை காமத்துப்பாலின் 'கண்விதுப்பு அழிதல்' அதிகாரத்தின் பத்துப்பாடல்களும் விளக்கிநிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளரொருவர் பின்வருமாறு கூறுவதைப் பொருத்தம் கருதி இவ்விடத்தில் எடுத்தாள்வது பயனுடையது[6]. "அறம் தெருட்டும் ஓர் ஆசானாக – பொருள் உரைக்கும் ஒரு போதகனாக அறத்துப் பாலிலும் பொருட் பாலிலும் வரும் வள்ளுவன் ஒரு கவிஞன் என்பது காமத்துப்பாலில் நன்கு தெரியவருகின்றது. காமத்துப்பாலில் தன்னை ஒரு கவித்துவம் நிறைந்த கவிஞனாக வெளிக்காட்டும் வள்ளுவன், புலவி நுணுக்கம் அதிகாரத்தின் வாயிலாக ஒரு நாடகாசிரியன் என்றும் நிலைநிறுத்துகிறான்".

அதே வேளையில் முற்பட்ட அகத்திணை மரபுகளுள் சில இப்போது மாற்றம் பெறுவதும், கவனிக்கத்தக்கது. உதாரணமாக, தொல்காப்பியம், தலைவன் பிரிவிற்கு, பொருள், கல்வி, வணிகம், உளவு முதலானவற்றையும் காமக்கிழத்தி, பரத்தையர் முதலானோரையும் காரணங்களாகக் குறிப்பிட, பொருள்வயிற் பிரிவை மட்டுமே வள்ளுவர் காரணமாக்குகின்றார். ஏன் ஏனைய காரணங்களைக் கூறாது தவிர்த்துள்ளார் என்பது ஒருபுறமிருக்க, (அது பற்றிய அவதானிப்பு இக்கட்டுரைக்கு அவசியமன்று.) அவற்றுள் பரத்தையர் காரணமாக ஏற்படும் பிரிவை மட்டுமே கண்டிக்கின்றமை கவனத்திற்குரியது. அதற்கான காரணம் யாது என்பதுபற்றிக் கூறவேண்டியது அவசியமன்று.

திருக்குறள் போன்று நாலடியாரிலும் காமத்துப்பால் இடம்பெற்றிருப்பினும் இருநூல்களுக்கிடையிலும் வேறுபாடொன்றுள்ளது. திருக்குறள், கற்புடை மகளிர் பற்றி, இல்லறவியலில் குறிப்பிட, அது நாலடியாரில் காமத்துப்பாலில் இடம்பெறுகின்றது. திருமணத்தின்பின் மட்டுமே காம இன்பம் நுகர வேண்டும் என்பது நாலடியாரது கருத்தாதல்கூடும்.

வரைவின் மகளிர்

'வரைவின் மகளிர்' என்பதன் பொருள் 'ஒழுக்கத்தில் வரையறையில்லாத பெண்' என்பதாகிறது. ஆக, ஆடவர் அத்தகைய பெண்களை நாடிச்செல்வதை அறநூல்கள் கண்டிக்கின்றன என்பதே இங்கு கவனத்திற்குரியதாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வேட்கை காரணமாக மட்டும் அன்பு காட்டும் பொதுமகளிரின் இன்சொல் துயர்தரக்கூடியது; அவளது தழுவல் பொய்த்தழுவல்; இருட்டறையில் பிணத்தை தழுவியதை ஒத்தது அது. அறிவுடையோர் அத்தகையவளை நாடார்; நெஞ்சுரமற்றவரே நாடுவர். வஞ்சம் நிறைந்த பொதுமகளிர் மோகினியாவர்; அத்தகையோர் தோளின் கீழ் கிடப்பது நாகமாகும்.

மேற்கூறியவாறு திருக்குறள் எடுத்தியம்ப, நாலடியார் பின்வருமாறு விளக்குகின்றது:

விளக்கொளி நெய் குறையக் குறையக் குறையும். வேசையர் நட்பும் பொருள் குன்றக் குன்றக் குன்றும். பொருள் உள்ளபோது மலையுச்சி ஏறி விழுவதற்கும் சம்மதிப்பர். பொருள் இல்லாதபோது, காலில் வாத நோய் இருப்பதாகக் காண்பித்து, பொய்யாக அழுது மலையுச்சிக்கு வராதுவிடுவர்.

இந்திரனாயினும் பொருளின்றேல் கையால் வணங்கி அனுப்புவர். பொருளிருப்பின் இனியவராய் நடிப்பர். வறியவராயின் இனிமையற்றவராகி ஆட்டுக்கடாவின் கொம்பு போன்று மாறுபாடு கொள்வர்.

பொருளில்லாதவர் நஞ்சினர். செக்காட்டும் இழி தொழில் செய்பவராயினும் தேடியபொருள் வைத்திருப்பரேல் சர்க்கரை.

விலாங்கு மீன்போன்று பாம்பிற்கு ஒருதலையும் மீனுக்கு ஒரு தலையும் காட்டுவர்; மிருகம் போன்ற அறிவிலிகள்.

பொருளைப் பறிக்க, காட்டுப் பசுப்போல் தழுவுவர். ஏழையான பின்னர் எருதுபோல் குப்புறப்படுப்பர்.

திரிகடுகம் இவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது பொதுமகளிர் துறைபோன்றவர் என்று கூறும்.

ஏலாதி, 'பொதுமகளிர் பாடுகின்ற' இடத்தை நாடாதீர்; ஆடுகின்ற நாடகத்தைப் பாராதீர்' என்று குறிப்பிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமகளிரிடமிருந்து ஒதுங்கி வாழும்படி திருக்குறள் கூற, ஏனைய அறநூல்கள் தீவிரமான முறையில் அவர்களைக் குறை கூறுவது குறிப்பிடத்தக்கது.

தீய பெண்கள்

சிறுபஞ்சமூலம் 'தீய பெண்கள்' என்று ஒருசாராரை இனங்காட்டுகிறது. கள்ளுண்டு களிப்போர், தன் கணவனது உறவை விரும்பாது பிரிந்து வாழ்வோர், நாணமின்றி பிறரது இல்லத்திற்குச் செல்வோர், பிறரது கருமம் பற்றிப் பிறருடன் ஆராய்வோர், தீயபெண்களுடன் சேர்த்து (தீயவராக) பேசப்படுவோர் ஆகியோர் அவ்வகைப்பாட்டினுள் அடங்குகின்றனர்.

விதவைப் பெண்கள்

விதவைப் பெண்கள் பற்றிய குறிப்புகள் அறநூல்களில் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. 'ஏலாதி' சில இடங்களில் அவர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. விதவைப் பெண்ணை, 'தலையிழந்த பெண்டாட்டி' என்றும் 'விதவைக்கு உதவுதல் வேண்டும்' என்றும் நேரடியாகக் குறிப்பிடும் ஏலாதி, மறைமுகமாக, 'கணவனை இழந்த பெண்ணின் மாதவிடாய் சிறந்தது' என்று கூறும்வழி விதவையர் நிலை பற்றிக் கூறுவதும் சிந்திக்கத்தக்கது. மேலும், ஏலாதி குறிப்பிடும் பல்வகைப் புத்திரருள் பௌநற்பவன், 'கணவன் இறந்த பின்னர் மறுமணம் செய்துகொண்டு பெற்ற மகன்' என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

அடிமைப் பெண்கள்

அடிமைப் பெண்கள் பற்றிய குறிப்புகளும் அறநூல்களில் அதிகளவு இடம்பெறவில்லை. 'ஊழ்வினை வரின் மனைவியரை பகைவர் கவருவர்' என்றும், 'தொழுநர் தரும் உணவு' என்றும் இரு குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும், நாலடியார் (பாடல் 3) பகையரசர் தாம் வெற்றிக்கொண்ட அரசனின் விலைமதிப்புடைய செல்வத்தைக் கவர்ந்து செல்வதுடன் தோல்வியடைந்த அரசனின் மனைவியையும் கவர்ந்து செல்கின்ற வறிய நிலையும் ஏற்படும் என்று குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடவரின் செயற்பாடுகளும் பெண்களும்

மனைவி சொற்படி நடத்தல்

மனைவிக்கு அஞ்சி அவள் சொற்படி நடக்கும் கணவனைக் கண்டிப்பதில் அறநூல்கள் கரிசனை காட்டுகின்றன. குறிப்பாக, திருக்குறள் இதனை முதன்மைப் படுத்துவதோடு 'பெண்வழிச்சேறல்' என்று தனிஅதிகாரமே வைத்துள்ளது.

மனைவி சொல்லைக் கேட்டு நடப்பவர் நற்பயன் அடையமாட்டார். மனைவிக்கு பணிந்து நடப்பது வெட்கப்பட வேண்டிய செயலாகும். மனைவிக்கு அஞ்சி நடப்பது பெருமைக்குரிய செயலன்று. அவ்வாறு நடக்குமொருவனால் நல்லவருக்கு நல்லது செய்யவியலாது. மனைவி சொல்பவற்றைச் செய்பவனது ஆண்மையைவிட, இயல்பாக நாணமுடைய பெண்ணின் பெருமை சிறப்புடையது. மனைவி சொல்பவற்றைச் செய்யாதவன் அறமல்லாதவற்றைச் செய்தாலும் மன்னிக்கலாம்.

பிறனில் விழைதல்

ஆண்கள் 'பிறர் மனை நயத்தல்' பற்றி அல்லது 'பிறனில் விழைதல்' பற்றிக் குறிப்பிட்டு அறநூல்கள் அவற்றைக் கண்டிக்கின்றன. அவ்வாறெனில் ஆண்களின் அத்தகைய நடத்தையில் பெண்களும் உடன்பாடு கொண்டிருந்தனர் என்று ஊகிக்க வாய்ப்புள்ளது. ஆயினும் அதுபற்றிய வெளிப்படையான குறிப்புகளெவையும் அறநூல்களில் இடம்பெறவில்லை.

ஏலாதியில் இடம்பெறுகின்ற குறிப்பொன்று பற்றி இவ்விடத்தில் நினைவு கூர்தலவசியம். ஏலாதி பலவகையான புத்திரர்கள் பற்றிக் குறிப்பிடும்போது கேத்திரசன், கூடன், கானீனன் ஆகியோர் பற்றியும் கூறும். கணவன் இருக்கின்ற போது பிறர்க்குப் பிறக்கின்ற புத்திரனே 'கேத்திரசன்' ஆவான். கணவனுக்குத் தெரியாமல் பிறருக்குப் புதிதாகப் பிறப்பவன் 'கூடன்' ஆகின்றான். திருமணமாகாதவட்குப் பிறந்தவன் 'கானீனன்' எனப்படுவான். ஆகவே, பிறனில் விழைதல் அல்லது பிறர்மனை நயத்தல் பெண்களிடமும் காணப்பட்டிருக்க வாய்புள்ளது என்று கூறத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கநிலையில் பெண்கள் நம்புதற்குரியவரல்லர் என்று கருதுகின்ற நிலையிற் காணப்பட்டனர். "ஈன்றாள், மகள், தன் உடன்பிறந்தாளாயினும் சான்றோர் தமித்தா உறையற்க, ஐம்புலனாற் தாங்கரிதாகலான்" என்று ஆசாரக் கோவை குறிப்பிடுவது இதற்கு ஆதாரமாகின்றது.

'வீட்டிலிருந்து எல்லை கடந்து செல்லும் பெண் வாழ்கின்ற நாட்டிலே மழை பெய்யாது' என்று திரிகடுகம் குறிப்பிடுவதும் இத்தொடரில் சிந்திக்கத் தக்கது எனலாம்.

பெண்களின் உணர்ச்சியும் அழகும் உயர்ச்சியும்

பெண்களின் உணர்ச்சிபற்றி.....

பெண்களின் உடலின்பம் சார்ந்த உணர்ச்சியை வெளிப்படுத்துவது எந்தளவிற்கு ஏற்கப்பட்டது என்பது தொடர்பாக சுவாரஸ்யமான சில குறிப்புகள் காணப்படுகின்றன.

'மிக்க காமம் உடையவள் சேர்க்கை இன்னா' என்கிறது இன்னா நாற்பது.

'முலையில்லாள் பெண்மை விழைவு' திருக்குறளில் மறைமுகமாகக் கண்டிக்கப்படுகின்றது. அதாவது, கல்லாதான் நிலை பற்றிக் கூறும்போது, 'கல்லாதான் சொற் காமுறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' என்று திருக்குறள் குறிப்பிடுகிறது.

பெண்களின் அழகு

பெண்களது உடலழகு இழிவானதொன்றாக அறநூலாசிரியர்களினால் கருதப்படுகின்றது. 'பெண் உடல் குமட்டுவது' என்றும் 'பெண் உடல் அழுகுத்தேர்', 'உள்ளே அசுத்தமும் அதனால் நாற்றமும் உள்ளன' என்றும் நாலடியார் கூறுவது கவனத்திற்குரியது.

அதேவேளையில் அறநூற் கருத்துக்கள் பலவும் பெண்களை – பெண்களது அங்க அழகினை – விளித்துக் கூறுகின்ற முறையில் அறநூல்களில் இடம்பெற்றிருப்பது பற்றியும் இவ்வேளை நினைவு கூர்தலவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய நோக்கு, துறவு நிலைக்கு பெண்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்ற காரணத்தாலும் பின்னைய போக்கு, இலக்கிய உத்தி முறை காரணமாகவும் உருவாகியிருக்க வேண்டும் என்றும் கருதுவதில் தவறில்லை.

பெண்களது உயர்ச்சி

மூன்று வேறு விடயங்கள் இவ்விதத்தில் கவனத்திற்குரியனவாகின்றன. பெண்கள் கல்விபற்றி நாலடியார் குறிப்பிடுவது இலக்கிய ஆர்வலர் பலருமறிந்த விடயமாகும். "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல" என்று தொடங்கும் பலரும் நன்கறிந்த பாடல் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது. இப்பாடலின் சாயலில் பெண் கல்விபற்றி சிறுபஞ்சமூலம் (செய். 35), ஏலாதி (செய். 74) ஆகியவற்றிலும் ஒவ்வொரு பாடல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனைவியைக் கணவன் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி, அதாவது 'மனைவியைப் பாதுகாக்கும் திறனின்றி இகழ்ந்து பேசுபவன் இப்பிறப்பில் எவர்க்கும் பயனற்றவன்' என்று திரிகடுகம் குறிப்பிடுவதும் இவ்வழி கவனிக்கத்தக்கது.

பெண்களது உயர்ச்சியை விரும்பாத நிலை காணப்பட்டமையும் கவனத்திற்குரியது. 'பெண்கள் வழக்குத் தொடுத்து முன்னேற்றமடைதல் கண்களால் பார்க்கத்தக்கதன்று' என்று திரிகடுகம் எடுத்துரைப்பது இதனையே உணர்த்துகின்றது எனலாம்.

முடிவுரை

இதுவரை கூறிவற்றைத் தொகுத்து நோக்கும்போது அறநூல்களில் இடம்பெறும் பெண்களுள், குடும்ப வாழ்க்கையில் கணவனுக்குத் துணையாகவுள்ள 'இல்லாள்' என்பவளும் ஆடவரது பொருள் விரயத்திற்கு காரணமாகவுள்ள பரத்தையராகிய வரைவின் மகளிரும் முதன்மை இடம் பெறுவது புலப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாளுக்குரிய ஒழுக்கமும் கடமைகளும் வற்புறுத்தப்படுகின்றன. பரத்தையர் ஒழுக்கம் மிகுந்த கண்டனத்திற்குள்ளாகிறது.

போர்மிகுந்த சூழலில் விதவைகளும் அடிமைகளும் காணப்பட்டிருப்பினும் அறநூல்கள் அவர்கள் பற்றிப் பேச முற்படவில்லை. அறநூல்களின் நோக்கிற்கு அது தேவையுமன்று.

'காதலி' என்ற நிலையில் பெண்கள் நோக்கப்பட்டிருப்பினும் 'காதலி' கற்பனைப் பாத்திரம் என்பதில் ஐயமில்லை.

ஆடவர்களால் விரும்பப்படுவது காரணமாக, (பரத்தையரல்லாத) பிறர் மனைவியர்களும் அறநூல்களிலே கண்டிக்கப்படுகின்றனர். பெண்களும் பிறர் கணவரை விரும்பியமைக்கு வாய்ப்புள்ளது. மனைவி சொற்படி நடக்கின்ற ஆடவர்களும் தூற்றுதல்களுக்குள்ளாகின்றனர்.

பெண்களது உணர்ச்சி வெளிப்பாடு, அழகு, உயர்ச்சி என்பனப்பற்றிய அறநூலாசிரியர் பார்வை எத்தகையது என்பது பற்றியும் அறநூல்களில் ஆங்காங்கு சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. ஒழுக்கமேம்பாடு, கட்டுப்பாடு, ஆணாதிக்கம் என்பனவே பெண்கள் பற்றிய மேற்கூறிய விபரிப்புகள், பார்வைகள் முதலான அனைத்திற்குமான அடிப்படைகளாகின்றன.

இன்றைய மார்க்சிய, பெண்நிலைவாத நோக்குகளில் மேற்கூறிய விடயங்களை பார்க்கும் முயற்சி இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. வேலுப்பிள்ளை, ஆ, டாக்டர், தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. ப. 55.
2. வேலுப்பிள்ளை, ஆ, டாக்டர், மே.கு.நூ.
3. சிதம்பரனார், சாமி, பதினென்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்க்கையும், சென்னை, 1957, ப. 27.
4. அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும் ஆய்வரங்குச் சிறப்பு மலர், 2010,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாசிரியர், திரு. க. இரகுபரன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2010, ப. 5.

5. வேலுப்பிள்ளை, ஆ., டாக்டர், தமிழர் சமய வரலாறு, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை, 1985, பக். 47 – 52.
6. கந்தசாமி, சோ.ந.முனைவர், உலகத் தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 501 – கி.பி 900), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004, ப. 21.
7. விச்சலன், இரா. காமத்துப்பாலில் முல்லைத்திணைச் சிந்தனைகள், உங்கள் நூலகம், டிசம்பர் 2010, சென்னை, ப. 13.

உசாத்துணை நூல்கள்

மூலநூல்கள்

திருக்குறள், பரிமேலழகருரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேனி, சென்னை, 4ஆவது பதிப்பு நவம்பர் 1944.

பதினெண்கீழ்க்கணக்கு.–1, பதிப்பாசிரியர், பேராசிரியர்.
மு.சண்முகம்பிள்ளை, பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு 2001.
பதினெண்கீழ்க்கணக்கு, 2, மே.கு.நூ.
பதினெண்கீழ்க்கணக்கு, 3, மு.கு.நூ.

துணைநூல்கள்

இராமகிருஷ்ணன், எஸ்.டாக்டர், திருக்குறள்: ஒரு சமுதாயப்பார்வை, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், சென்னை, 2ஆம் பதிப்பு, 1990.

கந்தசாமி, சோ.ந. முனைவர், உலகத் தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 501 – கி.பி. 900) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

செல்வம், வேதி பேராசிரியர், தமிழகம் வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995.

தமிழண்ணல், முனைவர், உலகத்தமிழ் இலக்கிய வரலாறு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை 2004.

பிரேமா அருணாசலம், பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும் (தொல்காப்பியர் முதல் சித்தர்வரை – பெண்களின் சித்திரிப்பு), சவுத் ஏசியன் புக்ஸ், 1993.

வேலுப்பிள்ளை, ஆ, டாக்டர், தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2ஆம் பதிப்பு, 1985.

வேலுப்பிள்ளை, ஆ.டாக்டர், தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

வையாபுரிப்பிள்ளை, எஸ், பேராசிரியர், இலக்கிய மணிமாலை, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 2ஆம் பதிப்பு 1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம் புலப்படுத்தும் சைவநெறி

மா. வேதநாதன்

தமிழர் பண்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் செந்தமிழ் இலக்கியங்களுள் சிலப்பதிகாரம் தனிச் சிறப்புடையது. கி.பி.450 க்கும் கி.பி. 550 க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் இந்நூலைச் சமணசமயத் துறவியான இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். தமிழின் முதற் காப்பியமாகவும், முத்தமிழ்க் காப்பியமாகவும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகவும் கருதப்படும் இவ்விலக்கியம், தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளையும் கலை மேம்பாட்டினையும் வழிபாட்டு நெறிகளையும் வெளிப்படுத்தும் ஒரு சிறந்த சமய, சமுதாய இலக்கியமாகவும் அமைகின்றது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களும் முப்பது காதைகளுமாக தொடர் நிலைச்செய்யுட்களால் அமைந்து விளங்கும் இத்தமிழ்ப்பண்பாட்டு இலக்கியத்தில் சமணசமயக் கருத்துக்கள் மட்டுமன்றி இந்துசமய நெறிகள் மற்றும் பண்பாட்டு மரபுகள் பற்றிய அரிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குள் சமயபேதம் பாராட்டாமல் அவரவர் போக்கில் வழிபாடுகளை நிகழ்த்தியதை இந்நூல் நன்கு உணர்த்தி நிற்கின்றது. சமய சமரசத்துடனும் சமயப் பொதுநோக்குடனும் விளங்கும் இத்தமிழ்க் காப்பியத்தில் இடம்பெறும் சிவநெறியாகிய சைவநெறி தொடர்பான விடயங்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டதாக இக்கட்டுரை அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறி - ஒரு விளக்கம்

சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் *சிவநெறியே சைவநெறி* எனப்படும். சைவப்பிரிவுகள் அனைத்திற்கும் சிவனே அடிப்படை முழுமுதலாவார். தமிழில் **சிவ** என்னும் சொல் சிலப்பதிகாரத்திலும் **சைவ** என்னும் சொல் மணிமேகலையிலும் முதன் முதலில் இடம்பெற்றுள்ளன. சைவம் சிவத்துடன் சம்பந்தமுடையது என்பதைத் தமிழில் திருமந்திரமே முதலிற் குறிப்பிடுகின்றது. இதன்படி சிவத்துடன் சம்பந்தமுடைய கடவுளர்களும் வழிபாட்டு முறைகளும் பிறவும் சைவநெறி என்பதற்கான வரைவிலக்கணத்துள் அடங்குவதாகக் கொள்ளலாம். இதன் காரணமாகவே சைவத் திருமுறையுள் *விநாயகர், முருகன்* என்போருக்கான பாடல்களும் இடம்பெற்றுள்ளன. சைவநெறி வேதநெறியுடன் இணைந்துள்ளதனால் அதனை *வைதிக சைவம்* என்று கந்தபுராணம் குறிப்பிடுகிறது. இதனையே *வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க* என்றும் *வேதப்பயனாம் சைவம்* என்றும் பெரியபுராணமும் சுட்டி நிற்கின்றது. எந்நாட்டவர்க்கும் உரிய இறையைத் தென்னாட்டவர் சிவன் என்று சொல்லி வழிபடுவர். இச் சைவத்திறத்தினையே மணிவாசகர் *தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி* என்று குறிப்பிடுவதால் அறியலாம்.[1] இந்த வழித்தடத்திலேயே கந்தபுராணம் உலகமெலாம் மேன்மை கொள் சைவநீதி விளங்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றது. சைவநெறி முழுமுதற்கடவுளாகிய சிவனைச் *சைவன்* என்றும் வழங்கும். மணிவாசகரும் சிவனை, *சைவன்* என்று குறிப்பிடுவர். இதனால் சிவநெறியே சைவநெறி என்பது தெளிவுறும்.

சிவநெறி சிறந்து விளங்கியதன் காரணமாகவே சிவாலய வழிபாடு அக்காலத்தில் நடைபெற்றது எனலாம். சிவனைத் திணைவழித் தெய்வங்களிலொன்றாகச் சிலப்பதிகாரம் கூறாதவிடத்தும் புகார் நகரத்திலும் மதுரையம்பதியிலும் சிவபெருமானுக்கும் மற்றும் முருகன், பலதேவன், திருமால், இந்திரன் என்போருக்கும் கோயிலமைத்து வழிபட்டு வந்தார்கள் என்பதை, பின்வரும் சிலப்பதிகார அடிகள் உறுதி செய்கின்றன.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் [2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுதல் விழிநாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்[3]

மேலேயுள்ள *பிறவா யாக்கைப் பெரியோன் நுதல் விழிநாட்டத்து இறையோன்* என்னும் சிலப்பதிகார வரிகள் சிவபெருமானைக் குறித்து நிற்கின்றன. புகாரிலும் மதுரையிலும் முருகன், திருமால், இந்திரன், பலராமன் ஆகிய கடவுளர்களுக்கும் கோயில்கள் காணப்படுகின்றபோதும் அக்கோயில்களை இளங்கோவடிகள் வரிசைப்படுத்தும்போது சிவன் கோயிலை முதற்கண் வைத்துக் கூறியது சிலப்பதிகார காலத்தில் அவ்விரு நகரங்களிலும் சிவநெறியாகிய சைவநெறியே முதன்மைச் சிறப்புற்றிருந்ததைப் புலப்படுத்துகின்றது எனலாம். சிவனை, *பெரியோன்* எனச்சுட்டுவது சைவநெறிக் கடவுளுக்கு அக்காலத்தில் இருந்த பெருமையை மட்டுமன்றி சைவநெறியின் உயர்வையும் நன்கு புலப்படுத்துவதாக உள்ளது.

மேலும் சிவன் பிறவான், இறவான், ஆதிஅந்தம் இல்லாதவன் ஆகிய சிந்தாந்த சைவக் கருத்தின் முகிழ்ப்பையே *பிறவாயாக்கைப் பெரியோன்* என்ற சொற்றொடரால் இளங்கோ அடிகள் குறிப்பிடுகின்றார்.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்த பின்னர் அவர்களிருவரும் பள்ளியறையில் சந்தித்த முதல் நாள் இரவில் கோவலன் கண்ணகியின் உறுப்பழகை வருணிக்கும் முறை தெய்வீக உவமைகளை உள்ளடக்கியதாகவுள்ளது. முதலில் கண்ணகியின் நெற்றியை வானில் உள்ள பிறையோடு அவன் ஒப்பிடாமல் சிவபெருமான் சடா பாரத்தில் உள்ள பிறைச்சந்திரனை உவமையாகக் குறிப்பிடுகின்றான். அதன் பின்னரே அவளின் இடையழகைத் தேவர் கோமானின் வச்சிராயத்தோடும் கண்ணழகை முருகனின் கைவேலோடும் பிணைத்துப் பேசுகிறார் இளங்கோவடிகள்.[4] இந்தத் திருவுருவ வருணனையை உற்று நோக்கும்போது முதலில் சிவப்பிறையுடன் அவள் திருநுதலை ஒப்பிட்டமையால் இளங்கோ அடிகள் சிவநெறி மேல்நிலைப்பாடு பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவராதல்கூடும் எனக் கருதமுடிகிறது. இதில் வரும் முருகனைப் பற்றிய செய்தியும் அக்காலத்தில் சைவத்தின் மேவிய சிறப்பைப் புலப்படுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார காப்பியத்தில் இறவாத புகழோடு நின்று விளங்கும் மாங்காட்டு மறையவன் என்னும் வேதியன் வைணவக் கடவுளை வழிபடுபவனாகக் காணப்படினும் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிவநெறியாளனாகவும் விளங்குகின்றான். மூன்று கிளைகளாகப் பிரிந்து செல்லும் வழியைக் குறிப்பிடுங்கால் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய சிவபெருமான் திருக்கரத்தில் விளங்கித் தோன்றும் வடித்த முக்கிளைச் சூலாயுதத்தையே உவமையாக அமைத்துக் கூறுகின்றான். இது சிலப்பதிகாரத்தில்,

பிறைமுடிக்கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்[5]

எனவருதலால் அறியப்படும்.

இதன்கண் உள்ள *பிறைமுடிக் கண்ணிப் பெரியோன்* என்பது சிவபெருமானைக் குறிப்பதாகும். சிலப்பதிகார காலத்தில் சிவவழிபாடு சாதாரண மக்கள் வாழ்விலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தமை யினாற்றான், சாதாரண வழிப்பாதைப் பிரிவைக்கூட சிவனது திரிசூலத்துடன் இளங்கோ அடிகள் ஒப்பிடுகின்றாரெனலாம்.

சிவமும் சக்தியும் ஒருவரிலிருந்து மற்றவரைப் பிரிக்க முடியாத வகையில் அர்த்தநாரியாக விளங்குகின்றார்கள். இது சிவநெறியின் தனிச்சிறப்பாகும். சிவமும் சக்தியும் வெவ்வேறானவர்களல்லர் என்பது சைவநெறியின் தாற்பரியமாகும். இதனால்தான் சிவப்பெருமானின் சக்தியாகக் கொள்ளப்படும் கொற்றவையெனும் துர்க்கை சிவபெருமான் செய்த செயல்களை யெல்லாம் செய்தவளாக குறிப்பிடப்படுகின்றாள். அதனால்தான் சிவபெருமான் நஞ்சுண்டதாகச் சொல்லப்படும் செய்தியைக் கொற்றவைக்கும் ஏற்றிக்கூறியுள்ளார். இதனை இளங்கோவடிகள்,

விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்[6]

என்று கூறுவது நயக்கத்தக்கது. விண்ணோர்கள் அமுது உண்டார்கள். நீயோ அமுது உண்ணவில்லை. அமுது உண்டவர்கள் உயிரோடு இருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்படுவது.நஞ்சுண்டவர்கள் மாய்வதும் எதிர்பார்க்கப்படுவது. விண்ணோர்கள் நஞ்சுண்ணவில்லை; அமுதுண்டார்கள்; ஆயினும் இறந்துபட்டார்கள். நீயோ நஞ்சுண்டும் உயிரோடு இருக்கிறாய். உயிரோடு இருப்பது மாத்திரமல்லாமல் மற்றையோருக்கு அருள் சுரக்கின்றாய். உன்னுடைய பெருமை இருந்தவாறு என்னே என்று பொருள் செய்யக் கூடிய வகையில் இவ்விரண்டு அடிகளைத் திட்பமாகவும் நுட்பமாகவும் இளங்கோவடிகள் அமைத்திருப்பது சைவநெறியைச் சிறப்பிக்கவேயெனலாம்.

மேலும், சிவநெறியாம் சைவநெறி செல்வாக்குப் பெற்று விளங்கியதன் காரணமாகவே சிவபெருமானுடைய தெய்வீக வரலாற்றுப் பெருமைகளையும் வீரதீரச் செயல்களையும் தொன்மங்களையும் கொற்றவைக்கும் ஏற்றிக் கூறுகின்றவராக இளங்கோ அடிகள் காணப்படுகின்றார். இதனை அவர் நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினள், பாம்பை நாணாகப் பூட்டி மகாமேருமலையினை வளைத்தவள், நச்சரவினைக் கச்சையாகக் கட்டியவள், சூலம் ஏந்தியவள், யானைத் தோல் போர்த்தவள், புலித்தோல் அணிந்தவள் என்றெல்லாம் கொற்றவையை வருணித்ததால் அறியலாம். இது சிலப்பதிகாரத்துள்,

நஞ்சு உண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துணை எயிற்று உரக்கச் கச்சு உடை முலைச்சி
வளையுடைக்கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலையாட்டி
சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாய்கொற்றவை [7]

என வருகின்றது.

சேரன் செங்குட்டுவன் பிறருக்கு வணங்காத தன் முடியால் சிவன் சேவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கி வலம் வந்தான் என்ற சிலப்பதிகாரச் செய்தி, அக்காலத்தில் சிவபெருமானே மன்னர் போற்றிய மிகவும் உயர்ந்த கடவுள் என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. அத்துடன் அவன் ஓர் சிவபக்தன் என்பதையும் புலப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரகாலத்தில் சிவன் மிக உயர்ந்தவராகப் போற்றப்பட்டார் என்பதற்கு இந்த ஆதாரம் குறிப்பிடற்பாலதாக உள்ளது. அவன் சிவனை வலம் வந்து வழிபட்டான் என்பது சிலப்பதிகாரத்தில்,

இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொடு [8] என வருதலால் அறியலாம். சிவபெருமானது சேவடியைத் தன் மணிமுடியில் ஏற்கனவே வைத்துக் கொண்டதனாற் போலும் மக்கள் கொடுத்த திருமாலின் சேடத்தைத் தன் தடந்தோளில் தரித்துக் கொண்டு போருக்கு புறப்பட செங்குட்டுவன் ஆயத்தமாகின்றான். இது சிலப்பதிகாரத்தில்

சேடம் கொண்ட சிலர் நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன் ஆகித் தகைமையின் செல்வழி [9]

எனவரும்.

இதில் வரும் *செஞ்சடைக்கடவுள்* சிவபெருமான் என்பதில் ஐயப்பாடு எழ நியாயமில்லை. மன்னர் செங்குட்டுவனின் சிந்தைக்கினிய கடவுளாக திருமாலைவிடச் சிவபெருமானே இருந்தார் என்பதையும் உணர முடிகிறது. மன்னர் எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்ற பழமொழிக்கு ஏற்ப, செங்குட்டுவன் சைவனாக விளங்கியதால் சேர நாட்டு மக்களுள் பலரும் சைவர்களாக விளங்கினர் எனக் கருதலாம்.

சிவநெறியின் அச்சாணியாக விளங்கும் ஐந்தெழுத்து மந்திரம் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் தமிழ் நூல் சிலப்பதிகாரம் ஆகும். இந்த ஐந்தெழுத்துக்களை மந்திரம் என்றும் அவை வேதத்தில் வருவதாகவும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இது சிலப்பதிகாரத்தில் அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும் மந்திரம் இரண்டு [10] என வருவதால் அறியப்படுகின்றது.

செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த கோயிலில் அவளது சிலையை வைத்து வழிபாடு வகுக்கும் வேளையில் நடுகல்லிற்குக் கடவுளை மங்கலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு முன்னால் தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானை அவன் வணங்கினான் என்பது சிலப்பதிகாரத்தில்,

இமையவர் உறையும் இமையச் செல்வரைச்
மயச் சென்னித் தெய்வம் பரசி[11]

என வருகிறது.

எனவே சிவவழிபாட்டிற்குப் பின்புதான் கண்ணகியின் படிமத்திற்கு அணிகலன்கள் பூட்டப்பட்டு அருச்சனை செய்யப்பட்டதென்பது தெளிவாகின்றது.

சக்தியைப் போற்றும் போது .

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து[12]

போன்ற வருணனைகள் இடம் பெறுவதை நோக்கும்போது, சிறப்புற்றிருந்த சிவவழிபாட்டுடன் சக்தி வழிபாடானது சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் எனக் கூறத்தக்க வகையில் பிணைந்திருந்த தன்மையினைப் பிரதிபலிக்கின்றது.

சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் எனும் சித்தாந்த சைவநெறியின் முகிழ்ப்பை, சிலப்பதிகாரத்தில் கண்டின்புற முடிகின்றது. சித்தாந்த சைவநெறி புலப்படுத்தும் இந்த அர்த்தநாரீஸ்வர வடிவமே சிலப்பதிகாரத்தில்,

கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்[13]

என்றும் ,

திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் பகுபறை யார்ப்பவுஞ்
..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துமையவளொருதிறானாக வோங்கிய
விமையவ னாடிய கொட்டிச் சேதம் [14]
என்று வருகிறது.

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சேரன் செங்குட்டுவனோடு தொடர்புறும் செய்திகளால் சிலப்பதிகார சிவநெறிச் சிறப்பைப் புரிந்து கொள்ள முடிகின்றது. சிவபெருமான் வஞ்சிமா நகரின்கண் சேரன் செங்குட்டுவன் தோன்றினானெனக் கூறப்பட்டுள்ளது.

செஞ்சடை வானவன் அருளினில் விளங்காதை
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய் [15]

சைவசமயிகள் என்பதற்கு, திருநீறு பூசியிருத்தல் ஓர் உன்னதமான குறியீடு ஆகும். சைவர்கள் திருநீற்றை சிவசின்னங்களுள் சிறப்பாகக் கொள்வர். சிவநெறியாளர்களால் அணியப்பெறும் தொன்மையுடைய சைவசமய அடையாளம் திருநீறு ஆகும். சிவசின்னமாகிய திருவெண்ணீறு அணியும் சைவவாழ்வியல் சிலப்பதிகார காலத்தில் நிலவியதையே இளங்கோ அடிகள் *சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்* என்ற வரியில் குறிப்பிடுகின்றார்.[16]

சைவநெறி சிவனை, கலைவடிவினராகக் குறிப்பிடுகின்றது. சிவன் நடனக்கலையில் வல்லவர் என்பதை விளக்கும் வகையில் சிவபெருமான் ஆடும் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று ஆட்டங்கள் பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். சைவ நெறி சிறப்பிக்கும் கொடுகொட்டி எனும் ஆடல் பின்வருமாறு விளக்கப்படும். தேவர்கள் திரிபுரம் எரிய வேண்டுதலால் வடவைத்தீயை தலையிலே உடைய பெரிய அம்பு ஏவல்கேட்ட அளவிலே (சுட்ட அளவிலே) அப்புரத்தில் அவுணர் வெந்து வீழ்ந்த வெண்பாலிக் குவையாகிய பாரதியரங்கத்திலே (சுடுகாட்டிலே) உமையவள் ஒரு பாகத்தினளாய் நின்று பாணி தூக்கு சீர் என்னும் தாளங்களைச் செலுத்த எல்லாத் தேவரினதும் உயர்ந்த மகா தேவனாகிய இறைவன் வெற்றிக்களிப்பாய் கைகொட்டி நின்று ஆடியது கொடு கொட்டு என்னும் *ஆடலாகும்.*" இது சிலப்பதிகாரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாடிய பாரதியரங்கத்துத்
திரிபுரமெரிய தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடு கொட்டி யாடலும் [17]

எனவரும் "திரிபுரம் தீ மடுத்து எரிகண்டு இரங்காது கைகொட்டி நின்று ஆடுதலின் கொடு கொட்டியென்று பெயர் கூறினார்" என்பார் அடியார்க்கு நல்லார்.

பண்டரங்கம் என்னும் சைவ ஆடல் பாண்டரங்கம் எனவும் கூறப்படும். அதன் இயல்பினை, *தேர் முன் நின்ற திசைமுகன் காணப் பாரதியாடிய வியன் பாண்டரங்கமும்* [18] என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இத்தொடர்க்கு "வானோர் ஆகிய தேரில் நான்மறை கடும் பரி பூட்டி நெடும்புற மறைத்து வார்துகில் முடித்து கூர் முட் பிடித்துத் தேர்முன் நின்ற திசை முன் காணும் படி பாரதி வடிவாகிய இறைவன் வெண்ணீற்றை அணிந்தாடிய பாண்டரங்கக் கூத்தும்" என்று அடியார்க்கு நல்லார் உரை கூறுகின்றார். முப்புரங்களை வென்று அந்த வலியாலே முப்புரத்து அவுணர்கள் வெந்து வீழ்ந்த நீற்றை அணிந்து இறைவன் ஆடுதலினாலே இக்கூத்து பாண்டரங்கம் என்னும் பெயருடையதாயிற்று என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

காபாலம் என்பது சிவபெருமான் புலித்தோலையுடுத்துக் கொன்றை மலர்மாலை தோளினிலே அசைய, பிரமனது தலையை அகங்கையில் ஏந்தி ஆடிய சைவநெறி ஆடலாகும். அயனது தலையோடாகிய பிரமகபாலத்தைக் கையிலே ஏந்தியாடுதலின் இது காபாலம் என்னும் பெயருடையதாயிற்று.

கொடுகொட்டி, பண்டரங்கம், காபாலம் என்னும் இம் மூன்று சைவநெறி ஆடல்களும் சிவபெருமானால் நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காக அழித்தற் றொழிலை நிகழ்த்தும் காலத்திலும் ஆவணத்தை அடக்கும் நோக்கிலும் சைவத்தின் வீரத்தை நிலை நிறுத்தும் வகையிலும் நிகழ்த்தப்பட்டனவாம்.

சிவநெறியாம் சைவநெறி முதன்மையும் சிறப்பு பெற்று விளங்கிய காலத்திலேயே சிலப்பதிகாரம் தோன்றியதாகக் கருதலாம். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகவே சைவநெறி இலக்கியங்களில் சிவனைக் குறிக்கும் பல பெயர்களை சமணசமய அருகக்கடவுளுக்குரியதாகச் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் அருகக் கடவுளின் பெயர்கள் கீழ் வருமாறு பட்டியல் இடப்பட்டுள்ளது. இப்பெயர்கள் சிலப்பதிகாரத்தில்,

அறியவன் அறவோன் அறிவு வரம்பு இகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணம் புலவன்
சினவரன் தேவன் சிவகதிநாயகன்
பரமன் குணவரதன் பரத்தில் ஒளியோன்
தத்துவம் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழ்ஒளி
இறைவன் குமரன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணம்பெறுங்கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கியம் பயந்தோன் அருகன் அருண்முனி
பண்ணவன் எண்குணன் பரத்தில் பழம் பொருள்
விண்ணவன் வேதமுதல்வன் விளங்கு ஒளி[19]

என வருகின்றது.

இப் பெயர்களைக் கூர்ந்து நோக்கும்போது சைவத் திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் சிவனைக் குறித்துப் பயின்று வரும் பல பெயர்கள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருப்பது நன்கு புலப்படுகிறது. இப்பெயர்ப் பட்டியலில் வரும் புனிதன், புராணன்,புலவன்,தேவன், சிவகதிநாயகன், தத்துவன், பரமன், இறைவன், குமரன், எங்கோன், சங்கரன், ஈசன், சயம்பு , பழம்பொருள், எண்குணன், விண்ணவன், வேதமுதல்வன் ஆகிய பெயர்கள் சிவனுக்குரியவை. அவைதிக சமயமான சமணம் அருகனை வேதமுதல்வன் என்று குறிப்பிடுவது வியப்பைத் தருகிறது.

இளங்கோவடிகள் ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும் என்று முறையே சூரியக்கடவுளையும் சந்திரக்கடவுளையும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுவது அக்காலத்தில் சைவம் மேவிய சிறப்பையே சுட்டி நிற்பதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். பழங்கால மக்கள் ஞாயிற்றுக் கடவுளைக் குறித்து வழங்கிய பெயர்களுள் சிவன், எல் என்னும் பெயர்கள் மிகவும் பழமையுடையன என்று அறிஞர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. சைவம் போற்றும் சிவசக்தி நிலையைச் சுட்டும் இலிங்க வணக்கத்தின் ஆரம்பம் ஞாயிறு, திங்கள் வணக்கங்களே என்று கூறலாம்.

முடிவுரை

செந்தமிழ் மொழியிலுள்ள பண்டைத் தமிழ்க் காப்பியங்களுள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மாட்சிமை வாய்ந்ததாகத் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் ஒரு சமணசமய இலக்கியமாக விளங்குகின்றபோதும் சமய சமரசமும் சமயப் பொதுநோக்கும் இவ்விலக்கியத்தின் தனிச்சிறப்புக்களாகவுள்ளன. சமண சமய இலக்கியம் படைத்த இளங்கோ அடிகளை சைவச்சான்றோர் வரிசையிலும் கொள்ள முடியும். சிலப்பதிகார காலத்தில் சிவநெறி சிறந்து விளங்கியதை, அக்காலத்தில் சிவவழிபாட்டுக்கெனச் சிவன்கோயில் முதன்மைச் சிறப்புடன் அமைக்கப் பட்டிருந்ததால் அறியமுடிகின்றது. சைவசமயிகள் முத்திநெறியைச் சுட்டுவதற்குப் பயன் படுத்தும் சிவகதி என்னும் சொல்லையே சமணசமயத்தினரும் சிலப்பதிகார காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். இது அக்காலத்தில் சிவநெறிக் கொள்கை செல்வாக்குப் பெற்று விளங்கியதைப் புலப்படுத்துவதாகவுள்ளது. சிவனையும் சக்தியையும் பிரிவின்றி ஒருவராகப் பார்க்கும் சைவசித்தாந்த நெறியின் தொன்மைக் கருத்துக்கள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. இதன் காரணமாகவே சிவனின் தெய்வீக வரலாற்றுச் செய்திகள் பல சக்திக்கும் உரியவையாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. சிவநெறியின் பெருமையைச் சுட்டவே சிலப்பதிகாரம் சிவனை, பெரியோன் என்று குறிப்பிடுகின்றது. சைவம், அரச ஆதரவு பெற்ற சமய நெறியாக சிலப்பதிகார காலத்தில் விளங்கியது. சிவநெறியைச் சிறப்பிக்கும் ஐந்தெழுத்து மந்திரம், சிவசின்னமாகிய திருவெண்ணீறு, சிவசக்தியை இணைக்கும் அர்த்தநாரீஸ்வர வடிவம் என்பன பற்றிய அரிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் உள்ளன. சிவனை நடமாடும் கடவுளாகச் சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது. இந்நூல் கூறும் கொடுகொட்டி, பாண்டரங்கம் என்னும் சைவ ஆடல்கள் அக்கால சைவ நெறியைச் சிறப்பிக்கின்றன. சிலப்பதிகாரத்தில் அருகக்கடவுளுக்குரியதாக கூறும் சிவகதிநாயகன், பரமன், இறைவன், எங்கோன், சங்கரன், ஈசன், எண்குணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெயர்கள் சிவனுக்குரியவை என்பது தெளிவு . அக்காலத்தில் நிலவிய சித்தாந்த சைவநெறி மாட்சியை இப் பெயர்கள் புலப்படுத்துகின்றன. சிலப்பதிகார கால சிவ வழிபாட்டில் சக்தி , முருகன், ஞாயிறு என்போரின் வழிபாடுகளும் இணைந்து சைவ நெறி மலர்ச்சி பெற்று விளங்கியது. இளங்கோவடிகள் சைவ நெறியின் பெருமைகளைத் தானே நேரடியாகவும், கதை மாந்தரூடாகவும் புலப்படுத்துகின்றார். சிலப்பகாரகால இந்துசமய நெறிகளுள் சிவநெறியாகிய சைவநெறியே பலவற்றாலும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தமையை சிலப்பதிகாரம் நன்கு உணர்த்தி நிற்கின்றது. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது தமிழ்நாட்டில் பண்டைக்காலத்தில் சிவநெறி எனும் சைவநெறி உயர்ந்து சிறந்து விளங்கியதை நன்கு புலப்டுத்தி நிற்கும் மிகவும் தொன்மையான முதற்தமிழ் முத்தமிழ்க் காப்பியமாக சிலப்பதிகாரம் விளங்குகின்றதெனலாம்.

அடிக்குறிப்புகள்

1. திருவாசகம் கீர்த்தித் திருவகவல், அடி.85. *"ஐயா றதனிற் சைவனாகியும்"*
2. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, 169 – 173.
3. மேலது, மதுரைக்காண்டம், ஊர் காண் காதை, 7 – 10.
4. மேலது, புகார்க் காண்டம், மனையறம்படுத்த காதை, 37 – 41.
5. மேலது, மதுரைக்காண்டம், காடு காண் காதை, 72 – 73.
6. மேலது, வேட்டுவரி 153 – 154.
7. மேலது, 57 – 64.
8. மேலது, வஞ்சிக்காண்டம், கால்கோட்காதை, 57.
9. மேலது, 63 – 67.
10. மேலது, மதுரைக்காண்டம், காடு காண் காதை, 128 – 129.
11. மேலது, வஞ்சிக்காண்டம், நடுகற்காதை, 226 – 227
12. மேலது, மதுரைக்காண்டம், வேட்டுவ வரி, 99.
13. மேலது, 109 – 110.
14. மேலது, நடுகற்காதை 67 – 75.
15. மேலது, வஞ்சிக்காண்டம், கால்கோட் காதை, 98 – 99.
16. மேலது, நடுகற்காதை, 102.
17. மேலது, புகார்க்காண்டம், கடலாடுகாதை, 39 – 43.
18. மேலது, கடலாடு காதை, 44–45.
19. மேலது, நாடுகாண் காதை, 176 – 189.

உசாத்துணை

இளங்கோ அடிகள்,சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ) தமிழ்பல்கலைக்கழக வெளியீடு தஞ்சாவூர்,1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி இலக்கிய மரபில் காரைக்காலம்மையார்

நதிரா. ம

I

"சங்கமருவிய" காலத்தில் ஒப்பீட்டளவில் அரசுருவாக்கம் வளர்ச்சியடைந்த நிலையில் சமூக அதிகாரத்தை மேலும் மையப்படுத்தலுக்கான போக்குக் காணப்பட்டது. இதுகாறும் மதம் நிறுவனமயமாதலின் ஆரம்பநிலையிலும், குறிப்பாக பெருந்தெய்வ வழிபாடு பெருமதமாக வளர்ச்சியுறாத நிலையுமிருந்தது. ஆனால், அரசுருவாக்கம் முனைப்புப் பெற்றபோது பெருந்தெய்வ வழிபாடும் கோயில்களும் அவற்றை முன்னிறுத்துகின்ற அற இலக்கியங்களும் ஏனைய சமூக நிறுவனங்களும் அதிகார மையப்படுத்தலைத் துரிதப்படுத்தின. இதனால் குடும்பம், இல்லறம், ஒழுக்கம், கற்பு, பக்தி ஆகிய சமூக நிறுவனங்களும் கருத்தியல்களும் மேலோங்கின. இந்தப் பின்னணியிலேதான் குடும்பம் என்ற நிறுவனம் இன்றைய அர்த்தத்தில் வளர்ச்சியுறாத சங்ககாலத்து (முழுமையான காதல் உணர்வை வெளிப்படுத்துகின்ற) அகப்பாடல்கள் சங்கமருவிய காலத்தில் ஒப்பீட்டளவிலேனும் எழுதப்படாமையையும் அக்காதல் உணர்வு இறைவனுடனான காதல் உணர்வாக மாற்றம் பெற்று பக்தி இலக்கியமாக வெளிப்படுவதையும் விளங்கிக் கொள்ளமுடியும். அதாவது, மதச்சார்பற்ற அல்லது மதம் பெரிதும் நிறுவனமயப்படாத காலத்தைய அக இலக்கிய மரபின் தொடர்ச்சி பக்தி இலக்கியத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொரு வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இல்லறம், கற்பு, பக்தி, விருந்தோம்பல் போன்ற கதையாடல்கள் குடும்பம், பெருந்தெய்வ வழிபாடு ஆகிய நிறுவனங்களின் தளங்களாக அமைந்தன. சமூக அதிகாரத்தை ஒருங்குபடுத்துவதற்காக பண்பாடு என்ற கட்டமைப்பு மேலும் நுண்ணிய பல கதையாடல்களைத் தோற்றுவித்தது. அரசுகளின் எல்லைகளும் அதிகாரங்களும் துல்லியமாக வரையறுக்கப்பட்டது போல புதிதாகத் தோற்றம் பெற்ற சமூக நிறுவனங்களின் அதிகாரமும் அதிகார அரசியலில் அவற்றின் வகிபாகமும் தெளிவான வரையறைகளை நோக்கி நகர்ந்தன.

அதேபோல சமூக உறவுகளும் தனிநபர் நடத்தைகளும் குடும்பம், குலம் என்பவற்றுக்கிடையிலான உறவுகளும் அவற்றின் அதிகாரங்களும் வரையறுக்கப்பட்டன. இதன் முதன்மையான விளைவாகக் குடும்பம், இல்லறம், விருந்தோம்பல், ஒழுக்கம், கற்பு ஆகியன மேலும் இறுக்கமுடைய கதையாடல்கள் மூலமாக மீறப்பட முடியாத மரபுகளாக உருவாகின. காதலுணர்வு விரும்பத்தகாத விடயமாயிற்று. எனவே சங்ககாலத்தில் நிலவிய மதச்சார்பற்ற செழுமையான அக இலக்கிய மரபு பெருந்தெய்வ பக்தி இலக்கிய மரபுக்குள் உள்வாங்கப்பட்டது.

பக்தியிலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் என்ற வகையில் காரைக்காலம்மையார் பல வழிகளில் முதன்மை பெறுகிறார். அதேவேளை பக்தியிலக்கிய மரபில் அவருக்கு முன்னரோ அல்லது அவரது சமகாலத்திலோ வேறெந்தவொரு பெண் பக்தியிலக்கிய முன்னோடி பற்றிய குறிப்புக்களும் இல்லை. ஒரு பெண்ணெழுத்தாளருக்கு இலக்கிய முன்னோடிகள் இல்லாத நிலையில் இலக்கியப் பிரவேசமும் எழுத்தும் இலகுவானதாக அமைவதில்லை. நான்கு சிறிய பிரபந்தங்களை இயற்றிய அம்மையாரைப் பெரும் புலவர் வரிசையில் வைத்துப் போற்றுவதற்குக் காரணம் இவரது பாடல்களிற் காணப்படும் தனிச்சிறப்புகளாகும். இவர் புதிய யாப்பில் புதிய வடிவங்களையும் கவிதைப் பொருள் மரபில் புதிய உத்திமுறைகளையும் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் பாடிய பிரபந்தங்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பிரபந்தங்களில் அடங்கியுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை நூற்றி நாற்பத்து மூன்றாகும். (அற்.திரு-101, திருவிரட்டை மணி-20, திரு.வா.மூ.திரு-1-11, திருவா.மூ.திரு 2-11)

II

காரைக்காலம்மையார் குறித்த புனைவுகள்:

பக்தியிலக்கிய கர்த்தாக்களின் வாழ்க்கை வரலாறுகள் பெரும்பாலும் ஐதீகங்களையும் புனைவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைவனவாகும். இறையடியார்களின் வாழ்க்கையை சமயம் சார்ந்த நம்பிக்கைகளோடும் சடங்குகளோடும் புனிதமான கதைகளாகவே சமய உலகில் கூறுவது வழக்கம். அந்த வகையில் இவர்களது பிறப்பு, வாழ்க்கை குறித்த கதைகளை மிகுந்த அவதானத்துடன் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே ஐதீகம் சார்ந்த வரலாறுகளையும் பக்தி இலக்கியங்களையும் தூய வரலாற்று ஆவணங்களாகக் கொள்வதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. காரைக்காலம்மையார் பாடல்களை ஆய்வு செய்கின்றபோது அவரது வாழ்க்கைக்கும் படைப்புகளுக்குமிடையிலான தொடர்பை அறிந்து கொள்வதற்கு இவை தடையாக அமைகின்றன. எனினும் இப்புனைவுகளும் ஐதீகங்களும் தோற்றுவிக்கும் தடைகளுக்கு அப்பாலும் இவர் மொழி ரீதியாகவும் உருவ, உள்ளடக்க ரீதியாகவும் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன. எனவே, புராணங்களும் வாழ்க்கை வரலாறுகளும் குறிப்பிடும் ஐதீகங்கள் புனைவுகளிலிருந்து விடுபட்டு யதார்த்தமான பால்நிலை அனுபவங்களூடு வாழ்ந்த பெண் படைப்பாளியாக இவரை அணுகவேண்டிய தேவையுள்ளது.

அம்மையாரது வாழ்க்கை வரலாறு:

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான அம்மையாரின் வரலாற்றினை முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஆதாரமாக அமைவது சேக்கிழாரது பெரியபுராணமாகும். இந்நூலில் ஐந்தாவது சருக்கமான திருநின்ற சருக்கத்தில் நான்காவது புராணமாக அமைவது காரைக்கால் அம்மையார் புராணமாகும். இதில் அம்மையாரது வரலாற்றினை அறுபத்தாறு பாடல்களில் சேக்கிழார் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சேக்கிழார் அம்மையார் வரலாற்றைப் பாடுவதற்கு அடிப்படையாக அமைந்தவை சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆகும். இவற்றை விட சேக்கிழார் அம்மையாரது பாடல்களையும் தம்காலத்தில் மக்களிடையே செவிவழியாக வழங்கப்பட்டு வந்த செய்திகளையும் ஏனைய சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளார் என்பது புலனாகிறது.

2. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் அம்மையாரைக் குறிப்பிடும் பெயர் "காரைக்காலம்மை" என்பதாகும். இதனைக் 'காரைக்காலம்மை பெருமை கூறுவாம்' (பெ.பு: 1716)என்ற அவரது கூற்றால் அறிய முடிகின்றது.

3. அம்மையார் தம்மைக் 'காரைக்காற்பேய்' என்று தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியிலும், திரு.மூ.திருப்பதிகங்களிலும் கூறியுள்ளார். இவற்றை அடிப்படையாகக் கொண்டே சேக்கிழாரும் அம்மையார் பேய்வடிவு வேண்டிப் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். எ-டு:

காரைக்காற்பேய் செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்ப மெய்து வாரே (தி.மூ.திரு. 1)

காரைக்காற்பேய் தன் பாடல் பத்தும்
பாடியாடப் பாவ நாசமே (தி.மூ. திரு – 2)

காரைக்காற்பேய் சொற்பரவுவார் ஆராத அன்பினொடு
அண்ணலைச் சென்றேத்துவார் பேராத காதல் பிறந்து
(அந்.திரு:பாடல் 101)

செடிதலைக் காரைக் காற்பேய் (திரு.மூ.திரு : 1-11)

காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற்பேய் (திரு.மூ.திரு : 2-11)

பேயாய நற்கணத்திலொன்றாய நாம் (அந். திரு:86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சுந்தரமூர்த்தி நாயனாரே முதன்முதலில் காரைக்காலம்மையாரைப் 'பேயார்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். ஆனால் "பேயார்க்கும் அடியேன்" என்ற ஒரு தொடரினூடாக அம்மையார் பற்றிய எந்தச் செய்தியையும் முழுமையாகப் பெற முடியாதுள்ளது. அம்மையாரது பாடல்களைக் கருத்திற் கொண்டே சுந்தரர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

இது தொடர்பான வேலுப்பிள்ளையவர்களின் பின்வரும் கூற்றை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

பெரிய புராணம் கூறும் நாயன்மார் வாழ்க்கைச் சம்பவங்கள் பல, நாயன்மார் வாழ்க்கையில் நடைபெற்றனவா என்பது பெரிதும் ஐயத்திற்கிடமானது. தேவாரம் பாடிய மூவர் வாழ்க்கைச் சம்பவங்களைப் பொறுத்தவரை அவற்றுள் சில அவர்கள் பாடல்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டுவர் அறிஞர் எனப்படுவார் சிலர். இவ்வாறு சுட்டிக் காட்டப்படும் இடங்களிற் பல வலிந்து பொருள் கொள்ளப்படும் இடங்களாயிருக்கின்றன. சில நிகழ்ச்சிகள் அவர்கள் மானசீக உலகில் நடைபெற அவர்கள் அவற்றை நிதரிசன உலகில் நடந்தன போலப் பாடியிருக்கிறார்கள் எனக் கொள்ளக் கிடக்கிறது. இதற்குதாரணமாகச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரும் தன்னைத் தானே அருட்கவிஞரென அழைத்துக் கொண்டவருமாகிய இராமலிங்க சுவாமிகள் இறைவன் தன்னைக் கற்பழித்ததைப் பற்றிப் பாடுவதைக் கூறலாம். ஆகவே நாயன்மாரின் உண்மை வரலாற்றில் அவர்கள் பாடல்கள் முழுக்க முழுக்கத் தக்க சான்றுகளாகா. (1980 : 176)

5. சேக்கிழாருக்கு முன்னர் அம்மையாரது வரலாற்றைப் பாடிய நம்பி தனது நூலில் இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. வெள்ளை வாரணனார், 'பேயார்'என்பது அம்மையார் விரும்பிப் பெற்ற காரணப் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

பாடலில் காணப்பெறும் சிறப்புத் தொடரால் அப்புலவரை அழைக்கும் வழக்கம் மக்களிடையே நிலவி வந்துள்ளதை செம்புலப் பெயனீரார், அணிலாடு முன்றிலார், கயமனார், விட்ட குதிரையார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனெறிதூண்டிலார் போன்ற சங்க காலப் புலவர்களின் பெயர்களின் மூலம் அறிய முடிகின்றது. அம்மையாரும் பேய்கள் பற்றிய வருணனைகளையும் படிமங்களையும் அதிகம் கையாண்ட காரணத்தினால் பேயார் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

அம்மையார் இறைவனைப், 'பூக்கோல மேனிப் பொடிபூசி என்பனிந்த பேய்க்கோலம்'' கொண்டவராகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இறைவன் சுடலையில் நடனமாடுபவர் என்ற சைவ சமயக் கருத்திற்கேற்ப அந்நடனத்தைக் காண்பதற்கான தனது உருவத்தைக் கற்பனை செய்து என்புடம்பாலான ஒரு பேயாகத் தன்னை உருவகித்துப் பாடியிருக்கலாம்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக்காலோர் பெண்பேய் (திரு.மூ.திரு.:1)

என்றும்,

மற்றொருகண் நெற்றி மேல் வைத்தார்
தன் பேயாய நற்கணத்திலொன்றாய நாம்.
(அற். திரு:86)

என்றும் குறிப்பிடுகின்றார்.

அம்மையாரது பாடல்களிலிருந்து அவரைப் பற்றிப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்கள் மிகக் குறைவானவையாகும். அம்மையார் கயிலை சென்றது, இறைவன் அவரை அம்மையே என்றழைத்தது ஆகியவற்றிற்கு அவர் பாடல்களில் அகச்சான்றுகள் இல்லை. ஆனால் நம்பியும் சேக்கிழாரும் இச்செய்திகளைக் கூறியுள்ளனர். இதற்குச் சான்றாக அமையும் பின்வரும் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன.

1. சேக்கிழார் இவ்வாறு கூறுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தவை அம்மையாரது இறைவனது நடனத்தைப் பற்றிப் பாடும்பாடல் கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கி.பி. 9-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டில் படைக்கப்பெற்ற) நடராசர் திருமேனிகளில் ஆனந்த நடனத்தின் அடியில் எலும்புபோர்த்த பேயுருவாக அமர்ந்து பாடிக்கொண்டிருக்கும் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளுமாகும்.

(வேதாசலம்.வெ,1989:95)

2. கி.பி.9ம் நூற்றாண்டிலிருந்தே சிவனது நடனத்திற்குக் கீழே பேய்வடிவில் எலும்புபோர்த்த உடம்போடு அமர்ந்து இருகரங்களால் தாளமிட்டுப் பாடும் நிலையில் காரைக்காலம்மையாரின் உருவங்கள் காணப்படுகின்றன. (வேதாசலம்.வெ,1989:95)

3. சேக்கிழார் பெரியபுராணம் எழுதுவதற்கு முன்னர் (கி.பி.12ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்) கம்போடியாவில் பெண்டசிராய் என்ற இடத்திற் காணப்பட்ட ஓவியம் ஒன்றில் தென்னாட்டு நடராஜ வடிவத்தின் இடப்புறம் ஊர்த்துவ வடிவை உடைய ஒரு குழலை ஒருவர் வாசிக்க வலப்புறம் பேய்வடிவில் காரைக்காலம்மையார் அமர்ந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது.(திருநாவுக்கரசு, க.த:201)

இச்சான்றுகளும் அம்மையாருக்குப் பேயார் என்ற பெயர் பிற்காலத்திலேயே பெருவழக்காக ஆகிவிட்டமையை உணர்த்துகின்றன.

மேலும், மாங்கனி பெற்ற நிகழ்ச்சிக்கான அகச்சான்று அம்மையார் பாடல்களிலோ தேவாரப் பாடல்களிலோ, நம்பியின் பாடல்களிலோ, பிற நாட்டார் குறிப்புக்களிலோ காணப் பெறவில்லை. அப்படியிருக்க அம்மையார் பெற்ற பேய் உருவத்திற்கு ஒரு காரணம் கற்பிக்கக் கருதியே தாம்பாடிய காரைக்காலம்மையார் புராணத்தில் பொருத்தமாக இக்கதையைச் சேக்கிழார் புனைந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இதற்கு வலுச்சேர்ப்பதாக, பின்வரும் கருத்து அமைகிறது.அம்மையார் வரலாற்றிற்கும் வடநாட்டில் இருந்த இயக்கி அம்பிகாவின் வரலாற்றிற்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதாக வேதாசலம் குறிப்பிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் வரலாற்றிற்கும் வடநாட்டில் இருந்த இயக்கி அம்பிகாவின் வரலாற்றிற்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதை அவதானிக்கலாம். இருவரும் இல்லற வாழ்வில் ஈடுபட்டுப் பின்னர் துறவறத்தை மேற்கொண்டவர்கள். இருவரும் இறையடியாருக்கு உணவிட்டதன் மூலம் தம் இல்வாழ்க்கையை இழந்தவர்கள் தாம் பெற்ற தெய்வீகச் சக்தி காரணமாகவே கணவனால் ஒதுக்கப்பட்டவர்கள். சேக்கிழார், அம்மையார் வரலாற்றைச் சமண சமய இயக்கி அம்பிகாவின் வரலாற்றை அடியொற்றிப் புனைந்திருக்கலாம். ஏனெனில் இயக்கி அம்பிகாவின் வழிபாடு அம்மையாரின் காலத்திற்கு முன்பே வடநாட்டில் எழுந்து தமிழ் நாட்டிற் புகுந்த வழிபாடாகும். தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் காணப்படும் சிற்பச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது அம்மையாரின் சிற்பங்களைவிட இயக்கி அம்பிகாவின் சிற்பங்கள் காலத்தாற் பழமையானவையாக விளங்குகின்றன. இயக்கி அம்பிகாவின் வரலாற்றைக் கூறும் திரிசஷ்டிசலாகா புருச சரித்திரமும் பெரிய புராணத்திற்கு முன்னர் எழுந்த நூலாகும். அம்பிகாவின் உருவத்தினைப் படைக்கும் போது மூன்று மாங்கனிகளுள்ள மாங்கொத்து ஒன்றினை அவள் ஏந்தியிருப்பது போன்று படைத்துள்ளனர். இதனைக் கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆறகளுரில் கிடைத்த இயக்கி அம்பிகாவின் உருவத்தின் மூலம் அறியலாம். இம்மூன்று மாங்கனிகளே சேக்கிழாருக்குக் காரைக்காலம்மையார் சைவ அடியாருக்கு மாங்கனி அளித்த வரலாற்றைப் புனைவதற்குரிய அடிப்படைகளில் ஒன்றாக அமைந்திருக்க வேண்டும். (1989: 98- 99)

சேக்கிழார் சோழப் பேரரசின் அமைச்சராக இருந்தமையினால் பல இடங்களுக்குச் சென்றிருக்க வாய்ப்புண்டு. இதனால் அம்மையாரின் வரலாறு பற்றிய செவிவழிச் செய்திகளையும் சிற்ப, ஓவியச் சான்றுகளையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பிருந்திருக்கலாம். இதனால் இத்தகவல்கள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டே அம்மையார் வரலாற்றையும் புனைந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III

திருமுறைத் தொகுப்பும் அம்மையாரது இடமும்:

தமிழ்ப்பக்தி இலக்கிய மரபில் அம்மையாருக்குக் கொடுக்கப்பட்ட இடம் எத்தகையது என்பது முக்கியமானது. சைவத் திருமுறைகளையும் வைணவப் பிரபந்தங்களையும் இன்று கிடைக்கும் வடிவில் தொகுத்தவர்கள் முறையே நம்பியாண்டார் நம்பியும் நாதமுனிகளும் ஆவர். அவற்றுள் திருவாலவுடையார் முதல் நம்பியாண்டார்நம்பி ஈறாகப் பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் பதினொராம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

பன்னிரு திருமுறைகளையும் ஆசிரியர் வாரியாக நோக்குகின்ற போது ஒன்பதாம் திருமுறையும், பதினொராந் திருமுறையும் மட்டுமே பலர் பாடிய பாடல்களைக் கொண்டு தொகுக்கப் பெற்றுள்ளன. பதினொராந் திருமுறையுள் காரைக்காலம்மமையார்(4) உட்பட திருவாலவுடையார்(1), ஐயடிகள் காடவர்கோன் (3), நக்கீரதேவர்(10), கல்லாட தேவர் (1), கபில தேவர் (3), பரண தேவர் (1), இளம் பெருமானடிகள் (1), அதிராவடிகள் (1), திருவெண்காடர் (5), நம்பியாண்டார் நம்பி (10), முதலான பன்னிருவர் பாடிய நாற்பத்தியொரு பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன. வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த பலரின் பாடல்கள் இத்திருமுறைகளில் இடம் பெறுவதாலும், பல குழப்பங்களுக்கு இடமளிப்பதாலும் ஒன்பதாம், பதினொராம் திருமுறைகள் நம்பியால் தொகுக்கப்பெறவில்லை என அ.ச.ஞானசம்பந்தன் கூறுகின்றார். (1985: 203 – 208)

திருமுறைகளின் தொகுப்புமுறையைக் கவனிக்கின்ற போது, இவற்றைத் தொகுத்ததில் பொருத்தமான முறை பின்பற்றப்பெறவில்லை என்பது தெரிகிறது. பாடல்களின் தொகை அளவினைக் கருத்திற்கொண்டும் இவை தொகுக்கப்பெறவில்லை. ஏனெனில் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமூலரது திருமந்திரம் முதல்மூன்று திருமுறைகளுக்குள் அடக்கப்படாமல் பத்தாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது.

இத்தொகுப்பினை அடிப்படையாகக்கொண்டு பார்க்கின்றபோது இவை கால அடிப்படையில் வகுக்கப்படவில்லை என்பது புலனாகினறது. நாயன்மார்களுள் காலத்தால் முற்பட்டவரான காரைக்காலம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் முதலாந் திருமுறையுள் அடக்கப்படாமல் பதினொராந் திருமுறையுள் உள்ளடக்கப் பட்டிருப்பதும் சுந்தரருக்கு முற்பட்டவர்களான திருமூலர், நக்கீரர் போன்றோரின் பாடல்கள் முறையே, பத்தாம், பதினொராந் திருமுறையில் இடம் பெற்றிருப்பதும் இதனை உறுதி செய்கின்றது. நட்டபாடை, இந்தளம் ஆகிய இருபண்களில் அமைந்த மூத்த திருப்பதிகங்களைப் பாடிய அம்மையார் பதினொராந் திருமுறையுள் உள்ளடக்கப்பெற்றிருப்பது சிந்தித்தற்குரியதாகும். 'காரைக்காலம்மையார் தென்னிந்திய இசையின் தாய்' என்ற நூலில் ஞானாம்பிகை கூறும் கருத்து குறிப்பிடத்தக்கது.

> *தென்னிந்திய இசைவரலாற்றில் சிறப்புற இனங்காணப்படும் இயலிசைப் பேரறிஞர்க்கெல்லாம் காலத்தால் மூத்தவர் காரைக்காலம்மையார்.... அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றுள் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் இனிய பண்களில் பாடப்பெற்ற இசைப்பாடல்களாகும். ' கொங்கை திரங்கி' என்ற முதற் குறிப்புடைய மூத்த திருப்பதிகம் நைவளம் எனும் நட்டபாடைப் பண்ணிலும் எட்டியிலவம்' எனத் தொடங்கும் இரண்டாவது மூத்த திருப்பதிகம் இந்தளப் பண்ணிலும் அமைந்தவை.... அம்மையார் எடுத்துக் கொடுத்த இத்தளப்பண்ணாகிய மாயாமாளவகௌளை இராகமும் தென்னிந்திய இசை வரலாற்றில் இன்றளவும் மிகச் சிறந்த இடத்தை வகித்து வருகிறது. (2-12)*

இசை வரலாற்றில் அம்மையாருக்கு முக்கியத்துவம் இருப்பது போலவே காபாலிக சைவ மரபை முன்னிறுத்தப் பாடியமுறையிலும் மூவர் முதலானோருக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம் என்பவற்றில் முன்னைய இரண்டிலும் அம்மையார் பற்றிய சிறுகுறிப்புகளே உள்ளன. சேக்கிழார் ஒப்பீட்டளவில் அதிக பாடல்களில் குறிப்பிடுகின்றபோதும் அவருடைய வாழ்வின் முக்கிய திருப்புமுனைகளாக அற்புதங்களாக இரு சம்பவங்களை மட்டுமே முன்னிறுத்துகின்றார். சமயத்துக்குள் நுழையும் பெண் குடும்ப வாழ்விலிருந்து விலகவேண்டும் என்பதற்கான கதையும், அவர் பெண்ணாக இருந்துகொண்டு மதப்பணியை செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதென்பதால் (அக்காலக் கருத்தியலின்படி) அவர் பேய்வடிவம் பெற்ற கதையும் மட்டுமே சேக்கிழாரின் கதைப்புனைவில் முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே, காலத்தால் முந்தியவரும், இசையில் வல்லவரும், அந்தாதி முறையை அறிமுகப்படுத்தியவருமான அம்மையார் இலக்கிய வரலாற்றில் பிரக்ஞைபூர்வமாகப் பின்தள்ளப்பட்டமை புலனாகிறது. இதற்கு அவருடைய சாதியும், பால்நிலையும் காரணமாக அமைந்திருக்கின்றன என்பதை உணர முடிகின்றது. ஏனெனில் நாவுக்கரசர் வேளாளராகவும் ஏனைய மூவரும் பிராமணர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அம்மையார் வாணிப குலத்தைச் சேர்ந்த பெண் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அம்மையார் இலக்கிய வரலாற்றில் புறந்தள்ளப்பட்டமைக்கு மற்றுமொரு முக்கிய காரணம் உண்டு. அம்மையாரது காலத்தைய சமய அரசியல் சூழல்களுக்கும் சம்பந்தரிலிருந்து சேக்கிழார் வரையானோரின் சமய, அரசியல் சூழல்களுக்குமிடையிலான பெரிய இடைவெளியே இதற்குக் காரணமாகும்.

சம்பந்தருக்கும் சேக்கிழாருக்கும் இடைப்பட்ட காலத்தின் முக்கிய சமய, மொழி மற்றும் அரசியல் போக்குகளுக்கும் திருமுறைகள் தொகுக்கப்பட்டுள்ள கருத்தியலுக்கும் நெருக்கமுள்ளதை அவதானிக்க முடிகின்றது. சமண, பௌத்த எதிர்ப்பு, வடமொழிகளுக்கு எதிராகத் தமிழை முதன்மைப்படுத்தியமை, அரசுருவாக்கப் போக்கில் தென்னாடென்ற எண்ணக்கருவின் தோற்றம், இவற்றுக்கெல்லாம் அடிப்படையான சைவ மதக்கோட்பாட்டடிப்படையிலான அரசுருவாக்கம் என்ற பண்பாட்டரசியற் பின்புலத்திலே் தான் மூவர் முன்னிறுத்தப் பட்டமையை விளங்கிக் கொள்ள முடியும்.

அம்மையார் காலத்தில் சமண, பௌத்த எதிர்ப்பு இருந்த போதிலும் (அரசு, மத, அதிகார உருவாக்கத்தில் எப்பொழுதும் ஆண்கள் துணை நிற்பதைப் போலன்றி) அவற்றினின்றும் விலகி, அம்மையார் சமய சகிப்புத் தன்மையுடையவராகப் பாடல்களைப் புனைந்துள்ளார். அதாவது, சேக்கிழார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் மேலோங்கி இருந்த சமண, பௌத்த எதிர்ப்பும் சமயத்தின், மொழியின் காவலா் என்ற தோரணையும் அம்மையாரின் பாடல்களில் இல்லாமையும் அவரது பால்நிலையுமே நம்பி, சேக்கிழாா் ஆகியோரும் பிற்பட்ட ஆய்வாளா்களும், அவரை முதன்மைப்படுத்தாமைக்கான காரணங்களாகும் என நாம் கொள்ள இடமுண்டு.

IV

காரைக்காலம்மையாரது இலக்கிய வெளிப்பாடு

காரைக்காலம்மையாா் பக்தி இலக்கியம் தொடா்பான சமகாலக் கதையாடல்களை இரண்டு வழிகளில் தனது தனித்துவமான இலக்கிய வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்துகின்றாா்.

1. வைதீகமரபு முனைப்புப் பெற்ற காலத்தில் சங்க கால அகமரபை பக்தி இலக்கியத்தில் அறிமுகப்படுத்தியமை.
2. பக்தி இலக்கிய மரபில் வேறெவரும் (முழுஅளவில்) வெளிப்படுத்தாத காபாலிக மரபைப் பிரதான பக்தி நெறியாகக் கொண்டு பாடல்களினூடாக முன்னிறுத்தியமை.

1. பெண்மைய உள, உணர்வுத் தளத்தில் பக்தியை வெளிப்படுத்தல்

(i) **அகமரபு:**

ஆரம்பகால பக்தியிலக்கிய கா்த்தாக்களில் மதக் கதையாடலுக்குள் அகமரபு சாா்ந்த உத்திகளை முதன் முதலில் புகுத்தியவா் காரைக்காலம்மையாா் ஆவாா். இறைவனை மீமனித நிலையில் பாா்க்காமல் மனித நிலைக்குக் கொண்டு வந்து (நாயக, நாயகி பாவத்தில்) பாடல்களைப் புனைந்துள்ளாா். பிற்காலத்தில் ஆண்டாள், நம்மாழ்வாா், மணிவாசகா் ஆகியோா் நாயக, நாயகி பாவத்தைப் பயன்படுத்திய அளவுக்கு அம்மையாா் பயன்படுத்தவில்லை. இறைவனுடைய பெருமைகளை, அற்புதங்களைக் கூறும்பொழுது மனிதநிலைப்படுத்தியும் அவா் மீதான அன்பை வெளிப்படுத்தும் பொழுது மனிதா்களுக்கிடையிலான உறவு நிலையிலும் அம்மையாா் பாடல்களில் பயன்படுத்தியுள்ளாா்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம்

பிறந்துமொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் (அ.தி. 1)

கைம்மா அரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயினேன். (அ.தி. 7)
எனக்கினிய எம்மானை ஈசனை யான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன்.................... (அ.தி. 10)

ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சின் உள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. (அ.தி. 96)

அன்றுந் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின் உருவம் ஏது. (அ.தி. 61)

(ii) காரைக்காலம்மையார் பாவனை நிலையிலன்றித் தான் ஒரு பெண்ணாகவே நின்று பாடல்களைப் புனைந்துள்ளமையால் பெண்ணுணர்வினைப் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்துவதைக் காணலாம். இறைவன் மீதான காதலுணர்வு மட்டுமன்றி அவர் அணிந்திருக்கும் பிறையைப் பிள்ளையாகப் பாவித்துத் தன் தாய்மை உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். இறைவன் கழுத்திலிருக்கும் அரவு, பிள்ளை மதியை விழுங்கி விடுமென்றும், பிள்ளை மதி அரவைப் பார்த்து அஞ்சி வளர்ச்சி குன்றிவிடுமென்றும் தன் தாய்மை உணர்வை வெளிப்படுத்துகின்றார்.எ-டு: பிள்ளைப் பிறையின் (அ.தி :32), அஞ்சிவளருமோ பிள்ளை மதி (அ.தி 42), பிறைக்கொழுந்தை நோக்கும்.... மதியொன்றில்லாத அரா (அ.தி. 48), அக்குழவித் திங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) இதேபோல இறைவனை மனிதநிலைப்படுத்தி உமையவள் அஞ்சுமாறு நடந்துகொள்ள வேண்டாமென்று அறிவுறுத்துகின்றார். எ-டு:

அரவமொன்று ஆகத்து நீயந்து பூணேல்
..
பொன்னாரம் மற்றொன்று பூண்
(அ.தி.:27)

.... கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்தேக வேண்டா – கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு (அ.தி:.51)

(iv) சிவன் பிச்சைக்குச் செல்லும் போது அரவத்தை விடுத்துச் செல்லுமாறும் அதனைக் கண்டால் பெண்கள் அஞ்சிப் பிச்சையிடமாட்டார்கள் என்றும் அம்மையார் அறிவுரை செய்கின்றார்.

எ-டு:

..
தீய அரவொழியச் செல்கண்டாய்- தூர
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி (அ.தி.:57)

காரைக்காலம்மையார் தனது சமகாலத்து வைதீகம் சார்ந்த மதக் கதையாடலை பெண்நிலைநின்று மனித உறவுக் கதையாடலாக மீள்கட்டமைக்கின்றார். இறைவனை மனிதநிலைப்படுத்தியும் சங்ககால அகமரபினை பக்தி இலக்கியத்தினுள் புகுத்திக் காதல் உணர்வைப் பக்தி உணர்வாகப் புனைந்தும் காரைக்காலம்மையார் கதையாடல் மீள்கட்டமைப்பை நிகழ்த்துகின்றார். சங்ககால அகமரபிற்கும் ஆண்டாளின் தனிச்சிறப்பு மிக்க பெண்ணுணர்வு வெளிப்பாட்டுக்கும் இடையே அம்மையாரே தொடுபாலமாக விளங்குகிறார்: தொடர்ச்சியைப் பேணுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புலமும் பொழுதும் - மாற்றுக் கதையாடலாக காபாலிகத்தை முன்னிறுத்தியமை

சமகாலத்து மதக் கதையாடல் மரபை மீள்கட்டமைப்பதற்குக் காரைக்காலம்மையார் மற்றுமோர் முக்கியமான உத்தியைக் கையாள்கின்றார். சைவ வழிபாட்டில் ஒரு பிரிவாகிய காபாலிக மரபைத் திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகப் பாடல்களூடாக முதன்மைப் படுத்துகின்றார்.

காரைக்கால் அம்மையார் காபாலிகத்தைப் போற்றிப் பின்பற்றியதென்பது சமகாலச் சமூக மரபுகளுக்கெதிரான, குறிப்பாக, நிலவுடமை, அரசதிகாரம், குடும்பம், ஆணதிகாரத்துவம், சமூகம் முன்னிறுத்துகின்ற (அதிகார) "ஒழுங்குகள்" என்பவற்றிற்கெதிரான தத்துவார்த்த மரபு மீறலே ஆகும். சமகாலத்தைய ஆழ்வார்களும் நாயன்மார்களும் உலகாயதத்தை, இல்லறத்தை மையமாகக் கொண்ட பக்தி மரபை முன்னிறுத்தினர். ஆனால் இதற்கு மாறாக அம்மையார் வழிபடுகின்ற சிவன் பித்தனாக, பேய்களின் தலைவனாக சிததிரிக்கப்படுவது கவனிக்கத்தக்கதாகும். காபாலிக மரபும் அம்மரபு முன்னிறுத்துகின்ற தெய்வ வடிவமும் அவற்றிற்கான புலமாகிய பிணங்களைப் புதைக்கின்ற, எரிக்கின்ற ஈமப்புறங்காடும் காரைக்கால் அம்மையாருடைய பெண் மைய, சமூக எதிர்ப்பு இலக்கிய வெளிப்பாட்டிற்கான தளங்களாக அமைகின்றன. அம்மையார் குடும்ப வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிய அல்லது ஒதுக்கப்பட்ட பிறகே அவர் தீவிர மதச் செயற்பாட்டிலும் பாடல் புனைவிலும் ஈடுபட்டார் என்பது இவ்விடத்தில் முக்கியம் பெறுகிறது. அம்மையாரது பாடல்களின் வழி உதாரணங்களினூடே இக்கருத்தை ஆராய்கின்ற போது அவர் கையாளுகின்ற முதல்- கரு- உரி என்பவற்றைப் பற்றியும் அவை கையாளப்படும் விதம் பற்றியும் விளங்கிக் கொள்ளலாம்.

மொழிப்பயன்பாடு:

அ. இயற்கை/ பண்பாடு - இடுகாட்டின் குறியீட்டு முக்கியத்துவம்:

சங்கப் பாடல்களில் போர்க்களம் சில புறப்பாடல்களில் சித்திரிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் ஈமப்புறங்காடு எந்தவொரு பாடலிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புலமாக அமையவில்லை. அம்மையாரது சமகாலத்திலும் அதற்குப் பின்வரும் ஈமப்புறங்காடு (பரணி இலக்கியம் போன்றவற்றில் வரும் போர்க்களச் சித்திரிப்புத் தவிர) பாடுபொருளாகவோ பின்புலமாகவோ அமையவில்லை.

இலக்கியத்தின் புலம் சார்ந்த மாற்று மரபாக இதனை நாம் கொள்ளலாம். அதிகாரத்திலுள்ளவர்களால் கட்டியமைக்கப்பட்ட பண்பாடும் அவர்கள் வாழிடமும், ஒடுக்குமுறை, பிறழ்வு, விகாரம் என்பவற்றின் குறியீடாகவும் அதற்கு மாறாக (இயற்கை, ஒழுங்கு, சமத்துவம் என்பவற்றின் குறியீடாகவும்) காடு, ஈமப்புறங்காடு, ஆழ்கடல் ஆகிய புலங்கள் முன்வைக்கப்படுகின்றன. உலகின் பல்வேறு மொழிகளிலுள்ள இலக்கியங்களில் பெண்களது அனுபவம், மொழி பற்றிப் பேசுகின்ற போது, சில பொதுவான குறியீடுகள் கையாளப்படுகின்றன. இருள், காடு, ஆழ்கடல் போன்ற படிமங்கள் பெண் எழுத்தாளர்களின் புனை பெயர்களிலும் படைப்புக்களிலும் மற்றும் அவற்றின் தலைப்புக்களிலும் இடம்பெறுவதைக் காணலாம். மூத்த திருப்பதிகத்தில் ஈமப்புறங்காடு பின்புலமாகவும் பாடுபொருளாகவும் அதிகாரப் பண்பாட்டை நிராகரிப்பதன் குறியீடாகவும் பயன்படுத்தப்படுகிறது.

காரைக்காலம்மையார் சங்கமருவிய காலத்தைச்சேர்ந்தவர் என்ற காரணத்தினால் சங்ககாலச் செய்யுள் மரபை அதன் தொடர்ச்சியை நன்கு அறிந்திருக்கிறார். இரட்டைமணிமாலை, அந்தாதி, பதிகம், ஆகிய முக்கியமான யாப்பு வடிவங்களை அறிமுகப்படுத்தியவர் என்ற வகையில் அவர் செய்யுள் மரபைக் கற்றுத் தோய்ந்தவர் என்பது புலனாகிறது. சங்ககாலத் திணை மரபை உள்வாங்கியுள்ள போதும் தனது பெண் அனுபவ வெளிப்பாட்டிற்கேற்ற வகையில் அதைக் கையாண்டுள்ளார். உதாரணமாக செய்யுளில் இடம்பெறும் முதல்,கரு ஆகியவற்றை அவர் கையாண்ட விதம் தனித்துவமானது. ஆனால் அம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தின் இருபத்திரண்டு பாடல்களிலும் ஈமப்புறங்காட்டைப் பின்புலமாக, பாடுபொருளாகக் கையாண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த பாடல்களின் இறுதிவரியில் அல்லது இறுதி இரண்டு மூன்று வரிகளில் மாத்திரமே சிவநடனம் பற்றிய விபரிப்பு இடம்பெறுகின்றது. மிகுதி வரிகள் முதல், கரு ஆகிய சுடுகாட்டையும் இரவுப் பொழுதையும் கொடிய விலங்குகள், பறவைகள், பேய்களையும் அவை பற்றிய சித்திரிப்புக்கள் மற்றும் செயற்பாடுகளையும் பாலை நிலத்துத் தாவரங்களையும் விபரிப்பனவாக உள்ளன. ஈமப்புறங்காடு என்பது இற்றைவரை ஊருக்கு வெளியேயுள்ள இடமாகும். பெரும்பாலும் ஊருக்கு வடபால் மிகத்தொலைவில் மனிதப்புழக்கமற்ற இடத்தில் ஈமப்புறங்காடு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரக் கட்டமைப்பும் மரபுகளும் உள்ள சமூகம் என்ற புலத்தைப் புறந்தள்ளி அதற்கு மாற்றீடான புலமாக மனிதர்களைப் பற்றிய எந்தக் குறிப்புமற்ற ஈமப்புறங்காட்டை அம்மையார் முன்னிறுத்துகிறார்.

அம்மையார் தன்னையும் ஒரு பெண் பேயாகவே குறிப்பிடுவது கருத்திற் கொள்ளத்தக்கது. மூத்ததிருப்பதிகத்தின் முதற்பாட்டிலேயே தன்னை 'ஈமப்புறங்காட்டில் தங்கி அலறி உலறுகின்ற' கோர உருவமுடைய பெண் பேயாக அறிமுகம் செய்வது குறிப்பிடத் தக்கதாகும். சமூகத்தின் ஆணதிகாரத்துவ ஒழுங்கிற்கும் அங்கு பெண்ணின் ஒடுக்கப்பட்ட நிலைக்கும் மாற்றீடாக பயங்கரமென நம்பப்படுகிற ஈமப்புறங்காடும் பெண்பேய் உருவும் முன்நிறுத்தப்படுகின்றன.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண் பேய்
தங்கி அலறி உலறுகாட்டில் (தி.மூ.தி: 1)

ஆ. இரவு/ பகல்: பொழுதின் குறியீட்டு முக்கியத்துவம்

மொழியின் இரட்டை எதிர்நிலை ஒழுங்கில் பகல், இரவு என்பன குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்தன. பகல் என்பது புலப்படக்கூடியதும் பகுத்தறிவுக்குட்பட்டதுமாக மாறாக இரவு என்பது புலப்படாத இருண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூனிய வெளியாகவும் எதிரெதிராக முன்னிறுத்தப் படுகின்றன. மூத்த திருப்பதிகத்தில் முதலின் கூறுகளுள் ஒன்றான பொழுது நள்ளிரவுப் பொழுதாகவே குறிப்பிடப்படுகின்றது.

எ.டு:

வாகை விரிந்துவெண்ணெற் றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை யாங்கே
கூகையொ டாண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி (தி..மூ. தி: 3)

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டை படர்ந்து இருள்சூழ் மயானத் தெரிவாய்
- எயிற்றுப்பேய் (தி.கா.மூ.தி: 10)

பாடல்கள் மூலமான அம்மையாரின் தன்னிலை வெளிப்பாட்டில் எடுத்துரைப்பின் முக்கிய கூறாக முதற்பொருள்களான நிலமும் பொழுதும் அம்மையாரால் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பெறுகின்றன.

இ. கருப்பொருள்: அபத்தத்தின் குறியீடு

மேலும் அம்மையார் கையாளுகின்ற கருப்பொருட்களை ஆராய்கின்ற போது அவை சிறந்த படிமங்களாகப் பயன்படுவதைக் காணலாம். திணை மரபைத் தழுவியவையாகவும் அதேவேளை சமூகத்தின் அபத்தங்களைச் சித்திரிப்பனவாகவும் கருப்பொருட்கள் அமைந்துள்ளன.

i. தெய்வம்

கருப்பொருட்களுள் ஒன்றான தெய்வம் கணங்களின் தலைவனாகவும் கோபத்துடன் தாண்டவம் ஆடுகின்ற ருத்திரனாகவும் பாடல்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். சிவன் குடும்பத்தலைவனாகவோ அருள் பாலிப்பவனாகவோ அன்றி "அழல் உமிழ்ந்தோரி கதிக்க ஆடும்..............." (தி.மூ.தி 7)அப்பனாகச் சித்திரிக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த திருப்பதிகத்தில் உமையும் அஞ்சுமாறு கோபத்துடன் சிவன் நடமிடுவதை அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங்காட்டின்
மாயன் ஆட மலையான் மகளும் - மருண்டு நோக்குமே.

(தி.மூ.தி 8)

உலகத்தைக் காத்தருள வேண்டியவராய்க் கொள்ளப்படும் சிவன் முன்னிய பேய்க் கணங்களின் - 8 தலைவனாகச் சுட்டப்பெறுவது முக்கியமானதாகும். அம்மையாரின் பெண்ணிலைநின்ற படைப்பு-உளச்செயற்பாட்டின் வெளிப்பாடாகவும் குடும்பம் சமூகம், பண்பாடு என்பவற்றை நிராகரிக்கின்ற படிமமாகவும் ருத்ர வடிவத்தை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

ii. பேய்க்கணங்கள்

மூத்த திருப்பதிகத்தில் இடம்பெறுகின்ற மற்றுமொரு அம்சம் பல்வேறு வகையான பேய்கள், கணங்கள் பற்றிய படிமங்களாகும். தெய்வம், பேயுருக்கொண்ட அம்மையார் தவிர ஈமப்புறங்காட்டில் பேய்கள், அணங்குகள் என்பன உள்ளன. பேய்களின் செயற்பாடுகள் மூலம் அம்மையார் சமூக விமர்சனக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

iii. தாவரங்கள், விலங்குகள்

கருவின் ஏனைய பிரிவுகளான பறவைகளும், விலங்குகளும் தாவரங்களும் படிமங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. கழுகு, சிறுகூகை, ஆந்தை, போன்ற விலங்குகள், பறவைகள் கள்ளி, வாகை, எட்டி, இலவம் முதலிய தாவரங்கள் படிமங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. திருமண வாழ்விலிருந்து ஒதுங்கிய தன்னைப் பேயெனச் சித்திரிப்பதனால் தம்மைச் சூழவுள்ள அதிகாரத்துவ சமூகத்தையே அம்மையார் மேற்கூறிய விலங்குகள் பறவைகளூடாகப் படிமப்படுத்தியிருகிறார் எனக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் செயற்பாடுகளை வர்ணிக்குமிடத்து அவர் பயன்படுத்துகின்ற வினைச் சொற்கள் உன்னிப்பாக வாசிக்கப்பட வேண்டியவையாகும். பெண்ணின் சுயத்தை மறுக்கின்ற இயற்கை ஒழுங்குக்கு எதிரான சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகளை, அவற்றின் ''ஒழுங்கற்ற'' தன்மையைச் சுட்டுவதாகவே இவ்வினைச் சொற்கள் அமைந்துள்ளன. அத்துடன் பெரும்பாலான வினைச்சொற்கள் சுட்டுகின்ற செயற்பாடுகள் ஒழுங்கற்றவையாகவும் வெளிநோக்கிய அசைவைச் சுட்டுவனவாகவும் அமைந்திருக்கின்றன. அதிகாரத்தின் செயற்பாடு மையத்திலிருந்து விளிம்பை நோக்கியதாகவும் பல சமயங்களில் அபத்தமானதாகவும் உள்ளமையை இவை சுட்டுவ்தாக நாம் கொள்ளலாம்.எ.டு: திரங்கி, நரம்பெழுந்து, பற்கள் நீண்டு, அலறி, உலறு, வீசி, காலை நீட்டி, விள்ள எழுதி, குதித்தோட, கனன்று, குழாமிட்டு, விரவப்பூட்டி, எறிந்து, கத்தி, உறுமி, இசைபாட, மிளிர்ந்த, தாழ.

இவை அனைத்துமே மனித சஞ்சாரமற்ற, சமூகத்திற்கு மாற்றீடான ஒரு புலத்தைச் சுட்டுவனவாகவும் பாடல்களின் திணைக்கோட்பாட்டு மரபு வழிவந்த அழகியலை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. முதல், கரு என்பன நேரடியாகச் சமூகம் சார்ந்ததாக அமையாமல் வேற்றுப் புலமாக சுட்டப்படுவதற்கு கருத்தியல் சார்ந்த முக்கியத்துவம் உள்ளது.

ஈ. ஈமப் புறங்காடு அபத்த நாடக அரங்காக

மூத்ததிருப்பதிகப் பாடல்களில் அரங்கச் செயற்பாட்டுத்தன்மையும் அதில் அம்மையார் பார்வையாளர் நிலையில் தன்னை நிறுவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கன. தாம் சார்ந்த பண்பாட்டின் அதிகாரக் கட்டமைப்புக்களையும் அவற்றின் அபத்தத் தன்மையையும் (absurdity) வெளிக் கொணர்வதற்குரிய மாற்று வெளியாக, அரங்காக ஈமப்புறங்காட்டைக் காரைக்காலம்மையார் பயன்படுத்துவது புலனாகிறது. இருபதாம் நூற்றாண்டின் அபத்த நாடக அரங்கின் பாத்திரங்கள் போலவே பறவைகள், விலங்குகள், பேயக் கணங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. பேராசை, அறியாமை, அவசரம், அர்த்தமற்ற சச்சரவு, சந்தேகம், இரக்கமின்மை, வன்முறை ஆகிய மனிதப்பண்புகள் கொண்டனவாக பேய்க்கணங்கள் சித்திரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பேராசை

குண்டிலோ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்றுபேய்கள்
கையடித்தோடிடு காடரங்கா (1-4)

2. சந்தேகம்

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப
(1-2)

3. பயம்

நக்கு வெருண்டு விலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச் சுட்டிட (1-2)

4. கையறுநிலை

கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணா
தழுதுறங் கும்புறங் காட்டில் (1-5)

5. வறுமை

நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ்சிறுபேய் சிரமப் படுகாட்டின்

6. வன்முறை

புட்கள் பொதுத்த புலால்வெண் டலையைப் புறமே நரிகவ்வ
அட்கென்றழைப்ப ஆந்தைவீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட (2-3)
….. பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித்து ஒக்கலித்துப்
பப்பினை யிட்டு பகண்டையாட…. (1- 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அபத்தச் செயற்பாடுகளின் எடுத்துக் காட்டுக்களை மனிதச் செயற்பாடுகளோடு இணைக்கும் வகையிலும் ஈமப் புறங்காட்டைச் சமூகத்தோடு இணைக்கும் வகையிலும் ஒரேயொரு இடத்தில் மனிதச் செயற்பாடு பற்றி அம்மையார் குறிப்பிடுகிறார்:

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமைசெய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (1-10)

மூத்ததிருப்பதிகங்களில் சித்திரிக்கப்படுகின்ற மேற்கூறிய செயற்பாடுகள் அபத்த நாடக அரங்கில் கையாளப்படுவது போல மனித நடவடிக்கைகள். இலட்சியங்கள், மனித இருப்பு, அதிகாரக்கட்டமைப்பு, அர்த்தமற்ற பண்பாட்டுக் கூறுகள், மனித குணங்கள் (பேராசை, பயம், வன்முறை, சந்தேகம்) என்பவற்றின் அபத்தத் தன்மையை பிறிதொரு தளத்தில் வெளிக் கொணர்பவையாக அமைந்துள்ளன.

V

முடிவுரை:

அம்மையாரின் பாடல்களின் எடுத்துரைப்பு முறையையும் மொழிப் பயன்பாட்டின் தன்மையையும் இரண்டு முக்கியமான, முரண்பட்ட, கருத்தாடல்கள் தீர்மானிக்கின்றன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இருபத்தியிரண்டு பாடல்களும் காபாலிக மரபை முன்னிறுத்துவதால் இறைவன் நடமிடும் சுடுகாட்டை விவரிக்கின்றனவாக அமைகின்றன. திருவிரட்டை மணிமாலை(20), அற்புதத் திருவந்தாதி (101) என்பன அம்மையாரது இறைவன் மீதான காதல் மிகுந்த பக்தி, தாய்மை ஆகிய பெண்ணுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் காபாலிக மரபை முன்னிறுத்துகின்ற முக்கியமான, தனித்த பாடல் தொகுப்பு அம்மையாருடைய மூத்த திருப்பதிகங்களேயாகும். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட்ட வேண்டியது என்னவெனில், கிடைக்கப்பெற்ற திருமுறைத் தொகுப்பினுள், ஆண்கள் எவரும் முழுமையான தொகுப்பாகக் காபாலிக மரபைப் பாடவில்லை என்பதே. அங்கொன்றும் இங்கொன்றுமாக, ஓரிரு பாடல்கள் அல்லது வரிகளில் மட்டுமே காபாலிகத்தை முன்னிறுத்தும் விதத்தில் ஆண்கள் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாகப் பதினோராந் திருமுறையில் இடம்பெறும் கபிலதேவ நாயனாரின் ஒரு பாடலையும், சிலவரிகளையும் குறிப்பிடலாம். (திருவிரட்டைமணிமாலை பேய்ச்சுற்றம்: 36) காபாலிக மரபையொட்டி ஆண்கள் அதிகம் எழுதவில்லையென்பது ஒருபுறமிருக்க, பெண்களுக்கெனப் பண்பாட்டு ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட மென்மை, அச்சம் என்ற குணங்களை நிராகரிக்கின்ற வகையில் அம்மையார், சுடுகாட்டுப் பின்புலத்தை அச்சமூட்டுகின்ற படிமங்களினூடு சித்திரித்திருப்பது உருவம் மற்றும் உள்ளீடு சார்ந்த மரபு மீறலாகும்.

காபாலிகம் முன்னிறுத்துகின்ற இறைவனின் மயான ஆடலைத் தவிர இப்பாடலில் வரும் சித்திரிப்புக்கள் அம்மையாரின் படைப்புத் தனித்துவங்களாகக் கொள்ளப்பட வேண்டியவை. குறிப்பாகப் பாடல்களில் பயன்படுத்தப்பெறும் கரு, மண் சார்ந்ததாக அமைவது அம்மையார் தம்மையும் அப்பேய்களுள் ஒன்றாகக் கூறுவது அவற்றைப் பிணம் தின்பவையாகவும், அதற்காகச் சண்டையிட்டுக் கொள்வனவாகவும் விபரிப்பது ஆகிய கூறுகளை, காபாலிகம் சார்ந்தனவாகக் கொள்வதைவிட அம்மையாரின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தோன்றிய கருத்தியல் மற்றும் கவிதை அழகியலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

உசாத்துணை

1. சேக்கிழார், 1950, திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் வெளியீடு.
2. திருத்தொண்டர் புராணம் (மூலம்), 1991, மணிவிழா வெளியீடு, ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.
3. திருநாவுக்கரசு, க. த. 1987, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பதினொராந் திருமுறை, 1971, கழக வெளியீடு.

5. நம்பியாண்டார் நம்பி, 1986, திருத்தொண்டர் திருவந்தாதி, தருமை ஆதீனம், தருமபுரம்.

6. வெள்ளைவாரணர், க.1969, பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

7. வேலுப்பிள்ளை.ஆ, 1980, தமிழர் சமய வரலாறு, பாரி நிலையம், சென்னை.

8. வேதாசலம், வெ.1989, இயக்கி வழிபாடு, அன்னம் வெளியீடு, சிவகங்கை.

9. ஞானாம்பிகை குலேந்திரன்,1998, காரைக்காலம்மையார் தென்னிந்திய இசையின் தாய், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

10. ஞானசம்பந்தன், அ. ச. 1985, பெரிய புராணம்- ஓர் ஆய்வு, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் மருவியகாலத்திற் சைவம்

விக்கினேஸ்வரி பவநேசன்

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபடும் மரபானது இந்திய மண்ணின் பல்வேறு பாகங்களில் பல ஆயிரம் ஆண்டுகளாக நிலவிவந்த நம்பிக்கைகள் மற்றும் கிரியை முறைமைகள் என்பவற்றின் தொகுநிலை ஆகும். இந்த நம்பிக்கைகள் மற்றும் கிரியை முறைமைகள் மாந்தரின் மனப்பக்குவங்களுக்கேற்ப பல்வேறு படித்தரங்களில் அமைந்தவையாகும். இவை ஒன்றோடொன்று இணைந்து பிணைந்து இரசாயன மாற்றங்கள் எய்திய ஒரு நிலைமையின் தோற்றமாகவே சைவம் என்ற சமயம் எமக்குக் காட்சி தருகிறது.[1]

தமிழக வரலாற்றில் கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையான சங்கப்பாடங்களில் சிவன் முக்கட்செல்வன், நீலமணிமிடற்றொருவன், மழுவாள் நெடியோன், ஆல்கெழுகடவுள், காரியுண்டிக் கடவுள் முதலிய பெயர்களிற் சுட்டப்பட்டுள்ளார். அவி சொரிந்து வேள்வி செய்தல் மற்றும் உருவநிலையில் நகர்வலம் செய்தல் முதலிய வழிபாட்டு முறைகளை அக்கால மக்கள் பேணி நின்றமையைப் புறநானூறு முதலிய சங்க நூல்களில் காணமுடிகின்றது.

கி.பி 3 ஆம் நூற்றாண்டு முதல் பல்லவரின் ஆட்சி நிலைபெறும்வரை மக்களின் வாழ்க்கையில் நிரந்தரமான சூழ்நிலை இல்லாமல் வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்குலைந்து விட்டது. இத்தகைய ஒரு சூழலில்தான் இரட்டைக் காப்பியங்களும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும் தோன்றின.

அறநூல் காலத்தில் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் ஆகிய இலக்கியங்களில் காணப்படுகின்ற சைவம் பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறுவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் பிரதான இலக்காகும்.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சிலப்பதிகாரம் சிவனைப் பிறவாயாக்கைப் பெரியோன் என்று குறிப்பிடுகின்றது. சிவனுக்குரிய ஐந்தெழுத்தையும் மாதவி ஆடிய கூத்துவகைகளாகச் சிவன் ஆடிய **கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம்** என்னும் கூத்து வகைகளையும் கூறுகின்றது.[2] மணிமேகலையில் சைவம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. மணிமேகலை சைவவாதியிடம் உன்கடவுளின் தன்மை எத்தகையது? என்று வினவிய போது அவன் என் இறைவன் இருசுடர் இயமானன், ஐம்பூதம் என்ற எட்டினையும் உயிராகவும், உடம்பாகவும் உடையவன், கலைகளை உருவாக உடையவன், உலகங்களையும் உயிர்களையும் படைத்து விளையாடுபவன், அவற்றை அழித்து உயிர்களின் களைப்பை போக்குபவன், தன்னைத்தவிர பெரியோன் ஒருவனைப் பெற்றிராதவன், அவன் ஈசன்[3] என்று பதில் கூறினான். சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டுமே காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த கோயில்களைக் குறிப்பிடும் போது சிவபெருமான் கோயிலையே முதலாவதாகக் கூறித் தொடங்குகின்றன.[4]

சிலப்பதிகாரத்தில் சைவம் பற்றிய கருத்துக்கள்

சிவவழிபாடு எல்லா நிலத்துக்கும் பொதுவாக உரியது. சோழநாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தில்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வஞ்சித்தோன்றிய வானவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அமைக்கும் முகமாக அவ் வேந்தன் சிவபெருமான் திருவருளாற் பிறந்த சிறப்பினைக் கூறுவதனாலும், அவ்வேந்தனை நோக்கி

ஆனேறூர்ந்தோன் அருளினில் தோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன்

என மாடல மறையோன் கூறுதலாலும் செங்குட்டுவனுடைய முன்னோர்களாகிய சேரவேந்தர்களும் அவர்கள் வழியிற் தோன்றிய அவ்வேந்தர் பெருமானும் சிவவழிபாட்டில் சிறந்த பற்றுடையோராய் விளங்கியமை புலனாகின்றது.

வஞ்சிமாநகரத்தையடைந்து செங்குட்டுவன் தன் பட்டத்தரசி இளங்கோவேண்மாளுடன் ஒருங்கு வீற்றிருந்த வேளை கூத்தச்சாக்கையன் என்பவன் சிவபெருமான் ஆடிய கொடுகொட்டி என்னும் கூத்தை ஆடிக்காட்டினான். இச்செய்தியை,

திருநிலைச் சேவடிச் சிலம்பு வாய்புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்கணாயிரந் திருக்குறிப்பருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது சூடகந்துளங்காது
மேகலை யொளியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒரு திறனாக வோங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்

என வரும் தொடரால் இளங்கோவடிகள் விளக்குகின்றார். கொடுகொட்டி ஆடல் சிவபெருமானால் ஆடப்பெற்ற கூத்தாகும். இதன் இயல்பினை இளங்கோவடிகள்,

பாரதியாடிய பாரதியரங்கத்துத்
திரிபுரமெரியத் தேவர் வேண்ட
ஏரிமுகப் பேரம் பேவல்கேட்ப
உமையவள் ஒரு திறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி யாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விடுத்துரைப்பார். திரிபுரத்தை அழித்தற் பொருட்டு இறைவன் வெண்ணீற்றை அணிந்தாடிய கூத்து பாண்டரங்கம் எனப்படும். இதன் இயல்பினை,

தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண்டரங்கம்

என அடிகள் விளக்குவர்.

இங்கு எடுத்துக்காட்டிய பகுதிகளால் சிவபெருமான், பிறவாயாக்கையாகிய அருள் திருமேனியுடையான் என்றும் தேவர் போற்றத் திங்கள் சூடிய செல்வன் என்றும் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் ஆதலின் பெரியோன் என்றும் திருப்பெயருடையான் என்றும் நெற்றிக்கண்ணுடையான் என்றும் உமையை ஒரு பாகத்தில் கொண்ட அம்மையப்பன் என்றும் முருகவேட்குத் தந்தை என்றும் நஞ்சுண்டு கண்டத்தடக்கித் தேவர்களை உய்வித்த பேரருளாளன் என்றும் உமையவள் காண ஆடினான் என்றும் திருக்கையிலையில் வீற்றிருப்பவன் என்றும் இமயமலை உச்சியிலே குயிலாலுவம் என்னுமிடத்தே உமையொருபாகனாகிய சிவபெருமானுக்கு திருக்கோயில் அமைந்ததென்றும் அடிகள் விளக்கிய திறம் குறிப்பிடத்தக்கதாகும்.[5]

மணிமேகலை சுட்டும் சிவநெறிக் கொள்கை

முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரத்துடன் வரலாற்று நிகழ்ச்சியாலும், காப்பியத்தலைவர்களின் உறவாலும், இடவகையாலும், காலத்தாலும் மிகநெருங்கிய தொடர்புடையது மதுரைக்கூலவணிகன் சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலை. சோழநாட்டின் கடற்றுறைப்பட்டினமாகிய புகார் நகரத்தில் மாசாத்துவன் என்பவனது மகன் கோவலனுக்கு ஆடல் பாடல் என்பவற்றால் சிறந்த நாடகக் கணிகைபாற் பிறந்த மகள் மணிமேகலை. இவள் தந்தை மதுரையிற் கொலையுண்ட செய்திகேட்டு வருந்தி, தன்தாய் மாதவியுடன் பௌத்த சமயத்தைச் சார்ந்து துறவுபூண்ட வரலாற்றை இது விரித்துரைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுவகையும் உயிரும் யாக்கையுமாக்
கட்டி நிற்போனும் கலையுருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில்வேறு தானொன்றிலோனும்
அன்னோன் இறைவனாகும் *(மணிமேகலை 27:89–95)*

ஞாயிறு, திங்கள் என்னும் ஆன்மா, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்கள் ஆகிய எண்வகைப் பொருள்களிலும் தான் அவற்றின் உயிர்போன்று ஊடுருவிக் கலந்தும், அவையெல்லாவற்றுக்கும் தானே உடம்பாகக் கலந்தும், அவற்றையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண்டு அவற்றின் மேம்பட விரிந்தும் பிரிவின்றி உலகுயிர்களையும் தனது உருவாக அருட்பண்பினை உடையவன் இறைவன். உலகங்களையெல்லாம் அழித்து ஒடுக்கும் திறத்தால் உயிர்களின் துயரத்தைத் தீர்த்தருளும் உயர்ச்சியை உடையவனும் தன்னையின்றித் தனித்து நிற்கும் பொருள் வேறொன்றும் இல்லையென்னும்படி எல்லாப் பொருட்கும் சார்புள்ளவனும் ஆகிய தன்மையுடையவனே உலகுயிர்களுக்கு இறைவனாவார் என்பது மேற்காட்டிய தொடரின் பொருளாகும்.

சைவ வாதியின் சமயக் கொள்கையினைக் குறிக்க எண்ணிய மணிமேகலை ஆசிரியர் இறைவன் ஈசன் என நின்ற 'சைவவாதி' என அடைமொழி புணர்த்துக் கூறியுள்ளார். இறைவன் – உலகு – உயிர்கள் ஆகிய எல்லாப் பொருள்களிலும் நீக்கமின்றி நிலைத்துள்ளவன் ஈசன். உலகப்பொருள் எல்லாவற்றையும் தனது உடமையாகக் கொண்ட தலைவன் ஈசன் என்னும் பெயர் சிவபெருமான் என்னும் சிறப்புப் பொருளில் அறியப்பெற்றுள்ளது.

சங்கரன், ஈசன், சுயம்பு எனவரும் சிலப்பதிகாரத்தொடரில் சிவனுக்குரிய சங்கரன், ஈசன், சுயம்பு எனவரும் சிறப்புப் பெயர்கள் இறைவன் என்னும் பொதுப் பொருளில் வழங்கப்பெற்றுள்ளன.[6] எனவே இவற்றை நாம் நோக்கினால் சிவவழிபாடு தமிழ்நாட்டில் மக்கள் எல்லோரும் போற்றும் சிறப்பு வழிபாடாகவும் பொதுவழிபாடாகவும் பரவியிருந்தமை புலனாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவவாதிகள் கூற்றிலமைந்த கடவுள் இலக்கணத்தினை நோக்கினால் ஞாயிறு, திங்கள், ஆன்மா, ஐம்பூதம் என்னும் எண்பேருவினனாக (அட்டமூர்த்தியாக) இறைவன் விளங்குந் திறத்தினை,

இருசுடரோடு இமயமானன் ஐம்பூதம் என்று
எட்டுவகையும்
உயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற்போன்

என்ற தொடர் விரித்துரைக்கின்றது. இவ்வாறு எண்வகைப் பொருள்களையும் இறைவன் தனக்குரிய திருமேனிகளாகக் கொண்டு அவற்றுடன் பிரிவின்றி ஒன்றுபட்டு விளங்கும் திறத்தை,

இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி
இயமனாய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாயமாய் அட்ட மூர்த்தியாகி (தேவாரம் 6:91:1)

எனவரும் நின்ற திருத்தாண்டகத்தில் அப்பர் அருளியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். இவ்வாறு இறைவன் அட்டமூர்த்தியாய்த் திகழ்கின்றான். எனவே கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருட் கொள்கை அக்காலச் சைவவாதிக்கு உடன்பாடாதல் நன்கு தெளிவாகின்றது.

காரைக்காலம்மையாரின் பிரபந்தங்கள் சுட்டும் சைவம்

அம்மையார் சம்பந்தரின் காலத்துக்கு முற்பட்டவர் என்ற கருத்தின் அடிப்படையில் அவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டென நம்பப்படுகின்றது. இவரது காலத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே சிவழிபாடு தொன்றுதொட்டு தமிழகத்தில் நிலவிவருவதாகும். [7]

திருவந்தாதியின் முதல் வெண்பாவே சிவபெருமானின் நீலகண்டத்தைக் குறிப்பிடுகிறது.

.... நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிவபெருமானின் செம்மேனியில் திகழும் கரியகண்டத்தைக் குறிப்பிடுகின்றார். மேலும் சிவனின் தோற்ற வருணனையாக இளம்பிறையைச் சூடியிருத்தல்[8] கையில் அனல் ஏந்தியிருத்தல்[9] யானைத் தோல் தரித்திருத்தல்[10] நெற்றிக்கண் உடையவனாக விளங்குதல்[11] பாம்பை அணிந்திருந்தல்[12] செஞ்சடையுடையவனாக விளங்குதல்[13] பலியேற்றுத் திரிதல்[14] திருநீறுபூசி எலும்பணிந்த பேய்க்கோலத்துடன் விளங்குதல்[15] உமையொரு பாகனாய் விளங்குதல்[16] பவளம் போல் மேனியுடையனாதல் ஆகியவற்றையும் அம்மையாரின் பாடல்களில் காணலாம்.

அம்மையார் இறைவனைப் போற்றும் அருமைப்பாடு குறிப்பிடத்தக்கது. இறைவனுடைய பொருள் சேர் புகழின் திறத்தை எடுத்துரைத்தும் அவனது தோற்றப் பொலிவினை வியந்தும் தாம் பெற்ற திருவருள் அனுபவத்தினைப் பிறருக்குத் தெளிவுறுத்தியும் தம் நெஞ்சுக்கு அறிவுறுத்தியும் தம்மையொத்த அடியார்களின் இயல்பினை விரிந்துரைத்தும் இறைவனுடைய திருவருட் செயல்களையும் அருட்கோலத்தையும் நினைத்து அவனையே முன்னிலைப்படுத்தி உரையாடியும் இறைவனை மகிழ்ந்து போற்றியுள்ளார்.

திருவிரட்டை மணிமாலையிலும் அம்மையார் இறைவனின் பெருமைகளை எடுத்தோதியுள்ளார். இறைவனை வணங்குமாறு அறிவுரை புகன்றுள்ளார். ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கியுள்ளார். இறைவன் மீது அவர் கொண்ட தாயன்பு இதன் மூலம் புலனாகின்றது.

ஐந்தெழுத்தின் பெருமையை அம்மையார்,

தலையாய ஐந்தனையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின உணர்ந்தோர் காண்பர் – தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல் [17]

எனும் பாடல் தலைமைபெற்று ஐந்தெழுத்தை இடைவிடாது ஓதிச் சிந்தித்து உலகில் தலையாய பொருள்களை உணர்ந்தோர் அண்டங்களைப் படைத்தவனும் ஆதிரையானும், நஞ்சுண்ட கண்டனுமாக விளங்குகின்ற ஈசனின் செம்பொற் கழலடி சேர்வர் என்பதை உணர்த்தியுள்ளார். [18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சிக்காலத்திற்கு முன் சைவசமயம் கூறும் கோயில் வழிபாடு அதிகம் சிறப்புற்றிருக்கவில்லை. இதனால் கோயில் வழிபாடு பற்றிக் கூறும் எதுவித குறிப்புக்களையும் அம்மையாரது பாடல்களில் காண முடியவில்லை. ஆயினும் இறைவனை எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடை தரத்தக்க விதத்திலும் இவை பற்றிய குறிப்புக்களைக் காண முடிகின்றது. பல சந்தர்ப்பங்களில் தமது நெஞ்சை விளித்தும் சில தடவைகள் யாரென்று குறிப்பிடாது முன்னிலைப் பன்மையில் விளித்தும் இறைவனை வழிபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார். அற்புதத் திருவந்தாதியை விட திருவிரட்டை மணிமாலையில் வழிபாடுகள் பற்றிய குறிப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வந்திருத்தல்[19] தொழுதல் [20] மாறாது வாழ்தல்[21] இறைஞ்சிப் பணிதல்[22] வணங்குதல்[23] போன்ற சொற்களால் இறைவனை உடலாலும், மனதாலும் வழிபடுதலைக் குறிப்பிடுகின்றார். மேலும் இப்பகுதியில் வழிபாட்டின் பலன்களையும் விளக்கியுள்ளார்.

சிவன் என்ற தெய்வத்தை முதன் முதல் முதன்மைப்படுத்திப் பக்தி கலந்த பாடல் பாடியவர் அம்மையார் என்று கருதப்படுகின்றது. ஆயினும் சிவன் என்ற சொல்லை எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை என்பது வியப்புக்குரியது. எனினும், சிவனைக் குறிக்கும் வேறுபல பெயர்கள் அவரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன, ஈசன், பிரான், பரமன், பெருமான், இறைவன், சங்கரன் என்பனவாகும். இவ்வாறாக சைவத்திற்குரிய பல்வேறு பக்தி மரபுகளை ஆரம்பித்து வைத்தது மட்டுமன்றித் தம் பாடல்கள் மூலம் பக்தியையும் அதனூடாக உயர்ந்த ஆன்மீக நிலையைக் காட்டியதுமே தமிழ் சைவ இலக்கிய வரலாற்றில் காரைக்கால் அம்மையாருக்கு ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொடுத்தது எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. சுப்பிரமணியன். நா. டாக்டர் நால்வர் வாழ்வும் – வாக்கும், 2002, பக் – 28.
2. இராசமாணிக்கனார், மா. சைவசமயவளர்ச்சி, பூங்கொடி பதிப்பகம், 1999. பக் – 16.
3. சாந்தா M.S. டாக்டர் காரைக்காலம்மையாரும் அக்கமாதேவியும் ஓர் ஒப்பாய்வு, சென்னை 1994. பக் – 17
4. மேற்படி, பக் – 17.
5. வெள்ளைவாரணனார். க.பன்னிரு திருமுறை வரலாறு பக் – 519

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வெள்ளைவாரணனார். க. மு. கு. நூல் பக். – 546
7. இராசமாணிக்கனார் நா., மு. கு. நூல். பக். – 15.
8. மேற்படி. 3.
9. மேற்படி. 7.
10. மேற்படி. 12.
11. மேற்படி. 12.
12. மேற்படி. 13.
13. மேற்படி. 15.
14. மேற்படி. 25.
15. மேற்படி. 29.
16. மேற்படி. 39.
17. திருவிரட்டை மணிமாலை பக். 15
18. சாந்தா M.S. டாக்டர், மு. கு. நூல், பக். 165.
19. திருவிரட்டைமணிமாலை பக் 01.
20. மேற்படி. 3.
21. மேற்படி. 2.
22. மேற்படி. 9.
23. மேற்படி. 12.

உசாவியவை

1. ஜீவபந்த. டி. எஸ். ஸ்ரீபால், இளங்கோவடிகள் சமயம் யாது, பாரிநிலையம், சென்னை 1957
2. சிலப்பதிகாரம் மூலமும் உரையும், வேங்கடசாமி நாட்டார், சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
3. மணிமேகலை, புலியூர்க் கேசிகன் தெளிவுரையுடன் பாரிநிலையம், சென்னை. 1965
4. டாக்டர் பா. இறையரசன், தமிழர் நாகரிகவரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை. 1993.
5. உலகதமிழர் பண்பாட்டுக்களஞ்சியம், வரலாற்றியல், முனைவர் கா. கவியப்பெருமாள்.
6. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், வசந்தா பதிப்பகம், சென்னை 2003.
7. பேராசிரியர் கோ. தங்கவேலு. தமிழக சமூக பண்பாட்டு வரலாறு 1, அமிர்தம் பதிப்பகம், சென்னை. 2002.
8. டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஸ்ரீலங்கா புத்தகசாலை, 1969.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களப்பிரர் ஆட்சியில் வைதிக சமயம்

சு. துஷ்யந்

இயற்கை நெறிக் காலம் முடிவுற்ற பின் கி.பி 3ஆம் நூற்றாண்டு முதலாக 6 ஆம் நூற்றாண்டு வரையான, ஏறத்தாழ 3 நூற்றாண்டுகள் தமிழ் நாட்டைத் தமிழ் அரசர்கள் ஆட்சி புரிந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இக்காலத்தில் தமிழ் நாட்டில் பல குழப்பங்கள் வேற்று நாட்டு அரசர்களின் வரவால் ஏற்பட்டன. களப்பிரர், பல்லவர் என்னும் மரபினர் தமிழகத்தில் ஆட்சி புரிந்தார்கள் என பெரியபுராணம், யாப்பருங்கலக்காரிகை, பாலி மொழியில் எழுதப்பட்ட வினய வினிச்சயம் முதலிய இலக்கியங்களும், திருப்புகலூர்க் கல்வெட்டு, வேள்விக்குடிச் செப்பேடுகள், காசக்குடிச் செப்பேடுகள், தளவாய்புரச் செப்பேடுகள், கூற்றம் செப்பேடுகள் முதலான சாசனங்களும் சான்று பகருகின்றன.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் சமுத்திரகுப்தனின் படையெடுப்பாலும், சாதவாகனரின் வீழ்ச்சியாலும், பல்லவர்களுடைய கை ஓங்கி வந்ததாலும், தொண்டை நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களைப் பயன்படுத்தி களப்பிரர்கள் தமிழகம் புகுந்து முதலில் தொண்டை மண்டலத்திலும், பின் சோழ, பாண்டிய மண்டலங்களிலும் இருந்த நிலையான பரம்பரையான அரசுகளைக் கவிழ்த்து விட்டு நாடு முழுவதும் கலவரமான சூழ்நிலைகளை ஏற்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பிரர் தமிழில் 'களவர்' என்ற பெயராலும், கன்னடத்தில் 'களப்பரு' என்ற பெயராலும் சுட்டப்படுகின்றனர். இவர்கள் சமண, பௌத்த சமயங்களுக்குச் சார்பானவர்களாக இருந்தனர். அத்துடன் அச்சமயங்களைத் தழுவியும் இருந்தனர். சிலர் சைவ, வைணவ சமயங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் சார்ந்திருந்தனர்.

இக் காலத்தில் வைதிக சிந்தனை மரபுகளும், ஆன்மீக சிந்தனை மரபுகளும் பரவியிருந்தன. அறமணம் கமழும் இலக்கியங்களும் உருவாக்கம் பெற்றன. அந்நூல்கள் பலவற்றிலே வைதிக ஆசாரங்களும் சிந்தனைகளும் உபதேசிக்கப்பட்டிருந்தன. சைவ, வைணவ அருளாளர்களின் பக்திப்பாடல்களும் தோன்றின. இந்த அடிப்படையில் களப்பிரர் ஆட்சியில் வைதிக சமய நெறிகள் எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சமண பௌத்த மதங்களின் செழிப்பு

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்ற சூழலில் சைவ, வைணவ சமயங்கள் செல்வாக்கு இழந்து ஒடுங்கிப் போயின.

பல்லவர்கள் சமண சமயத்தையும், களப்பிரர் புத்தசமயத்தையும் தழுவியிருந்தனர். இரு சமயத்தாரும் புலனடக்கம், உண்ணா நோன்பு, இன்ப வெறுப்பு முதலிய ஒழுக்கங்களை மக்களிடையே வற்புறுத்தி துறவறத்தைப் பெருமைப்படுத்திக் கொண்டிருந்தனர். இதனால் சைவம், வைணவம் போன்ற வைதிக சமயங்கள் அரசினது ஆதரவினை இழந்தன. இக்காலத்தில் சமண, பௌத்த சமயங்களைப் போதிப்பதற்கு சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பிரசார நூல்கள் உதயமாகின. ஆனால் வைதிக சமயத்தைப் போதிப்பதற்கு எந்தவொரு பிரசார நூலும் தோன்றாத சூழ்நிலையில், அறநெறிக்காலப் பிற்பகுதியில் தோன்றிய காரைக்கால் அம்மையார், திருமூலர், முதலாழ்வார்கள் போன்றோர்களின் பக்திப் பாடல்கள் ஓரளவு வைதிகசமய வளர்ச்சிக்கு உந்துதல் அளிப்பனவாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் சமய பிரசாரத்திற்காகப் பக்திக் கொள்கையைப் புதிதாக உருவாக்கின. இதனாலேயே பிற்காலத்தில் சமண, பௌத்த மதத்தவர்களின் செல்வாக்கினை மெதுமெதுவாக ஒழிக்க முடிந்தது.

வைதிக சமயங்கள்

அறநெறிக்காலத்தில் தோற்றம் பெற்ற அற இலக்கியங்கள் பலவற்றிலே வைதிக சிந்தனைகள் பல ஆங்காங்கு மணிகளென ஒளிவீசித் திகழ்கின்றன. அவற்றை எடுத்து ஆராய்ந்து பார்க்கும் பொழுது வைதிக சமயநெறிச் சிந்தனைகளும், அதன் பண்பாட்டு மரபுகளும், தத்துவ உண்மைகளும் நன்கு புலப்படும்.

சைவ சமயம்

சிலப்பதிகார காவியத்தில் சமணமதக் கருத்துக்கள் உறைந்திருந்தாலும் வைதிகசமயச் சிந்தனையும் காணப்படுவதை உணரலாம். இந்நூலில் சிவபெருமான், ஆறுமுகன், திருமால், இந்திரன் என்போருக்குக் கோயிலமைத்து வழிபட்டமை பற்றியும், நான்மறைகள் செப்பும் மரபுகளின்படி வேள்வி வழிபாடுகள் நிகழ்ந்தமை பற்றியும் அறிய முடிகிறது.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
ஆறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒரு பால்

அறுசமய நெறிகளில் முதலில் வைத்துப் போற்றப் படுவது சைவ சமயமே என்பதை இதனால் உணரலாம்.

இதேபோல் மதுரையம்பதியிலும் மேற்குறிப்பிட்ட தெய்வங்களுக்கு கோயில் அமைந்திருந்தமை பற்றியும் சிலம்பு நூலாசிரியர் மேல்வருமாறு பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவலவன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்

இப்பாடலிலும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு முதன்மை கொடுக்கப்பட்டதைக் காணலாம்.

சிவனின் திருமேனியின் பொலிவு, பராக்கிரமச் செயல்கள். அருளாற்றல்கள் என்பனவற்றை வடமொழிப் புராணங்கள் வருணித்தாற்போல் சிலம்பு நூலும் மேல்வருமாறு வருணித்துள்ளது.

இறப்பு பிறப்பு கடந்தவன்	–	*'பிறவா யாக்கைப் பெரியோன்'*
நெற்றியில் கண்ணுடையான்	–	*'நுதல் விழி நாட்டத்து இறையோன்'*
தலையிலே பிறை சூடியவன்	–	*'பிறை முடிக் கண்ணிப் பெரியோன்'*
நீண்ட சடாமுடி தரித்தவன்	–	*'தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்'*
உமையொரு பாகன்	–	*'கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்'*

மணிமேகலை பௌத்த பிரசார இலக்கியமாக இருந்தாலும் 'சைவம்', 'சைவவாதி' என்ற பதங்களை முதலில் தந்த இலக்கியம் என்ற வகையில் அந்நூலிற்கு ஓர் சிறப்பிடம் உண்டு. வஞ்சிமாநகரில் இருந்த மதவாதிகள் பலரும் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் மணிமேகலை அவரவர் மதக் கொள்கைகளையும், கடவுள் தன்மைகளையும் விசாரித்தாள். அவள் சைவ வாதியிடம் சென்று உனது கடவுள் எத்தகையது என வினாவிய போது அச்சைவவாதி தன் இறைவன் பற்றி மேல்வருமாறு கூறினான்.

'இரு சுடரொடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும் கலையுருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்துத் துயர் தீர் தோற்றத்தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்
அன்னோன் – இறைவன் ஆகும்

இப்பாடலின் கருத்து மேல்வருமாறு :

" இரு சுடர்களாகிய சூரிய சந்திரரையும் இயமானனையும், மண், நீர், தீ முதலிய ஐம்பூதங்களையும், அட்டமூர்த்தங்களையும், உயிராகவும், உடம்பாகவும் உடையவன். உலகையும் அதில் உயிர்களையும் சிருஷ்டித்து திருவிளையாடல் புரியும் பண்பினை உடையவன். பின்பு அவற்றை அழித்து அவற்றின் பிறவித் துன்பத்தை நீக்குபவன். தன்னைத் தவிர தனக்கு ஒப்புவமையில்லாத தன்மையுடையவனே இறைவன். அவனே சிவன்".

இப்பாடலில், சிவபிரானின் இயல்புகளும், அவரின் பரத்துவ பண்புகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்நூலிலே சிவனுக்கு கோயில் வழிபாடு இடம் பெற்ற குறிப்பையும் காண்கின்றோம்.

நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாகப்
பதி வாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக

இக்குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு ஆராயும் பொழுது பௌத்தமதம் செழிப்புற்ற காலத்திலும் சைவமதம் வலுவோடு நிலவியிருப்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும்/ இக்காலத்தில் எழுந்த வைதிக சார்பான அற இலக்கியங்களில் வருகின்ற கடவுள் வாழ்த்துப் பாடல்களில் சிவபெருமானைப் பற்றியும் குறிப்புக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அக் குறிப்புக்கள் புராணக் கதைகளில் சொல்லப்பட்டிருக்கும் சிவபிரானின் பண்புகளை வெளிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன என்பது கவனிக்கற்பாலது.

இன்னா நாற்பது பாடிய கபிலர் வைதீக சமயத்தைச் சேர்ந்தவர் என்பது அவர் பாடிய மேல்வரும் கடவுள் வாழ்த்துப் பாடலிலிருந்து புலப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே சிவபெருமான், பலராமன், மாயவன், முருகன் ஆகிய தெய்வங்களை அடுக்கிப் போற்றியுள்ளார்.

முக்கட் பகவன் அடி தொழாதார்க் கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளாது ஒழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா ஆங்கின்னா
சக்தியான் தாள்தொழா தார்க்கு

பூதஞ்சேந்தனார் பாடிய இனியவை நாற்பது நூலின் கடவுள் வாழ்த்துப்பாடலிலும் முக்கண்ணையுடைய சிவனின் சேவடியைப் போற்றுவதாக மேல்வருமாறு பாடியுள்ளார். *கண் மூன்றுடையான் தான் சேர்தல் கடிதினிதே* ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம் போன்ற நூல்களைப் பாடிய ஆசிரியர்கள் முப்புரம் எரித்த சிவபெருமானின் பராக்கிரமத்தை மேல்வரும் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் போற்றியுள்ளனர்.

ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி
ஆரிடத்தும் தானறிந்து மாத்திரையான் (ஆசாரக் கோவை)

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து (சிறுபஞ்சமூலம்)

சைவ அருளாளர்களின் பக்திப் பாடல்கள்

துறவு நெறியும், அற ஒழுக்கமும் தீவிரமாக வற்புறுத்தப்பட்டு வந்த அற நெறிக்காலத்தில் இறைவனிடம் தம்மை முழுமையாக ஒப்புவித்துப், பக்தி வைராக்கியம் பூண்டு இறைவன் திருவுருவைக் கண்டு அனுபவித்தல், அவன் புகழ் பாடுதல், தாம் பெற்ற இறை அனுபவங்களை வெளிப்படுத்துதல் என்ற வகையில் பண் கனிந்த உணர்ச்சிப் பெருக்கு மிக்க, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் பண்பினைக் கொண்ட தமிழ் பக்தி இலக்கியங்கள் இக்காலத்தில் உதயமாகின.

பக்தி இலக்கியங்களுக்கு இக்காலத்தில் கால்கோள் இட்டவர் காரைக்கால் அம்மையார் ஆவார். சிவன்மீது ஆராக்காதல் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் சிவனின் சுடுகாட்டினையும், அதன் சுற்றாடலையும், அங்கு இடம் பெற்ற இறைவனின் செயல்களையும் வியக்கும் வகையில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடினார். அதனைத் தொடர்ந்து திருவிரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி போன்ற அற்புதமான அருட்பாடல்களை ஆக்கியருளினார். இப்பாடல்கள் செய்யுள் மரபிலும், பொருள் மரபிலும் அவருக்குப் பின் வந்த பக்தி இலக்கிய கர்த்தாக்களுக்கு வழி காட்டியாக அமைந்தன.

திருமூலர் இயற்றிய திருமந்திரமும் இக் கால சைவ இலக்கியம் என்று சொல்லப்படுகின்றது. நக்கீர தேவ நாயனார் என்பவராலும் மேல்வரும் சைவ இலக்கியங்கள் பாடப்பட்டன.

1. கயிலை பாதி காளாத்தி பாதி திருவந்தாதி
2. திருவீங்கோய்மலை எழுபது
3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
4. திரு வெழு கூற்றிருக்கை
5. பெருந்தேவபாணி
6. கோபப் பிரசாதம்
7. கார் எட்டு
8. போற்றித் திருக்கலி வெண்பா
9. திருக் கண்ணப்ப தேவர் திருமறம்

கபில தேவநாயனாரும் இக்காலத்தில் வாழ்ந்தவராக அறியப்படுகின்றார். அவர் மூன்று சமய இலக்கியங்களைப் பாடியுள்ளார். அவற்றுள் இரண்டு நூல்கள் சிவபெருமான்மீதும், மற்றையது ஆனைமுகக் கடவுளின் மீது பாடப்பட்டவை ஆகும். அத்தகைய நூல்கள் மேல்வருமாறு.

1. சிவபெருமான் திருவந்தாதி
2. சிவபெருமான் இரட்டை மணிமாலை
3. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணதேவநாயனாரும் சிவன் மீது 'சிவபெருமான் திருவந்தாதி' பாடியுள்ளார். கல்லாடதேவ நாயனார் 'கண்ணப்பர் திருமறம்' பாடியுள்ளார். இவ்வாறான சைவசமய, பக்தி இலக்கியங்களெல்லாம் பதினொராம் திருமுறையில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சைவம் வளர்த்த அருளாளர்கள்

களப்பிரர் காலத்தில் சாக்கியர், மூர்த்தி நாயனார், கூற்றுவ நாயனார், சண்டேசுவரர், கண்ணப்பர், கூற்றனார், கணம்புல்லர், அமர்நீதியார், அரிவாள்தாயர், எறிபத்தர், நமிநந்தியடிகள், தண்டியடிகள், காரைக்கால் அம்மையார், திருமூலர் முதலான அருளாளர்கள் இக்கால சைவசமய வளர்ச்சிக்கு உரமூட்டினார்கள்.

சைவம் வளர்த்த அரசர்கள்

களப்பிரரும், பல்லவர்களும் செல்வாக்குப் பெற்றிருந்த இக்காலத்தில் சைவசமயம் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் கூட இக்காலத்தில் அரசர்களெனக் கொள்ளத்தக்கவர்கள் பலரால் சைவசமயம் பாதுகாக்கப்பட்டது.

சிவஸ்கந்தவர்மன், ஸ்கந்தவர்மன், ஸ்கந்தசிசுயன் போன்றோர் இக்காலத்தில் சைவம் போற்றிய அரசர்களாவர். அவர்கள் சைவப் பெயர்களைப் பூண்டிருந்தனர். இவர்களில் ஸ்கந்தசிசுயன் திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்கு தானங்கள் பல புரிந்தான் என அவனது பட்டயங்கள் செப்புகின்றன. அவனது பட்டயத்தில் சிவனின் வாகனமாக நந்திச் சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

கோச்செங்கணான், ஐயடிகள் காடவர் கோன், கூற்றுவன் போன்ற அரசர்களும் இக்கால சைவசமய வளர்ச்சிக்குப் பணி புரிந்தனர். கோச் செங்கணான் திருவானைக்கா முதலிய இடங்களில் எழுபது சிவன் கோயில்களை கட்டினான். தில்லை வாழ் அந்தணர்களுக்கு மாளிகைகள் கட்டிக் கொடுத்தான் என அவனைப் பற்றிய பட்டயங்கள் செப்புகின்றன. ஐயடிகள் காடவர் கோன் என்னும் பல்லவ வேந்தன் தில்லை, குடந்தை, முதலான இருபத்தொரு சிவத்தலங்களைப் பற்றி ஷேத்திர வெண்பா எனும் நூலில் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவம்

சிலப்பதிகாரத்தில் கடல் ஆடு காதை, ஆய்ச்சியர் குரவை, கொலைக்களக் காதை, நாடுகாண் காதை, ஊர்காண் காதை, கனாத்திறங்கேட்ட காதை எனப் பல பகுதிகளில் திருமால் வழிபாட்டுச் செய்திகள் பலவற்றைக் காணலாம். இயற்கை நெறிக்காலத்தில் திருமாலை மாயோன் எனப் போற்றிப் பரவிய செய்திகள் இந் நூல் மூலமாக அறிய முடிகின்றது.

ஆய்ச்சியர் குரவையில் வரும் மேல்வரும் படர்க்கைப் பரவல் பாடல்களில் திருமாலுடன் தொடர்புடைய புராணக்கதை, இதிகாசக் கதைகள், திருமாலின் திருமேனியழகு, அவனைப் போற்றி வழிபடும் முறைகள் என்பன தெளிவாக ஓதப்பட்டுள்ளன.

"மூவுலகும் ஈரடியான் முறை திறம்பா வகை முடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான் போந்து
சோ அரணும் போர் முடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே?
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே?

பெரியவனை; மாயவனைப்; பேர் உலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக்; கண்ணும்
திருவடியும், கையும், திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?
கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே?

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை; நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?
நாராயணா! என்னா நாவென்ன நாவே?" (ஆய்ச்சியர் குரவை 35–37)

கால்கோட் காதையில் இராமாயணக் கதையின் சித்திரிப்பு மேல்வருமாறு அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் வயிறு கலக்கிய ஞாட்பும் கடலகழ்
இலங்கையில் எழுந்த சமரமும் கடல்வணன் (கால் கோட் காதை – 240)

திருமாலின் ஓர் அம்சமான வெள்ளை நிற மேனி கொண்ட பலராமனைப் பற்றியும், அவருக்கு கோயில் இருந்தமை பற்றியும் சிலம்பு நூலில் பல இடங்களில் குறிப்புகள் வருகின்றன.

"விறல் வெள்ளை ஆயவன் என்றான்" (ஆய்ச்சியர் குரவை – 14)

"புகார் வெள்ளை நகர்க் கோட்டம்" (கனாத்திறம் உரைத்த காதை – 10)

"உவணச் சேவல் உயர்ந்தோன் நியமம்
மேழி வலவன் உயர்ந்த வெள்ளை நகரமும்" (ஊர்காண் காதை – 8)

திருமாலுக்கு தனிக் கோயில் அமைக்கப்பட்ட செய்தியையும் சிலப்பதிகாரம் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"அணி கிளர் அரவின் அறி துயில் அமர்ந்த
மணி வண்ணன் கோட்டம்" (நாடு காண் காதை – 9)

மாதவியானவள் 'மாயோன் பாணி' பாடிப்பரவி பதினொரு வகை ஆடல்கள் புரிந்ததாக கடலாடு காதையில் குறிப்பிடப்படுகின்றது. அவற்றில் மாயோன் ஆடிய அல்லியத்தொகுதி, மற்கூத்து, குடக்கூத்து போன்ற செய்திகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

"கஞ்சன் வஞ்சகம் கடத்தற்காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும்; அவுணற் கடந்த
மல்லின் ஆடலும்." (46–49)

"நீர் நிலம் அளந்தோன் ஆடிய குடையும்" (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலையில் சமயக்கணக்கர்தம் திறங்கேட்ட காதையில் மணிமேகலை வைணவ வாதியிடம் வைணவக் கடவுள் பற்றி அறிந்தமை கூறப்பட்டுள்ளது. கடலின் நிறமாகிய நீல வண்ணத்தை உடையோனாகிய திருமாலின் பழைய வரலாறுகள் அனைத்தையும், அவன் மேல் அன்பு கொண்டு ஓதி உணர்ந்தோனான வைணவவாதி நாராயணனே உலகத்தினைக் காத்தருளும் இறைவனாவான் என்று ஓதியுள்ளான்.

காதல் கொண்டு கடல்வணன் புராணம்
ஓதினன் 'நாரணன் காப்பு' என்று உரைத்தான்

அறநெறிக் காலத்தில் எழுந்த பல அற நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் திருமால் போற்றப்படுவதைக் காணலாம்.

இன்னா நாற்பது நூல் பாடியவர் ஒரு வைணவர் என அறிய முடிகின்றது. கடவுள் வாழ்த்துப்பாடலில் திருமால், பலராமர் ஆகியோரைப் பற்றிய செய்திகள் உள்ளன.

"பொற்பனை வெள்ளையை யுள்ளாது ஒழுகின்னா
சக்கரத்தானை மறப்பின்னா"

நான்மணிக் கடிகை பாடியவரும் வைணவ சமயத்தவர் என்பதனை அந் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலிலிருந்து அறிய முடிகின்றது.

மதி மன்னு மாயவன் வாண்முகம் ஒக்கும்
கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முது நீர்ப் பழனத்து தாமரைத் தாளின்
எதிர் மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்

களப்பிர அரசர்கள் வைணவ சமயத்தவர் என்றும் அறிய முடிகின்றது. திருமாலுக்கு அச்சுதன் என்றும் நாமம் உண்டு. களப்பிர அரசர்கள் தங்களை அச்சுத குலத்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். சேர,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ, பாண்டியர், களப்பிர அரசரைப் பற்றிப் பாடியதாகக் குறிப்பிடப்பெறும் மேல்வரும் பாடல்களில் களப்பிரர் அச்சுதன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சேரமன்னன் பாடியது:

'அரசுணங்கும் அச்சுதன் தன் முற்றத்து'

சோழ மன்னன் பாடியது:

'அரசர் குல திலகன் அச்சுதன் முற்றத்தில்'

பாண்டிய மன்னன் பாடியது:

'ஆலிக்குந்தானை யலங்குதார் அச்சுதமுன்'

யாப்பருங்கலம் என்னும் இலக்கண நூலின் விருத்தியுரை ஆசிரியர் தரும் நான்கு செய்யுள்கள் களப்பிர அரசனைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர்களை திருமாலின் அம்சமாகவே கருதியுள்ளனர்.

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழு" என்று தொடங்குகின்ற பாடல் அச்சுதன் என்னும் களப்பிர அ ர ச னை க் காத்தருள வேண்டும் என்று திருமாலை வேண்டுகின்றது.

"இருளறு திகரியொடு வலம்புரித் தடக்கை ஒருவனை வேண்ட இரு நிலம் கொடுத்த நந்தி" எனவரும் பாடலிலே திகிரியெனும் சக்கரத்தையும், வலம்புரிச் சங்கினையும் கையில் ஏந்தியுள்ள திருமாலை வேண்டிப் பரவ, அவர் களப்பிர அரசன் ஒருவனுக்கு இராச்சியத்தை வரமாக வழங்கினான் எனச் சொல்லப்பட்டுள்ளது.

"அகலிடம் அமருலகும் ....." என்னும் பாடலில் களப்பிர அரசன் 'அச்சுதர்கோ' என்று போற்றப்பட்டுள்ளான்.

"அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்" எனும் பாடலில் 'விண்ணவன்' என்பது விஷ்ணுவைக் குறிக்கின்றது. அரசாட்சி புரியும் விண்ணவன் எனும் களப்பிர மன்னனின் ஆட்சி ஓங்க வேண்டும் எனக் குறிப்பிப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரிய புத்ததேரர் தாம் எழுதிய 'வினய வினிச்சயம்' எனும் நூலில் அச்சுதவிக்கந்தன் களப்பிர குலத்தில் பிறந்தவன் என்ற செய்தியை *"அச்சுதச் சுத விக்கந்தே களப்ப குல நந்தனே"* என்ற குறிப்பால் ஓதியுள்ளார். மேற்குறிப்பிடப்பட்ட சான்றுகளைக் கொண்டு ஆராயும்போது பல களப்பிர அரசர்கள் வைணவக் கடவுளான திருமாலின் அச்சுதன் எனும் நாமத்தைச் சூடிக் கொண்ட வைணவ சமயத்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

அறநெறிக் காலத்தின் இறுதிப் பகுதியிலே திருமால்மீது ஆழ்ந்த பக்தி கொண்ட பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் எனும் முதலாழ்வார்கள் தோன்றி நெஞ்சையள்ளும் தமிழ்ப் பக்திப் பாசுரங்களை இசையுடன் பாடி வைணவப் பக்திச் சுடர்விளக் கேற்றினர். இவர்கள் அன்பை அகலாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், பக்தியால் உருகும் மனத்தைத் திரியாகவும் வைத்து பெருமாளுக்கு ஞானவிளக்கேற்றி, ஞானத்தமிழை பாசுரமாக ஓதி வைணவப் பக்தி இயக்கத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியா – என்புருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்" (பூதத்தாழ்வார் பாசுரம்)

அம்மன் வழிபாடு

சைவசமயத்தில் இணைந்து கொண்ட சாக்த சமயத்தையும் அக்காலத்தில் தோன்றியுள்ள பல அற இலக்கியங்கள் எடுத்தோதியுள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரம் குறிப்பிடத்தக்கது. அந்நூல் சிவபெருமானை மட்டுமல்லாது அம்மையப்பர் தத்துவத்தையும் சிறப்பாக நயம்பட உரைத்துள்ளது. வேட்டுவவரி நெடுகிலும் உமையைப் பற்றிப் பேசும் போது சிவபெருமானின் பண்பை ஏற்றி ஏற்றி நூலாசிரியர் பாடியிருப்பதில் விதம் அக்கால சைவ, சாக்த சமய ஒருமைப்பாடுகளை உணரக் கூடியதாய் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறையாகிய வெண்மையைச் சூடிய சென்னியாள், நெற்றியில் கண்ணுடையாள், பவளவாயுடையாள், நஞ்சுண்ட கறுத்த கழுத்தினள், பாம்பை நாணாகப் பூட்டியவள், மேரு மலையினை வளைத்தவள், வளையுடைய கையிலே சூலம் பிடித்தவள், புலித்தோலை மேகலையாக அணிந்தவள். இடது காலில் சிலம்பும், வலது காலில் வீரக்கழலும் பூட்டியவள் என்று சிவனின் பண்புகளை உமைமேல் ஏற்றி ஏத்தி மேல்வருமாறு பாடியுள்ளார்.

மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி; தவளவாள் நகைச்சி
நஞ்சு உண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமாலை வளைத்தோள்
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய" **(வேட்டுவ. வரி 55–60)**

மேலும் சில பாடல்களில் கொற்றவையின் (துர்க்கை), தோற்றத்தில், அம்மையப்பர் தத்துவத்தை சைவசித்தாந்த தத்துவத்திற்கு மாறில்லாதபடி தந்துள்ளார்.

ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரி உடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க, மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கு இன்றியே நிற்பாய்

சங்கமும் சக்கரமும் தாமரைக் கை ஏந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய் **(வேட்டுவவரி 7,9)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் வழிபாடு

எண்ணும் பொருளினிதே யெல்லா முடித் தெமக்கு
நண்ணுங் கலையனைத்து நல்குமால் – கண்ணுதலின்
முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்
கண்டத்தான் ஈன்ற களிறு

எனும் ஐந்திணை எழுபதின் கடவுள் வாழ்த்துப் பாடலில் நினைத்த பொழுதெல்லாம் நினைத்த காரியத்தை முடிக்கவும், பயிலும் கலையனைத்தையும் அருளவும் வல்ல ஆனைமுகக் கடவுளை சிவன் ஈன்று அருளினார் என்ற புராணமரபுக் கதையை நூலாசிரியர் தந்திருப்பது நினைவு கூரத்தக்கது.

இந்நூல் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலே பாடப்பட்டதைக் கொண்டு விநாயகர் வணக்கம் தமிழகத்தில் அந் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்திருக்க வேண்டும் என கருதமுடிகின்றது.

முருக வழிபாடு

திருமுருகாற்றுப்படை போற்றும் முருக வழிபாட்டின் தொன்மங்கள் அறநெறிக்காலத்தில் உருவான சிலப்பதிகார நூலிலும் பிரதிபலித்துள்ளன.

சிலப்பதிகாரத்தில் உள்ள வஞ்சிக் காண்டத்தினுள் உள்ள குன்றக் குரவைப் பாடல்களில் முருக வழிபாட்டின் அம்சங்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் உற்பத்தியாகி, கார்த்திகைத் தாய்மார் அறுவரின் திருமுலைப்பாலுண்டு, திருவேலால் சூரனைப் பிளந்தருளிய ஸ்கந்த புராண மரபுகள் இந்நூலில் மேல்வருமாறு ஓதப்பட்டுள்ளன.

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திரு முலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சிவனின் மைந்தன் என்பதை இந்நூல் 'ஆலமர் செல்வன் புதல்வன்' என்று குறிப்பிட்டுள்ளது. சங்க காலப் பாடல்களில் முருகனைப் போற்றிய வெறியாடல் வழிபாடும் இந்நூலில் மேல்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது– "அலர் கடம்பன் என்றே வெறியாடல் தான் விரும்பி". இன்னுமோர் பாடலில் முருகனின் திருவுருவ அழகை மேல்வருமாறு வருணித்துள்ளது.

அணி முகங்கள் ஓர் ஆறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான்

சிலப்பதிகாரம் முருகப் பெருமான் பள்ளிகொண்ட திருச்செந்தூர், திருச்செங்கோடு, திருவெண்குன்றம், திருவேரகம் ஆகிய நான்கு தலங்களைப் பற்றியும் குறிப்புக்களைத் தந்துள்ளது.

சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏகரமும் நீங்கா இறைவன் கை வேலன்றே

வைதிக ஆசாரங்கள்

சில அற நூல்களில் சொல்லப்படும் அறக்கருத்துக்களின் செல்வாக்கு தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியைக் காட்டி நின்றாலும் வைதிகசமய ஆசார நடை முறைகளையும் போதிப்பவையாக அமைந்துள்ளன. ஆசாரக் கோவை, சிலப்பதிகாரம், திருக்குறள், இன்னா நாற்பது. இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி போன்ற அறநூல்கள் வைதிக ஆசார அனுட்டானங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஓதியிருக்கின்றன.

ஆசாரக்கோவை பாடியவர் ஒரு சைவராக இருக்கலாம் என அந்நூற் கடவுள் வாழ்த்திலிருந்து தெரியவருகின்றது. ஆசாரக்கோவை வடமொழி ஸ்மிருதியைப் பின்பற்றி எழுந்தது எனவும் அதன் பாயிரத்தினால் அறிய முடிகின்றது.

வைதிக சமயத்தின் ஆசாரச் செயற்பாடுகள் திருவள்ளுவர் காலத்திலும் கணிசமாகக் காணப்பட்டிருக்கின்றன. தேவர், இந்திரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோர், அகல் விசும்பினோர், அவியுணவின் ஆன்றோர் போன்ற வைதிக மரபோடு தொடர்புடைய பெயர்களைச் சொல்லியுள்ளார்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" *(தி.கு 30)*

என்ற குறளில் அந்தணர்களை அறவோர்கள் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார். வேதத்தை அந்தணர் நூல் என்று *"அந்தணர் நூற்கும் அறத்திற்கும்..."* *(தி.கு.543)* என்ற குறளில் ஓதியுள்ளார். 'வேட்டல்' என்ற சொல் வேள்வி அல்லது யாகம் புரிதல் என்ற பொருளில் 259 ஆவது குறளில் வருகின்றது. எனவே திருக்குறள் அன்றைய காலத்தின் பிரதிநிதியாகவும், தமிழ்ச் சிந்தனை மரபின் தொடர்ச்சியாகவும் இருந்து வைதிக சமயத்தை எதிர்கொள்கின்ற இலக்கியமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னா நாற்பது நூலைப் பாடியவர் வைதிக சமயத்தார் என அறிய முடிகின்றது. அந்தணர்களைப்பற்றியும், அவர்களின் ஆசாரங்களைப் பற்றியும் இந்நூல் பல இடங்களில் பல செய்திகளைத் தந்துள்ளது.

முடிவுரை

சமணமும் பௌத்தமும் மேலோங்கிய காலத்தில் வைதிக சமங்கள் தாழ்ந்திருந்த போதிலும், காரைக்கால் அம்மையார், திருமூலர், முதலாழ்வார்கள் ஆகியோரின் பாடல்களால், மக்களின் மனநிலை மாற்றமடைந்தது. அறநெறி சார்ந்த நூல்களும் பல ஆங்காங்கு வைதிக சமயச் சிந்தனை மரபுகளைப் போதித்தன. பலரால் இருண்டகாலம் என்று வருணிக்கப்பட்ட காலத்தில் வைதிக சமய நெறிகளும், அதன் வழிபாடுகளும், சமயாசார மரபுகளும் வளர்ச்சி பெற்று ஒளி வீசலாயின.

உசாத்துணை

1. இராஜுகாளிதாஸ் : தமிழர் வரலாறும் பண்பாடும் விஜய் பப்ளிகேஷன்ஸ், திண்டுக்கல், 1977.
2. பிள்ளை. கே.கே : தமிழக வரலாறு–மக்களும் பண்பாடும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1981.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இராசமாணிக்கனார். மா : சைவசமய வளர்ச்சி சென்னை பாரி நிலையம், 1972.

4. மயிலை சீனி வேங்கடசாமி: களப்பிரர் ஆட்சியில் தமிழகம் விடியல் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2008.

5. இராமசாமி. அ : தமிழ்நாட்டு வரலாறு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2009.

6. வேலுப்பிள்ளை. ஆ : தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1969.

7. சிதம்பரனார் சாமி : பதினெண்கீழ் கணக்கும் தமிழர் வாழ்வும் அறிவுப் பதிகம், சென்னை, 2003.

8. சண்முகம்பிள்ளை. மு : பதினெண்கீழ் கணக்குத் தெளிவுரை முல்லை நிலையம், சென்னை, 2003.

9. வல்லிபுரம் மகேஸ்வரன் : தமிழ் நாட்டில் வைணவம் பொன்னெழுத்துப் பதிப்பகம், கண்டி, 2009.

10. புலியூர்க் கேசிகன் (உரை) : சிலப்பதிகாரம் பாரி நிலையம், சென்னை, 1982.

11. நாராயணசாமி. புதுவை. வயி : பெரியபுராண ஆய்வு நூல் விஜயா பதிப்பகம், புதுச்சேரி, 2010.

12. இராசமாணிக்கனார். மா : தமிழ்மொழி இலக்கிய வரலாறு பாரி நிலையம், சென்னை, 1965.

13. வேள்விக் குடிச் சாசனம் (தமிழ்ப்பகுதி) கழகவெளியீடு – 1967, பாண்டியர் செப்பேடுகள் பத்து நூலில் உள்ளவாறு சாசனம் அச்சுவாகனம் ஏற்றப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலடியாரிற் பெண்கள்

செல்வகுமாரி சிவலிங்கம்

நாலடியாரிற் பெண்கள் எனும் இவ்வாய்வில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், அவற்றின் காலம், பதினெண்கீழ்க்கணக்கில் நாலடியார் எனும் நூல் குறித்து சில தகவல்கள், துறவறத்தினைக் கூறமுற்படுகையில் பெண்களின் நிலை, இல்லறவாழ்வில் பெண்களின் நிலை, ஆண் பெண் கற்புநிலை, பொதுமகளிரின் இழிவு, கற்புடைய மகளிரின் சிறப்புக்கள், பெண் கல்வி, பெண் அழகு என்பன குறித்து விபரிக்கப்படுகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

பழந்தமிழ் நூல்களை மேற்கணக்கு நூல்கள், கீழ்க்கணக்கு நூல்கள் என இரண்டாகப் பிரித்தனர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் வெளிவந்ததாக கூறுவர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை சங்க இலக்கியங்கள் எனக் கூறுவோரும் உண்டு. இதற்குச் காரணம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் ஆசிரியர்களில் கபிலர், கூடலூர் கிழார், பொய்கையார் முதலியவர்களும் காணப்படுகின்றனர். இவர்கள் சங்ககாலப் புலவர்கள், அதனால் இவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் சங்ககால நூல்களாகத்தான் இருக்க வேண்டு என சாமி சிதம்பரனார் அவர்கள் கூறுகின்றார் (சாமிசிதம்பரனார் 1968, ப. 10.) அதே சந்தர்ப்பத்தில் இக்கருத்தினை சாமிசிதம்பரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக உடன்படுவதற்கும் இடர்பாடுகள் உள்ளன எனவும் கூறுகின்றார். அதாவது பெயரினைக் கொண்டு மட்டும் ஒரு நூலின் காலத்தினைக் கூறிவிடமுடியாது. ஏனெனின் ஒரே பெயரினைக் கொண்ட பல புலவர்களும் வாழ்ந்துள்ளனர். எனவே இக்கருத்தினை முழுமையாக உடன்படமுடியாது எனக் கூறுகின்றார். அதுமட்டுமன்று சங்கத்தமிழரின் பழக்க வழக்கங்களுக்கு முரண்பட்ட விடயங்களும் காணப்படுவதால் இந்நூல்கள் (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்) சங்ககாலத்திற்கு பிற்பட்டவை எனலாம்.

பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலத்தினை கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு பின்னும் ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னும் எனத் தீர்மானிக்கலாம் எனக் கூறுவர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:

01. நாலடியார் – சமண முனிவர்கள் பலர்
02. நான்மணிக்கடிகை – விளம்பி நாகனார்
03. இன்னா நாற்பது – கபிலர்
04. இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார்.
05. கார்நாற்பது – மதுரைக்கண்ணங் கூத்தனார்
06. களவழி நாற்பது – பொய்கையார்
07. ஐந்திணை ஐம்பது – மாறன் பொறையனார்
08. ஐந்திணை எழுபது – மூவாதியார்
09. திணைமொழி ஐம்பது – கண்ணன் சேந்தனார்
10. திணைமாலை நூற்றைம்பது – கணிமேதாவியார்
11. திருக்குறள் (முப்பால்) – திருவள்ளுவர்
12. திரிகடுகம் – நல்லாதனார்
13. ஆசாரக்கோவை – பெருவாயின் முள்ளியார்
14. பழமொழிநானூறு – முன்றுறை அரையனார்
15. சிறுபஞ்சமூலம் – காரியாசான்
16. முதுமொழிக்காஞ்சி – மதுரைக்கூடலூர் கிழார்
17. ஏலாதி – கணிமேதாவியார்.
18. ஐந்திணை எழுபது – (இந்நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலடியார்

நானூறு வெண்பாக்களைக் கொண்ட ஒரு நூல் நாலடியார். இந்நூலானது மூன்று பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:

01. அறத்துப்பால்
02. பொருட்பால்
03. காமத்துப்பால் என்பன.

அறத்துப்பாலில் பதின்மூன்று அதிகாரங்களும் பொருட்பாலில் இருபத்திநான்கு அதிகாரங்களும் காமத்துப்பாலில் மூன்று அதிகாரங்களும் உள்ளன. அதிகாரம் ஒன்றுக்கு பத்து வெண்பாக்கள் உள்ளன.

'நாலடியாரிற் பெண்கள்' எனும் இவ் ஆய்வில் துறவறவியலில் பெண்களின் நிலை, இல்லற வாழ்வில் பெண், ஆண் பெண்களது கற்பு நிலை, பொதுமகளிர் இழிவு, கற்புடைய மகளிரின் சிறப்பு, பெண் அழகு, பெண் கல்வி என்பன குறித்து நாலடியார் கூறும் செய்திகள் விரிவாக நோக்கப்படுகின்றன.

துறவறத்தினைக் கூற முற்படுகையில் பெண்கள்

சங்ககாலத்தில் மலிந்து காணப்பட்ட போர், களவொழுக்கம், நிம்மதியற்ற வாழ்க்கை முறை, பரத்தையர் தொடர்பு என்பன போன்ற காரணங்களின் நிமித்தம் திசைமாறிச் சென்ற மக்களை திசைதிருப்ப வேண்டிய தேவை காணப்பட்டது. இதனால் அறநெறிக் காலத்தில் தோன்றிய நூல்களானவை மக்களது ஒழுக்கத்தினை உயர்த்தும் நோக்கில் அமைய வேண்டியனவாக அமைந்தன. காதல், போர் எனத் திளைத்த மக்களுக்கு கட்டுப்பாடான வாழ்க்கை தேவைப்பட்டது. எனவே உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையினை வலியுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. உலக இன்பத்தில் மூழ்கிய மக்களை திடீரென அவ்வாழ்விலிருந்து விடுபட வைக்க முடியாது. எனவே உலக இன்பத்தின் நிலையற்ற தன்மையினைக் கூறி, நிலையான அறக்கருத்துக்களை வற்புறுத்திக் கூறினர். அறக்கருத்துக்களினை மக்களிடம் விதைப்பதற்கு பெண்ணின்பத்தையும் பெண்ணையும் குறைவாக மதிப்பிட்டு, அதாவது பெண்ணின்பமானது நிரந்தரமற்றது எனவும் எனவே பெண் நாட்டத்தை விடுத்து துறவு வாழ்க்கையினை மேற்கொள்ளுமாறு நாலடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. பெண்களை இழிவாக கூறினால் ஆண்கள் பெண்களை நோக்கிச் செல்லமாட்டார்கள் என எண்ணி பெண்களை இழிவாக நோக்கியிருக்கலாம். சமூகத்தில் காணப்பட்ட ஒழுக்கக் குறைபாட்டினை நிறைவு செய்வதற்கு ஒரு வழியாகவும் பெண்ணின்பத்தை வெறுத்திருக்கலாம். ஒருவனுக்கு துறவு வாழ்க்கையினை மேற்கொள்ளத் தடையாக இருப்பவள் பெண் என்றும், எனவே பெண்ணின்பத்தை விடுத்து துறவு வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாலடியாரில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்நூலானது நிலையான அறக்கடமைகளைச் செய்வதற்கு நிலையற்ற பெண்ணினத்தை வெறுக்க வேண்டும் எனக் கூறுகின்றது. அந்த வகையில் நாலடியாரில் அறத்துப்பாலில் துறவறவியலே முதலிடம் பெறுகிறது. உலக வாழ்வில் காணப்படும் இழிவுகளைக் கூறி உலகப் பற்றுக்களை அறுக்க முற்படுகின்றமையினைக் காணலாம். துறவறவியலில் நிலையற்ற செல்வம், நிலையற்ற இளமைப்பருவம், நிலையற்ற உடல், தருமத்தின் சிறப்பு, தூய்மையின்மை, பற்றற்றநிலை, கோபங் கொள்ளாமை போன்ற அதிகாரங்களில் பெண்களின் இன்பம் நிலையற்றது எனும் கருத்தானது வலியுறுத்தப்படுவதனைக் காணலாம். இவ் அதிகாரங்களில் நிலையற்ற வாழ்க்கையினை நிலையானது என நினைத்து வாழ்வதால் ஒரு பலனும் இல்லை எனவும், இளமையைப் பெரிதாக நினைத்து வாழ்வதனால் நிலையான தர்மங்கள் எதனையும் செய்ய முடிவதில்லை எனவும், இளமையாக இருக்கும் போது அறக்கடமைகளை விடுத்து பெண்ணின்பத்தினை அனுபவிக்கும் ஒருவனுக்கு முதுமையில் கிடைக்கப்போவது ஒன்றும் இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது. ஒருவன் அறக் கடமைகளை விடுத்து பெண்களை நாடிச் செல்லும் போது காலப் போக்கில் அப்பெண்ணிடம் கொண்ட அன்பும் அவனுக்கு இல்லாமல் போகின்றது. அதுமட்டுமல்ல அறவாழ்க்கையினின்றும் அவன் நழுவிவிடுகின்றான். எனவே பெண்ணின்பத்தினால் எந்தப் பயனும் அவனுக்குக் கிடைப்பதில்லை எனக்கூறுகிறது நாவலடி. நிலையானது என எண்ணிய அழகு நிலையற்றதாகி விடுகின்றது. பெண்ணானவள் முதுமையை எட்டிய பின் கூனி இளைத்து தலையாட கோலூன்றி மரண வேதனைப்படுகின்றாள். எவ்வளவு அழகான பெண்ணாக இருந்தாலும் முதுமை வரும்போது அவ் அழகு அனைத்தும் நிலையற்றதாகி விடுகின்றது எனவும் கூறுகிறது இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழாத் தளராத் தலை நடுங்காத் தண்டுன்றா
வீழா இறக்கும் இவள் மாட்டும் காழிலா
மம்மர் கொள் மாந்தர்க்கு அணங்காகும் தன்மைக்கோ
அம்மானைக் கோல் ஆகிய ஞான்று

பெண்களது அழகு நிலையற்றது எனவே பெண்ணின்பத்தை விடுத்து துறவு வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டும் என்பது பின்வரும் உவமை மூலமும் தெளிவுபடுத்தப்படுகின்றது. அதாவது குளிர்ந்த சோலையில் பூத்துக் குலுங்கிய பழங்களுடன் கூடிய மரம் கூட ஒரு நாள் உதிர்ந்து பட்டுப் போய்விடும். அதுபோல அழகான பெண்ணாக இருந்தாலும் அவளுடைய இளமையும் அழியக் கூடியது. அவளது உடலும் கூனி, கண்களுக்கு பதிலாக கைத்தடியை பிடிக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே இளமையானது நிலையற்றதே எனவும், ஒருவன் உலக இன்பங்களை விடுத்து துறவு வாழ்வினை மேற்கொள்ள வேண்டும் எனவும், ஒரு மனிதனுக்கு இளமையிலும் மரணம் வரலாம். முதுமையிலும் மரணம் வரலாம் எனவே நாட்களை வீணாக்காது தர்மத்தினைச் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. பல நூல்களிலும் பெண்கள் அழகானவர்கள் என பெண்களது அழகு வர்ணிக்கப்பட்ட போதும் நாலடியார் ஒரு பெண்ணைப் பின்வருமாறு வர்ணித்திருப்பதானது சிந்தனைக்குரியதாகும். குடல், கொழுப்பு, இரத்தம், எலும்பு வரிசையாகவுள்ள நரம்புகள் இவற்றின் மேல் போர்த்த தோல், எலும்பு நரம்புகளுக்கிடையேயுள்ள சதை, இவைகளின் கூட்டம் தான் ஒரு பெண்ணின் உடலாகும் எனக் கூறி துறவினை வற்புறுத்த முயலுகின்றார் நூலாசிரியர்.

குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் – இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதையள் (பாடல் 46)

பெண்களது உடலானது ஒட்டைப்பானை. இழிவான உடலின் தன்மையினை உணராமல் பூ இலைகளால் அலங்கரிக்கப்பட்ட உடலைக் கண்டு சிலர் மயங்குகிறார்கள். உடல் இறந்த பின் கழுகுகள்தாம் அதனைத் தின்னும். எனவே உடலில் பற்றுவைக்க வேண்டாம் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் நிலையற்ற தன்மையினை உணர்ந்து துறவற வழியில் செல்ல வேண்டும் என நாலடியார் வலயுறுத்துகின்றது. அதாவது சுடுகாட்டில் கிடக்கும் இறந்த பெண்ணின் பயங்கரமான தலையின் தோற்றம் உலக இன்பத்தில் மிதந்து கிடப்பவர்களின் களிப்பை அகற்றிவிடும் என்று கூறுவது இங்கு சிந்திக்கத்தக்கதாகும். நாலடியாரில் துறவினை வற்புறுத்திக் கூற முற்படும் இடங்களில் எல்லாம் பெண்களை இழிவாகவே நோக்குவதனைக் காணலாம். பெண்கள் 'நன்றி கெட்டவர்கள்'. ஏனெனின் பணம் இருக்கும் போது மட்டுமே பெண்கள் ஆண்களைத் தேடிவருவார்கள். ஆனால், ஆண்களிடம் பணம் இல்லாவிட்டால் நினைத்துக்கூட. பார்க்க மாட்டார்கள். அப்படிப்பட்ட பெண்களைக் காதலிப்பதால் எதுவித நன்மையும் இல்லை. அதுமட்டுமல்ல ஆண்களிடம் இளமை இல்லாவிட்டால் நிலைமை இன்னும் கீழ்நிலைக்கு தள்ளப்படும் என்று கூறுகின்றார். எனவே அப்படிப்பட்ட பெண்களுடன் வாழவேண்டும் என்ற ஆசையினை விடுத்து துறவறம் மேற்கொள்வதே சாலச் சிறந்தது எனக் கூறுகின்றார்.

ஈதல் இசையாது இளமை சேண் நீங்குதலால்
காதல்வரும் கருத்தல்லர் – காதலித்து
ஆதும் நாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள் (பாடல் 181)

இல்லறவாழ்வில் பெண்

நாலடியாரில் இல்வாழ்க்கையானது துன்பங்கள் நிறைந்தது எனவும் அதனால் அறிவும் அடக்கமும் கொண்ட நல்லோர்கள் இல்லற இன்பத்தின் நிலையின்மை,துன்பங்கள் ஆகியவற்றினை ஆராய்ந்து இல்வாழ்க்கையை விட்டுவிடுவார்கள் எனவும் கூறியிருப்பதைக் காணலாம். இல்வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்கள் பற்றிக் கூறும்போது ஒரு பெண்ணானவள் ஆண்களுக்கு எப்பொழுதும் அடங்கியே நடக்க வேண்டும் எனவும் பெண்களுக்கு எவ்வித உரிமைகளும் இல்லை எனவும் நாலடியாரில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய குணங்கள் அன்பு, அறிவு, நற்பண்புகள் என்பன எனவும், இக்குணங்களில்லாத பெண்கள் வாழ்கின்ற குடும்பங்களில் எந்த இன்பத்தினையும் காண முடியாது, அக்குடும்பமானது பாழாகி விடும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த மனையாளே ஒரு குடும்பத்திற்கு அவசியம் எனவும் அவ்வாறான மனையாள் இல்லாவிட்டால் அவ்வீடு பயங்கரமான ஒரு காடு ஆகும் என்றும் கூறப்பட்டுள்ளது. விரும்பத்தக்க மனையாளானவள் கணவனுக்கு தீமை விளைவிக்காதவளாகக் காணப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனின் அக்குடும்பத்தில் அமைதியின்றி நிம்மதி இல்லாமல் போய்விடும். இதனை 'மாண்ட மனையாள் இல்லாத இல்லம் காண்டற்கரியது ஓர் காடாகும்' என்பதனூடாக அறியலாம். கணவனை எதிர்த்து நிற்பவள் கணவனுக்கு பேய் போலாவாள். அதுபோல காலையில் சமையல் அறைக்குப் போகாத பெண்கள் தீராத நோய் போன்றவள். கணவனுக்குக் கொடுக்காமல் தான் மட்டும் உண்பவள் பிசாசு போன்றவள். இவ்வகையான குணங்களைக் கொண்டவள் கணவனை மாய்க்க வந்தவளாவாள். அதாவது ஒரு பெண்ணானவள் கணவனுக்குக் கீழ்படிந்து இல்லறத்தைச் செம்மையாக நடத்தவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது.

எறியென்று எதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி – அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ் பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை (பாடல் 363)

நாலடியாரில் ஒரு பெண்ணானவள் எத்தகைய துன்பத்தினையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவும், அத்தோடு கருவினைத் தாங்குவதும் குழந்தையைப் பெற்றெடுப்பதும் பெண்களது கடமைகள் என்றும், குழந்தை பிறக்கும்போது பெண்கள் மிகுந்த வேதனைப் படுகின்றார்கள், அந்தத் துன்பமானது தன்னுடைய குழந்தையினை மடியில் கண்ட மாத்திரத்தே அவர்களை விட்டு மறைந்து விடுகின்றது எனவும் கூறப்பட்டுள்ளது. இல்வாழ்க்கையில் மக்கட்பேறு என்பது சிறந்த ஒரு பாக்கியமாகும். இங்கு தாய்மையின் சிறப்பும் பெண் என்பவள் பெண்மைக்கேயுரிய இயல்புடையவள் என்ற கருத்துக்களும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகன் கண்டு தாய் மறந்தாஅங்கு (பாடல் 201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் என்பவள் இல்லக் கடமைகளை மேற்கொள்ள வேண்டும். எத்தகைய துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும், கணவன், குழந்தைகளை உபசரிக்க வேண்டும். பிற ஆடவர்கள் தன்னை நாடிவரும்போது அவர்களுக்கு இடம் கொடுக்காமல் தன் கணவனுக்கு உறுதுணையாக நிற்கவேண்டும் எனப் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆண், பெண் கற்பு நிலை

ஆண், பெண்களது கற்பு நிலைபற்றிப் பேசுகின்றபோது, பெண் என்பவள் கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறவேண்டும் எனவும், அவ்வாறு இல்லை எனின் கைம்மை நோன்பு நோற்க வேண்டும் எனவும் கூறியிருப்பதனைக் காணலாம். கற்புடைய பெண் என்பவள் பிறர் தன்னைப் பார்த்து ஆசைப்படாத வண்ணம் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஒரு ஆண் தன் மனைவி இறந்தபின் மறுமணம் செய்து கொள்ளலாம் எனக் கூறினாலும் பலதாரமணம் பற்றி நாலடியார் கூறவில்லை என்றே கூறலாம். திருமணத்திற்குப் பிறகு மேற்கொள்ளும் ஆண், பெண் உறவினை மட்டுமே நாலடியார் அனுமதிக்கின்றது. அதனுள்ளும் ஏகதார மணமே சிறப்புப்படுத்தப் படுகின்றமையைக் காணலாம். ஆண், பெண் ஆகிய இருபாலாருக்குமே கற்பு அவசியம் எனக் கூறுகின்றார். ஆண், பெண் பற்றிக் கூற முற்படுகின்ற போது பிறன்மனை நயத்தலால் வரும் கேடு பற்றியும் கூறத் தவறவில்லை. பிறன்மனை நயத்தலால் வருகின்ற விளைவுகளை ஆண், பெண் ஆகிய இருவருக்குமே கூறுகின்றார். நாலடியாரில் இல்லறவியலில் இக்கருத்துக்களினைக் காணலாம். அயலான் மனைவியை நயத்தலால் வருகின்ற கேடு பற்றிக் கூறும் போது, இவ்வாறு செய்கின்ற ஒருவன் மறுமையில் கும்பீகபாகம் என்ற கொடிய நரகத்திற்கு செல்வான் எனவும், அவ்வுறவினால் பிறர் தன்னை கண்டு விடுவார்களோ எனும் அச்சத்தினால் பயம் கலந்த இன்பத்தினையே அனுபவிக்க வேண்டும் எனவும், அப்பெண்ணுக்கும் தன் கணவன் வந்துவிடுவானோ எனும் பயம் ஏற்படும் எனவும் பழிபாவங்களுக்கு அஞ்சுகின்றவர்கள் அயலான் மனைவியரிடம் உறவு கொள்ளமாட்டார்கள் எனவும் நாவலடி கூறுகிறது.

அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்........
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன் தாரம்
நம்பற்க நாணுடையார். (பாடல் 81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றான் மனைவியை விரும்பிச் செல்கிறவர்கள் எந்தவிதமான நன்மையினையும் அடையமாட்டார்கள். விரோதம், பழி, பாவம், பயம் ஆகிய தீமைகளே அவர்களை வந்தடையும். இதற்கு மாறாக தர்மம், கீர்த்தி, நட்பு, மரியாதை என்பன அவர்களை விட்டு நெடுந்தொலைவில் சென்று விடும் எனக் கூறுகின்றார். பண்பில்லாத இச்செயலைச் செய்வதனால் ஒருவனுக்கு நரகம் தான் கிடைக்கும். அதாவது நாள், நட்சத்திரம் என்பன பார்த்து ஊரறிய திருமணம் செய்த ஒருவன் வீட்டில் மனைவி இருக்கும் போது பிறன் மனையை விரும்புதலாகாது எனக் கூறுகின்றார். அத்தோடு நற்பண்புகளின் பெருமையினை ஒருவன் உணர்ந்து கொண்டால் பிறருடைய ரகசியங்களை செவிடனைப் போல கேட்காமலும் அதேபோல பிறர் மனைவியை குருடனைப் போல பார்க்காமலும் இருப்பவனாக இருப்பின் அவனுக்கு யாரும் தர்ம உபதேசம் செய்யத் தேவையில்லை.

ஏதிலார் இல் கண் குருடனாய்த் தீய
புறங் கூற்றில் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறம் கூற வேண்டா அவற்கு (பாடல் 158)

அடுத்து பிறன் மனையை நயப்பவனை துச்சாரி என மற்றவர்கள் இகழ்ந்து பேசுவார்கள். இங்கு துச்சாரி என்பதன் பொருள் தீய ஒழுக்கமுடையவன் என்பதாகும். அதாவது பிறன்மனைவியை நயப்பவன் பிறரது பழிப்புக்கும், பாவத்திற்கும் ஆளாகுவான். ஒருவன் முற்பிறப்பில் பிறரது மனைவியின் கற்பினைக் கெடுத்திருந்தால் அடுத்த பிறப்பில் அவனுக்கு அலிப்பிறப்பே கிடைக்கும். இதனை,

கொம்மை வரிமுலையாள் தோள் மரீஇ – உம்மை
வலியால் பிறர்மனை மேல்சென்றாரே இம்மை
அலியாகி ஆடி உண்பார்

ஒருவன் பிறரது மனைவி மீது ஆசைப்பட்டால் அச்செயல் அறிவீனமானதாகும். அது தன் மனைவிக்கு செய்யும் துரோகமும் கூட. பிறன் மனைவியை நயக்கும் செயலானது ஒருவன் விஷப்பாம்பின் தலையை நக்குவதற்கு சமனாகும். அதாவது விஷப்பாம்பின் தலையை நக்கினால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மாவிடாது. அப்பாம்பானது அவனைக் கடித்து அவனது உயிரினை எடுத்துவிடும். ஒருவன் பாம்பின் தலையை நக்கினால் அது எப்படி நன்மைக்கு முரணான விளைவுகளைத் தருமோ அது போலத்தான் பிறன்மனைவியை நயத்தலால் வரும் விளைவும் அமையும்.

அம்பல் அயலெடுப்ப, அஞ்சித் தமர் பரீஇ,
வம்பலன் பெண் மரீஇ மைந்துற்று – நம்பும்
நிலைமையில் நெஞ்சத்தான் துப்புரவு, பாம்பின்
தலைநக்கி யன்னது உடைத்தது (பாடல் 87)

இங்கு ஒருவன் பிறன் மனைவியைச் சேரும்போது ஆண்மட்டுமல்ல பெண்ணும் தவறான வழியில் செல்கின்றாள். எனவே ஆண், பெண் ஆகிய இருவரும் கற்பு நெறியில் வாழ வேண்டும். அதாவது ஒரு ஆண் பிறன்மனைவியைச் சேராது விடும் போது, பெண்ணும் அத் தவற்றிலிருந்து விடுபடுகின்றாள் எனக் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும்.

பொதுமகளிரின் இழிவு

பொதுமகளிரின் இழிவுபற்றி கூறுகின்ற போது பொதுமகளிரின் இழிவு, பொதுமகளிரது இயல்புகள், பொது மகளிரது அன்பின் நிலையற்ற தன்மை, பணத்திற்காகவே வாழும் போலி வாழ்க்கை முறை என்பன பற்றிய தெளிவான கருத்துக்கள் நாலடியாரில் இடம்பெறுகின்றன. ஒருவன் நல்ல வழியில் வாழ விரும்பினால் அவன் தாசியர்களைத் தழுவிக் கொள்ள மாட்டான் எனவும், பணத்திற்காக மட்டும் வாழ்பவர்களே தாசிகளாவார்கள் எனவும் பொதுமகளிரின் இழிவுபற்றிக் கூறப்படுகின்றது. காமத்துப்பாலில் பொதுமகள் பற்றிக் கூறும்போது பொதுமகள் பணத்திற்காக போலி அன்பு காட்டுபவள் எனவும், பணம் இல்லாவிட்டால் பொய் பேசுபவாள் எனவும் ஆண்களிடம் காசு இல்லயெனின் அவனை வந்த வழியிலே திரும்பி அனுப்பிவிடுவாள் எனவும் கூறுகின்றார். நீலமலரையொத்த கண்களையுடைய அன்பில்லாத வேசிகள் பணமில்லாதவனை விஷம் போல எண்ணி வெறுத்துத் தள்ளுவார்கள். அதேவேளை அவனிடம் நிறைவாகப் பணம் காணப்பட்டால் அவனிடம் சக்கரை போல அன்பு கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணமில் நெஞ்சத்து அணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடு அனையர் காணவே
செக்கூர்ந்து கொண்டாடும் சேர்ந்த பொருளுடையார்
அக்காரம் அன்னார் அவர்க்கு (பாடல் 374)

அடுத்து பொதுமகளிர்களது அன்பு பற்றிக் கூறுகின்றபோது புது வெள்ளமானது மழை குறைந்த பின் மறைந்துவிடும். அதுபோல தாசிப்பெண்களது அன்பும் நிலையற்றது. அவர்களது நோக்கம் பொருள் பறிப்பது மட்டுமே. பணத்திற்காக அன்புள்ளவர்கள் போல நடிக்கும் கபட குணம் கொண்டவர்களே தாசிகளாவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்புற நாடின் வேறல்ல – புதுப்புனலும்
மாரியறவே யறுமே அவர் அன்பும்
வாரி அறவே அறும் (பாடல் 370)

மேலும் விலாங்குமீன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தன்னை விழுங்க வருகின்ற பாம்புகளிடம் தன்னைப் பாம்பு போலக் காட்டிக் கொள்ளும், மீன்களிடம் தன்னை மீன் போலக்காட்டிக் கொள்ளும். அது போல தாசிப் பெண்களும் தம்மை நாடிவருகின்ற ஆண்களுக்கேற்றபடி தம்முடைய போலி அன்பைக் காட்டி ஏமாற்றுகின்ற குணங்கொண்டவர்கள். அவர்களது அன்பு கபடமானது. இதனை உண்மை என நம்புகின்றவன் பழிக்கு ஆளாவான். இப்பெண்கள் ஆண்களை மயக்கி, பணத்தைப் பறித்துக் கொள்வார்கள். பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு உழவுக்குப் பயந்து தரையில் படுத்துக் கொள்ளும் காளைமாடு போல சமயத்தில் உதவமாட்டாதவர்களாகி விடுவார்கள். அத்தகைய குணம் கொண்டவர்களே தாசிப் பெண்களாவார்கள். பொதுமகளிரிடம் உறவு கொள்கின்றவன் ஏளனம் செய்யப்படுவான். அதுமட்டுமன்று இப்பெண் உள்ளத்தில் ஒருவனை நினைப்பாள், வெளியில் இன்னொருவனைக் காதலிப்பவள் போல நடிப்பாள் என, பொது மகளிரினது அன்பின் நிலையற்ற தன்மை கூறப்படுவதனைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமா போல் நக்கி அவர் கைப் பொருள் கொண்டு
சேமா போல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை
ஏமாந்து எமதென்று இருந்தார் பெறுபவே
தாமாம் பலரால் நகை (பாடல் 377)

பணத்திற்காகவே வாழும் பாங்கு உடையவர்கள் பொதுமகளிர். காதலனிடம் இருந்து பொருளினைப் பெறுகின்றபோது அன்பு காட்டி நம்ப வைத்துவிட்டு பின்பு அவனை ஏமாற்றும் குணம் கொண்டவளே விலைமாது. நற்கதி பெற விரும்புவோர் விலைமாதரை விரும்பமாட்டார்கள் எனவும் கூறுகின்றார்.

ஏமாந்த போழ்தின் இனியார் போன்று இன்னாராய்த்
தாம் ஆர்த்த போதே தகர்க்கோடாம் – மான் நோக்கின்
தம் நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்தும் என்பார் (பாடல் 378)

நன்கு நோக்கின் தாசிகளின் அன்பும், விளக்கொளியும் ஒன்றாகவே தோன்றுகின்றன. ஏனெனில் நெய் குறைந்தவுடன் விளக்கொளியானது மங்கி விடுகின்றது. அதுபோல பணவரவு குறைந்தவுடன் தாசிகளின் அன்பும் குறைந்துவிடும். அதாவது இங்கு விளக்கினது ஒளி வேசையர்களது நட்பிற்கு உவமையாகக் கூறப்படுகின்றது. பொருளுக்காகப் போலி அன்புகாட்டுபவர்களே பொதுமகளிர்கள் என, பொதுமகளிரின் இழிவு பற்றி நாலடியாரிற் கூறப்படுவதனைக் காணலாம்.

கற்புடைய மகளிரின் சிறப்புக்கள்

நாலடியாரில் காமத்துப்பாலில் கற்புடைய மகளிரது சிறப்புக்கள் கூறப்படுகின்றன. பிற ஆடவர்கள் தன்னை நாடிவரும்போது அவர்களிடமிருந்து ஒரு பெண்ணானவள் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல ஒரு பெண்ணானவள் பிற ஆடவர்கள் தன்னைப் பார்த்து ஆசை கொள்ளாத அளவிற்கு அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறப்படுவதனைக் காணலாம். கற்புக்கரசியாகிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணானவள் எத்தகைய துன்பங்கள் தன்னை நோக்கி வந்தாலும் அத்தகைய துன்பங்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். சாஸ்திரங்களானவை ஒரு மனிதனைப் பண்படுத்த உதவுகின்றன. அச் சாஸ்திரங்களின் பெருமையினை அளவிட்டுக் கூறமுடியாது. செல்வமானது எல்லோரினுடைய கையில் இருந்தாலும் அதனால் பலன் ஏற்படப்போவதில்லை. அதாவது அச்செல்வமானது தானதர்மங்கள் செய்பவர்களிடம் இருந்தால் தான் அச்செல்வத்தினால் பலன் உண்டு. இல்லையேல் அச்செல்வத்தினால் எவ்விதமான பலனும் இல்லை. வீரன் எனின் அவனிடம் வாள் காணப்பட வேண்டும். அதாவது நல்லறிவாளர்களிடம் உள்ள சாஸ்திரம் போலவும், தான குணம் உள்ளவனிடம் உள்ள செல்வம் போலவும், வீரனுடைய கையில் உள்ள வாள் போலவும் நாண் குணம் உள்ள குலப் பெண்களின் பெருமை சிறந்து விளங்குகின்றது. அதாவது நாணம் உள்ளவர்களே குலப் பெண்களாவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

உள்ளத்து உணர்வுடையான் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான் கண் ஒண் பொருள் தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில் வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம் (பாடல் 386)

மேலும், கற்புடைய பெண்கள் பற்றிக் கூறுகின்றபோது, பின்வரும் கருத்துக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது எந்தவொரு குலப் பெண்ணும் தன் கணவன் பிற பெண்களை நாடிச் செல்வதனை விரும்பமாட்டாள். இக்கருத்தானது குலப் பெண்ணின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. தன் கணவன் வேறு ஒரு பெண்ணிடம் சென்று மீண்டும் தன்னையும் தீண்ட வருகின்றபோது, அப்பெண்ணின் உள்ளக் குமுறல்கள் பின்வருமாறு அமைகின்றன: "நல்நுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது என்னையும் தோய வரும்."

தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரம் பற்றி கூறுகையில் உடுக்கையின் இடதுபாகம் போல நாயகனைப் பிரிந்து நாம் பயனற்றுக் கிடக்கின்றோம் எனப்படுகிறது. அதாவது உடுக்கையின் வலது புறத்திற்குத் தான் முக்கியத்துவம் அதிகம், இடது புறத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உடுக்கையின் இடது பாகம் குலப் பெண்களுக்கும், உடுக்கையின் வலப்பாகம் தாசிப் பெண்களுக்கும் உவமிக்கப்பட்டுள்ளன. இங்கு தலைவனை பிரிந்த தலைவியின் துயரம் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல அப்பெண்ணின் கோப உணர்ச்சியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொடியவை கூறாதி பாணநீ கூறின்
அடிப்பைய விட்டொதிங்கிச் சென்று துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற்கு அதனால்
வலக்கண் அனையார்க்கு உரை (பாடல் 388)

கணவனுடன் சேர்ந்து வாழ்வதனையே கற்புடைய பெண்ணானவள் விரும்பினாள். தன்னைவிட்டுக் கணவன் பிரிந்து சென்றதனால் அவள் தன்னைத் தானே இழிவாக நோக்கினாள். அதாவது உடுக்கையின் இடது பக்கம் போல நான் பயனற்றவளாகி விட்டேன் எனவும், கரும்பின் நுனிப்பகுதி போல சாரமற்றவளாகி விட்டேன் எனவும் தன்னைத் தானே இழிவாகக் கூறிக் கொண்டாள், அப்பெண்ணானவள் தான் அணிந்த மாலையினைக் கழற்றி எறிந்தாள், பூசிய சந்தனத்தைத் துடைத்துக் கொண்டாள், தன் தலைவனை எண்ணிக் கண் கலங்கினாள் என்று கூறுவதனூடாக, கற்புடைய பெண்ணானவள் தான் ஒழுக்கத்துடன் வாழ்வதோடு தன் பதியுடன் எப்போதும் சேர்ந்து வாழ்வதையே விரும்பினாள் என்பதனைக் காட்டி நிற்கின்றது நாவலடி.

பெண் அழகு

அழகு என்பது அனைவரினாலும் விரும்பக்கூடிய ஒன்றாகும். அநேகமான இலக்கியங்கள் பெண்களை அழகாகவே வர்ணிக்கின்றன. நாலடியாரும் அதற்கு விதிவிலக்கல்ல. துறவினை வலியுறுத்த முற்படுகின்ற போதெல்லாம் இந்நூலில் பெண்களது அழகு வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நூலில் அழகிய மலர்களைக் கூறி அம்மலர்களை பெண்களது அங்கங்களுக்கு ஒப்பிடுவதனூடாக பெண்களது அழகு வெளிப்படுத்தப்படுகின்றமையினைக் காணலாம். அதனைவிட பெண்கள் தங்களுக்குள் செய்து கொள்கின்ற ஒப்பனைகளைக் குறிப்பிட்டு அதனூடாகவும் பெண்களது அழகு வெளிப்படுத்துகின்றது. பெண்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களை முல்லை மலருக்கு ஒப்பானது எனவும், கண்கள் கயல்மீன் போன்றவை எனவும் வர்ணிப்பதனைக் காணலாம்.

தலைவன் ஒருவன் தன் தலைவியின் கண்களின் அழகினை பின்வருமாறு கூறுகின்றான். அதாவது மீன் கொத்திப் பறவைகளானவை தன் தலைவியின் கண்களின் அழகைப் பார்த்து கயல் மீன் என்ற நினைப்பினால் தன் தலைவியின் பின் சென்றதாக கூறுகின்றான். இக்கருத்தானது தலைவியின் கண்களின் அழகைப் பார்த்து மயங்கிய தலைவன் அதை, தன் தோழனிடம் கூறிய கருத்தாக உள்ளது.

கண் கயல் என்னும் கருத்தினால் காதலி
பின் சென்றதம்ம சிறு சிரல் – பின் சென்றும்
ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண் புருவம்
கோட்டிய வில்வாக்கு அறிந்து *(பாடல் 395)*

நாலடியார் துறவினை வற்புறுத்திக் கூறுவதற்காக பெண்களை இழிவாகக் கூறினாலும் கற்புடைய மகளிர் பற்றிக் கூறும்போது பெண்களை உயர்வாகக் கூறுகின்றது. இந்நூல் தோற்றம் பெற்ற சூழல், அதற்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட சமூகப் பிறழ்வுகள் என்பன உலகப் பற்றுக்களில் ஆழ்ந்த மக்களை அவற்றிலிருந்து விடுவிப்பதற்காக உலகின் நிலையற்ற தன்மையினைக் கூறவேண்டிய தேவையின் நிமித்தம் துறவினை அதிகமாக வற்புறுத்திக் கூறுகின்றமையைக் காணலாம். துறவினை வற்புறுத்திக் கூற முற்படுகின்ற போதெல்லாம் நாலடியார் பெண்களையே இழிவாகக் கூறுகின்றமையைக் காணலாம். பெண்களை இழிவாகக் கூறினால் ஆண்கள் பெண்களை நாடிச் செல்லமாட்டார்கள் என எண்ணி அவ்வாறு கூறியிருக்கலாம். அதனைவிட சமண முனிவர்களது நோக்கில் பெண்கள் வீடுபேறு எய்த முடியாது, அவர்கள் வீடுபேறு எய்துவதற்கு மறுபிறப்பில் ஆணாகப் பிறக்க வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

01. சாமிசிதம்பரனார், (1968) 'பதினெண்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்', இலக்கிய நிலையம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கிருஷ்ணமூர்த்தி, ச. (2007) 'நாலடியார் மூலமும் பாதிக்கப்படாத பழைய உரையும்', மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

03. ராஜம் கிருஷ்ணன், (1994) 'காலந்தோறும் பெண்கள்', நேசனல் புக்டிரஸ்ட், சென்னை.

04. கணேசலிங்கன், செ. (1990) பெண்ணியப் பார்வையில் திருக்குறள் "குமரன் புத்தக நிலையம், சென்னை.

05. ஸ்ரீராம தேசிகன், எஸ். என். (1990) 'நாலடியார் தெளிவுரை', கங்கை புத்தக நிலையம், சென்னை.

06. ஸ்வாமி, (1991) 'இந்துதர்ம வாழ்க்கையும், தத்துவங்களும்', சென்னை.

07. சாமி சிதம்பரனார். (1968) 'நாலடியார் பாட்டும் உரையும்'. இலக்கிய நிலையம் சென்னை.

08. கௌஸ்யா சுப்ரமணியன், (1993) 'இந்தியச் சிந்தனை மரபு' சவுத் ஏசியன் புக்ஸ் சென்னை.

09. பிளேவியா அக்னீஸ், 'சட்டமும், பெண்களின் பாலியல் உரிமைகளும்', விடியல் பதிப்பகம்.

10. செல்வம் வே.தி., (1999) 'தமிழக வரலாறும் பாண்பாடும்', மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

11. மங்களமுருகேசன், ந.க. (1994) 'தமிழ்நாட்டுச் சமுதாய பண்பாட்டு வரலாறு' தீபா பதிப்பகம். சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமும்
கலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக் கால இலக்கியங்கள் –சில விவாதங்கள்

சு. வேங்கடராமன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்தை அடுத்து வருவது அறநெறிக் காலம். கி.பி. 2–6 வரை உள்ள இக்காலப் பகுதியில் மிகுதியான அற நூல்கள் தோன்றியதால் இப்பெயர் பெற்றது. திருக்குறள், நாலடியார், பழமொழி போன்ற அறநூல்கள் இக்காலத்தில் தோன்றின. அற நூல்களோடு சங்க அகமரபு சார்ந்த ஐந்திணை நூல்களும் புறமரபு சார்ந்த களவழி நாற்பதும் அடங்கிய பதினெண் கீழ்க்கணக்கு தொகை நூல், இவ்வாறு மூன்று வகை நூல்கள் பதினெட்டு உள்ளடக்கியது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்கள், சங்க மரபின் பிற்காலம் சார்ந்த பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்பனவும் இக்காலப் பகுதியில் அடங்கும். சமய இலக்கிய மரபின் தொடக்கமான காரைக்கால் அம்மையார் பாடல்கள், முதல் ஆழ்வார் மூவர் பாடல்கள் என்பனவும் இக்காலப் பகுதியில் அடங்கும். இவ்விலக்கியங்களை இலக்கிய வரலாற்று நோக்கில் விளக்குவதாக, குறிப்பாக இவை குறித்த சில விவாதங்களை முன் வைப்பதாக இக்கட்டுரை அமைகிறது. இதில் எழுப்பப்படும் வினாக்கள் தொடர் ஆய்விற்கு உரியன. பொதுவாகத் தமிழ்ப்புலமை மரபில் வழிவழியாகக் கூறப்படும் கருத்துக்களை மறுவாசிப்புச் செய்யுமாறு இக்கால அளவில் அகச் சான்றுகளைக் கொண்டு இந்த விவாதங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை நூல்கள் - தொகுப்பும் பதிப்பும்

சங்க இலக்கிய பாட்டும் தொகையும் தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டவை. இவை தமிழ் மரபில் முதன்முதலாகத் தொகுக்கப்பட்டவை. இவைகளைத் தொடர்ந்து அறநெறிக்காலத்து 18 நூல்களைத் தொகுத்து பதினெண்கீழ்க்கணக்கு என வழங்கினர். தொகை நூலாக்கம் தமிழ் மரபில் தொடர்ந்து செயற்பட்டு வருவதை வரலாறு காட்டும். சங்கத் தொகை நூல்கள் (எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்) தமிழ் இலக்கிய மரபில் தனித்தனியே 'தொகை நூல்' (தொகுக்கப்பட்டவை) எனவும் சேர்த்து மொத்தமாகப் 'பதினெண் மேல் கணக்கு நூல்கள்' எனவும் வழங்கப்படுகின்றன.

தமிழ் மரபில் சங்கப் பாடல்களைத் தொகை நூல் எனவும் அவை தொகுக்கப்பட்டவை எனவும் மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கத்தில் சிவபெருமானை முதலாகக் கொண்ட புலவர் கூட்டம் தொகுத்தது எனவும் வழி வழியாகக் கூறப்படுகிறது. சமண, பௌத்த சமயங்களுக்கு மாற்றாகத் தமிழையும், சங்கத்தையும் வைதிக சமய அடையாளப்படுத்த இத்தகைய தொன்மக்கதையை உருவாக்கினர். இதற்கான, காலத்தால் முந்தைய முதல் சான்று திருஞான சம்பந்தர் தேவாரத்தில் உள்ளது. 'அற்று அன்றி அம் தண் மதுரைத் தொகை ஆக்கினான்' (சம்பந்தர் தேவாரம். 3.54– பாடல் 11) என்று அவர் பாடுகிறார். இதன் பின்னுள்ள, சைவசமயம் சார்ந்த கருத்துருவாக்க அரசியல் அறியத்தக்கது.[1] இதைத் தொடர்ந்து அடுத்த காலத்தில் (கி.பி. 8நூ) நக்கீரர் மூன்று சங்கங்கள் பற்றிய தொன்மக் கதையை விரிவாகக் களவியல் உரையில் பதிவு செய்துள்ளார். இன்றுவரை தமிழ் மரபில் அனைவரும் இக்கதையை ஏற்றுத் தமிழின் பழைமையை நிலைநாட்டப் பயன்படுத்துகின்றனர். கால அடிப்படையை ஏற்காமல், காலத்தால் பிற்பட்ட பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றையும் சங்கத் தொகை நூல்களாகவே கூறி வருகின்றனர்.

மேற்கணக்கு என்பதை முன்மாதிரியாக்கி அறநெறிக்கால நூல்கள் 18 கொண்ட தொகுப்பு பதினெண் கீழ்க்கணக்கு எனப் பெயரிட்டனர். இத்தொகுப்பிலுள்ள அற நூல்கள் பலவும் சமண சமயம் சார்ந்த புலவர்கள் பாடியவை. ஆனாலும் சங்க காலத்தை அடுத்து வரும் அறநெறிக் கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களான 18 நூல்களைக் 'கீழ்க்கணக்கு நூல்கள்' எனப் பெயரிட்டனர். இத்தொகை நூலுக்குக் கீழ்க் கணக்கு எனப்பெயர் வைத்ததிலும் சைவ சமயச் சார்புடைய அரசியல் உள்ளது. கீழ்க்கணக்கு என்ற சொல், தமிழ் மரபில் முதன்முதலாக அப்பர் தேவாரத்தில் உள்ளது. 'எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே' (அப்பர் தேவாரம் 5.21 – பாடல் 8) என்பது அப்பாடலடி.[2] எனவே, பக்தி இலக்கிய காலத்தில்தான் முதன்முதலாகத் தொகை நூல், கீழ்க்கணக்கு போன்ற சொற்களும் அவைகளின் பின்னுள்ள சமய நோக்கமும் செயற்பட்டுள்ளன. நூல்களைத் தொகுத்த முயற்சியில் காலம், பொருள் என்ற அடிப்படை இல்லாமல் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதே முறைதான் பின்வந்த திருமுறை, திவ்வியபிரபந்தம் தொகுப்புகளிலும் காணப்படுகிறது. சான்றாக கால வேறுபாடு இன்றி திருமுறைத் தொகுப்பில் சம்பந்தர் முதலிலும் காரைக்கால் அம்மையார் 11 இலும் உள்ளனர்.[3] பெரியாழ்வார் முதலிலும் முதல் மூவர் நான்கிலும் திவ்யப்பிரபந்தத்தில் உள்ளனர். சங்க இலக்கியப் பத்துப்பாட்டுத் தொகுப்பில் திருமுருகாற்றுப் படை உள்ளது. 11 ஆம் திருமுறையிலும் திருமுருகாற்றுப்படை உள்ளது.

ஒரே நூல், இருவேறு காலங்களில் தொகுக்கப்பட்டுள்ள தொகை நூல்களில் இடம்பெறுவது ஏன்? இன்று வரை அதே நிலை நீடிப்பது ஏன்? என்ற வினாக்கள் இயற்கையாக எழும். தொகை நூல்கள் குறித்த ஆய்வு நம் மரபில் இல்லை. அறநெறிக் காலத் தொகுப்பு நூலான கீழ்க்கணக்கு நூல்களில் பொருத்தமற்ற முறையில், நூலுக்கு தொடர்பில்லாததாகக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன. பெரும்பாலான நூல்களில் நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து எனவும் இறுதியில் மிகைப்பாடல் எனவும் அந்தந்த நூலின் கருத்தோட்டத்திற்கு மாறானதாக இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் குறித்த விரிவான ஆய்வு நிகழ வேண்டும். இவை பிற்காலத்தில் யாரோ ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டவை. சங்க இலக்கியங்களிலும் இதே நிலைதான்.

•

பரிபாடல் இன்று நமக்குக் கிடைத்துள்ள பிரதியில் சில பாடல்களின் கீழ் (பாடல் இறுதியில்) கடவுள் வாழ்த்து என்ற குறிப்பு உள்ளது. பாடல் முழுவதுமே திருமால் அல்லது செவ்வேள் பற்றியதாக இருக்கும்போது தனியாக ஒரு சிலவற்றில் மட்டும் இவ்வாறு குறிப்பிடப்படவேண்டியது ஏன்? இன்று வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பதிப்புக்களிலும் இதே நிலை உள்ளது ஏன்? அடிப்படையான தருக்க நெறியோ கருத்து விளக்கமோ இல்லாமல் அப்படியே இருப்பதைப் படியெடுப்பதாகத் தொகுப்பும் பதிப்பும் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதே இன்றைய நிலை. பரிபாடல் நூலின் இறுதியில் நூலுக்குத் தொடர்பற்ற முறையில் 11 பாடல்கள், பரிபாடல் திரட்டு என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 பாடல்கள் (3, 4, 5, 12) வையை பற்றியன. ஏனையன மதுரைப் பாடல்கள். இந்த மிகைப் பாடல்களுக்கும், பரிபாடலில், முழுமையாக உள்ள, 22 பாடல்களுக்கும் பொருள் தொடர்பு இல்லை; யாப்பு, இசை, அமைப்பு முறை, மொழிநடை என்ற எந்தத் தொடர்பும் இல்லாத மிகைப் பாடல்களை, ஒன்றாகச் சேர்த்து பரிபாடல் திரட்டு என்று மட்டும் பெயரிட்டு இன்றுவரை ஒன்றாகப் பதிப்பித்துள்ளனர்.[4]

நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் முதல் பதிப்பில் (1918இல் வெளிவந்தது) உ.வே.சா. இந்த மிகைப் பாடல்களை ஏட்டில் காணப்பட்டவை என்ற குறிப்போடு பதிப்பித்தார். பரிமேலழகர் உரை முதல் 22 பாடல்களுக்கு மட்டுமே உள்ளது. பின்வந்த பதிப்பு, உரை ஆசிரியர்கள் அனைவரும் எந்தக் குறிப்புமின்றி மிகைப்பாடல்களுக்கும் உரையெழுதிப் பதிப்பித்துள்ளனர். 'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை' என்ற பாடலைப் பரிபாடல் என்றே மேற்கோள் காட்டி, மதுரை நகரின் அமைப்பு பரிபாடல் காலத்திலே, ஊரின் நடுவில் கோயிலும் அதைச் சுற்றித் தெருக்களும் இருந்தன என்றே ஆய்வாளர் எழுதினார். (அ.கி.பரந்தாமனார்)[5] இப்பாடலின் போக்கே பிற்காலத்தது என்பதைக் காட்டும். ஆனால் இன்றளவும் இந்த மிகைப்பாடல்கள் விவாதத்திற்கு உட்படுத்தப்படாமல் ஏற்கப்பட்டு உரை எழுதப்பட்டு வருகின்றன. இப்பாடல்கள் பல வெண்பாவாக உள்ளன. திருமுருகாற்றுப்படை நூலின் இறுதியிலும் இதுபோன்ற வெண்பாக்கள் சில உள்ளன. பெரும்பாலும் நூற்பயன் கூறும் முறையில் அமைந்தவை அவை. பரிபாடல் திரட்டு எனப்படும் மிகைப் பாடல்கள் வையை, மதுரை சிறப்புக்களைக் கூறுவதற்காகப் பிற்காலத்தில் யாரோ ஒருவரால் பாடப்பட்டவை. ஏடு எழுதுவோர், படியெடுப்போர் செய்த தவறுகளால் இவை இடம்பெயர்ந்து பரிபாடல் மூல ஏட்டோடு வந்திருக்கக்கூடும். புறத்திரட்டு தொகுப்பில் இடம்பெற்ற இப்பாடல்களையும் சேர்த்து, ஒன்றாகத் தொகுத்துப் பொருத்தமின்றிப் பதிப்புக்கள் வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ இலக்கிய மரபில் நூல் சிறப்பு, பாடியவர் சிறப்பு, நூலின் பொருள், நூற்பயன் கூறும் இத்தகைய பாடல்கள் (வெண்பா) பாடும் மரபு உள்ளது. இவை தனியன் (நூலுக்குப் புறத்தே தனியாக இருப்பதால் தனியன்) எனப்படும். தமிழ் மரபில் இத்தகைய பாடல்கள் பாடப்பட்ட காலத்தில் (கி.பி 10 ஆம் நூ.நாதமுனி காலம் முதல்) பரிபாடல், திருமுருகாற்றுப்படை, திருக்குறள் போன்ற நூல்களிலும் இத்தகைய மிகைப் பாடல்கள் பாடப்பட்டன. இந்த இலக்கியப் போக்கைப் பரிமேலழகர் அறிந்திருந்தார். இன்றைய பதிப்பு, உரை ஆசிரியர்கள், ஆய்வாளர்களுக்கு இது தெரியாததால் ஏற்பட்ட விளைவு இது.

அறநெறிக் காலத் தொகை நூல்கள் பலவற்றில் வைப்பு முறை, இயல், அதிகாரம், பால், உட்தலைப்பு என்ற அனைத்து நிலைகளிலும் விவாதங்களுக்கு இடம் உள்ளது. மூலநூல் ஆசிரியரால் செய்யப்படாது. பிற்காலத்தில் இவை செய்யப்பட்டு இன்று அவை யாவும் மூலநூல் ஆசிரியராலே பாடப்பட்டதாக எண்ணுமாறு பதிப்புகள் உள்ளன. சான்றாகப் பரிபாடல் முதல் பதிப்பில், பாடலில் உட்தலைப்புகள் இல்லை. ஆனால், பிற்காலப் பதிப்பு அனைத்திலும் உட்தலைப்புகள் உள்ளன. பல இடங்களில் இந்த உட்தலைப்புகள் இன்றைய சிந்தனையை மூலநூலில் ஏற்றும் முயற்சியாக உள்ளன. மூலத்தின் கருத்தைத் தவறாக வழிகாட்டுவதாகச் சில இடங்களில் இவை உள்ளன. தொடர்ந்து ஆய்விற்குரிய களமாகத் தொகை நூல்கள் உள்ளன. திருமுருகாற்றுப்படை பதிப்பிலும் இதே நிலைதான். பழைய ஆற்றுப்படை இலக்கிய வகையை இன்றைய ஆறுபடைவீட்டுப் புகழ்பாடும் நூலாக்கும் போக்கு இப்பதிப்புகளில் உள்ளது.[5] இதனால், மூலப்பிரதியைப் பதிப்பாசிரியர் தம்முடைய வாசிப்பிற்குரிய பிரதியாக ஆக்கிட, ஆய்வாளர்கள் தவறான முடிவுகளுக்குச் செல்ல இம்முயற்சிகள் உதவின.

திருமுறை, திவ்வியப்பிரபந்தப் பதிப்புகளிலும் இதே சிக்கல் வேறு தளத்தில் உள்ளது. திருமுறைப் பதிப்பில் கால வரிசை, வைப்புமுறை இன்றி அம்மையார் பாடல்கள் 11– ஆம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன.[7] சங்க காலம், சிலம்பு இவற்றையடுத்துப் பண் மரபிற்கு அவர்தான் வழிகாட்டியவர். நட்டபாடை, இந்தளம் ஆகிய இரு பண்களில் அவர் பாடியுள்ளார் (மூத்த திருப்பதிகங்கள் 1, 2). அதேபோல அவர்தான் முதன்முதலாகத் தமிழ் இலக்கிய மரபில் நூற்பயன் பாடும் மரபை உருவாக்கினார்.[8] பண்முறைப் பதிப்பு பற்றி வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர்கள் இவருடைய இப்பங்களிப்பை முன்னோடியானது எனக் கூறவில்லை. பண்முறையில் தொகுக்கப் பட்டதாலே திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் காலத்தால் முற்பட்ட முதலாழ்வார் மூவர் பாடல்கள் 'இயற்பா' எனப் பெயரிடப்பட்டுத் தொகுப்பின் இறுதியில் 4 ஆவது ஆயிரமாகச் சேர்க்கப்பட்டன. எனவே, அறநெறிக் கால இலக்கியங்கள் பலவற்றிலும் தொகை நூல் சார்ந்த சிக்கல்கள் உள்ளன. இவை தொடர்வாசிப்பிற்கும் ஆய்விற்கும் ஏற்ற களங்கள் ஆகும். பன்முறை வாசிப்பிற்குரியதாக நம் இலக்கியங்கள் உள்ளதை இதனால் அறியலாம்.

சமயம்

சங்க கால இலக்கியங்களிலே ஐந்து திணைகளுக்குரிய திணைத் தெய்வம் இனக்குழு மக்களின் வழிபாட்டிற்குரியதாக இருந்தது. பல்வேறு சமய மரபுகள் அக்காலத்தில் இருந்தன. சமணம், பௌத்தம், வைதிக சமயம் என்பவைகளும் வழக்கில் இருந்தன. கலித்தொகை, திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவைகளில் வைதிக சமய வளர்ச்சியைக் காணமுடியும். பெருந்தெய்வ மரபு, தொன்மங்கள், வழிபாட்டுச் சடங்குகள், பக்தி என்ற கருத்தாக்கம், தத்துவ மரபுகள் என்ற பல்வேறு நிலைகளிலான வளர்ச்சியை இந்த மூன்று நூல்களும் பதிவு செய்துள்ளன. திருமுருகாற்றுப்படையில் குறிஞ்சித் திணைக்கடவுளான சேயோனும் பெருந்தெய்வ முருகனும் கலந்த முருக வழிபாட்டு மரபைக் காண்கிறோம். எனவேதான் உயிர்ப்பலி கொடுத்துப் பூசாரி (வேலன்) வெறியாடும் மரபையும் வேதமுறைப்படி வேள்வி செய்து வழிபடும் மரபையும் ஒன்றாக இந்த நூல் விளக்குகிறது.

பரிபாடல் முதன்முதலாகத் தமிழ் மரபில் சமயம் குறித்த பல்வேறு செய்திகளைக் கூறுகிறது. பின்வரும் பக்தி இலக்கிய மரபின் தொடக்கமாக இந்த நூல் உள்ளது. திருமால், செவ்வேள் ஆகிய இரு கடவுளரும் இந்த நூலில் பெருந்தெய்வ மரபில் இடம்பெற்றுள்ளனர். செவ்வேள், சிவன் இருவரையும் தமக்குள் கொண்ட ஒருவராகப் பரம்பொருள் தன்மையில் திருமாலைப் 'பதிமுது நிலையில்' இந்த நூல் விளக்குகிறது.[9] முருகனைப் பெரும்பெயர்க் கடவுளாகக் குறிப்பிட்டபோதிலும் அவனை ஒரே பரம்பொருளாகக் காட்டவில்லை. முதன் முதலாகக் கண்ணன், பலதேவன், முருகன் திருமேனிகள் (படிமம்) இந்த நூலில் விளக்கப்படுகின்றன. பரங்குன்று, மாலிருஞ்சோலை, இருந்தையூர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளவாய் போன்ற தலங்கள் இந்த நூலில் போற்றப்படுகின்றன. இறைவனின் திருவடி, அவன் உறையும் மலை என்பவற்றை வழிபடல், அவையே வீடுபேற்றைத் தருபவை, கூட்டுவழிபாடு, தொடர்ந்து வரும் பிறவிகளிலும் வழிபடும் வரம் வேண்டல், ஆடிப்பாடி தொழுது வழிபடும் உணர்ச்சி மயமான பக்தி என்ற பல்வேறு சமயக் கருத்தாக்கங்கள் பரிபாடலில் முதன் முதலாக இடம் பெற்றுள்ளன.

பரிபாடல் முருகன் பிறப்பு பற்றிய தொன்மக் கதையைத் தமிழ் மரபில் மாறுபட்ட முறையில் முதன் முதலாகப் பதிவு செய்துள்ளது.[10] இக்கதை வழக்கு திருமுருகாற்றுப்படை, கந்த புராணம் (வடமொழி, தமிழ்) அருணகிரி உள்ளிட்ட கௌமார மரபினர் பாடல்கள் என எங்கும் இடம்பெறவில்லை. பரிபாடல் காலத்திலேயே குறிஞ்சித் திணை இனக்குழு மக்களிடம் ஒருவருடைய கருவை, மற்றொருவருக்கு மாற்றி வளர்க்கும் 'கருமாற்றப் பதியம்' மருத்துவ முறை நடைமுறையில் இருந்தது என்பதை இத்தொன்மக்கதை விளக்குகிறது. மரபு சார்ந்த அறிவியல் (மருத்துவம்) வளர்ச்சியை இலக்கியங்கள் வழி ஆராய்வதற்கு நம்மிடம் வாய்ப்புகள் உள்ளன என இதனால் அறியலாம்.

சிலம்பில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய மூன்றிலும் முறையே, கொற்றவை, திருமால், முருகன் ஆகியோர் சமய மரபுகள் உள்ளன. வேட்டுவ வரியில் பாலை நிலக் கொற்றவை வழிபாடு உள்ளது. தமிழ் மரபில் முதன் முதலாகத் துர்க்கை, மகிடாசுரமர்த்தினி ஆகிய கோலங்களைச் சிலம்பு பதிவு செய்துள்ளது. பின்னர் வளரும் 'படிமவியல்' (Iconography) கலை வளர்ச்சிக்கு இது பெரிய பங்களிப்பு. சங்கு, சக்கரம் ஏந்தியவளாகத் துர்க்கை – விஷ்ணு துர்க்கையாக – சிலம்பு முதன்முதலாகப் பதிவு செய்துள்ளது. அதேபோல மகிடாசுரமர்த்தினி கோலமும் முதன் முதலில் விளக்கமாக வேட்டுவ வரியில் இடம்பெற்றுள்ளது. சிறுமி ஒருத்தியைக் கொற்றவையாக உருவகித்து (பாவித்து) அவளைக் கோலஞ்செய்து (ஒப்பனை செய்து) பீடத்தில் அமர்த்தி வேட்டுவ மக்கள் வழிபடுகின்றனர். பாலை நில இனக்குழு மக்களின் இந்த வழிபாட்டு மரபைப் பிற்கால சாக்த மரபினர் வாலை (பாலா) வழிபாடாக உள் வாங்கினர். வழக்குரைகாதையில் வாயிற்காப்போனுக்குக் கண்ணகி கொற்றவையாக – ஏழு பெண் கடவுளராகக் (சப்த மாதராக) காட்சி தருகிறாள். தமிழ் மரபில் சப்த மாதர் பற்றிய முதல் பதிவு இதுதான்.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றக் குரவையில் குறிஞ்சி நிலக்கடவுளாக முருகன் இடம் பெறுகிறான். ஆய்ச்சியர் குரவையில் கண்ணனை ஆயர் பெண்கள் குரவைக் கூத்தாடி வழிபடும் மரபு உள்ளது. ஏழு பெண்கள் வட்டமாகக் கை கோர்த்து நின்று ஆடிப்பாடுகின்றனர். ஏழு, பெண்களும் இசையின் அடிப்படை ஏழு சுரங்களைக் குறிப்பர். கண்ணன், நப்பின்னை, பலதேவன், யசோதை, மூன்று தோழியர் (கோபிகையர்) என எழுவரும் அடையாளப் படுத்தப்படுகின்றனர். ஏழு பெண்களும் நிற்கும் நிலை ஒரு பண்ணுக்குரியது. அவர்கள் இடம் மாறினால் – சுரத்தனம் மாறினால் – பண் மாறும். அவர்கள் ஆடும் ஆய்ச்சியர் குரவை தமிழ் மரபில் மட்டுமல்ல இந்திய மரபிலும் முதல் பதிவு. இம்மரபே பிற்காலத்தில் 'ராசலீலை' என உருமாறிப் பாகவத புராணம், கீதகோவிந்தம் போன்ற வடமொழி நூல்களில் இடம் பெற்றது.[12] குரவையின் தொடக்கத்தில் கண்ணன் ஆடியது 'வாலசரிதையுள் படுவோம்' (சிலம்பு ii, 17, கருப்பம்) என்று குறிப்பிடப்படுகிறது. கூத்து ஆடிய முறை, பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால், அவர்கள் ஆடிய கூத்திற்குரிய வால சரிதைப் பிரதி (script) நமக்குக் கிடைக்கவில்லை. வடமொழியில் பாஸன் என்னும் நாடக ஆசிரியர் வால சரித என்னும் நாடகம் எழுதியுள்ளார். அது 'பாலசரிதம்' எனத் தமிழில் மொழி பெயர்ப்பாகி உள்ளது. ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிடப்படும் பிரதியும் பாஸனின் நாடகப் பிரதியும் ஒன்றா? எது காலத்தால் முற்பட்டது என்ற வினாக்கள் தொடர் ஆய்விற்கு உரியன. வேட்டுவ வரியில் பாலை நில இனக்குழு மக்களின் வழிபாட்டு மரபைக் காட்டும் இளங்கோ காப்பிய இறுதியில் கண்ணகிக்குக் கட்டுமானக்கோயில் எடுத்து வழிபடும் மரபைக் காட்டுகிறார். ஒரே நூலில் பெண் தெய்வ வழிபாட்டின் இரு மரபுகளும்– இனக்குழுவினரின் சிறு நெறியும் அரசன் உள்ளிட்ட உயர் மரபினரின் பெரு நெறியும் இடம் பெற்றுள்ளன. கண்ணகி மதுரையை எரித்தபின் மனம் நொந்து நடந்து வரும்போது மதுராபதித் தெய்வம் (மதுரை நகர் காவல் தெய்வம்) அவள் முன் தோன்றி நடந்த நிகழ்வுகளுக்கு ஊழ்வினை காரணம் என விளக்குகிறது. அத் தெய்வம் (பெண் தெய்வம்) உமையொரு பாக வடிவில் (பாதிமாதுடனாய வடிவம் – அர்த்த நாரீசுவரர்) தோன்றுகிறது.[13] இந்தப் படிமமும் தமிழ் மரபில் முதல் பதிவு. மதுரைநகர்க் காவல் தெய்வமான பெண் (தெய்வம்) ஏன் இந்த வடிவில் தோன்றினாள்? என்பது ஆய்விற்குரியது. சிலம்பில் இதுபோன்ற இடங்கள் பல விவாதத்திற்குரியனவாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலையில் சமய மரபுகள் குறைவாகவும் தத்துவ மரபுகள் மிகுதியாகவும் உள்ளன. தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு சமயங்கள் சார்ந்த தத்துவங்களைச் சாத்தனார் இந்நூலில் முதன்முதலாகப் பதிவு செய்துள்ளார். உயிர், உடல், உலகு, இறைவன் என்பன குறித்தும், அவைகளுக்கிடையிலான தொடர்பு குறித்தும் அறிவு பூர்வமான விளக்கங்களை முன் வைப்பதில் ஒவ்வொரு சமய மரபினரும் தனித்தன்மை வாய்ந்த வெவ்வேறு கொள்கைகளைக் கூறுகின்றனர். எனவே, தத்துவ மரபுகள் மாறி வருகின்றன. ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளே சிறந்தவை எனத் தருக்கநெறியில் வாதிடும் நடைமுறையை மணிமேகலை முதன்முதலாகக் கூறுகிறது. இத்தனைச் சிந்தனை மரபுகள் தமிழகத்தில் எப்போது, ஏன் வந்து கலந்தன? இதற்கான மூலங்கள் எங்கு உள்ளன? என்ற வினாக்கள் தொடர் ஆய்விற்குரியன.

காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்கள் சைவ பக்தி இலக்கியத்தின் முன்னோடிகள். அவை அறநெறிக் காலத்தில் தோன்றியவை. பரிபாடல், முருகு, சிலம்பு ஆகியவைகளின் தொடர்ச்சியாக அம்மையார் பாடல்கள் அமைகின்றன. பக்தி மரபை அவர் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லுகிறார். பதிகம், இரட்டை மணிமாலை, அந்தாதி ஆகிய இலக்கிய வகைகளை அவர் முதன் முதலாகப்பாடி உள்ளார். சுடுகாட்டில் உமை காண ஆடும் சிவனின் ஆடல் கோலத்தை அவர் மிகுதியாகப் பாடுகிறார். அவருக்கு ஈடுபாடுடைய வழிபடு மூர்த்தமாக (உபாசனா தெய்வமாக) இந்த வடிவமே அமைகிறது. அவர் பாடியுள்ள பாடல்களைப் பார்க்கும்போது இறைவனுடைய காபாலிக வடிவத்தை – சுடுகாட்டில் ஈமப்புகை நடுவில் பேய்க் கணங்களோடு உமை காண ஆடும் வடிவம் – எப்போதும் கண்டு தொழ விரும்பும் அடியவராக அவர் உள்ளார். அவர் பாடல்களில் 'காரைக்கால் பேய்' [14] என்ற அவர் பெயர் பற்றிய செய்தி தவிர அவருடைய வாழ்க்கை தொடர்பான எந்த அகச்சான்றும் இல்லை.

மூத்த திருப்பதிகங்கள் இரண்டிலும் அவர் மிகுதியாகச் சுடுகாட்டு வருணனையை, பேய்க் கூட்டங்களின் செயல்களைப் பாடியுள்ளார். பின்னால் தோன்றிய பரணி நூற்களில் பேய் வருணனை இடம் பெற இப்பாடல்களே முன்னோடி. அம்மையார் காபாலிக சைவத்தை முதன்மைப் படுத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகிறார் என்று கருத, அவருடைய பாடல்கள் துணைசெய்யும்.[14A] சுடுகாட்டில் தங்கி இறைவனின் காபாலிக வடிவை எப்போதும் கண்டு வணங்கிப் பாடியவராகவே அவர் உள்ளார். 'அப்பன் இடம் திரு ஆலங்காடே' என்று அவர் குறிப்பிடுவது குறிப்பிட்ட தலத்தையா அல்லது பொதுவான நிலையில் இடுகாட்டையா என்று ஆராய இடமுள்ளது. பக்தி இலக்கிய முன்னோடிகளான ஞானசம்பந்தரும் அப்பரும் தம் பாடல்களில் அன்றைய வழக்கிலிருந்த காபாலிகம், பாசுபதம், மாவிரதம் ஆகிய சைவ சமயப் பிரிவுகளைக் குறிப்பிடுகின்றனர். காலப்போக்கில் இவை சைவ ஒற்றைப் பெரு அடையாளத்தில் கலந்து உள்வாங்கப்பட்டன. அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் அவர் இறைவனோடு நேருக்கு நேர் பேசும் பக்தி மரபை முன்வைக்கிறார். இப்பாடல்களிலும் அவர் ஈசனைக் கபாலிக வடிவில் மிகுதியும் பாடுகிறார். சிவனின் மூர்த்தங்கள் சிலவற்றை அவர் குறிப்பிடுகிறார். படிமவியல் கலை வளர்ச்சியை வரலாற்றுப் போக்கில் அவர் பாடல்களிலிருந்து தொடங்கித் திருமுறைகளில் ஆராய வாய்ப்புக்கள் உள்ளன.

அறநெறிக் காலத்தில் முதலாழ்வார் மூவரும் முறையே முதல் மூன்று அந்தாதிகளைப் பாடினர். பரிபாடல், சிலப்பதிகாரம் இவற்றின் தொடர்ச்சியாக இவர்கள் பாடல்கள் அமைகின்றன. வைணவ பக்தி இலக்கிய மரபை இவர்கள் அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தனர். தலங்கள், கோலங்கள், தொன்மக் கதைகள் என்பவைகளோடு உணர்ச்சி மயமாகத் திருமாலைப் பாடிப் பரவும் போக்கை இவர்கள் பாடல்களில் காண்கிறோம். திருமாலையும் சிவனையும் ஒரே வடிவில் கண்டதாக இணைத்துப் பாடும் நிலை உள்ளது. தொடக்க நிலையில் இவ்வாறு பாடினர் எனக் கொள்ளலாம். 'வாய் அவனை அல்லாது வாழ்த்தாது' (முதல் திரு. 11)[15] என்ற பாடலில் வாய், கை, செவி என்ற உடல் உறுப்புக்கள் திருமால் பணிக்காக மட்டும் பயன்படும் என்று பொய்கையார் பாடுகிறார். சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் வாய், செவி, நாக்கு திருமால் பணிக்காகப் பயன்படவேண்டும்[16] என்று பாடும் மரபின் தொடர்ச்சி இது. பின்னர் திருநாவுக்கரசர் திருவங்கமாலை[17] பாட இவை முன்னோடி.

மக்கள் தங்கள் விருப்பப்படி தத்தம் கடவுள் உருவங்களை வழிபடுவர். உருவம், அதன் பெயர், வைத்து (ஓவியம், உருவச்சிலை போல) வழிபடும் முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன மாறுபடும். அது வழிபடுவோரின் விருப்பம். ஆனால் உலகளந்த மூர்த்தி உருவமே அனைத்திற்கும் அடிப்படை என்று பொய்கையார் பாடுகிறார்.[18] 'எந்தக் கடவுளை எந்த வடிவில் வணங்கினாலும் அது வாசுதேவனுக்கு சென்று சேரும்' [19] என்ற வேதத்தின் கருத்தை இது விளக்குகிறது. அத்துடன் அவர் காலத்தில் காணப்பட்ட பல்வேறு சமய வழிபாட்டுச் சடங்கு மரபுகளையும் இதில் காண்கிறோம். அவை அனைத்தையும் வைணவப் பெரு நெறியில் உள்வாங்கும் முயற்சியும் இப்பாடலில் உள்ளது. இவ்வாறு அறநெறிக் கால இலக்கியங்களில் சமயம் என்ற அடிப்படையில் ஆராய நிறைய வாய்ப்புக்கள் உள்ளன.

நுண்கலைகள்

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 11 வகைக் கூத்துக்கள் [20] கடலாடு காதையில் இடம்பெற்றுள்ளன. இவை பொதுவியல் நிலையில் அனைவரும் காண அவள் ஆடியவை. தொன்மக் கதை நிகழ்வுகளை நாட்டுப்புறக் கூத்தாக அவள் இவைகளை நிகழ்த்தினாள். இப்பகுதியில் இடம்பெறும் குடக்கூத்து [21] இன்றைய கரகாட்டத்தின் பழைய வடிவம். சிலம்பைத் தொடர்ந்து குடக்கூத்து ஆழ்வார் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளது. ஆழ்வார் பாடல்களில், கண்ணன் பறையை ஒலித்தபடி (தானே அணிந்து முழக்கி) குடக்கூத்து ஆடினான் என்ற குறிப்பு உள்ளது.[22] சிலம்பில் மாதவியின் ஆடலுக்கு எந்த இடத்திலும் (அரங்கேற்று, கடலாடு காதைகள்) தாளக் கருவியாகப் பறை சுட்டப்படவில்லை. சங்க இலக்கிய மரபில் ஒவ்வொரு திணையிலும் இடம் பெற்ற பறை சிலம்பில் மாதவியின் ஆடலில் ஏன் இடம்பெறவில்லை? என்பது தொடர் ஆய்விற்குரியது. பக்தி இலக்கிய காலத்தில் பறை மீண்டும் செல்வாக்குப் பெறுகிறது[23] என்பது குறிப்பிடத்தக்கது.

சிலம்பில் சிவன் ஆடிய கூத்தாகக் கொடுகொட்டி, கொட்டி சேதம் என்ற இரு வகை ஆடல் முறைகள் இடம்பெற்றுள்ளன. உமையவளைத் தன் உடலில் ஒரு பகுதியாக உடைய சிவன் ஆடிய கூத்து கொடு கொட்டி. மாதவியின் 11 வகைக் கூத்துக்களில் இது உள்ளது. இந்த ஆடலை அவள் நிகழ்த்திய முறை விளக்கப்படவில்லை. வஞ்சிக் காண்டத்தில் சேரன் அவையில் கூத்த சாக்கையன் ஆடுவதாகக் கொட்டி சேதம் இடம்பெறுகிறது. இதுவும் உமையொரு பாகனான சிவன் ஆடியது. சாக்கையன் உமையொரு பாகனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடம் புனைந்து இதையாடினான். சிவனுக்குரிய பாகம் மட்டும் ஆட, உமைக்குரிய பாகம் ஆடாது அசையாது இருக்கும்.[24] இந்த இரண்டும் (கொடுகொட்டி, கொட்டி சேதம்) வேறு வேறா? ஒன்றா? மிகப் பழங்காலத்திலே ஒரே கூத்தின் இருவேறு நிகழ்முறைகளை சிலம்பு பதிவு செய்துள்ளது.

காரைக்கால் அம்மையார் பாடல்களில் சிவன் சுடுகாட்டில் ஆடும் ஆடல் விரிவாகப் பல பாடல்களில் விளக்கப்படுகிறது. அம்மையார் பாடலில் இவனின் ஆடலுக்குரிய தாளக் கருவியாகப் பறை இடம்பெறுகிறது. (காரை. மூத்த. 2.9.) அவர் பலவகையான இசைக்கருவிகளைப் பதிவு செய்துள்ளார். [25] பழந்தமிழ் மரபில் காணப்பட்ட இசை, ஆடல் மரபுகள் பற்றி ஆராய நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. இதே கால அளவில் இந்திய மரபு பொதுவான செவ்வியல் கலையிலிருந்து வேறுபட்டுத் தமிழரின் அடையாளமாக இவை இருந்தனவா? திணை மரபு சார்ந்தவையா? இவை தொடர் ஆய்விற்குரியன.

அறநெறிக்கால இலக்கியங்களில் காணப்படும் விவாதத்திற்குரிய சில சிக்கல்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் புலமை மரபில் தொடர்ந்து சில கருத்துக்கள் இலக்கிய வரலாற்று நோக்கில் கூறப்பட்டு வருகின்றன. அகச் சான்றுகளைப் பார்த்து அக்கூற்றுக்களை ஆராயாமல் முன்னோர் நெறியை அப்படியே வழிமொழிவது ஆராய்ச்சி ஆகாது. இதை மையமாகக் கொண்டு இக்கட்டுரையில் விவாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலக்கியங்கள் யாவும் மறுவாசிப்பிற்கு, மீள் பார்வைக்குரியன என இதனால் உணரலாம்.

அடிக்குறிப்புகள்

1. திருஞானசம்பந்தர் தேவாரம், சிவகாசி சிவனடியார் அறநெறிக்கழகம், 2001 (ப.674). இது பற்றி விரிவாக அறிய, பின்வரும் நூல் காண்க: சு.வேங்கடராமன், அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு, பக்.36–37. மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 2004.
2. திருநாவுக்கரசர் தேவாரம், சிவகாசி சிவனடியார் அறநெறிக்கழகம், 2003 (ப.410).
3. சு.வேங்கடராமன், அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு, பக். 27–28.
4. சான்றாகப் பின்வரும் பரிபாடல் பதிப்பு காண்க : பரிபாடல் இரா. சாரங்கபாணி (உரை) கோவிலூர் மடாலயம், 2003.
5. அ.கி.பரந்தாமனார், வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், 1966, சென்னை, பாரி நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. 20 ஆம் நூற்றாண்டில் அறுபடை வீட்டு வழிபாடு பெருகியது. தேவராய சுவாமிகள் பாடிய கந்தர்ஷஷ்டி கவசம், திருப்புகழ் (அருணகிரிநாதர்) போன்ற நூல்கள் ஆறுபடைவீடு அடிப்படையில் பல பதிப்புக்கள் வந்தன.

7. 11 ஆம் திருமுறை, ஸ்ரீவைகுண்டம், திருப்பனந்தாள், காசிமடம், 1972 (பக்.2–27).

8. மேலது, (பக்.5, 8, 27).

9. பரிபாடல், பாடல் 4, அடி, 66–70.

10. மேலது, பாடல் 5. அடி 22–54. இது பற்றி விரிவாக அறியப் பின்வரும் கட்டுரை காண்க. சு.வேங்கடராமன், 'பரிபாடல் முருகன்' பக். 18–19, அறக்கட்டளை ஆய்வுரைகள், 2008. கௌமாரமடம், கோவை –6.

11. சிலப்பதிகாரம், II, 20 அடி 34–41. கழகம், சென்னை, 1947 (மூலம் மட்டும்).

12. சு.வேங்கடராமன், 'சிலப்பதிகாரத்தில் வைதிக சமய மரபுகள்' பக்.125–132 பன்முக நோக்கில் சிலப்பதிகாரம், என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி, 2009.

13. சிலம்பு, II, 23, அடி 1–13.

14. 11 ஆம் திருமுறை, பக்.5, 8, 27.

14.A. சு.வேங்கடராமன், தமிழர் சமய மரபுகள், பக்.116. மதுரை மீனாட்சி புத்தக நிலையம், 2007.

15. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், கி.வேங்கடசாமி ரெட்டியார் (ப.ஆ) சென்னை, திருவேங்கடத்தான் திருமன்றம், 1973 (ப.635).

16. சிலம்பு, II. 17, பாடல் 1–3, 4 வது அடி.

17. திருநாவுக்கரசர் தேவாரம், திரு. அங்கமாலை, 4.9, பக்.572–573.

18. பொய்கை, முதல், திரு. 11. (ப.636).

19. 'சர்வ தேவ நமஸ்கார ஸ்ரீவாசுதேவம் பிரதிகச்சதி' – இருக்கு வேதம், காயத்திரி ஜெப மந்திரம்.

20. சிலம்பு, I–6, அடி 39–63.

21. வாணாசுரனின் தலைநகரில் தெருக்களில் நடந்து உலகளந்தவனான கண்ணன் ஆடிய குடக்கூத்து. சிலம்பு I 7, அடி 54–55.

22. திருமங்கை. பெரிய திருமடல், கண்ணி 75.

23. திருஞானசம்பந்தர் பல பாடல்களில் 'பறை' யைக் குறிப்பிடுகிறார். வேத ஒலியும் பறையொலியும் ஒன்றாகச் சிவன் கோயில்களில் ஒலிப்பதாகக் கூறுகிறார். சிவன் கையில் பறை உள்ளதாகக் கூறுகிறார். பிற்காலத்தில் இப்பறை தமருகமாக மாறியது. காண்க. சு.வேங்கடராமன், திருஞானசம்பந்தர், ப.88. புதுதில்லி சாகித்ய அகாதெமி, 2006.

24. சிலம்பு, III, 28, அடி 67–77.

25. 11 ஆம் திருமுறை, ப.4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையாக்க நோக்கில் அற இலக்கியங்கள்

பழ. முத்துவீரப்பன்

வார்த்தைகள் நடந்தால் வசனம். நடனமாடினால் கவிதை என்பார் கண்ணதாசன். உணர்ச்சிப் பெருக்கால் உருவாவது இலக்கியம். ஆனால் அற இலக்கியங்கள் எதை, எப்படிச் சொல்லவேண்டும் என்று ஓரளவு சிந்தித்துத் திட்டமிட்டு எழுதப்பட்டவை. கற்பனைச் செவ்வி மிக்க புனைவியல் நெறி சார்ந்தவை அல்ல அவை. "பாக்களிலே வெண்பா தான் பத்தினிப்பா" என்பார் தமிழன்பன். கட்டுப்பாடு மிகுந்த வெண்பா யாப்பில் கருத்துக்களைச் சொல்வதற்கே முதலிடம். அணிநலம் அமையப் புனைவதில் அற இலக்கியக் கவிஞர்கள் அக்கறை செலுத்தமாட்டார்கள். இருப்பினும் சொற்களைத் தேர்வதில், தொடர்களை அமைப்பதில், நிறுத்தங்களைச் செய்வதில், வினாக்களை அடுக்கிக் கூறுவதில், அளபெடை, விளிகளைப் பயன்படுத்துவதில், மோனை, எதுகை முதலிய தொடைகளைக் கையாளுவதில் உவமை ஆட்சியில், சொற்களைத் திரும்பத் திரும்ப வரும்படி செய்வதில் அற இலக்கியக் கவிஞர்கள் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். மனிதன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அறங்களைக் கூறும் விதிமுறை இலக்கியங்களான (Prescriptive) அற இலக்கியங்கள் உலக வாழ்க்கையின் பண்புகளை விளக்கும் விளக்கமுறை (Descriptive) இலக்கியங்களாக அமைந்துள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் 11 நூல்கள் அறஇலக்கியங்கள். இவற்றுள் கருத்தாலும் கவிதை நலத்தாலும் முதன்மை இடம் பெறுவது திருக்குறளே. அடுத்தநிலையில் நாலடியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மணிக்கடிகை, திரிகடுகம் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. குறளின் அணிநலம், கவிதையழகு குறித்துப் பல கட்டுரைகள் எழுதப்பட்டிருப்பதால் ஆய்வு வரையறை கருதி நாலடியார்ப் பாடல்கள் மட்டும் இக்கட்டுரையில் கவனம் பெறுகின்றன. ஒரு நல்ல கவிதை அடி படித்தவுடன் நெஞ்சில் பதிய வேண்டும், ஈரமண்ணில் பதியும் கால் தடம் போல.

கல்வி கரைஇல கற்பவர் நாள் சில,
தலையாயார் தம் கருமம் செய்வார்,
தன்னைத் தலையாகச் செய்வானும் தான்,
அறப்பயன் யார்மட்டும் செய்க.
அடங்காதார் என்றும் அடங்கார்,
நல்கூர்ந்த மக்கட்கு அணிகலமாவது அடக்கம்
தெளிவிலார் நட்பின் பகை நன்று
இசையோ ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று
ஓதியும் ஓதார் உணர்விலார்
செல்வம் சகடக்கால் போல வரும்,
இளையான் அடக்கம் அடக்கம்
நுண்ணுணர்வின்மை வறுமை

போன்ற நாலடியார் தொடர்கள் எண்ணத்தக்கவை.

சொல் தேர்வு

நாலடியார் அறவுடைமை அதிகாரத்தில் பின்வரும் பாடல் இடம் பெற்றுள்ளது.

உணர உணரும், உணர்வுடை யாரைப்
புணரிற் புணருமாம், இன்பம்–புணரின்
தெரியத் தெரியும், தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய் *(247)*

நம் குணங்களை உணர்ந்து கொள்ள அறிந்துள்ள உணர்வுடையாரைச் சேர்ந்தால் இன்பம், அறிந்து கொள்ளத் தெளிவான அறிவில்லாதவர்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தால் (துன்பம்) அவரை விட்டுப் பிரிந்தால் பிரியும் துன்பம் என்பது பாடற்பொருள். இன்பம் என்பதற்கு எதிர்ச்சொல் துன்பம். ஆனால் அச்சொல்லை இங்கு பயன்படுத்த முடியாது. காரணம் இரண்டு, இலக்கணக் கட்டுப்பாட்டின்படி ஈற்றுச்சீரில் ஈரசைச் சொல் வரக்கூடாது. மற்றொரு காரணம் இன்பம் என்பது பொதுச் சொல். நோய் என்பது சிறப்புச் சொல். துன்பம் வருவதற்குரிய பல காரணங்களில் நோயும் ஒன்று. எனவே நாலடியார்க் கவிஞர் ''நோய்'' என்ற சிறப்புச் சொல்லைத் தேர்ந்துள்ளார்.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு *(நாலடி.131)*

இம்மை பயக்குமால், ஈயக்குறைவின்றால்
தம்மை விளக்குமால், தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம் காணேம், கல்வி போல்
மம்மர் அறுக்கும் மருந்து *(நாலடி. 132)*

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம், அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி *(நாலடி. 137)*

கவிதையில் ஒரு சீர், தேவைக்கேற்ப ஒரு சொல்லாகவோ ஓரிரு சொற்கள் சேர்ந்த தொடராகவோ அமைவது இயற்கை. எடுத்துக்காட்டியுள்ள பாடல்களில் முதற்பாடலில் கல்விச் சிறப்பு '' இவை அழகல்ல இது அழகு'' என்று அழகுபடச் சொல்லப்பட்டிருக்கிறது. கற்றவர்கள் பெருமிதமும் அதேநேரத்தில் அடக்கமும் வாய்ந்தவர்கள். இவ்வியல்பை உணர்த்தும் வகையில் ''நல்லம்யாம்'' என்று குறிலாக அமைத்துள்ளார் கவிஞர். இதில் (அம்) என்ற தன்மை வினைமுற்று விகுதி இடம்பெற்றுள்ளது புலப்படுத்தப்படுகிறது. இப்பாடலில் ஆம் என்ற வினைமுற்று விகுதி இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாடலில் "யாம்காணோம்" என்பது எதிர்மறைப் பொருளை உடையது. அது உறுதிப்பாட்டைப் புலப்படுத்துகிறது. இதில் ஏம் என்ற வினைமுற்று விகுதி உள்ளது.

"குற்றமில்லாத நூற்கேள்வி உடைய, கூரிய அறிவுடையவர்கள் மாறுபடுதல் இல்லாதவர்களாய் தம்முள் கூடிமகிழ்வது மிக இனியது. வானத்து உறைவார் பதி அதைவிட இனியதாயின் காண்போம்" என்பது பாடற் பொருள். அப்படி இருந்தால் பார்க்கலாம் என்பது கூறுபவர்களின் பெருமித உணர்வைப் புலப்படுத்துகிறது. இப்பாடலில் ஆம் என்ற வினைமுற்று விகுதி இடம்பெற்றுள்ளது.

தொடராக்கச் சிறப்பு

இளமை நிலையற்றது என்பதை விளக்கவரும் நாலடியார்,

வேல்கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோல்கண்ணள் ஆகும் குனிந்து.

என்று விவரிக்கிறது. இளமையைக் குறிக்க வேல்கண்ணள் என்றும் முதுமையைக் குறிக்க கோல்கண்ணள் என்றும் தொடராக்கம் செய்யப்பட்டுள்ளது. நிலையாமையே உலகின் நிலைத்த இயல்பு என்று குறள் முரண்களில் அமையப்பாடுவது போல நிலையாமையை விளக்க வரும் நாலடியார்.

சென்றே எறிப ஒருகால் சிறுவரை
நின்றே எறிப பறையினை – நன்றே காண்
முக்காலைக் கொட்டினுள், மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து (24)

என மொழிச்சுவைஅமையப் புலப்படுத்தியுள்ளது.

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர் – கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினும் சேரக் கெடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குலநலம் என்பது இயல்பான தொடர். எதுகையின் பொருட்டு நிலவளம் என்பது நிலநலம் என்று மாற்றிப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மரக்கலம் என்றிருக்க வேண்டியுள்ளது பாடற் சுவையின் பொருட்டுக் கலநலம் என்று புதிய தொடராக்கமாகச் செய்யப்பட்டுள்ளது.

யாப்பின் பொருட்டுச் சொற்களை மாற்றிக் கையாளுவதற்கு உள்ள கவியுரிமை இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே,

மலை நலம் உள்ளும் குறவன், பயந்த
விளை நிலம் உள்ளும் உழவன்

என்ற பாடலில் (356) மலைவளம் என்றிருக்க வேண்டிய தொடர் விளைநிலம் என்ற இரண்டாம் அடியின் பொருட்டு மலைநலம் என்று மாற்றிக் கையாளப்பட்டிருக்கிறது.

வறுமையுற்ற காலம் என்பதற்கு "ஏட்டைப் பருவம்" (பா.358) என்ற சொல்லையும் உயர்வுற்ற காலம் என்பதற்கு "மோட்டிடத்தும்" என்ற சொல்லையும் கையாண்டிருப்பதும் கருதத்தக்கது.

பிணை

மோனை பற்றி விவரிக்கும்போது தொல்காப்பியர் பொழிப்பு (1,3) ஒரூஉ (1,4) ஆகிய தொடர்களைத் தனியே குறிப்பிட்டுள்ளார். அடிகளை அமைக்கும் போது பெரும்பாலும் இரண்டு சீர்களில் அல்லது மூன்று சீர்களில் ஒலிநிறுத்தம் வரும் என்பதை அறிந்து கொண்ட நிலையில் இவ்விலக்கணம் எழுதப்பட்டுள்ளது எனலாம். கருத்துகளைப் பிணைக்கும் நிலையில் அமைந்த இவ்வுறுப்பு அண்மைக்காலமாக பிணை என்று பேசப்படுகிறது. இதை உறுப்பாகக் கருதுவதைவிட உத்தியாகக் கருதலாம். கவிஞர்களின் தனித்தன்மையை அடையாளம் காட்டும் கூறுகளுள் பிணையும் ஒன்று. குறளில் பலபாடல்களில் முதல் மூன்று சீர்களில் ஒலிநிறுத்தம் இருப்பதை அனைவரும் அறிவர். (எ.கா) (செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்மை பயக்குமால்" என்ற நாலடியார் பாடலில் முதல் இரண்டு அடிகளில் இரண்டு சீர்களுக்குப் பிறகு ஒலிநிறுத்தம் அமைந்துள்ளது. மூன்றாம் அடியில் மூன்றாவது சீருக்குப் பிறகு ஒலிநிறுத்தம் உள்ளது. நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார், அற்புத் தளையும் அவிழ்ந்தன என்ற பாடலும் இப்படிப்பட்டது (பா.12) ஒரு சில பாடல்களில் (எ.கா) தாழாத், தளராத், தலைநடுங்காத், தண்டூன்றா எனச் சீர்தோறும் ஒலிநிறுத்தம் உள்ளது.

முதற்சீர், இரண்டாம் சீர், மூன்று நான்காம் சீர்களில் நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள்ளன.

(எ.கா) *உண்ணான், ஒளிநிறான், ஓங்குபுகழ் செய்யான்,* *(பா.9)*
உடாஅதும், உண்ணாதும் தம்உடம்பு செற்றும் *(பா.10)*
சொல் தளர்ந்து, கோல் ஊன்றிச் சோர்ந்த நடையினராய்
பரவா, வெளிப்படா, பல்லோர்கண் தங்கா *(பா. 288)*
சிறுகா, பெருகா, முறைபிறழ்ந்து வாரா *(பா. 110)*

முதல் மூன்று சீர்களில் நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள்ளன.

சென்றே எறிப ஒருகால் (பா. 24)
துன்பம் பலநாள் உழந்தும் (பா. 54)
துன்பமே மீதூரக் கண்டும் (பா. 60)
மதித்திறப் பாரும் இறக்க (பா. 61)
இளையான் அடக்கம் அடக்கம் (பா. 65)
யாஅர் உலகத்தோர் சொல்லிலார் (பா. 119)
நல்லவை செய்யின் இயல்பாகும் (பா. 144)

மேலும் காண்க: பாடல் எண் 170, 179, 188, 216, 219, 245, 248, 251, 298, 338, 351, 363, 364, 365, 366.

முதற்சீர், இரண்டு மூன்றுசீர், நான்காம் சீரில் நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள்ளன.

(எ.கா) *அவமதிப்பும், ஆன்றமதிப்பும் இரண்டும் (பா.163)*
கற்றனவும் கண்ணகன்ற சாயலும், இற்பிறப்பும் (பா. 340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சீர்களில் சீர்தோறும் நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள்ளன.

(எ.கா) *உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும் (பா. 102)*

முதற்சீர் 2,3,4 சீர்களுக்குப் பிறகு நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள.

கட்கினியாள், காதலன் காதல் வகை புனைவாள் (பா.384)

நான்கு சீர்களுக்குப் பிறகு நிறுத்தம் அமைந்த பாடல்களும் உள்ளன.

வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை (பா. 103)
உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா (பா. 104)
தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க (பா. 117)

அளபெடை நயம்

"கெடாத நல்லறம்" என்பதற்கு அழியாத நல்லறம் என்பது பொருள். அறத்தின் அழியாமையை வற்புறுத்த "கெடாஅத" என்று அளபெடை அமைத்திருப்பது மிகவும் பொருத்தமானது. இரண்டாம் அடியில் "கொடாஅத" என்று அளபெடை அமைப்பது கருத்துப் புலப்பாட்டுக்குத் தேவையாக இருப்பதால் அதற்கேற்ப முதலடியில் "உடாதும்" என்பது உடாஅதும் என்றும், தனிச் சொல்லில் கொடாஅது என்றும் அளபெடைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு உடுக்காதும், என்ற இயல்பான சொல்லைக் கையாண்டிருந்தாலும் பாடலின் தளை மாறுபடாது. இவ்வாறே தனிச்சொல்லாக "கொடுக்காது" என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம். பாடலின் அமைப்பழகு கருதி அளபெடைச் சொற்கள் பிற இடங்களில் ஆட்சி பெற்றுள்ளன.

"நற்றாள் தொழாஅர் எனின்" என்ற பாடலில் படித்தவர் பணியமாட்டார். கருவத்தால் நிமிர்ந்திருப்பார் என்பதைப் புலப்படுத்த தொழார் என்ற சொல் "தொழாஅர்" என அளபெடை ஆட்சி செய்யப்பட்டிருப்பதைக் கருதலாம். இங்கு வணங்கார், பரவார், துதியார் என்ற இயல்பான சொற்களைக் கையாண்டிருந்தாலும் இலக்கணப் பிழை வராது என்று நோக்குப் பற்றிய கருத்தில் தமிழண்ணல் விளக்கியிருப்பது இணைத்துக் கருதத்தக்கது. தாங்கமுடியாத துன்பங்களை "நீக்கி நிறுத்தும் உரவோரே (பா. 57)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றிருந்தாலும் பாடலின் தளை மாறுபடாது. எனினும், துன்பங்களை நீக்கி நிறுத்துவது வலியுடையவர்க்கே இயலும் என்பதால் நிறூஉம் என்ற அளபெடைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்உடைய
தாக்கருந் துன்பங்கள் தாம்தலை வந்தக்கால்
நீக்கி, நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்கும் திருவத்தவர் (பா. 57)

தம்மை இகழ்ந்துவிட்டார்களே என்று வருந்தாமல், இகழ்ந்தவர்கள் மறுபிறப்பில் நரகத்தில் வீழ்வார்கள் என்று அவர்களுக்காக இரங்குவதும் துறவியர் இயல்பு என்ற கருத்தை உணர்த்தும் பாடலில் (58) பரிவதும் என்ற இயல்பான சொல்லை அமைத்திருந்தாலும் பாடற்கருத்து குறைவுபடாது. ஆனால், துறவியர் மற்றவர்க்காக இரங்குவதை மிகுதிப்படுத்த பரிவதூஉம் என்ற அளபெடைச் சொல் கையாளப்பட்டுள்ளது.

மழை பெய்தல் அருமையாகிய காலத்தும் ஊற்றுநீர்க்குளம் ஊரைக் காப்பாற்றும். கொடுத்தலாகிய கடமை தளர்ந்தபோதும் பெரியார் பிறரை உபசரிப்பார். சிறியர் பொருள் பெருகிவரினும் பிறரை உபகரியார் என்ற கருத்தாழமிக்க பாடலில் சாஅ அயக் கண்ணும் (பா. 184) என்ற அளபெடைவரி தளர்ச்சி மிகுதியைக் காட்டுவதற்காக இரண்டு மாத்திரை மிகுந்துள்ளது. இவ்வாறே சிறியோர் செல்வப் பெருக்கம் உணர்த்துவதற்காக சாஅ அயக் கண்ணும் என்பதும் இரண்டு மாத்திரை மிகுந்துள்ளது.

"கலாஅற்கிளி" என மூன்றாம் அடியில் அளபெடை ஒரு மாத்திரையளவும் இலாஅஅர்க்கு என நான்காம் அடியில் இரண்டு மாத்திரையும் பாடற் பொருளுக்கேற்ப அளபெடை மிகுந்துள்ளது. (பா. 283)

கலாஅல் கிளிகடியும் கானக நாட
இலாஅஅர்க்கு இல்லை தமர், பா. 283

இவ்வாறு கருத்துப் புலப்பாட்டிற்காகவும் அமைப்பழகிற்காகவும் அளபெடைச் சொற்கள் நாலடியாரில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளிப்பயன்பாடு

எல்லாவிளிகளும் கருத்துச்சிறப்புடையன அல்ல. ஆனால், கவிஞர்களின் ஆளுமைப் பண்பிற்கேற்ப விளிகளில் கூடக் கருத்தைப் புலப்படுத்த இயலும்.

செல்வம் நிலையாமை என்ற அதிகாரத்தில் "உடாஅதும் உண்ணாதும்" என்ற பாடலில் (பா. 10) "வான்தோய் மலைநாட" என்ற விளி உள்ளது. ஒருவன் தன்னுடம்பைப் பேணி, நன்கு உண்டு, உடுத்து அழியாத நல்அறம் புரிவது செல்வம் பெற்றதன் பயன். தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வம் பயனற்றது என்பதைத் தேனடைச் சான்று காட்டி விவரிக்கும் இப்பாடலில் "ஆகாயத்தை அளாவிய மலைகளுள்ள அரசனே" என்ற விளியில் "உயர்ந்த செல்வம் பெற்றுள்ளாய்; ஆனால் உனக்கும் பிறர்க்கும் பயன்பட வாழவில்லை" என்ற குறிப்பு உள்ளது. உலக வழக்கில் ஒருவரை "நீ ரொம்பப் படித்தவன்" ஆனால் என்று கூறுவது போன்ற தன்மை இப்பாடலில் உள்ளது.

பொறையுடைமை அதிகாரத்தில் "கோதையருவிக் குளிர்வரை நன்னாட (பா.71) என்ற விளி உள்ளது. மாலை போன்ற அருவிகளாலே குளிர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டை உடையவனே என்னும் நீண்டவிளி, பேதையின் சினப்படுத்தும் வார்த்தைகளால் சினம் கொள்ளாத குளிர்ச்சிமிக்க நல்ல பண்புடையவன் தலைவன் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

காதலன் சொல்லும் கடும் சொல் உவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலின் தீதாமோ – போதெலாம்
மாதர்வண்டு ஆர்க்கும் மலிதடல் தண் சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின் (பா. 73)

அயலாரின் இனிமையான சொல்லைவிட அன்பானவரின் கடுமையான சொல் தீமைதருமா என்ன? என்று வினவும் இப்பாடலில் பாடற் கருத்திற்கேற்ப "மாதர்வண்டு ஆர்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப" என்ற விளி உள்ளது. காதல் வண்டுகள் இடைவிடாமல் ரீங்காரம் செய்வது துன்பம் தருவதுதான். ஆனால் தீமைதருவதல்ல என்ற பொருளைத் தரும் இவ்விளி பாடற் கருத்திற்குப் பொருத்தமாக உள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் பெரியோர் நட்பைக் கொள்ளுவது தாம் செய்த பிழை பொறுப்பர் என்பதற்காக என்பதைச் சொல்லும் பாடலில், *ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட* (பா. 77) என்றவிளி உள்ளது. ஒலித்துக் கொண்டு இறங்கும் அருவி, நீராடுவார் மாசுகளை நீக்குவது. பெரியோர் நட்பு பிழை பொறுப்பது என்ற கருத்திற்கேற்ப இவ்விளி அமைக்கப்பட்டிருக்கிறது.

முன்னைத் தீவினையின் பயனே துன்பம் மிகுந்த மனத்தோடு எல்லோரும் காணப் பெரியவீட்டு வாயில்களிலே நின்று பிச்சை கேட்டு உழல்வது என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் *அடம்பப்பூ அன்னங்கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப* (பா. 107) என்ற விளி உள்ளது. அடம்பக்கொடிப் பூக்களை அன்னம் கிழிப்பது வறுமையுற்று இரங்குவார் உள்ளத்தை செல்வம் மிக்க இல்லத்தில் வாழ்வார் சிதைப்பது போன்றது என்ற கருத்தை விளக்கப் பொருத்தமானதாக அமைக்கப்பட்டுள்ளது.

குடிப்பிறப்பு அதிகாரத்தில் இன்சொல் வழங்குதல், யாசித்தவர்க்குப் பொருள் தருதல், மனந்தூய்மை இவை நற்குடியிற் பிறந்தவர் பண்புகள் என்பதை விளக்கும் பாடலில்

கனமணி முத்தோடிமைக்கும் முழங்குவரித் தண் சேர்ப்ப (பா. 146)

என்ற விளி உள்ளது. ஒளிமிகுந்த இரத்தினங்கள் முத்தோடு சேர்ந்து பிரகாசிக்கும் கடற்கரையுடைய தலைவனே என்ற விளி பாடற் பொருளுக்கு இயைபுடையதாக அமைந்துள்ளது என்பது கருதத்தக்கது.

அடுத்தடுத்து பல காய் நெருங்கிக் காய்ந்தாலும் அதைப் பொறுக்காத கிளை இல்லை என்ற உவமை மூலம் பெரியார் தம்மை எவ்வளவுபேர் சேர்ந்தாலும் தாங்கமாட்டோம் என்று சொல்லமாட்டார் என்ற கருத்தை விளக்கும் பாடலில் பாடற்கருத்திற்கேற்ப, *அடுக்கன் மலைநாட* (பா. 203) என்ற விளி மலைகள் பலவற்றைத் தாங்கி நிற்கும் பூமியின் மாண்பினை உணர்த்துவதாக உள்ளது.

''ஒருவர் பொறையிருவர் நட்பு'' என்பதை விளக்கும் பாடலில் (பா. 223) *நிறக்கோங்கு உருவ வண்டார்க்கும் உயர்வரை நன்னாட* என்ற விளி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் உள்ள கோங்கமலரில் அழகுள்ள வண்டுகள் ஆரவாரிக்கும் மலைநாட்டையுடையவனே என்பது பொருள். ஆர்ப்பரிப்புத் துன்பத்தைக் கோங்கமலர்கள் பொறுத்துக் கொள்வதுபோல என்ற கருத்தைத் தரும் விளி பாடற் கருத்திற்குப் பொருத்தமாக உள்ளது.

துன்பங்களைச் செய்தாலும் விடக் கூடாதவர்களைச் சேராமல் விட்டுவிடுவது தகுந்தது அல்ல. கண்ணைக் குத்திற்று என்று கையை நீக்குபவர் யாரும் இல்லை என்ற உவமை மூலம் மேற்கூறிய கருத்தை விளக்கும் பாடலில் (பா. 226) "*விண்குத்து நீள்வரை வெற்ப*" என்ற வரி உள்ளது. விண்ணைக் குத்துகின்ற மூங்கிலையுடைய நீண்டமலை என்பது மலையின் சகிப்புத் தன்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

ஒற்றுமை இல்லாதார் நட்பு இன்னாது என்ற கருத்தை விளக்கும் பாடலில்,

முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றிக்கண் டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட (பா. 237)

என நீண்ட விளி உள்ளது. கருத்தை விளக்கும் மிகநீண்ட விளியாக இது சிறக்கிறது.

காந்தள் மலர்ந்தால்தான் வண்டுக்கூட்டங்கள் தேடிச் செல்லும். பொருள் இருப்பவர்களையே உறவினர் நாடிச் செல்வர் என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் "*கொல்லைக் கலாஅற் கிளிகடியும் கானக நாட*" என்ற விளி உள்ளது. கொல்லையில் தினைக்கதிர் இருந்தால்தான் கிளி நாடிச் செல்லும். அதுபோலப் பொருள் நலமுடைய மாந்தர் இருந்தால்தான் இரவலர் அவரைத் தேடிச் செல்வர் (பா. 283).

நிலையான மனமுடையவர்கள், நன்மைகள் சேர்ந்திருக்கும் யாரையும் நீங்குவதும் பின் சேர்வதும் செய்யமாட்டார்கள் என்ற கருத்தை விளக்கும் பாடல் கூறும் கருத்திற்கேற்ப "*பராரைப் புன்னைப் படுகடற் தண்சேர்ப்ப*" (பா. 246) என்ற விளியுடன் சிறக்கிறது. பருத்த அரையையுடைய புன்னை மரங்கள் நிலையான மனம் உடையவர்களைச் சுட்டி நிற்கிறது. பூத்து நீங்கின கொம்புகளை வண்டுகள் நாடா. பொருள் பெற்று வாழாதவர்களுக்கு உறவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்ற கருத்தைச் சொல்லும் பாடல், "*நீர்த்தருவி தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட*" என்பது (பா. 290) பாடற் பொருளுக்கேற்ற விளியாகச் சிறக்கிறது. அருவிகள் நீர்வெள்ளம் குறையாதிருப்பதே சிறப்பு. அவ்வாறே பொருட் செல்வம் குறையாதிருப்பதே சிறப்பு என்பது பொருள்.

பெரியோர் பெருஞ்சிறப்பைத் தாம் அடைந்தாலும் தமது நடக்கையில் ஒரு தன்மையாளர்களாக இருப்பர். கீழானவன் பெருஞ்சிறப்பைப் பெற்றால் தன் நடக்கையில் மாற்றம் அடைவான் என்பதை விளக்கும் பாடலில் "*பிறங்கருவி நன்னாட*" என்ற விளி பாடற் கருத்திற்கேற்பப் பொருத்தமாக உள்ளது.

நண்பர் தம் நெஞ்சத் துன்பத்தைச் சொல்ல, அத்துன்பங்களைப் போக்காத மனமுடையவர்கள், வாழ்வதைக் காட்டிலும் மலையிலிருந்து குதித்து உயிரை விடுவது நல்லது என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் "*மணிவரன்றி வீழும் அருவி விறன்மலை நன்னாட*" என்ற விளி உள்ளது. இரத்தினங்களை வாரிக்கொண்டு விழுகின்ற அருவிகளோடு கூடிய மேன்மையான மலைகளையுடைய நல்ல நாடனே என்ற வருணனையோடு கூடிய இவ்விளி உதவி செய்யும் மனத்துடன் வாழ்வதை உள்ளுறுத்தி நிற்கிறது.

ஒலிக்குறிப்பிலும் கருத்துப் புலப்பாடு

அவரவர்க்கு விதிக்கப்பட்ட நாட்கள் எல்லை இகவா. கூற்றுவனைத் தப்பிப் பிழைத்தவர்கள் யாரும் இல்லை என நிலையாமையைச் சொல்லி,

பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின், நாளைத்
தழீஇம் தழீஇம் தண்ணம் படும் (பா. 6)

என்கிறது நாலடியார். இரண்டு முறை அடுக்கப்பட்டுள்ள ஒலிக்குறிப்புச் சொல் கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

உறவினர் கூவிஅழ பிணங்கொண்டு சுடுகாட்டில் இடுபவரைக் கண்டும், மணம் செய்து மகிழலாம், இவ்வுலகில் சுகமுண்டு என்ற உணர்வுடன் இருப்பவர்களை எச்சரிக்கை செய்வதுபோல "டொண் டொண் டொண்" என்று ஒலிக்கும் பிணப்பறை என்பது பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................மணங்கொண்டீண்

டுண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே

டொண்டொண்டொ னென்னும் பறை (பா. 25)

சுகமுண்டு என்பதை மூன்றுமுறை அடுக்கிச் சொல்லி டொண், டொண், டொண் என்ற ஒலியடுக்கால் வாழ்வதில் சுகமில்லை என்பதை உணர்த்துகிறது இப்பாடல்.

வினா அடுக்கிக் கூறல்

உயிர்போன பிறகு உடம்பை என்ன செய்தால் என்ன? என்ற கருத்தை விளக்கும் பாடலில்,

நார்த்தொடுத் தீர்க்கிலென்? நன்றாய்ந் தடக்கிலென்?

பார்த்துழிப் பெய்யிலென்? பல்லோர் பழிக்கிலென்?

என்ற வினாக்களை அடுக்கி, அதனால் உயர்வோ இழிவோ இல்லை என்பதை விவரிக்கிறது ஒரு பாடல்.

யாஅர் உலகத்தோர் சொல்லில்லார்? தேருங்கால்

யாஅர் உபாயத்தின் வாழாதார் – யாஅர்

இடையாக இன்னாத தெய்தாதார்? யாஅர்

கடை போகச் செல்வம் உய்த்தார்?

யாருமில்லை என்பதை வலியுறுத்துவதற்காக யார் என்ற வினா "யாஅர்" என்று அளபெடை ஆட்சி செய்யப்பட்டிருப்பது சிறப்பாகும்.

அணிநலம் அமையப்பாடுவது

சொல் திரும்பத் திரும்ப வரும்படி பாடுவதில் எந்நிலைக் கவிஞர்க்கும் ஈடுபாடு மிகுதி. அறஇலக்கியக் கவிஞர்களும் இதற்கு ஆட்பட்டவர்களே. வள்ளுவர், இவ்வணி அமையப்பாடல்கள் பாடினார். நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, சிறுபஞ்சமூலம், எலாதி முதலிய நூல்களில் இவ்வணி அமைந்த பாடல்கள் உள்ளன.

ஓரடியில் சொற்கள் திரும்பத் திரும்ப வருவது, அடிதோறும் ஒரேசொல் திரும்பத் திரும்ப வருவது என்ற நிலையில் பின்வருதல் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரடியில் சொற்கள் திரும்ப வருவது

நின்றன நின்றன ....
ஒன்றின ஒன்றின ....
சென்றன சென்றன ......
வந்தது வந்தது............... (பா)

அடிதோறும் ஒரேசொல் வருவது

புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமற் காப்பச்சம் *(பா. 83)*

கல்லாமை அச்சம் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம் *(பா.145)*

ஈட்டலுந் துன்பம்மற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் – காத்தல்
குறைபடில் துன்பம் கெடில் துன்பம் *(பா. 280)*

பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும்

(காண்க பா. 15,39)1

தொடைக்கட்டு

அடித்தொடை அமைந்து காணப்படுவதே தொடைக்கட்டு எனப்படுகிறது. நான்கடி உடைய பாடல்களில் பொதுவாக இரண்டு தொடைக்கட்டு மிகுதியாகக் காணப்படும். நாலடியாரில் பல பாடல்களில் இவ்வகை அமைப்பு உள்ளது.

பாடல்கள் 1, 3, 5, 7, 8, 9, 10, 13, 14, 15, 17, 18, 20, 21, 22, 23, 24, 25, 27, 28 30, 32, 33, 36, 38, 40, 43, 46, 48, 49, 50, 52, 53, 56, 58, 59, 60, 61, 62, 63, 64, 66, 67, 68, 71, 74, 76, 77, 78, 79, 80, 81, 82, 84, 85, 86, 87, 89, 90, 91, 92, 94, 95, 97, 98, 100, 101, 102, 106, 107, 111, 112, 113, 116, 118, 119, 121, 123, 124, 125, 127, 128, 129, 130, 131, 138, 140, 142, 144, 149, 152, 159, 160, 161, 162, 165, 166, 167, 168, 169, 170, 171, 173, 174, 175, 183, 184, 186, 187, 190, 193, 194, 198, 202,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203, 204, 205, 209, 210, 211, 212, 214, 215, 216, 217, 218, 219, 223, 225, 226, 227, 228, 231, 232, 233, 234, 235, 238, 247, 249, 250, 252, 253, 254, 255, 257, 259, 260, 264, 265, 266, 268, 269, 270, 271, 273, 276, 277, 279, 283, 284, 285, 286, 287, 289, 290, 291, 292, 294, 295, 296, 297, 298, 299, 300, 301, 303, 305, 306, 307, 310, 312, 313, 314, 315, 316, 317, 318, 319, 320, 321, 323, 324, 325, 327, 329, 330, 334, 335, 336, 337, 338, 339, 340, 341, 342, 343, 344, 346, 349, 352, 353, 354, 355, 356, 359, 360, 361, 362, 366, 369, 370, 371, 372, 373, 374, 375, 376, 378, 379, 380, 383, 384, 385, 386, 387, 389, 390, 391, 392, 394, 396, 398, 399, 400.

(எ.டு) *கட்கினியாள் காதலன் காதல்வகை புனைவாள்*
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் – உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண் *(பா. 384)*

முதல் மூன்றடிகளும் ஒரே எதுகை அமைந்த பாடல்களும் உள்ளன.

அகத்தாரே ......
பகத்தாம் ....
மிகத்தாம் .... *(பா.31)*

பாடல்கள் 4, 31, 73, 83, 88, 103, 156, 181, 197, 222, 256, 275, 311, 368, 382, 388.

பின் மூன்றடிகளும் ஒரே எதுகை அமைந்த பாடல்களும் உள்ளன.

காழ்கொண்ட..
வாழ்தலும்.........
தாழ்வின்றி....... *(பா. 192)*

(எ.டு. காண்க பாடல் 357)

நான்கடியும் ஒரே எதுகை அமைந்த பாடல்களும் உள்ளன.

துகள்தீர் ....
பகடு ....
அகடுற ....
சகடக்கால் ...... *(பா. 2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பாடல்கள் 16, 25, 35, 39, 44, 45, 57, 75, 93, 96, 104, 105, 109, 110, 114, 115, 141, 150, 154, 155, 164, 172, 191, 200, 208, 220, 221, 224, 229, 236, 237, 240, 246, 251, 258, 261, 263, 267, 281, 288, 302, 304, 322, 331, 347, 350, 351, 377, 381, 393, 397.

நான்கடியிலும் எதுகை அமையாத செந்தொடைப் பாடல்களும் உள்ளன.

விளக்கு ....
தவத்தின்முன் ....
தேய்விடத்து ....
தீர்விடத்து .... (பா.51)

பிற பாடல்கள் (6,42).

இறுதி 2 அடியில் மட்டும் எதுகை அமைந்த பாடல்களும் உள்ளன.

வாழ்தலின் ஊதியம்............
ஆழ்கலத் தன்ன கலி...... (பா. 12)

பாடல்கள் 11, 47, 55, 65, 108, 117, 120, 134, 143, 148, 158, 176, 177, 178, 182, 189, 196, 230, 239, 242, 243, 244, 245, 278, 280, 293, 308, 345, 363, 364, 365.

முன் 2 அடியில் மட்டும் எதுகை அமைந்த பாடல்களும் உள்ளன.

சென்றே எறிப.......
நின்றே எறிப (பா. 24)

பாடல்கள் 26, 37, 69, 70, 72, 126, 133, 135, 136, 145, 146, 147, 151, 157, 195, 202, 282, 328, 367, 398.

உவமை அணி

பொருளின் தன்மையை விளக்குவதும், அதனைச் சிறப்பிப்பதும் சிறந்த உவமை ஆகும். நாலடியாரில் அறத்துப்பாலில் 24 உவமைகளும் பொருட்பாலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96 உவமைகளும் உள்ளன. இவற்றுள் நூற்றுக்கும் மேற்பட்ட உவமைகள் வினை அடிப்படையில் அமைந்தவை.

பாடல்களின் பட்டியல் 2, 8, 10, 17, 21, 28, 29, 30, 34, 38, 45, 51, 66, 68, 70, 87, 89, 96, 99, 101, 15, 116, 123, 125, 133, 135, 138, 139, 141, 148, 149, 151, 164, 166, 171, 176, 177, 180, 184, 185, 186, 189, 191, 192, 193, 197, 198, 199, 200, 201, 202, 203, 211, 213, 215, 216, 218, 221, 225, 226, 231, 232, 234, 236, 237, 239, 240, 241, 244, 245, 250, 254, 256, 257, 258, 259, 262, 263, 266, 269, 274, 279, 283, 284, 290, 298, 300, 315, 317, 321, 322, 331, 332, 333, 336, 337, 341, 345, 347, 351, 352, 354, 355, 359, 360, 367, 368, 370, 371, 374, 375, 376, 377, 378, 381, 386, 388, 390.

பிறர்மனை நயத்தல் அருவருப்பானது, அத்தோடு மிகவும் ஆபத்தானது என்பதை விளக்க நாலடியார் 'பாம்பின் தலையை நக்கினாற் போல' என்ற உவமையைப் பயன்படுத்தியுள்ளது. தனித்தன்மை வாய்ந்த இவ்வுவமை தீயசெயலின் விளைவைச் சுட்டிக்காட்டி எச்சரிப்பதாக அமைந்துள்ளது. உடம்பாடில்லாதவருடன் வாழ்வது பாம்புடன் உடனுறைவது போன்றது என்ற குறள் உவமை இணைத்து எண்ணத்தக்கது.

நட்பைக் குறித்து விளக்கும் பாடல்களில் ஒரே பொருளை வைத்து இருவேறு நிலைகளை விளக்கியிருப்பது நாலடியார் உவமைகளின் தனித்தன்மைகளுள் ஒன்று எனலாம்.

உறங்கல், விழித்தல், வாழ்தல், சாதல், கனி, கருக்காய், உடம்பு, உயிர், உப்பு அமைதல், உப்புமிகல் என இணைத்து உவமை கூறும் நிலை திருக்குறளிலும் அமைந்துள்ளது.

பெரியார் நட்பு பிறைநிலா போல நாளும் வளரும், சிறியோர் தொடர்பு மதியம்போல நாளும் தேயும் (பா. 125). கற்றறிந்தார் நட்பு நுனியிலிருந்து கரும்பு தின்பது போன்றது. பண்பிலார் தொடர்பு வேரிலிருந்து கரும்பு தின்பது போன்றது (பா. 138). சிறியவர் கேண்மை முற்பகல் நிழல் போலக் குறைந்து கொண்டே போகும். புகழாளர் தொடர்பு பிற்பகல் நிழல்போல வளர்ந்து கொண்டே செல்லும் (பா. 166). கற்றறிந்தார் கேண்மை குருத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்பு தின்பது போன்றது. கல்வியறிவில்லாதார் தொடர்பு அடியிலிருந்து கரும்பு தின்பது போன்றது (பா. 211). இவ்வாறு இருவகை நட்பு நிலைகளுக்கு ஒருபொருளை வைத்து உவமையாட்சி செய்துள்ளது நாலடியார். பெரியோர், கற்றறிந்தார் நட்பைக் குறிக்க மூன்று பாடல்களில் கேண்மை என்ற சொல்லையும், சிறியோர், கல்லாதார் தொடர்பைக் குறிக்க தொடர்பு என்ற சொல்லையும் தேர்ந்துள்ளது எண்ணத்தக்கது.

தொடர்புடைய பொருள்களை வைத்து உவமை கூறுவதும் இந்நூல் இயல்பாகும்.

(எ.டு.) அறச்செயல் கரும்புச்சாறு போலப் பயன்படும் அதைச் செய்யப் பயன்பட்ட உடம்பு கரும்புச் சக்கைபோல போகும். (பா. 34) (மேலும் காண்க 51, 96, 279)

பலர் விரும்ப வாழ்பவர் ஊர்நடுத் திண்ணை சுற்றிய பனைமரம் போன்றவர். இரவலர்க்குக் கொடுக்காத மனிதர் சுடுகாட்டு ஆண்பனை போன்றவர். (பா. 96)

ஒரு பாடலில் இரண்டு மூன்று உவமைகளைக் கையாண்டிருப்பதும் குறிக்கத்தக்கது.

முடிவுரை

அற இலக்கியப் பாடல்களைச் சிறந்த கவிதைகள் (Poetry) என்று மதிப்பிட இயலாது. ஆனால் செய்நேர்த்தி மிக்க செய்யுட்கள் அவை (Verse) என்ற கருத்து ஏற்கத்தகுந்ததாகும். கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல சொற்களைத் தேர்வதில், தொடரமைப்பில், நிறுத்தங்களைச் செய்வதில், ஒலிக்குறிப்பு, அளபெடை, விளிகளைப் பயன்படுத்துவதில், தொடையாக்கத்தில், உவமை அணியை நயம்படக் கையாண்டிருத்தலில், நாலடியார்ப் பாடல்கள் சிறந்த செய்யுட்களாக உள்ளன. கடிகை, திரிகடுகப் பாடல்களும் இந்நோக்கில் கருதத்தக்கன.

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
வாய்க்கால் அனையார் தொடர்பு (பா. 218)

(மேலும் காண்க பா. 216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறநெறிக் கால அழகியற் சிந்தனை

ஏ.என். கிருஷ்ணவேனி

தமிழர் சமூகப் பண்பாட்டு வரலாற்றில் முதலாவது காலப்பகுதியாக விளங்கும் சங்க காலத்தை அடுத்து வருகின்ற காலப்பகுதியை சங்கமருவிய காலம் எனத் தமிழ் வரலாற்றாசிரியர்கள் அழைத்தாலும் 'அறநெறிக் காலம்' என்று அழைக்கப்படுவதே பொருத்தமுடையதாகும். இக்காலத்திற் தோன்றிய அறநூல்களும், அறக்கருத்துக்களின் எழுச்சியும், பக்தி நெறியின் தோற்றமும், இலக்கியக் கொள்கைகளும், அழகியற் சிந்தனையும், இலக்கண நூலின் தோற்றமும், காப்பியங்களின் உருவாக்கமும் இக்காலப்பகுதியைத் தமிழக வரலாற்றின் ஓர் உன்னதமான காலப்பகுதியாகக் காட்டி நிற்கின்றன. அறம் என்ற சொல் பல்வேறு அர்த்தங்களைக் கொண்ட பொருள் பொதிந்த ஒரு சொல் ஆகும். சமண, பௌத்த மதங்களின் தமிழ்நாட்டு வருகை, அம்மதங்கள் போதித்த உன்னதமான அறக்கருத்துக்கள், அவை தமிழகச் சமயங்களில் ஏற்படுத்திய செல்வாக்கு, கலை மரபுகளின் வளர்ச்சி என்று சகல துறைகளிலும் ஏற்பட்ட அபிவிருத்திக்கு வித்திட்டது இந்த அறநெறிக்காலமே.

அறநெறிக் காலத்திற் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் அக்காலச் சிறப்புக்கு ஆதாரங்கள் ஆகும். சங்கத் தமிழ்ப் பாடல்கள் தனிப் பாடல்களாக அமைய, சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகத் தொடர் நிலைச் செய்யுளாக காப்பியமாக, இலக்கியச் சுவைமிக்கதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டது. அறநெறிக் காலத்திற்கு முன்னர் வாய் மொழிப்பாடல் மரபாகிய பாணர் மரபில் உருவாக்கப்பட்ட பாடல்களே காணப்பட்டன. பாணர் மரபு மறைந்து புலவர் மரபு தோன்றுவதை இலக்கியத்தின் சிறப்பாகக் காண்கிறோம். தொல்காப்பியர்கூட நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் பாடல் சார்ந்த புலநெறி வழக்கம் பற்றிப் பேசுவதைக் காணலாம்.

சங்க இலக்கியக் குறிப்புகளில் ஆடல், பாடல் போன்ற கலைகளில் ஈடுபாடு கொண்டோர் அவற்றை ஆற்றுகை செய்தோரைப் பற்றிய குறிப்புக்களும் காணப்பட்டாலும் அக்கால வடிவங்கள் பற்றி அறிய முடியவில்லை. ஆனால், சிலப்பதிகாரம் பண்டைத் தமிழ் மக்களது ஆடல் வடிவங்களுக்கு உயிர் கொடுத்து அவற்றை விவரித்துள்ளது. பதினொரு வகை ஆடல்களுக்கு விவரணந்தந்துள்ளது சிலப்பதிகாரம். அரங்கேற்று காதையை அடிப்படையாகக் கொண்டு அரங்க ஆற்றுகைக் கலைகள் பற்றித் தரும் குறிப்புகள் பரதரது நாட்டிய சாஸ்திரம் தரும் விளக்கத்திற்கு ஈடாக அமைகின்றன. இளங்கோவடிகள் எழுத்து வடிவில் கலைகளைத் தம் காப்பியத்தில் இடம் பெறச் செய்தார். இந்த எழுத்துமுறை வளர்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், எழுதுகின்ற முறைமையை, எழுத்துக்கள் ஒலிக்கும் முறையை விளக்குவதுடன் எழுத்தொலிகளைப் பதிவு செய்யும் முறையைக் குறித்து நிற்கின்றது. தொல்காப்பியர் செய்யுள், நூல் போன்றவற்றிற்குத் தரும் விளக்கங்கள் யாவும் எழுத்து முறை வளர்ச்சியை விளக்கி நிற்கின்றன. நூல் என்பது ஒரு விடயம் பற்றிய புலமை நிலை எழுத்தாகும். சங்கத் தமிழ்ப் பாணர் மரபுப் பாடல்கள் முற்றிலும் வாய்மொழிப் பாடல்களே. புலவர் மரபு அகம், புறம் ஆகிய மரபுகளைச் சார்ந்த பாடல்களாகவே இருந்துள்ளன. திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அறநூல்களை எழுதுவதற்கான ஒரு மரபு இருந்திருக்கின்றதென்பது தெரிகிறது. தொல்காப்பிய நூல் அமைப்பினை நோக்கும் போது அது எழுத்து முறைமை தொடக்கம் இலக்கியம் வரை ஒரு முழுமையான இலக்கியம் பற்றிய அறிக்கையாகவே காணப்படுகிறது. தொல்காப்பியர் பேசும் மரபு என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இந்த எழுத்துமுறை வளர்ச்சிக்குச் சமண சங்கங்கள், சமண முனிவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடுகள் உதவியிருக்கலாம் என்றே நம்பப்படுகிறது. வையாபுரிப்பிள்ளை, ஐராவதம் மகாதேவன், சிவத்தம்பி போன்றோரின் எழுத்துக்கள் இதனை நிரூபிக்கின்றன. தொல்காப்பியம் தமிழை எழுத்து மொழியாகக் கொள்கிறது. செய்யுளுக்கு வேண்டிய இலக்கணம், அது ஆக்கப்படும் முறைமை, அதன் கருப்பொருள், உணர்ச்சி அம்சம், பாடப்பட வேண்டிய மரபு பற்றித் தொல்காப்பியர் கூறும் விடயங்கள் மொழியின் வளர்ச்சி நிலையைக் காட்டுவதுடன் உயர் நிலையிற் தமிழ் கற்கும் குழாத்தினர்க்கு கூறும் வகையில் அமைந்துள்ளன. சமண சமயத்தைச் சேர்ந்த துறவியான இளங்கோவடிகள், முன்னெப்போதுமில்லாத வகையில் மக்களின் வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள், சடங்குகள், ஆடல், பாடல்களுக்கு எழுத்து வடிவம் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, அம்மானை, ஊசற்பாட்டு என அக்கால மக்கள் பாடல்களை என்னென்ன வடிவிற் பாடினரோ அவற்றைக் கேட்டுப் பெற்ற அந்தந்த வடிவங்களிற் செய்யுள் இயற்றி அந்தந்த மக்களாற் பாடப்படுவதாகக் காப்பியத்தில் அமைந்துள்ளமை அக்கால அழகியல் உணர்வுக்குச் சிறந்த சான்றாகும்.

அறநெறிக்காலத்தை விரிவாக ஆராயும்போது பண்டைத்தமிழ் மக்களது வாழ்க்கை முறையும், சமண பௌத்த மதங்களின் வருகை காரணமாக புதிய அறநெறிகள் இணைந்த வாழ்க்கைமுறையும் காணப்படுகிறது. சங்ககாலத் தமிழகத்தில் காதலும் வீரமும் போற்றப்பட்டன. பரத்தை உறவும் காணப்பட்டது. வீரர்களுக்குப் புகழ் சூட்டப்பட்டது. அறநெறிக் காலத்தில் இவற்றில் சில மாற்றங்களைப் பார்க்கிறோம். வீரர்கள் பெற்ற இடம் இங்கு சான்றோர் என்ற நிலையில் நல்ல சால்புடையோர் என்ற நிலையில் விளக்கம் பெறுகிறது. சங்க அகத்திணை மரபு உள்வாங்கப்பட்டு, பரத்தையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அன்பு வாழ்க்கை திருக்குறள் காமத்துப்பாலினூடாக மேற்கிளம்புகிறது. சமண, பௌத்தச் சூழலிற் பழமைக் கருத்துக்கள் அறநிலைக்குட்பட்டு புதிய விளக்கங்களைப் பெறுவது கவனிக்கத்தக்கது.

சங்க இலக்கியங்களுக்குக் காலத்தாற் பிந்திய தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் தரும் விளக்கங்களின் அடிப்படையில் அறநெறிக் கால அழகியல் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்படுகிறது. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் செய்த மணிமேகலை எனும் காப்பியம் கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் அறவாழ்க்கையையும், அதன் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது. அதன் எளியநடையும், கதை கூறும் பாணியும் இக்காவியத்தின் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றன.

தொல்காப்பியம் இலக்கண நூலாகக் கொள்ளப்பட்டாலும் அதன் பொருளதிகார வைப்பு முறை, அது கொண்டுள்ள விடயங்கள் அதனை ஒரு கவிதையியல் நூல் என்று கொள்ளத்தக்க வகையிற் காணப்படுகிறது. தமிழ் மக்களது வாழ்க்கை நெறியாகிய அகம், புறம், அகத்திலும் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை பற்றி விளக்கங்கள், பொருள், மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு என்று ஒன்பது இயல்களைக் கொண்டது பொருளதிகாரம். செய்யுள் என்பது தொல்காப்பியரது கருத்துப்படி ஆக்க இலக்கியமே. அத்தகைய ஆக்க இலக்கியத்திற்கான உருவம், உள்ளடக்கம், உணர்ச்சியம்சம், உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக அணிகள் என்று எல்லா விடயங்களுக்கும் விதிகளைக் கூறுகிறது. கவிதைக்கு உயிர் போன்றது உணர்ச்சி அம்சம். அவ்வுணர்ச்சியைத் தொடர்புபடுத்தும் சாதனங்கள் உவமைகள். உவமையிலும் உள்ளுறையுவமை, இறைச்சி போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன. தொல்காப்பியம் பொருளதிகாரம் 6ஆவது இயல் மெய்ப்பாடுகளைப் பற்றிப் பேசுகின்றது. உணர்ச்சி காரணமாக உடலிற் தோன்றும் மாற்றங்களான மெய்ப்பாடுகள் பற்றி விவரிப்பதற்குத் தனியொரு இயல் ஒதுக்கப்பட்டுள்ளமை கலையில் உணர்ச்சி பெறும் இடத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. தொல்காப்பியம் பொருளதிகாரம் கூறும் விடயங்கள் இலக்கிய ஆக்கம், அதன் உருவ, உள்ளடக்க அம்சங்கள், அழகியற் கூறுகள் யாவும் தொல்காப்பியம் தோன்றிய காலத்து சமூகத்தின் கலை முயற்சிகள் பற்றி அறியத் தருகின்றன.

தொல்காப்பியர் கூறும் செய்யுள் என்பது உலகியல் வழக்கும் நாடக வழக்கும் கலந்த 'புலனெறி வழக்கு' என்று சிறப்பித்துக் கூறப்படுவதிலிருந்தே அதன் சிறப்புத்தன்மை பெறப்படுகின்றது. செய்யுள் என்ற சொல் 'செய்' என்ற வினை அடியும் 'உள்' என்ற விகுதியும் சேர்ந்து வருவது. செய் என்பது ஆக்கு, உருவாக்கு என்று பொருள்படும். அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைப் புதிதாக உருவாக்குதல் என்றே கொள்ள வேண்டும். இதுவே கலைக்குரிய பொது இலக்கணமும் ஆகும். தொல்காப்பியர் கூறும் உலகியல் வழக்கு என்னும் புறவய உண்மைகள், நாடக வழக்கு எனும் அழகியல் உத்திகளின் வழி பாடல் சான்ற புலநெறி வழக்காக உள்ளன. அகத்திணையியல் 53ஆம் சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரை செய்யுமிடத்து, *"நாடக வழக்கு என்பது சுவைபட வருவனவற்றை எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறல்"* என்று விளக்கந் தருகிறார். எனவே, புலநெறி வழக்கென்பது உலகியல் வழக்கத்தைக் கற்பனையோடு சுவைபடக் கூறுதல் ஆகும். இதனை நச்சினார்க்கினியர் புனைந்துரை வகையாகக் கூறுவார். எனவே, ஒரு சாராரிடையே உலகியலாக நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாகக் கூறும் தன்மை இதனாற் காட்டப்படுகிறது. வாழ்க்கையுடன் அழகியலை இணைக்கும் போக்கு இங்கு காணப்படுகிறது. செய்யுள்களுக்கு வேண்டியது மொழி. மொழியின் கலைத்துவ வெளிபாடே செய்யுள் ஆகும். தேர்ந்த சொல்லும் ஏற்புடைய பொருளுங் கொண்டது செய்யுள். இளம்பூரணர் (பொருள் 537),

செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின்
அவ்வகை தானே அழகெனப்படுமே

என்று கூறுவது கவனிக்கத்தக்கது. தொல்காப்பியர் இலக்கிய வகைபாடுகள் பற்றிக் கூறுமிடத்து,

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தினும்

என்று 7 வகை இலக்கியங்கள் பற்றிக் கூறுகிறார். பாட்டுக்கு வேண்டியது ஓசை, இந்த ஓசை நயத்தைக் கூறுவது யாப்பு (Metre). இந்த ஓசை நயமே கவிதை அல்லது செய்யுளை ஏனைய சொற்களில் இருந்து வேறுபடுத்துவது. தொல்காப்பியர் அகத்திணை இயல் 53ஆவது சூத்திரத்தில் அக உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு கலியும், பரிபாடலுமே சிறந்த ஓசைகள் என்று கூறியிருப்பது, செய்யுள் சுவைபடச் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தையே புலப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளுக்கு வேண்டியது மொழி என்று கூறுவதுடன், ஓசை நயத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்டி ஓசை நயத்தைக் குறிக்கும் யாப்புக்கு விளக்கந் தருமிடத்து (செய்யுளியல் : 75),

எழுத்து முதலா ஈண்டிய அடியின்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பு என மொழிப யாப்பறி புலவர்

என்று கூறுகிறார்.

யாப்பு என்பது ஆக்கப்படும் முறைமையே ஆகும். செய்யுளியல் செய்யுளாக்கத்தின் புலமைத் தொழிற்பாடுகள் முழுவதையும் விளக்கி, செய்யுள் ஆக்கங்களின் வகைகளை அடிவரைவுள்ளன, அடிவரைவற்றன என வகுத்து அதன்மேற் கதை மாந்தர்கள், கிளவிகள் பற்றிப் பேசுகிறது. செய்யுளியல் முதலாம் சூத்திரம் செய்யுளுக்குரிய இலக்கணத்தைக் கூறுகிறது.

தொல்காப்பியர் செய்யுளாக்கம் பற்றிக் கூறுமிடத்து, "*செய்யுள் செய்வார் மெய்ப்பாடு (பாவம், உணர்ச்சி வெளிப்பாடு) தோன்றச் செய்தல் வேண்டும்*" என்று கூறுகிறார். யாதாயினுமொன்றைக் கூறிய வழி அதனை ஆராய்ந்து உரைத்தலின்றி அச்செய்யுளிற் கூறப்பட்ட பொருள் தானே வெளிப்பட்டுத் தோன்றினாற்போல கண்ணீரரும்பல், மெய்சிலிர்த்தல் முதலான மெய்ப்பாடுகள் தோன்றுமாறு செய்தல் வேண்டும். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாக '*மெய்ப்பாட்டினை*'*க் கூறுகிறார்.* '*பயனே மெய்பாடெச்ச வகைஎனாஅ*' என்பதற்கு (செம் : 1ஆம் சூத்) பேராசிரியர் தம் உரையில் மெய்ப்பாடென்பது சொற்கேட்பார்க்குப் பொருள் கண்கூடாதல் என்று கூறுகிறார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் அடிப்படை மெய்ப்பாடுகள் எட்டுப் பற்றிக் கூறுவதுடன் (மெய் : சூத். 3), பல்வேறு மெய்ப்பாடுகள் பற்றி ஏனைய சூத்திரங்களில் விளக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளுக்குப் பொருளாகத் தமிழர் வாழ்க்கை மரபான அகத்திணை, புறத்திணையை எடுத்துக் கொண்டாலும் அகத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார். தமிழ்நாட்டு நில இயற்கைக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்திற்கும் உரிய ஐந்து ஒழுக்கங்களும் செய்யுள்களுக்குப் பொருளாக வருதல் வேண்டும் எனக் கூறும் தொல்காப்பியர், அந்த ஐவகை ஒழுக்கத்தினையும் ஒன்று சேர்த்து 'அன்பின் ஐந்திணை' என்று சிறப்பித்து கூறுகிறார். அன்பின் ஐந்திணையும் பாடலுக்குப் பொருளாக வருமிடத்து அறம், பொருள், இன்பம் ஆகிய பயனைக் கொடுப்பதாக அமையும் என்ற வகையில்,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை

என்று கூறிச் சிறப்பிக்கிறார்.

காதலுணர்ச்சிகளான புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் என்ற அகப்பொருள் மரபைப் பொருளாகக் கொண்டமையும் பாடல்களில் அத்தகைய உணர்ச்சிகளுக்குரிய முதன்மைக் கதாபாத்திரங்களின் பெயர்கள் சுட்டி அழைக்கப்படுவதில்லை என்பது மரபு. ஆனால் அந்த உணர்ச்சிகளை அடிப்டையாகக் கொண்ட சம்பவங்கள் நிகழ்ந்த இடம், பொழுது முதலியன விரித்துரைக்கப்படுதல் வேண்டும். அந்த வகையில் முதல், கரு, உரிப் பொருள் என்ற மூன்றும் இணைந்த திணை பற்றிப் பேசப்படுகிறது.

முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலும் பயின்றவை நாடுங்காலை (அகத் : சூத். 3)

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

இவ்வாறு, அகப்பாடல் மரபுக்குரிய விதிமுறைகள் கூறப்பட்டுள்ளதுடன் கதை மாந்தர்களான தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, செவிலி, பார்ப்பான், பாணன் போன்றோர் கூறப்படுகின்றனர். சங்கப் பாடல்களில் வரும் இக்கதை மாந்தர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் எவ்வாறு கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கு விதியுண்டு. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முன்னம்' என்ற எண்ணக்கருவாகக் கூறப்பட்டுள்ளது. இதனை செய்யுளியல் (199),

இவ்விடத்து இம்மொழி இவர்க்குரிய வென்று
அவ்விடத்து அவரவர்க் குரைப்பது முன்னம்

என்று கூறுகிறது.

கூற்றுக்குரியவர் வெளிப்படையாகக் கூற்றை நிகழ்த்துவதும், கேட்பவர் அதனைக் குறிப்பாகப் புரிந்து கொள்ளலும் முன்னம் என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. இது பேசுவோர் கேட்போர் தொடர்பு பற்றிய கொள்கை, பொருளை அறியும் முறை 'முன்னம்' எனப்படும். மெய்ப்பாடு போன்று செய்யுள் உறுப்புக்களில் ஒன்றாக முன்னத்தைக் கூறியுள்ளார்.

எவ்வாறு செய்யுள் மாத்திரை, சீர், அசை, தளை போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளதோ அதேபோன்று மெய்ப்பாடு என்ற உணர்ச்சி அம்சத்தையும், கேட்போர் பொருளை அறியும் முன்னம் என்பதையும் செய்யுள் உறுப்புக்களாகக் கூறியிருப்பது வாசகரிடத்தே சுவையுணர்வைத் தூண்டும் வகையில் செய்யுள் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கேயாகும் என்பதை அறிய முடிகிறது.

கவிதை பற்றித் தொல்காப்பியர் கூறும் இலக்கணங்கள் தமிழ் மொழியின் சிறப்பினையும், அம்மொழியிற் தோன்றும் செய்யுள், இலக்கியங்களின் தகுதிப்பாட்டினையும் விளக்குவனவாக உள்ளன. இலக்கியம் ஒரு கால கட்டத்தின் சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடு என்ற வகையில் இலக்கணம் தோன்றுவதற்கான சமூகப் பண்பாட்டுத் தளம் பற்றித் தமிழருக்கேயுரிய தனித்துவமான அழகியற் சிந்தனை பற்றிக் கோடிட்டுக் காட்டுவதாக தொல்காப்பியம் அமைகிறது.

தொல்காப்பியர் கூறும் பொருளதிகார இயல்களில், இலக்கிய அழகியலை வெளிப்படுத்தும் உவமவியல் மிக முக்கியத்துவம் பெறுகிறது. உவமை பற்றிய தொல்காப்பியக் கருத்துக்களை ஆராயின், கூற எடுத்துக் கொண்ட விடயம் பொருள் எனவும், அதனை விளக்க ஒப்புமையாக எடுத்துக் காட்டப்படும் பிற பொருள் உவமை என்றும் கூறப்பட்டுள்ளது. எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகளுக்கும் அடிப்படையாக இருப்பது உவமை அணியே (வீ.ஜீ. சூரியநாராயண சாஸ்திரியார், 1927 : 49). கவி உவமையை ஒப்பிட்டுத் தெளிவை உண்டாக்குவதற்கு மட்டுமன்றிக் கவிதையின் அழகை வெளிப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. காதலுணர்ச்சிகள் பாடலுக்குப் பொருளாகுமிடத்து அவ்வுணர்ச்சிகளைப் புலப்படுத்தக் கூடிய உத்திவகைகளாக அணி அலங்காரங்கள் கையாளப்படுவது வழக்கம். தொல்காப்பியர் காலத்தில் உவமை ஒன்றே அணியாகக் கையாளப்பட்டுள்ளது. உவமைக்குத் தனி ஒரு இயலை தொல்காப்பியர் வைப்புச் செய்தமை கவனிக்கத்தக்கது.

உவமை பற்றித் தொல்காப்பியர் கூறுமிடத்து (உவம : சூத். 1),

வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத்தோற்றம்

என்று நால்வகை உவமை பற்றிக் கூறியுள்ளார்.

மேலும் உவமைகளை விரிவாக விளக்குமிடத்து அகத்துறைப்பாடல் மரபில் உணர்ச்சி வெளிப்பாட்டிற்குரிய ஓர் உத்தியாகக் கூறுகிறார்.

உள்ளுறுத் திதனோடு ஒத்துப் பொருள் முடிக என
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறையுவமம் *(அகத். சூத். 51)*

என்று கூறுகிறார். செய்யுளிற் கவியினாற் குறிப்பாலுணர்த்தப்படும் பொருளை வாசகருக்கு சூசகமாக உணர்த்துவது உள்ளுறையுவமம் ஆகும்.

கவிதையில் இறைச்சிப் பொருள் பற்றித் தொல்காப்பியர் (பொரு : சூத். 35) கூறுமிடத்து, *இறைச்சிதானே பொருட் புறத்ததுவே* எனக் கூறுகிறார். இறைச்சி என்பது கருப்பொருளை நிலைக்களனாகக் கொண்டு இறைச்சிப் பொருள் புலப்படும்.

திருக்குறளில் குறிப்பறிதல் எனும் பகுதியில் அமைந்த குறள் மூலம் உள்ளுறையாகக் கூறப்படும் பொருளின் சுவையை அறிந்து அனுபவிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்று நின்
வல்வரவு இங்கு வாழ்வார்க்குரை

தலைவியை விட்டுப் பிறதேசம் போகும் "தலைவன் போகவில்லை என்றால் எனக்குச் சொல் அவன் போய் விரைவில் வருவான் என்று கூறுவதாக இருந்தால் இங்கு உயிரோடு இருப்பவர்களுக்கு உரை" என்று தலைவி தோழிக்குக் கூறுவது மறைமுகமான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

மொழி இலக்கணங்களுள் அணி இலக்கணமும் முக்கியத்துவம் பெறுகிறது. சிலப்பதிகார உரை ஆசிரியரான அடியார்க்கு நல்லாராலும் அணி இலக்கணம் எடுத்தாராயப்பட்டுள்ளது. தண்டி அலங்காரம் அணி இலக்கணத்தை ஆராயும் நூலாக பொருளணி, சொல்லணிகளை விளக்குவதாக உள்ளது. வடமொழி இலக்கண மரபில் சப்தாலங்காரம், அர்த்தாலங்காரம் என்பன முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் கூறும் உள்ளுறையுவமம், இறைச்சியை வடமொழி மரபில் ஆனந்தவர்த்தனர் கூறும் துவனிக் கொள்கையுடன் ஒப்பிட்டு நோக்கலாம்.

வடமொழி இலக்கிய மரபில் காவியாலங்காரம், காவியாலங்கார சூத்திர விருத்தி, அலங்கார சர்வஸ்வம், அலங்கார கௌதுயம், காவியா தர்சம் போன்ற நூல்கள் அலங்காரங்களைப் பற்றிக் கூறும் நூல்களாகும். பரதர் தம் நாட்டிய சாஸ்திரத்தில் உவமை, உருவகம், தீபகம் என்னும் பொருளணிகள் பற்றியும், யமகம் எனப்படும் சொல்லணி பற்றியும் கூறியிருப்பதும் இவ்விடத்தில் நோக்குதற்குரியது.

தொல்காப்பியர் அகம், புறம் ஆகிய பொருளை அறியக் கூறும் கருவியாகிய செய்யுளியல்புகளை மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல் என்ற பகுதிகளினூடாக விளக்கி, இறுதியில் தமிழ் மரபு பிறழாமற் காத்தற்கு வேண்டியவற்றை மரபியலிற் தொகுத்து விளக்கியுள்ளார். தொல்காப்பியர் கூறிய அகத்துறைப் பாடற் சிறப்புக்கள் பின்வந்த நூல்களிற் போற்றப்பட்டமையும் இங்கு கவனத்திற் கொள்ளப்படலாம். அகத்துறைப் பாடற் சிறப்பு யாதெனிற் சுட்டியொருவர் பெயர் கூறாத் தன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் தலைநாட் கூட்டத்திற்குப்பின் கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டுமிடத்து,

மாசறு பொன்னே, வலம் புரிமுத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே
பெருங்குடிவணிகன் பெருமட்ட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ

என்று பாராட்டுவது குறிப்பிடத்தக்கது.

சங்கப் பொருள் மரபான அகத்திணை மரபு பல்லவர் கால பக்தியோடிணைந்த தத்துவப் பொருள் மரபாகப் புதிய பரிணாமத்தைப் பெறுகிறது. அகப்பொருட்துறையும் தெய்வீகக் காதலும் இணைந்து பக்தி ரஸகாவியமான பெரியபுராணத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. அகமும் புறமும் சோழர் இலக்கியப் பொருளாக வருவதோடு அவற்றின் வளர்ச்சியாகவும் நிறைவாகவும் சோழர் இலக்கியங்கள் அமைகின்றன. நாற்கவிராச நம்பியினால் இயற்றப்பட்ட 'நம்பியகப் பொருள்' சோழர் கால இலக்கியப் பொருள் மரபு பற்றிப் பேசுகிறது. தொல்காப்பியர் பொருள் மரபை ஒட்டி அகப் பொருள் வகை பேசுவது குறிப்பிடத்தக்கது. மேலும், புனைந்துரை உலகியல் என்ற இரண்டு வழக்கும் அதன் தொன்மை கெடாமற் பேசப்படும் என்று கூறப்படுகிறது.

புனைந்துரை யுலகியலெனுந் திறமிரண்டினுந்
தொல்லயல் வழாமற் சொல்லப்படுமே

இவ்வாறு தொல்காப்பியரால் கூறப்பட்ட இலக்கணமரபு நிறைவு பெற்றுப் பின்வந்த காலங்களின் இலக்கிய, இலக்கண நூல்களில் தோற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்து விட்டதை நோக்கும்போது, தொல்காப்பியம் தோன்றிய அறநெறிக்காலமே அனைத்திற்கும் வித்திட்டதெனக் கூறலாம்.

அறநெறிக்காலம் என்று போற்றப்படும் காலப்பகுதியைச் சிலர் இருண்ட காலம் என்று வர்ணிப்பர். 'இருண்ட காலம்' என்ற சொற்றொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவகையிலும் பொருத்தமற்றதாக விளங்குவதை தொல்காப்பியம் பொருளதிகாரம் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தொல்காப்பியர் கூறும் இலக்கியக் கொள்கை, இலக்கிய வகைப்பாடு, கவிதை இலக்கணம் யாவும் இக்காலத் தமிழர் அழகியலை விளக்குவதோடு பிற்காலத்திலும் இது அத்தகைய நூல்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இலக்கியம் சுவைபடச் செய்தல் வேண்டும் என்ற கருத்து மேற்கிளம்புவதைக் காணலாம்.

இலக்கியக் கொள்கைகளை வகுத்து தொல்காப்பியம் தரும் குறிப்புகளுடன், ஏனைய கலைகளான ஆடல், இசை பற்றிய கலைகளையும் அறியமுடிகிறது. பண்டைத் தமிழர் மத்தியில் இசையும் கூத்தும் பிரதான கலை வடிவங்களாகப் பயில் நிலையில் இருந்துள்ளன. தமிழர் மத்தியில் நடனம் கூத்து என்றே அழைக்கப்பட்டது. கூத்தர், கூத்தாட்டவைக்களம் போன்ற சொற்கள் இதனையே உணர்த்துகின்றன. மேலும், ஆடுகளம், ஆடுகள மகன், ஆடுகள மகள் போன்ற சொற்கள் ஆடல் மரபைக் குறித்து நின்றன. சங்க இலக்கியங்களிற் கரணநிலைப்பட்ட ஆற்றுகைகளாக இருந்தவை காலப்போக்கில் மகிழ்வளிக்கும் கலைகளாயின. மன்னர்கள், பிரபுக்கள், உயர் குழாத்தினர் கண்டுகளிக்கும் கலைகளாக முகிழ்த்தன. சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட ஐதீகங்களை உள்ளடக்கிய ஆற்றுகைகளாக மாற்றம் பெற்றமையைச் சிலப்பதிகாரம் வெளிப்படுத்துகிறது. மாதவி ஆடிய 11 வகை ஆடல்களை நோக்கலாம். மாதவியின் குடும்பத்தைச் சேர்ந்தோர் பரத்தையராகத் தொழிற்பட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது. இம்மரபு கோயிலினுள் கிரியை வழிபாட்டின்போது தேவதாசிகள் ஆடும் நடனம் வரை முக்கியத்துவம் பெற்றதுடன், இசை, நடனத்தின் மூலம் இறைவனை வழிபடும் ஆகம மரபுடனும் இணைக்கப்பட்டது. அரங்கு பற்றிய கொள்கைகளைத் தெளிவாகத் தரும் முதலாவது நூல் சிலப்பதிகாரமே. அரங்கு பற்றிய எண்ணக்கரு, ஆடல் மகளுக்குரிய இலக்கணம், பாடலாசிரியன், ஆடலாசிரியன், தண்ணுமை ஆசிரியன் போன்ற பக்க வாத்தியக்காரருக்குரிய இலக்கணம், பார்வையாளர் பற்றிய விளக்கங்கள் யாவும் அரங்கச் செயற்பாடு, ஆற்றுகை பற்றி விவரிப்பனவாக உள்ளன. சிலப்பதிகாரம் கூறும் ஆடலாசிரியன் ஆடலும் பாடலும் வாத்தியமும் முறைப்படி அறிந்தவனாக இருத்தல் வேண்டும். ஒற்றைக்கை, இரட்டைக்கை அபிநயங்களையும் அவற்றின் உபயோகத்தையும் அறிந்தவனாக இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தூய நடனத்திற்கும், கதை தழுவிய நடனத்திற்குமிடையே வேறுபாடு தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

இசை ஆசிரியன் என்போன் குழலும், யாழும் பறையும் வாசிக்கத் தெரிந்தவனாகவும், இசைக்கேற்பப் பாடல்களை உருவாக்குபவனாகவும் இருத்தல் வேண்டும். தண்ணுமையாசிரியன் தாள வகைகளை அறிந்தவனாகவும், யாழ், குழல் போன்ற வாத்தியங்களுக்கேற்ப தண்ணுமை வாசிக்கத் தெரிந்தவனாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு சிலப்பதிகாரம் இசை, நடனம் என்ற கலைகளின் சிறப்பு நிலையை விவரிக்கிறது.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் முதலாவது சூத்திரத்தில் பண்ணைப் பற்றிக் கூறுவது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் அச்சூத்திரத்திற்கு உரைசெய்யுமிடத்து *"முடியுடைவேந்தருங் குறுநிலமன்னரும் நாடக மகளிரின் ஆடலும் பாடலும் கண்டுங் கேட்டும் காமநுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு உணர்ச்சிகள் பற்றிக் கூறுகிறார்"* என்றார். இங்கு 'பண்ணை' என்பது ஆடலும் பாடலும் நிகழ்த்தப்படுகின்ற இடமாகக் கொள்ளப்படுகிறது. இங்கு நிகழ்த்தப்பட்ட ஆற்றுகைகள் காதலுணர்ச்சிகளை மையப்படுத்தியவை என்பதுவும் தெரிகிறது. சிலப்பதிகாரத்திலும் மாதவி இத்தகைய நடனங்களில் அதாவது ஒருவகை காதற் சுவையை அடிப்படையாகக் கொண்ட ஆடல்களில் (VIII : 70 – 112) தேர்ச்சி உடையவளாக இருந்தாளென்பதை கோவலன் கூற்று வாயிலாக அறியமுடிகிறது. அதாவது மாதவியைப் பிரிந்து கோவலன் சென்ற பின்னர் மாதவி தான் வரைந்த கடிதத்தைக் கொண்டு வந்தவனிடம், அக்கடிதத்தை மறுத்துக் கோவலன் கூறுவதாக இக்குறிப்பு அமைகிறது. மாதவியின் கடிதத்தை மறுக்கும் பொழுது கோவலனாற் குறிப்பிடப்பட்ட ஆடல்கள் உணர்வு வெளிப்பாட்டில் மிகுந்த ஒற்றுமையுடையனவான செய்யுள்களிற் தொகுக்கப்பட்டு பரதநாட்டியத்தின் ஒரு பகுதியின் முழுமையையும் எடுத்துக் கொண்டு இன்றைய நடனத்தின் அழகுபடுத்தப்பட்ட அமைப்புத் தமிழ் இசையாளராலும், நடனகாரரினாலும் நூற்றாண்டுகளாகக் கையளிக்கப்பட்டு வந்திருக்கிறது (கா. சிவத்தம்பி, 2004 : 306).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருக்குரிய இசை மரபாகக் கொள்ளப்படுவது பண்ணிசை. பண், பாணர், பண்ணத்தி போன்ற சொற்கள் இசையுடனும், நடனத்துடனும் தொடர்புடையவை. பண்ணை என்பது நாம் ஏற்கனவே அவதானித்தது போல ஆற்றுகை நிகழ்த்தப்பட்ட இடம் ஆகும். பாணர் என்னுஞ் சொல்லும் 'பண்' என்ற சொல்லினடியாகத் தோன்றியது. பண் என்பது பாடல், இசை ஆகியவற்றைக் குறிக்கும். பண்டைத் தமிழர் இசையைப் பாடியவர்கள் பாணர்களே. யாழ் என்ற இசைக் கருவியை மீட்டிப் பாடல்களைப் பாடியவர்கள் பாணர்கள். தமிழர் பண்பாட்டில் பாணன், பாடினியரின் பங்கு குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் பண்ணத்தி என்ற இசையோடு பாடப்பட வேண்டிய பாடல் வடிவம் பற்றியும் கூறியுள்ளார். பண் + அத்து + இ என்பது பண்ணத்தி என வரும். பண்ணோடு பாடப்படுதல் என்று பொருள். நாயன்மார்களினாற் பாடப்பட்ட தேவாரப் பதிகங்களைப் 'பண்சுமந்த பாடல்கள்' என்று அழைப்பது வழக்கம்.

இவ்வாறு, தொல்காப்பியமும், ஏனைய அறநெறிக்கால நூல்களும் தரும் குறிப்புக்கள் அக்கால அழகியல் பற்றி கூறுவனவாக உள்ளன. அறநெறிக் காலத்திற் கலை இலக்கியக் கொள்கைகள் முழுமையான வடிவம் பெற்றதுடன் இன்று வரை நிலைத்து நிற்பதுங் கண்கூடு. தமிழக வரலாற்றில் அறநெறிக்காலம் மிகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு காலப் பகுதியாக விளங்குகிறது. சமயம், தத்துவம், அறக்கருத்துக்கள், இலக்கியம், கலை, அழகியல் என்று அனைத்துத் துறைகளிலும் முக்கியத்துவம் பெறும் ஒரு காலப் பகுதியாகும்.

உசாத்துணை

(1) தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, பவானந்தம் பிள்ளை பதிப்பு சென்னை, 1917.

(2) சிலப்பதிகாரம், அடியார்க்குநல்லார் அரும்பத ஆசிரியர் உரையுடன், உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1955.

(3) சிவத்தம்பி, கா. பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், 2004.

(4) இராகவையங்கார், எம். தொல்காப்பியம், பொருளதிகார ஆராய்ச்சி.

(5) Meenakshisundaranar, T.P.,. Aesthetics of the Tamils, University of Madras, Chennai, 1997.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக் கால இலக்கியங்களின் அழகியலில் அரசியல்

க.இரகுபரன்

'இலக்கியம் காலத்தில் கண்ணாடி' என்ற ஒரு கோட்பாடு மிகவும் மலினப்படுத்தப்பட்ட வகையில் இலக்கிய உலகில் நிலவுகின்றது. கண்ணாடியொன்று தன் முன்னாலுள்ள பொருள்களை அப்படியே பட்டவர்த்தனமாகப் பிரதிபலிப்பதுபோல் இலக்கியம், தான் தோன்றிய காலத்துச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதில்லை. அப்படிப் பிரதிபலிப்பதாயின் அது வெறும் செய்தியாகி விடுமேயன்றி இலக்கியமாகாது. இலக்கியத்தின் ஆக்கக் கூறுகளுள் ஒன்றோ பலவோ, மறைமுகமாகவேனும் குறித்த காலத்தைப் பிரதிபலிக்கும் என்பதே உண்மை. அவ்வெளிப்பாடு, பொருள் ரீதியானதாக மாத்திரமே அமையும் என்று இல்லை. இலக்கியத்தின் அழகியற் கூறுகளூடாகவும் அது வெளிப்படலாம். இந்த உண்மைக்கு நல்லதொரு அண்மைக்கால உதாரணத்தைக் காட்டவேண்டுமானால் பாரதியின் 'சுயசரிதை' யைக் காட்டலாம்.

பாரதி, தன் சிறுபராயத்தில் ஒரு சிறுமியைக் காதலித்ததாகவும் அவளது பார்வையைப் பெற்றுவிடவேண்டும் என்பதற்காக அவளின் வருகைக்காகக் காத்திருந்து, அவள் போகும் இடமெல்லாம் தானும் பின்தொடர்ந்து சென்றதாகவும் கூறுகிறான். அவ்வாறு அவளுக்காகக் காத்திருந்த தன் செயலுக்கு, அக்காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களைப் பிடிப்பதற்காக ஆங்கில அரசின் ஒற்றர்கள் காத்திருந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமையாகக் கையாளுகின்றான். அந்த உவமையில் அக்காலத்தைய இந்திய அரசியற் சூழல் நன்கு பிரதிபலிக்கின்றது.

நீர் எடுத்து வருவதற்கு அவள் மணி
நித்திலப் புன்னகைச் சுடர் வீசிடப்
போர் எடுத்து வரும் மதன் முன்செலப்
போகும் வேளை, அதற்குத் தினந்தொறும்
வேரெடுத்து சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெடுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேசபக்தர் வரவினைக் காத்தல்போல்
காத்திருந்து............[1]

நவீன காலத்திற் போலவே பழந்தமிழ் இலக்கியங்களிலும் அவற்றின் அழகியற்கூறுகள் அவ்விலக்கியங்கள் தோன்றிய காலத்தைப் பிரதிபலித்து நிற்பதைக் கண்டுகொள்ள முடியும். சங்கமருவிய காலம், அறநெறிக்காலம், களப்பிரர் காலம் என்றெல்லாம் பல பெயர்களாற் சுட்டப்பெறுகின்ற கி.பி.300க்கும் 600 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களில் இத்தன்மை மிகுதியும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கி.பி. 300–650 காலப்பகுதி தமிழகத்தில் பெருமாற்றங்கள் நிகழ்ந்தேறிய காலப்பகுதி; சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தரில் சோழ, பாண்டிய வம்சத்தவரின் ஆட்சி முற்றாகவே மறைந்தது; சேர அரசு வலிகுன்றியது. சோழ பாண்டிய நாடுகளிலே களப்பிரர் என்னும் புதியதொரு அரச வம்சத்தின் ஆட்சி தோன்றியது. வடக்கே தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்தை மையப்படுத்திய வகையில் பல்லவர் என்னும் புதிய அரச வம்சத்தார் ஆட்சிசெய்யத் தொடங்கினார்கள். முன்பு குறுநில மன்னர்களாக, மூவேந்தரைச் சார்ந்து நின்ற சிற்றரசுகளும் பிறவும் தம் நிலைப்பாடுகளில் மாற்றங் கண்டன. பேரரசுகள் மாறும் நிலையில் சிற்றரசுகளும், பழைய பேரரசின்கீழ் பிரதானிகளாக, அலுவலாளர்களாக விளங்கியவர்களும் எவ்வாறு நடந்துகொண்டிருப்பார்கள் என்பதும் ஊகிக்கத்தக்கதே. ஆட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையும் வேளைகளில் கிளர்ச்சிகள் ஏற்படுவதும் கிளர்ச்சிகாரர்களுக்குப் புதிய தலைவர்கள் ஆதரவளிப்பதும் ஆதிக்கப் போட்டியாளர்களுக்கிடையே அகப்பட்ட பொதுமக்கள் பலமுனையாலும் பாதிக்கப்படுவதும் ஆட்சியதிகாரங்கள் மாறி நிலையான அரசொன்று வலுப் பெறுவதற்கிடையில் நிருவாக ஒழுங்குகள் சிதைவதும் மக்களின் வாழ்வியல் விழுமியங்கள் மதிப்பிழந்து போவதும் என்று இவையெல்லாம் நிகழக் கூடியனவே. பாரம்பரிய அரசுகளின்மேல் பற்றுறுதி உள்ளவர்கள் புதிய அரசுகளில் காழ்ப்புடையவர்களாய், அப்புதிய ஆட்சியாளர்களை அவர்களின் குலம் கோத்திரம் மொழி முதலானவற்றின் அடிப்படையில் விமர்சிப்பதும், மொழியுணர்ச்சி முதலானவற்றின் அடிப்படையில் மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிவிடுவதும் என்று இவையெல்லாம் நிகழக்கூடியனவே.

சங்ககாலம் என்று குறிப்பிடப்படும் காலப்பகுதியின் இறுதியில் அல்லது சங்கமருவிய காலம் என்று குறிப்பிடப் பெறும் காலப்பகுதியின் தொடக்கத்தில் தோன்றியன என்று கொள்ளப்பெறுகின்ற கலித்தொகைப் பாக்களிற் பயின்றுள்ள அழகியலிலும் மாறுங் காலம் ஒன்றின் பிரதிபலிப்பை நம்மாற் கண்டுகொள்ளக் கூடியதாய் உள்ளது.

தலைவன் பிரிவினால் தலைவி வருந்துவாள் என்பதை, தலைவனுக்கு உணர்த்த முற்படும் தோழி, தலைவி நலமிழந்து – அழகு கெட்டு வாடிய முகத்தினளாவாள் என்கிறாள். தலைவியின் முகவாட்டம் உவமை வகையால் வலியுறுத்தப்படும் வகை வருமாறு:

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்,
பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டு அமைவாளோ?

[நாட்டை ஆள்கின்ற அரசன் (அறம் திறம்பியதன் பயனாய்) தான் பின்னர் கலக்கமுறும்படி அலைக்கழித்த நாடுபோல் அழகு கெட்ட முகத்தோடு துன்பத்தை ஆற்றியிருப்பாளோ?]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தேடிப் பிரிய நினைக்கும் தலைவன் கடக்கவேண்டிய, ஆனால் கடத்தற்கரிய சுரத்தின் கடுமைக்குக் கையாளப்படும் உவமை இது.

நடுவிகந்து ஒரீஇய நயன் இல்லான் வினைவாங்க
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு கதிர்மூடிக் காய்சினம் தெறுதலின்
..
விறல்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம் [3]

[நடுவு நிலையைக் கைவிட்டு நீங்கிய அருளில்லாத அமைச்சன், தான் எண்ணிய காரியத்தை முடிப்பதற்காக, பிழையாக வழிப்படுத்த அதனால் கொடுந்தொழிலைச் செய்யமுற்பட்ட அரசனது கொடுங்கோல் சுடுவதுபோல, சூரியன், கடுஞ்சூடான தன் கதிர்களைச் செலுத்திச் சினந்து வருத்த, மலைகளும் வெம்பிய கடத்தற்கரிய வெய்ய காடு]

இத்கைய கொடுஞ்சுரத்துக்கு வேறொரு செய்யுளிற் கையாளப்படும் உவமையும் இங்கு கருதத்தக்கது. வெப்பமிகுதியால் மரங்கள் வேரோடு வெம்பின; இலையாவும் உதிர்ந்து நிழல் என்பதே அற்றுப்போன கொடிய சுரம்; குடிகள் வருந்தி ஓலமிடும்படியாக, பொருளாசையால் கொலைத் தொழிலுக்கும் அஞ்சாத அரச அதிகாரிகள் நெறிமுறையில்லாமல் வரி வசூலிக்க, கோல்கோடிய அரசனது ஆட்சிக்குட்பட்ட உலகம்போல, நிழலற்ற மரங்கள் நிற்கும் வெஞ்சுரம்.

வேரொடு மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகி
கொலை அஞ்சா வினைவரால், கோல் கோடியவன் நிழல்
உலகுபோல், உலறிய உயர்மர வெஞ்சுரம். [4]

மேல்வரும் செய்யுட்பகுதியும் இத்தகைய சித்திரிப்புகளை உடையதே.

செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
எரிமேய்ந்த கரி வறல்வாய் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....

....

புயல் துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்.[5]

[போர்த்தொழிலில் ஈடுபட்ட சினம் மிகுந்த அரசன், தன் படையொடு சென்று தங்கிய பகைவர் நிலம், தீயின்வாய் அகப்பட்டு கரியாகிப்போன மழையற்ற காட்டுவழி]

தலைவன் பொருள் தேடுவதற்காகவே தலைவியைப் பிரிகிறான். ஆனால் அப்பொருளோ நிலையில்லாதது என்பதை உணர்த்தி தலைவனின் போக்கினைத் தடுக்க முற்படும் தோழி, அதன் நிலையாமை உணர்த்த ஒரு உவமையைக் கையாள்கிறாள். தன்னுடைய உயர்ச்சியை – தனக்கு வரக்கூடிய இலாபத்தைக் கருதிற் கொள்ளாது, அரசனுக்காகவே பாடுபட்ட அமைச்சன் ஒருவனை, சினக்கும் நிலை வந்துற்றபோது அந்த அமைச்சன் தனக்காகவே பாடுபட்டவன் என்ற எண்ணம் சிறிதுமின்றி – பழைமை பாராட்டாது– அவனைக் கொன்று தண்டிக்கும் அரசன், நிலையிழந்து அழிவான். அந்த அரசன் போன்றே பொருளும் நிலையில்லாதது. அத்தகைய பொருளையும் யாரும் விரும்புவார்களா? என்று வினவுகிறாள் தோழி. தோழியின் இழிவரல் உணர்ச்சி உண்மையில் பொருள் மேலானதல்ல; அருளில்லா அரசன் மேலானதே.

புரைதவப் பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும் பொழுதில், கண்ணோடாது உயிர்வௌவும்
அரைசினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ?[6]

தலைவன் இளவேனிற் காலத்தே திரும்பிவிடுவேன் என்று பிரிந்து சென்றான். குறித்தகாலம் வந்தது; தலைவன் வரவில்லை; இளவேனில், தலைவியைத் தாக்குகின்றது.

அறிவில்லாத அமைச்சனின் திறனற்ற செயலால் பெருமையழிந்த அரசனது நாட்டிலே பகையரசனது படைகள் வந்துவிடுதல் போல, இளவேனில் தாக்குதல் நடத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதையோன் வினைவாங்க, பீடிலா அரசன் நாட்டு
ஏதிலான் படைபோல, இறுத்தது இளவேனில் [7]

கலித்தொகை என்ற அகத்திணை சார்ந்த இலக்கியத்திற் கையாளப்பட்டுள்ள இத்தகு உவமைகள் அசாதாரணமானவை; சங்க கால அகத்திணைச் செய்யுள்களிற் கையாளப்பட்ட உவமைகளினின்றும் பெரிதும் வேறுபட்டவை. இவை காலத்தின் பிரதிபலிப்பாக அமைவன. இதுபோன்றே சிலப்பதிகார காவியத்திற் பயின்றுள்ள அழகியல் அம்சங்களும் காலத்தின் பிரதிபலிப்பாய் அமைவதைக் காணலாம்.

சிலப்பதிகாரம் முடியுடை வேந்தர் மூவரதும் ஆட்சி நிலவாத ஒரு காலப்பகுதியில் தோன்றியது என்பது வெளிப்படை. அதனாலேயே அது மூவேந்தரதும் ஆட்சிப்பகுதியை உள்ளடக்கியதாக கதைக் களத்தை அமைத்துக் கொண்டது. அங்கு போற்றப்பெறும் மூவேந்தர்கள் அந்நூல் தோன்றியகாலத்தில் ஆட்சி செய்தவர்கள் அல்லர்; அவ்வக் குலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கற்பனை வேந்தர்களே அங்கு போற்றப் பெறுகிறார்கள் (ஏறக்குறைய அக்காலப்பகுதிக்கு உரியதான முத்தொள்ளாயிரத்திற் போற்றப்படும் சேர சோழ பாண்டியரும் அத்தகையவர்களே). பல்லவர் போன்ற பிறமொழி பேசும் ஆட்சியாளர்களுக்கான குறியீடுகளாகவே வஞ்சிக்காண்டத்தில் வரும் தென்தமிழ் ஆற்றல் உணராத கனக விசயர் என்னும் வடநாட்டு வேந்தர்கள் அமைகிறார்கள் போலும். சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே கையாளப்படும் அழகியல் அம்சங்களை அவதானிக்கும்போது அவற்றுட் பொதிந்துள்ள அரசியலை உய்த்துணரக் கூடியவர்களாவோம்.

கண்ணகியின் கணவனாகிய கோவலன், மாதவிமேல் மையல் கொண்டு அவளோடு,

அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்—
வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து [8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவில் கண்ணகியின் வாழ்வு துன்பமயமாகவும் மாதவி வாழ்வு இன்பமயமாயும் ஆகின்றன.

கூடிய காதலர்க்கு இன்பமளிக்கும் மாலைக்காலம் கண்ணகிக்குத் துன்பத்தையும் மாதவிக்கு இன்பத்தையும் அளிப்பதாக வந்து சேர்கின்றது. சூரியன் மறைந்து சந்திரன் தோன்றாத இடைப்பொழுதான மாலையில், நிலமகள் சூரிய சந்திரரைக் காணாது வருந்துகிறாள்; விரிந்த கதிர்களைப் பரப்பி உலகம் முழுதாண்ட, ஒற்றைச் சக்கரத் தேரினை உடைய, சூரியனாகிய அந்தப் பலசாலியைக் காணவில்லையே! அழகிய இடமகன்ற வானத்திலே நிலவொளியை வீசும் திங்களாகிய செல்வன் எங்கே உள்ளான்? என்று திசையாகிய தன்முகம் இருண்டு பசலையுற, நிலமடந்தை தன் அரசனைக் காணாது அவலப்படுகின்ற மாலைவேளை வந்தது என்கிறார் இளங்கோ.

விரிகதிர் பரப்பி உலகம் முழுது ஆண்ட
ஒரு தனித் திகிரி உரவோன் காணேன் ;
அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்
திங்களம் செல்வன் யாண்டுளன் கொல் என
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரை நீர் ஆடை இருநில மடந்தை
அரைசு கெடுத்து அலமரும் அல்லற் காலை...... [9]

இங்கே நிலமடந்தையின் அரசர்கள் என்று இளங்கோ சொல்லுவது உண்மையில் சூரியனையும் சந்திரனையும் அல்ல; சூரிய சந்திர வம்சத்தவர்களான சோழரையும் பாண்டியரையுமே என்பது நாம் உய்த்துணர வேண்டியது. சூரியனை 'ஒரு தனித்திகிரி உரவோன்' என்பது இரட்டுற மொழிதலாகும். ஒற்றைச் சக்கரத் தேரினை உடையவன் சூரியன்; ஒப்பற்ற ஆணைச்சக்கரத்தை உடையவன் சோழன். தலைவன் இல்லாமையால் நிலமகள் திசைமுகம் பசந்தாள் என்பது தம் பாரம்பரிய அரசரில்லாததால் தமிழ் கூறு நல்லுலகின் திசைதோறும் இருந்த மக்கள் வாடினார்கள் என்று உணர்த்துவதற்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோ தொடர்ந்து சொல்லும் செய்திகளுள்ளும் பூடகமாக அரசியலையே கூற முற்படுகிறார். மாலைக்காலத்தில் காதலரைப் பிரிந்திருந்தவர்கள் துன்பப்பட்டார்கள்– அரசுக்கு தம்மால் செலுத்தப்பட வேண்டிய வரியை ஒழுங்காகச் செலுத்துபவர்கள் துயரப்படுவதுபோலத் துன்பப்பட்டார்கள்.காதலரைச் சேர்ந்திருந்தவர்கள் மகிழ்ந்திருந்தார்கள் – அரசின் கீழ் இருந்தும் அதற்கு விசுவாசமாக நடக்காது கிளர்ச்சி (குறும்பு) செய்பவர்களின் உதவியுடன் அரசன் நாட்டிலில்லாத சமயத்தில் நாட்டுட் புகுந்து கைப்பற்றிய புதிய (விருந்தின்) மன்னர்போலத் தருக்கி மகிழ்ந்தார்கள் (குறும்பு என்ற சொல் குறுநில மன்னர்களைக் குறிப்பது; இரண்டாம் நிலையில் அக்குறுநில மன்னர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியைக் குறிப்பது. இத்தகைய பொருட்பேற்றின் அடிப்படையிலேயே 'குறும்பு செய்தல்' என்ற மொழிவழக்கு தமிழில் நிலைபெற்றது).

பிறை நிலவு உதயமாகியது; மாலைப் பொழுதின் குறும்பு அகன்று இரவாகியது. இவ்விடயத்தை இளங்கோவடிகள் கூறும் முறைமையில் அப்பட்டமான அரசியலைக் காணலாம். பிறைச்சந்திரனேயானாலும் மாலையின் குறும்பை அகற்றும் வல்லமையை அது பெற்றிருந்தமைக்குக் காரணம் கற்பிக்கிறார் இளங்கோ. தாம் இளையவர்களாக இருந்தபோதும் தம் பகை அரசுகளைக் கடியத்தக்க வல்லமை உடையவர்கள் பாண்டியர்கள். அத்தகைய பாண்டியர்களின் குலமுதல்வன் சந்திரன். ஆகையாலேயே இளம் பிறைச் சந்திரனாக இருந்தும் மாலையின் குறும்பை அகற்றக்கூடியதாக விளங்கியது; தன் குலத் தன்மையினின்றும் திரியாது வெண்கதிர்களைப் பரப்பி, மீன் அரசு (மீன் அரசு=உடு பதி= சந்திரன்) என ஆண்டது என்னும்போது மீனக் கொடியுடைய பாண்டியர் குலத்தையும் குறிப்பால் உணர்த்தும் இளங்கோவின் உள்நோக்கம் வெளிப்படையாகிறது.

இளையர் ஆயினும் பகை அரசு கடியும்
செருமான் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்தி வானத்து, வெண்பிறை தோன்றி
புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டி
பான்மையின் திரியாது பாற்கதிர் பரப்பி
மீன் அரசாண்ட .... [10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியிடம் ஐயம் கொண்டு அவளை விட்டுப்பிரிந்து கண்ணகியிடம் மீண்ட கோவலன், பொருள் தேடுவதற்காக கண்ணகியோடு மதுரை நோக்கிப் பயணமாகிறான். வழியில் மாங்காட்டு மறையோனைச் சந்திக்கிறார்கள்; கோவலன், மதுரை செல்லும் வழி எது என்று அவனிடம் விசாரித்தான். அதற்கு அம்மறையோன் இக் கடுங்கோடை காலத்தில் மனைவியையும் அழைத்துச் செல்லநேர்ந்த நிலைமைக்காகப் பரிதாபப்படும் பாங்கில் பேசுகிறான். கோடை காலத்தின் கொடுமையை மாடலமறையோன் உரைப்பதற்குக் கையாளும் உவமையே இங்கு நாம் நோக்கவேண்டியது.

வேனிலும் சூரியனும் தம்முட் பகை கொண்டதனாலேயே இது நிகழ்ந்தது; எப்படி ஒரு அரசன் தன் அமைச்சர் முதலான அலுவலாளரோடு முரண்படுவதால் அரசு நிலைகுலைந்து நாடு பாழ்படுமோ, அவ்வாறு சூரியன் வேனிலோடு முரண்படுமிடத்து குறிஞ்சி முல்லை என்னும் வளம்மிக்க நிலம்கூட பாலையாகிப் போய்விடும் தன்மையுள்ள கொடிய கோடைகாலத்திலே, காரிகையோடு புறப்பட்டு வந்தீரே என்று பேசும் மாடலனின் பரிதாபப் பேச்சில் இளங்கோ, தம்காலத்து அரசியல் நிலைமை தொடர்பாகக் கொண்டிருந்த பரிதாப உணர்ச்சியே புலனாகின்றது.

கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல,
வேனலம் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
நானலம் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்
காலை எய்தினிர் காரிகை தன்னுடன் [11]

மாங்காட்டு மறையோனின் வழிப்படுத்தலில் , கோவலனும் கண்ணகியும் அவர்களுக்குத் துணையாக வந்த கவுந்தி அடிகளும் மதுரைநோக்கி நடந்தார்கள்; காட்டுவழியில் ஐயை கோட்டத்தில் தங்கி இளைப்பாறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைப் பயணத்தை பகற்காலத்தில் தொடர்ந்தால் கண்ணகி வெய்யிற் கொடுமையைத் தாங்கமாட்டாள்; ஆதலால் இரவிலே செல்வோம் என்று கவுந்தியடிகளிடம் கோவலன் விநயமாக உரைக்கிறான்.

கடுங்கதிர் வேனில் இக் காரிகை பொறாஅள்;
படிந்தில சீறடி பரல்வெங் கானத்து;

....

பகலொளி தன்னினும், பல்லுயிர் ஓம்பும்
நிலாவொளி விளக்கின், நீள் இடை மருங்கின்
இரவிடைக் கழிதற்கு ஏதம் இல் என,[12]

கோவலன் உரைக்க, கவுந்தியடிகளும் (குரவரும்) அக்கொள்கைக்கு உடன்பட, அவர்கள் வெய்யிற் கொடுமை நீங்கும் இரவுப் பொழுதை எதிர்பார்த்திருந்தனர். கொடுங்கோல் வேந்தன் ஒருவனது ஆட்சியின் கீழ் அகப்பட்ட குடிகள் அவனது அழிவுகாலத்தை, எதிர்பார்த்திருப்பதுபோலப் பார்த்திருந்தனர். அவ்வாறு எதிர்பார்த்திருந்தவர்களுக்கு உவகைதரும்படியாகச் சந்திரன் தோன்றினான் என்பதைக் கூறவேண்டிய இளங்கோவடிகள் வெறுமனே அவ்வாறு கூறவில்லை. 'பாண்டிய குலத்து முதல்வன் தோன்றினான்' என்றார். அதுவும் தனியாகத் தோன்றவில்லை படையோடு – நட்சத்திரப் படையோடு தோன்றினான் என்கிறார்.

குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து
கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல
படுகதிர் அமையம் பார்த்திருந்தோர்க்கு
பன்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பி,
தென்னவன் குலமுதற் செல்வன் தோன்றி...[13]

இளங்கோவடிகள் யாருடையதோ ஆட்சியின் வீழ்ச்சியையும் அவ்வீழ்ச்சியை ஏற்படுத்துவதான படையெடுப்போடு கூடிய பாண்டியனின் எழுச்சியையும் எதிர்நோக்கியிருந்தார் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவடிகள், வேறுபல இடங்களிலும் தன்காலத்து அரசியற் சூழ்நிலைகளைத் தன் படைப்பில் பிரதிபலிக்கச் செய்தேயுள்ளார்.

இருவரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநிலம்[14]

வெல்போர் வேந்தர் முனையிடம் போல
பல்வேறு குழூக்குரல் பரந்த ஓதையும்[15]

கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல[16]

போர்ச் சூழல் ஒன்றினுள் வாழ்ந்த படைப்பாளி ஒருவனையே மேற்படி உவமைகள் காட்டிநிற்கின்றன.

எது எவ்வாறாயினும் இளங்கோவடிகள் கையாண்ட மேற்படி அழகியல் அம்சங்கள் அவரிடம் அரசியல் உள்நோக்கு இருந்தது என்பதைப் புலப்படுத்துவன. அந்த உள்நோக்கம், ஒரு தமிழ்த் தேசியம் சார்பானது. தமிழ் கூறு நல்லுலகு பற்றிய ஒருமைப்பாட்டு உணர்வொன்றை அடிப்படையாகக் கொண்டது. தமிழகத்தை அடிப்படுத்த முனைந்த அல்லது அடிப்படுத்தியிருந்த விருந்தின் (புதிய) மன்னர்க்கு எதிரானது.

'காவா நாவிற் கனகனும் விசயனும்' அத்தகையோரை உணர்த்த இளங்கோ கையாண்ட படிமங்கள்.

காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர்.....[17]

என்று, தமிழுணர்ச்சியின் அடிப்படையில், அதுவரை காலமும் முரண்பட்டிருந்த மூவேந்தர்களுக்கிடையில் புதியதொரு ஒருமைப்பாட்டு உணர்வினைத் தோற்றுவிக்கிறார் இளங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்புனை தெரியலும் அலர்தார் வேம்பும்
சீர்கெழு மணிமுடிக்கு அணிந்தோர் அல்லால்
அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல் [18]

என்று சேரனைப் பாடுவதில் அந்த ஒருமைப்பாட்டுணர்வு துலங்கக் காணலாம். சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்ற வேறுபாட்டுணர்வு கடந்த, அகண்ட தமிழகத்தின் மொழி, பண்பாடு, வாழ்வியல் அனைத்தையும் பெருங்குன்றம் ஒன்றை 'ஆடி நல் நிழல்' காட்டுவது போலக் காட்டும் இளங்கோ, தமிழரசு ஒன்றையே இலட்சியமாகக் கொண்டார் போலும். இளங்கோவின் சிலப்பதிகாரம் குறித்த நல்லதொரு விமர்சனமாக அமைகின்றது 'நூற் கட்டுரை'. அது வருமாறு:

குமரி வேங்கடம், குண குட கடலா,
மண்திணி மருங்கின் தண்தமிழ் வரைப்பில்
செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கின் அறம் பொருள் இன்பம்
மக்கள் தேவர் என இருசார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர,
எழுத்தொடு புணர்ந்தசொல் அகத்து எழு பொருளை
இழுக்கா மரபின் அகனும் புறனும்
அவற்றுவழிப் படூஉம் செவ்வி சிறந்தோங்கிய
பாடலும் எழாலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே ஆடல் என்று அனைத்தும்
ஒருங்குடன் தழீஇ உடம்படக் கிடந்த
வரியும், குரவையும், சேதமும் என்றிவை
தெரிவுறு வகையான் ***செந்தமிழ் இயற்கையில்***
ஆடிநல் நிழலின் நீடு இருங் குன்றம்
காட்டுவார்போற், கருத்து வெளிப்படுத்து,
மணிமேகலைமேல் உணரப்பொருள் முற்றிய
சிலப்பதிகாரம்..... [19]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்தொகை, சிலப்பதிகாரம் இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியது திருக்குறள். திருக்குறள் அவற்றைப்போன்ற இலக்கிய நூல் அன்று; அது ஒரு அறநூல். ஆயினும் இலக்கியத்துக்கான தன்மைகள் பலவற்றையும் கொண்டது; உன்னதமான அழகியல் அம்சங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது.

அறநூல் என்ற வகையில் திருக்குறள் அரசியல் பற்றி வெளிப்படையாகவே –நேரடியாகவே பேசுகின்றது. இலட்சிய அரசு ஒன்றுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் பலவற்றையும் அது வகை தொகைப்படுத்திக் கூறுகின்றது. அரசுக்கு வரைவிலக்கணம் செய்கின்றது.

அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு. [20]

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. [21]

அரசன் குடிமக்களோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் [22]

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கும் உலகு [23]

வடமொழியிலே ஏலவே ஒரு அறநூல் மரபு இருந்தது. அதையொட்டிய வகையிலே குறித்த ஒரு அரசனுக்கு என்று இல்லாமல் பொதுவாக அறத்தைக் கூறுவதில் வள்ளுவருக்கு அதிக இடைஞ்சல் இருந்திராது. ஆகையால் அரசனுக்குக் கூறும் புத்திமதியை வெளிப்படையாகவே கூறினார். ஆயினும் சில விடயங்களைக் கூறும்போது நாசூக்காகக் கூற முற்படுவதையும் நாம் வள்ளுவரிடத்திலே அவதானிக்கலாம். அத்தகைய குறள்களை இங்கு நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீலிபெய் சாகாடும் அச்சு இறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் [24]

இது 'வலியறிதல்' என்னும் அதிகாரத்தில் வருவது. எளியர்—வலியற்றவர்தானே என்று பலரோடும் பகைத்துக் கொள்ளும் ஒருவன் தான் வலியனாகவே இருந்தபோதிலும் அழிய நேரிடும் என்பதை வலியுறுத்துவதாக அமைவது இக்குறள் என்பது அதன் அதிகாரத் தலைப்பால் தெரிகின்றது. ஆனால் குறள் கூறும் வெளிப்படைப்பொருள், வலிமையற்றவை என்று மயிற்பீலியையேனும் அதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சு முரியும் என்பதேயாம்.

குறும்புகளும் அரச அலுவலாளரும் விருந்தின்மன்னரும் கூடி, வேந்தர்க்கு எதிராக நின்றமை, கலித்தொகை சிலப்பதிகாரம் என்பவற்றால் உணரப்பட்டன. அத்தகைய சூழ்நிலைக்கு ஆளான வேந்தர்களுக்கு அறிவுரையாய் அமையத்தக்கது இக்குறள். இது போன்றதாக இதே அதிகாரத்தில் அமைந்த மற்றொரு குறள்:

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கு இறுதி ஆகிவிடும் [25]

மரத்தின் உச்சிவரையில் ஏறியவர் அதற்கும் மேல் ஏறமுயன்றால் அது அவருக்கு அழிவாகிவிடும் என்பதே குறளின் வெளிப்படைப் பொருள். ஆனால் வலியுறுத்தப்படுவது, பகைவரை அழிக்கப் போர் செய்யத் தொடங்கியவன் வெற்றிகளைக் கண்டபோதும், தன்னால் இயலுமான அளவு இது என்று அறிந்து நிறுத்திவிடவேண்டும். இல்லையேல் அழிய நேரிடும் என்பதே.

'இடனறிதல்' அதிகாரத்திலும் வள்ளுவர் இத்தகைய வகையில் அறிவுரை செய்கிறார்.

நெடும் புனலுள் வெல்லும் முதலை; அடும் புனலின்
நீங்கின் அதனைப் பிற. [26]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலை தனக்குரிய இடமான நீரில் இருக்கும்போது எந்த வலிய விலங்கையும் வெல்லக் கூடியதாகும். ஆனால் அதுவே நீரைவிட்டு நீங்கின் அதனைப் பிற விலங்குகள் வெல்லும் என்ற வெளிப்படைச் செய்தியால் அவனவன் தனக்கு வாய்ப்பான இடத்தில் நின்று இயங்கும்போதே வெற்றிபெறலாம் என்ற அடிப்படைச் செய்தி வலியுறுத்தப்படுகின்றது.

கடல் ஓடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.[27]

என்ற குறளும் அதையே வலியுறுத்துகின்றது.

'படைமாட்சி' கூறும்போதும் இத்தகைய எடுத்துரைப்பு முறையினைக் கையாள்கிறார் வள்ளுவர். "எலிகள் படையாகத் திரண்டு கடல் போல ஆரவாரித்தாலும் என்ன பயன்? நாகம் ஒன்று தோன்றி ஒரு மூச்சுவிட்டவுடன் அப்படை தொலையும்" என்ற வகையில் குறித்த ஒரு படைக்கு ஊக்கம் அளிப்பதாக அமைகிறது இக்குறள்.

ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்[28]

கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து[29]

வேலொடு நின்றான் 'இடு' என்றது போலும்
கோலொடு நின்றான்இரவு[30]

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை[31]

'இறை கொடியன்' என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லை கெடும்[32]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன போன்ற செவி கைக்கும் சொற்களையும் கவிகைக்கீழ் தங்கும் அரசர்களுக்கு உரிய தர்மங்களாக, அறநூலாசிரியர் என்ற வகையில் நேரடியாகவே உரைத்தவர் வள்ளுவர். இருந்த போதிலும் மேற்காட்டியவாறு உள்ளுறுத்த வகையிலும் வள்ளுவர் சில விடயங்களைக் கூறியுள்ளார். அத்தகைய உத்தியை அக்காலத்தில் வாய்மொழியாகவேனும் நிலவிய ஒரு இலக்கிய மரபிலிருந்து அவர் பெற்றிருத்தல் கூடும். ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்குள் அல்லற்பட்ட சமூகமொன்றிலிருந்து அழுத்தத்தின் வெளிப்பாடாக அத்தகைய இலக்கியங்கள் வெளிவருதற்கான சாத்தியம் இருக்கவே செய்யும். வள்ளுவரும் இத்தகைய உத்தியை அரசியல் விடயங்களைக் கூறும்போது மாத்திரம் கையாண்டமை நோக்கத்தக்கது.

வள்ளுவர் கையாண்ட மேற்படி உத்தியை அணியிலக்கண நூலார் ஒட்டு, பிறிது மொழிதல், நுவலா நுவற்சி என்றெல்லாம் கூறுவர். வடமொழியாளர் 'சமாசோக்தி' என்பர். அறிந்தவரையில் இந்த அணி தமிழைப் பொறுத்தவரையில் திருக்குறளிலேயே முதலிற் கையாளப்பட்டுள்ளது.

இயற்கை நிகழ்ச்சிகள், விலங்குகளின் நடத்தைகள் என்பவற்றின் மூலம் பிறிதோர் உண்மையை வலியுறுத்தும் இந்த உத்தியை அரசியல் சார்ந்த விடயங்களை எடுத்துரைப்பதற்கே வள்ளுவர் கையாண்டார் என்று அறியும்போது, அண்மைக் காலத்தில், இலங்கையில் ஏற்பட்ட இனமுரண்பாட்டுச் சூழலில் வெளிவந்த ஆளுமை மிக்க நவீன எழுத்தாளர் சிலரின் ஆக்கங்கள் சிலவற்றை – அவற்றின் வெளிப்பாட்டு முறைமையை – நாம் கருத்திற் கொள்ளக்கூடியவர்களாவோம். சிறப்பாக உமாவரதராசனின் 'அரசனின் வருகை,' 'எலியம்' முதலான சிறுகதைகளும் ரஞ்சகுமாரின் 'கோசலை' முதலான சிறுகதைகளும் இன்னும் சிறப்பாக அம்ரிதா ஏ. எம். எழுதிய 'விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள்' என்னும் தொகுதியில் அடங்கும் சிறுகதைகளும் இக்காலத்தே எழுந்த ஏராளமான கவிதைகளும் நம்முடைய நினைவுக்கு வரலாம். அவற்றிலே கையாளப்பட்ட அழகியல் உத்திக்கான அடிப்படையை ஒரு எழுத்தாளர் பட்டவர்த்தனமாகவே வெளிப்படுத்தி விடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இந்தக் கதைகளை எழுதிய காலப்பகுதி தணிக்கை நிறைந்த காலப்பகுதியாக இருக்கலாம். தலைக்கு மேலே துப்பாக்கியும், இடுப்புக்குக் கீழே வாளும், வாய்க்கு நேரே பிளாஸ்ரரும் நிறைந்த காலப்பகுதியாகவும் இருக்கலாம். இம்மென்றால் குத்து, அம் என்றால் அடி என்றிருந்த, மாற்றுக் கருத்துக்களுக்காக மண்டைகள் வெடிவைக்கப்பட்ட காலமாகவும் இருக்கலாம். எனக்கு வழமையாக விலங்குகள் கைகொடுத்தது போல், விலங்குகள் எனது கதைகளுக்கும் கைகொடுத்திருக்கின்றன. [33]

நாம் நன்கு அறிந்த நமது காலத்தை விளங்கிக் கொள்வதன் மூலம், கடந்த காலத்தையும் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார் கவிதைகள், வானதிபதிப்பகம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 1998, ப. 240
2. சங்க இலக்கியம் – கலித்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004, கலித்தொகைச் செய்யுள் 5:12,13
3. மேற்படி, செய்யுள் 8: 1–6
4. மேற்படி, செய்யுள் 10: 4–7
5. மேற்படி, செய்யுள் 13: 1–9
6. மேற்படி, செய்யுள் 8: 15–17
7. மேற்படி, செய்யுள் 27: 7,8
8. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ. வே. சாமிநாதையர் பதிப்பு (ஆறாம் பதிப்பு), கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1955. சிலப்பதிகாரம் : 3: 173 –175
9. மேற்படி, சிலப்பதிகாரம் : 4: 1–8
10. மேற்படி, சிலப்பதிகாரம் : 4: 21–26
11. மேற்படி, சிலப்பதிகாரம் : 11: 60–67
12. மேற்படி, சிலப்பதிகாரம் :13: 3–13
13. மேற்படி, சிலப்பதிகாரம் : 14: 14–18
14. மேற்படி, சிலப்பதிகாரம் : 5: 59,60
15. மேற்படி, சிலப்பதிகாரம் : 10: 118,119
16. மேற்படி, சிலப்பதிகாரம் : 11: 60,61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மேற்படி, சிலப்பதிகாரம் : 26: 159–161

கனகவிசயர், விருந்தின் மன்னரொடு கூடிச் செயற்பட்டமை சுட்டப்படுவது அவதானிக்கத்தக்கது.

18. மேற்படி, சிலப்பதிகாரம் : 26: 19–21

சிலப்பதிகாரம் வாழ்த்துக்காதையில் சேர சோழ பாண்டியர் மூவரும் தனித்தனியே பல பாடல்களால் வாழ்த்தப்படுவதை நோக்குக.

19. மேற்படி, சிலப்பதிகாரம், நூற்கட்டுரை (நூலின் இறுதியில் அமைந்துள்ளது.)

20. திருக்குறள் மூலமும் பரிமேழகர் உரையும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புச் கழகம், சென்னை, 1970. குறள். 384

21. மேற்படி, குறள். 385

22. மேற்படி, குறள். 386

23. மேற்படி, குறள். 389

24. மேற்படி, குறள். 475

25. மேற்படி, குறள். 476

26. மேற்படி, குறள். 495

27. மேற்படி, குறள். 496

28. மேற்படி, குறள். 763

29. மேற்படி, குறள். 551

30. மேற்படி, குறள். 552

31. மேற்படி, குறள். 555

32. மேற்படி, குறள். 564

33. அம்ரிதா ஏ.எம், விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் (என்னுரை), மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு நோக்கில் திருக்குறள் அதிகாரங்கள்

அதிகாரப் பெயர், வைப்பு முறை பற்றிய ஆராய்ச்சி

ஸ்ரீ. பிரசாந்தன்

தமிழ்க் கல்வியுலகின் ஒப்பற்ற சாதனையாகத் திகழ்வது திருக்குறள். குறள் நூற்பாக்கள் வெளிப்படுத்தும் செய்திகள், மனுக்குலத்தின் அக, புற வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை நல்குகின்றன. இந்நூற்பாக்களின் கருத்துகளுக்கும் மேலாக, அவை, வைக்கப்பட்டுள்ள வரிசையும் சில செய்திகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. நூற்பாக்களைப் பத்துப் பத்தாகத் தொகுத்து, அதிகாரமாக்கித் தந்துள்ள திருக்குறள், அதிகாரப் பெயர்களாலும், அவ்வதிகாரங்களை வரிசைப்படுத்தி வைத்துள்ள ஒழுங்கு முறையாலும் கூட, சில உறுதிப் பொருள்களை உணர்த்தி நிற்கிறது. எனவே, குறளின் பொருண்மை குறித்த ஆய்வானது, அதிகாரங்களையும் ஆராய்கின்ற பொழுதே முழுமையடைய முடியும் என்பது கருதத்தக்கது. அதனால், திருக்குறளின் அதிகாரங்களை இக்கட்டுரை ஆய்வு நோக்கில் அணுகுகின்றது. விரிவுக்கு அஞ்சி, அறத்துப்பால் அதிகாரத் தலைப்புகள் மட்டும் இங்கு ஆராயப்படுகின்றன.

குறள் நூலானது, மனிதனை மெல்ல மெல்லத் தூயனாக்கி வளர்த்தெடுத்து அவனுக்கு நிரந்தர இன்பத்தைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டது. அதாவது மனிதனைப் படிப்படியாக வளர்த்தெடுத்து, முழுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையச் செய்வதற்கான அறங்களைக் கூறும் தொகுப்பு நூலாகவே திருக்குறள் காணப்பெறுகின்றது. இந்நூலில் காணப்பெறும் அதிகாரங்கள் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கு வரிசைகூட வள்ளுவரது நோக்கத்தை நிறைவேற்றுதற்கு ஏற்ற வரிசையாக இருக்கும் என்பது கருதுகோளாகக் கொள்ளத்தக்கது. எனவே, திருக்குறளில் கூறப்பெறும் செய்திகளின் கருத்துநிலை வளர்ச்சிக்கும், அதிகாரங்களின் வைப்பு முறைக்கும் தர்க்க ரீதியான தொடர்புண்டா என்பது நிச்சயம் பார்க்கப் படவேண்டிய ஒன்றாகும். இக்கட்டுரை இவ்விடயத்தையும் ஆய்வு செய்ய விழைகிறது.

1. திருக்குறள் அதிகாரப் பகுப்பு

இன்று பெருவழக்காக இருக்கின்ற அதிகார வைப்புமுறை, யாராலே ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்துத் தெளிவான முடிவுக்கு வர முடியவில்லை. இவ்வைப்புமுறையை நூலாசிரியரே அமைத்தாரா? இல்லை, பின்னை உரையாசிரியர்களுள் எவரேனும் அமைத்தாரா? என்பது பற்றிப் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உரையாசிரியருக்கு உரையாசிரியர் வைப்புமுறை வேறுபடுவதனால், இவ்வைப்புமுறை நூலாசிரியருடையது அன்று. இன்று பெரிதும் வழக்கிலுள்ள வைப்பு முறையானது, பரிமேலழகர் வைப்புமுறையை ஒத்துச் செல்வதால், பரிமேலழகர் அமைத்த வைப்புமுறையே பின்பு பெருவழக்காகி நிலைபேறு அடைந்துவிட்டது எனச் சொல்வதில் தவறில்லை. அந்த அதிகார வைப்புமுறை பின்வருமாறு அமைந்துள்ளது.

பாயிரவியல் : கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல்.

இல்லறவியல் : இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, பொறை உடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவறவியல் : அருள் உடைமை, புலான் மறுத்தல், தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல்.

ஊழியல் : ஊழ்.

2. அதிகார வைப்பு முறை - வேறுபடும் வரிசைகள்

பெருவழக்காகிவிட்ட மேற்காட்டப்பெற்ற அதிகார வரிசை முறையைத்தான் அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள் எனக் கூற முடியவில்லை. குறளின் முதன்மை உரையாசிரியர்களுள் ஒருவரான மணக்குடவர் தரும் அதிகார வரிசை, பரிமேலழகருடைய மேற்காட்டப்பட்ட அதிகார வரிசை முறையிலிருந்து வேறுபடுகிறது. இவ்வாறே, பல பழைய, புதிய உரையாசிரியர்கள் சிலரும் தத்தமது கொள்கைக்கு ஏற்புடைய வரிசையில் அதிகாரங்களை மாற்றியமைத்து, புதிய அதிகார வரிசையில் குறளை அமைத்துள்ளமையைக் காண முடிகிறது.

எடுத்துக்காட்டாக, மணக்குடவர் வரிசையை ஒப்புநோக்கினால், பரிமேலழகர் இல்லறவியலில் வைத்திருக்கும் இனியவை கூறல் (10), அடக்கமுடைமை (13), அழுக்காறாமை (17), வெஃகாமை(18), புறங்கூறாமை(19), ஆகிய அதிகாரங்களை மணக்குடவர், துறவறவியலில் வைத்திருப்பதைக் காணலாம். இவை முறையே மணக்குடவர் உரை நூலில், 26, 27, 30, 31, 32 ஆம் அதிகாரங்களாக வைக்கப்பட்டுள்ளன. பரிமேலழகர் துறவறவியலிலே வைத்திருக்கும் வாய்மை (30), வெகுளாமை (31), இன்னா செய்யாமை (32), கொல்லாமை (33), புலால்மறுத்தல் (26), கள்ளாமை (29) என்னும் ஆறு அதிகாரங்களை மணக்குடவர் இல்லறவியலில் வைத்துள்ளார். இவை அவரின் வரிசையில் முறையே, 10, 16, 17, 18, 19, 20 ஆம் அதிகாரங்களாக வைக்கப்பட்டுள்ளன.[1]

இவ்வாறு, ஒரு பாலினுள் அமைந்துள்ள அதிகாரங்களை வேறுவேறு வரிசையில் தரும் போக்கு மட்டுமன்றி, வெவ்வேறு பால்களுள் உள்ள அதிகாரங்களை இணைத்தும், தவிர்த்தும் புதிய வரிசையில் தரும் போக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கல்வியுலகில் காணப்படுகின்றது. இத்தகைய வரிசைமாற்றங்கள், ஆண்டியப்பபிள்ளை, க. ப. அறவாணன், சாலமன் பாப்பையா முதலிய பலராலும் மேற்கொள்ளப்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, அறத்துப்பால், காமத்துப்பால் அதிகாரங்களைப் புதிய வரிசையில் தரும் சாலமன் பாப்பையாவின் பின்வரும் பகுதி காணத்தக்கது.

3. *தகையணங் குறுத்தல்*
4. *குறிப்பறிதல்*
5. *நாணுத்துற வுரைத்தல்*
6. *அலரறிவுறுத்தல்*
7. *இல்வாழ்க்கை*
8. *வாழ்க்கைத் துணைநலம்*
9. *புணர்ச்சி மகிழ்தல்*
10. *நலம் புனைந்துரைத்தல்*
11. *காதற் சிறப்புரைத்தல்*
12. *மக்கட்பேறு* [2]

இவ்வாறு, அறிஞர் பலரும் வேறுவேறு வரிசையில் அதிகாரங்களை வைத்துக் காட்டியிருப்பதன் வாயிலாக அறியக் கூடிய உண்மை ஒன்று உண்டு. அதாவது, அதிகார வரிசை மாற்றமானது, திருக்குறள் பொருண்மைக்குப் பல் பரிமாணத் தன்மையை வழங்கியுள்ளது என்பதே அது.

ஒரு வரிசையில் ஓரிடத்திலுள்ள ஓர் அதிகாரமானது, இன்னொரு அதிகார வரிசையில் வேறிடத்தில் வைக்கப்பட்டு அங்கும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

சிறப்பு நிலையில் ஒரு குறித்த குழுவினர்க்குச் சொல்லப்பட்டாலும், பொது நிலையில் அனைவருக்குமாக இவ்வறங்கள் அனைத்தும் சொல்லப்பட்டுள்ளன எனும் உண்மையை இதனால் உணர முடிகிறது.

இதனை, பின்வருமோர் எடுத்துக்காட்டின் ஊடாகப் புரிந்து கொள்வது இலகுவானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை"[3]

ஆகிய வெகுளாமையை, பரிமேலழகர் துறவறவியலிலே 'வாய்மை' அதிகாரத்தை அடுத்து வைத்துள்ளார். இவ் வெகுளாமை ஏன் துறவியர்க்கு இன்றியமையாத ஒன்று என்பது தண்டபாணிதேசிகரின் பின்வரும் கூற்றால் இனிது விளங்கும்.

"உற்றநோய் நோன்றல் தவமாதலால் பிறரால் துன்பம் நேர்ந்துழியும் சினவாமையும், அங்ஙனம் சினப்பாராயின் குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிதாகையால் கேடு பயத்தல் ஒரு தலை; அது அருளுக்கு இழுக்காதலானும் வெகுளல் துறவுக்கு இயையாத தொன்றாகும்"[4]

இதனால், வெகுளாமை துறவியர்க்கு அவசியமானதென்பது புலனாகின்றது. ஆனால், இவ்வதிகாரத்தை, இல்லறவியலில் மணக்குடவர் வைத்துள்ளமை அவருரை நூலிலிருந்து தெரிகின்றது. இதனால், இல்லறத்தார்க்கு இன்றியமையாதவொன்று இவ் வெகுளாமை என்பதும் அறியவருகிறது. வெகுளாமை, இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் அவசியமானது என்பது, இவ்வதிகார வரிசை மாற்றத்தால் தெரிய வருகின்றது. மொத்தத்தில், அதிகார வரிசைமாற்றமானது, ஓர் அதிகாரப் பொருண்மைக்கு, மிக விசாலமான பரப்பை வழங்குகின்றதையே அறிய முடிகின்றது.

3. பாயிரம் - முதன்மை அதிகாரங்களின் தொகுப்பு

நூன் முகப்பில் அமைந்து வரும் பாயிர மரபிலே, திருக்குறட் பாயிரம் புதுமையானதாகும். 133 அதிகாரங்களில் இருந்து 4 அதிகாரங்கள் மட்டும் தெரிவு செய்யப் பெற்று, கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற ஒழுங்கில், பாயிரமாக நூலின் தொடக்கத்திலே வைக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்கள் தெரிவு செய்யப்பெற்றமைக்கான காரணங்கள் எவை என்பது குறித்தும், ஏன் இவ்வரிசையிலே வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்தும், அறிஞர்கள் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில், பரிமேலழகர் கூறியுள்ள காரணங்களை நோக்கினால், அவர், இலக்கியம் இனிது நிறைவடைவதற்காகவும் உறுதிப் பொருள்களோடு இயைபு கொண்டிருப்பதனாலும் முதலில் **கடவுள் வாழ்த்து** அதிகாரத்தை வள்ளுவர் பாடினார் என்றும், கடவுளின் ஆணையினாலே உலகமும், உறுதிப் பொருள்களும் இனிதே நடப்பதற்குக் காரணமான மழையை **(வான்சிறப்பு)** அடுத்துப் பாடினார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உறுதிப் பொருள்களை உள்ளவாறு உணர்த்த விழைந்த நூலே திருக்குறள் ஆகையால், அப் பொருள்களைச் சரியாக – பக்கச் சார்பில்லாது – வரையறுத்துக் கூறத்தக்க முற்றுந் துறந்த முனிவர்களது பெருமையை **நீத்தார் பெருமை** என அடுத்த அதிகாரத்தால் வள்ளுவர் கூறியுள்ளார் என்பது பரிமேலழகர் கருத்து. தொடர்ந்து, உறுதிப் பொருள்களுள், இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றனையும் தரும் சிறப்பினால், உயர்ந்த அறத்தின் வலிமையை எடுத்துரைக்கும் **அறன் வலியுறுத்தலை** வள்ளுவர் வைத்தார் என்கிறார் பரிமேலழகர்.

> *"எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடித்தற் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்."* [5]

கடவுள் வாழ்த்து

> *"சத்துவம் முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராய முதற் கடவுளோடு இயைபுண்டாகலான், அம் மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமை ஆகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என்க."* [6]

வான்சிறப்பு

> *"அஃதாவது அக்கடவுளது ஆணையான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்."* [7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்தார் பெருமை

> *"முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராதலின்."*[8]

அறன் வலியுறுத்தல்

> *"அம் முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளும் இன்பமும் போலாது அறன், இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத்து என்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்."*[9]

மேற்காட்டப் பெற்றுள்ள பரிமேலழகரின் உரைக்குறிப்புகளைக் காணும் போது, இந்நான்கு அதிகாரங்களும், உறுதிப் பொருள் கூறும் நூலில் ஏன் முதன்மை பெறுகின்றன என்பதற்கான விடையையும், எதற்காக இவ்வரிசையில் வைக்கப்பட்டுள்ளன என்பதற்கான விடையையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. கிட்டத்தட்ட இதையொத்த காரணங்களையே வேறு வார்த்தைகளிற் கூறுகிறார் மணக்குடவர்.

> *"மங்கல வகையான் எப் பொருட்கும் முதலாகிய கடவுள் வாழ்த்தும், அக்கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகுக்கு இன்றியமையாததாகிய வான்சிறப்பும், பிறப்பினிற் சிறப்பு எய்துதற்கு உரியராகிய முனிவரது பெருமையும், அவராற் கொண்டுய்க்கப்படுகின்ற அறத்தினது வலியும் நான்கு அதிகாரத்தான் பாரித்து"*[10]

என்பது மணக்குடவர் உரைப்பாயிரம்.

இவ்வாறு, இருபெரும் உரைகாரர்களின் கருத்துகளைப் பார்க்கும்போது, முதல்வனாயினமையால் கடவுளின் சிறப்பும், கடவுள் ஆணையை உலகில் செலுத்தத் துணை நிற்பதால் மழையின் சிறப்பும், நூற் பொருளாகிய உறுதிப் பொருள்களை உள்ளவாறு கூறவல்லவராதலால் நீத்தார் சிறப்பும், உறுதிப் பொருள்களுள் தலையாயது ஆதலால் அறத்தின் சிறப்பும் பாயிரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன எனும் உண்மையை அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், இந்நான்கு அதிகாரங்கள் மட்டும் ஏன் தனியே தொகுக்கப்பட்டு, முதன்மை கொடுக்கப்பட்டு, முன்வைக்கப்பட்டன என்பது குறித்து வேறுபல கருத்துகளும் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இவையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். இவற்றுள் இரு கருத்துகள் இங்கு எடுத்துக்காட்டப்படத்தக்கன.

(01) *தொல்காப்பியப் பாடாண்திணையுள், 'அமரர்கள் முடியும் அறுவகையானும்' என வருகின்றது. இங்கு தெய்வம், நிறை மொழி மாந்தர் அந்தணர், ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகம் முதலியவற்றை வாழ்த்துவதைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளதாகக் கருதுவர்.* [11]

இதன்படி, இவ்வாழ்த்துகளுள் முதன்மையுடையவற்றைத் தமது பாயிரத்துள் வாழ்த்த விரும்பிய வள்ளுவர், பின்வருமாறு அதிகாரங்களை அமைத்தார் என்பர் ஆய்வாளர் சிலர்.

> *"தெய்வ வாழ்த்துக் கடவுள் வாழ்த்திலும், நிறைமொழி மாந்தர் அந்தணர் வாழ்த்துக்கள் நீத்தார் பெருமையிலும், மழை வாழ்த்து வான் சிறப்பிலும் வள்ளுவரான் அமைக்கப் பெறுகின்றன என்பர் சிலர்."* [12]

(02) தொல்காப்பியர் கூறியுள்ள "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" எனும் நூற்பாவில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையிலேயே பாயிரம் அமைக்கப்பட்டுள்ளது என்பர் ஆய்வாளர் வேறு சிலர்.

> *"கொடிநிலை மேகத்தை உணர்த்தும் மேகவாகனன் ஆகிய இந்திரனுக்கு உரிய திசையாதலின், அத்திசை மேகத்திற்கு உரியது என்பதும், அங்கு நின்று எழுந்த கொண்டல்களே, உலக தாபந் தீரப் பெய்வன என்பதும் அறியத்தக்கன.*
> *கந்தழி – பற்றழிவு, அஃதாவது பற்றழிந்தார் தன்மை என்றவாறாம். வள்ளி என்பது அறம். நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவே."* [13]

என்கிறார் தண்டபாணி தேசிகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இல்லறவியல் - புகழை நோக்கி நகருகிற வாழ்க்கை

பலரது அதிகார வைப்புமுறைகள் காணப்படுகின்றபோதும் பரிமேலழகரின் வைப்பு முறை பெருவழக்கினதாக நிலைபேறு அடைந்தது ஏன் என்பதற்குப் பதில் காண்பதற்கு, இல்லறவியல் அதிகார வரிசையை நோக்குவது மிகுந்த பயன் செய்யும் எனலாம். தருக்கத் தொடர்ச்சியோடும் பொருள்நிலை வளர்ச்சியோடும் அவர் அதிகாரங்களை வைத்துள்ளார் என்பதைப் புரிந்து கொள்ளுதற்கு இவ்வியல் அதிகாரங்களை அறிவது அவசியமானதாகும்.

இல்வாழ்வானுடைய கடமைகளைத் தெளிவுறுத்துகிறது இல்லறவியலின் முதலதிகாரமான **இல்வாழ்க்கை.** இவ்வில்வாழ்வானின் துணையின் இலக்கணம் சொல்கிறது **வாழ்க்கைத்துணைநலம்.** கணவன், மனைவி இருவரதும் மங்கல மனைமாட்சியின் பெறுபேறுகளுள் ஒன்று **புதல்வரைப் பெறுதல்.** இந்தக் குடும்ப அங்கத்தினருள் இயல்பாய் அன்பு பிறக்கும் என்பதனால் அடுத்துக் காட்டப்படுகிறது **அன்புடைமை.**

இனி, இல்வாழ்வானின் சமுதாயக் கடமைகள் தொடங்குகின்றன. அவன் உறவிற் கொண்ட அன்பு மெல்ல மெல்ல விரிகிறது. அதற்கு அடையாளம் **விருந்தோம்பல்.** விருந்தோம்பலுக்கு இன்றியமையாதது **இனியவை கூறல்.**

ஒருவருக்கொருவர் உதவி வாழ்வதே சமுதாயவாழ்வு. இதில் ஒருத்தர் செய்த நன்றியை மறவாது பாராட்டுதல் அவசியமானதாகும். இதனைச் சொல்கிறது **செய்ந்நன்றியறிதல்.** நன்றி பாராட்டுவதற்காகவேனும் நடுநிலையைத் தவறவிடக் கூடாது என்பதற்காக வைக்கப்பட்டது **நடுவுநிலைமை.**

சமுதாயவாழ்வில் இணைந்தவனுக்கு, கெட்ட வழிகளில் செல்லாமல் தன்னை அடக்கும் அடக்கம் முதன்மையானதாகும். இதனால், **அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை** அடுத்த அதிகாரங்களாயின. அடக்கத்துக்கு மனம், மொழி, மெய்கள் தூயவனாக இருத்தல் அவசியமானதாகும். எனவே தொடர்ந்து இவற்றின் தூய்மை குறித்துப் பேசப்படுகிறது. அடுத்தவன் மனைவியை இச்சிக்கும் மனக்குற்றத்தைக் கண்டிக்கிறது **பிறனில் விழையாமை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் வாழப்புகுந்தவனுக்கு பொறுமை மிக அவசியம். இம் மனக் குணத்தைப் பெறவேண்டிய அவசியம் கூறுகிறது **பொறையுடைமை.** பிறர் வாழ்வு கண்டு பொறாத மனக் குற்றத்தைக் கண்டிக்கிறது **அழுக்காறாமை.** பொறாதவர் பிறர் பொருளைக் கவர நினைப்பர். இதனைக் கண்டிப்பது **வெஃகாமை.**

மேற்காட்டியவாறு, மனத்தூய்மையைப் பேசிய வள்ளுவர், அடுத்து மொழித்தூய்மை பேச விழைகிறார் எனலாம். சொற்குற்றங்களைக் கடியவேண்டிய அவசியம் கூறுகின்றன **புறங்கூறாமை, பயனில சொல்லாமை** என்பன.

இவ்விடத்தில் நியாயமாக எழத்தக்கதொரு கேள்வி உண்டு. மொழிக் குற்றங்கள் பலவாய் இருக்கும் போது, இரு குற்றங்களை மட்டுமே இவ்விடத்தில் திருவள்ளுவர் கண்டித்துள்ளார். இது பொருத்தமானதா? எனும் கேள்விக்கு பரிமேலழகரின் துணையோடு பின்வருமாறு அறிஞர் கூறுகின்ற விடை இங்கே கருதத்தக்கது.

> *"மொழிக் குற்றங்கள் பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனில் சொல் என நான்காம்.*
> *இவற்றுள் பொய், புறங்கூறுதல் (குறளை), கடுஞ்சொல் என்பன சமுதாயத்தைச் சிதைப்பன.*
> *பயனில சொலல் தனி மனித ஆளுமையைச் சிதைப்பது. சமுதாயத்தைப் பாதிக்கும் மொழிக் குற்றமான பொய், துறந்தாரால் மட்டுமே முற்றாய்க் கடியக் கூடியதாகலின் அதனை துறவறவியலில் வாய்மை எனும் அதிகாரத்தால் கண்டித்தார்.*
> *அடுத்ததான கடுஞ்சொல்லினை இல்லறவியலில் இனியவை கூறல் அதிகாரத்தால் கண்டித்தார்.*
> *இவைபோக சமுதாய மொழிக் குற்றத்துள் எஞ்சியதான புறங்கூறலும் தனி மனித மொழிக் குற்றமான பயனில சொல்லலும் அடுத்துவரும் புறங்கூறாமை பயனில சொல்லாமை எனும் அதிகாரங்களால் கண்டிக்கப்பட்டன."* [14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம், மொழிகளில் தூய்மை வலியுறுத்திய வள்ளுவர் அடுத்து, மெய்யின் தூய்மையை வலியுறுத்துகின்றார். இதுதான், **தீவினை அச்சம்** அதிகாரமாயிற்று. இவ்வாறு அடக்கமும் ஒழுக்கமும் கைவரப்பெற்று, மனம், மொழி, மெய்களிற் தூயவனாய ஒருவன், தன் சமுதாயத்தினதும், சமுதாய அங்கத்தினர் எவரினதும் தேவைகளை நிறைவேற்ற உதவி செய்வான். சமுதாயத்துக்கான அவன் உதவி **ஒப்புரவு.** பிற தனிமனிதர்க்கான அவன் உதவி **ஈகை.** இவ்விரு பண்பும் இருப்பின் இல்லற இம்மைப்பயனாகிய புகழ் கிடைக்கும் என்பதை உறுதி செய்கிறது, இல்லறவியலின் நிறைவாக உள்ள **புகழ்.**

இவ்வாறு, பெரும்பான்மையும் வழக்கிலுள்ள அதிகார வைப்பு முறையை நோக்கும் போது, ஓரதிகாரத்துக்கும் அடுத்த அதிகாரத்துக்குமான தர்க்க ரீதியான தொடர்பு வெளிப்படுகின்றமை நன்கு புலனாகிறது. இல்வாழ்க்கையில் தொடங்கும் தனி மனிதனின் குடும்ப வாழ்வு, மெல்ல மெல்ல சமுதாய வாழ்வாகி, இம்மைப் பயனாகிய புகழைத் தருகிறது எனும் உண்மையை, அதிகார வைப்பு முறையே உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

இவ்விடத்தில், இல்லறவியல் அதிகாரங்களினிடையே, காமத்துப்பால் அதிகாரங்களையும் கலந்து, புதியவரிசையில் தரும் நவீன அதிகார வைப்புமுறை, இந்தளவுக்கு ஏற்புடைமையாகத் தக்கதா என்பதைப் பார்ப்பதும் அவசியமானதாகும்.

தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், நாணுத்துறவுரைத்தல், அலரறிவுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல், மக்கட்பேறு எனச் செல்கிறது முன்பு கண்ட புதிய வரிசை. மேலோட்டமாகப் பார்க்கும்போது, இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம் என்பவற்றைத் தொடர்ந்து புணர்ச்சி மகிழ்தல் அதிகாரமும், அதனைத் தொடர்ந்து நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல், மக்கட் பேறு அதிகாரங்களும் வைக்கப்பட்டிருப்பதில் ஓர் ஒழுங்குமுறை இருப்பது போலப்படும்.

எனினும், இவ்வதிகாரங்களுடைய முதன்மை நோக்கம் இவ்வரிசையில் அவதானிக்கப்படவில்லை என்பது சுட்டப்படவேண்டியதாகும். இல்லறவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்களுக்கும், காமத்துப்பால் அதிகாரங்களுக்குமிடையே தெளிவான வேறுபாட்டைத் திருவள்ளுவர் கொண்டிருந்துள்ளார். இவ்விரு பகுதி அதிகாரங்களும் குடும்ப வாழ்க்கையைத்தாம் தளமாகக் கொண்டுள்ளன எனினும், அவற்றின் முதன்மை நோக்கங்கள் வேறுபடுகின்றன.

இல்லறவியல் அதிகாரங்களில் வள்ளுவர் பெரிதும் வலியுறுத்துவது, தலைவனும் தலைவியும் இணைந்து செய்யும் அறங்களைத்தாம். இங்கு, இவர்கள், தாம் தூயர்களாக இருந்து கொண்டு, சமுதாயத்தோடு எவ்வாறு இணைந்து வாழத் தலைப்படுகிறார்கள் என்பதுதான் அடிப்படையாகப் பேசப்படுகிறது. இங்கு முனைப்புறுவது தலை மக்களது அறக்கூறேயாம்.

ஆனால், காமத்துப்பால் அதிகாரங்களில் முனைப்புறுவது தலைமக்களின் அகக் கூறு. காதல் அடிப்படையில் எழும் ஏக்கம், இணைவிழைச்சு, புகழ்மொழி, பிரிவுத்துயர் என்பவைதாம் இவ்வதிகாரங்களின் அடிப்படை அம்சங்கள்.

இல்லறவியல், காமத்துப்பால் அதிகாரங்கள் அனைத்தும் தலை மக்கள் இருவரையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனினும், இல்லறவியல் அதிகாரங்கள் இவ்விருவருக்கும் சமுதாயத்துக்குமான அறத் தொடர்பை முதன்மைப்படுத்துகின்றன. காமத்துப்பால் அதிகாரங்கள், தலைமக்கள் தமக்குள் கொள்ளும் அகத்தொடர்பை முதன்மைப்படுத்துகின்றன. எனவே, இவ்விரு பகுதி அதிகாரங்களையும் சேர்த்துக் கலந்து, வரிசையைப் புதிதாய் அமைக்கும் பொழுது, அவற்றிடையே உண்மையில் உள்ளார்ந்த தருக்கத் தொடர்ச்சி இருக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

5. துறவறவியல் - அருளிலிருந்து அவாவறுத்தலை நோக்கி...

இல்லறவியலில் மட்டுமன்றி, துறவறவியலிலும் மிகப் பொருத்தமுறு வரிசையில் அதிகாரங்களை நிறுத்தியுள்ளார் பரிமேலழகர் என்பது, அவ்வதிகார வைப்புமுறையை நோக்கும் போது புலனாகின்றது.

இல்லறத்தார்க்கு அன்புடைமை தொடக்கப் பண்பாவது போல, துறவில் முயலுவோர்க்கு அருளுடைமை இன்றியமையாப் பண்பு ஆதலின், அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் வைக்கப்படுகிறது. அதாவது, தொடர்பில்லார் மாட்டும் கொள்ளுகின்ற கருணை துறவில் முயல்வார்க்கு அவசியமானது என்கிறது **அருளுடைமை.** கொலையோடு காரணகாரியத் தொடர்புடைய புலால் உண்ணுதலை அருளுடையோர் விலக்குவர் ஆதலால், அடுத்த அதிகாரம் **புலான் மறுத்தல்.** புலால் மறுத்து அருளில் முதிர்ந்தவர் பிற உயிர்கட்கு ஒரு வகையாலும் உறுகண் செய்யமாட்டார்கள் என்பதால் அடுத்த அதிகாரம் **தவம்.** தவத்தின் இயல்புகளுள் ஒன்று மனம் பொறி வழிப் போகாது காப்பாற்றுவது. எனவே, தவம் கைவந்தார்களிடத்து, வஞ்ச மனத்துக் காம ஒழுக்கம் இருத்தலாகாது என்கிறது **கூடாவொழுக்கம்.**

காமம் பற்றிய கூடா வொழுக்கம் போலவே துறவில் முயல்வார்களிடம் இருத்தலாகாத மற்றொரு குற்றம், பிறர் பொருளை வஞ்சித்துக் கவர நினைப்பது. இதை விலக்குகின்றது **கள்ளாமை.** இவ்விரு குற்றங்கள் காரணமாகப் பிறக்கவல்ல மற்றொன்று பொய்யாகிய மொழிக்குற்றமாகும். இதனை விலக்கி, மொழியின் குணத்தை, **வாய்மை** எனப் பேசுகிறார் வள்ளுவர். இதனால் விலக்கப்படாது, ஒருவனிடத்துப் பொய்மை காணப்பட்டால், அவனிடத்து, வெகுளியும் இது காரணமாகத் தோன்றும். எனவே, பொய்மை விலக்கிய புலவர், உடன், வெகுளியை விலக்கி, **வெகுளாமை** தந்துள்ளார் என்பார் பரிமேலழகர்.

சினம் காரணமாக பிற உயிர்கட்கு இன்னாதவற்றைச் செய்யும் இயல்பு பொதுவாகக் காணப்படுகிறது. எனவே, வெகுளியை விலக்குவது போலவே, பிற உயிர்கட்குக் கூடாதவற்றைச் செய்வதையும் விலக்குகிறது **இன்னா செய்யாமை.** இவ்வாறு, விலக்கப்படவேண்டிய முதன்மைக் குற்றம் உயிர்களைக் கொல்வதாகும். இதனை நீக்குவது துறவில் முயல்வார்க்கு இன்றியமையாதது என்பதை அடுத்து வலியுறுத்துகின்றது, **கொல்லாமை.**

இந்தளவில், துறவில் முயலுவார் தள்ளவேண்டிய குற்றங்களும் கொள்ளவேண்டிய குணங்களும் வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறியது (விரதப் பகுதி) நிறைந்து போகிறது. மேற்கொண்டு ஞான உணர்வு தலைப்படுமாற்றை வள்ளுவர் வரிசையாகக் கூறியுள்ளார் எனக் கருதுகிறார் பரிமேலழகர். ஞான உணர்வுக்கு முதல் அடிப்படையே நிலையாமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து கொள்வதுதான். எனவே, ஞானம் எனும் இப்பகுதியில் முதலதிகாரமாக வைக்கப்பட்டுள்ளது **நிலையாமை.**

நிலையாமையைப் புரிந்து கொள்ள, பற்றை விடுவது சாத்தியமாகும். எனவே, நிலையாமையை அடுத்து வைக்கப்பட்டுள்ளது **துறவு**. பற்றை விடுதற்குத் தக்கவழி, பற்றற்றான் பற்றைப் பற்றிக்கொள்வதாகும். பற்றற்றான் பற்றினைப் பற்றிக்கொள்ள ஏற்படும் தத்துவஞானத்தினாலேயே, உண்மையை உள்ளவாறு உணரலாம். எனவே, அடுத்த அதிகாரமாக உளது **மெய்யுணர்தல்.**

மெய்யுணர்வை அடுத்து துறவறவியலின் நிறைவு அதிகாரமாக வைக்கப்பட்டுள்ளது, **அவாவறுத்தல்.** மெய்யுணர்வதுதான் துறவியின் நிறைவுப்பயன். எனவே, மெய்யுணர்தல் அதிகாரத்தோடு துறவறவியலை நிறைவு செய்யலாமே, ஏன் அதற்குப் பின்பும் அவாவறுத்தல் என ஓரதிகாரம் செய்ய வேண்டும் என வினா எழுதல் இயல்பு. இதற்கு, பரிமேலழகர் தரும் பின்வரும் விளக்கம் தக்க பதிலாகின்றது.

> *"அஃதாவது முன்னும் பின்னும் வினைத் தொடர்பு அறுத்தார்க்கு, நடுவு நின்ற உடம்பும், அது கொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனை பற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சை எனப் பிறவிக்கு வித்தாம் ஆகலின், அதனை இடைவிடாது மெய்ப் பொருள் உணர்வான் அறுத்தல்."* [15]

என்பது பரிமேலழகர் விளக்கம்.

இவ்வாறு, பரிமேலழகர் வைத்துள்ள அதிகார வைப்பு முறையும், அவ்வரிசை முறைக்கு அவர் தரும் தருக்க ரீதியான விளக்கங்களும் திருக்குறளியலில் மிகுந்த சிறப்பிடத்துக்கு உரியன.

பின்னை ஆய்வாளர்கள் மற்றும் திருக்குறளியலாளர்களும் கூட பரிமேலழகரின் வைப்புமுறை விளக்கங்களையே பெரிதும் பின்பற்றித் தழுவியுள்ளனர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக திருக்குறளார் வீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனுசாமியின் திருக்குறள் அதிகார விளக்கம் எனும் நூலைக் குறிப்பிடலாம். ஓரளவு பகுத்தறிவுக் கொள்கைத் தாக்கத்தோடும் இயங்கிய அவர், எத்துணை தூரம் அதிகார வைப்பு முறை விளக்கங்களில் பரிமேலழகரைப் பின்பற்றியுள்ளார் என்பதற்கு அவாவறுத்தல் அதிகார முன்னுரை விளக்கம் தக்க எடுத்துக்காட்டாகிறது.

> *"முன்னும் பின்னும் வினைத்தொடர்பினை மெய்யுணர்வினால் துறவிகள் அறுத்து விடுவார்கள். இருந்தாலும், உடம்பும் அது கொண்ட வினைப் பயன்களும் நின்றதால் பழைய பயிற்சியால் புலன்கள் மீது மீண்டும் நினைவு செல்லுதல் கூடும். அப்படிச் செல்லுதல் அஞ்ஞானத்திற்கும் பிறவிக்கும் காரணமாகும். ஆதலால் அதனையும் இடைவிடாது மெய்யுணர்வால் அறுத்தல் வேண்டும் என்பதனை 'அவாவறுத்தல்' என்று இவ்வதிகாரம் கூறும்."*[16]

6. ஊழியல் - ஓர் அதிகாரமே ஓர் இயலாய்..

அறத்துப்பாலின் நிறைவு அதிகாரமாக ஊழ் வைக்கப்பட்டுள்ளது. ஊழியலில் காணப்படும் ஒரே அதிகாரம் அதுதான். அறத்துப்பாலின் நிறைவில் – அதாவது இல்லறவியல், துறவறவியல்களைத் தொடர்ந்து – வைக்கப்பட்டுள்ள ஊழ் அதிகாரம், அடுத்துவரும் பொருட்பாலுக்கான இணைப்பாகவும் காணப்படுகின்றது. இவ்விடத்தில் ஊழ் வைக்கப்பட்டமைக்கான காரணம் எது என்பது குறித்து, பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பரிமேலழகர், பொருள், இன்பங்களுக்குப் பொதுவாக விளங்கும், ஊழை, பொருட்பாலிலோ, காமத்துப்பாலிலோ தனித்து வைக்க முடியாமல் இருப்பதாலும், அறத்தோடு ஊழ் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாலும், இவ்விடத்தில் அது வைக்கப்பட்டது என்கிறார்.

> *"இது பொருள் இன்பங்கள் இரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும் அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது."*[17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவர் விளக்கம். மணக்குடவர் மேலும் விளக்கமாக, ஊழ் அதிகார வைப்பு முறையை நன்கு விளக்கியுள்ளார்.

> *"அறப் பகுதியும், பொருட்பகுதியும், இன்பப்பகுதியும் முன்செய்த நல்வினையால் வருதலையும், மாறான பாவமும், வறுமையும், துன்பமும், தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என்பரன்றே! அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்தவினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தினாகுமாதலால் இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது"*[18]

என்பது அவர் கூற்று.

7. ஒரு பொருள் பல அதிகாரங்கள்

ஒரு பொருளைத் குறித்து, 10 குறட்பாக்களைக் கொண்ட அதிகாரம் ஒன்றை வரைவது வள்ளுவரின் நெறியாக இருந்தது. எனினும், பத்துக் குறள் வெண்பாக்களுள் குறித்தவொரு பொருள் பற்றிய செய்திகளைச் சொல்லி முடிக்க முடியவில்லை என்றால், அப்பொருள் குறித்த இன்னொரு அதிகாரத்தையும் அடுத்து, உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ அமைத்துச் சென்றுள்ளார் அவர். இவ்வியல்புக்குத் தக்க எடுத்துக்காட்டாக பொருட்பாலில் கல்வி குறித்த அதிகாரங்களைச் சுட்டலாம். கல்வி பற்றிச் சொல்வதற்குப் பல செய்திகள் இருந்துள்ளன. ஆதலால் உடன்பாட்டு முகத்தால் கல்வி எனச் சுட்டியவர், எதிர்மறை முகத்தால் கல்லாமை அதிகாரத்தை உடன் வைத்துச் செல்லுகின்றார். மேலும், கல்வியுடன் தொடர்பு பட்ட கேள்வியை அடுத்த அதிகாரமாகவும், அறிவுடைமையைத் தொடர்ந்த அதிகாரமாகவும் வைத்துள்ளமையைக் காணலாம். இவ்வியல்புதான் நட்புக் குறித்த அவர் அதிகார வைப்புமுறையிலும் தெரிய வருகின்றது.

இவ்வாறு, ஒரு பொருளைக் குறித்த பல அதிகாரங்களை அடுத்தடுத்து அடுக்கித் தருகின்றபோது, அக்குறித்தவொரு பொருள் பற்றிய பல செய்திகளை ஒரே இடத்தில் அறியமுடிகிறது. ஆனால், ஒரு பொருள் குறித்த அதிகாரங்கள் சில, தொடர்பற்ற முறையில் வேறுவேறு இடங்களில் காணப்படுகின்றபோது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையாக வினா ஒன்று எழுகிறது. அதாவது, சில இடங்களில், தொடர்புபட்ட அதிகாரங்களை உடன் அடுக்கிக்காட்டியிருப்பது போல, இவ்விடங்களிலும் ஏன் தொடர்பு பட்ட அதிகாரங்களை ஒன்றாக அடுத்தடுத்து வைக்கவில்லை? என்பதே அவ்வினாவாகும்.

எடுத்துக்காட்டாக, குறளின் 18 ஆவது அதிகாரமான வெஃகாமையானது இல்லறவியலில், அழுக்காறாமையின் பின் வைக்கப்பட்டுள்ளது. கள்ளாமை, எனும் அதிகாரம் துறவறவியலில், கூடாவொழுக்கத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது. பிறர் பொருளைக் கவருகின்றமையைக் கண்டித்துக் கூறும் இவ்வதிகாரங்கள், ஏன் ஒரே இடத்தில், வைக்கப்படவில்லை? ஒன்று இல்லறவியலிலும், மற்றொன்று துறவறவியலிலும் வைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அப்படியாயின், இவ்விரண்டு அதிகாரப் பொருண்மைகளுக்கும் இடையில் நுண்மையான வேறுபாடு உளதா? – என்பன ஆராயப்பட வேண்டியன.

முதலில், இவ்விரு அதிகாரங்களும் பரிமேலழகரால் எவ்வாறு வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்பது நலம் பயப்பதாகும்.

> *"வெஃகாமை – பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை."*
>
> *"கள்ளாமை – அஃதாவது பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை"*[19]

என்கிறார் பரிமேலழகர். இவருரையின் அடிப்படையில் நின்று, வெஃகாமை இல்லறவியலிலும், கள்ளாமை துறவறவியலிலும் வைக்கப்பெற்றுள்ளதன் காரணத்தை ஆராய்கிறார் தண்டபாணி தேசிகர்.

> *"இல்வாழ்வான் பொறாமை காரணமாகப் பிறன் பொருளைக் கவர விரும்புதல் கூடாது என்பதை வெஃகாமை விளக்குகிறது. துறவி, தான் துறந்து வந்த பொருளிற் பற்றுத் தோன்றத் தான் உழைத்துத் தேட முடியாமையால் திருட எண்ணுவான். துறவி அதனையும் நினைத்தலாகாது எனக் கள்ளாமை விளக்குகிறது."*[20]

என்பார் தேசிகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அறிஞர் அனைவரும் இவ் வைப்புமுறையை உடன்படவில்லை என்பதும் கருதத்தக்கது.

> *“வெஃகாமை பிறன் பொருளை விரும்பி வௌவக் கருதாமை. கள்ளாமை–திருடாமை, வெஃகாமை, வெஃகுதல் என்பதன் எதிர்மறை; வெஃகுதல்–விரும்புதல். ஆகவே, வெஃகாமை விரும்பாமை எனப் பொருள்படும்.விரும்பாமை மனத்தின் ஒழுக்கம், கள்ளுதல் – திருடுதல், இது நினைவு முற்றிய பின் விளையும் முயற்சி. இவ் இரண்டில் நினைப்பிலேயே தடுக்கும் நிலை துறவிக்கு வேண்டும். செயலில் நிகழாதவாறு காக்கும் வன்மைதான் எல்லாப் பொருளையும் பற்றி நிற்கும் இல்லறத்தானுக்கு இயலும். ஆதலால், வெஃகாமை, துறவறத்திலும், கள்ளாமை, இல்லறத்திலும் இருத்தலே இயையும்.”*[21]

என்கிறார் கல்குளம் குப்புசாமி முதலியார்.

இவர், கள்ளாமையை, செயலில் தடுக்கும் நிலை என்று கருதியே, அதனை இல்லறத்தார்க்கு உரியது எனக் கூறக் காணலாம். ஆனால், கள்ளாமை, செயலில் தடுக்கும் நிலையா? மனநினைப்பில் தடுக்கும் நிலையா? என்பதை ஊன்றி நோக்குதல் வேண்டும். கள்ளாமை அதிகாரத்து முதற் குறள்,

> *எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றும்*
> *கள்ளாமை காக்கதன் னெஞ்சு*[22]

என்றமைந்துள்ளது. இங்கு ‘காக்க தன் நெஞ்சு’ என வள்ளுவர் கூறியிருப்பது, கள்ளாமை, மனதுக்குரியது என்பதைக் காட்டுகின்றது. மேலும் அடுத்த குறள் கூட,

> *உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்*
> *கள்ளத்தாற் கள்வே மெனல்*[23]

என, உள்ளத்தால் உள்ளுதலைப் பற்றியே பேசுகிறது. எனவே, கள்ளாமை அதிகாரத்தின் நோக்கமும், மன நினைப்பின் அளவில் கவருதலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பதுதான் எனலாம். இதனையே, பரிமேலழகர் ''நெஞ்சு கள்ளாமற் காக்க எனவே துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்றாம்'' [24] எனக் கூறிச் செல்லுகிறார். இதனால், இந்த அதிகாரமும் நினைத்தற்கான மனதுக்கு உரியதே என்பது புலனாகிறது. அவ்வாறாயின் மனக்குற்றங்களையே தடைசெய்யும் இரு அதிகாரங்களையும் வேறுவேறு இடங்களில், (இல்லறத்தில் வெஃகாமை, துறவறத்தில் கள்ளாமை) என அதிகார வைப்புச் செய்யக் காரணம் என்ன? என்பது விரிவாக ஆராயப்பட வேண்டியது.

8. ஒத்த பொருள் அதிகாரங்கள்

மேலே காட்டிய சிக்கல், கிட்டத்தட்ட ஒரே பொருளைப் பேசும் அதிகாரங்கள் ஏன் வேறு வேறிடங்களில் வைக்கப்பட்டன என்பதாகும். இங்கே அடுத்து எழுகிற பிரச்சினையானது, ஒத்த பண்புடைய செய்திகளை அடுத்தடுத்து வரிசையாகச் சொல்லி வந்த வைப்பு முறையில், அதே பண்புடைய ஒரு சில அதிகாரங்கள் மட்டும் வேறு இடத்தில் – தொலைவில் – ஏன் வைக்கப்பட்டுள்ளன என்பதாகும். எடுத்துக்காட்டாக, இல்வாழ்வானுக்கு இருக்க வேண்டிய குணங்களைப் பற்றி, வரிசையாகக் கூறும் அதிகார வைப்புகள் சில பின்வரும் ஒழுங்கில் காணப்படுகின்றன.

13. அடக்கமுடைமை
14. ஒழுக்கமுடைமை
15.
16. பொறையுடைமை

இல்வாழ்வானுக்குரிய இந்த அதிகார வரிசையில் வைக்கப்பட்டிருக்க வேண்டிய ஒத்த இயல்புடைய அதிகாரம் 'பண்புடைமை.' ஆனால், இவ்வதிகாரமோ, அறத்துப்பாலிலேயே இல்லை. பொருட்பாலில் – அதுவும், ஒழிபியலில் – வைக்கப்பட்டு, குறளின் 100 ஆவது அதிகாரமாக விளங்குகின்றது.

''பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா ரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதலுடையனாதல்'' [25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் பண்புடைமை பற்றி பரிமேலழகர். இவ்வியல்பு இல்லறத்தானுக்கு இன்றியமையாதது அல்லவா? எனவே, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, ..., பொறையுடைமை வரிசையில் பண்புடைமையும் வைக்கப்பட்டிருந்தால் கூடுதல் பொருத்தமாய் இருந்திருக்குமே. அவ்வாறு, வைக்கப் பெறாமைக்கான காரணங்கள் எவை? என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

9. அதிகாரப் பெயர்கள்

திருக்குறள் அதிகாரங்களின் பெயர்களை நோக்கும்போது பெரும்பான்மையும் ஓரியல்பை அவதானிக்கலாம். அதாவது, மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய குணங்களைச் சொல்லும் போது, அதிகாரத் தலைப்புகள் உடன்பாட்டு முகமாகவும், மக்கள் தள்ளவேண்டிய குற்றங்களைச் சொல்லும் போது, அதிகாரத் தலைப்புகள் எதிர்மறை முகமாகவும் அமைந்திருப்பதைப் பெரும்பாலும் காணலாம்.

எடுத்துக்காட்டாக, பின்பற்ற வேண்டிய, கைக்கொள்ள வேண்டிய பொருள்களைப் பேசுமிடத்து, அதிகாரத் தலைப்புகள், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை என்றவாறு அமைந்துள்ளன.

மாறாக, கைவிடவேண்டிய, ஒதுக்க வேண்டிய குற்றங்களைப் பேசும் அதிகாரங்கள், பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, புலால் மறுத்தல் என்றவாறு தலைப்புகளைப் பெற்றிருக்கின்றன. இங்கு மறுதலைப் பண்பை அதிகாரத்தலைப்புகளே கொண்டிருப்பதைக் காணலாம். எனவே, அதிகாரத் தலைப்புகளே நீதிநெறி வாசகங்களாக நின்று கொள்ள வேண்டியவற்றையும், தள்ளவேண்டியவற்றையும் அறிவுறுத்துகின்றன. இதுதான் திருக்குறளின் பொதுநெறி.

ஆனால், சில அதிகாரப் பெயர்கள் மட்டும் குறளின் இப்பொது மரபுக்குப் புறம்பாக நிற்கின்றன. மனிதர் தள்ளவேண்டிய குற்றங்களைப் பற்றிக் குறிப்பிடும் அதிகாரத் தலைப்புகள் உடன்பாட்டு முகமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் தலைப்புப் பெயர்களைச் சுட்டலாம்.

பேதைமை
வரைவின் மகளிர்
சூது
இரவு
கயமை

இவை, மனிதர் விலக்க வேண்டிய குற்றங்களையே குறிப்பிடுகின்றன. எனவே, இந்த அதிகாரப் பெயர்களை, கொல்லாமை, புலான் மறுத்தல் போன்ற அதிகாரத் தலைப்புகளைப் போல, பின்வருமாறு வழங்கினால், குறள் நெறிக்குப் பொருந்துவதாக இருக்கும் எனலாம். இவ்வாறு வழங்குவதன் மூலம், தலைப்புகளின் பெயர் அளவிலேயே, குற்றத்தைக் கண்டித்தும், குணத்தை வரவேற்றும் இருக்கின்ற தன்மையை, வாசகர்கள் உணரச் செய்யலாம்.

பேதைமை	–	பேதைமை நீக்கல்
வரைவின் மகளிர்	–	வரைவின் மகளிர் விழையாமை
சூது	–	சூதாடாமை
இரவு	–	இரவாமை.
கயமை	–	கயமை தவிர்த்தல்

10. முடிவுரை

திருக்குறள் அதிகாரங்களை ஆய்வு செய்யும் பொழுது, அதிகார வைப்பு முறை நூலாசிரியரால் மேற்கொள்ளப்பட்டதன்று என்பதையும், பரிமேலழகர் வழங்கிய வைப்பு முறையே பெருவழக்காகியுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. பலரதும் வைப்பு முறைகள் காணப்படுகின்றபோதும், பரிமேலழகரின் வரிசையானது, அதிகாரங்களுக்கு இடையிலான தர்க்க ரீதியான தொடர்பை நன்கு விளக்குகின்றதனால், அவர் வரிசையே பலராலும் பின்பற்றப் படுகின்றது. முன்பின் அதிகாரங்களோடு ஓரதிகாரம் கொண்டுள்ள காரணகாரியத் தொடர்பை அழகர் நன்கு விளக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆய்வின் நிறைவில், எதிர்கால ஆய்வுகளுக்கான களங்கள் சில இனங்காட்டப்பட்டுள்ளன. அவை, ஒரே பொருள், ஒத்த பொருள் குறித்த அதிகாரங்கள் ஏன் வேறுவேறு இடங்களில் வைக்கப்பட்டன என்பது பற்றிய ஆய்வுகளாம்.

மேலும், திருக்குறள் அதிகாரப் பெயர்கள் சிலவற்றை மாற்றி வழங்குவது குறித்த முன்மொழிவையும் இவ்வாய்வு முன்வைத்துள்ளது. களையப்பபடவேண்டிய குற்றங்கள் பற்றிய அதிகாரப் பெயர்கள் எதிர் மறை முகத்தால் இருக்க வேண்டும் என்பது வைக்கப்பட்டுள்ள முன்மொழிவாகும்.

அடிக்குறிப்புகள்

1. பார்க்க : சாரங்கபாணி, இரா. (1989) திருக்குறள் உரை வேற்றுமை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
2. சாலமன் பாப்பையா. (2006) திருக்குறள் உரையுடன். கவிதா வெளியீடு. பக். 32–57.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை. (2010), கங்கை புத்தக நிலையம். ப. 131.
4. சாரங்கபாணி, இரா. மு.கு.நூ. ப. 449.
5. பரிமேலழகர் உரை. மு. கு. நூ. ப. 10.
6. மேலது. ப. 11.
7. மேலது. ப. 16.
8. மேலது. ப. 20.
9. மேலது. ப. 25.
10. தண்டபாணிதேசிகர், ச. (1981) திருக்குறள் உரைக்களஞ்சியம். மதுரை: காமராசர் பல்கலைக்கழகம். ப. 29.
11. தண்டபாணிதேசிகர், ச. (2010) திருக்குறள் அழகும் அமைப்பும், குறள் களஞ்சியம்,. கொற்றவை. ப. 269.
12. மேலது. ப. 269.
13. மேலது. பக். 269–270.
14. ஜெயராஜ். இ. திருக்குறள் அறத்துப்பால் அதிகார வைப்பு முறை.
15. பரிமேலழகர் உரை. மு. கு. நூ. ப. 161.
16. முனுசாமி, வீ. (2010) திருக்குறள் அதிகார விளக்கம், குறள் களஞ்சியம். ப. 921.
17. பரிமேலழகர் உரை. மு. கு. நூ. ப. 167
18. சாரங்கபாணி, இரா. மு. கு. நூ. ப. 539.
19. பரிமேலழகர் உரை. மு. கு. நூ.
20. தண்டபாணி தேசிகர், ச. மு.கு.நூ. ப. 281.
21. மேலது. ப. 281.
22. குறள். 281.
23. மேலது . 282.
24. பரிமேலழகர் உரை, மு. கு. நூ. ப. 123.
25. மேலது. ப. 427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் இழையோடியுள்ள அறிவாராய்ச்சியியல் நுட்பங்கள்

ச. முகுந்தன்

அறிவென உரிமை கோரப்படும் விடயங்களின் ஏற்புடைமை பற்றிய ஆய்வே அறிவாராய்ச்சியியல் என வரையறை செய்யப்படுகின்றது. [1]

ஞானத்தின் மீது நாட்டமுள்ள புலமாகிய மெய்யியலின் அடித்தளமாக விளங்குவது அறிவாராய்ச்சியியலே எனில் அது மிகையில்லை. எனவேதான் "எந்தவொரு தத்துவ மாளிகையினதும் அடித்தளமாக அத்தத்துவத்தில் இடம்பெறும் அறிவாராச்சியியலேயே விளங்குகிறது" [2] என அறிஞர்கள் விதந்துரைப்பர்.

அறிவாராய்ச்சியியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் "Epistemology" என வழங்குகிறது. இது Episteme + Logos என்ற இரு கிரேக்கச் சொற்களின் இணைப்பால் உருவானதாகும். அறிவு தொடர்பான முறைமை பற்றிய அல்லது முறைமைக்குட்படுத்தப்பட்ட ஆராய்ச்சி என்பதே இதன் கருத்தாகும்.

"The term Epistomology is made up the two Greek words episteme and logos respectively meaning knowledge and discourse. so it literally means it discourse concerning with the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mainfold aspects of knowledge in its extension of meaning it denotes the particuler discipline that investigates the nature factor, forms of knowledge, objects of Cofnition, the ways of knowing and such other related aspects" [3]

அந்த வகையில் அறிவின் தோற்றம், இயல்பு, உண்மை, வரம்பு ஆகியவை குறித்து இப்புலமானது கவனஞ் செலுத்துகிறது. மேலைத்தேய மெய்யியல் மரபுகளில் அறிவின் ஊற்றுப் பற்றிய ஆய்வுகள் அறிவாராய்ச்சியியலிலும் அதன் நியாயித்தல் முறைமைகள் அளவையியலிலும் உள்ளடக்கப்படுகின்றன. இந்திய மெய்யியல் மரபிலோ இவ்விரு கிளைகளும் தம்முள் இயைபுற்று வளர்ச்சி பெற்று வந்துள்ளன. மேலும், அறிவு அறிவுக்காகவே என்ற போக்கில் இந்திய மரபு ஆய்வு செய்வதில்லை. எனவே, இந்திய அறிவாராய்ச்சியியலின் செல்நெறியினை பிளேற்றோவின் தியேட்டஸ் (Theatetus) உரையாடலைப் போன்றோ அன்றி ஐயவாதிகளின் (Sceptics) ஆய்வுப் போக்கிலோ தரிசிக்க முயல்வது தவறாகும். "ஆன்ம விசாரணையை முதன்மைப்படுத்தியதாக இந்திய அறிவராய்ச்சியியல் திகழ்கிறது."

திருக்குறளுக்கும் அறிவாராய்ச்சியியலுக்கும் சம்பந்தமிருக்க முடியுமா ?

திருக்குறள் அடிப்படையில் தத்துவப் பனுவல் அன்று; தர்க்க சாஸ்திரமும் அன்று. இலக்கணமும் இலக்கிய ஞானமும் கைவரப்பெற்ற திருவள்ளுவர் தத்துவஞானத்தின் வேராகிய அறிவாராய்ச்சியியலை உணர்ந்தவராய் இருப்பாரா? திருக்குறளை இலக்கியம் என்ற நோக்குகைக்கு அப்பால் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் கட்டுடைத்து நோக்குதல் விபரீதமாகாதா? என்ற ஆசங்கைகளும் இற்றைவரை எழாமலில்லை.

திருவள்ளுவர் தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளுக்கு அப்பாலும் அகன்றாழ்ந்தவர். சமஸ்கிருத காவிய மரபுகளையும் ஸ்மிருதிகளையும் அர்த்த சாஸ்திரத்தையும் குறுகத்தறித்தவர். வாத்சாயனரையும் கரைகண்டவர். தான் பெற்றிருந்த பல்துறைப் புலமையினைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தனது குறளுள் இழையோடவிட்டவர். இவ்வகையில் அறிவாராய்ச்சியியலும் தர்க்கசாஸ்திரங்களும் இவருக்கு அந்நியமானவையாய் இருக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழர் இலக்கியங்களில் அறிவாராய்ச்சியியல் பற்றிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள முக்கிய பனுவலாகத் திருக்குறளே விளங்குகிறது என்பதனை, பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்களின் மேல் வரும் கூற்று நிரூபிக்கிறது.

அறிவாராய்ச்சியியல் தொடர்பாக குறட்பாக்களுள்ளே ஆழ்ந்து செல்ல முன்பு மேலோட்டமான இரண்டு விவாதப் புள்ளிகளை முன்வைப்பது இதற்கு உடனடித் தீர்வாக அமையும்.

விவாதப் புள்ளி[1]

உண்மை பற்றிய அறிவு தொடர்பாக இந்திய அறிவாராய்ச்சியியல் மரபில் பரஞானம், அபரஞானம் என்ற இரண்டு அறிவுத் தளங்கள் ஆராயப்பட்டுள்ளன. திருவள்ளுவரும் இது பற்றிக் கவனம் செலுத்தியுள்ளார்.

ஆதாரம்

அறத்துப் பாலின் 36 ஆவது அதிகாரம் 'மெய் உணர்தல்' என்பதாகும்.

பொருட்பாலின் 43 ஆவது அதிகாரம் 'அறிவுடைமை' என்பதாகும்.

விளக்கம்

இவ்விரண்டு அதிகாரங்களும் அறிவு பற்றியே ஆராய்ந்துள்ளன. 'அறிவு' என்ற சொல்லுடன் நிறைவுறுகின்ற குறட்பாக்களும் இவ்வதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. அவ்வாறாயின் இது 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின் பாற்படாதா? எனில் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில், அறிவுடைமை என்ற அதிகாரம் பொருட்பாலில் அமைவது, இதில் பேசப்பட்ட அறிவு கருவிநிலைப்பட்டது. அஃது உலகியலறிவாகிய – அபரஞானம் ஆகும்.

அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரம் பரஞானத்தினை நோக்கிய பயணிப்பாகும். இவ்வதிகாரம் 'துறவு' என்ற அதிகாரத்திற்கு அடுத்ததாக வைக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பரஞானம்' கருவி நிலைப்பட்டதன்று. எமது அறிகருவிகள் மூலம் அறியப்படக்கூடியதுமன்று. அது உணரப்படவேண்டியது. அபரஞானத்திற்குரிய அறிவுப்புலங்கள் யாவும் மாற்றத்திற் குட்படக்கூடியவை. பொய்ப்பிக்கப்படக் கூடியவை. ஆகவே, அவற்றை 'மெய்' என்றழைத்தல் தவறாகும். ஏனெனில் 'உண்மை' என்றைக்கும் மாற்றத்திற்குட்படாதது. இதனைக் கருத்தில் இருத்தியே 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரம் வள்ளுவரால் அமைக்கப்பட்டதெனலாம்.

விவாதப்புள்ளி 2

ஏற்புடைய அறிவு தொடர்பானது பிரமாணங்கள் பற்றிய விளக்கமும் பயில்நிலையும் திருக்குறளின் பொருட்புலப்பாட்டு நுட்பங்களில் நன்கு இழையோடியுள்ளன. இதனை, பரிமேலழகரும் பல சந்தர்ப்பங்களில் தனது உரை விளக்கத்தில் உறுதி செய்துள்ளார்.

ஆதாரம்

அமைச்சர்களுக்கு இருக்கவேண்டிய இன்றியமையாத தகுதிப்பாடாக பிரமாணங்கள் பற்றிய அறிவு அமைவதாகத் திருவள்ளுவர் கருதியுள்ளமை, – பொருட்பால் 'அமைச்சு' (அதிகாரம்) குறள். 725, இது பற்றிய பரிமேலழகர் நிலைப்பாடு.

விளக்கம்

> "The commentator Parimelalakar while interpreting the contents of the first three Sources of knowledge viz. perception, inference and verbal testimony to highlight the master mind of Tiruvalluvar according to him Tiruvalluvar anticipated the cabinet ministers to be equipped with epistemological knowledge."[4]

என்ற பேராசிரியர் சோ. ந. கந்தசாமியின் கருத்தும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

இனிச் சற்று ஆழ்ந்தகன்று செல்ல முற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரஞானம்

பிரபஞ்ச இயற்கையின் இயல்புகளைப் புறவயமாக ஆய்ந்துணர முற்படுவனவும், இயற்கையில் ஒரு உயிர்ச்சுவடாய் மனிதன் வாழ்வதற்கு உதவுகின்ற கருவிநிலைப்பட்ட அறிவுப்புலங்களும் அபரஞானமாகக் கருதப்படுகின்றன. இயற்கை விஞ்ஞானங்களும் இன்னபிற சாஸ்திரஞானங்களும் இதில் உள்ளடக்கம்.

பிரபஞ்ச இயற்கை பஞ்சபூதக் கலப்பாலுருவானதாகும். இதனை அறிந்துகொள்ள ஞானேந்திரியங்களும் அந்தக்கரணங்களும் எமக்குத் தரப்பட்டுள்ளன. இக்கருவிக் கூட்டங்களின் துணைகொண்டு ஒருவனால் அறியப்படக்கூடிய அபர ஞானத்தின் அதி உச்ச எல்லை என்பது பஞ்சபூதங்களின் சூக்கும நிலையாகிய தன்மாத்திரைகள் தொடர் பானதாகவே இருக்க முடியும்.

தன்மாத்திரைகளாவன: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

இந்நிலைப்பாட்டையே சாங்கியம் முதற்கொண்டு சைவசித்தாந்தம் வரையிலான பெரும்பான்மையான ஆஸ்தீக தத்துவ மரபுகள் கொண்டுள்ளன.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு (குறள் 27)

என்ற திருக்குறளும் இதே நிலைப்பாட்டையே எடுத்துரைத்துள்ளது.

> "இத்தன்மாத்திரைகள் ஐந்தினதும் கூறுபாட்டையும் ஆராய்வான்அறிவின் கண்ணதே உலகம் அவற்றின் கூறுபாடாவன ....இவையல்லது உலகெனப் பிறிதொன்றில்லையென உலகினதுண்மை யறிதலின் அவனறிவின் கண்ணதாயிற்று"[5]

என்ற பரிமேலழகரின் விளக்கமும் இக்கருத்தை மேலும் அரண்செய்யும் விதத்திலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் ஞானம்

அபரஞானத்துள் இதுவும் அடக்கம். சிந்திக்கும் விலங்காகிய மனிதன் ஒரு சமூகப்பிராணியாவான். சமூக வாழ்வில் செவ்வனவே ஊடாடி இடைவினை புரிவதற்கான நுட்பமே உலகியல் ஞானம் ஆகும்.

ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய மனத்திலிருந்து அறிவதாகக் கருதுகின்ற விடயங்கள் பலவற்றில் அவன் சார்ந்த சமூக பண்பாட்டுக் குழுக்கள் (குடும்பம், சகபாடிகள், இனம்) கற்பித்துத் தருகின்ற முன்னறிவுப் பிரதிமைகளின் பங்கு காத்திரமானதாகும்.

மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துளதாகும் அறிவு (குறள் 454)

நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தற்கு
இனத்தியல்பதாகும் அறிவு (குறள் 452)

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு (குறள் 426)

ஆகிய குறட்பாக்களில் வள்ளுவராற் சுட்டப்பட்ட அறிவு என்பது மேற்கூறிய உலக ஞானத்தையே ஆகும்.

அறிவின் முடிவற்ற பயணம்

அபரஞானத்தில் அடங்குகின்ற அத்தனை அறிவுப் புலங்களும் குறைபாடுடைய அறிவையே கொண்டுள்ளன. அவ்வறிவு பொய்ப்பிக்கப் படக்கூடியதும் மாற்றத்திற்கு உட்படக்கூடியதுமாகும்.

உ+ம் "பூமி தட்டையானது"
இன்று இக்கருத்துப் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது.
"உயிரினங்கள் வாழ ஏதுவான ஒரே கோள் பூமியே"
இக்கருத்து நாளை பொய்ப்பிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அபரஞானப் புலங்களில் அறிவும் அறியாமையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பது புலனாகிறது.

அறிவறியாமை கடந்தவறிவானால்
அறிவறியாமை அழகியவாறே
எனத் திருமூலர் குறிப்பால் உணர்த்தியதும் இக்கருத்தையேயாகும்.

அபரஞானத்தில் நிகழும் அறிவின் முடிவுற்ற பயணத்தினை காமத்துப்பாலின் குறளொன்றில் வைத்து வள்ளுவர் காட்சிப்படுத்தியுள்ளார்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (குறள் 1110)

ஒவ்வொரு முறை தலைவன் தலைவியை நெருங்குகின்ற பொழுதும் அவள் பற்றி அவனிடமிருந்த 'முன்னறிவு' (பட்டறிவு) பொய்ப்பிக்கப்படுகின்றதாம்.

இவ்வாறாக அறிவு பற்றிய ஆழமானதொரு கருத்தியலை கூடற்சுவையின் குறியீடாக அநாயாசமாகக் கையாள்வது திருவள்ளுவருக்கேயுரிய தனித் திறமையாகும்.

பிரமாணங்களின் பிரயோகமும் நியாயித்தல் உத்திகளும்

அறிவைப் பெறுவதற்கான சாதனங்களாக – வாயில்களாக பிரமாணங்களும் அதனைப் பிறருக்கு விளக்கியுரைப்பதற்கான பொறிமுறையாக நியாயித்தல் உத்திகளும் தர்க்கவியலில் இடம்பெற்றுள்ளன.

திருக்குறள் ஒரு தர்க்கசாஸ்திரம் அன்று. அது ஒரு வாழ்வியல் நூலேயாகும். எனினும் வாழ்வியற் சிந்தனைகளை எடுத்துரைப்பதற்கு திருவள்ளுவர் கையாண்ட வழிமுறைகளில் தர்க்கவியலின் தீட்சணியத்தைத் தரிசிக்க முடிகிறது.

புலக்காட்சி அல்லது பிரத்தியட்சம்

புலக்காட்சி என்பது புலனனுபவத்தின் வழி பெறப்படும் அறிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்திய மெய்யியலில் பிரத்தியக்ஷம் பற்றிய ஆய்வானது ஐந்து புறப்புலன்களுடன் மனம் ஆகிய அகப்புலனையும் சேர்ந்ததாகவே கொள்ளப்படுகிறது."[6]

இவ்வாறு, புலக்காட்சியின் பயில்நிலையில் மனம் சம்பந்தமுறுகின்ற காரணத்தாலேயே புலன்வழி பெறப்படும் விடயங்கள் உணர்வூட்டப்படுகின்றன.

ஐந்து புலன்களூடாகவும் பெறுகின்ற அறிவை மனத்துடன் தொடர்புபடுத்தி 'ஐயுணர்வு' எனச் சுட்டுகின்ற வள்ளுவரின் பாங்கு இங்கே கவனிக்கப்படவேண்டியதாகும்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
மெய் உணர்வு இல்லாதவர்க்கு (குறள் 354)

புலக்காட்சியில் மனத்தின் வகிபாங்கு

புலக்காட்சியில் ஐந்து புலன் உறுப்புக்கள் நேரடியாகப் பங்கெடுப்பன போல் தோன்றினாலும் அறிவைப் பெறுவதில் – உணர்வதில் அவற்றின் வகிபங்கு முற்றிலும் புறவயமானதாகும். கண்ணாடியைப்போலக் கருவிநிலைப் பட்டதேயாகும். ஆனால் மனமோ நேரடியாகப் பங்கெடுப்பதுபோல் தோன்றுவதில்லை. ஆனால், புலக்காட்சி மூலம் பெறப்படும் அறிவில் மனதின் வகிபங்கே காத்திரமானதாகும்.

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்டவாறு (குறள் 849)

இக்குறளில் இழையோடுகின்ற சிந்தனாமுறைமையில் மேற்கூறிய நுட்பத்தின் சாயலை உணரமுடிகிறது.

அனுமானம் / பின்வருமறிவு

புலக்காட்சி முதலிய அளவைகளால் கண்டறியப்பட்ட விடயங்களினைத் துணைகொண்டு புதிய விடயங்களை உய்துணர்தலே அனுமான அளவையின் பயில்நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்மையென அறியப்பட்ட நேர்வுகளைத் தொடர்புபடுத்தி நியாயித்தல் மூலமாகப் புதிய தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் பிரமாணமே அனுமானமாகும்.'' [7]

யான் நோக்கும் காலை நிலம் நோக்கும், நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (குறள் 1094)

இக்குறளின் பொருளமைதியை யாவரும் அறிவர். ஆனால் தர்க்கநுட்பத்தில் தவறொன்றுள்ளது போலில்லையா?

தலைவியைத் தான் நோக்காத போது குறித்த தலைவி தன்னை நோக்குவதையும் இளநகை பூப்பதையும் தலைவன் எவ்வாறு அறிந்துகொண்டான் என்பதே இவ்விடத்திலெழுகின்ற ஆசங்கையாகும். 'இது காமத்துப் பாலின் கவிநயம்' என்று கண்டுபிடித்துச் சொல்வதற்கு ஆய்வாளர்கள் அவசியமில்லை.

காமத்துப் பாலின் கட்டமைப்பில் தமிழ் இலக்கண இலக்கிய வரம்புகளை மீறாத வள்ளுவர் தர்க்கவியலில் மட்டும் தவறிழைத்திருப்பாரா?

ஒரு குறளிற்கு பொருள் விரிந்துரைப்பதற்கு இரண்டு வழிமுறைகளை பரிமேலழகர் முதற்கொண்டு உரையாசிரியர்கள் பலர் பின்பற்றியுள்ளனர்.

1. குறித்த குறளிற்கு முன்னைய அல்லது அடுத்துவரும் குறள்களின் பொருளமைதியுடன் கொண்டு கூட்டிப் பொருள் விரிப்பது.
2. குறிப்பிட்ட குறள் இடம்பெற்றுள்ள அதிகாரத்தினை அவதானித்துப் பொருள் கொள்வது.

இங்கும் இந்நடைமுறை பயனளிக்கவல்லதாயுள்ளது. அந்தவகையில் 'யான் நோக்கும் காலை'................ என்ற குறித்த குறளிற்கு முன்னைய குறளையும் அதன் பொருளமைதியையும் புரிந்துகொண்டு அதன் தொடர்ச்சியாக இக்குறளை விளங்கிக் கொள்ள முயல்வது முதலாவது வழிமுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர் (குறள் 1093)

என்பது 'யான் நோக்கும் காலை'க்கு முன்னைய குறளாகும். இதன் பொருளமைதியை நோக்கும் பொழுது தலைவி ஏலவே இவனை நோக்கியிருந்தாள் என்பதும் இவன் அவளை நோக்கிய பொழுது தலைகுனிந்தாள் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, அனுமானப்பிரமாணத்திற்கு அவசியமான 'முன்னறிவு' இங்கே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது வழிமுறையில் பொருள் கொள்ள முயலும்போது (அதிகாரத்தால்) குறித்த குறள் இடம்பெறுவது காமத்துப் பாலின் 'குறிப்பறிதல்' என்ற அதிகாரத்திலேயாகும்.

குறித்த குறளின் ('யான் நோக்கும் காலை................') பொருண்மையில் உய்த்துணரப்படவேண்டிய – குறிப்பால் உணரப்பட வேண்டிய விடயமொன்றை வள்ளுவர் இழையோடவிட்டிருப்பதும் பொருத்தமானதேயாகும்.

எனவே

01. அவள் அவனை நோக்கியபடியிருந்தாள் (முன்னைய குறள்)
02. எப்பொழுதெல்லாம் அவன் அவளை நோக்குகின்றானோ அப்பொழுதெல்லாம் விழிகளை அவள் தாழ்த்திக் கொள்கிறாள்.
03. இப்பொழுது அவன் அவளை நோக்கவில்லை.
04. எனவே, முன்னறிவின் பிரகாரம் அவள் அவனை நோக்குவாள்........

இதனை, தலைவன் ஊகிப்பது அனுமான அளவையின் வழியே ஏற்புடையதேயாகும்.

உவமானப் பிரமாணம்

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டற்று (குறள் 22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளில் துறந்தாரின் 'பெருமை' ஆகிய எண்ணிலிப் பெறுமதியை விளக்குவதற்கு 'இறந்தவர்களின் எண்ணிக்கை' என்ற பரிச்சயமான முடிவிலிப்பெறுமதியை உவமானமாக கையாண்டிருப்பது நயப்பிற்குரியது.

ஆப்தவாக்கியம் / உரையளவை

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்ற வகையில் சான்றோர் உரையினை சான்றுரையாகக் கொள்வதால் இவ்வளவையினை ஆப்த வாக்கியம் உரையளவை எனவும் வழங்குவர்.

அந்த வகையில் உலகத்தவரால் உண்டு என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயத்தினை இல்லை என்று மறுப்பவனை 'அலகை' (பேய்) என வள்ளுவர் விமர்சித்துள்ள பாங்கு கவனத்திற்குரியது.

உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும் *(குறள் 850)*

லௌகீகம் – அலௌகீகம் என நியாயதரிசன வாதிகளும் வேதவாக்கியம் உலகவாக்கியம் எனச் சைவ சித்தாந்திகளும் ஆப்தவாக்கியப் பிரமாணத்தை வகைப்படுத்தியுரைப்பதும் கவனிக்கத்தக்கது (விரிவஞ்சி விவரிக்கவில்லை).

இவ்வாறாக சுபாவம், ஒழிபு, ஐதீகம் உள்ளிட்ட அனைத்துப் (10) பிரமாணங்களின் பயில் நிலைகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருக்குறளில் அடையாளங்காட்ட முடியும். அறிவாராய்ச்சியியலில் அளவையியல் ஒரு பகுதியேயாதலின் விரிவஞ்சி அவைபற்றி விளக்கமுற்படவில்லை.

பிரமாணங்களின் கையாட்சி மட்டுமன்றித் தர்க்கவியலில் பயன்படுகின்ற தூல அருந்ததி நியாயம் முதலிய நியாயித்தல் உத்திகளும் வள்ளுவரால் ஆங்காங்கே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

தூல அருந்ததி நியாயம்

ஒருவருக்குத் தெரியாத விடயமொன்றைத் தெரிந்துகொள்ள வைப்பதற்கான உத்திமுறை இதுவாகும். தெரியாத விடயமொன்றை அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலாம்பரமாக அறியப்பட்ட விடயமொன்றுடன் தொடர்புபடுத்திச் சுட்டுவதனூடாக அறிந்ததிலிருந்து அறியப்படாத விடயத்தினைப் புரிய வைத்தலே தூல அருந்ததி நியாயத்தின் பயில் நிலையாகும்.

விண்ணிலுள்ள நட்சத்திரக் கூட்டத்தில் அருந்ததியை ஒருவனுக்குக் காட்ட வேண்டுமெனில்,

01. பிரசித்தமாகத் தெரிகின்ற சப்தரிஷிமண்டலத்தைச் சுட்டிக்காட்டுதல்.
02. சப்தரிஷி மண்டலத்துள் அதிக பிரகாசமுடைய வசிட்டர் விண்மீனைச் சுட்டிக்காட்டுதல்.
03. வசிட்டர் விண்மீனுக்கு அருகில் உள்ள பிரகாசம் குறைந்த விண்மீனே அருந்ததி என அடையாளங் காட்டுதல்.

இவ்வகை நியாயித்தல் உத்தியினை வள்ளுவரும் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டு:

ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)

சான்றோர் பழிக்கும் செயலைப் புரிவதால் எத்தைகைய பாதகம் விளையும் என்பதை உணர்த்துவதே இக்குறளின் நோக்கம். பெற்ற தாயானவள் பசியினால் துடித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும் நிலை எவ்வளவு கொடுமையானது என்பதனை ஒவ்வொருவரும் அறிவர். சப்தரிஷி மண்டலத்தை காட்டுவது போல் இதனை முதலில் குறிப்பிட்டு, பின்னர் அதனை விடவும் பாதகமானது சான்றோர் பழிக்கும் செயலைப் புரிவது எனத் தூல அருந்ததி நியாயம் பேசுகிறார் திருவள்ளுவர்.

சுந்தோப சுந்த நியாயம்

(சுந்தன் – உபசுந்தன் என இரு சமபலங் கொண்ட சகோதரர்கள் ஊர்வசியின் பொருட்டு தம்முள் சண்டையிட்டு மாய்ந்தமை பற்றி வழங்கும் பௌராணிகப் பெயரீடு இதுவாகும்) சமவலிமையுள்ள இரண்டு காரணங்கள் ஒன்றையொன்று தாக்கி வெறுமையாகின்ற நிலையினை விளக்குவதற்கு இந்தியத் தர்க்கவியலில் சுந்தோப சுந்த நியாய உத்திமுறை கையாளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் சுந்தோபசுந்த நியாயத்தின் பயில் நிலைக்கு மேல்வரும் குறளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து (குறள் 1091)

அஃதாவது தலைவியின் ஒரு நோக்கு (பொது நோக்கு) இவனுக்கு ஏக்கத்தை உண்டுபண்ணும் நோயாகிறது. அவளின் ஒரு நோக்கு (தனி நோக்கு) இவனின் நோயைத் தீர்க்கவல்ல மருந்தாகிறது. இவையிரண்டும் கணத்துக்குக் கணம் மாறிமாறி நிகழ்வதனால் சுந்தனும், உபசுந்தனும் தம்முள் போரிடுவது போல தலைவனின் உள்ளம் ஸ்தம்பித்துப் போகிறது.

இவ்வாறாகத் திருவள்ளுவர் தனது திருக்குறளில் கருத்து வெளிப்பாட்டு முறையியலுக்குத் துணை செய்பவையாக அளவைப் பிரமாணங்களையும் நியாயித்தல் உத்திகளையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பாலது.

அப்பிரமாணம் - ஏற்கப்பட முடியாத அறிவு

இது ஏற்புடை அறிவிற்கு நேர்முரணானது.

இதனை ஐயம் (சம்சயம்), பிழை (விபர்யாயம்) போன்றவற்றினூடாக தத்துவாதிகள் இனங்காட்டியுள்ளனர்.

உண்மை பற்றிய தேடலே ஐயத்தை மனிதர்களிடத்தில் உண்டாக்குகிறது. நிச்சயமற்ற அல்லது ஐயத்திற்கு இடமளிப்பதாயுள்ள பிரச்சினைகளே அறிவாராய்ச்சிக்கு அடிப்படையாகவும் அமைந்துவிடுகின்றன. திருக்குறளில் இடம்பெறும்,

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு (குறள் 353)
ஐயப்பாடாது அகத்தது உணர்வானை (குறள் 702)
மாசறு காட்சியர் (குறள் 352)
புன்மையில் காட்சியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய சொற்பிரயோகங்களும் இவைபற்றிய பரிமேலழகரின் உரை விளக்கங்களும் திருவள்ளுவரின் அறிவாராய்ச்சியியற் புலமையினை தெளிவுபடுத்துவனவாய் அமைந்துள்ளன.

பரஞானம்

அபரஞானத்தைப் போலன்றி பரஞானம் பூரணமானது; மாறுதலுக்கு உட்படாதது; குறைபாடற்றது. இதுவே பிரம்மஞானம் அல்லது பரம்பொருள் பற்றிய அறிவு ஆகும். அறிவுகளுக்கெல்லாம் ஊற்றான – மூலமான அறிவு என்பதனால் 'அடிநிலை அறிவு' என்றும் அழைக்கப்படுகிறது.

திருக்குறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பத்துக் குறள்களும் பரஞானத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பேசியுள்ளன. அந்த வகையில் இவ்வதிகாரத்தின் முதல் நான்கு குறட்பாக்களும் அபரஞானத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. (பார்க்க – மெய்யுணர்தல் 1–4) இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறள் மெய்யுணர்வின் இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகிறது.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு *(குறள் 355)*

இக்குறளிற்குப் பரிமேலழகர் உரை பின்வருமாறு அமைகிறது:

> "இந்தப் பிரபஞ்சத்தினை நிலம்முதல் உயிரீறாகிய தத்துவங்களின் தொகுதியென உணர்ந்து அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் (ஒரு பொருள்) நிற்பதனையுணர்தலாம். இதனால் மெய்யுணர்தலின் இலக்கணங் கூறப்பட்டது." [8]

இதுவே பரஞானமாகிய அடிநிலையறிவாகும். பரஞானம் பற்றிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் மேல்வரும் கூற்று இவ்விடத்தில் பொருத்தங்கருதித் தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயரிய ஞானம் அல்லது பரஞானம் அறியாதனவெல்லாம் அறியச்செய்வது. இது அடி நிலை அறிவு என்று விளக்கப் பெறுகிறது. மண்ணால் செய்த ஒரு பொருளை அறிந்தால் களிமண்ணால் செய்யப்பெற்ற பொருட்கள் அனைத்தையும் நாம் அறிய முடியும். களிமண் பெறும் மாறுபட்ட உருவங்கள் பெயர்களினால் பிரித்தறியப்பெறுகின்றன. ஆனால் மூலப்பொருளால் (களிமண்) ஒன்றேயாகும். இதனைப் போன்றதே அடி நிலை அறிவு பற்றிய போதனையும். அனைத்தையும் அறிவிக்கும் இது அந்த முழுமுதலான பரமான்மாவை அறிவதாகும்." [9]

இவ்வாறாக எல்லா அறிவுப்புலங்களின் விரிவுக்கும் அடிநிலைக் காரணமாகிய அந்த மூலப்பொருளை – பரம்பொருளை – மெய்ப்பொருளை மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் வைத்துச் – செம்பொருள் எனத் திருவள்ளுவர் சிறப்பித்துப் பேசுகிறார்.

செம்பொருள் காண்பதறிவு (குறள் 358)

"The meta physical intellectuals are celebrated as "cemporul kantar, meypporul kantar"...........etc Thirukkural. They res pectively denote the mystics who envisioned the perfect and absolute reality." [10]

செம்பொருளாகிய பரஞானத்தை உணர்தலின் சாத்தியப்பாடு

ஆன்மாக்கள் தமக்குள்ள இயல்பான அறிவினால் பரஞானத்தை அறிவது நேரடியாகச் சாத்தியமற்றதாகும். ஏனெனில் அவை கொண்டுள்ள அறிவைப் பெறுவதற்கான கருவிகள் குறைபாடுடையவை; வரையறைக்குட்பட்டவை.

எனவே, பரஞானத்தை நோக்கிய பயணிப்புக்கு ஞானகுருவின் வழிகாட்டல் அவசியமாகிறது. உலக ஞானத்தை உபதேசிக்கும் உபாத்தியாயனைப் போலன்றி பரஞானத்திற்கான பாதைகாட்டியாக விளங்கும் ஞானகுருவை பரப்பிரம்மமாகவே இந்துப் பனுவல்கள் கருதுவதற்கான காரணமும் இதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு ஷாட்ஷாத் பரப்பிரம்மம் (குருகீதை)

இவ்வாறாக ஞானகுருவின் துணையுடன் மெய்ப்பொருளை உயர்வதற்கு,

கேட்டல் → சிந்தித்தல் → தெளிதல் – நிட்டை கூடல்

(சிரவணம்), (மனனம்), (நிருத்தியாசனம்) ஆகிய படிநிலைகளை இந்து தத்துவ சாஸ்த்திரங்கள் அறிமுகஞ்செய்துள்ளன.

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் செம்பொருளை எய்துவதற்கான படிநிலைகளாக திருவள்ளுவரும் இவற்றையே வலியுறுத்தியுள்ளார்.

பரிமேலழகரும் இவற்றை மிகவும் வெளிப்படையாகத் தனது உரையில் விளக்கியுள்ளார்.

"செம்பொருள் காண்பதறிவு" என்று நிறைவெய்தும் குறளிற்கு முன்னுள்ள இரண்டு குறள்களிலும் முற்குறிப்பிட்ட சிரவணம் முதலிய படிநிலைகள் வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளமையும் நயக்கத்தக்கது. அக்குறள்கள் பின்வருமாறு:

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (குறள் 356)
ஓர்த்துள்ளம் உள்ளதுணரின் ஒருதலையாய்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு (குறள் 357)

இவ்விரண்டுள் முதலாவது குறள் (கற்றீண்டு..............) ஞானகுருவின் துணையுடன் நிகழும் கேட்டல், சிந்தித்தல் ஆகிய படிநிலைகளைக் குறிப்பாலுணர்த்தியுள்ளது.

இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனான் மெய்ப்பொருளை உணர்ந்தவர்.................. [11]

எனக் குறித்த அக்குறளிற்கு பரிமேலழகர் வழங்கிய உரையும் இக்கருத்தை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது குறளின் முதலாவது அடியில் திருவள்ளுவர் "தெளிதல்" என்ற பரஞானத்திற்கான மூன்றாவது படிநிலையை வெளிப்படுத்தியுள்ளார். தெளிதல் நிகழ்ந்த மாத்திரத்தே நிட்டை கூடல் நிகழ்ந்து விடும். பரஞானம் உணரப்படுகின்றபோது பிறப்பு முதலிய லோக விகாரங்கள் அற்றுப் போய் விடுகின்றன. இதனையே குறித்த குறளின் இரண்டாவது அடி புலப்படுத்தி நிற்கிறது.

"அங்ஙனங் கேட்ட உபதேசப் பொருளை ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்து மாற்றானுந் தெளிய ஆராய்ந்து அதனான் முதற்பொருளை உணருமாயின்..............." [12]

என இக்குறளிற்கான பரிமேலழகரின் உரையும் முதற்குறளின் பொருளமைதியுடனான தொடர்ச்சியாகவே அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

எனவே செம்பொருளாகிய பரஞானத்தினை உணர்வதற்கான படிநிலைகள் தொடர்பாகத் திருக்குறள் முன்வைத்துள்ள சிந்தனைகள் இந்து மெய்யியல் மரபின் வழிவந்தவையாகவே அமைந்துகிடக்கின்றமை நோக்கற்பாலது.

குறிப்பு :

"ஓர்த்துள்ளம் உள்ளத்துணரின்............." என்ற முற்கூறிய குறளிற்கு தரப்பட்ட பரிமேலழகரின் உரைப்பகுதியில் 'அளவைகள்' பற்றி வலியுறுத்தப்பட்டிருப்பதனைக் கவனிக்கவும். பரஞானத்திற்கான படி நிலையிற்கூட அளவைகளின் பிரயோகத்தினை பரிமேலழகர் புறந்தள்ளவில்லை. அவ்வாறாயின் அபரஞானப் புலங்களில் 'அளவைகள்' பெற்றிருக்கவல்ல முக்கியத்துவம் பற்றிக் கூறவேண்டியதில்லை. எனவே திருக்குறளின் பொருட்புலப்பாட்டு நுட்பத்தில் அளவையியலும் அதன் வழி அறிவாராய்ச்சியியலும் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை ஊகிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுடி - நிலை

அறிவாராய்ச்சியலில் 'திரிபுடி' பற்றிக் குறிப்பிடாத இந்துத் தத்துவப் பள்ளிகளே இல்லை எனலாம். எந்த உரு அறிவைப் பெறுகின்ற செயன்முறையிலும்

அறிபவன் (ஞாதுரு)

அறியப்படுபொருள் (ஞேயம்)

அறிவு (ஞானம்)

ஆகிய மூன்று கூறுகள் சம்பந்தமுறுகின்றன.

அபரஞானநிலையில் ஒத்திசைவாகத் தொழிற்படுகின்ற இம்மூன்று கூறுகளும் பரஞானத்தை யுணர்கின்ற போது ஸ்தம்பிக்கின்றன. ஒரு நிலைப்படுகின்றன. பரஞானத்தை உணர்கின்ற நிலை ஏற்படுகின்ற பொழுது அறிபவன் என்றும் அறியப்படுபொருள் என்றும் அறிவு என்றும் வேறுபாடுகள் இருக்க முடியாது.

ஏனெனில், பரஞானம் பரிபூரணமானது. அதனை புறவயமாக உணர முடியாது. இந்நிலையில் முற்கூறிய மூன்று கூறுகளும் ஒருநிலைப்படுகின்றன. இதுவே திரிபுடி நிலையாகும்.

பிரக்ஞானம் பிரம்மம் (ஐதரேய உபநிடதம்)
உய்வல்லார் அறிவுள் அறிவாமே (தி. மந். 2822)
ஞேயத்தை நின்றார்க்கு ஞானாதி நின்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும் (தி. மந். 1606)

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் 'திரிபுடிநிலை' பற்றித் திருவள்ளுவரும் கருத்துரைத்துள்ளார். செம்பொருளாகிய பரஞானத்தினை உணர்ந்த நிலையில் பிறப்பு நீங்கிவிடுகிறது – அதாவது அறிபவன் இல்லாது போகின்றான் என்ற கருத்தினையே,

பிறப்பென்னும் பேதமை நீங்கிச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு (குறள் 358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் குறள் வெளிப்படுத்தி நிற்கிறது. இக்குறளிற்கு முன்னுள்ள இரண்டு குறட்பாக்களும் இதே கருத்தை அரண்செய்திருப்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறாகத் திருக்குறளின் பொருளமைதிகளினூடே அறிவாராய்ச்சி யியலின் அநேக பரிமாணங்களைத் தரிசிக்க முடிகிறது.

அடிக்குறிப்புக்கள்

01. கிருஷ்ணராஜா, சோ., 1995.
சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, ப. 02.
02. பாஸ்கரன், க., 2006.
சைவசித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியியல், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்., ப. x.
03. Kandaswamy, S.N., 2000,
Indian Epistomology, As Expounded in the Tamil Classics, International Institute of Tamil Studies, Chennai. P. 01.
04. Kandaswamy, S.N., 2000, Ibid, P. 04.
05. **திருக்குறள் பரிமேலழகர் உரை**, 1962, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. ப. 12.
06. கிருஷ்ணராஜா, சோ., 1995, மு. கு. நூ., ப. 16.
07. கிருஷ்ணராஜா, சோ., 1995, மேலது, ப. 25.
08. திருக்குறள் பரிமேலழகர் உரை, 1962, மு. கு. நூ., ப. 147.
09. இராதாகிருஷ்ணன், எஸ்., **கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு,** ப. 82.
10. Kandaswamy, S.N., 2000, **Op. cit,** P.4.
11. திருக்குறள் பரிமேலழகர் உரை, 1962, மு. கு. நூ., ப. 148.

குறிப்பு :
இந்த ஆய்வுக் கட்டுரை தொடர்பாக எனக்குப் பல பயனுள்ள ஆலோசனைகளை வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக் கழக மெய்யியல்துறை பேராசிரியர் கலாநிதி நா.ஞானகுமாரன் அவர்களுக்கு எனது பணிவன்பான நன்றிகள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் அரசியல் அறம்

பழ. முத்துவீரப்பன்

சங்க மருவிய கால இலக்கியங்கள் எனப்படும் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள அரசியல் குறித்த செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்கச் சமுதாயம் முடியாட்சி முறையைப் போற்றி மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று வாழ்ந்த சமுதாயம். வழிவழி ஆட்சி முறையை ஏற்றிருந்த சமுதாயம். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்" என்று அரசனைத் தெய்வமாகவே போற்றி வழிபட்ட சமுதாயம். சங்கத் தொடர்ச்சியான கீழ்க்கணக்கு நூல்களிலும் இக்கருத்துக்களையும் அவற்றின் மேல்வளர்ச்சியையும் காணமுடிகிறது. இந்நூல்களில் அரசியல் அறம் என்று குறிப்பிடுவது அரசனைப் பற்றிய கருத்தாக்கமே.

திருக்குறள் காட்டும் அரசியல் அறம்

கீழ்க்கணக்கு நூல்களில் மட்டுமல்ல தமிழ் நூல்களிலேயே முதன்மையான திருக்குறள், அரசியல் குறித்து இறையாட்சி முதல் இடுக்கணழியாமை ஈறாக 25 அதிகாரங்களில் விரித்துரைக்கிறது. அரசனின் நற்குண நற்செயல்கள், குடிகாத்தல், அறிவாற்றல், பெரியோரைத் துணைக்கோடல், காலம், இடம், வலிமை அறிந்து செயல்படுதல், கண்ணோட்டம், ஆள்வினைத்திறம் முதலியவை இப்பாடல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்துரைக்கப்பட்டுள்ளன. இறைமாட்சி என்ற அதிகாரம் ஒன்றே வள்ளுவரின் அரசர் குறித்த கருத்தைத் தெளிவாக உணர்த்தப் போதுமானது எனலாம். இருப்பினும் வள்ளுவர் அரசன் குறித்துக் கூறும் பல்வேறு இன்றியமையாச் செய்திகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம். "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்டும்" (கு.388) என்று சங்க மரபை ஏற்கிறார் வள்ளுவர். மழைத்துளி இல்லாவிட்டால் உலகம் எத்தகைய துன்பம் அடையுமோ அத்தகைய துன்பத்தை அரசனுடைய இரக்கம் பெறாத குடிகள் அடைவார்கள் என்று (கு.557) அரச முதன்மையை எடுத்துரைக்கிறார்.

பொருளாக்கம்

அரசாங்கம் செயற்படப் பொருளாதாரம் முதன்மையானது. செல்வமற்ற நாடு விரைவில் சீர்குலைந்துபோகும். எனவே அரசன் நாடு புரப்பதற்கு உரிய பொருளைத் திட்டமிட்டுச் சேர்த்து, காத்து, வகுக்கவேண்டும் (கு.385).

வறியோர்க்குக் கொடுத்தல், ஏழை எளியவர்பால் கருணை காட்டுதல், நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிதல், குடிமக்களுக்கு எவ்விதத் துன்பமும் நேராமற் பாதுகாத்தல் இவை அரசனுக்குரிய இன்றியமையாத நான்கு பண்புகள் (390).

அறிவுத்திறம்

அரசன் நூலறிவும் கேள்வியறிவும் உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பேரறிவும்(426) உலகியலறிவும் வாய்ந்தவனாகத் திகழ வேண்டும். பின் வருவதை முன் அறிந்து தடுத்துக்கொள்ளும் அறிவுடையவனாகச் சிறக்க வேண்டும் (429).

பெரியோரைத் துணையாகக் கொண்டிருக்க வேண்டும் (460). இடித்துரைப்பவரைத் துணைக் கொண்டிருக்க வேண்டும் (448). காட்சிக்கு எளியவனாகவும் கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருக்கவேண்டும்(386). தன் காது கைக்கும்படி குறை கூறும் செய்திகளையும் பொறுத்துக் கொள்ளும் குணமுடையவனாகத் திகழ வேண்டும்(389). மக்கள் கருத்தறிந்து ஆட்சி செலுத்த இது அவசியமானது. தன்னை வியப்பவனாக இருக்கக் கூடாது(439).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குற்றத்தைக் கண்டறிந்து நீக்கிக் கொள்பவனாகவும் பின்னர் பிறர் குற்றத்தைக் கண்டறிய வல்லவனாகவும் இருக்க வேண்டும் (346).

எச்செயலையும் எண்ணித் துணிபவனாக, துணிந்தபின் எண்ணாதவனாக இருக்க வேண்டும் (407), செயல் முடிப்பதற்குத் தக்கவர்களைத் தெளிந்து தேர்ந்தெடுக்க வேண்டும் (507), தேர்ந்தெடுத்த தகுதியாளனை அப்பணிக்கு உரியவனாக்கிப் பொறுப்பைத் தரவேண்டும் (518).

வள்ளுவத்திற்கு முற்பட்ட காலத்தில் எழுந்த வேதசமயத்தின் புனிதநூல் தொகுதிகளுள் ஒன்றான சுமிருதி(கி.மு 4–5) அரசனைத் தெய்வமாகக் காட்டுகிறது. சுக்கிரநீதி என்ற வடமொழி நூல் அரசனின் தெய்வீகத்தை உணர்த்துகிறது. எல்லா உலகங்களும் அரசனின்றி அச்சத்தால் எப்பக்கங்களிலும் சிதறுண்டிருக்குங்கால் அவ்வெல்லாவற்றையும் காத்தற்பொருட்டு, பிரம்மதேவன், வாயு, இந்திரன், இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக் கொண்டு அரசனைப் படைத்தான் என்று எடுத்துரைக்கிறது. பல்வேறு தெய்வங்களின் மனித வடிவமே மன்னன் என்று நாரதஸ்மிருதி குறிப்பிடுகிறது. மனுதர்ம சாஸ்திரம் என்ற வடமொழிநூல் வேதம் கட்டளையிட்டிருக்கின்றவாறு உபநயனம் முதலிய சமஸ்காரங்களைக் கொண்ட சத்திரியனால் இவ்வுலகம் விதிப்படி காப்பாற்றத்தக்கதாகும். இந்திரன், வாயு, எமன், சூரியன் அக்கினி, வருணன், சந்திரன், அளகேசன் ஆகிய திசைக் காவலர் அனைவரின் தன்மைகள் ஒருருவாகத் தோன்றியவனே அரசன் என்று குறிப்பிடுகிறது. இக்கருத்துக்களை ஆ.சிவசுப்பிரமணியன் சுமிருதியும் திருக்குறளும் என்ற தன் அண்மைக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் (பக்.12 உங்கள் நூலகம். ஆகஸ்ட் 2010).

சுமிருதிகள் கருத்தை ஏற்றுக் கொண்டு வள்ளுவரும் இறை என்றே அரசனைக் குறிப்பிடுள்ளார். ஆனால் அவை கூறும் வருணக் கோட்பாட்டை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் இவற்றில் இருந்தவர்கள் நற்குடிப்பிறப்பு, கல்வி, நல்லொழுக்கம், உண்மையுடைமை, தூய உள்ளம், நடுவுநிலைமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய நற்பண்புகளைப் பெற்றிருந்தனர் என்று எடுத்துரைக்கிறது மதுரைக் காஞ்சி, சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் இவர்களை மாசனம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பழமொழியில் அரசியல் அறம்

திருக்குறளுக்கு அடுத்தநிலையில் பழமொழியில் அரசன் தொடர்பான செய்திகள் ஏறத்தாழ 45 பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஒரு குறுநில மன்னர் என்பது குறிப்பிடத்தக்கது.(பா.8, 20,21, 31, 33, 49, 76,105, 110,120,147,150 ,153, 155, 165, 169, 178, 181, 187, 206, 225, 231, 234, 242, 248, 264, 273, 287, 295, 296, 309, 311, 317, 323, 328, 329, 331, 338, 341, 349, 351, 383, 391, 397– மர்ரே பதிப்பு)– பழமொழி நானூறு கூறும் கருத்துக்களை முடியாட்சிமுறை ஏற்பு, செங்கோலரசன் சிறப்புகள், கொடுங்கோலரசர் குறைபாடுகள், அரசனும் குடிகளும், அரசனும் சான்றோரும், அரசனும் வீரரும் என்னும் தலைப்புகளில் பகுத்துக் காணலாம்.

முடியாட்சிமுறை ஏற்பு

உரைமுடிவு காணான், இளமையோன் என்று எண்ணிய நரைமுது மக்கள் மகிழ்ச்சி அடையுமாறு நரைமுடி அணிந்து உரிய தீர்ப்பு வழங்கினான் கரிகாலன் என்று எடுத்துக்காட்டி, குலவிச்சை கல்லாமல் பாகம் படும்(பா.21) என்கிறது பழமொழி. இப்பாடல் பரம்பரை ஆட்சியை ஒப்புக்கொண்டு பேசுவதாக அமைந்துள்ளது.

செங்கோல் அரசர் சிறப்புகள்

அரசனுக்கு வெற்றி தருவது வேலன்று, மன்னவனின் கோடாத கோல் என்பர் வள்ளுவர். அரசன் செங்கோலனாக இருந்தால்தான் பாராட்டுவர். வெங்கோலனாக இருந்தால் இகழ்வார். கண்டிப்பு வேண்டும். ஆனால் செங்கோன்மையே மெய்யான வெற்றிதரும். அவன் அனைத்துச் செல்வங்களையும் அளிக்கவல்லவன் (பா.248). அரசன் மாசு மறுவற்றவனாக, மக்கள் நலம் விரும்புபவனாக, மக்கள் மீது அன்புகொண்டு வாழ்பவனாகத் திகழ்ந்தால் பகைவர் பலர் படையெடுத்து வந்தாலும் அவனை எதுவும் செய்துவிட முடியாது. ஆயிரம் காக்கையை விரட்ட ஒரு கல்போதும் அல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பா.165). பண்பு நிறைந்த அரசன் மக்களை வருத்தாது, அவர்களிடம் வரி வாங்க வேண்டும். வண்டு பூவில் தேன் அருந்துவது போல அது அமைய வேண்டும். குடிமக்களிடம் பெற வேண்டிய வரிப்பொருளை அப்போதைக்கப்போது பெற்றுவிட வேண்டும். மிகுதியாகச் சேர்ந்து விடுமாறு விட்டுவிடக்கூடாது. காலங்கடந்து அவ்வரிப்பொருளைப் பெறுவது இயலாதது என்கிறார் (பா.242). செல்வர், ஏழை என்று வேறுபாடு காட்டாமல் சமநீதி வழங்குபவனாக இருக்க வேண்டும். அப்படி வேற்றுமை காட்டுவது தாயின் ஒரு முலையிலிருந்து பாலும் மற்றொரு முலையிலிருந்து நீரும் ஒழுகுவது போன்றது என்று இதனை அருமையாகச் சித்திரிக்கிறது பழமொழி (பா.206).

முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும்
இறைதிரியார் நேரொத்தல் வேண்டும் – முறைதிரிந்து
நேர் ஒழுகான் ஆயின் அதுவாம் ஒருபக்கம்
நீர் ஒழுகப் பால் ஒழுகுமாறு (பா.206)

புறப்பகையிலிருந்து மக்களைக் காப்பாற்ற மன்னன் போராற்றல் பொருந்தியவனாக இருக்க வேண்டும். அவன் எதிரிகளை ஒழித்தலும் ஒடுக்குவதும் அவசியம் (பா.287). வன்பகை என்று அஞ்சாமல் போரிட்டு வெல்ல முயற்சி செய்ய வேண்டும். வாய்வீரம் பேசுவது கூடாது. அலை ஓய்ந்து ஒட முடியாது, எப்படியாயினும் மக்களைச் செந்நெறியில் நிற்கச் செய்து அவர்களை வணங்கி வாழ வேண்டும் (பா.87). மனிதர்கள் தம் வாயில் சேர்ந்தநீரை உள்ளே வைத்திருப்பதும் வெளியே உமிழ்வதும் அவர்தம் மனநிலையைப் பொறுத்தது. மன்னன் தன்னை வழிபடும் மக்களைச் செல்வராக ஆக்குவதும் அழிப்பதும் அது போன்றது. இப்பாடல் அரசனுக்கு முதன்மை தந்து மக்களின் உழைப்பை முயற்சியை, அலட்சியப்படுத்துவதாக உள்ளது. சிற்பி தான் வடித்த சிலையைக் கோயிலில் வைத்த பிறகு வழிபடுவது மாதிரி என்ற கருத்து மக்களுக்கு முதன்மை தருபவராக மன்னன் விளங்கவேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது.

எந்நெறியானும் இறைவன் தன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் – அந்நெறி
மான்சேர்ந்த நோக்கினாய் ஆங்கு அணங்கு ஆகும்
தான் செய்த பாவை தனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பழமொழி. அரசன் தனக்குப் போட்டியாகத் தலைமை அடையத் திட்டமிடுபவரை அருகில் வைத்துப் பெருமைப்படுத்தக் கூடாது. அது பாம்போடு உடன் உறைவது போன்றது (பா.349). இவ்வாறு அரசனின் செங்கோன்மை, மக்கள் மீது அன்பு காட்டுதல், வரி வசூலித்தல், நீதி செலுத்துதல், போராற்றல், போட்டியாளரைச் சமாளித்தல் ஆகியவற்றைப் பழமொழி நானூறு அருமையாகப் பதிவு செய்துள்ளது. இது அரையரின் பட்டறிவாக இருக்கலாம்.

கொடுங்கோல் அரசர் குறைபாடுகள்

கூற்றம் ஒருவர் உயிரைக் கவர்ந்து கொள்ளும்போது அவர் கருத்தைக் கேட்பதில்லை. அது போல் கொடுங்கோல் அரசன் மக்களை வருத்தும் போது அவர் குறையை ஆராய்ந்து தீர்ப்பதில்லை (பா.110). இவ்வாறு கொடுங்கோல் அரசனைக் கூற்றுவனுக்கு ஒப்பிடுகிறார் பழமொழி ஆசிரியர். "மருந்து இன்று மன்னவன் சீறின்" என்கிறது மருதக்கலி (ப.24).

அரசன் மக்களுக்கு அல்லவைசெய்து மிகுதியாக வரிபெறுவது மயிலின் உணவாக கொண்டையை அறுத்து அதற்கே இடுவது போன்றது (பா329) என்னும் பழமொழி, மக்களின் நலத்திற்காகப் பெறப்படும் வரிப்பொருள் மக்களைத் துன்புறுத்துவதாக அமையக் கூடாது என்கிறது.

அரசரும் குடிகளும்

மக்கள் அரசன் ஆணையை எவ்வித மறுப்பும் கூறாமல் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை 3 பாடல்களில் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது பழமொழி (பா. 31,181,331). அரசன் ஆணை பெற்றோர் வேலின் வாயிலும் வீழ்வார் என்று விவரிப்பது உயிரையும் தருவர் என்பதைப் புலப்படுத்துகிறது. ஒரு மரத்தின் கீழ் மற்றொரு மரத்தை வளர்க்க இயலாது. அது போல மன்னவன் ஆணைக்கு மாற்று இல்லை என்கிறது மற்றொரு பாடல் (பா.311).

மன்னரால் மதித்து உணரப்பட்டாரை
மக்களும் மதித்து ஏற்பார் (397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் மீது உண்மையான பற்றுக் கொண்டோர் அரசனைப் பற்றிய பொய்யான பழிப்புரைகளை நம்பக்கூடாது. அரசனைக் கொல்வது என்பது பனைமரம் தம்மேல் விழும் வகையில் அதனை வெட்டுவதற்கு ஒப்பானது. அரசனைச் சார்ந்து வாழ்வோர் தாம் துன்புற்று வாழ்ந்தாலும் பிறரை அணுகித் தமக்கு இன்னது வேண்டும் என்று கேட்கக் கூடாது(பா.178). அரசனை வழிபடுவோர் அவன் ஏவல் வினை செய்பவரையும் உதவிக்கு அணுகுதல் கூடாது (பா.20). மேற்குறிப்பிட்டவை அரசனுக்கு இழிவு சேர்ப்பன.

அரசரிடம் பழகும்போது மிகவும் அணுகிவிடாமலும் மிகவும் விலகிவிடாமலும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் (பா.225). மன்னரைச் சார்ந்தார் கவனமாக இருக்க வேண்டும். அரசனைச் சினப்பது கூடாது (பா.341). அவன் பொறுமையைச் சோதிக்கக் கூடாது (பா.305).

அரசன் தகாதன செய்தாலும் பதிலுக்கு வேண்டாதன செய்தல் கூடாது. அது தூங்கும் புலியை எழுப்புவது போன்றது (பா33). அரசன் விரும்பும் பொருளைத் தாமும் விரும்புவது புலியை அருகில் அழைப்பது போன்றது (பா.309). அரசன் சிறப்பிழந்தாலும் அவரை இகழக்கூடாது. அவ்வாறு செய்வது இளையது என்று பாம்பை இகழ்வது போன்றது (பா.383). அரசன் செங்கோலன் அல்லனேல் குடிகள் செய்வதற்கு ஒன்றுமில்லை. இதனை விளக்க யானை கலத்தை உருட்டிவிட்டால் அதனை மூடும் கலன் இல்லை என்கிறது பழமொழி. இவ்வாறு அரசனை புலி, பாம்பு, யானை, கூற்றுவன் ஆகியவற்றோடு ஒப்பிட்டு அறிவுரை கூறுகிறது பழமொழி.

அரசனைச் சார்ந்தோர் பயன் பெறாது போவதில்லை. அரசர் மனம் மகிழுமாறு நடந்துகொண்டால் கடலில் உண்டாகாதன கூடக் கிடைக்கும். அரசனோடு தொடர்புடையவர், யாருக்கும் மனத்தாலும் அஞ்ச வேண்டியதில்லை. அனைவராலும் மதிக்கவும் பெறுவர்.

இவ்வாறு எந்நிலையிலும் அரச முதன்மையைப் போற்றி, பரம்பரை ஆட்சிக்குப் பல்லாண்டு பாடி, முடியாட்சித் தத்துவத்தை முழுமையாக ஆதரித்துள்ளது பழமொழி. எதிர்ப்புணர்வை முற்றாக மழுங்கடிப்பதாகப் பதிவுகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசரும் அமைச்சரும்

அரசன் அதிகார முதன்மை உடையவனாக இருப்பினும் அமைச்சன் சொல் கேட்டு ஆட்சி நடத்துபவனாக இருக்க வேண்டும் என்றும் சிற்றினம் சேராதவனாக இருக்கவேண்டும் என்றும் எடுத்துரைக்கும் வள்ளுவம். அரசனுக்கு மூத்தோர் அறிவுரை முன் இன்னாதது பின் இன்பம் தருவது (பா.35). கல்வி வல்லாரையும் கட்டுரை வல்லாரையும் அரசர் தன் அவைக்களத்தில் சூழ்வாராக வைத்துக்கொள்ளவேண்டும். அரசவை கொண்டு அரசன் இயல்பை அறிந்து கொள்ளலாம் (பா.264). குற்றம் தீர்ந்த அரசனின் செங்கோல் சிறப்பிற்கு அருகில் உள்ள அமைச்சர் காரணம் (பா.226). நல்லது தீயது என்பவனவற்றைப் பகுத்தறியும் பெரியோரைப்பெற்ற அரசர்நிலை, காளைகள் அன்பு பூண்டு ஒழுகுதலை ஒத்தது (பா.104). சான்றோர் அறிவுரை பெறாத அரசன் நரம்பு அறுந்த யாழ் ஆவான் (பா.228). அரசன் தீங்கு செய்யின் அவை அமைச்சரையே சாரும். தாய் தன் பிள்ளைகளை மருட்டுவது போன்று அமைச்சர் அரசனை நெறிப்படுத்த வேண்டும் (பா.323).

அரசன் தீயதைச் செய்தாலும் கற்றறிந்தார் காய்வன செய்யார் (பா.234) என்று (புலியிடம் இருந்து மான் தப்பமுடியாது) எச்சரிக்கிறது. செங்கோல் அரசன் அமைச்சர் சொல்கேட்டு ஆட்சி நடத்த வேண்டும் என்றும், அமைச்சர் சூழல் அறிந்து அழுத்தமாக அறிவுறுத்த வேண்டும் என்றும் திரும்பத் திரும்ப வற்புறுத்தும் பழமொழி, அரசன் அல்லன செயினும் காய்வன செய்யக் கூடாது என்று அமைச்சர் அடங்கிப்போக ஆற்றுப்படுத்துகிறது.

அரசரும் வீரரும்

அரசன் நோக்கினால் உடனே போர் ஏற்போம் என்பர் வீரர் (பா.231). அரசன் ஆணையிட்டால் வேலின் வாயிலும் விழுவர் (பா.31).மனத்திண்மை உடையவர் (296) உடம்பைக் கொடுப்பவர்(239) தம் வீரத்தைப் புகழ்ந்து சொல்லாதவர் (31) பகைநிலை அறிந்து போரிடுபவர் (318,319) புறமுதுகிட்டோடுபவர் மீது போர் தொடுக்காதவர்(320, 382, 317) வினை செய்யாத வீரர் அரசனைக் குறை கூறுவது தவறு (155).

அரசனின் செங்கோன்மை, மக்கள் அன்பு, நடுநிலைதவறாமை, வரிவசூலித்தல், போராற்றல் முதலியவற்றைப் பழமைத்தடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியுரைக்கும் பழமொழி, அவன் வலிமையை புலி, யானை, பாம்பு ஆகியவற்றோடு ஒப்பிட்டு மக்களின் பணிவையும், சகிப்புத்தன்மையையும் வளர்க்க முற்பட்டுள்ளது. அச்ச உணர்வைத் தூண்டி அடிமைநிலையில் இருப்பதை ஆதரிக்கிறது. அரசன் தவறு செய்தாலும் எதிர்ப்பது கூடாது என்கிறது. கட்டுப்படாதவர் காயப்படுவர் என்று அச்சுறுத்தியும் வணங்கி வாழ்பவர் செல்வமும் மதிப்பும் பயனும் பெறுவர் என்று ஆசை காட்டியும் அரச முதன்மையை வலியுறுத்துகிறது.

அரசர், அமைச்சர் சொற்கேட்டு நல்லாட்சி புரிய வேண்டும். இருப்பினும் அவர் தீயன செய்தாலும் அமைச்சர் காய்வன செய்யக் கூடாது. வீரர், அரசர் செய் என்றால் செத்து மடிபவர்களாக இருக்க வேண்டும் என்கிறது.

நான்மணிக்கடிகையில் அரசியல் அறம்

11 பாடல்களில் அரசரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அரசர்கள் ஆட்சி முறையையும் வெற்றிக்குரிய வழிகளையும் அறிந்திருப்பர் (பா.88). யார் பக்கமும் சார்பில்லாமல் நீதி வழங்குவதும் உள்நோக்கம் எதுவுமின்றி ஆட்சி புரிவதும் அரசர்க்குரிய சிறந்த ஆளுமைப் பண்புகளாகும் (பா.93). அரசன் நல்லவனாக இருந்தால் அது நாட்டிற்கு ஆக்கமாகும் (பா.18). மக்கள் நலம் நாடுகின்றவர்களாக அரசர் விளங்க வேண்டும். மண்ணில் உள்ள மக்கள் கலங்கினால் அரசனின் ஆட்சியும் கலங்கும் (பா.19). நல்ல குடிமக்கள் இல்லறம் செய்யா இடத்தில் அரசன் இருப்பதில்லை(பா.46). ஆளும் நாட்டு வளங்களான அரசர் பெருமை பெறுவர்(பா.83). இவ்வாறு ஆட்சித்திறம், நீதியுணர்வு, நற்பண்புகள், மக்களைப் போற்றல், நாட்டுவளம் முதலிய செய்திகளை மரபுத்தடமொற்றிப் பேசும் கடிகை புதிய புதிய நாட்டை வெல்லுதல் மன்னர்க்குச் சிறப்பு (பா.84) என்றும் அரசர் போரில் நேரடியாகப் பங்கு கொண்டால் வீரர்களிடம் மறக்களிப்புத் தோன்றும் (பா.34) என்றும் அரசரின் வீரச் சிறப்பை விதந்து பேசுகிறது.

வீறுசால் மன்னர் விழையும் குடி உள(51) என்றும் சர்வாதிகாரம் செய்யும் அரசனுக்கு அவன்படையே துன்பத்தைத்தரும்(பா.49) என்றும் புதிய கருத்தைக் கூறியுள்ளது கடிகை (வேந்தனையும் தன் அடைந்த சேனைசுடும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகடுகத்தில் அரசியல் அறம்

திருக்குறள் படை, குடி, செல்வம், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறும் அரசனுக்குரிய அங்கங்கள் என்று குறிப்பிட்டுள்ளது. திரிகடுகம் பத்தினித் தன்மை உடைய படை, அஞ்சா மதில் அரண், விழுநிதி ஆகிய மூன்றும் அரசனுக்குரிய உறுப்புகள் (பா.100) என்கிறது. மூன்று பாடல்களில் அரசன் மழையோடு தொடர்புபடுத்திச் சொல்லப்பட்டுள்ளான். முறையாக ஆட்சி புரியும் அரசன் நாட்டில் மழையும் விளைச்சலும் இருக்கும் (பா.545) என்று குறள் கூறுவதை மிகைப்படுத்தி கொடிது நீக்கி நல்லது செய்யும் அரசன் பெய் என்று சொல்ல மழைபெய்யும் (பா.96) என்கிறது இந்நூல். மன்னன் நீதி தவறினால் மழை பெய்யாது என்று குறள் கூறுவதை (பா.559) இந்நூலும் விவரிக்கிறது. இயற்கை ஆற்றலையே ஏவல் கொள்வான் அரசன் என்பது பொருள். புறநானூற்றுப் பாடலிலும் இத்தகைய கருத்து உண்டு. அரச உறுப்புகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பதும் அரசனை மழையோடு தொடர்புபடுத்திப் பேசுவதும் பழமொழியில் இல்லாதவை.

சாலக் குடியோம்ப வல்லவன் அரசன் (பா.13). அவன் குடிமக்களையும் அமைச்சரையும் படைவீரரையும் தழுவித் தன் கைக்குள் வைத்திருக்க வேண்டும் (பா.33) எனவரும் குறிப்புகள் அரசனின் கடமைகளைச் சுட்டுவனவாக உள்ளன.

அரசன் கோல்கோடி வாழக் கூடாது. அது சால்போடு பட்டதல்ல (பா.66). உலகோர் எனப்படும் மூவரில் நீதிதவறா அரசனும் ஒருவன் ஆவான்(34). இவ்வரிசையில் பார்ப்பான் முதலில் வைக்கப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கது.

அமைச்சரைப் பொருள் கொடுத்துப் போற்றுதல், உறவினரை அணைத்துக் கொள்ளுதல், நல்லோரை இன்சொற்களால் இணைத்துக் கொள்ளுதல் ஆகியன இளவரசன் கடமைகள் (பா.58) என்று அடுத்த தலைமுறையின் கடமைகளைச் சுட்டுவது இந்நூலில் மட்டுமே இடம்பெற்றுள்ள கருத்தாகும்.

ஏலாதியில் அரசியல் அறம்

ஏலாதி நூலில் அறநோக்கின் அடிப்படையில் அரசர் குறித்த கருத்துகள் விவரிக்கப்பட்டுள்ளன. (15 பாடல்கள் : 35,42 முதல் 48,52–54, 56, 57, 59,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60). பசிப்பிணி தீர்ப்பவர்கள் மறுபிறவியில் அரசன் ஆவார்கள் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றது. கள், புலால் உண்ணாமல், சூதுவிரும்பாமல், கொலை புரியாமல், பொய்யாமல், வாது புரியாமல், செருக்காமல், யாரையும் வையாமல், பிறர் மனையாளை விரும்பாமல், இல்லற நெறி பிறழாமல், வழிபாட்டுநெறி பிறழாமல், ஒழுக்கம் குன்றாமல், வறியவரை நகையாடாமல், பெரியோர் சொல் போற்றி, வஞ்சகர் சொல் கேளாமல், கொடுஞ்சொற்கூறாமல், பணிவுடையவராய், நல்வழி நடப்பவராய், நல்லோர் உரை கேட்பவராய், நுண்ணிய நூல் கற்பவராய், வறியர், தென்புலத்தார், ஏழைகள், சிறுவர், சான்றோர், மாதவர், எளியோர், இல்இழந்தார், கண்இழந்தார், பொருள் இழந்தார், நெல் இழந்தார், நிரை இழந்தார், கடன்பட்டார், காப்பில்லார், கால்முடம்பட்டார், மூத்தார், பார்ப்பார், பசித்தார், துறவி, பாலர், பிறரால் வெறுக்கப்படுவர், காலில் தளையிடப்பட்டவர், தண்டிக்கப்பட்டவர், உயர்நிலையிலிருந்து தாழ்ந்தவர், பெண்டிர், கருஞ்சிரங்கு, வெண் தொழுநோய், கல் அடைப்பு நோய், வாதநோய், கழலைநோய், பெரும் வயிற்றுத் தீயார் ஆகியோர்க்கு உணவளிப்பவர்கள் அரசர் ஆவார்கள் என்றும், ஐயம் (ஏற்போர்க்கிடுவது), பிச்சை (துறவோர்க்கிடுவது), தவசிகளுக்கு ஊன் ஆடை தருபவர் வையகமும் வானகமும் ஆள்வார் என்றும் விவரிக்கிறது இந்நூல். பண்புச்சிறப்புகள் அனைத்தும் உடையவராய்ப் பகுத்துண்பவர்கள் அரசர் ஆவார் என்று இப்பாடற் கருத்துகளைத் தொகுத்துக் கூறலாம். ஈகையை வலியுறுத்தும் நோக்கில் கூறப்பட்டவை. அரசராய் இருப்பவர்கள் சமுதாயத்தின் அனைத்துநிலை மக்களையும் புரப்பவர்களாக இருக்க வேண்டும் என்று நேரிடையாக அறங்கூறாமல் அனைத்துநிலை மக்களையும் புரப்பவர்களாக இருப்பவர் அரசர் ஆவார் என்று மாற்றிக் கூறுகிறது ஏலாதி.

இன்ப நுகர்ச்சி, தேடிய பொருளைப் பாதுகாவாமல் அழித்தல், வேட்டையாடுதல், கள்ளுண்ணல், சூதாடல், வன்சொற்கூறல், மிக்க கோபத்தால் தண்டித்தல் இவை ஏழும் உறாத அரசர் பகையரசரின் சினத்திற்கு ஆளாக மாட்டார் என்று ஒரு பாடல் (பா.18) குறிப்பிடுகிறது.

ஆசாரக் கோவையில் அரசியல் அறம்

ஆசாரக் கோவையில் அரசன் தொடர்பான அறநெறிகள் 13 பாடல்களில் (16, 17, 66, 67, 69, 71, 72, 73, 78, 81, 84, 85, 100) கூறப்பட்டுள்ளன. மன்னரைச் சேர்ந்தொழுகல் குறித்துக் கூறும் கருத்துக்கள் சில ஆசாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையில் விரிக்கப்பட்டுள்ளன. மிகுந்த பணிவுடன் அரசரிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது ஒரு பாடல்.

அரண்மனையிலும் மன்னர்கள் வெளியில் உலா வரும்போதும் பெரியோர்களைக் கண்டால் வணங்கக் கூடாது என்கிறது மற்றொரு பா (பா. 72). செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் கூடாது என்று குறள் குறிப்பிடுவதை நகையொடு என்ற பாடலில் குறிப்பிடுகிறது ஆசாரக் கோவை (73).

இளையர் என்று இகழாமற் அரசனோடு ஒழுக வேண்டும் என்று குறள் கூறுவதை விரித்து பாம்பு, அரசு, நெருப்பு, சிங்கம் என்பவை இனியவை, எளியவை, பழக்கமுடையவை என்று நெருங்கிப் பழகக்கூடாது என்கிறது ஒரு பாடல் (பா.84). அரசர் கூத்துப்பார்க்கும் போதும் மனைவியோடு இருக்கும் போதும் புகக் கூடாது என்கிறது ஒரு பாடல் (81). அரசனிடம் சொல்லத்தகாதவை இவை எனப் பட்டியலிடுகின்றன சில பாடல்கள் (67,71).அரசனோடு நடந்து கொள்ளும் முறையை விவரிக்கிறது ஒரு பாடல் (69)

அரசர்முன் செய்யத் தகாதவற்றைச் சில பாடல்கள் விவரிக்கின்றன (பா.70, 73, 78, 84, 85). இவற்றுள் 69,73,85 ஆகிய பாடற் கருத்துகள் மிகமுக்கியமானவை. அரசன் செய்வனவற்றை வெறுக்க மாட்டார். அவனொடு கலகம் செய்யார். அரசன் காக்கையை நிறம் வெள்ளை என்றால் மறுக்கமாட்டார். (பா.69) செல்வச் செருக்கு, கல்வி மேன்மை, விளக்கம் சீர்குணம் குறித்துத் தற்புகழ்ச்சி தோன்ற மீண்டும் மீண்டும் உரைக்கக் கூடாது (71) (2892) அறம் புரிதல், திருமணம், ஆள்வினை, வீடு இவை மன்னரை விட மேம்படச் செய்யக்கூடாது. அவனைவிட நன்கு அலங்கரித்துக் கொள்ளக் கூடாது (66).

தொகுத்துச் சொன்னால் அரசனுக்கு நிகர் அரசன்தான். அவனுக்கு இயைாக எண்ணவோ, சொல்லவோ, செயற்படவோ கூடாது என அரசன் முதன்மையைத்தான் இப்பாடல்கள் வற்புறுத்துகின்றன எனலாம்.

சிறுபஞ்சமூலத்தில் அரசியல் அறம்

10 பாடல்கள் அரசனைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. (பா.1, 5, 7, 44, 45, 47, 56, 69, 71, 78) கற்புடைய நாட்டுக்கு அரசன் அமிர்து (2).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிதழீஇக் கோலோச்சும் மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு

என்ற குறள் வழி குடியுயர அரசன் உயர்வான் என்கிறது ஒரு பாடல் (44). குடிகளை வருத்தாமல் ஆட்சி செய்யும் அரசன் ஆட்சி நல்லது என்றும் உலகத்தார் புகழ் கூறுவது வனப்பு (பா.7) என்றும் 2 – பாடல்கள் உள்ளன. அகழி, காடு, சேற்று நிலம், மலை, மக்கள் ஐந்தும் அரணாக உடையவனை வேந்தனாக நாட்டல் விதி (47) என்கிறது ஒரு பாடல். வீரர்கள் பகைவர்களோடு சேர்ந்து கொள்ளாமல் அரசன் பகைமீது ஏவும் வேல்வழி நிற்றலும் குடிகள் அரசன் செங்கோல் முறைப்படி வாழ்வதும் நன்மையாகும்(பா.13) என்றும், தமக்கு நிகரில்லாரோடு நட்புக் கொள்ளமாட்டார்கள் அரசர்கள் (பா.78) என்றும் இந்நூல் கூறுகிறது.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

என்ற குறட் கருத்தின் சாயலோடு

தன்னிலையும் தாழாத் தொழில் நிலையும் துப்பெதிர்ந்தார்
இன்னிலையும் ஈடில் இயல்நிலையும்– துன்னி
அளந்தறிந்து செய்வான் அரசன் (56)

என்கிறது ஒருபாடல்

ஏலாதிப் பாடல்களைப் போல சிறைப்பட்டோர், இறந்தவர் பொருட்டு நோற்பவர், பட்டினி கிடப்பார், ஒரு நாள் இடைவெளிவிட்டு உண்பார், பிறை பார்த்து உண்பவர் இவர்களுக்கு ஈபவரும் (69) வலியழிந்தார், மூத்தார் வடக்கிருந்தார், நோயால் நலிந்தோர் இவர்களுக்கு ஒரு கவளம் பொடுப்பவரும் மன்னர் ஆவார் (71) என இரண்டு பாடல்கள் குறிப்பிடுகின்றன.

இனியவை நாற்பது கூறும் அரசியல் அறம்

(5, 8, 15, 32, 33, 35) இந்நூலில் 6 பாடல்களில் அரசன் குறித்த செய்திகள் உள்ளன. குடிகள் மாட்டு அன்பு, போர்த்திறம், ஒற்றொற்றித் தந்த பொருளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு ஒற்றினால் ஒற்றிக் கொள்ளும் திறன், நடுவுநிலைமை, முறை செய்தல் ஆகியன அரசர் குணம் எனப் போற்றுகின்றன இந்நூற்பாடல்கள். இந்நூல் யானை முழக்கம் கேட்பதும் யானைப் போர் காண்பதும் இனிது என்பதால் இந்நூலாசிரியர் வாழ்ந்த காலத்தில் யானைப்போர் சிறப்புற்றிருந்தது எனக் கருதலாம்.

பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பார்த்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தர்க் கினிது (பா.33)

என்ற கருத்து குறிப்பிடத் தக்கது.

இன்னா நாற்பது கூறும் அரசியல் அறம்

இந்நூலில் 2, 3, 5, 13, 22, 38 ஆகிய 6 பாடல்களில் அரசர் குறித்த செய்திகள் உள்ளன. அரசன் செங்கோலனாக, குடிமக்களைக் காப்பவனாக, நீதி தவறாமல் ஆட்சி புரிபவனாக, யானை ஊர்பவனாக, யானைப் படையுடையவனாக, வீர மிக்கவனாக விளங்க வேண்டும் என்பன இந்நூல் கூறும் கருத்துகளாகும்.

முதுமொழிக் காஞ்சி கூறும் அரசியல் அறம்

செங்கோல் முறையில்லாத அரசர் நாட்டிலிருந்து அவர் கொடுங்கோன்மையை அறிஞர் பழியார்(3.6) முறைமையில்லாத அரசன் நாடு வறுமையுறும் (9.1) குடிமக்கள் இன்பம் விரும்பும் அரசன் முறையேடு அரசாட்சி செய்தலைத் தவிரான் (ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான் 10.9); அரசன் செங்கோல் முறைப்படி ஆட்சி செய்யவேண்டும் என்பன முதுமொழிக் காஞ்சி கூறும் கருத்துகளாகும்.

நாலடியார், கார்நாற்பது, திணைமொழி ஐம்பது, இன்னிலை, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது ஆகிய நூல்களில் அரசர் தொடர்பான கருத்துகள் மேலோட்டமான குறிப்புகளாகவே உள்ளன.

முடிவுரை

சங்கப் பாடல்கள் அரசனைப் பற்றிப் படுகிறபோது வீரம், போராற்றல், செங்கோன்மை, பொருளீட்டல், ஈகை, குடிகாத்தல், நடுநிலை பிறழாமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பட வாழ்தல் முதலிய சிறப்புகளை உடையவனாகச் சித்திரித்துள்ளன. சங்கப் பாடல்கள் கூறும் அரச அறங்களைத் திருக்குறள் செம்மையாகத் தொகுத்தும் வகுத்தும் விளக்கியுள்ளது. வள்ளுவர் காட்டும் இலட்சியம் மிக்க அறத்தின் உருவான அரசனைப் பின்வரும் அறநூல்களில் முழுமையாகக் காண இயலவில்லை.

அரச முதன்மையும் அரச அதிகாரமுமே அறநூல்களில் குறிப்பாகப் பழமொழியல் மிகுதியும் வலியுறுத்தப்படுகிறது. அரசன் தகாத செய்தாலும் பரம்பரை ஆட்சி ஏற்கப்படுகிறது. போட்டியாளரை அருகில் வைத்துப் பெருமைப்படுத்தக் கூடாது என அறிவுரை கூறியிருப்பது கருதக் தக்கது.

சர்வாதிகாரம் செய்யும் அரசனுக்கு அவன் படையே துன்பத்தைத் தரும் என்று எச்சரிக்கிறது நான்மணிக்கடிகை. இயற்கையையே ஏவல் கொள்வான் நல்லரசன் என்கிறது திரிகடுகம். அரசகுடும்பத்தின் அடுத்த தலைமுறையின் கடமைகளை எடுத்துரைக்கிறது இந்நூல். ஏலாதி அனைத்து நிலை மக்களையும் புரப்போர் அரசர் ஆவார் என்று மாற்றிக் கூறுகிறது.

கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு இணையாக அரச அறம் கூறும் நூல் வேறு எதுவும் இல்லை. குறளுக்கு அடுத்த நிலையில் பழமொழி நூலில் அரசனைப் பற்றிய கருத்துகள் அனுபவ நிலையில் விவரிக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால் அறநூல்களில் பரம்பரை ஆட்சியும் அரச முதன்மையும் அரச அதிகாரமும் ஏற்கப்பட்டு மக்கள் எந்நிலையிலும் அடிபணிந்து வாழவேண்டும் என்பது அறக் கருத்தாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மணிக்கடிகை

பழ. முத்துவீரப்பன்

அமைப்பழகும் அறக் கருத்துக்களும்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அறநூல்கள் பதினொன்று. அவற்றுள் வைணவ சமயத்தைச் சார்ந்த விளம்பிநாகனாரால் எழுதப்பட்ட இனிய எளிய அறநூல் நான்மணிக்கடிகை. மார்ரே பதிப்பில் இரண்டு கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் உட்பட 103 பாடல்கள் நான்மணிக்கடிகையில் உள்ளன. கழகப் பதிப்பின் வண்ணம் 106– பாடல்கள் உள்ளன. கழகப் பதிப்பில் வைததனால் (103) ஒருவன் (104) இன்சொலால் (106) எனத்தொடங்கும் பாடல்கள் கூடுதலாக உள்ளன. இந்நூல் கவிதை நயம்பட அறக்கருத்துக்களை எளிமைப்படுத்திக் கூறியுள்ளது. பாடல்தோறும் இரத்தினம் போன்ற நான்கு கருத்துகள் உள்ளதால் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது என்பர். சிற்றிலக்கியக் கவிஞர்கள் போல சொல்லழகு அமையப் பாடியவர் இவர். வெண்பா யாப்பில் இவ்வளவு ஓட்டமாகப் பாடமுடியும் என்று மெய்ப்பிக்கும் நூல். அடிதோறும் முதற்சீர் அல்லது இரண்டாம் சீர் அல்லது மூன்றாம் சீரில் ஒரே சொல் திரும்பத் திரும்ப வரும்படி பாடப்பட்ட சிறப்பு இந்நூலுக்கு மட்டுமே உரியது. பல்வகை அறங்களை இந்நூல் கூறியுள்ளது. கல்வி, குலப்பிறப்பு, மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல், பெண்கள் நிலை முதலியவை குறித்த நல்லறங்கள் இந்நூலில் பேசப்பட்டுள்ளன.

ஒரு முறை படித்தவுடனே உள்ளத்தில் பதியும் கவிதை நயம் அமைந்த தொடர்கள் பல இந்நூற்பாடல்களில் உள்ளன. அத்தகைய தொடர்களிற் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு:

'எல்லாம் பொருளில் பிறந்துவிடும்'
'திரு ஒக்கும் தீதுஇல் ஒழுக்கம்'
'தனக்கு அணி தான் செல் உலகத்து அறம்'
'வெல்வது வேண்டின் வெகுளி விடல்'
'மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்'
'புகழ் செய்யும் பொய்யா விளக்கம்'
'இன்மையின் இன்னாதது இல்லை'
'ஈன்றாளின் அன்ன கடவுளும் இல்'
'ஈத்துண்பான் என்பான் இசைநடுவான்'
'வைதாரின் நல்லார் பொறுப்பர்'
'மகன் உரைக்கும் தந்தை நலத்தை'
'நா அன்றோ நட்பு அறுக்கும்'
'யார் மட்டும் கொள்ளாமை வேண்டும் பகை'
'ஆசாரம் என்பது கல்வி'

நான்மணிக்கடிகை ஆசிரியர் வைணவரே என்பதற்குக் கூடுதல் சான்றுகள் காட்டுவதும் அந்நூல் கூறும் நல்லறங்களைத் தொகுத்துக் காண்பதும் அமைப்பழகை எடுத்துக்காட்டுவதும் ஒரு சில பாடல்களில் நான்கு கருத்துக்களுக்குப் பதில் ஓரிரு கருத்துகள் இடம் பெற்றிருப்பதை விவரிப்பதும் இவ் வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

நூலாசிரியர் வைணவரே

நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் இரண்டும் திருமால் பற்றியனவாக உள்ளன. மதி மாயவன் முகத்தை ஒக்கும்; ஞாயிறு அவன் கைச்சக்கரத்தை ஒக்கும்; தாமரைமலர் அவன் கண்களை ஒக்கும்; காயா மலர் அவன் மேனி நிறமொக்கும்; என முதற்பாடல் அவன் உருவத் தோற்றத்தை விவரிக்கிறது.

உலகத்தை வயிற்றில் வைத்தான், திருவடிகளால் மூன்று முறை தாவி உலகை அளந்தான், இந்திரனின் கல் மழையால் பசுக்கள் நடுங்கியபோது கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தான். பாணாசுரனின் அரிய நெருப்பு மதிலை அழித்தான் எனத் திருமாலின் ஆற்றலை இரண்டாம் பாடல் எடுத்துரைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*எள்ளற்க என்றும் எளியாரென்று*" என நூல் தொடங்குகிறது. திருமால் வாமன அவதாரம் எடுத்தபோது மிகவும் குள்ளனாக எல்லாரும் கண்டு எள்ளும்படி தோன்றினான். ஆனால் அவன் செயல் அனைவரும் உள்ளும்படி அமைந்தது. "*சிறியன் என்று இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய்*" என்பது பெரியாழ்வார் வாக்கு.

இரண்டாம் அடி "*கொள்ளற்க கொள்ளார் கை மேற்பட*" என்கிறது. தகாதவர் கொடுக்க வாங்காதே என்பது பொருள். இறைவன் "*கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்*" என்று அவன் புகழ் பாடும் நம்மாழ்வார், ஏனையோரிடம் பொருள் பெறுவது குறித்து "*என்னாவது எத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள் மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்*" என்று ஆற்றுப்படுத்தியுள்ளார். எனவே, முதற்பாடலிலேயே வைணவ அடியார் கூறும் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

23 ஆம் பாடலில் "*குழவி அலைப்பினும் அன்னே என்றோடும்*" என்ற அடி (தாய் குழந்தையை அடித்தாலும் குழந்தை அம்மா என்றே அலறும்) இடம் பெற்றுள்ளது. இக்கருத்து "*அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவி போன்றிருந்தேனே*" என்ற குலசேகராழ்வார் வாக்கை நினைவுபடுத்துவதாக உள்ளது.

26 ஆம் பாடலில் "*கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்*" என்ற அடி உள்ளது. குறள் வழி அமைந்த இத்தொடர் "*தார் வேந்தன் கோல்நோக்கி வாழும் குடிபோன்றிருந்தேனே*" என்ற குலசேகராழ்வார் பாடல் அடியை நினைவுபடுத்துவதாக உள்ளது.

50 ஆம் பாடலில் "*ஒருவனை உள்ளற் பொருளது உறுதிச் சொல்; உள் அறிந்து சேர்தற் பொருளது அறநெறி*" என்ற அடிகள் உள்ளன. ஒருவன் ஏற்றுக் கொள்ளுதற்குரியது பெரியோர் கூறும் உறுதிச்சொல்; உண்மையறிந்து தெளிந்து கடைப்பிடித்தற்குரியது அறவழி என்பது பொருள்.

> "*அறிந்தறிந்து தேறித்தேறி யான் எனதாவியுள்ளே*
> *நிறைந்த ஞான மூர்த்தியாயை நின்மலமாக வைத்துப்*
> *பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேனே*"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி. இறைவனை நன்றாக அறிந்து மிக்க தெளிவுடையவனாகி, அறிவே உருவான இறைவனை அனுபவித்து, பிறப்பதும் இறப்பதும் ஆகிய இப்பிறவிக் கடலைத் தவிர்த்துக் கொள்ளப் பெற்றேன் என்பது பாடற்பொருள்.

48 ஆம் பாடலில் "*வரைந்தார்க்கு அரிய வகுத்து ஊண் இரந்தார்க்கொன்று இல் என்றல் யார்க்கும் அரிது*" என்ற அடிகள் உள்ளன. உணவைத் தமக்கென்றே அளவு செய்து வாழ்பவர்களுக்குப் பிறர்க்கும் பகுத்தளித்து உண்ணுதல் அரிதாகும். ஆனால் ஈர நெஞ்சம் உள்ளவர் எவர்க்கும் தம்பால் வந்து இரந்து கேட்டவர்க்கு ஒரு பொருள் இல்லை என்று மறுத்துக் கூறுதல் அரிதாகும் என்பது பொருள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் தலையாய அறம் என்றும் தென்புலத்தார் முதலிய ஐம்புலத்தாரையும் ஓம்ப வேண்டும் என்றும் திருக்குறள் கூறும். தம் வயிற்றையே ஓம்பி வாழ்பவர் குறித்து "*பண்டிப் பெரும்பதியை ஆக்கிப் பழிபாவம் கொண்டிங்கு வாழ்வார்*" என்கிறார் பூதத்தாழ்வார். வயிற்றைப் பெருநகரமாக்கி ஈட்டும் பொருள் எல்லாம் தன் வயிற்றுக்கே போதாது என்று கருதிச் சொத்துக்களைச் சேர்த்துக் குவிப்பது பழிபாவத்துக்குக் காரணமாகும் என்பது பொருள். "*பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்*" என்று குறள் கூறுவதும் இணைத்துக் கருதுவதற்குரியது.

92 ஆம் பாடலில் "*குலந்தீது கொள்கை அழிந்தக்கடை*" என்ற அடி உள்ளது. கொள்கை (குறிக்கோள்) இல்லாமல் வாழ்வது தீது என்பது பொருள். "*குறிக்கோள் இலாது கெட்டேன்*" என்பார் நாவரசரும். "*கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்றில்லாமையால்*" என்றும் கூறும் (பரகாலர்) "சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து, சுரிகுழல் *மடந்தையர் திறத்துக் காதலே மிகுந்து கண்டவா திரிதந்த தொண்டனேன்*" என்றும் விரித்துரைத்துள்ளார். "*தொண்டுக்கே கோலம் பூண்டேன்*" என்று குறிக்கோளை எடுத்தியம்பியுள்ளார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

கழகப் பதிப்பில் 104 ஆம் பாடலாக இடம்பெற்றுள்ள "*ஒருவன் அறிவாலும்*" எனத் தொடங்கும் பாடலில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணன் அடங்கக் குற்றம் உளானும் ஒருவன்
கணன் அடங்கக் கற்றானும் இல்

என்ற அடிகள் உள்ளன. குணமே இல்லாத குற்றமுடையவர் யாரும் இல்லை. அறியாமை சிறிதும் இல்லாமல் முழுதும் அறிந்தவரும் இல்லை என்பது பொருள்.

இராமாயணத்தில் வெற்றிச் செய்தியைப் பிராட்டியிடம் தெரிவிக்கும் அனுமன், திங்கள் பலவாகத் தொல்லை தந்த அரக்கிகளை ஒரு கை பார்க்க வேண்டும் என்று ஆவேசமாகப் பேசும்போது உலகில் குற்றம் செய்யாதவர் எவர் என்று தொடங்கி மறுமொழி கூறுகிறாள் சீதை.

106 ஆம் பாடலில் "*மென்சொலின் நாவினால் அருள்மனம் அம் மனத்தான் வீவிலா வீடாய் விடும்*" என்ற அடிகள் உள்ளன. நயமான சொற்களால் அருள் நெஞ்சம் உண்டாகும்; அவ்வருள் நெஞ்சத்தால் வீடுபேறு உண்டாகும் என்பது பொருள்.

"நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே"

என்ற மதுரகவியாழ்வார் வாக்கு இணைத்து எண்ணத்தக்கது.

திருமகள் சேர்ந்திருந்தால் செல்வம் உண்டாகும் என்பதை, *திருக்குழாம் ஒண் செய்யாள் பார்த்துறின் உண்டாகும்*" என்கிறது 64 ஆம் பாடல். 29, 38, 40 ஆம் பாடல்களிலும் திருமகள் குறித்த செய்திகள் உள்ளன. இக்கருத்துகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது நூலாசிரியர் வைணவர் என்ற கருத்து உறுதியாகிறது.

குலம் குடி குறித்த கருத்துகள்

குலப்பெருமை, குடிச்சிறப்பு குறித்த கருத்துகளில் உடன்பாடு உடையவர் கடிகையாசிரியர். மன்னர் விழையும் குடி உள (51) என்று குறிப்பிட்டுள்ளார். தகாதவர் நட்பு குலஞ் சிதைக்கும் (பா. 21), குலத்துயர்வும் குடிபொழுக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாமைக்கண் கெடும் (பா.80), கொள்கை அழிந்தவிடத்துக் குலம் தீது (பா.92), கீழ் மக்கள் நெல்லரிசிச் சோற்றால் இன்புறுவர் மேன்மக்கள் தங்கள் தகுதிக்கேற்ற மதிப்புச் செயல்களால் இன்புறுவர்(பா.65), கீழ்மக்கள் வாயில் இரப்புச் சொல் தோன்றும்(பா. 95), தளையிலிட்டுத் தண்டித்தாலும் கீழ்மக்கள் தம் இயல்பைக் காட்டிவிடுவர்(பா. 97) என்றும் அந்தணரின் நல்ல பிறப்பில்லை(பா.32), நன்றூக்கல் அந்தணர் உள்ளம்(பா.84), ஏலாதான் பார்ப்பான் (பா.52) என அந்தணர் குறித்தும், கொண்டாளும் நாட்டான் வீறெய்துவர் மன்னவர்(பா.83) என்று அரசர் குறித்தும், எருதுடையான் வேளாளன்(பா.82) என வேளாளர் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கட்பேறு குறித்த கருத்துகள்

பெற்றோர்கட்கு மக்களைப் போல ஒளியுள்ள பொருள்கள் வேறில்லை (பா.54), நன்மக்கட் பேறு பழியின்மையைத் தரும்(பா.61), தந்தையின் நன்மையைப் புதல்வன் தன் நல்லியல்பால் பிறர்க்கறிவிப்பான் (பா.68) என மக்கட்பேறு குறித்துக் கூறியுள்ளது கடிகை. ஆண் மக்கட்பேறே சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றம் தழுவுதல்

ஒருவனுக்குத் கேடு வரும்போது உதவி புரிபவர்கள் சுற்றத்தார்களே (பா.3), சுற்றத்தாரை நீக்கிவிடுதல் கேட்டினைப் பெருக்கும் (பா.20), சுற்றத்தாரை நீக்கி விடுதல் கேட்டுக்கு முயலுதல் (பா.84) எனச் சுற்றம் தழுவி வாழ வேண்டும் என்பதை மூன்று பாடல்களில் குறிப்பிட்டுள்ளது இந்நூல்.

கல்வி நலம் குறித்த கருத்துகள்

கல்வியறிவு பெறாத உடம்பு வெறும் புலாலுடம்பு, அது பிறவியெடுத்த தனக்கு பாழ்(பா.20), கல்வியறிவு கண்ணொளி உடையவராகச் செய்யும்(பா.22), கற்பதனால் அறியாமை குறையும் (பா.22), கல்வியைப் போல் துணையாவது பிறிதில்லை (பா.29), ஐயம் திரிபறக் கற்றால் மதி நன்று (பா.69), கல்வியறிவுடையவன் தளர்ச்சி அடைந்தால் எப்படியும் உய்வான், கல்லாத பேதை தளர்ச்சி அடைந்தால் முயற்சி கெட்டு அழிவான் (பா.72), ஒரு குடியில் கல்லாது மூத்தானைப் பாராட்டாமல் கற்றவனைப் பாராட்டும் உலகு, கற்றவரை விரும்புவர் கற்றவரே ஆவர் (பா.73), கல்வியறிவில்லாதவர்களுக்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ச் சொற்களே கூற்றமாகும் (பா.82), இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம் (பா.91), மக்களைக் கல்லாமல் வளர விடுதல் தீது(பா.92), கல்வியின் பயன் நல்லொழுக்கம் (பா.93), கற்றார் வாயிலிருந்து இரப்புச் சொற்கள் தோன்றா (பா.95), கல்வி கேள்விகள் நிறைந்த அவையில் கல்லாதான் பெருமை இல்லாதவன் (பா.96), தகைசான்ற புதல்வர்க்கு விளக்கம் கல்வி (பா.101) இவ்வாறு கல்வியின் சிறப்புகளையும் கற்றார் நலங்களையும் கல்லார் இழிவுகளையும் பலவாறு விரித்தரைத்துள்ளது கடிகை.

விலக்க வேண்டிய குணம் சினம்

சினம் கொள்வாரிடத்தில் எல்லா நன்மைகளும் தோன்றாமல் கெடும் (பா.8), வெகுளியை என்றும் விடல் வேண்டும் (பா.11), பிறரை வெல்ல வேண்டுமானால் வெகுளியை விட வேண்டும் (பா.15), கெடுப்பதானால் வெகுளியைக் கெடுக்க வேண்டும் (பா.79), செல்லா இடத்துச் சினத்தைச் சுருக்க வேண்டும் (பா.86), உறவினர் துணை இல்லாத இடத்தில் பிறரோடு சினத்தல் குற்றமாம் (பா.91) இவ்வாறு சினத்தை விடவேண்டும் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளது கடிகை.

பாடலும் பண்ணும் குறித்த கருத்துகள்

பண்ணமையாத யாழ் என்னும் இசைக்கருவியை விடப் பறை நன்று (பா.13), யாழின் நரம்பு அதிர்ந்தால் பாடல் அதிரும் (பா. 19), பண்ணறியாதார் முன் பாடல் கெடும் (பா. 44), வேதங்களுக்கு நிகரான பாட்டுகளும் உள (பா.51), பாட்டுகள் உள்ளும் சிறப்பான பாட்டும் உள்ளன (பா.62), நாடகம் பாடலால் மேன்மைச் சிறப்புப் பெறும் (பா.83), நட்புடையார் இடித்துரைக்கும் வன்சொல் நரம்புகளால் இசை கூட்டப்பட்ட யாழிசை ஒக்கும் (பா.98) இக்கருத்துரைகள் மூலம் பண்ணமைந்த பாடல்களில் ஈடுபாடுடையவர் நூலாசிரியர் என்பது புலனாகிறது.

பெண் அறங்கள்

நான்மணிக்கடிகை குடும்பம் என்ற அடிப்படையிலேயே பெண்ணையும் பேசுகிறது. *மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர் (18), மனைக்குப் பாழ் வாணுதல் இன்மை (20), மனைக்கு விளக்கம் மடவாள் (101),* என்று திரும்பத் திரும்ப பெண்ணை மனையோடு சேர்த்துப் பேசுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறன் அறியா ஆடவரினும் கற்பமைந்த பெண்டிர் மேலானவர் (பா.13), பெண்மை நலத்துக்கு அணி நாணம் (பா.11), கொடுங்குழை நல்லாரை நல்லவர் நாண்உவப்பர் (பா.53), நாணின் வரை நிற்பர் நற்பெண்டிர் (பா.87), ஒன்றுபட்டு வாழ்தல் பெண்டிர் தொழில் நலம் (பா.84), கணவனைப் போற்றி அவன் வழி நின்றால் பெண்டிர் இனியர் ஆவார் (பா.36), மனைவிபால் கண்ணோட்டம் பெருகினால் சுற்றத்தார் பெருகுவர் (90), கணவனை அல்லாத பிற தெய்வங்களைப் பெண்டிர் வணங்க மாட்டார்கள் (பா.88), நல்ல பெண் கற்பொழுக்கத்தில் வழுவ மாட்டாள், நற்பண்பு இல்லாதவள் எத்தனை காவல் செயினும் பிறரோடு மருவுவாள் (பா.89), இல்லத்தில் இருந்து கொண்டு மறைவாய்க் கற்புக் கெடுபவள் கணவனுக்குக் கூற்றச்சி ஆவாள் (பா.82), சுருங்கச் சொன்னால் கற்பு, நாணம், கணவனோடு ஒன்றுபட்டு வாழ்தல் ஆகிய பண்புகளையே இந்நூலும் ஏனைய அற நூல்களைப் போலப் பாராட்டிப் பேசியுள்ளது. நற்பண்பு இல்லாத பெண் எவ்வளவு காவல் செய்யினும் பிறரோடு மருவுவாள் என்று நாலடியார் (362) போலக் கடிகையும் வலியுறுத்துவது கருதத் தக்கது.

மனைத்தக்க மாண்புடையள், தற்காத்துத் தற்கொண்டான் பேணி முதலிய குறள் விவரிப்புகளில் பெண்ணின் அறிவாற்றல் குறிப்பாகப் புலப்படுகிறது. ஆனால், உருவோடு அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண் (பா.52) என்றும் பிணியன்னார் பின்நோக்காப் பெண்டிர் (பா.31) என்றும் பின்வருவதை முன் அறியும் அறிவாற்றல் உடையவள் பெண் என்றும் இந்நூல் வெளிப்படையாகச் சுட்டுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கணவன் ஒழுக்கத்தில் கலங்கினால் மனைவியும் கலங்குவாள் என்று கடிகை குறிப்பிடுகிறது. தற்கொண்டான் வளத்தக்காள் என்ற குறள் மொழிக்கு மாறாக வீட்டில் வருமானம் குறைந்தால் மனைவி வரம்பு கடந்து பேசுவாள் (பா.99) என்று குறிப்பிட்டிருப்பது யதார்த்தமாக உள்ளது.

அமைப்பழகு

யாப்பமைதி

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டில் முதற்பாடல் 5 அடியாலான பஃறொடை வெண்பா. 2ஆம் பாடல் இன்னிசை வெண்பா. நூலில் 41 பாடல்கள் நேரிசை வெண்பாவாகவும் 60 பாடல்கள் இன்னிசை வெண்பாவாகவும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிசை

1, 2, 5, 6, 8, 10, 11, 15, 18, 19, 21, 23, 25, 28, 30, 31, 33, 35, 36, 37, 41, 42, 44, 47, 49, 50, 52, 55, 56, 57, 63, 66, 68, 69, 71, 89, 92, 94, 95, 96, 101.

இன்னிசை

கடவுள் வாழ்த்து 2ஆவது பாடல், 3, 4, 7, 9, 12, 13, 14, 16, 17, 20, 22, 24, 26, 27, 29, 32, 34, 38, 39, 40, 43, 45, 46, 49, 51, 53, 54, 59, 60, 61, 62, 64, 65, 70, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 90, 91, 93, 97, 98, 99, 100.

பஃறொடை வெண்டா

முதற் கடவுள் வாழ்த்துப் பாடல், 27, 58 ஆம் பாடல்கள்.

பின்வரு நிலை அணி

நான்மணிக்கடிகை ஆசிரியர் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி பாடுவதில் மிகுதியும் அக்கறை காட்டியுள்ளார்.

முதற்சீரில் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

(எ.டு) *எள்ளற்க என்றும் எளியரென்று என்பெறினும்*
கொள்ளற்க கொள்ளார் கைமேற்பட - உள்கூடினும்
சீறற்க சிற்றில் பிறந்தாரை - கூறற்க
கூறல்ல வற்றை விரைந்து (பா. 1)

ஏனைய பாடல்கள்: 6, 13, 21, 24, 26, 28, 30, 31, 34, 36, 43, 44, 49, 55, 68, 69, 73, 78, 84, 86, 88, 98 (மொத்தம் 23 பாடல்கள்)

இரண்டாம் சீரில் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி பாடப்பட்டவையும் பல

(எடு) *கல்லில் பிறக்கும் கதிர்மணி, காதலி*
சொல்லில் பிறக்கும் உயர் மதம், மெல்லென்
அருளில் பிறக்கும் அறநெறி, எல்லாம்
பொருளில் பறந்து விடும் (பா.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பாடல்கள்: 3, 8, 9, 10,12, 17, 18, 19, 20, 21, 22, 35, 37, 38, 41, 42, 45, 47, 48, 50, 58, 59, 65, 67, 70, 75, 76, 77, 83, 85, 89, 90, (மொத்தம் 33 பாடல்கள்)

மூன்றாம் சீரில் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி பாடப்பட்டவற்றுக்கு எடுத்துக் காட்டு வருமாறு:

*கள்வம் என்பார்க்கும் **துயில் இல்லை** காதலி மாட்டு*
*உள்ளம் வைப்பார்க்கும் **துயில் இல்லை** ஒண்பொருள்*
*செய்வம் என்பார்க்கும் **துயில் இல்லை** அப்பொருள்*
காப்பார்க்கும் இல்லை துயில் (பா.7)

ஏனைய பாடல்கள்
4, 15, 29, 32, 33, 46, 51, 52, 54, 56, 60, 61, 62, 63, 64, 79, 81, 85, 87, 92, 94, 95, 99, (மொத்தம் 24 பாடல்கள்)

நான்காம் சீரில் வந்த சொல்லே திரும்பத் திரும்ப வரும்படி பாடப்பட்டவை நான்கு பாடல்கள்

(எ–டு) *இளமைப் பருவத்துக் கல்லாமை **குற்றம்***
*வளம் இலாப் போழ்தத்து வள்ளன்மை **குற்றம்***
*கிளைஞர் இல் போழ்தில் சினம் **குற்றம்***
தமர் அல்லார் கையகத்தது ஊண் *(பா. 91)*

ஏனைய பாடல்கள் 82, 96, 100.

ஒரே சொல் முதலடியில் இரண்டாம் சீரிலும் இரண்டாம் அடியில் மூன்றாம் சீரிலும் மூன்றாம் அடியில் நான்காம் சீரிலும் வரும்படி பாடப்பட்ட பாடல்:

*கன்றாமை **வேண்டும்,** கடிய; பிறர் செய்த*
*நன்றியை நன்றாக் கொளல் **வேண்டும்;** என்றும்*
*விடல் வேண்டும் தன்கண் வெகுளி, அடல் **வேண்டும்***
ஆக்கம் சிதைக்கும் வினை (பா.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்க் காரணமும் வேறுபட்ட பாடல்களும்

நான்கு இரத்தினம் போன்ற செய்திகளைக் கூறும் பாடல்களின் தொகுப்பு என்பதால் இந்நூல் நான்மணிக்கடிகை என்னும் பெயர் பெறுவதாயிற்று என்பர். 101–பாடல்களில் ஏறத்தாழ 91–பாடல்கள் இத்தன்மையனவே. 2, 4, 5, 9, 10, 33, 40, 63, 96, 97 ஆகிய பாடல்கள் சிறிது வேறுபட்ட தன்மை உடையவை எனலாம்.

மூன்று கருத்துகள் மாத்திரம் அமைந்த பாடல்கள்

வாலிழையார் முன்னர் வனப்புஇலன் பாடு இலன்
சாலும் அவைப்படின் கல்லாதான் பாடுஇலன்
கற்றான் ஒருவனும் பாடு இலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் பாடின் (பா. 90)

அழகிய நகை அணிந்த பெண்கள் முன் ஆடவரும், கற்றார் அவையில் கல்லாதவரும், கல்லாதார், அறிவிலாரோடு சேர்ந்த கற்றவரும் பெருமையில்லாதவர் ஆவர் என்பது பாடற் கருத்து. இப்பாடலை கல்லாதார், பேதையார் எனத் தனித்தனியாகக் கொண்டு கூட்டி நான்கு பொருள் கூறுவதாகக் கொள்வர்.

மாசுபடினும் மணி தன் சீர் குன்றாதாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசு ஒட்டும்
பாசத்துள் இட்டு விளக்கினும் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும் (பா. 97)

அழுக்குப் பட்டாலும் மணி தன் பெருமை குறையாது. கழுவி எடுத்தாலும் இரும்பின்கண் அழுக்குச் சேரும். கீழ்மக்கள் தளையிட்டு ஒறுத்தாலும் அறிவு கூறி விளக்கினாலும் தம் கீழ்மைத் தன்மையையே காட்டுவர் என மூன்று கருத்துக்களே இப்பாடலில் உள்ளன. முதற்கருத்தின் மூலம் மேன்மக்கள் இயல்பு குறிப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு கருத்துகள் அமைந்தவை

நான்கடியில் முன் 2 அடிகள் ஒரு கருத்தாகவும் பின் 2 அடிகள் ஒரு கருத்தாகவும் அமைந்த பாடல்கள் இரண்டு உள்ளன. இவற்றை உவமானம் உவமேயமாகப் பொருத்திப் பார்க்கலாம். (எ.டு. பாடல் 2, 33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைபட வாழா அசுணமா; உள்ளம்
குறைபட வாழார் உரவோர்; நிறை வனத்து
நெல்பட்ட கண்ணே வெதிர்சாம்; தனக்கு ஒவ்வாச்
சொல்பட்டால் சாவதாம் சால்பு (பா. 2)

பறை ஓசை செவியிற்பட்டால் கேகயப் பறவைகள் உயிர் வாழா. அதுபோல அறிவுடையோர் பழிச்சொல் கேட்டால் உயிர் வாழார். நெல் உண்டானால் மூங்கில்கள் பட்டுப் போகும். அதுபோல சான்றோர் இழிவுரை உண்டானால் உயிர் வாழ மாட்டார்.

இருப்பின் இரும்பு இடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீர் உண்டார் நீரான் வாய் பூசுவ தேரின்
அரிய அரிய வற்றால் கொள்ப; பெரிய
பெரியரான் எய்தப்படும் (பா. 22)

இப்பாடலின் முன் 2அடிகளை உவமைகளாகவும் பின் 2அடிகளை உவமேயமாகவும் கொள்ளலாம். இரும்பாற் செய்யப்பட்ட கருவிகளால் இரும்பை வெட்டுவர். அதபோல அரிய செயல்களை அரிய முயற்சிகளாற் கொள்வர். நீருணவுகளை உண்பவர் நீரினால் வாய் கழுவுவர். பெரியோரான் பெரிய பேறுகளை எய்துவர்.

இறுதி அடியில் கருத்து அமைந்த பாடல்கள்

நல்லார் பிறக்கும் குடியை யார் அறிவார்? என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் கள்ளி வயிற்றில் அகிலும், மான் வயிற்றில் அரிதாரமும், கடலில் முத்துகளும் பிறக்கும் என்று முதல் 3 அடிகளில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் நான்காம் அடியில் முதன்மைக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது (பா.4).

தனக்கு அணி தான் செல் உலகத்து அறம் என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் நெல்லும் கரும்பும் நிலத்திற்கும், தாமரை குளத்திற்கும், நாணம் பெண்மைக்கும் அணி என்ற கருத்து முதல் 3 அடியில் சொல்லப்பட்டுள்ளது (பா. 9).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோரை அன்பினால் பிணிக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லும் பாடலில், களிற்றைக் கந்திலும், நாகத்தை மந்திரத்தாலும், கயத்தை இரும்பிலும் பிணிப்பர் என்ற கருத்து முதல் 3 அடிகளில் சொல்லப்பட்டுள்ளது (பா. 10).

திருமகள் கூடினால் செல்வம் பெருகும். அவள் நீங்கினால் செல்வம் கெடும் என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் உயிர் பிறக்கும் போது உடம்பை விட்டு நீங்கென்றால் நீங்காது; இறக்கும்போது நில் என்றால் நில்லாது என்ற கருத்து எடுத்துக்காட்டாகத் தரப்பட்டள்ளது (பா.40).

ஒரு குடியில் பிறந்திருந்தாலும் கல்லாத மூத்தவனை மதியாமல், கற்ற இளயவனை உலகத்தார் பாராட்டுவர் என்ற ஒரே கருத்தைச் சொல்லும் பாடலில் உலகத்தோர் திரிச்சுடர் சிறிதாயிருப்பினும் வணங்குவர், விறகுச் சுடர் பெரிதாயிருப்பினும் இகழ்வர் என்ற உவமை எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது (பா. 63).

வறுமையுற்ற காலத்தில்தான் உறவினரால் ஆயபயன் அறியப்படும் என்ற கருத்தைச் சொல்லும் பாடலில் மணிகளின் இயல்பை கழுவியும், குதிரையின் இயல்பை ஏறியமர்ந்தும், பொன்னின் இயல்பை அதனை உருக்கியும் அறிவர் என்ற கருத்து முதல் 3 அடிகளில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம் (பா.5).

நிறைவுரை

விதியறங்களாகச் சிலவற்றையும் விலக்கறங்களாகப் பலவற்றையும் கடிகை குறிப்பிட்டுள்ளது.

கல்விச் சிறப்பு, குடிப்பெருமை, சுற்றம் தழுவி வாழ்தல், கோடி பொருள் பெறினும் நெஞ்சம் கோடாமை, ஈதல் இசைபட வாழ்தல், மனைமாட்சி, மக்கட் பேற்றால் சிறப்பு, பொறுமைப் பண்பு முதலியவற்றைப் பாராட்டி தான் செய்யும் அறமே தனக்கு அணியாகும் என்று வழிப்படுத்துகிறது இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்க்கு முதன்மை தரல், ஆண் மக்கட்பேற்றைச் சிறப்பித்தல், ஆண் முதன்மையை ஏற்றுப் பெண்ணின் நாணம், கற்பு முதலிய பண்புகளை மீண்டும், மீண்டும் வலியுறுத்தல், குடும்பம் சார்ந்த பெண்ணின் பெருமை முதலாக அக்காலச் சமுதாயம் ஏற்றிருந்த கருத்துகள் இந்நூலில் விவரிக்கப்பட்டள்ளன. கணவன் ஒழுக்கத்தில் குறை காணப்பட்டால் மனைவியும் குறைவு படுவாள் (பா.19) வீட்டின் வருமானம் குறையுமானால் பெண் நிலை கடப்பாள் (பா. 99) என்றெல்லாம் நடப்பியல் கலந்த கருத்துகளையும் குறிப்பிட்டுள்ளது கருதத்தக்கது.

கருத்துகளை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அமைப்பிற்கு முதன்மை அளித்து, பின்வருநிலை அணியை முதற்சீரில், இரண்டாம் சீரில், மூன்றாம் சீரில் எனப் பலவாறு கையாண்டு சிறக்கிறது. ஒரு சில பாடல்களில் நான்கு கருத்துகள் இடம் பெறவில்லை என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்: தமிழிலும் வடமொழியிலும்

கி.பி. 300–600 காலப்பகுதியிலே தமிழில் எழுந்த அறநூல்களும், சமகாலத்திலும், அதற்குச் சில நூற்றாண்டுகள் முற்பட்ட காலத்திலும் வடமொழியில் எழுந்த நூல்களும் கூறும் அறவியற் கருத்துக்கள் பற்றிய ஓர் ஒப்பியல் நோக்கு.

வி. சிவசாமி

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியிலே தமிழில் எழுந்த நூல்களிற் பல பதினெண் கீழ்க்கணக்கு எனும் தொகைநூல்களில் அடங்குவன. இவ்வகை நூல்களிலே அறம்சாராத நூல்களும் உள்ளன. இவற்றைவிட்டு அறம்பற்றிக் கூறும் நூல்களிலே திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, ஆசாரக்கோவை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி முதலியன குறிப்பிடற்பாலான. இவற்றுடன் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கருத்திற்கொள்ளப்பட்ட காலத்து வடமொழிநூல்களிலே தர்மம் (அறம்) பற்றிக் கூறுவனவற்றுள்ளே தர்மசூத்திரங்கள், மநுஸ்மிருதி போன்ற தர்மசாஸ்திர நூல்கள், இராமாயணம், மஹாபாரதம், பஞ்சதந்திரம் முதலிய நூல்கள் குறிப்பிடற்பாலன. இவற்றைவிட அஷ்வகோஷர், காளிதாசர் போன்ற பெருங்காப்பிய நாடக ஆசிரியர்கள், பாசர், சூத்திரகர் போன்ற நாடக ஆசிரியர்களின் நூல்களும் குறிப்பிடற்பாலன. எனினும் பெருங்காப்பிய, நாடக நூல்களை விட்டு ஏனைய நூல்களே இக்கட்டுரையிலே கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட தமிழ் நூல்களிலே வடமொழி நூல்களின் செல்வாக்கு கருத்தியல் ரீதியில் எந்த அளவில் காணப்படுகின்றது? இவ்விரு மொழிகளிலுமுள்ள குறிப்பிட்ட நூல்கள் கூறும் அறம் / தர்மம் சார்பான பின்புலத்தைப் பற்றிச் சிறிது கூறுதல் பயனுடைத்தாகும். இம்மொழிகளிலுள்ள குறிப்பிட்ட நூல்கள் புராதன பாரதநாட்டிலே தோன்றிய இந்து / வைதிக, பௌத்த, சமண ஞானிகளாலும், புலவர்களாலும் இயற்றப்பட்டவை. இச்சமயங்களிடையே சில அம்சங்களிலே பொதுவான அடிப்படையிலான கருத்தொற்றுமை உள்ளது. அவ்வவற்றிற்கான சிறப்பு அம்சங்களும் உள்ளன.

இக்கட்டுரைத் தலைப்பு மிக விரிவானதாகும். எனவே இவ்விருமொழிகளிலுமுள்ள சில நூல்களிலே காணப்படும் கருத்தொற்றுமை சுருக்கமாகச் சுட்டிக் காட்டப்படும். தமிழிலுள்ள சில நூல்களிலே வடமொழி நூல்களின் தாக்கம் அல்லது கருத்தியல் ஒருமைப்பாடு, இந்நூல்கள் ஒரு பொது மூலத்தினை (பாரதநாட்டின் சமய, பண்பாட்டு மூலத்தினை) கொண்டிருப்பதாலோ அல்லது நேரடியான வடமொழித் தொடர்பாலோ ஏற்பட்டிருக்கலாம், இவ்விரண்டினாலும் ஏற்பட்டிருக்கலாம்.

வரலாற்று ரீதியிலே நோக்கும்போது முதலிலே வட பாரதத்திலே வேதகாலத்திலே தொடங்கிய ஆரிய / வைதிக சமய பண்பாட்டு மரபுகளுடன் இவற்றிற்குப் புறம்பானவையும், முற்பட்ட காலத்தவையும், சமகாலத்தவையுமான திராவிட, ஆதிஒஸ்ரலோயிட் முதலிய மொழிகளைப் பேசிய மக்களின் சமய, பண்பாட்டு மரபுகளும் இணையத் தொடங்கிவிட்டன எனலாம். எனவே இஃது ஒரு கூட்டுச்சமய பண்பாட்டு மரபாகத் தொடர்ந்து விந்தியமலைக்கு அப்பாலுள்ள தென்பாரதத்திலே தமிழ்நாடு வரையும் கடல் கடந்து இலங்கை, தென்கிழக்காசியாவுக்கும் பரவிற்று. இது எவ்வெவ்விடங்களிலே பரவிற்றோ அவ்வப்பிரதேச மரபுகளையும் தேவைக்கேற்றவாறு உள்வாங்கி நிலவி வந்துள்ளது.

தமிழிலுள்ள அறம் எனும் பதமும் வடமொழியிலுள்ள தர்மம் (தருமம்) எனும் பதமும் பொதுவாக ஒரே கருத்துடையன. வடமொழியிலே தர்மம் பற்றிய சிந்தனைகள் முற்பட்ட வேதமாகிய இருக்கு வேத காலம் தொட்டு நிலவிவந்துள்ளன. எனினும் விரிவாக வேதகால முடிவிலேற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசூத்திரங்களிலும், அவற்றின் பின் எழுந்த மநுஸ்மிருதி போன்ற தருமசாஸ்திர நூல்களிலும், இதிஹாஸங்களான ராமாயணம், குறிப்பாக மகாபாரதத்திலும் வந்துவிட்டன. பின்னர் எழுந்த பஞ்சதந்திரம் முதலிய நீதிக்கதை நூல்களிலும், பிறவற்றிலும் குறிப்பிடத்தக்க அளவு வந்துவிட்டன. கி.பி. 300க்கு முற்பட்ட தமிழிலுள்ள சங்க இலக்கிய நூல்களிலும் அறம் பற்றிய கருத்துக்கள் அங்கும் இங்கும் காணப்படுகின்றன. இக்காலத்திலே (கி.பி. 300 – 600 வரை) தான் அறம் பற்றிய தனிநூல்கள் தமிழில் எழுதப்பட்டமை பற்றி ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இவ்விரு மொழிகளிலுமுள்ள குறிப்பிட்ட நூல்கள் கூறும். அறம் / தர்மம் பற்றிய கருத்துக்கள் பற்றிச் சில தலைப்புகளிலே குறிப்பிடப்படும்.

உண்மை

பாரதநாட்டுச் சமய பண்பாட்டு, மரபுகளிலே வாய்மையே மிக மேலானதென வேதங்கள் தொட்டு வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. வேதகாலக் குருகுலக்கல்வியைப் பூரணப்படுத்தி வீட்டிற்குத் திரும்பும் மாணவருக்குக் குரு கூறும் சிறந்த உபதேசங்கள் தைத்திரீய உபநிஷத்தில் உள்ளன. இவற்றுள் முதலாவதாக 'உண்மை பேசு' எனவும், தொடர்ந்து 'தர்மத்தைப் பின்பற்றுவாயாக' எனவும் தொடர்ந்து வேறு பல அறிவுரைகளும் கூறப்பட்டுள்ளன. வேதகாலத்திற்குச் சற்றுப் பிந்திய நூல்களிலொன்றான இராமாயணத்திலே (2.45.1) உண்மையிலும் மிக மேலான தர்மம் மூவுலகங்களிலும் இல்லையே (நஹி சத்யாத்பரோ தர்மஸ்த் திரிஷு லோகேஷு வித்யதே) எனக் கூறப்படுகின்றது. இதே கருத்தினைத் திருக்குறள் (300) 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லையெனத் தோன்றும் வாய்மையின் நல்ல பிற', எனச் சிறப்பாகக் கூறியிருப்பது நன்கு கவனித்தற்பாலது.

அறம் / தர்மம்

உண்மையைப் போலவும், அதிலும் மேலானதாகவும் தர்மம் போற்றப்பட்டு வந்துள்ளது. இதன் முக்கியத்துவம் பற்றி மகாபாரதம் (2.1.65) 'ஒருவனுக்கு ஒரேயொரு நண்பனாகத்' தருமம் மரணத்தின்போதும் அதன் பின்னரும் அவனைத் தொடரும். ஏனைய எல்லாம் உடம்பு அழிந்தவுடன் நின்றுவிடும். (ஏக ஏவஸூஹ்ருத்தர்மோ நிதநேப்யநுயாதியஹ, சரீரேணஸமம்நாசம் ஸர்வமந்யத்திகச்சதி) எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. இதுபோன்ற கருத்தினைத் திருக்குறளிலேயுள்ள (367) 'அன்றறிவாம் என்னாது அறம் செய்க, பொன்றுங்கால் பொன்றாத்துணை' எனும் செய்யுளிலே காணலாம்.

மேலும் இருசார் நூல்களிலும் இது பற்றிய பொதுக்கருத்தினைச் சுட்டிக்காட்டலாம். உடம்பும், செல்வங்களும் என்றும் அழியும் தன்மை வாய்ந்தவை. மரணமே தொடர்ந்து ஒருவனுக்கு மிக அண்மையில் உள்ளது. எனவே தருமத்தைப் பின்பற்றியே வாழவேண்டும். (அநித்யானி சரீராணி விபவோநவை சாஸ்வதஹ / ஸம்நிஹிதோ ம்ருத்யுஹு கர்தவ்யோ தர்மஸங்கிர ஹஹ) எனப் பஞ்சதந்திரம் (3.94) கூறும் கருத்தும், நாலடியாரிலே (36) தெளிவாகப் பின்வருமாறு கூறப்படுவதும் ஒப்பிடற்பாலன. அதாவது "இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது, பின்றையே நின்றது கூற்றமென்றெண்ணி, ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால், மருவுமின் மாண்டார் அறம்" என்பதாகும்.

கல்வி

பாரதநாட்டு மரபிலே கல்வி மிக முக்கியமான ஓரிடத்தை வகித்து வந்துள்ளது. இங்கு "இலக்கணம் – கல்வி மிகப்பரந்த விரிவான விடயம். ஆனால் கற்கும் மக்களின் ஆயுட்காலம் மிகக்குறைவு. அதைவிடப் பல இடையூறுகளும் உள்ளன. எனவே எவ்வாறு நீரோடு கலந்துள்ள பாலை அன்னப்பறவை நீரைவிட்டுப் பாலை மட்டும் பருகுமோ அவ்வாறே ஒருவன் ஆராய்ந்து கல்வியின் சாரத்தினை மிக முக்கியமானவற்றை மட்டும் பயிலவேண்டும். (அனந்தபாரம் கில சப்தசாஸ்த்ரம் பகவச்சவிக்நாஹ! ஸாரம் ததோக்ராஹ்யமபாஸ்ய பல்குஹம்ஸைர்யதா க்ஷீரமிவாம்புமத்யாத்)." எனப் பஞ்ச தந்திரம் (1–9) கூறுகின்றது. இதிலுள்ள கருத்துக்கள் நாலடியாரிலே (135) 'கல்விகரையில கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளிதின், ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப் பாலுண்குருகின் தெரிந்து' எனவரும் செய்யுளில் உள்ளவற்றுடன் நன்கு ஒப்பிடற்பாலன.

ஆசாரம் / ஒழுக்கம்

பாரததேச சமய பண்பாட்டு மரபுகளில் ஆசாரமும் முக்கியமான ஓரிடத்தை வகித்து வந்துள்ளது. மானவதர்மசாஸ்திரம் / மநுஸ்மிருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசாரமே மேலான தர்மமாகும். சுருதியும் (வேதமும்) ஸ்மிருதியும் (தர்மஸாஸ்திரமும்) இவ்வாறே கூறியுள்ளன. எனவே புலனடக்கமுள்ள இரு பிறப்பாளன் (த்விஜஹ – இந்து சமூகத்தைச் சேர்ந்த பிராமணர், ஷத்திரியர், வைஷ்யர் ஆகியோர்) இதனை என்றும் பின்பற்ற வேண்டும் (ஆசாரஹபரமோதர்மஹச்ருத்யுக்தஹ ஸ்மார்த்த ஏவச / தஸ்மாதஸ்மின் ஸதா– நித்யம்ஸ்யாதாத்மவான் த்விஜஹ)" என இந்து சமூகத்தின் முதல் மூன்று வருணத்தவருக்கும் ஆசாரத்தை அழுத்திக் கூறுகின்றது.

ஆனால், திருவள்ளுவர் (131) 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என ஒழுக்கத்தினை மேலும் மேம்படுத்தி அது உயிரினும் சிறந்ததெனவும் அனைவருக்கும் உரியதென்ற கருத்தினைக் குறிப்பாகவும் வலியுறுத்தியுள்ளார்.

வைதிக இந்துசமய மரபிலே குறிப்பாகச் சமய குருமாராக விளங்கும் "பிராமணர்கள் / அந்தணர்களின் ஒழுக்கம் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இவர்கள் ஒழுக்கத்திலிருந்து பிறழ்ந்தால் புனித வேதங்கள் கூறும் நற்பலனை அடைய மாட்டார்கள். ஆசாரசீலர்களாக விளங்கினால் மட்டுமே வேதங்கள் கூறும் பலனை முழுமையாகப் பெறும் பாக்கியசாலிகளாக விளங்குவர். (ஆசாராத்விச்யுதோவிப்ரோ நவேதபலமஸ்நுதே! ஆசாரேணசஸம்யுக்தஹ ஸம்பூர்ணபலபாக்யவேத்/)" என மநுஸ் – மிருதி (1.109) கூறுகின்றது. இதுபோன்ற கருத்தினை மிக வலுவாக அழுத்தித் திருக்குறள் (134),

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்

எனக் குறிப்பிடுகின்றது. அதாவது பார்ப்பான் வேதத்தினை மறந்தால் திரும்பவும் ஓதலாம். ஆனால் அவனுக்குரிய ஒழுக்கத்திலிருந்து பிறழ்ந்தால் அதனை ஈடுசெய்ய முடியாது என்பதாகும்.

இல்வாழ்க்கையின் முக்கியத்துவம்

வைதிக இந்து சமய சமூக அமைப்பிலே ஒருவனின் வாழ்க்கை பிரமச்சரியம், கிருஹஸ்தம் (இல்வாழ்க்கை), வானப்பிரஸ்தம், ஸந்நியாசம் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு ஆசிரமங்களாக – கட்டங்களாக ஒன்றன்பின் ஒன்றாக வகுத்துப் படிமுறையில் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் இல்வாழ்க்கையின் முக்கியத்துவம் மநுஸ்மிருதி போன்ற தர்மசாஸ்திர நூல்களிலும் வேறு சிலவற்றிலும் நன்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் குறிப்பாக ஏனைய மூன்று ஆசிரமத்தவர்களுக்கான உலகியல் தேவைகளை குறிப்பாக உணவு போன்றவற்றை இல்வாழ்வானே வழங்கி வருவான். எனவே இல்வாழ்க்கையின் முக்கியத்துவத்தினை மநுஸ்மிருதி (3.7), ''எவ்வாறு உயிர்களனைத்தும் காற்றினை அத்தியாவசியமாகக் கொண்டு வாழுகின்றனவோ அவ்வாறே எல்லா ஆசிரமத்தவர்களும் இல்வாழ்வானின் ஆதரவிலேயே வாழுகின்றனர் (யதாவாயும்ஸமாச்ருத்யவர்த்தந்தே ஸர்வஜந்தவஹ! ததா ஹிக்ருஹஸ்தமாச்ரித்ய வர்த்தந்தே ஸர்வாச்ரமாஹ)'' என ஒரு சிறந்த உவமை மூலம் இதனை விளக்கிக் கூறியுள்ளது. இதுபோன்ற கருத்துத் திருக்குறளிலே ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை'' என வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. இவற்றிற்கு முற்பட்ட காலத் தர்மசூத்திரங்களிலும் இக்கருத்து வந்துள்ளது.

கற்பு

இல்வாழ்க்கையிலே கணவன் மனைவிக்குக் கற்பு இன்றியமையாததாகும். கற்பு பொதுவாகப் பெண்களுக்குரியதெனப் பலர் கூறினாலும் அது இரு பாலாருக்கும் உரியதென மநுஸ்மிருதி கூறும். எனினும் பெண்களுக்குக் கற்பு அவசியமெனப் பலர் கருதி வந்துள்ளனர். இதனால் ஒரு சாரார் பெண்களை தாம் இல்லாத வேளைகளிலே அவர்களை வீட்டிலோ வேறிடத்திலோ பாதுகாப்பாகப் பூட்டி வைத்துள்ளனர். ஆனால் அது உண்மையான பாதுகாப்பு அன்று. பெண்களின் மனத்திடமே அவர்களுக்கான மிகச் சிறந்த தற்பாதுகாப்பாகும் என்ற கருத்துப்பட மநுஸ்மிருதி (9.12) ''வலிய காவலர்களை அமர்த்திப் பெண்களை வீட்டிலே தடுத்து வைத்திருப்பது உண்மையான பாதுகாப்பு அன்று. அவர்களுடைய நிறை – கற்பே அவர்களுக்கான மிக வலுவான தற்பாதுகாப்பாகும் (அரக்ஷிதா க்ருஹே ருத்தாஹ புருஷைராப்தகாரிபிஹி ஆத்மானமாத்மனாயாஸ்து ரக்ஷேயுஸ்தாஹ பரிரக்ஷிதாஹ)'' எனக் கூறியுள்ளது. இதனையே திருக்குறள் (57) 'சிறைகாக்கும் காப்பு எவன் செயும்மகளிர், நிறைகாக்கும் காப்பே தலை' எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வின் கடமைகள்

வைதிக சமய மரபில் இல்வாழ்வானின் கடமைகளாக வேதங்களை ஓதல், கற்றல் (பிரமயஜ்ஞம்), இறந்த மூதாதையருக்குச் செய்யும் தர்ப்பணம், தெய்வங்களுக்குச் செய்யும் வேள்வி / யாகம், பூதங்களுக்கு வழங்கும் பலி, விருந்தினராகவரும் மனிதருக்குச் செய்யும் உபசாரம் ஆகிய ஐந்தும் மனுஸ்மிருதியிலே (3.77) (அத்யாபனம் பிரமயஜ்ஞும் பத்ரு யஜ்ஞஸ்து தர்ப்பணம் ஹோமோதேவபலிர் பௌதோ ந்ருபயஜ்ஞோ அத்திபூஜனம்) எனக் கூறப்பட்டுள்ளன. திருக்குறளிலும் (43) இதே போன்று 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு, ஐம்புலத்தாறு ஓம்பல்தலை', என இல்வாழ்வானின் கடமைகள் கூறப்பட்டுள்ளமை ஒப்பிட்டு நோக்கற்பாலது.

புலனடக்கம்

பாரததேச சமய, பண்பாட்டு மரபுகளிலே புலனடக்கமும் ஒரு முக்கியமான விழுமியமாகும். உள்ளத்தினை ஐம்புலன்களின் வழி நெறி தவறிச்செல்லவிடாது கட்டுப்படுத்துவது அவசியமாகும். இதனாலேயே இகபர நன்மைகள் ஏற்படும். இது பற்றிப் பகவத்கீதையிலே (2.58) எவ்வாறு ஆமையானது தனக்கு ஏதும் இடையூறு ஏற்படும்போது தனது (ஐந்து) உறுப்புகளையும் (தலை, நான்குகால்களையும்) தனக்குள் அடக்கியப் பாதுகாப்பை ஏற்படுத்துகிறதோ அவ்வாறே (ஐந்து புலன்வழிச்) செல்வனவற்றை எவன் தனது (ஐந்து) புலன்களுக்குள்ளே கட்டுப்படுத்துகிறானோ அப்பெயர்ப்பட்டவனுடைய ஞானம் நன்கு வலுப்பெற்றதாகும். (யதா ஸம்ஹரதே சாயம் கூக்மோங்காநீவ இந்த்ரியாணீந்த்ரியேப்யஹ தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா)" என அர்ஜுனனுக்கு உபதேசித்துள்ளார். பகவத்கீதை மஹாபாரதத்தில் உள்ளது. ஏற்கனவே குறிப்பிட்ட கருத்துத் திருக்குறளிலே (126)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைந்து

என வந்துள்ளமை கவனித்தற்பாலது.

நான் எனது எனும் செருக்கினை நீக்குதல்

ஸ்ரீமத் பகவத்கீதையிலே (12.16) ஸ்ரீ கிருஷ்ணபகவான் 'எனது' எனும் பற்றும், 'நான்' எனும் அஹங்காரமும் இல்லாதவனும் தமக்குப் பிரியமானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(.... நிர்மமோ நிரஹங்காரஹ.... மேப்ரியஹ) எனக் கூறியுள்ளார். திருக்குறளிலும் (346) இதே கருத்து.

யான் எனது எனும் செருக்கு அறுப்பான்வானோர்க்கு
உயர்ந்த உலகம் பெறும்

இடம் பெற்றுள்ளமை உற்றுநோக்கற்பாலது.

தீமை செய்தவனுக்கு நன்மை செய்தல்

ஒருவன் தனக்குத் தீமை செய்தாலும் அவனுக்கு நன்மையே செய்யவேண்டும் என்ற கருத்தினை, பல சமய ஞானிகளும் அறிஞர்களும் வலியுறுத்தியுள்ளனர். அந்த வகையிலே மநுஸ்மிருதி (2.161) "தனக்குத் தீமை செய்தாலும் வெறுக்காது மற்றவர்களை நோகப் பேசக்கூடாது. எண்ணத்தாலும், மனத்தாலும் வஞ்சிக்கக்கூடாது. கொடிய வார்த்தைகளைப் பேசினால் பேரின்பநிலையை ஒருவன் அடையமாட்டான். (நாருத்துதஹ ஸ்யாதார்தோபி நபரத்ரோக கர்மதீஹி, யபாஸ்யோத்துவிஜதே வாசா நாலோக்யாம் தாமுதீரயேத்)" எனக் கூறியிருக்கிறது. இதே கருத்தினைத் திருவள்ளுவர் (316) மேலும் தெளிவாக

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்'

எனக் கூறியிருப்பது நன்கு ஒப்பிடற்பாலது.

கோபத்தினை அடக்குதல்

தனக்கு ஏற்படும் கோபத்தினை எவராயினும் அடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் இது குறிப்பிட்டவருக்கு மரணம் ஏற்படவும் வழிவகுக்கும். இக்கருத்தினை ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத்கீதையிலே இரண்டு செய்யுட்களிலே (2–62–63) படிமுறையிலே கோபத்திற்கான அடிப்படைக் காரணம் அதனாலேற்படும் விளைவுகளைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது "ஒருவன் குறிப்பிட்ட விடயம் (இங்கு உலகியல் விடயம்) குறித்துச் சிந்திக்க, அதில் அவனுக்கு ஒரு பற்று ஏற்படும். பற்று ஏற்படும் பொருளிடத்து விருப்பம் உண்டாகும். விருப்பமேற்படின் அவ்விருப்பத்திற்குரிய பொருளுக்கு அல்லது உயிர்வர்க்கத்திற்கு இடையூறு அல்லது இன்னல் ஏற்படின் கோபம் உண்டாகும். கோபம் ஏற்படின் சம்மோகம் (பெரிய மயக்கம்) உண்டாகும். இது ஏற்படின் நினைவாற்றல் பாதிக்கப்படும். இதனால் புத்தி அழிந்துபோகும். இதைத் தொடர்ந்து மரணம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(த்பாயதோவிஷயான்பும்ஸஹஸங்கஸ்தேஷூபஜாயதே சிங்காத்ஸம்ஜாயதேகாமஹ காமாத்க்ரோதோபிஜாயதே
க்ரோதாத்பவதிஸம்மோஹ ஸம்மோஹாத்ஸ்மிருதி விப்ரமஹ!
ஸமதிப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணஸ்யதி)'' எனப் போதிக்கப்படுகின்றது. இதே கருத்து இரத்தினச் சுருக்கமாகத் திருக்குறளிலே (305)

தன்னைத்தான் காக்கில் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

எனக் கூறப்பட்டுள்ளமை ஒப்பிட்டு நோக்கற்பாலது.

விடா முயற்சி

எக்காரியத்தினையும் விடாமுயற்சி மூலம் சாதிக்கலாம். முயற்சி இன்றி எதுவும் கைகூடாது. இதனைப் பஞ்சதந்திரம் (2.138) "(குகையிலே) தூங்கிக்கொண்டிருக்கும் சிங்கத்தின் வாய்க்குள்ளே மிருகங்கள் உணவாக தாமாகப் போகமாட்டா. இதுபோலவே ஒருவன் குறிப்பிட்ட செயற்பாடு பற்றிக் கற்பனை செய்தல் அல்லது மனக்கோட்டை கட்டுவதாலன்றி விடாமுயற்சியினாலேயே செய்துமுடிப்பான் (உத்யமேநசித்யந்தி நமநோரதைஹி / நஹிஸூப்தஸ்ய சிம்ஹஸ்யப்ரவிசந்தி முகே மிருகாஹ)''எனக் கூறுகின்றது. இதிலுள்ள பிரதானவிடயமான விடாமுயற்சி பற்றி திருக்குறள் (666)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்

என்பதிலும், நாலடியாரிலே (194)

இசையாதெனினும் இயற்றியோராற்றல்
அசையாது நிற்பதாம் ஆண்மை

என வரும் செய்யுட் பகுதியிலும் கூறப்படுவன பஞ்சதந்திரம் கூறுவதோடு ஒப்பிடற்பாலன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்க்கையிலே சில பழக்கவழக்கங்கள்

வைதிக சமயத்தவர்கள் அன்றாட வாழ்க்கையிலே பின்பற்ற வேண்டிய சில பழக்கவழக்கங்கள் தர்மசூத்திரங்களிலும், அவற்றின் விரிவான தர்ம சாஸ்திர நூல்களிலும் வந்துள்ளன. இவற்றிலுள்ள சில குறிப்பிட்ட கருத்துக்கள் ஆசாரக் கோவையிலே வந்துள்ளன. வடமொழியிலுள்ள சுக்ரஸ்மிருதி என்றழைக்கப்படும் உசனஸ் சம்ஹிதை நூல்களுக்கும் ஆசாரக்கோவைக்கு மிடையிலும் கருத்தொற்றுமை ஓரளவாவது காணப்படுகின்றது.

உண்ணும்போது ஒருவர் எத்திசை நோக்கியிருந்து உண்ணவேண்டும் என்பது பற்றிய ஒரு கருத்தினைக் குறிப்பிடலாம். கிழக்கு முகமாக இருந்து உண்ணவேண்டும் (ப்ராங்முகோன்னானிபுஞ்ஜீத) என உசனஸ்மிருதி (1.32) கூறும். இதனை ஆசாரக்கோவை 'உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்கும்' எனக் குறிப்பிடுகின்றது. இதேபோல வேறு திசைகளை நோக்கி உண்ணுவது பற்றியும் இந்நூல்களிலே கூறப்படுகின்றது. இதுபோலவே நீராடித் தூய்மை செய்தும் பிற அனுஷ்டானங்களையும் பின்பற்றி உண்ணுதல், ஆடையின்றி நீராடலைத் தவிர்த்தல், ஐம்பெரும் குரவரை வணங்குதல் போன்றவற்றைக் கூறுவதிலே ஆசாரக்கோவை உசனஸ்ஸங்கிதை, மநுஸ்மிருதி ஆகியனவற்றுக்கிடையில் கருத்தொற்றுமை காணப்படுகின்றது.

செல்வம் துக்கம்

உலகிலே வாழும் மக்களுக்கு செல்வம் அவசியமாகும். மனித வாழ்வின் இலட்சியங்களான அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் நடுவிலுள்ள செல்வம் இருந்தால்தான் ஒருவன் அறத்தைச் செய்யலாம். ; இன்பத்தை அனுபவிக்கலாம். ஆனால் இதே செல்வத்தைப் பெறுதல், காத்தல், அழித்தல், செலவழித்தல் ஆகியனவற்றிலும் துக்கமே உள்ளது. இக்கருத்தினைப் பஞ்சதந்திரம் (2.124) "செல்வத்தைப் பெறுதலில் துக்கமே உள்ளது. பெற்றதனைப் பாதுகாப்பதும் துக்கமே. அதனை அழித்தலும், செலவழித்தலும் துக்கமே. எனவே கஷ்டங்கள் நிறைந்த செல்வங்கள் கேவலமானவையே, (அர்ந்தநாம் அர்ஜனே துக்கம் அர்ஜிதானாம் சரக்ஷணே நாசே துக்கம் வ்யயே துக்கம் திகர்த்தான் கஷ்டஸம்ச்ரயான்)" எனக் கூறுகிறது. இதேபோல நாலடியாரும் (280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டலும் துன்பம் மற்றீட்டியவொண்பொருளைக்
காப்பதும் ஆங்கே கடுந்துன்பம் – காத்தல்
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்பக்கு
உறைபதி மற்றைப்பொருள்,

எனக் கூறியிருப்பது ஒப்பிடற்பாலது.

செல்வத்தின் இன்றியமையாமை

உலக வாழ்விற்குச் செல்வம் மிக முக்கியமானதென்ற யதார்த்தநிலையை பாரதநாட்டு ஞானிகளும், புலவர்களும் நன்கு அறிந்துள்ளனர். ஏற்கனவே குறிப்பிட்டவாறு இந்துக்களுடைய வாழ்க்கை இலட்சியங்களான அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் செல்வத்தின் முக்கியத்துவம் கருதியே இவற்றிற்கு நடுவில் இது இடம் பெற்றுள்ளது எனலாம். செல்வத்தை பெறுதல், வைத்திருத்தல் போன்றவற்றிலே கஷ்டங்களிலிருப்பினும் செல்வம் நிலையாதிருப்பினும் அதன் முக்கியத்துவம் குன்றாது. எனவே செல்வத்தின் தனிச்சிறப்புப் கருதிப்போலும் "செல்வத்தினாலே அறிய முடியாதது, சாதிக்க முடியாதது எதுவுமில்லை. எனவே ஓர் அறிவாளி நன்கு முயற்சித்துச் செல்வத்தையே பெற்றுக்கொள்வானாக (நஹி தத்வித்யதே கிஞ்சித் அர்தேன் சித்யதி, யத்நேந மதிமாம்ஸ் தஸ்மாதர்த மேவப்ரஸாத யேத்) எனப் பஞ்சதந்திரம் (1.24) கூறியிருப்பது, செல்வம் பற்றித் திருக்குறள் (751)

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பெருளல்லது இல்லைப் பொருள்

எனக் கூறியிருப்பதுடன் நன்கு ஒப்பிடற்பாலதே.

அரசின் முக்கியத்துவம்

புராதன பாரததேசத்திலே மக்களினதும், நாட்டினதும் நன்மைக்காக அரசியல், பொருளியல் முதலியன அவசியமெனக் கௌடில்கர், வியாசர், மநு, திருவள்ளுவர் முதலிய சிந்தனையாளர்கள் கருதியுள்ளனர். அரசு இல்லாவிட்டால் அராஜகமேற்பட்டுச் சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவது போல மெலியோரை வலியோர் துன்புறுத்தி அழித்துவிடுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மேற்குறிப்பிட்ட சிந்தனையாளர்கள் பொதுவாக ஒரே முகமாகக் கூறியுள்ளனர்.

அரசின் அங்கங்கள்

ஓர் அரசினுடைய ஏழு அங்கங்கள் "அரசன், அமைச்சன், நாடு, கோட்டை, நிதிக்களஞ்சியம், படை, நண்பன் (ஸ்வாம்யமாத்ய ஜனபத துர்க்க கோச தண்ட மித்ராணி ப்ரகிருதயஹ)" என அர்த்த சாஸ்திரம் (6.1) கூறும். இதே கருத்து மகாபாரதம், மநுஸ்மிருதி முதலிய வேறு சில நூல்களிலும் வந்துள்ளது. இதே கருத்துத் திருக்குறளில் (381)

படைகுடி கூழ் அமைச்சு, நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

என வந்துள்ளது. எனினும் ஏனைய ஆறு அங்கங்களையும் நன்கு கொண்டிருக்கும் அரசன் (ஏனைய) மன்னர்களின் தலைவன் (போல) விளங்குவான் எனத் திருக்குறள் அரசனுக்கே முதன்மையளித்துள்ளது. ஆனால் மற்றைய நூல்களில் ஏழு அங்கங்களும் தக்கவாறு அமைய வேண்டுமெனப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது.

அரசும் பொருளியலும்

ஏற்கனவே குறிப்பிட்டவாறு பொருளின் முக்கியத்துவம் நன்கு சிந்திக்கப்பட்டுள்ளது. இது குறித்து அர்த்த சாஸ்திரத்திலே (21.17) "பொருளே முக்கியமானதெனவும் அதுவே தருமத்திற்கும் இன்பத்திற்கும் மூலமாக உள்ளதெனவும் (அர்த ஏவ ப்ரதான இதிகௌடில்யஹ! அர்த மூலேன ஹி தர்மகாமௌ)" கூறப்பட்டுள்ளது. இதுபோன்ற கருத்தினைத் திருக்குறளிலே (175)

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்தபொருள்

என்பதிலே காணலாம்,

"தன்னிடம் இல்லாத செல்வத்தை அரசு விரும்பிப் பெறமுயற்சிக்க வேண்டும். இவ்வாறு பெற்றதைப் பேணிப்பாதுகாத்து அதை மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்க வேண்டும். பின்னர் அதனை இல்லாதவர்களுக்கும் தக்கோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். இவ்வாறு செய்தலிலேதான் உலக வாழ்க்கை தங்கியுள்ளது (அலப்த லாபாாத்த்தீ லப்தபரிர க்ஷணி, ரக்ஷிதவிவர்தினி விருத்தஸ்ய தீர்த்தே ஷுப்ரதிபாதினிச அஸ்யாமாயதாம்லோக யாத்ரா)" என அர்த்த சாஸ்திரம் தெளிவாகக் கூறுகின்றது. இதே கருத்து மகாபாரதம், மநுஸ்மிருதி போன்ற நூல்களிலும் வந்துள்ளது. இதே கருத்தினைத் திருக்குறள் (385)

இயற்றலும் ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு

எனக் கூறியிருப்பது நன்கு கவனித்தற்பாலது.

இவ்வாறு தமிழிலும், வடமொழியிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் எழுந்த நூல்களிலே குறிப்பாக அறம் பற்றிய கருத்தொற்றுமையே பெரிதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரக் கோவையும் அறமும்

வ. மகேஸ்வரன்

தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் களப்பிரர் காலத்துக் குரியனவெனப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அடையாளப்படுத்துவர். அவற்றுள் பெரும்பாலானவை 'அறநூல்கள்' என்ற வகைக்குள் அடங்குவன. 'ஆசாரக் கோவை' என்ற நூல் அவற்றுள் ஒன்று. அது வெளிப்படையாகவே மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை நிரல்படச் சொல்லுகின்றது (ஆசாரம் – ஒழுக்கம்; கோவை – கோக்கப்பட்டது, நிரல்பட வைக்கப்பட்டது).

இதை எழுதியவர் பெருவாயில் முள்ளியார் என்பது தற்சிறப்புப் பாயிரத்தால் தெரிய வருகின்றது. மேலும் அவர் சைவ மதத்தைச் சார்ந்தவர் என்பதும் தெரிய வருகின்றது. 'ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி' – இந்த நூலை அவர் தொகுத்ததாக தற்சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகின்றது.[1] முப்புரங்களையும் அழித்த சிவனை முன்னிறுத்தி வணங்கியே – இது எழுதப்பட்டது என்பது இவ்விடத்தில் குறிப்பிட்டு நோக்க வேண்டிய அம்சமாகும். களப்பிரர் காலத்தில் சமண பௌத்தம் முதலான அவைதீக மதங்களே பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. ஒரு காலத்தில் சைவ சமயிகளும் தமது பங்கிற்கு அறநூல்களை எழுதினர் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. களப்பிரர் காலத்தில் வைதீகச் சூழலும் நிலை பெற்றிருந்தது என்பது அறிஞர் முடிபு. களப்பிரரை வைணவர் என்று மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுகின்றார். களப்பிர அரசர்கள் தம்மை அச்சுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தவர் என்று கூறிக் கொண்டனர். நந்தி என்ற அரசன் திருமால் வழிபாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளான்.[2] மேலும் அவர்கள் பிராமணர்களுக்கு ஆதரவாளர்களாக இருந்துள்ளனர் என்ற இன்னோர் செய்தியும் அவர்கள் பற்றிய குறிப்புகளினூடாக அறிய முடிகின்றது.[3] வேள்விக்குடிச் செப்பேடு களப்பிரரை அவைதீகத்துக்கு எதிரானவர்கள் என்ற கருத்தை முன்வைக்கின்றது. எனினும் வேள்விக்குடிச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் பிராமணரது தானத்தை இறக்கியது பிராமணருக்கும், களப்பிரருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலாலன்று, இதற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டுமென்று மயிலை சீனி வேங்கடசாமி வாதிடுவார். இது பற்றி விரிவாக ஆராய்ந்த அ. மார்க்ஸ் அடிநிலை மக்களது எழுச்சியின் விளைவாகவே அந்தத் தானம் மறுக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார்.

> "சங்ககால வேந்துருவாக்கங்களையும் அவர்தம் விவசாய முயற்சிகளையும் வேள்வி முதலான சடங்குகளில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டையும் பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்ட தானங்களையும் அதன் விளைவாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கும் விவசாயச் சமூகத்துக்குமிடையே நிகழ்ந்த முரண்களையும் களப்பிரர் காலத்தில் அறியலாம். விவசாயம் சாராத அடிநிலை மக்கள் மேலாண்மை பெற முயன்ற காலமே களப்பிரர் காலமாகும். பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்ட தானங்கள் இழக்கப்பட்டது என்பது இத்தகைய அடிநிலை மக்களது மேலாண்மையின் விளைவாகும்."

என அவர் குறிப்பிடுகின்றார் [4] எனவே களப்பிரர் வைதீகத்துக்கு எதிரானவர்கள் அல்ல. வேள்விக்குடிச் செப்பேடு குறிப்பிடும் முரண்பாடு களப்பிரருக்கும் வைதீகப் பிராமணருக்கும் இடையே நிகழ்ந்தவையல்ல என்பதே அவர்களது முடிவாகும்.

களப்பிரர் காலத்தில் சைவம் சார்ந்த பல நூல்கள் எழுந்துள்ளன என்பதும் இங்கு மனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.[5] எனவே வைதீகர்களும் நூல் எழுதக் கூடிய சூழல் நிலவியதன் விளைவே இந்த ஆசாரக் கோவையின் வரவு எனக் கூறலாம். இன்னோர் வகையிலும் இதனைக் கட்டமைக்க முடியும். அதாவது சமண பௌத்த மதங்கள் தமது சமயக் கருத்துக்களை முன்நிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் செய்தபோது அது பொதுமக்களிடம் பெற்ற செல்வாக்கை உணர்ந்து கொண்ட வைதீகர்கள் தமது சமயக் கருத்துக்களில் அவைதீகருடைய அறம் சார்ந்த கருத்துக்களை உள்வாங்கி அதனை வெளிப்படுத்திய முறைமையின் வெளிப்பாடே இவ்வாறான வைதீகம் சார்ந்த அறநூல்களின் வெளிவருகை எனக் குறிப்பிடலாம்.

ஆசாரக் கோவை என்ற நூலின் உள்ளடக்கம் பற்றி இவ்விடத்தில் நோக்குவது அவசியமானதாகும். சிறப்புப்பாயிரம் நீங்கலாக இது 100 வெண்பாக்களைக் கொண்டது (குறள்வெண்பா, நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, பல்தொடை வெண்பா, சவலை வெண்பா – என வெண்பா யாப்பு பல வடிவங்களிலும் பாடப்பட்டுள்ளது). இந்நூலிற்கு ஆதாரம் அல்லது மூலநூல் 'ஆரிடம்' என்பது தற்சிறப்புப் பாயிரத்தால் விளங்கும் (ஆரிடத்து தானறிந்த மாத்திரையான்..). எனினும் இந்நூலில் கூறியுள்ள ஆசாரங்கள் பெரும்பாலும் வடமொழியில் உள்ள 'சுக்கிரஸ்மிருதி' யிலிருந்து தொகுத்தவை என வடநூற் புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.[6]

ஆசாரக் கோவை – ஆசாரத்துக்கு வித்து என்று எட்டு விடயங்களை அறிமுகம் செய்வதுடன் ஆரம்பிக்கின்றது (நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை, நல்லினத்தாருடன் நட்புக்கொள்ளல்). இதுபோலவே ஒழுக்கமுடையவர் அடையும் நன்மைகள் என்று எட்டு விடயங்களைக் குறிப்பிடுகின்றது (குடிப்பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், அழகு, நிலவுரிமை, சொல்மேன்மை, கல்வி, நோயின்மை). இதனைத் தொடர்ந்து ஆசாரங்கள் பேசப்படுகின்றன. தனிமனித ஆசாரங்கள் அதாவது நாளாந்தம் கடைப்பிடிக்கும் ஒழுக்கங்கள் இதில் பலபடப் பேசப்படுகின்றன.

உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல், மலங்கழித்தல், கடவுள் வணக்கம், தாம்பத்தியம், வீட்டில் சுத்தம் பேணல், கற்றல், விருந்துசெய்தல், சகுனம் பார்த்தல்,முதலான விடயங்கள் செய்யத்தக்கன, செய்யத்தகாதன என்ற வரையறைக்குள் விபரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தனிமனிதருக்குமுரிய ஒழுக்கங்களாக இவை பேசப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கும் மேலாக—தனிமனிதனுக்கும் சான்றோருக்குமுரிய இடையுறவு பேசப்படுகின்றது. சான்றோருடன் செல்லும்போது செய்யத்தகாதவை, அவர்களுக்குச் செய்யும் மதிப்பு முதலானவை குறிப்பிடப்படுகின்றது. இன்னோர் வகையில் ஆளும் வர்க்கத்துக்கும் தனிமனிதனுக்கும் இடையேயான உறவும் விபரிக்கப்படுகின்றது. மன்னருடன் பழகும் முறை, மன்னன்முன் செய்யத்தகாதவை, மன்னன்முன் சொல்லக் கூடாதவை, மன்னன் செய்கையில் வெறுப்படையாமை முதலானவை பற்றிப் பேசுகின்றது. அந்தணரின் சொல்லைக் கேட்க என்றும் போதனை செய்கின்றது.

ஆசாரக் கோவை குறிப்பிடும் விடயங்களைத் தொகுத்து நோக்கின், ஆசார வித்து, அதன்பயன், தனிமனிதர் அன்றாடம் செய்யும் செயல்களின் ஆசாரம், அவர்களது சமூக ஊடாட்டத்தின் போதான ஆசாரம், அவர்களுக்கும் அரசுக்கும் இடையிலான ஆசாரம் ஆகியனவே பேசப்படுகின்றன என வரையறை செய்யலாம்.

ஆசாரக் கோவை தமிழ்ச் சூழலில் பெற்ற செல்வாக்கை அது பிற்காலத்தில் உரைகாரர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டமையால் அறியலாம். பத்துப்பாட்டு, நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், சீவக சிந்தாமணி ஆகியவற்றின் உரைகளில் இது மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்நூலில் சமண பௌத்த மதங்கள் போதித்த அகிம்சை இடம் பெறுவது – அகிம்சை என்ற கொள்கைக்குக் கிடைத்த பெரு வெற்றி எனலாம். தனிமனித ஒழுக்கங்களினூடாக குடிகளின் உயர்ச்சி பற்றியும் இது கவனங் கொண்டுள்ளது. அறத்தின் பயன் உலக வாழ்வைச் சிறப்பாக்குவதே என்பதை அழுத்திக் கூறுகின்றது. திருக்குறளைவிட இதில் தெளிவு அதிகமாகக் காணப்படுகின்றது. பார்ப்பனர் என்ற சமூகம் பெற்ற முக்கியத்துவத்தை இதன் வழி அறிய முடிகின்றது. பஞ்சமா பாதகங்கள் கடியப்படுகின்றன. திருக்குறளின் தாக்கம் இதில் தெரியவருகின்றது. இவ்வாறு சமூக ஒழுக்கம் என்ற தளத்தில் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகவும் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தில் அதிக அக்கறையுடையதாகவும், இவ்வாறான ஒழுக்கங்களினூடாக ஒரு இலட்சிய சமூகத்தைச் சிருஷ்டிக்க முயல்வதாகவும் இது விளங்குகிறது எனலாம்.

இனி, ஆசாரக்கோவையில் கூறப்பட்ட விடயங்கள் யாரை இலக்காகக் கொண்டது? என்ற வினாவை எழுப்பி இதன் சமூக உள்ளடக்கத்தை சிலர் விமர்சனம் செய்கின்றனர்.

* குலப்பிறப்பில், சாதியில், வயதில், பாலியலில் உள்ளடங்கிய ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துகின்றன.

* தனி மனிதனுடைய இயற்கையான செயல் முறைகளில் கட்டுப்பாட்டை விதிக்கின்றன (உண்ணல், உறங்கல், முதலியன)

* மூடநம்பிக்கைகளை வற்புறுத்துகிறது (சகுனம் பார்த்தல், வழிப்போக்கு முதலியன)

* பார்ப்பனரின் அசாதாரண பெறுமதிகளைப் புகழுகிறது.

* வயது, ஏற்றத் தாழ்வுக்கிடையே அனுசரிக்க வேண்டிய நடவடிக்கைகளை நிரற்படுத்துகிறது. (பெரியவர் முன் – சிரிக்காதே, கொட்டாவி விடாதே, தும்மாதே,.... முதலியன)

மேற் குறிப்பிட்ட விடயங்களை முன்நிறுத்தி இரு விமர்சனங்களை அவர்கள் முன்வைக்கின்றனர்.

ஒன்று: உண்ணல், உறங்கல் முதலிய இயற்கையான கருமங்களில் ஆசாரம் பேசுதலில் இவற்றை மிகுதியாகப் பின்பற்றும் சாதிகள் உயர்ந்தவை என்று பாராட்டப்படுகின்றன. உடல் உழைப்பில் இருந்து விடுபட்ட சாதியர் இவ்வாறான ஆசாரங்களைப் பின்பற்றுவதற்குச் சாத்தியப்பாடுகள் இருந்தன. ஆனால் உடல் உழைப்பை விட்டால் உயிர் வாழ இயலாத சாதியர் இந்த ஆசாரங்களைப் பின்பற்றும் சாத்தியங்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையது: சமண பௌத்தங்கள் சொன்ன அறக் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட வைதீகம் அதை மக்கள்மீது திணிக்கும் நோக்கில் எழுதப்பட்டவையே இவ்வாறான அறம் சார்ந்த அதிகாரங்கள் [7].

சமூக அமைப்பை ஒழுங்குறச் செய்வது இதன் நோக்கமா? அல்லது விழிப்பூட்டல் என்ற மேலான எண்ணம் இருந்ததா என்பதை இவ்விடத்தில் நோக்குவது அவசியமானதாகும். சமண பௌத்த மதங்கள் அடிநிலை மக்களை நோக்கியே தமது செயற்பாடுகளை முன்னெடுத்தன என்பது வெளிப்படை. ஆயின் வருணாசிர தர்மத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் வைதீகம் இவ்வாறான ஆசாரம் சொன்னது அம்மக்களை மேம்படுத்தவா? அல்லது அவர்களை இவ்வாறு கட்டுப்படுத்தித் தேக்க நிலையில் வைத்திருக்கவா? என்ற வினாக்கள் இவ்விடத்தெழுவது இயல்பானதே.

சமூகம் என்பது கட்டுக்கிடையாகத் தேங்கிக் கிடப்பதல்ல. அது இயக்கம் கொண்டது. அந்த இயக்கத்தில் மனித நாகரிகம் நாளுக்கு நாள் மேம்பட மேம்பட பல்வேறு கருத்துக்களின் ஊடுருவல் நிகழ்வது சாத்தியமே. எனவே சமூக ஒழுங்கமைவை விரும்பும் எவரும் தத்தமது சார்புநிலைகளுக்கு ஏற்ப தமது கருத்துக்களை முன்வைப்பது இயல்பு. அதன் ஏற்புடைமை மக்களைச் சார்ந்தது. இந்த வகையில் தான் – சமூக அக்கறை கொண்ட பெருவாயில் முள்ளியார் தமது கருத்துக்களைத், தம் சார்புநிலை நின்று வற்புறுத்தியுள்ளார். இதன் ஏற்புடைமைதான் பல நூல்களின் உரையாசிரியர்கள் ஆசாரக் கோவைப் பாடல்களை உதாரணங்கள் காட்டவேண்டியேற்பட்டது. இந்த ஒழுக்கங்கள் சைவத் தமிழ் பாரம்பரியத்தில் ஒன்றிப் போன ஒழுக்கங்களாகிவிட்டன. ஆறுமுக நாவலரது சைவ வினாவிடை கூறும் விடயங்கள் பெரும்பாலும் ஆசாரக்கோவை கூறியவற்றுடன் ஒத்துப் போகின்றன.[8] இதுதான் ஆசாரக்கோவையின் நிலைபேறாக்கத்துக்குச் சிறந்த உதாரணம். இவை மட்டுமன்று சைவத் தமிழ் மக்களிடையே இன்னும் நிலை கொண்டுள்ள பல ஆசாரங்கள் ஆசாரக்கோவையின் வழி வந்தவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள்

1. ஆசாரக் கோவை தற்சிறப்புப் பாயிரம் –

ஆ ரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி
–ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான் ஆசாரம்
யாரும் அறிய அறனாய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத் தொகுத்தான்
தீராத் திருவாயிலாய திறல் வன்கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளியென்பான்

2. *இருளது திகிரியொடு வலம்புரித் தடக்கை*
ஒருவனை வேண்ட இரு நிலம் கொடுத்த
நந்தி மால்வரை சிலம்பு நந்தி

மயிலை சீனி. வேங்கடசாமி. (2009) களப்பிரர் ஆடசியில் தமிழகம் – ப 66

3. *பொருகடல் வளாகம் ஒரு குடை நிழற்றி*
இருபிறப்பாளர்க்கு இரு நிதி ஈந்து
மனமகிழ்ந்து
அருள்புரி பெரும் அச்சுதர் தோவே

மேலது – ப. 56

4. மார்க்ஸ். அ., மேலது. – பிற்சேர்க்கை:
அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் – ஒரு பார்வை ப – 156

5. ஆசாரக் கோவை (1994) தெளிவுரை – அறிமுகம் மணிவாசகர் பதிப்பகம்

6. ராஜ் கௌதமன் (1997) அறமும் அதிகாரமும், விடியல் பதிப்பகம் ப. 216

7. ஆறுமுக நாவலர் – சைவவினாவிடை முதலாம் இரண்டாம் புத்தகங்கள்

(நித்திய கரும இயல் : மலசல மோசனம், சௌசம், தந்த சுத்தி, ஸ்நானம், அநுட்டானம், போசனம் படித்தல், இரவிற்செய்யும் கருமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழி நானூறும் சமூக நோக்கும்

செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

அறநெறிக் காலம் என்பது கி.பி. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியாகும். பதினெண்கீழ் கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்த சான்றோர்கள் அறத்தைக் கருவியாகப் பயன்படுத்தினர். ஆட்சியில் ஏற்பட்ட மாற்றம், சங்ககால வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் என்பனவற்றால் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தேவை – போதனைகள் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சமண முனிவர்கள் பலர் அறத்தை அடிப்படையாகக் கொண்டு போதனைகளை முன்வைத்தனர். இதன் காரணமாகவே அறநூல்கள் தோற்றம் பெற்றன. பழமொழிநானூறும் அறக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு போதனைகளை அறிவுரைகளை முன்வைப்பதாக அமைகின்றது. பழமொழி நானூறும் அதன் சமூக நோக்கும் பற்றியதாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

நூல் ஆசிரியரும் காலப்பின்னணியும்

பலமொழி நானூறு என்ற நூலின் ஆசிரியராக முன்றுரை அரையனார் விளங்குகின்றார். அவர் மக்களின் ஒழுகலாறுகளை முறைப்படுத்தி, பழமொழிகளை நிலைப்படுத்தியுள்ளார். அரையனார் என்னும் சொல்லால் இவரை அரச குடியினர் என்று கொள்ள இடம் உண்டு. கடல் துறைகளையே முன்றுறை என்பார்கள். கொற்கை முன்றுறை, கழார் முன்றுறை, காவிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்றுரை, வைகைக்கரையின் திருமருத முன்றுறை என்று பல முன்றுறைகளைப் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய துறைகளுள் ஒன்றைச் சேர்ந்த பகுதியில் இவர் பிறந்திருக்கலாம். தற்சிறப்புப் பாயிரத்தில் இவர் குறுநில மன்னராகச் சொல்லப்படுகின்றார். இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாகும். நூலில் வரும் கருத்துக்களைப் பார்க்கும் போது இவரைத் தென்பாண்டி நாட்டு புலவர்களுள் ஒருவராக கொள்ளலாம். சமண சமயக் கோட்பாடுகளில் அதீத பற்றுடையவர்.

பழமொழி நானூறு - இலக்கிய வடிவம்

திருக்குறள், நாலடியார் போன்று பழமொழி நானூறும் அறக்கருத்துக்களைக் கூறும் நூலாகச் சிறந்து விளங்குகின்றது. பழமொழி நானூறு என்பது நானூறு செய்யுட்களிலும் ஒவ்வொரு பழமொழியை எடுத்துக்காட்டி அதற்கு ஒப்பான நீதிகளையும் அறங்களையும் கூறுவதாக அமைகின்றது. நானூறு என்பது செய்யுட் தொகுப்பு மரபைத் தழுவி வந்ததாகும் (புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை).

அறம் செய்பவர்க்கும் அறவழி நோக்கித்
திறம் தெரிந்து செய்தக்கால் செல்வழி நன்றாம்
புறம் செய்யச் செல்வம் பெருகும், அறம் செய்ய
அல்லவை நீங்கி விடும். (23)

அறம் செய்பவர்கள் தகுதி உடையவர்களுக்கே செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அறத்தின் பயனை அடைவார்கள். இதனை விளக்க நான்காம் அடியில் 'அறம் செய்ய அல்லவை நீங்கிவிடும்' என்ற பழமொழியைப் பயன்படுத்தி தருமம் செய்யப் பாவம் போகும் எனக் கூறப்படுகின்றது. மூன்றடிகளில் அறக்கருத்தும் அதனை விளக்கும் பழமொழி நான்காம் அடியிலும் அமைவதைக் காணலாம். ஒவ்வொரு செய்யுளின் பொருளும் அந்தச் செய்யுளிலே முடிந்து விடுகின்றது. இதனை முத்தகச் செய்யுள் எனலாம். வெண்பாயாப்பு வகையால் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

பழமொழி என்பது பழைய வாக்குகளைக் குறிப்பது. முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களில் இருந்து தோன்றி நீண்டகாலமாக வழக்கிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வாக்குகள் பழமொழி எனப்படுகின்றது. இதனைத் தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடும்.

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப (தொல். செய். 1425)

இதனைத் தொல்காப்பியம் முதுமொழி என்கின்றது. ஒரு நாட்டின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் அறிவதற்கு பழமொழிகள் சான்றாக அமைகின்றன.

சமூக நோக்கு

பழமொழிகள் மக்கள் சமூகத்தில் வழங்கிவரும் அனுபவ அடிப்படையிலான அறிவுரை வாக்குகளாகும். பழமொழி நானூற்றிலும் சமூகத்திற்குத் தேவையான கருத்துக்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும் வாசகர் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறப்பட்டுள்ளன. கல்வி, ஈகை, அறம் செய்தல், செல்வம் சேர்த்தல், இன்னா செய்யாமை, முயற்சி, நட்பு, அரசியல், அமைச்சர் பகைத்திறம், படைவீரர், இல்வாழ்க்கை, சான்றோர் செய்கை, நட்பின் இயல்பு பொருளைப் போற்றுதல், நன்றியில் செல்வம், ஊழ், கொடுமை செய்வோர் இயல்பு, அறிவியல் செய்திகள், மருத்துவச் செய்திகள் என சமூகத்திற்குத் தேவையான அடிப்படைக் கருத்துக்கள், கொள்கைகளை பழமொழி நானூறு போதிக்கின்றது. அறக்கருத்துக்களைத் திரும்பத் திரும்பக் கூறுவதைக் காணலாம்.

நாடு செழிப்பாகவும் வளம் கொண்டதாகவும் விளங்குவதற்கு அரசாட்சி சிறப்பாக அமைய வேண்டும். அரசனின் குணவியல்புகள், அவனது படை, அமைச்சரவை, அரசனது கொடை ஆகியவை பற்றிய போதனைகளை பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது. அரசன் கற்ற அறிவுடையவர்களை பக்கபலமாக பெற்றிருக்க வேண்டும். அமைச்சர்களின் ஆலோசனையைப் பெறவேண்டும். துன்பம் வந்தபொழுது அரசன் தானே எடுக்கும் முடிவானது சுரை பொருந்திய யாழின் நரம்பை அறுத்துவிட்டு இசைக்க முயல்வது போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் என 'சுரையாழ் நரம்பறுத்தற்று' என்ற பழமொழியைக் காட்டி அமைச்சர்களின் ஆலோசனையை அரசன் பெறவேண்டும் என அரசியல் தத்துவம் பேசப்படுகின்றது.

அரசன் செங்கோன்மை உடையவனாக விளங்க வேண்டும்.

வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்
செங்கோலன் அல்லாக்கால் செய்வதென் – பொங்கு
படுதிரைச் சேர்ப்பமற்று இல்லையே யானை
தொடுவுண்ணின் மூடுங் கலம் (ப.நா. 55)

கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடே நன்று. யானையானது தொட்டு உண்ணத் தொடங்கிவிட்டால் அதற்கு மூடி மறைத்து வைக்கத் தகுதியான பாத்திரம் என்பது எதுவும் கிடையாதல்லவா? 'யானை தொடுவுண்ணின் மூடுங்கலம்' என்பது பழமொழி. அரசனே முறை தவறினால் தடுப்பவர் யாரும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

கோங்கு மரத்தில் ஏறினால் கிளை முறிந்து வீழக்கூடும். வலியுடைய மன்னருக்குச் சினம் உண்டாகப் பேசிய வலியற்றவர்கள் அவரால் அழிக்கப்படுவார்கள். அப்படிச் செய்வது தவறு என்பதை 'ஏமரார் கோங்கு ஏறினார்' என்ற பழமொழி விளக்குகின்றது. அரசன் பாரபட்சம் இல்லாமல் நீதி செலுத்த வேண்டும்.

முறை தெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்க வேண்டும் முறைதிரிந்து
நேரொழுகானாயின் அதுவாம் ஒருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு (ப. நா. 109)

தன்குடிகளிடையே பாரபட்சம் கற்பித்து நீதி தவறுதல் அரசனுக்கு மிகவும் பழிதரும் செயலாகும். நீதியின் முன் ஏழையையும் பணக்காரனையும் சமமாகவே பாவிக்க வேண்டும். 'ஒருபக்கம் நீரொழுகிக் பாலொழுகுமாறு' என்ற பழமொழி இதனை விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர்களை, உயர்ந்த நோக்கம் கொண்டவர்களை மதிக்க வேண்டும். சான்றோர்களின் மனம் வருந்துமாறு செய்வது ஒருவனுடைய குடும்பத்தை வேருடன் அழித்துவிடும் என்பதை 'கெடுமே கொடும்பாடு உடையான் குடி' என்ற பழமொழி மூலம் ஆசிரியர் விளக்குகின்றார். மிகுந்த செல்வாக்குள்ளவர்களை வறுமையாக்கிவிட முயல்வோம் என்று ஒருவன் சொல்லுதல் அவனுக்கே அது கேடாக வந்து முடியும் என கூறப்படுகின்றது. பிறருடைய செல்வமும் செல்வாக்கும் கண்டு பொறாமையினாலே அவரை அழிப்பேன் எனக் கூறுதல் தவறானது. அப்படி நினைப்பவர்களுக்கே அது தீங்காக மாறும் என்பதை 'கற்கிள்ளிக் கையுயந்தார் இல்' என்ற பழமொழி விளக்குகின்றது.

ஆசிரியர் ஒருவரை அண்டி கேட்டுத் தெளிவதே சிறப்பான கல்வியாக அமையும் என்பதை 'கற்றலின் கேட்டலே நன்று' என்ற பழமொழி மூலம் விளக்குகின்றார். 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்பதும் இதனையே வலியுறுத்துகின்றது. நல்ல அறிவு இயல்பாக இல்லாதவருக்கு கல்வி போதிப்பதால் அறிவுடையவராக நிலை நிறுத்தவே முடியாது என கல்வி கற்பவர்களின் தகுப்பாட்டினை முன்வைக்கின்றார்.

ஊழ் வினையால் அமைவதே செயல் நல்ல அறிவினையும்கூட ஊழிவினை கெடுத்துவிடும்.

சுட்டிச் சொல்லப்படும் பேரறிவினார் கண்ணும்
பட்ட இழுக்கம் பலவானால் – பட்ட
பொறியின் வகைய கருமம் அதனால்
அறிவினை ஊழே அடும் (ப. நா. 28)

மிக்க அறிவுடையோரும் தவறான காரியங்களைச் செய்ய நேர்தல் ஊழ்வசத்தின் காரணமாகவே என்பது சொல்லப்படுகின்றது. 'அறிவினை ஊழே அடும்' என்பது பழமொழி.

செல்வமும் வறுமையும் ஊழ்வினைப் பயனால் வந்து வாய்ப்பன. 'ஆகாதார்க்கு ஆகுவது இல்' என்பது பழமொழி. ஊழிவினையால் துன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதாயினும் அதனை முயற்சியால் மாற்றிக் கொள்ளலாமே தவிர தெய்வங்களைத் தொழுது மட்டும் மாற்றிக் கொள்ள முடியாது. 'இழகினான் ஆகாப்பதில்லையே முன்னம் எழுதினான் ஓலை பழுது' என்பது பழமொழி.

போலி நண்பர்கள் கேடு செய்வார்கள். நட்புடையவர்கள் போலவே பழகி மனம் ஒருமைப்பட்டு விளங்காதவர்கள் மிகவும் கெட்டவர்கள். அவர்களே 'இருதலைக் கொள்ளி' என்று சொல்லப்படுபவராவார். இதனை,

ஒருவரோடொன்றி ஒருப்படாதாரே
இருதலைக்கொள்ளி யென்பார்.

இருவரது பகைமையும் வளர இருவராலும் இருவருக்கும் கேடே விளைதலால் இருதலைக் கொள்ளி போன்றவராயினார். நண்பர்களை பழி கூறித் தூற்றினால் அந்த இழிவு நம்மையே வந்தடையும் என்பது கருத்து.

'உரையார் இழித்தக்க காணிற்கனா' (ப. நா 82)

நண்பர் தீங்கினைப் பொறுத்தல் நட்பில் பிழை பொறுத்தல் இல்லாதபோது அது நிலையாது என்பது கருத்து.

'ஒருவர் பொறை இருவர் நட்பு' (ப. நா. 110)

யாருடைய நட்பே ஆனாலும் அந்த நட்பை விடாது கொள்ளுதல் வேண்டும். நட்பு பற்றி பல அறிவுரைகளை பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது.

பெண்களும் மக்களும் நற்கதி போகவிடாது தடுக்கின்ற தளைகள் என்றறிந்து கைவிட வேண்டும் எனக் கூறுகின்றது. தவமானது நன்மை தீமைகளை ஒன்றாகக் கருதி அனைவரிடமும் அருளுடன் இருத்தலே. பிறப்பறுத்துப் பேரின்பம் பெற வேண்டுமானால் முதலிலே பிறப்புக்குக் காரணமான பந்த பாசங்களின் தொடர்புகளை எல்லாம் முற்றவும் அறுத்துவிடுக என்று கூறப்படுகின்றது. 'நீரற நீர்ச்சார்வு அறும்' என்னும் பழமொழி இதனை விளக்குகின்றது. வினைகள் நீங்கப் பிறவியும் அற்றுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலே துறவு சிறந்தது. அது இயலாது போயினும் இல்வாழ்விலே எல்லாம் அனுபவித்த பின்பாவது துறவு பூண்க என்று கூறப்படுகின்றது. துறவா உட்பினால் என்ன பயன் என்பது பழமொழி. துறவிகள் புலால் உண்ணுதலை கண்டிக்கின்றது. பழமொழி நானூறு உலக பந்த பாசங்களில் இருந்து முற்றும் விடுபடுதலைப் பற்றிப் பேசுகின்றது.

பலநாளும் ஆற்றார் எனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவாற்றாற் செய்க – கலைதாங்கி
நைவது போலும் நுசும்பினாய் நல்லறம்
செய்வது செய்யாது கேள்

தருமத்தை தொடர்ந்து செய்ய முடியாமற் போனாலும் முடிந்தவரையிலும் சிலகாலமாவது செய்ய வேண்டும்; அந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது. தரும நெறியே இருமையிலும் நன்மை தருவது. இதனை உணர்ந்து பொருளைப் பதுக்கி வைக்காமல் தருமத்தில் ஈடுபடுத்த வேண்டும் என தர்மக் கொள்கையை பழமொழி நானூறு கூறுகின்றது.

பழமொழி நானூற்றில் சமூகத்திற்குத் தேவையான மருத்துவச் செய்திகளும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. மருத்துவப் பொருட்கள், நோய் பற்றிய செய்திகள், மருத்துவரின் இயல்புகள், நோய் தீர்க்கும் வழிமுறைகள் என்பவற்றைப் பற்றிய விடயங்கள் பழமொழி நானூற்றில் இடம்பெறுகின்றன. வேப்பமரம் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் கூறப்படுகின்றது. வேப்பிலை, வேப்பெண்ணை என்பன மருந்தாகப் பயன்பட்டன. வேப்பிலை கிருமிகளைக் கொல்லவல்லது. 'தேவரே தின்னினும் வேம்பு' என பழமொழி நானூறு குறிப்பிடும். வேம்பு கசப்பானது எனவும், அது மருந்து எனவும் கூறப்படுகின்றது. '*ஆலெண்ணிற் பூவென்னுமாறு*', '*மிளகு உற உண்பான் புகல்*' மிளகு, ஆல் என்பன மருத்துவப் பொருள்களாகப் பயன்பட்டதை பழமொழி நானூற்றில் காண முடியும். '*கூன் மேல் எழுந்த குரு*' –

கூன் என்பது இங்கு முதுகு என்று பொருள்படும். முதுகின் மேல் வரும் கட்டி, துன்பத்தைத் தரும் எனக் கூறப்படுகின்றது. சூல்கொண்ட ஆட்டின் பாலை உண்ணக் கூடாது. உண்டால் நோய் உண்டாகும் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

வைத்தியன் கொடுத்தால் மருந்து
இல்லாவிட்டால் மண்

நோயைத் தீர்த்து வைப்பவர் வைத்தியர் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. மருத்துவன் கொடுத்தால் அது மருந்து, இல்லாவிட்டால் மண் என்ற மனப்பான்மை மக்களிடம் இருந்தது என்ற கருத்தை ஆசிரியர் முன்வைக்கிறார். 'போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தானாம்' இதில் சுரம் வந்தவன் புளிப்புச் சுவையுடைய உணவை உண்ணக் கூடாது எனக் கூறப்படுகின்றது. சமூகத்திற்குத் தேவையான மருத்துவச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. சமூகத்திற்குத் தேவையான அறிவியற் செய்திகளைப் பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது.

இரவலர் தம்வரிசை என்பார் மடவார்
கரவலராய்க் கைவண்மை பூண்ட – புரவலர்
சீர்வரைய ஆகுமாம் செய்கை
நீர் வரைய வாம் நீர் மலர் (ப.நா. 274)

நீரின் வெப்பநிலை அதற்குக் கொடுக்கப்படும் வெப்பத்தின் அளவைப் பொறுத்தது. கொடையின் அளவு கொடுப்பவரின் சீர்மை அளவாகவே இருக்கும். நீரின்கண் உள்ள மலர் நீரளவாகவே இருப்பது போல் சிறந்த செயல்கள் எல்லாம் அவற்றைச் செய்பவரின் சிறந்த பண்பின் அளவாகவே இருக்கும் என அறிவியல் சார்ந்து கூறப்படுகின்றது.

ஒட்டி ஒன்று சேராத மண் சுவர் வைப்பதற்கு உதவாதது போல தீயவர் ஒருபோதும் பிறருக்கு உதவமாட்டார் என்று கூறப்படுகின்றது. அடர்த்தி மாறுபட இருபொருள்களைக் கலக்க முடியாது. பொருந்தா மண் கொண்டு கலவை செய்ய இயலாததால் சுவர் வைக்கவும் முடியாது என்று அறிவியல் ரீதியான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

ஆசிரியரின் சமரசப்போக்கு

ஆசிரியர் சமண சமயத்தைச் சேர்ந்தவரானாலும் திருமால், சிவன் பற்றிய செய்திகளை நூலில் குறிப்பிடுகின்றார். நல்லோரது நட்பின் திறம் பற்றிக் கூறும் பொழுது சிவன், உமை பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக
கட்டங்கம் வேல்கொடி கொண்டானும் கொண்டானே (ப.நா. 124)

என்ற அடிகளில் சிவன் ஒருபாகத்தில் உமையை வைத்திருக்கின்றான். நட்புடையார் தம் மெய் முழுவதும் கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

திருமால், திருமகள், அவரது அம்பு, கருடன் தொடர்பான விடயங்கள் பாடல்களில் இடம்பெறுகின்றன.

ஆவிற்கு அரும்பணி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவலன் என்றுலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா தீங்குரைக்கும்
நாவிற்கு நல்குரவு இல் (ப.நா. 234)

தேவர் ஆனாலும் கடவுள் ஆனாலும் மனிதர் ஆனாலும் வரையறை இன்றி பழிதூற்றும் இவ்வுலகம். கண்ணன் மலை கொண்டு பசுக்கூட்டத்தைக் காப்பாற்றினாலும் அவனைக் கோவிற்குக் கோவலன் என்றே இவ்வுலகம் கூறும். 'தீங்குரைக்கும் நாவிற்கு நல்குரவு இல்' என்பது பழமொழி. தோற்றப் பொலிவு பகைவரை வயப்படுத்த வல்லது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. திருமாலைக் கொல்ல வந்த மதுகைடவர் திருமாலின் தோற்றப் பொலிவைக் கண்டு அவரைக் கொல்லும் எண்ணத்தைக் கைவிட்டனர் என்று கூறுகின்றார். இவ்வாறு திருமால், சிவன் பற்றிய குறிப்புக்களை ஆசிரியர் தருகின்றார். சமய சமரச நோக்குடையவராக ஆசிரியர் திகழுகின்றார்.

இராமாயணம் மகாபாரதத் தொன்மக் கதையைப் பயன்படுத்தல்

இராமாயண மகாபாரதக் கதைத் தொன்மங்களின் ஊடாக கருத்துக்களை முன்வைப்பதைக் காணலாம். தொன்மக் கதைகளின் ஊடாக கருத்துக்களைக் கூறும் பொழுது மக்கள் மனதில் அவை ஆழவேரூன்றும் என ஆசிரியர் கருதியிருக்கின்றார். மகாபாரதத்தில் இடம்பெறும் சில நிகழ்ச்சிகள் பழமொழி நானூற்றில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத் துள்ளும் பணையம் தம் தாயமா
ஈரைம் பதின்மரும் போரொதிர்ந் தைவரோடு
ஏதிலாராகி இடைவிண்டார் ஆதலால்
காதலோ டாடார் கவறு *(ப. நா. 249)*

இப்பாடல் பாரதக்கதையை சான்று காட்டி சூதாட்டத்தின் விளைவை விளக்குகின்றது. காதலோடாடார் கவறு என்ற பழமொழி மூலம் இதனை தெளிவுபடுத்துகின்றார்.

உழ்வினையுடையார் எத்தகைய துன்பம் வந்தாலும் தப்பிக்கொள்வர் என்ற கருத்தை அடியொற்றி 'அரக்கின் உள் பொய்யற்ற ஐவரும் போயினார் இல்லையே' (பழ. 234) என அரக்கு மாளிகைத் தீயினுள் பாண்டவர் தப்பிய செய்தி எடுத்துக் காட்டப்படுகின்றது. கௌரவர்க்கு துணையாக இருந்த பலராமன் துரியோதனனுக்கு உதவ நினையாது விதுரனை கூட்டிக்கொண்டு தீர்த்தயாத்திரை சென்ற நிகழ்வை 'பாப்புக் கொடியார்க்குப் பால்மேனியான் போல' (பழ. 137) என உவமை கூறி நட்பின் விலக்கு பற்றி பழமொழியால் விளக்குகின்றார் ஆசிரியர்.

இராமாயண நிகழ்ச்சிகளை பழமொழி ஆசிரியர் குறிப்பிட்டு அதற்கு ஒப்பான பழமொழிகளையும் கூறுவதைக் காணலாம்.

பொலந்தார் இராமன் துணையாகத் தான் போந்து
இலங்கை இறைவற்கு இளையான் – இலங்கைக்கே
போந்திறை யாவதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழிஇயலார் இல்:

இலங்கைக்கு உரிய இராவணேசுவரனுக்கு இளையவனான விபீஷணன் இலங்கைக்கே மீளவும் சென்று அதற்கு அரசனாகும் பதவியைப் பெற்றான் எனவும் இராமனைச் சார்ந்ததால் உயர்ந்த பயனை விபீஷணன் பெற்றான் எனவும் 'பெரியாரைச் சார்ந்து கெழீஇயலார் இல்' என்ற பழமொழி மூலம் விளக்குகின்றார். வலிமை உடையவரைச் சார்ந்திருந்தால் பகைமையை ஒழித்து தமது செயலை முடித்துப் பயன் பெறலாம் என்ற கருத்தை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கின்றார். இராமனிடம் பகைகொண்ட இராவணன் அழிவு பெற்றான் என்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பெரியாரின் பகையை விரும்பி ஏற்காதே என்று அறிவுறுத்த

ஆற்றப் பெரியார் பகை வேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டார்கள் போரில் அகப்பட்டான் (ப.நா. 291)

இராமனின் பகையை இராவணன் கொண்டதால் அழிந்தான் என்பதை வலியுறுத்துகின்றது.

இராமாயண, மகாபாரத தொன்மக் கருத்துக்களைக் குறிப்பிட்டு அதற்கு ஏற்ப பழமொழிகளை விளக்கி சொல்கின்றார்.

வரலாற்றுக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழன், கரிகாலன், பாரி, பேகன் முதலானோர் பற்றிய முற்கால நிகழ்ச்சிகள் மனுநீதிச் சோழன், பொற்கைப் பாண்டியன் பற்றிய வரலாற்றுச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

திருக்குறளோடு ஒப்புமை

திருக்குறளில் வரும் சொல்லாட்சிகள், தொடர்கள், கருத்துக்கள் என்பன பழமொழி நானூற்றில் வருகின்றன. திருக்குறளில் வரும் கருத்தை அடியொற்றி மக்கள் பழமொழிகளைக் கையாண்டிருக்கலாம். திருக்குறளும் பழமொழி நானூறும் வடிவ அமைப்பாலும் சொல்லும் முறையாலும் வேறுபட்டு இருந்தாலும் சொல்லும் பொருள்கள் ஒரு மாதிரி அமைகின்றன.

ஒரு செயலைச் செய்வதற்கு அச்செயலின் வழிவகைகளைத் தெரிந்தவர்களை நண்பர்களாக்கிக் கொள்வது அறிவுடையோர் செயல். பழகின யானையைக் கொண்டு பழகாத காட்டு யானையைப் பிடிப்பதற்கு ஒப்பாகும். இச்செயல் மன்னர்களுக்கும் பொருந்தும் என்பதை திருக்குறளும், பழமொழி நானூறும் குறிப்பிடுவதைக் காணலாம்.

வினையான் வினையாக்கிக் கோடல நனைகவுள்
யானையால் யானையாத் தற்று (குறள் 678)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணமுடைய அறிவினார் தந்நலம்
.... மாமன்னர்
யானையால் யானையாத் தற்று (ப.நா 29)

ஒருவர் வாய்மையுடையவர் என்றால் யாருக்கும் எந்தவிதமான தீமையும் உண்டாக்காத வார்த்தையை உடையவர் என்பது பொருள்.

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
திமையிலாத சொலல் (குறள் 291)

இதனை அடியொற்றி

பூந்தண் புனல் புகார்ப் பூமி குறி காண்டற்கு
.... தன் கண்ணிற்
கண்டதும் எண்ணிச் சொலல் (ப.நா. 185)

ஒருவர் தாம் கண்ணாற் கண்ட நிகழ்ச்சியேபாயினும் அதைக் கூறுவதால் மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாதவாறு சொல்லுவதுதான் வாய்மை எனப் பழமொழி நானூறு கூறுகின்றது.

முடிவுரை

ஏனைய அறநூல்களிலிருந்து இந்நூல் வேறுபடுகின்றது. இந்தப் பழமொழிகள் அன்றைய மக்களிடையே வழங்கி வந்தவை. அவற்றை எல்லாம் தேடிப்பெற்று அறக்கருத்துக்களோடு ஒப்பிட்டு செய்யுள் ஆக்கியிருக்கின்றார். இடம்பெற்றுள்ள விடயங்கள் ஒழுங்கற்ற முறையில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அரசு, நட்பு, பகை, ஊழ், அரசு, நட்பு, குடிப்பிறந்தார், அமைச்சர், என இயல்களாகப் பகுக்காது ஆங்காங்கே செய்யுட்கள் அமைக்கப்பட்டுள்ளன. செய்யுள்கள் சுவையானவையாகவும் நம்பத்தக்கவையாகவும் அமைகின்றன. அன்றைய காலத்தில் கூறப்பட்டவை இன்றைய காலத்திற்கும் பொருந்துவனவாக உள்ளன.

உசாத்துணை!

01. பழமொழி நானூறு, 1996, முல்லை நிலையம், மண்ணடி, சென்னை.
02. திருக்குறள், 2007, கற்பகம் வெளியீடு, சென்னை.
03. தொல்காப்பியம், 2006, உமா பதிப்பகம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற இலக்கியங்களில் நட்பு

றூபி வலன்ரீனா பிரான்ஸிஸ்

மனிதனின் வாழ்க்கை நெறிமுறைகளுள் ஒன்றாக நட்பு தொன்று தொட்டுப் பேணப்பட்டு வருகின்றது. உலகில் மனிதனைவிட விலங்குகளும் பறவைகளும்கூட தத்தம் இனத்துடனோ அல்லது பிற இனங்களுடனோ நட்புறவுடன் இணைந்து வாழ்வதைக் காணலாமாயினும் எல்லா ஜீவராசிகளையும் விட அறிவுடனும் உணர்வுடனும் வாழ்க்கையில் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்து வாழவேண்டியவன் என்ற வகையில் ஏனைய விழுமியங்களைப் போலவே நட்பும் மனிதனுக்குரிய சிறப்பானதும் இன்றியமையாததுமான பண்பாக விளங்கி வருகின்றது.

நல்ல நட்பிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்களையும் தீய நட்பிற்கு உதாரணமாக வாழ்ந்தவர்களையும் வரலாற்றிலே காணலாம். தமிழர்தம் வாழ்க்கை முறைமையிலும் நட்பிற்கு மிக முக்கியமான இடம் உண்டு. தமிழ் இலக்கியத்திலும் முன்னைய காலம் தொட்டு இன்றுவரை நட்பு பாடுபொருளாக இலக்கிய கர்த்தாக்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தம் உயிர்க்கு இறுதி வரும் என நிச்சயமாகத் தெரிந்திருந்தும் நட்பிற்காக உயிர் துறந்தோர், தம் உயிரைக் காக்க நட்பை விலை பேசியோர் அல்லது கைவிட்டோர், சேரக் கூடாத இடத்தில் சேர்ந்து நண்பரைக் காட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தோர் எனப் பல ரகப்பட்டோரை– மனித வரலாற்றில் காணப்படுகின்ற தன்மைக்கேற்ப–இலக்கியங்கள் இனங்காட்டியுள்ளன. ஏனைய உறவுகளைவிட நட்பு வலிமையுள்ளதெனக் கூறப்படுகின்றது. நல்ல நண்பர்களைப் பெறுவதென்பது பெரும் பேறுகளுள் ஒன்றாகவும் கணிக்கப்படுகின்றது. 'அன்பான நண்பனை ஆபத்தில் அறி', 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என வழங்குகின்ற முதுமொழிகள் முன்னோர் கண்ட நெறிகளுள் நட்பின் மேன்மையை வலியுறுத்துவன. கால, தேச எல்லைகளையும் இன, மத, பால் மற்றும் மொழி வேறுபாடுகளையும் கடந்து நட்பு வலிமையும் உறுதியும் பெற்று, சாதிக்கக்கூடிய பண்பினையுடையது.

நோக்கம்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் நட்பு இன்றியமையாதது என்பதால் அந்நட்பின் சிறப்புகள், நல்ல நட்பையும் தீய நட்பையும் இனங்காணுதல், அவற்றின் பண்புகள் போன்ற இன்னோரன்ன விடயங்களை தமிழ் இலக்கியங்கள் – குறிப்பாக அறநூல்கள் – வலியுறுத்தியுள்ளன.

இவ்வாறு பெருமையும் முக்கியத்துவமும் உடையதாக விளங்கும் நட்பு, தமிழரின் வாழ்க்கை முறைகளுள் போற்றப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்தவாற்றினை அறிந்து கொள்வது அது குறித்த புரிதலுக்கும், தொடரும் வரலாற்றிற்கும் உறுதுணையாய் அமையக் கூடியது என்பதால் இவ்விடயம் இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக அறநெறிக்காலம் (சங்க மருவிய காலம்) என தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிக்கப்படுகின்ற கி.பி 300 – கி.பி 600 வரையிலான காலப் பகுதியில் இயற்றப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய பதினொரு அறநூல்களில் 'நட்பு' குறித்துக் கூறப்பட்டுள்ள விடயங்களை ஆதாரமாகக் கொண்டே இந்த ஆய்வு அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்கள் நட்புப் பற்றிக் கூறும் விடயங்களைத் தொகுத்துரைப்பதனூடாக அக் குறித்த காலத்தில் தமிழரின் வாழ்க்கை முறையில் நட்பு பெற்றிருந்த முக்கியத்துவத்தை வலியுறுத்துவதும், இக் கருத்துக்கள் இன்றும் வலிமையும் பெறுமதியும் உள்ளனவாய் இருப்பதனைத் தெளிவுறுத்துவதும் இந்த ஆய்வின் நோக்கங்களாகும்.

திருக்குறள் பொருட்பால்: அங்கவியலில் நட்பு (அதி:79), நட்பாராய்தல் (அதி:80), பழைமை (அதி:81), தீநட்பு(அதி:82), கூடாநட்பு (அதி:83) ஆகிய அதிகாரங்களும் நாலடியார் பொருட்பாலில் நட்பாராய்தல் (அதி:22), நட்பிற் பிழை பொறுத்தல் (அதி:23), கூடா நட்பு (அதி:24) ஆகிய அதிகாரங்களும் நட்பு குறித்து மிகச் சிறப்பாக விபரித்துள்ளன. ஏனைய அறநூல்களில் ஆங்காங்கே இது குறித்த கருத்துக்களைக் காணலாம். இவை அனைத்தையும் தொகுத்து நோக்குகையில் தமிழர் வாழ்வில் 'நட்பு' என்னும் பண்புநெறி பெற்றுள்ள முக்கியத்துவத்தை உணரலாம்.

இந்நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நட்பின் இலக்கணம், நட்பின் சிறப்பும் முக்கியத்துவமும், நட்பின் வகை, நட்பின் அளவு, நட்பிற்குத் தேவையான பண்புகள், வேண்டத் தகாத பண்புகள், கொள்ளத் தகுந்த நட்பு, கொள்ளத் தகாத நட்பு, ஆகிய பகுப்புக்களினூடாக நோக்கப்படுகின்றன.

நல்ல நட்பின் இலக்கணம்

நல்ல நட்பின் இலக்கணம் குறித்து திருக்குறள் மிகச் சிறந்த வரைவிலக்கணத்தைத் தந்துள்ளமையைக் காணலாம்.

அழிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு (787)

என்பதன் மூலம் நண்பன் கேட்டினைத் தரும் தீநெறிகளில் செல்லும்போது விலக்குதல், நன்னெறியில் செல்லாவிட்டால் அதிற் செலுத்துதல், தெய்வத்தால் கேடுவரின் அதனை அவருடன் அனுபவித்தல் ஆகியவற்றை நல்ல நட்பின் இலக்கணமாக வள்ளுவர் கூறுகின்றார். அத்துடன் காணும்போது அகமன்றி முகம் மாத்திரம் மலருமாறு நட்புச் செய்வது நட்பல்ல, அன்பால் அகமும் மலர்வதே நட்பாகும் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு' (786)

என்னும் குறள் மூலமும் எவ்வகையாலும் உறவை முறித்துக் கொள்ளாத நட்பே மிக சிறந்த, பழமையான நட்பு என்பதை

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு (786)

எனும் குறள் மூலமும் வலியுறுத்துகின்றார்.

கோட்டுப் பூப்போல மலர்ந்து பிற்கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி – தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்புவாரை
நயப்பாரும் நட்பாரும் இல் (நாலடி: 215)

என்னும் செய்யுளில் நட்புடைமை என்பது மரக்கிளையில் பூக்கும் மலர்கள் முதலில் மலர்ந்து பின்பு தாம் உதிரும்வரை குவியாது இருப்பது போல முதலில் உள்ளம் மலர்ந்து பின்னர் முடிவு வரையில் சுருங்காமல் விரும்பியதை விரும்பியபடியே இருப்பதே நட்பாகும். தோண்டப்பட்ட நீர்நிலையில் மலர்ந்த தாமரை முதலான மலரைப் போல முதல்நாளில் மகிழ்வால் மலர்ந்து நாளடைவில் மனம் சுருங்கும் குணமுடையவரை நாடுபவரும் இல்லை அவர்களை நட்புச் செய்பவரும் இல்லை என நாலடியார் குறிப்பிடுகின்றது.

நட்பின் முக்கியத்துவம் / சிறப்புக்கள்

திருக்குறள் பொருட்பால், அங்கவியலில் அரசியல் நடத்துதற்குத் துணையான அமைச்சு, நாடு, அரண், பொருள்செயல்வகை, படைமாட்சி, நட்பு ஆகிய ஆறு அங்கங்கள் கூறப்படுகின்றன. படை போலவே அரசனுக்கு வினையிடத்து உதவுவனவற்றுள் நட்பும் ஒன்றெனக் குறிப்பிடப்படுகின்றது. அரசர்க்குரியவாக இவை கூறப்படினும் இவற்றின் பண்புகள் யாவர்க்கும் உரியனவாக இன்றுவரை பொருந்திப்போவதைக் காண முடியும்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு (781)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புப் போல செய்து கொள்வதற்குரிய சிறந்த பொருள் வேறொன்றுமில்லை எனவும், அதேவேளை பகைவர் செய்யும் வினைக்குப் புகுதற்கரிய காவலாக அதனைத் (நட்பைத்) தவிர வேறெதுவும் இல்லை எனவும் கூறுவதன் மூலம், பகைவரை வெல்லுதற்குரிய வலுவுள்ள ஆயுதமாக சிறந்த நட்பு இருக்கின்றது என்பதை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

பிறரோடு நன்கு பொருந்தி நட்புக் கொள்ளாதவன் இழிவான நாய்க்கு ஒப்பிடப்படுகின்றான். 'நன்கு நள்ளாதான் நாய்' (சிறு: 88) என்றும், தான் செல்லும் திசையில் நட்புக் கொள்ளுதல் இனிமையானது (இனியவை: 3) எனவும் குறிப்பிடப்படுவதன் மூலம் நட்பின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

நட்பின் வகை

மூவகையான நட்புப் பற்றி நாலடியார் 216 ஆம் செய்யுள் குறிப்பிட்டுள்ளது.

கடையாயர் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கி னனையர் தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு

கடைநட்பு, நடுநட்பு, தலைநட்பு என நட்பை மூவகைப்படுத்தி கடைநட்பினர் பாக்குமரத்திற்கும், நடுநட்பினர் தென்னை மரத்திற்கும், தலைநட்பினர் பனைமரத்திற்கும் ஒப்பிடப்படுவதனைக் காணலாம். பாக்குமரம், எல்லாக்காலத்தும் நீரை அதிகமாக வேண்டுவது; தென்னைமரம், அவ்வப்போது விடப்படும் நீருக்கேற்ப பயன் தருவது; பனைமரம், நடப்பட்டபோதோ பின்னரோ எதனையும் எதிர்பாராது நிறைந்த பயனைத் தருவது. உதவிக்காக நண்பரானோர், உதவி செய்யப்படும் நிலைக்கேற்ப நண்பாரானோர், உதவியை எதிர்பாராது நண்பரானோர் என இம் மூவகையினர் அமைவர். ஒரு காலும் உபசரணை வேண்டாததான தலைநட்பு பனை மரத்திற்கு ஒப்பிடப்படுவது சிறப்பிற்குரியது.

'செயற்கரிய யாவுள......' என்னும் (781) திருக்குறளிற்கு உரை எழுதும் பரிமேலழகர், நட்பு இயற்கை, செயற்கை என இரு வகைப்படும் எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை நட்பு பிறப்பு முறையாலும் தேய முறையாலும் என இரு வகையாக வருமெனவும் செயற்கை நட்பு முன் செய்த உதவிபற்றி வருமெனவும் அவற்றுள் பின்னையதே சிறப்புடையதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

நட்பின் அளவு

நட்பு நீடிக்கும் உயர்எல்லையையும், நட்பு முறிவடையும் முடிவெல்லையையும் அறநூல்கள் குறிப்பிட்டுள்ளன. குறிப்பாக திருக்குறள், 'வேறுபடாமல் முடிந்தளவு நண்பரைத் தாங்கி நிற்றலை' நட்பின் உயர் எல்லையாக வரையறை செய்கின்றது.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை (789)

என்பதில் இக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

நட்பின் முறிவு அல்லது முடிவெல்லை பற்றி (திரி:37) திரிகடுகம் குறிப்பிடுகின்றது. அதாவது நட்பினர் இருவரைப் பிரிக்கும்படி ஒருவன் சொல்லும் கோட்சொல்லைக் கேட்பவனைப் பொறுத்து நட்பின் எல்லை காணப்படும் எனப்படுகின்றது. நட்பில் நம்பிக்கை தளரும்போது கோட் சொல்லினை நம்பும் ஒருவரால் அந்த நட்பு முடிவிற்கு வந்துவிடும் என்பதை மிகத் தெளிவாக இச் செய்யுள் உணர்த்துகின்றது. ஒருவனுக்கு வரும் கேடு அல்லது அழிவினை அதற்கான அளவுகோலாகக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் (796)

செல்வக் காலத்துச் சேர்தலும், கேடு வந்தபோது வேறுபடுதலும் நிகழுகையில் அக் கேடே நட்பின் அளவுகோலாகவும் அதேவேளை பெறப்படும் அறிவாகவும் (நண்பரை அறிதல்) இருக்கும் எனவும் இங்கு கிளைஞர் என்பது ஆகுபெயராக வந்துள்ளதென்றும் பரிமேலழகர் தன்னுரையிற் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்த்தல் இறுவாய நட்புக்கள் என்பதன் மூலம் பொய் ஒழுக்கம் நட்பினுக்கு இறுதியைக் தரும் என நான்மணிக்கடிகை (17) குறிப்பிடுகின்றது. நட்பின் கொழுமுனை பொய் வழங்கின் இல்லாகும் என்பதன் மூலம் நட்பின் செழித்த முளையானது பொய்யாகிய நெருப்பைப் பெய்தால் அழிந்து போகும் எனத் திரிகடுகம் (83) குறிப்பிடுகின்றது.

நட்பின் இயல்புகள் / நட்பிற்குத் தேவையான பண்புகள்

நட்பிற்கு முதலில் வேண்டப்படும் பண்பு மனமொத்த அன்பாகும். அன்பற்றோரின் நட்பு வைக்கோலில் பற்றிய தீயைப் போல முதலில் பெருகுவதைப் போலத் தோற்றமளித்துப் பின்னர் சிறிதும் நில்லாது போய்விடும் என நாலடியார் (234) கூறுகிறது.

பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்
பந்தமி லாளர் தொடர்பு

'உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும்' என்பதில் ஒத்த உணர்ச்சி நட்பாகும் உரிமையைத் தரும் எனத் திருக்குறள் (785) குறிப்பிடுகின்றது. இதன் உரையில் 'உணர்ச்சியொத்தால் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமையையுடைய நட்பைத் தரும்' என விளக்கும் பரிமேலழகர், கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பை இதற்கு உதாரணமாகவும் காட்டுகின்றார்.

உள்ளத்தில் நீங்காத அன்புடையவர்கள் தூரத்தே இருந்தாலும் மாறுவதில்லை என்பதையும், அருகிலே இருந்தாலும் உள்ளத்தில் அன்பு இல்லாதவரிடத்து நட்பு வந்து விடுவதில்லை என்பதையும்,

பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார் - பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு (நாலடி: 214)

என நாலடியார் கூறுகிறது. நட்பிற்கு மன ஒற்றுமை அவசியமானதென்பதை 'நேரா நெஞ்சத்தோன் நட்டோனல்லன்' (முதுமொழி: 5:5) என்பதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமொழிக் காஞ்சியும் வலியுறுத்தியுள்ளது. எனவே இவற்றின் மூலம் நட்பிற்கு இன்றியமையாத பண்புகளுள் மிக முக்கியமானதாக ஒத்த அன்பு குறிப்பிடப்படுவதனைக் காணலாம்.

நண்பருக்குத் துன்பம் வந்தபோது **உடனுதவுதல்** நட்பில் வேண்டப்படும் இன்னுமொரு பண்பாகும் என்பதை அறநூல்கள் வலியுறுத்தியுள்ளன. திருக்குறள்,

உடுக்கை யிழந்தவன் கைபோ லாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)

என்பதில், இதனைக் குறிப்பிடுகின்றது. ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி, அவ்விளிவரலைத் களைவது போல நண்பனுக்குத் துன்பம் வந்தபோது அப்பொழுதே சென்றுதவி அத் துன்பத்தைக் களைவதே நட்பாகும் என்பதே இதன் பொருளாகும். நட்பிற்கு உரிமையோடு செய்தல் தேவை என்பதை 'நட்பிற்கு உறுப்பு கெழுதகைமை' (திருக்: 802) என்பதில் திருக்குறள் வலியுறுத்தியுள்ளது.

உதவும் மனப்பாங்கு அவசியமானதென்பதை 'நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று' (முதுமொழி 9:10) என்பதன் மூலமும் முதுமொழிக்காஞ்சி வலியுறுத்தியுள்ளது. உதவி செய்யாதவரின் நட்பு பயனற்றது என்பதை,

நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்? (நாலடி 218)

என்பதில் நாலடியார் குறிப்பிட்டுள்ளது. அதாவது நாயின் காலிலுள்ள சிறிய விரல்களைப் போல மிகவும் நெருக்கமுள்ளவராயிருந்தாலும், ஈயின் காலளவேனும் உதவி செய்யாதவர்களின் நட்பினாற் பயனில்லை என்பதே இதன் பொருளாகும்.

நண்பனுக்குத் துன்பம் உண்டானபோது அவன் அதைக் கூறமுன்பே உதவுதல் – உயிரையும் கொடுத்தல் – நட்பிற்குத் தேவையான பண்பாகும் என்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனேல்.... (நாலடி:238)

என்னும் வரிகளில் நாலடியார் உணர்த்துகின்றது.

அடுத்து நட்பிற்குப் **பொறுமை** அவசியமானது என்பதை அறநூல்கள் வலியுறுத்தியுள்ளமையைக் காணலாம்.

இறப்பவே தீய செயினுந்தந் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ
...

ஒருவர் பொறை இருவர் நட்பு

என நாலடியாரும் *(223)*,

தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை என்றே உணர்வதாம்
...
ஒருவர் பொறையிருவர் நட்பு

எனப் பழமொழி நானூறும் **(133)** இதனை வலியுறுத்தியுள்ளன.

மன்னிக்கும் மனப்பாங்கு நட்பிற்குத் தேவை என்பதை நாலடியார் கூறுகிறது. தம் கண்களைக் குத்திவிட்டது என்பதற்காகத் தம் கையை யாரும் வெட்டி விடுவதில்லை. எனவே நண்பர் செய்யும் தீமையை அறியாமையால் அல்லது உரிமையாற் செய்கிறார் எனக் கொண்டு அதனை மன்னிக்க வேண்டுமென்பதை,

இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ......
... களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை (நாலடி 226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வரிகளில் அது குறிப்பிட்டுள்ளது. **உண்மைபேசுதல்** நட்பிற்குத் தேவையான மற்றுமொரு பண்பாகும் என்பதை பழமொழி நானூறு வருமாறு வலியுறுத்தியுள்ளது.

புரையின்றி நட்டார்க்கு நட்டார் உரைத்த
உரையும் பொருள்முடிவும் ஒன்றால் –உறைபிறிது
கொண்டெடுத்துக் கூறல் கொடுங்கழித் தண்சேர்ப்ப
ஒன்றேற்றி வெண்படைக்கோள் ஒன்று (பழமொழி 126)

நண்பரிடம் எப்பொழுதும் உண்மையையே பேச வேண்டும், சொல்லும் செயலும் வேறுபடாது இருக்க வேண்டும், சொல்லும் செயலும் வெவ்வேறாயிருப்பது ஒருவனுடைய செய்யுளை மற்றொருவன் சிறிது மாற்றி வேறொரு செய்யுளாக்கி அதைத் தான் பாடியதாகக் கூறும் வஞ்சகச் செயலுக்கு ஒப்பாகும் என இச் செய்யுள் குறிப்பிடுகின்றது.

நட்பின் பொருட்டு நீதி தவறுவது குற்றம் விளைவிக்கும் பகைகளுள் ஒன்றென்பதால் நண்பனாயினும் **நீதி தவறாமை** நட்பிற்கு வேண்டப்படும் பண்பெனத் திரிகடுகம் (86) 'நட்பின் நயநீர்மை நீங்கல் குற்றம் தரும் பகை' என்னும் வரிகளில் உணர்த்தியுள்ளது.

இவற்றைவிட நண்பர்களிடம் **குற்றம் கண்டு** கோபியாமையும், மற்றவர்கள்முன் அவர்களைப் **பழித்துரைக்காமையும்** சிறந்த பண்புகள் என்பதை முறையே,

நண்பொன்றித் தம்மாலே நட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார் (பழமொழி 132)

என்னும் வரிகளிலும்

கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார் (பழமொழி 131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வரிகளிலும் பழமொழிநானூறு குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். அதுபோலவே **நம்பிக்கையும், நாவினைக் காத்தலும், முக மலர்ச்சியும்** நட்பிற்கு அவசியம் என்பதை நான்மணிக்கடிகை வலியுறுத்தியுள்ளது. 'நாடாமை நட்டார்கண் விட்டவினை' என்பதில் நண்பர்களின் பொறுப்பில் விட்ட செயலை ஆராயக் கூடாது (நான்மணி: 25), எனவும், 'நாவன்றோ நட்பறுக்கும்' என்பதில் நட்பில் நா காத்தலின் அவசியமும் (நான்மணி: 78), 'நகை இனிது நட்டார் நடுவண்' (நான்:36) என்பதில் நண்பரிடத்தில் எப்போதும் முகமலர்ச்சியுடன் இருத்தல் வேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.

இவற்றைவிட நண்பர் தவறு செய்யும்போது இடித்துரைத்தல், தம் நண்பருக்கு வருந்துன்பத்தைத் தமக்கு வந்தது போல் கருதுதல் போன்றவற்றையும் நட்பிற்கு வேண்டத் தகுந்த பண்புகளென அறநூல்கள் குறிப்பிட்டுள்ளன.

வேண்டத் தகாத பண்புகள்

இவ்வாறு நட்பிற்குத் தேவையான பண்புகளைக் குறிப்பிடும் அறநூல்கள், நட்பில் வேண்டத் தகாத பண்புகளையும் வரையறை செய்துள்ளன. **புனைந்துரை** நட்பில் அவசியமற்றதொன்றென இவை குறிப்பிடுகின்றன. அதாவது 'இவர் நமக்கு இத்துணை அன்புள்ளவர், யாம் இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும் நட்பு புல்லிதாய்த் தோன்றுமென்பதை,

இனையர் இவரெமக் கின்னம் யாமென்று
புனையினும் புல்லென்னும் நட்பு (790)

என்னும் குறள் கூறுகின்றது. நட்புக் கொண்ட பின் குற்றத்தை ஆராய்ந்து திரிதல் கூடாது, நண்பனின் இரகசியங்களை வெளியிடக் கூடாது என நாலடியாரின் பின்வரும் செய்யுள் குறிப்பிடுகின்றது.

குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்பின் நாடித் திரிவேனேல் நட்டான்
மறைகாவா விட்டவன் சொல்வழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக (நாலடி: 230)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனின் மனைவியின் கற்பிற்குக் களங்கம் விளைவித்தல் (நாலடி: 238), நண்பர்களுக்குத் துன்பம் செய்தல், அவர்களுக்குத் துன்பம் வந்த காலத்தில் உதவாதிருத்தல், பகைவரிடத்தில் உறவு கொள்ளுதல் ஆகியன வேண்டத் தகாத பண்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன. பகைவரிடத்தில் நட்புக் கொள்ளும் செயலானது தான் சாக வேண்டுமென்று விரும்புவன் செய்யும் செயலை ஒத்தது எனத் திரிகடுகம் (4) குறிப்பிட்டுள்ளது.

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா மா அன்னார்
தமரின் தனிமை தலை (திருக்:814)

என்பதில் துன்பத்தில் -- உரிய காலத்தில் உதவாத நட்பினை போரில்லாத வேளைகளில் தாங்குவதுபோல வந்து, பின் போர் வந்துற்ற காலத்தில் போர்க்களத்தில் வீழ்த்திவிட்டுச் செல்லும் கல்வியறிவற்ற புரவிக்கு ஒப்பிடும் வள்ளுவர், இத்தகைய நட்பினை விடத் தனிமை மேலானது என்கிறார். உரிய காலத்தில் உதவாமை வேண்டத் தகாத நட்பு என பழமொழி நானூறும் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

பாப்புக் கொடியாற்குப் பான்மேனி யான்போலத்
தாக்கி யமருள்தலைப் பெய்யார் – போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவம்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார் (பழ:138)

பாம்புக் கொடியை யுடைய துரியோதனனுக்குப் போரில் உதவி செய்வதாகக் கூறிய பலராமன் பின் விதுரனோடு தீர்த்த யாத்திரை போய் விட்டான். போரில் உதவும்வேளை உதவி செய்யாமல் தம் நண்பர் இறந்தபின் அவரின் நற்கதிக்காகத் தவம் செய்தலை, திருவிழா முடிந்த பின்னர் அத் திருவிழாவைக் காட்டுவதற்காகத் தம் பிள்ளைகளைத் தோளிலேற்றுவாருக்கு ஒப்பிடுகிறது பழமொழிநானூறு.

உதவி என்பது வெறும் உபசார வார்த்தைகளாக இராமல் பொருள் அளித்தலைக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும் அறநூல்கள் வலியுறுத்தத் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியாரை உற்ற இடர்தீர் உபாயம்
முனியார் செயினும் மொழியால் முடியா
துனியால் திரையுலாம் தூங்கும்நீர்ச் சேர்ப்ப
பனியால் குளநிறைத லில் (பழமொழி: 128)

பனி எவ்வளவுதான் அதிகமாப் பெய்தாலும் அதனால் குளம் நிறைந்து விடுவதில்லை. அதுபோல வெறும் வார்த்தைகளால் துன்பத்தைக் தீர்க்க முடியாது என்பதை இச் செய்யுள் வலியுறுத்துகின்றது.

கொள்ளத்தக்க நட்பு

யானை யனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் – யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய் (நாலடியார்: 213)

இச்செய்யுளில் யானையைப் போன்றவரின் நட்பைக் கொள்ளக் கூடாதெனவும், நாயைப் போன்றவரின் நட்பைக் கொள்ள வேண்டுமெனவும் கூறப்படுகின்றது. யானை பல நாட்கள் பழகியிருந்தாலும் தன்னைப் பாதுகாக்கும் பாகனையே கொன்றுவிடும் தன்மையுடையது. ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் சினத்துடன் எறிந்த வேல் தன் உடலில் தைத்து வருத்திக் கொண்டிருந்தபோதும், அவனிடமுள்ள அன்பால் வாலைக் குழைத்துக் கொண்டிருக்கும். எனவே நன்றி கெட்டவரின் நட்பை விலக்கி நன்றியுள்ளவரின் நட்பைக் கொள்ள வேண்டும் என நாலடியார் குறிப்பிடுகின்றது.

நட்பு தூர எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. அருகில் இருப்பவர்கள்தான் நண்பர்களாக இருக்க வேண்டுமென்பதும், தூர இருப்பவர்கள் நண்பர்களாக இருக்கக்கூடாது என்பதுமில்லை, நல்ல நட்பு நெடுந்தொலைவி லிருந்தாலும் அவரிடம் அந் நட்பினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறும் நாலடியார் (நாலடி 218), அதற்காகப் பின்வரும் உவமையைப் பயன்படுத்தியுள்ளது. அதாவது வயலிலுள்ள பயிரை விளையச் செய்யும் வாய்க்காலுக்கு நெடுந்தொலைவிலுள்ள நல்ல நண்பர்கள் உவமையாகக் கூறப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கா லனையார் தொடர்வு (நாலடி: 218)

ஒருவருடன் நட்புக் கொள்ள முன்னர் அவரை ஆராய்ந்து அறிதல் மிக முக்கியமானதென்பதை அறநூல்கள் குறிப்பிட்டுள்ளன. திருக்குறளும் நாலடியாரும் நட்பாராய்தல் என்னும் அதிகாரத்தைத் தத்தமது நூல்களில் வைத்துள்ளமை இதனை உறுதி செய்யும்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (திருக்: 791)

என்னும் குறள், நட்பினை விரும்பி அதன்கண் நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச் செய்த பின் அவனை விடுதலுண்டாகாது. ஆதலால் ஆராயாது நட்புச் செய்தல் போலக் கேடு தருவது பிறிதில்லை. அவர் இருமையும் கெடுவர் என்னும் பொருளுடையது. மேலும் குணம், செயல் ஆகியவற்றைப் பலகாலும் பலவற்றாலும் ஆராய்ந்தறிந்து நட்புக் கொள்ளாவிடின் தான் சாவதற்கு ஏதுவான துன்பத்தைத் தானே பெற்றுக் கொண்டவனாவான் என்பதனை

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் (திருக்: 792)

என்பதன் மூலம் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். ஆராயாது, தவறாகக் கொண்ட நட்புக்குரியவனுக்கு வரும் பகையெல்லாம் தன் மேலாகி அதனால் இறத்தல் உண்டாகும் என இதற்கான உரை விளக்கத்தில் பரிமேலழகர் கூறுவார்.

ஒருவருடன் ஆராய்ந்தறிந்து நட்புக்கொள்ள வேண்டுமென்பதை நாலடியாரும் வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு நட்புக் கொண்டபின் அவர் வேறுபடமாட்டார் என எண்ணுவது மனதின் வயப்பட்டதென்றும், ஏனெனில் ஒருவரின் மனதை மற்றொருவரால் உட்புகுந்து அறிய முடியாதென்றும் அது குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்பிறப் பெண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது – பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று (நாலடி: 212)

'எத்துணையும் ஒட்டாரை ஒட்டிக் கொளல் முன்னினிதே' (இனியவை : 17) என்பதன் மூலம் நட்பிற்கான தேர்வின்போது, தன் பகைவரோடு எத்துணையும் சேராதவரை நட்பாக்கிக் கொள்ள வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

சேர்ந்து பழகிவிட்டால் பின்னர் பிரிதல் சிரமமானதும், துன்பத்தைத் தருவதும் என்பதால் நண்பர்களைத் தேர்ந்து கொள்வதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருள் தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர் செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு (நாலடி: 220)

என்பதில் பலருடனும் பலநாள் கூடி அவரையொத்துப் பழகி உண்மையான தகுதியுடையவரையே நட்பாக்கிக் கொள்ள வேண்டும், ஏனெனில் கடித்து உயிரழிக்கும் பாம்போடாயினும் கூடிய பின் பரிதல் துன்பத்தைத் தரும் எனக் கூறப்படுகின்றது. பழமொழி நானூறும்,

விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா – இலங்கருவி
தாஅய் இழியும் மலைநாட இன்னாதே
பேயோ டாயினும் பிரிவு (பழமொழி 127)

என்பதில் விலங்குகளாயினும் தம்மோடு ஒன்றாக வசித்தலை விரும்பும் நட்புள்ளவற்றைக் கைவிடா. பேயோடாயினும் கலந்தபின் பிரிவு துன்பத்தைத் தரும் எனக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கத்திற்கான காரணங்களுள் நட்பும் ஒன்றாதலால் (ஏனையன நன்றிமறவாமை, பொறுமை, இன்சொல், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை, கல்வி, ஒப்புரவையறிதல் ஆகியன) நல்லியல்புள்ளவர்களோடு நட்புக் கொள்ளுதல் அவசியமானதென ஆசாரக்கோவை 1 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. இத்தகையதொரு கருத்தினை ஏலாதியும் கூறுகின்றது.

உடன்படான் கொல்லான் உடன்றார் நோய்தீர்த்து
மடம்படான் மாண்டார் நூன்மாண்ட – இடம்பட
நோக்குவாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யாக்குமவர் யாக்கு மணைந்து *(ஏலாதி: 8)*

பிறர் கொலை செய்தற்கு உடம்படாமல், தானும் ஓர் உயிரைக் கொல்லாமல், பிணியால் வருந்தியவரின் நோயை மருந்து முதலியன உதவி நீக்கி, அறியாமையில் மயங்காதவனாய், அறிவுசால் சான்றோரது நூல்களின் சிறந்த கருத்துக்களை ஆராய்ந்து அதற்குத் தக ஒழுகுபவனை நண்பனாக்கிக் கொள்பவனுக்கு மேற் சொன்ன ஒழுக்கங்கள் யாவும் பொருந்திவரும் என்பதே இச்செய்யுளின் பொருளாகும். 'ஒருவனை நீ அறிய வேண்டுமானால் அவனது நண்பனை நீ அறிந்தாலே போதுமானது' என்பதற்கொப்ப நல்ல நண்பர்கள் வாய்க்கப் பெற்றவன் நல்ல பண்புகளைப் பெறுவான் என்பதும் தீய குணமுடையோரை நண்பராகக் கொண்டவனின் குணங்களும் அந்நண்பர்களுடைய குணங்களை ஒத்ததாகவேயிருக்கும் என்பதும் பெறப்படுகின்றது. உயர்குடியில் பிறந்து தனக்கு வரும் பழிக்காக அஞ்சி வாழ்கின்றவனின் நட்பை எது கொடுத்தாயினும் பெற்றுக்கொள்ள வேண்டும் என,

குடிப் பிறந்து தன்கண் பழி நாணுவானை
கொடுத்தும்கொளல்வேண்டும் நட்பு *(திருக்: 794)*

என்னும் குறள் மூலமும் உலக வழக்கல்லது செய்யக் கருதினால் அதனை விலக்குதலும், பின்னர் அவ்வாறு செய்யாதவழி நெருக்குதலும், உலக வழக்குக்கொப்ப நடக்கத் தூண்டுவதுமான பண்புகளையுடையவரின் நட்பினை ஆராய்ந்து கொள்க என்பதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழச் சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார் நட்பாய்ந்து கொளல் (திருக்: 795)

என்னும் குறள் மூலமும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பின்னும் 'மருவுக மாசற்றார் கேண்மை' (திருக்: 800) என்பதிலும் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

நட்புடையோரைப் புறங் கூறாதவரோடு கொள்ளுகின்ற நட்பு சிறந்தது என 'நட்டார்ப் புறங் கூறான் வாழ்தல் நனி இனிதே' (இனியவை: 19) என்பதில் குறிப்பிடப்படுகின்றது. கொள்ளத் தக்க மேலோரின் நட்புக் குறித்துக் கூறுகையில், கல்வியின் பயனுணர்ந்து உரிய நூல்களைக் கற்றுக் தெளிந்த மேலோரின் நட்பு குருத்திலிருந்து கரும்பை உண்பது போன்றது என்றும் (நாலடி: 211), மழை பெய்தல் போன்ற பயனுடையதென்றும் (நாலடி: 232), அத்தகைய நட்பு விண்ணுலக இன்பம் போன்றதென்றும் (நாலடி: 233) நாலடியார் குறிப்பிடுகின்றது.

கொள்ளத் தகாத நட்பு

பொய் வழங்கி வாழும் பொறியறையும் கைதிரிந்து
தாழ்விடத்து நேர் கருதும் தட்டையும் – ஊழினால்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படா அதவர் (திரி: 15)

இச் செய்யுள் யார் யாருடன் நட்புக் கொள்ளக் கூடாது என்பதை எடுத்துரைக்கின்றது. பொய்யான சொற்களைப் பேசி அதனால் உயிர் வாழும் அறிவற்றவன், முறை மாறி ஒருவன் தாழ்ந்தபோது தன்னை அவனுக்கு நிராகக் கருதும் மனதையுடையவன், பிறரிடம் சேர்ந்து தொழிலாற்றுகையில் தனக்குரிய பயனை மட்டுமே எதிர்பார்த்துச் செயற்படுகின்றவன் ஆகிய மூவகைப் பண்புடையவரோடு நட்புக் கொள்ளக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமக்கு வரும் துன்பத்திற்கு அஞ்சாதவரோடு கொண்ட நட்பினால் எப் பயனுமில்லை என்பதை திரிகடுகம் 'நோ அவஞ்சாதாரோடு நட்பு.................... நன்மை பயத்தலில்' (63 ஆம் பாடல்) என்று குறிப்பிடுகின்றது. பிறருக்கு வெளிப்படுத்தக் கூடாத இரகசியங்களைக் காப்பாற்றாதவர் ஒற்றருக்குச் சமம் என்பதால் அத்தகையோரை நண்பராக்கிக் கொள்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது எனப்படுகின்றது (திரி: 55). *இன்னாதே ஒற்றாமை கொள்ளாதார் நட்பு'* (நாலடி: 237) மன ஒற்றுமை இல்லாதவரின் நட்பைக் கொள்ளக் கூடாது என நாலடியார் குறிப்பிடுகின்றது.

'கடுமொழியாளர் தொடர்பின்னா' (இன்னா:3), 'இன்னா நயமில் நெஞ்சத்தவர் நட்பு' (இன்னா: 8), 'இடனில் சிறியாரோடு யாத்த நண்பின்னா' (இன்னா: 11), 'இன்னா யாம் என்பவரோடு நட்பு' (இன்னா: 24), 'இழிந்த தொழிலவர் நட்பின்னா' (இன்னா: 34), 'இன்னா கெடுமிடம் கைவிடுவார் நட்பு' (இன்னா: 36) என்பவற்றின் மூலம் வன்சொற் கூறுவோரினதும், நீதியில்லாத நெஞ்சத்தவரினதும், பரந்த உள்ளமில்லாதோரினதும், யாம் என்று தர்க்கிப்பவரினதும், இழிக்கப்பட்ட தொழிலைச் செய்வோரினதும், வறுமையுற்றவழி கைவிட்டு நீங்குவாரினதும் நட்பு துன்பத்தையே தரும் என இன்னா நாற்பது வலியுறுத்துகின்றது. இழிதொழில் என்பது அக்காலத்தில் இருந்த சமூக நடைமுறைகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. துன்பத்தின்போது கைவிட்டவர் நட்பினை ஈமத்தீயில் நினைப்பினும் நெஞ்சம் வேகும் என்பதனை,

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும் (திருக்: 799)

என்பதன் மூலம் எடுத்துக் கூறும் வள்ளுவர், துன்பத்தில் கைவிடுவாரது நட்பைக் கைவிடவேண்டும் என்பதை 'கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு' (திருக்: 798) என்பதன் மூலம் வலியுறுத்துகின்றார்.

நன்மையை உணர்பவரின் நட்பை விடுத்து சிற்றறிவுடையவருடன் கொள்ளும் நட்பினை பசுவின் நெய் வைத்திருந்த பாத்திரத்தில் அந்த நெய்யை நீக்கிவிட்டு வேப்பம் விதையைக் காய்ச்சுவதால் உண்டான நெய்யை வைத்ததைப் போன்றது என பின்வரும் நாலடியார் 239 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

ஆன்படு நெய்பெய் கலனுள் அது களைந்து
வேம்படு நெய்பெய்தது அனைத்தரோ – தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரோடு நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் சிற்றிவுடையாரின் நட்பை விலக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகின்றது. மேலும் தெளிந்த அறிவுடையவர், தீய இனத்தவருடன் கொள்ளும் நட்பிற்கு நாகமானது பெட்டை விரியன் பாம்போடு சேர்ந்ததற்கு ஒப்பாகும் எனவும் நாலடியார் குறிப்பிடுகின்றது.

தெரிவுடையார் தீயினத்தா ராகுதல் நாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று *(நாலடி: 240)*

புரைஇல்லார் நள்ளார் (சிறு: 80) என்பதில் சான்றோர் தமக்கு நிகரில்லாதவரோடு நட்புக் கொள்ள மாட்டார் எனப்படுகின்றது. '*ஒன்றித்தும் ஒருவுக ஒப்பிலார் நட்பு' (திருக்: 800)* என்பதில் உலகத்தோடு ஒத்து வாழாதார் நட்பினை அவரியல்பு அறியாது நட்புக் கொண்டிருந்தால், அவர் வேண்டிய தொகையைக் கொடுத்தாயினும் விட்டுவிடுக என்கிறார் வள்ளுவர்.

'தெளிவிலார் நட்பின் பகை நன்று' (நாலடி: 219) என்பதன் மூலம் நம்பத் தகாதவரின் நட்பை விட அவரது பகை மேலானது என நாலடியார் குறிப்பிடுகின்றது. கொள்ளத் தகாத தீயோரின் நட்பை விலக்கிவிடும் முறை பற்றிக் கூறுகையில்,

கண்டறிவார் போலார் கெழீஇயின்மை செய்வாரை
பண்டறிவார் மாற்றி தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல் அதுவன்றோ
விண்டற்கு விண்டல் மருந்து *(பழமொழி: 141)*

எனப் பழமொழி நானூறு கூறுகிறது. அதாவது அன்பில் பொருந்தாமல் தம்மைப் பார்த்தும் பார்த்தறியார் போன்றும் அன்பின்றியும் நடப்போருக்குத் தாமும் அவ்வாறே பிரிந்து நீங்கி அவர் நட்பை ஒழிக்க வேண்டுமென்பது இதன் பொருளாகும். பொய்யர்க்குப் பொய்யுரைத்து வெற்றியடைதல் போல தமக்கும் வெற்றியை ஏற்படுத்துவதற்கும் அவர்க்கு சிறந்த படிப்பினையாய் அமைவதற்கும் இதுவே வழியென உரை விளக்கம் குறிப்பிடுகின்றது.

நண்பர்க்கும் அவர் பகைவர்க்கும் வேறுபாடில்லாமல் இவ்விருவகையினரிடமும் அன்புடையவர் போல நெருங்கி அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையை மிகுதிப்படுத்துவோரையும் விலக்கி விடுமாறு கூறப்படுகின்றது. இத்தகையோர் இருதலைக்கொள்ளி எறும்பிற்கு ஒப்பிடப்படுகின்றனர்.

பெரிய நட்டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றிக் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரோடு
இருதலைக் கொள்ளி யென்பார் (பழமொழி: 142)

ஊதியம் என்பது ஒருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் (திருக்: 797)

என்பதில் பேதைமையுடையோரின் நட்பை விலக்கி அவரினின்று நீங்குதலை பேறு எனத் திருக்குறள் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஒருவர் நற்குணமும், குற்றமற்ற தன்மையும் உடையவராயிருந்தாலும் தாம் கூடுகின்ற கூட்டத்தின் பொருட்டு இகழப்படுவார்கள் என்பதை மனிதர் வெட்டிய காடு நெருப்புப் பற்றினால் அக் காட்டிலுள்ள வாசனை வீசுகின்ற சந்தன மரமும் வேங்கையும் வெந்து போவதை உவமையாகக் காட்டி விளக்குகிறது நாலடியார்.

மனத்தான் மறுவில ரேனுந் தாஞ்சேர்ந்த
இனத்தால் இகழப்படுவர் – புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனற்தீப்பட்டக் கால் (நாலடி: 180)

தம் காரியம் முடியும்வரை நண்பர்கள் போல வஞ்சகமாய்ப் பழகுவோர் குறித்து எச்சரிக்கையாயிருக்குமாறு கூறும் பழமொழி நானூறு (135), அத்தகையவர்களை உண்ணும் வரை காத்திருந்து உயிர் கவரும் கூற்றுவனுக்கு ஒப்பாகக் குறிப்பிடுகின்றது.

கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்
எண்ணும் துணையிற் பிறராகி நிற்பரால்
எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்
உண்ணுந் துணைக் காக்கும் கூற்று (பழமொழி: 135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ நட்பு, கூடா நட்பு ஆகிய இருவகை நட்புகளும் கொள்ளத்தகாத விலக்கத்தக்க நட்புகளாக அறநூல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன. தீ நட்பு என்பது தீக்குணத்தாரோடு கொண்ட நட்பு: கூடா நட்பு என்பது அகத்தால் ஒன்றுபடாது தமக்கு வாய்க்கும் இடம் பெறும்வரை புறத்தால் கூடி ஒழுகுதல்.

சொல்லும் செயலும் வெவ்வேறாயிருப்போரினதும், தனியே இருக்கும்போது நட்புடன் பழகி பலர் நடுவே பழி கூறுவோரினதும், துன்பத்தில் கை கொடாது நீங்குவோரினதும், தம்மால் முடியும் செயலையும் முடியாதது போல் நடித்து செய்யாதவரினதும், மனதால் ஒட்டாதவரினதும், தமக்கு வரும் நன்மைக்காக மட்டும் சேருவோரினதும் நட்பைப் புறந்தள்ள வேண்டும் என தீ நட்பு, கூடா நட்பு ஆகிய இரு அதிகாரங்களிலும் திருக்குறள் வலியுறுத்தியுள்ளது. அதேவேளை பகைவன் நண்பனாக வரும் சந்தர்ப்பத்தில் முகத்தால் ஏற்று அகத்தால் அந் நட்பைத் துறக்கும்படி வள்ளுவர் கூறியுள்ளார்.

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல் (*திருக்: 830*)

பெண் நட்பினளாதல்

மனைவி தன் கணவனுக்கு நண்பியாகவும், தாயாகவும், தாரமாகவும் இருக்கின்ற மூன்று நிலைமைகளைத் திரிகடுகம் குறிப்பிட்டள்ளது. (64). நல்விருந்தினரைப் பாதுகாப்பதால் நண்பியாகவும் ('நல்விருந்தோம்பலின் நட்டாளாம்'), இல்லறத்தை வழுவாது காத்து வருதலால் தாயாகவும், மக்களைப் பெறுதலால் மனைக் கிழத்தியாகவும் அவள் இருக்கிறாள், கற்புடைய பெண்களின் கடமைகளாக இம் மூன்றும் வலியுறுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

நட்பு குறித்து அறநூல்கள் குறிப்பிடும் மேற்சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்து நோக்குகையில், இவை இன்றும் வலிமையும், பெறுமதியும், முக்கியத்துவமும் உடையனவாக விளங்குவதை உணர முடியும். மனிதன் தன்னைத் தானே மீளாய்வு செய்வதற்கு இத்தகைய கருத்துகள் துணை நிற்கின்றன. மனிதன் உள்ளவரை நட்பென்னும் பண்பிற்கும் இடம் உண்டு என்பதால், இக் கருத்துகள் காலம் கடந்தும் நிற்கும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபஞ்சமூலம் சித்திரிக்கும் ஒழுக்கவியல்

சுகந்தினி சிறிமுரளிதரன்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல்கள் பதினொன்றாகும். அவற்றில் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம். இந்நூலின் ஆசிரியர் காரியாசான். இந்நூல் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளரது கருத்து.[1] 75 ஆண்டுகளுக்கு முன்வந்த பதிப்பிலே கடவுள் வாழ்த்தும், பாயிரமும் உள்ளடக்கிய 98 பாடல்களின் தொகுப்புக் காணப்படுகின்றது. அண்மையில் வந்த பதிப்பில் கடவுள் வாழ்த்தும். தற்சிறப்பு பாயிரமும் உள்ளடங்கலாக 101 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எனினும் இந்நூலில் 104 வெண்பாக்கள்[2] இருந்தனவாக ஓலைச்சுவடி ஒன்றின்மூலம் அறியமுடிகின்றது. சிறுபஞ்சமூலம் என்பது ஒரு மருந்தின் பெயர். மூலம் என்பது வேர். சிறிய ஐந்து வேர்கள் என்பதே சிறுபஞ்சமூலம் என்பதன் பொருளாகும்.[3] கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் இவைகளே சிறுபஞ்சமூலம் எனப்படுகின்றன. இதனை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்
சிறுமல்லி கண்டங்கத்தரிவேர் நறிய
பெருமல்லி ஓர் ஐந்தும் பேசுபல் நோய் தீர்க்கும்
அரிய சிறுபஞ்ச மூலம்.[4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஐந்து வேர்களும் மருந்துப் பண்டங்கள். இவற்றால் உடல் நோய்கள் பலவற்றைப் போக்கமுடியும். இம்மூலிகை வேர்கள் உடல் நோயைத் தீர்ப்பது போல, உடம்மை நன்றாக வைத்திருக்க உதவி செய்வது போல, இந்நூல் வெண்பாக்களிற் கூறப்பட்டுள்ள ஐந்து நீதிகளும் மக்களை நல்வழிப்படுத்தி, நல்லொழுக்கம் சார்ந்தவர்களாக ஆக்கிவைக்கும் என்ற கருத்திற்கேற்ப இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு வெண்பாவிலும் நன்மை பயக்கத்தக்க ஐந்து ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளமை, இந்நூலுக்கேயுரிய தனிச் சிறப்பாகவுள்ளது. கொல்லாமை, கள்ளுண்ணாமை, திருடாமை, விருந்தோம்பல், இல்லற ஒழுக்கம், துறவறத்தின் சிறப்பு என வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் கைக்கொள்ளவேண்டிய நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நல்லொழுக்க நெறிகளையே சிறுபஞ்ச மூலப் பாடல்கள் எடுத்துரைத்துள்ளன. ஆடவர், பெண்டிர், அரசர், அமைச்சர், சேவகர், ஆசான், மாணவன், இல்லறத்தார், துறவறத்தார், என சமூகத்தின் எல்லாப் பகுதி மக்களுக்கும் உரிய கடமைகளை எடுத்துக்கூறி, நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நல்லொழுக்க நெறிகளைச் சிறுபஞ்சமூலம் களஞ்சியப்படுத்தியுள்ளது. இந்நூல் சித்திரிக்கும் ஒழுக்கவியல் சிந்தனைகள் பற்றி எடுத்துக்கூறுவதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

'ஒழுக்கம்' என்னும் சொற்பொருள்

மனித இனத்திற்கேயுரிய தனிப்பண்புகள் பல. அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகின்றது. ஒழுக்கம் என்னும் சொல் ஒழுகு என்னும் வேர்ச் சொல்லின் அடியாக பிறந்ததாகும். ஒழுகு என்னும் சொல்லிற்கு இடையறாது கடைப்பிடித்தல் என்பது பொருள். வாழ்க்கையில் உயர்ந்தவை எனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும், எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டு ஒழுகுவதையே ஒழுக்கம் என்பர். ஒழுக்கம் என்பதற்கு நடை, சீலம், விதித்த கடமைகளிலிருந்து வழுவாது நடத்தல், உலகத்தோடொட்ட ஒழுகுகை, செல்லுகை, வழி, உயர்ச்சி, குலம் எனப் பல பொருள் கூறப்படுகின்றது. ஒழுக்கத்தை வடநூலார் ஆசாரம் எனக் கூறுவர். ஆசாரித்தல் என்பது பற்றி நடத்தல். அது ஒருவன் தனது வர்ணத்துக்கும் நிலைக்கும் ஏற்ப ஒழுக்கங்களைப் பற்றி நடத்தலாகும். இந்திய மதங்களின் அச்சாணி ஆசார நெறியாகும். எனவே ஒழுக்கமே இந்திய மதங்களின் முக்கிய சிறப்பியல்பாகும், ஒழுக்கம் எனப்பட்டதன் அங்கங்களாக அன்பு, அறம், அருள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு, பொறை, பணிவு, எனப் பல உள்ளன. ஒழுக்கமானது அங்கங்களாக உள்ள ஒவ்வொன்றையும் மூலமாகக்கொண்டே ஒளிர்கின்றது. உன்னத நிலை எய்துகின்றது.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் [5]

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவருக்கு உயிரே எப்பொருளிலும் சிறந்ததாகும். அவ்வுயிரும் ஒழுக்கமின்றேல் இன்மை, மறுமை பயன்களை அடைதல் சாலாமையின் ஒழுக்கமே உயிரினும் சிறந்ததென்பது வெள்ளிடை மலை.

கிருகஸ்த ஒழுக்கம்

இல்வாழ்க்கை எனும் வண்டியில் பூட்டப்பட்ட இரு காளைகளே தலைவனும் தலைவியும். இருவரும் ஒழுக்கமுடையவராக இருக்கும்போதுதான் இல்லற வாழ்வு சிறந்து ஓங்கும். கற்பு ஒழுக்கத்தை காத்துக்கொள்ளலும், அக்கற்பு ஒழுக்கத்தால் தெய்வநிலை அடைதலும், மகளிர் இனத்திற்கேயுரிய மாண்புடைய பண்பாகும். சிறுபஞ்சமூலம் இல்லாளின் கடமைபற்றி கூறும் போது குடும்பத்தை நடாத்தும் பொறுப்பு முழுவதும் பெண்களை சேர்ந்தது என்று கூறுகின்ற பாங்கு சிறப்பானது. இது சிறுபஞ்சமூலத்தில்,

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் – திருவாக்குந்
தெய்வதை எஞ்ஞான்றுந் தேற்றவழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு [6]

எனவரும் பாடலானது, தமது கணவருடைய வருமானத்தின் அளவை தெரிந்து கொள்ளல் வேண்டும். அந்த வருமானத்திற்கு தகுந்த அளவிலேயே செலவு செய்ய வேண்டும். சுற்றத்தார்கள்மேல் சீறிவிழாமல் அவர்களை அன்புடன் ஆதரிக்கவேண்டும். விருந்தினர்களை உபசரிக்க வேண்டும் என இல்லாளுக்குரிய ஐந்து ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இதில் இல்லற ஒழுக்கங்களில் விருந்தோம்பல் முக்கிய இடம் வகிக்கின்றது. விருந்தினர், சுற்றத்தார், துறவோர் என்ற மூவகையினருக்கும் உணவு முதலியன கொடுத்து ஓம்புதல் இல்லாளுடைய கடமையாகும் என்பதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை[7]

எனத் திருக்குறளும் எடுத்தியம்புகின்றது. மேலும், சகல மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதுடன் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அமைக்கலாம் என்பதற்கு திருமந்திரம் பின்வருமாறு அறிவுரை வழங்குகிறது.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

சிறுபஞ்சமூலம் 90ஆவது பாடல் இல்வாழ்க்கையை செவ்வையாக ஆற்றின் அதுவே துறவற வாழ்க்கைக்கு ஒப்பாகும் என்கிறது. இதனையே,

அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றின் புறத்தாற்றின்
போய்ஒய்ப் பெறுவது எவன்[8].

எனத்திருக்குறளும் செப்புகின்றது. சில வேளைகளில் ஆண்கள் பொறுப்பற்றவர்களாக தமது மனைவியரை அலட்சியம் செய்யும் நிலையும் இருந்துள்ளது. அதனால் சிறுபஞ்சமூலம் இல்லறவாழ்வில் மனைவியானவள் கணவனைக் கவர்வதற்குரிய ஐந்து வழிகளை எடுத்துக்கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

மக்கள் பெறுதல் மடன் உடைமை மாதுடமை
ஒக்க உடன் உறைதல் உண் அமைவு– தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு ஐந்து
தலைமகனைத் தாழ்க்கும் மருந்து.[9]

அவையாவன மக்களைப் பெறுதல், அடக்கமுடன் இருத்தல், கணவன் விரும்பும் அழகுடன் விளங்குதல், கொண்ட கணவனுடன் கூடிவாழ்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விரும்பும் அறுசுவை உணவளித்து உறைதல் போன்ற ஐந்து செயற்பாடுகளாலும் பெண்கள் தமது கணவரைத் தமக்கு அடங்கியவராகச் செய்யலாம். இவற்றை ஒரு வசிய மருந்தாகச் சிறுபஞ்ச மூலம் குறிப்பிட்டுள்ளது. இன்றும் கணவன், மனைவி நல்லுறவுடன் திகழ்வதற்க்கு மேற்கூறப்பட்ட அறங்கள் பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சத்திரிய ஒழுக்கம்

சிறுபஞ்சமூலம் அரசாள்வோரின் கடமைபற்றி பல பாடல்களில் எடுத்துரைக்கின்றது. குறிப்பாக,

வார்சான்ற கூந்தல்! வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் – சீர் சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கும் உலகு. [10]

நீண்டகூந்தலை உடைய பெண்ணே நிலத்திலே நீர்தாங்கும்படி கரை உயர்ந்திருக்க வேண்டும். கரை உயரமாக இருந்தால்தான் நிலத்திலே தண்ணீர் தேங்கி நிற்கும். தண்ணீர் தேங்கி நின்றால்தான், பயிர் செய்யப்படும் – நெற்பயிர் ஓங்கி வளரும், நெற்பயிர் ஓங்கி வளர்ந்தால்தான், குடிமக்கள் உணவுப் பஞ்சமின்றி செல்வங்கள் எல்லாம் பெற்று, உணர்ந்து வாழ்வர். குடிமக்கள் உயர்வாக வாழ்ந்தால்தான், அரசன் உயர்வாக வாழ்வான் என்னும் இப்பாடல்

வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர குடி உயரும் ,
குடி உயர கோன் உயர்வான்.

என்பதுடன் ஒப்பிட்டுக் கூறக்கூடியது.

சிறுபஞ்சமூலம் நாட்டுக்கு அரசனாக இருப்பவனுடைய தகைமையை எடுத்தரைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நீர் காடு களர் நிவந்து விண்தோயும்
மாண்ட மலை மக்கள் உள்ளிட்டு– மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணா உடையானை
வேந்தனா நாட்டல் விதி [11]

நகரைச்சுற்றி நீண்டு வளைந்த அகழி நீரும், காட்டு எல்லையும், சேற்று நிலவெல்லையும், உயர்ந்து வானத்தைத் தொடுகின்ற மாட்சிமைப்பட்ட மலையும், குடிமக்களும் எனும் ஐந்து வகை அரண்களையும் உடையான் ஒரு நாட்டுக்கு அரசனாக அமைதல் நன்மையாகும் என்று கூறப்படுகின்றது.

பிரமசரிய ஒழுக்கம்

மலரும் மக்கள் சமுதாயத்தில் வளர்ச்சிப்படியில் முதலாவது கல்வி. இதுவே பிரமசரிய நிலை ஆகும். கல்வியின் சிறப்பு பற்றி சிறுபஞ்சமூலம் சித்திரிக்கும் போது "மறுமைக்கு அணிகலன் கல்வி" எனவும், "நரகத்தை சேராமைக்கு ஏதுவாக அறநெறிசேர்ந்து வாழ்தலுக்கு வழிகாட்டும் பெருநூலை இயற்றவேண்டும், தேடிப் பயில வேண்டும்" எனவும் கூறப்பட்டுள்ளது.

சிறுபஞ்சமூலம், ஆசிரியர் பற்றி குறிப்பிடுகையில் "*பெண் இன்பத்தை விரும்பாத பிரமசாரியே சிறந்த ஆசிரியர்*" என்கிறது. அதுமட்டுமன்றி ஆசிரியரின் கடமை பற்றி குறிப்பிடுகையில்,

"*................ உய்ப்பானே ஆசான் உயர்கதிக்கு.............*" [12]. அதாவது மாணாக்கனை உயர்கதிக்கு செலுத்துபவனே ஆசிரியன் ஆவான் என்கிறது. ஆசிரியரது பண்பு எவ்வகையில் அமைய வேண்டும் என்பதை சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகையில், "*சீறியும் வெகுண்டும் உரைக்கின்ற ஆசிரியனது பள்ளிக்கு அறிவுடையார் போகார்*" என்ற எதிர்மறைக் குறிப்பின் மூலமாக ஆசிரிய மாணவ உறவு நிலை எவ்வகையில் அமைய வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றது.

சிறுபஞ்சமூலம் 28 ஆவது பாடல் பின்வருமாறு ஆசிரிய, மாணவருக்குரிய இலக்கணங்களைக் கூறுகின்றது.

ஆணாக்கம் வேண்டாதான் ஆசான் அவற்கிபைந்த
மாணாக்கன் அன்பன் வழிபடுவான்..... [13]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பிரமச்சரியம் காப்பவன் ஆசிரியன் ஆவான். அவனை அன்பு செய்து வழிபடுவோர் மாணக்கர் ஆவார் என்று கூறப்பட்டுள்ளது.

பொது ஒழுக்கங்கள்

சிறுபஞ்சமூலம் நாவடக்கத்தின் இன்றியமையாமையை எடுத்து விளக்குகின்றது. ஒருவனுக்கு எவ்வெவ்போது நாவடங்கும் என்பதை விளக்கும் போது "*புலால் உண்பவனின் நாவும், நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி கூறுபவனின் நாவும், கற்றோர் முன் கல்லாதவனுடைய நாவும், கடன் கொடுத்தவனைக் கண்டபோது ஆணை கடவாதவனுடைய நாவும், தன்னிடத்தே தவறு ஒன்று உண்டானபோது உயர்குடியிற் பிறந்தவனுடைய நாவும் அடங்கும்*" [14]என்று கூறுகின்றது. ஒருவனுக்கு எச்சந்தர்ப்பத்தில் நாவடங்குகின்றது என்று கூறுகின்ற ஆசிரியர், ஒருவரது நாவில் உண்டாகும் வசைமொழி அவனுக்கே யமனாக ஆகிவிடுகின்றது என்கிறார். "*சிலந்தி பூச்சிக்கு அதன் முட்டையும் விலங்குகளுக்கு அவற்றின் நீண்ட கொம்புகளும், கவரிமாவிற்கு அதன் மயிரும், நண்டுக்கு அதன் குஞ்சுகளும், ஒருவனின் நாவிற்கு வசைமொழியும் எமனாகும்*". [15] என்கிறார். இவ்வகையில் நாவடக்கத்தின் முக்கியதுவத்தை சிறுபஞ்சமூல ஆசிரியர் விளக்குகின்றார்.

சிறுபஞ்சமூலம் பல பாடல்களில் கொல்லுதல், புலால் உண்ணுதல் போன்ற தீய ஒழுக்கங்களை செய்யாது இருக்கும்படியான அறக்கருத்துக்கள் புலப்படுத்தப்பட்டுள்ளன. கொல்லாமை ஆகிய அறத்தை சமண தத்துவம் கூறுகின்ற மாதிரி சிறுபஞ்சமூல நூலாசிரியரும் விரித்துக் கூறியுள்ளார்.

கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங் கால்– கொன்றதனை
அட்டான் இடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்
கட்டெறிந்த பாவங் கருது [16]

ஓர் உயிரை கொன்றவன், பிறன் செய்யும் கொலைக்கு உடன்பட்டு நின்றவன், நாணாமல் கொன்ற தசையை விலைக்குக் கொண்டவன். அதை சமைத்தவன், அதை தட்டிலே போட்டு உண்டவன் என்ற ஐவரிடத்தும் கொலைக்குற்றம் உண்டு என விளக்கப்பட்டுள்ளது. மேலும் பல பாடல்களில் "கொன்று உண்பான் நாச் செத்துவிடும்" [17]எனவும், "கொல்லுதல் நஞ்சு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், ''ஊனைத் துய்த்தல் கொடுநஞ்சு'' எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வகையில் பஞ்சமாபாதகங்களை செய்வதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறுகின்றது.

திருமணம் முதலிய நற்செயல்களுக்கெல்லாம் நாட்பொருத்தம், நாழிகைப் பொருத்தம் முதலியன பார்த்து நல்லநாள் கொள்ள வேண்டும் என்பதனையும் சிறுபஞ்சமூலம் சித்திரிக்கின்றது.

நாள் கூட்டம் மூழ்த்தம் அவற்றோடு நன்றாமக்
கோள் கூட்டம் யோகங் குணனுணர்ந்து – தோள்கூட்டல்
ஊற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வானால்
பெற்றானாட் கொள்க பெரிது. [18]

நாள் பொருந்தமும், முழுத்தமும், நன்றாய் கோள் கூடுதலும், அமிர்த யோகம் முதலாயின யோகமும், இவற்றினால் உண்டாகின்ற நன்மையும் ஆராய்ந்தறிந்து நாளைப்பெற்றால் சிறந்தது என ஆசிரியர் விபரிக்கின்றார்.

சிறுபஞ்சமூலம் இரவலரைக் கண்டால் எவ்வகையில் உதவவேண்டும் என்பதனை ஐந்து உவமைகள் மூலமாக எடுத்து விளக்குகின்றது.

வெந்தீக் காண் வெண்ணெய் மெழுகுநீர் சேர்மண்ணுப்பு
அந்தண் மகற்சார்ந்த தந்தையென்று – ஐந்தினுள்
ஒன்றுபோல் உண்ணெகிழ்ந்து ஈயின் சிறிதெனினும்
குன்றுபோற் கூடும் பயன் [19]

வெவ்விய தீயைக்கண்ட வெண்ணெய்யும், மெழுகும் நீர் சேர்ந்த மண்ணும், உப்பும் தன் அழகிய குளிர்ந்த மகனைத்தழுவிய தந்தையும் என்று சொல்லப்பட்ட ஐந்தினில் ஒன்று போல இரவலரைக்கண்டால் உள்நெகிழ்ந்து ஈதல் இயைந்த பொருள் சிறிதாயினும் அதனால் வரும் பயன் குன்று போலப் பெரிதாகிவிடும் என்று கூறுவதன் மூலம் ஈதல் அறத்தின் முக்கியத்துவம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றெடுத்தல் முதலிய ஐந்தும் பெரிய அறமாக முற்காலத்தில் நூலறிவுடைய பெரியோர் கூறியுள்ளார்கள் என சிறுபஞ்ச மூலம் விபரிக்கின்றது.

ஈன்றெடுத்தல் சூல் புறஞ் செய்தல் குழவியை
ஏன்றெடுத்தல் சூலேற்ற கண்ணியை – ஆன்ற
அழிந்தாளை யில் வைத்தல் பேரறமா ஆற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு. [20]

இப்பாடலினூடாக குழந்தையைப் பெற்ற தாயே அந்தக்குழந்தையை வளர்த்தல் சிறந்தது என்பதனை விளக்குகின்றார். பிள்ளைகளை வளர்த்தலும், மருத்துவம் பார்த்தலும், கற்பவதிகளையும், கைம்பெண்களையும், பேணுதலும் பெரும்பாலும் பெண்களே செய்யத்தக்கனவாதலின் இச்செயல்கள் இல்லறப்பெண்களுக்குரிய சிறந்த அறங்களாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

சிறந்த அறங்கள் எவை என்பது பற்றியும் ஆசிரியர் விபரிக்கின்றார். ஒரு பெண்ணின் கருவை கலங்காமல் காத்தலும், சிதைந்த கருவை இரகசியமாக வெளிப்படுத்தலும், பெற்ற பிள்ளையை விலக்காமல் தூக்கி வளர்த்தலும், அக்குழந்தைக்கு மருந்தூட்டலும், அக்குழந்தையை அச்சுறுத்தாமல் இருத்தலும் பெரிய அறங்களாக ஆசிரியர் விளக்குகின்றார்.[21]

நூலாசிரியர் 73ஆவது பாடலில் பிறப்பினால் உண்டாகும் ஐந்து வகை துன்பங்களை எடுத்துக்கூறி மனிதர்கள் வளர்வதற்கு ஏற்றுக்கொள்ளும் அத்தனை துன்பங்களையும் பிற விலங்குகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன. ஆதலால் அவற்றிடம் கருணைகாட்டி கொல்லாமலும், உண்ணாமலும் இருப்பது நன்று என அறிவுரை கூறுகின்றார். அதாவது கருக்கொள்ளாமை, கருக்கொண்டமையினால் படும் துன்பம், குழந்தை பெற்றபின் இறந்து போதல், உயிர் இருப்பின் அதனை வளர்த்தலில் ஏற்படும் துன்பம், வளர்ந்த பின் நற்குணங்கள் பொருந்தாமல் போவதை அறியும் போது ஏற்படும் மனத்தாங்கல் ஆகிய இவற்றை ஆராய்ந்து உணர்வோர் உயிர் கொல்லாமையையும், ஊன் உண்ணாமையும் நன்று என்று விளக்குகின்றமை சிந்திக்கத்தக்க விடயம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனானவன் வெளிவேடம் புனைவதை களைய வேண்டும் எனவும் ஆசிரியர் வலியுறுத்துகின்றார்."சடைமுடிபோன்ற வெளி வேடத்தால் பயனில்லை" எனவும்." துறவற நெறியை பின்பற்றி நடக்கமுடியாதவர்கள் துறவறம் பூணுவதை விட இல்லறத்தில் வாழ்வதே ஏற்றதாகும்" எனபலவும் அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது.

நூலாசிரியர் மனிதனானவன் தனது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு செய்யும் தீய நடத்தைகளையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை. *"கன்று உண்டு வளர்த்தலுக்கு போதுமான பாலை அதற்கு விடாமல் சாகும்படி பசுவின் பால் கறத்தல்"* பற்றியும், *"கன்று இறந்த பின் தோற்கன்று செய்து பசுவுக்கு காட்டி அது பால் சுரக்கச்செய்து பால்கறக்கும் செயல்"*[22] *பற்றியும் கண்டித்துள்ளார்.*

சிறுபஞ்சமூலம் பெரியோர் கூடிநிற்கும் இடத்தில் செய்யத்தகாத செயல்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது."பெரியோர் கூடிநிற்கும் இடத்தில் சிரித்தல், இரகசிய பேச்சு பேசுதல், நண்பருக்காக ஒருபக்கம் நின்றுபேசுதல், ஆகாதவர்களிடத்தில் பகைமையான பேச்சை பேசுதல், பாட்டுக்கு பொருள் சொல்லுதல் எனும் ஐந்து செயல்களையும் அறிவுடையோர் செய்யமாட்டார்கள்."[23] என்று கூறப்பட்டுள்ளது.

சிறுபஞ்சமூல ஆசிரியர் ஒழுக்கமற்றவர்கள் மேல் பெரிதும் கோபப்படுகின்றார். ஒழுக்கமற்றவன் மனிதனே அல்லன் என்று குறிப்பிடுகின்றார். ஒழுக்கமற்ற மனிதனை நாய் என்று குறிப்பிடுகின்றமை சிந்திக்கத்தக்க விடயமாகும்.

"நாணிலன் நாய்நன்கு நள்ளாதான் நாய்பெரியார்ப்
பேணிலன் நாய்பிறர் சேவகன்நாய் – ஏணில்
பொருந்திய பூண்முலையார் சேரிகைத் தில்லான்
பருத்தி பகர்வுழி நாய்"[24]

அதாவது வெட்கம் கெட்டவன் நாய், பிறரோடு நன்றாக நட்புக்கொள்ளாதவன் நாய், பெரியோர்களைப் பாதுகாக்காதவன் நாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடைய பணியாளனாய் இரந்து வயிறு வளர்க்கின்றவன் நாய், அழகற்ற ஆபரணங்களை அணிந்து பரத்தையர் சேரியிலே பணமில்லாமல் திரிகின்றவன், பருத்தி விற்பனை செய்யும் இடத்திலே அலைந்து கொண்டிருக்கும் நாய். இவ்வகையில் ஒழுக்கமற்றவனை நாயை போன்றவன் என்று கூட சொல்லவில்லை இவ்வாசிரியர்.– நாயேதான் என்று உரைத்தார். இதன் மூலம் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாக மதிக்கின்றார் சிறுபஞ்சமூல ஆசிரியர் என்பதை அறிய முடிகின்றது.

நல்லொழுக்கத்தின் பயன்

மனிதனானவன் ஒழுக்க சீலனாக வாழ்வதனால் கிடைக்கின்ற பயன்பாடு பற்றியும் சிறுபஞ்சமூலம் எடுத்துக்கூறுகின்றது. ஒரு மனிதனானவன் எவ்வாறான அறங்கள் செய்தால் பெரும்போகம் கிடைக்குமென நூலாசிரியர் விளக்குகின்றார்.

நீரறம் நன்று நிழல்நன்று தன்னில்லுள்
பாரறம் நன்றுபார்த்து உண்பானேல் – பேரறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போக
மொன்றுமாஞ் சால வுடன் [25]

தவித்த வாயிற்குத் தண்ணீர் அருந்தக்கொடுத்தல் நல்ல செயற்பாடாகும். கொடிய வெப்பத்தால் தவிப்பவர்களுக்கு தக்கநிழல் அமைத்துக் கொடுத்தல் நல்லறம் ஆகும். தன் வீட்டில் மழை, வெள்ளம் போன்ற துயர், இடர் மிகுந்த நாட்களில் மற்றவர்கள் வந்து தங்கி நிற்பதற்கு இடம் கொடுத்தல் அறச்செயற்பாடாகும். மற்றவர்களோடு உணவைப் பகிர்ந்து உண்ணும் வாழ்க்கை நல்வாழ்க்கை ஆகும். இது மிகப்பெரிய வாழ்வியல் அறம் எனக் கருதப்பட்டது. இவற்றோடு மக்கள் வழிபாடு செய்வதற்காகக் கோயில்களை அமைத்து கொடுத்தலும், மக்கள் போக்குவரத்து செய்வதற்கு வசதியாக பெரும் சாலைகளை அமைத்துக்கொடுத்தலும் மிகநல்ல பணிகளாக சிறுபஞ்ச மூலம் எடுத்துரைக்கின்றது.

சிறுபஞ்ச மூலப்பாடலில் எவ்வாறான நல்ல அறங்களை செய்யும் மனிதன் எண்பது வயதுக்கு மேலும் நீண்ட சுகமான வாழ்வு வாழ்வான் என்பதை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்
அஞ்சா துடை படையுட் போந்தெறிவான்– எஞ்சாதே
உண்பது முன் ஈவான் குழவி பலி கொடுப்பான்
எண்பதின் மேலும் வாழ்வான்.[26]

அதாவது, பஞ்சகாலத்தில் பிறருக்கு பகுத்துக்கொடுத்து தானும், உண்பவன், தன் செல்வத்தால் பிறருக்கு உதவி செய்கின்றவன், போர்க்காலத்தில் அஞ்சாமல் நின்று பகைவர்களை அழித்து தன்படையைக் காப்பவன், ஒவ்வொரு நாளும் பிறருக்கு உணவு இட்ட பின்பே தான் உண்பவன், பசியால் வாடும் குழந்தைகளுக்கு உணவு அழிப்பவன் ஆகிய ஐவரும் எண்பது வயதுக்கு மேலும் உயிர் வாழ்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த பிறப்பிலே நோயின்றி வாழவேண்டுமாயின் எக்காரியங்கள் செய்திருக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

சிக்கர் சிதடர் சிதலைப்போல் வாயுடையார்
துக்கர் துருநாமர் தூக்குங் கால் – தொக்க
வருநோய்கள் முன்நாளில் தீர்த்தாரே இந்நாள்
ஒரு நோயும் இன்றி வாழ்வார்''[27]

தலைநோயுடையவர், பித்துடையவர், வாய்ப்புற்றுடையவர், சயநோயுடையவர், மூலநோய் கொண்டவர் முதலிய ஐவரையும் அவர் படும் துன்பங்களிலிருந்து முற்காலத்தில் ஒழித்தவரே இக்காலத்தில் ஒரு நோயும் இல்லாமல் வாழ்ந்திருப்பர் என்று கூறப்படுகின்றது.

பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் சிறந்த ஒழுக்கவியல் நூலாக சிறுபஞ்சமூலம் விளங்குகின்றது. அறநெறிகாலமாகிய சங்கமருவிய காலத்தில் தோன்றிய இந்நூலில் அக்கால சமுதாயம் வேண்டிநின்ற ஒழுக்கவியல் கருத்துக்கள் பல சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை புலப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

01. சிதம்பரனார், சாமி, பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், ஸ்டார் பிரசுரம், 1957. ப. 99
02. மு.கு.நூ 1957. ப. 99
03 மு.கு.நூ 1957. ப. 100
04. பதார்த்தகுண சிந்தாமணி ; 495
05. திருக்குறள், 14; 1
06. சிறுபஞ்ச மூலம் – 42. (சிறுபஞ்ச மூலம், காரியாசான், புன்னைவனநாத முதலியார், பு.சி (விளக்கவுரை), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட். சென்னை 01, 1936.
07. திருக்குறள், 05;1
08. திருக்குறள், 05;6
09. சிறுபஞ்ச மூலம் – 51
10. சிறுபஞ்ச மூலம் – 45
11. சிறுபஞ்ச மூலம் – 47
12. சிறுபஞ்ச மூலம் – 33
13. சிறுபஞ்ச மூலம் – 28
14. சிறுபஞ்ச மூலம் – 09
15. சிறுபஞ்ச மூலம் – 10
16. சிறுபஞ்ச மூலம் – 68
17. சிறுபஞ்ச மூலம் – 09
18. சிறுபஞ்ச மூலம் – 43
19. சிறுபஞ்ச மூலம் – 63
20. சிறுபஞ்ச மூலம் – 70
21. சிறுபஞ்ச மூலம் – 72
22. சிறுபஞ்ச மூலம் – 82
23. சிறுபஞ்ச மூலம் – 83
24. சிறுபஞ்ச மூலம் – 86
25. சிறுபஞ்ச மூலம் – 61
26. சிறுபஞ்ச மூலம் – 77
27. சிறுபஞ்ச மூலம் – 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிக்கால இலக்கியங்கள் காட்டும் விருந்தோம்பற் பண்பு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

விருந்தோம்பற் பண்பு பண்டுதொட்டுத் தமிழர்களிடத்தில் இருந்து வந்துள்ளது. தமிழ்மொழியில் எழுந்த தொன்மையான இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் விருந்தோம்பல் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. குறிப்பாக, ஆற்றுப்படை இலக்கியங்களிலே விருந்தோம்பலின் தேவையும், சிறப்பும் பலவாறு விதந்துரைக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

இங்ஙனம் தமிழர் பண்பாட்டு மரபுகளுள் ஒன்றாக விளங்கிய விருந்தோம்பல் பற்றி அறநெறிக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மேலும் அழுத்தமாகப் பேசியுள்ளன. வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்றுக் கௌரவிக்கும் விரும்தோம்பலை மட்டுமன்றி 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' வாழ்வியலையும் அவை விருந்தோம்பல் என்றே குறிப்பிடுவதைக் காணலாம். பசிப்பிணி தீர்த்து உயிர்களை வாழவைக்கும் இந்த அறம் தனிமனித நிலை, குடும்பநிலை, சமூகநிலை எனும் தளங்களில் எங்ஙனம் பின்பற்றப்பட வேண்டும் என்ற வழிகாட்டல்களை அவை தருகின்றன. தனிமனித நிலையில் விருந்தோம்பல் ஆத்ம திருப்தியைத் தரும் ஒரு வாயிலாகவும், இல்லற நிலையில் ஒரு வாழ்வியல் கடமையாகவும், சமூகநிலையில் பசிப்பிணியைத் தீர்க்கும் ஒரு பேரறமாகவும் இலக்கியங்களிலே பேசப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் உயிர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையிலும் மறுமையிலும் பயன்களைத் தரவல்ல ஒப்பற்ற அறமாக விருந்தோம்பல் விதந்துரைக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

ஆய்வுக்காலப் பகுதியில் தோன்றிய திருக்குறள் உள்ளிட்ட அறநூல்களிலும், காவியங்களிலும் விருந்தோம்பல் பற்றிய குறிப்புகள் தாராளமாகத் தரப்பட்டுள்ளன. விருந்தோம்பலின் சிறப்பு, விருந்தினரின் தன்மை, விருந்தோம்பலால் கிடைக்கக் கூடிய இம்மை மறுமைப் பயன்கள், விருந்தை அவமதித்தலால் ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகள், வறுமைக்கு விருந்தோம்பல் மருந்தாக அமையும் மாண்பு, அறங்களுக்குள் அது பெற்றுள்ள முதன்மை முதலான பல விடயங்கள் குறித்து அவை பேசுகின்றன. அறநெறிக்காலப் பகுதியில் விருந்தோம்பற் பண்பாட்டுக்கு கிடைத்த மேலான மதிப்பும், கவனிப்பும் இத்தகைய தகவல்கள் மூலம் தெரியவருகின்றன.

விருந்தோம்பற் பண்பாடு பற்றி இதுவரை திருக்குறளை மையப்படுத்தியே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறன்றி அறநெறிக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் யாவற்றையும் தொகுத்தாராய்ந்து அவை சுட்டும் விருந்தோம்பற் பண்பாடு பற்றிய குறிப்புக்களை இக் கட்டுரை முன்வைக்க முயல்கின்றது.

விருந்தும் விருந்தினரும்

இல்லற நிலையில் பின்பற்றப்பட வேண்டிய உயர்ந்த அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலை அறநெறிக்கால இலக்கியங்கள் சுட்டுகின்றன. திருவள்ளுவனார், இல்வாழ்வான் என்பான் பிதிரர்கள், தேவர்கள், விருந்தினர்கள், சுற்றத்தார், தான் என்று சொல்லப்படுகின்ற ஐந்திறத்தாரையும் ஓம்புதல் கடன் எனக் குறிப்பிடுகின்றார் (குறள்: 43). இவ் ஐவருள்ளும் விருந்தினரை ஓம்பலே மிகச் சிறந்த அறம் எனப் பரிமேலழகர் சுட்டுதல் நோக்கத்தக்கதாகும்.

> *"தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனாகாதாரை நினைத்து செய்வனவாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். எப்பயனும் நோக்காது யாவர்மாட்டும் செய்யப்படுவது விருந்தோம்பல் மட்டுமே ஆதலால் இல்லற அறங்களுள் எல்லாம் தலையானதாக பரிமேலழகர் அதைச் சுட்டுகின்றார். இதனையே மற்றுமோர் குறளில் வள்ளுவர்,

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்: 81)

எனக் கூறியிருந்தல் நோக்கற்பாலதாகும். 'விருந்து' என்பதற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் தருகின்றார்.

"விருந் தென்பது புதுமை; அஃது ஈண்டாகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேனின்றது; அவர் இருவகையர்; பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும்; அஃதின்மையிற் குறியாது வந்தாருமென."

மேலே தரப்பட்டுள்ள உரைப்பகுதியில் விருந்தினர்களை இருவேறு வகையினராகப் பரிமேலழகர் அடையாளங் கண்டுள்ளார்.

i. விருந்து நல்குவோருக்கு ஏலவே நன்கு பரிசயமானவர் ஒருசாரார்.
ii. மற்றையோர் விருந்து நல்குவோருக்கு முன்னம் ஒருபொழுதும் பரிசயமில்லாதார்.

முதலாவது வகைமையுள் ஒருவருக்கு நன்கு முகப் பழக்கம் உடையவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என்போர் அடங்குவர். இவர்கள் – உறவினர்கள் போலல்லாது எதிர்பார்த்தோ அல்லது எதிர்பாராமலோ வீட்டுக்கு வருபவர்கள். இவர்கள் போலல்லாது எதிர்பாராது வரும் முன்பின் முகமறியா நபர்களும் உளர். இவர்களை இரண்டாவது வகை விருந்தினர்களாகக் காண்கின்றார் பரிமேலழகர். ஏலாதியின் எட்டுப் பாடல்களில் இல்லறத்தான் ஒருவன் விருந்து தந்து காப்பாற்ற வேண்டிய இரண்டாவது வகை விருந்தினர்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்தணர், பசித்தவர், தவசிகள், குழந்தைகள், பிறரால் வெறுக்கப்படுகின்றவர்கள், தம்மைக் காத்துக்கொள்ளுதற்குரிய ஆதாரம் இல்லாதோர் (ஏலாதி: 54),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வினைப்பயனாக மேல் நிலையிலிருந்து இழிந்தோர் (வீட்டை இழந்தோர், வாணிகத்தில் செல்வத்தை இழந்தோர், விளைந்த நெல்லை இழந்தோர், பசுக் கூட்டத்தை இழந்தோர்) ஊனமுற்றோர் (குருடர், முடவர், ஊமைகள்), வயது மூத்தோர், அநாதைகள், கடன்பட்டோர், வறியோர் (ஏலாதி: 52, 53), பெண்கள், மகவினைப் பெற்றோர், மகவினைப் பெறுங் காலத்தில் வேதனைப் படுகின்றவர்கள், கருவுற்றிருக்கின்றவர்கள், கைம்பெண்கள் (ஏலாதி: 55, 78), நோயால் வருந்துகின்றவர்கள், உடம்பில் புண்பட்டோர், பித்தர்கள் (அறிவு மயங்கியவர்கள்), சிறைவாசம் அனுபவித்தோர் (ஏலாதி: 56, 57, 79) என்போர்களே ஏலாதி சுட்டும் இரண்டாவது வகை விருந்தினர்களாவர். இவர்களுக்கு உணவும், ஆதரவும், பொருளும் தந்து பேணுவதால் இல்லறத்தான் ஒருவன் பெருஞ் சிறப்பும், புகழும், நல்வாழ்வும் இவ்வுலகில் வாய்க்கப் பெறுவான் என்று ஏலாதி வலியுறுத்துகின்றது.

விருந்தோம்பலும் அறநூல்களும்

ஏலாதியில் தரப்பட்ட மேற்போந்த விபரிப்பினையும் ஏனைய அறநூல்களில் தரப்படுகின்ற விருந்தோம்பல் பற்றிய குறிப்புக்களையும் நோக்குகின்றபோது ஆதரவு தேடித் தம்மை நாடி வந்தோருக்குச் செய்யும் விருந்தோம்பல் பற்றியே அறநூல்கள் விரிவாகப் பேசியுள்ளமை தெரிகின்றது. இதுவே ஈகை என்னும் பேரறமாக உருப்பெற்றுள்ளதைக் காணலாம். தன்னை நாடிவந்தாரின் உயிரையும், உடலையும், மானத்தையும் காப்பாற்றும் பெரும் தொண்டாக இவ் விருந்தோம்பல் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனிதசமுதாயம் இனக்குழுக்களாக இருந்த காலங்களில் அதாவது பொதுமைச் சமுதாயமாக இருந்தபோது ஆதரவுதேடி அலையும் நிலையிருக்கவில்ல. ஆனால் என்று அது உடைமைச் சமுதாயமாக மாற்றம் கண்டதோ அன்று தொட்டு பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் உருவாகத் தொடங்கிவிட்டன. சொத்துடைமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம் எனத் தொடர்ந்த சமுதாயப் போக்குகள் மக்களிடையே பொருளாதார அசமந்தநிலையை மேலும் ஆழமாக்கிச் சென்றன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் கொள்வோன் – கொடுப்போன், ஏழை – பணக்காரன், வள்ளல் – இரப்போன் எனும் வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. காலத்தால் முற்பட்ட தமிழ் இலக்கியங்களான சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களிலேயே இந்த ஏற்றத் தாழ்வுகள் மிகத் துலாம்பரமாகத் தெரியத் தொடங்கிவிட்டதை அவதானிக்கலாம். இனக்குழு எல்லைக்குள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட புலவர்களும், பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களும் 'பழமரந் தேடும் பறவைகள் போல' வள்ளல்களை நாடிச் சென்றமை பற்றி சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உற்பத்தியில் நேரடிப் பங்காளிகளாக இல்லாத புலவர்கள், கலைஞர்கள் வாழ்வியலில் உடைமைச் சமுதாயம் ஏற்படுத்திய உடனடி மாற்றத்தினை இங்கு காண்கிறோம். புலவர்கள், கலைஞர்களின் வறுமையையும், வறுமையைக் கரந்து வாழ அவர்கள் முயன்றமையையும், முடியாதபோது வள்ளல்களை நாடிச்சென்று அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றமையையும், தாம்பெற்ற பெருவளத்தினை 'ஓம்பாதுண்டு கூம்பாது வீசிய' வள்ளண்மையையும் சங்க இலக்கியங்களிலே ஆங்காங்கே காண முடிகின்றது. குறிப்பாக ஆற்றுப்படை இலக்கியங்கள் புலவர்களை, கலைஞர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து விருந்தும், பொருளும் நல்கிய வள்ளல்களைப் பற்றித் தாராளமாகக் குறிப்பிடுகின்றன. வள்ளல்களேயன்றி புலவர்களும் கலைஞர்களும் கடந்து சென்ற வழிகளில் வாழ்ந்த மக்களை தமக்குக் கிடைத்தவற்றைக் கொண்டு விருந்தோம்பி மகிழ்வித்த செய்திகள் ஆற்றுப்படை இலக்கியங்களில் உணர்வு பூர்வமாகச் சுட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

இங்ஙனம் உடைமைச் சமுதாயத்தின் தோற்றத்தால் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஏற்றத் தாழ்வுகளே அறநீதி நூல்கள் விருந்தோம்பல் பற்றிப் பேசத் தூண்டியிருத்தல் வேண்டும். சங்ககாலத்தின் பின்னர் தீவிரமடைந்த உடைமைச் சமுதாயப் பின்னணியில் மேலும் முற்றி முறுகிய ஏற்றத்தாழ்வுகள் விருந்தோம்பல், ஈகை முதலானவற்றை அறநூல்கள் மேலும் தீவிரமாக வலியுறுத்தக் காரணமாகியுள்ளன. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அதற்கான காரணங்களை விளங்கிக் கொண்டு அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் தத்தவ ரீதியான பார்வைகள் வளர்ச்சி கண்டிராத உடைமைச் சமுதாயச் சூழலில் அறநூல்கள் சீர்திருத்தப் பின்னணியில் தங்கள் கோட்பாடுகளை முன்வைத்ததில் வியப்பில்லை. அதன் ஓரங்கமாகவே ஏற்றத்தாழ்வுகளின் விளைபொருளான வறுமை, இல்லாமை என்னும் சமூகக் கொடுமைகளுக்கு ஈகையையும் அதன் பின்னணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பலையும் அவை தீர்வாக வலியுறுத்துவதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்ட விருந்தோம்பற் பண்பும், மன்னர்கள், குறுநில மன்னர்கள், இனக்குழுத் தலைவர்கள், பழங்குடியினரின் விருந்தோம்பற் சீர்மையும் அறநூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றன.

சங்கமருவிய காலப் பகுதியில் காணப்பட்ட – தெளிவற்றிருக்கும் – களப்பிரர்களின் ஆட்சியும், சங்ககாலத்தின் பிற்பகுதி முதலாக மக்களின் அக, புற வாழ்வில் அவதானிக்கப்பட்டு வந்த சமூகக் குறைபாடுகளும், சங்ககாலத்தில் நிகழ்ந்த தொடர்ச்சியான போர்களின் மோசமான தாக்கங்களும், உடைமை இழப்புக்களும் கூட அறநீதி நூல்கள் எழுந்தகாலப் பகுதியில் விருந்தோம்பலும் ஈகையும் வலியுறுத்தப்படக் காரணமாக அமைந்திருக்கலாம் போலத் தெரிகின்றது. விருந்தோம்பலையும் பகுத்துண்டு வாழ்வதையும் பாரிய மனிதநேயத் தொண்டாக மேற்படி இலக்கியங்கள் விபரிப்பதைப் பார்க்கும்போது அதன் பின்னணியிலுள்ள மேற்படி சமூகக் காரணங்கள் ஓரளவுக்குத் தெளிவாகின்றன. மேலும் சங்ககாலத்தின் பிற்பகுதி முதலாகத் தமிழகத்துக்கு சமண, பௌத்த துறவிகள் தாராளமாக வரத்தொடங்கிவிட்டனர். துறவை வலியுறுத்திய மேற்படி தத்துவங்கள் துறவறத்துக்குத் துணையாக இல்வாழ்வார் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டியிருந்தது. குறிப்பாக, துறவிகளின் துறவற வாழ்க்கை இடையூறின்றிக் கழிய, உணவளித்து காக்கின்றவர்களாக இல்வாழ்வார் இருந்துள்ளனர். இதனால் இல்லறத்தார்க்கு விருந்தின் சிறப்பும், பயனும், எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் சமண – பௌத்த துறவிகள் தாம் போதித்த அறத்தின் ஒரு பகுதியாக விருந்தோம்பலை விபரித்திருக்கலாம் போலத் தெரிகின்றது.

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை (குறள்: 42)

எனும் அறநீதிக் கருத்துக்கள் இவ்விடத்தில் பொருத்தி நோக்கத்தக்கனவாகும். விருந்தினர்க்குப் பொருளைக் கொடுப்பதிலும் அவரின் பசிநீங்க உணவளிப்பதே மேலான தருமம் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் தானங்களுள் எல்லாம் சிறந்த தானம் அன்னதானமாகும். அன்னதானத்திலேதான் விருந்தினனுக்கு முழுமையான திருப்தியும், மனநிறைவும் ஏற்படும் என்பார்கள்.

விருந்தினனும் விருந்தளிப்பவனும்

விருந்தினருக்கு வேண்டிய தகுதி பற்றியும், விருந்தளிப்பவனுக்கு வேண்டிய பண்புகள் குறித்தும் அறநூல்கள் கூறுகின்றன. துறவிகளேயன்றிப் பிறர், யாசித்து அல்லது இரந்து உண்பது என்பது விரும்பத்தக்கதல்ல (இன்னா: 16) எனும் அறநூல்கள் அவ்வாறு இரந்துண்ண வேண்டிய நிலை விதிவசத்தால் வரின் அருள் இல்லாதவரிடம் செல்லுதல் வேண்டாம் எனக் கூறுகின்றன (திரி.: 10, இன்னா. 21). அருளில்லாதவரிடம் செல்லுதல் என்பது மனக் கிலேசத்துக்கும் துன்பத்துக்குமே காரணமாகும் என அவை வலியுறுத்துகின்றன (இனியவை: 10). அதேபோலவே வறுமையுடைய ஒருவனிடம் மற்றொருவன் விருந்தினனாகப் போவதும் (இனியவை: 06), செல்வந்தன் ஒருவன் வறுமையுடையானிடத்து விருந்தினனாகச் செல்வதும் துன்பத்தையே தரும் எனக் கூறப்படுகின்றது (பழமொழி: 157). வறுமையுடையான்பாற் செலின் அவன் இவர்களுக்கு விருந்தளிக்க முடியவில்லையே என்று மனத் துன்பமடைய வேண்டியேற்படும். துறவோர் வீட்டிலிருந்தும் ஊண் உண்பது துன்பத்துக்குரியதொன்று என அறநூல்கள் வலியுறுத்துகின்றன (இனியவை: 01). மழைக்காலத்தில் விருந்தினராகச் செல்வதும் பொருத்தமற்றது எனக் குறிப்பிடும் திரிகடுகம் அவ்வாறு செல்லும் விருந்தினரை கௌரவிக்க முடியாது வீட்டார் வருந்துவர் என்கிறது (திரி: 76). பிறரிடம் சென்று யாசிப்பவர்கள் குறிப்பாகத் துறவிகள் ஒரு காலத்திலும் கோபிக்கக் கூடாது எனவும் அறநூல்களில் கூறப்படுகின்றது (இன்னா: 39).

விருந்தளிப்பவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்தே அறநூல்களில் விலாவாரியாகப் பேசப்பட்டிருத்தலைக் காணமுடிகின்றது. செல்வமுடைமை, முகமலர்ச்சி, இன்சொல்லுடைமை, உயிர்கள் மாட்டு அன்புடைமை, இரக்கம் என்பன விருந்தளிப்போனிடம் இருக்கவேண்டிய தகுதிகளாக அறநூல்களில் விபரிக்கப்பட்டுள்ளது. விருந்தளிப்போன் முதலில் மற்றவர்களுக்கு உணவையோ அல்லது பொருளையோ கொடுக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க வல்லமை படைத்தவனாக இருக்கவேண்டும். அதாவது பொருளாதார ரீதியான பலம் கொண்டவனாக இருக்க வேண்டும் (இன்னா: 02). அவ்வாறன்றித் தனக்குணவில்லாதவன் பிறர்க்கு உதவிசெய்ய முயல்வதானது நகைப்பிற்குரிய தொன்றாகும் (சிறுபஞ்: 12). பிறருக்கு அள்ளிக் கொடுத்துத் தருமம் செய்ய முடியாதவர்கள் தம்மால் இயன்றதைக் கொடுத்தாற் போதுமானது என்று அறநூல்கள் கூறுகின்றன (இன்னா: 06). ஈத்துவக்கும் இன்பம் பெரிதாகையால் அதனைப் பெற விரும்புவோர் பொருளைத் தேடும் முயற்சியிலீடுபடுதல் சாலச் சிறந்தது (திரி.: 68,90). தாம் பெற்ற செல்வத்தினை தமக்கென வைத்துக் கொள்ளாது அதனைப் பகுத்துண்டு வாழ்வதே நன்மையாகும். அவனையே இவ்வுலகம் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணன் என மதிக்கும் (சிறுபஞ்.: 08). அதிலும் தகுதியுடையாரை இனங்கண்டு அவருக்கு உணவும் பொருளும் அளிப்பதே உண்மையான தருமமாக அமையமுடியும் என அறநூல்கள் விபரிக்கின்றன (இன்னா: 19, நான்மணி: 82).

விருந்தளிப்போனுக்கு இருக்கவேண்டிய அன்புடைமை, முகமலர்ச்சி இன்சொல்லுடைமை என்பனபற்றி அறநூல்களில் விரிவான தகவல்கள் உண்டு. திருக்குறளின் அதிகார வைப்புமுறை பற்றிப் பேசும் பரிமேலழகர் அன்புடைமை, இன்சொல்லுடைமை என்பவற்றுக்கிடையே விருந்தோம்பல் என்ற அதிகாரம் வைக்கப்பட்டமைக்கான காரணம் விருந்தோம்புகின்றவனுக்கு இப் பண்புகள் அவசியம் வேண்டப்படுகின்றன என்பதனாலாகும் எனக் குறிப்பிடுகின்றார். அன்பிலாதவரிடத்தில் சென்ற விருந்தினர் வாடுவர் என நான்மணிக்கடிகையாசிரியர் கூறுகின்றார் (நான்மணி.: 47). அன்பும் இன்சொல்லும் உடையார் மாட்டு இன்முகம் என்றும் இருக்கும். அந்த இன்முகக் குறிப்பொன்றே விருந்தினனின் பாதிப் பசியையும் களைப்பையும் தீர்த்துவிடும் என்பார்கள். அதனாலே தான் வள்ளுவர்,

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள்: 90)

எனக் கூறிச்சென்றார். சிறுபஞ்சமும் விருந்தினனிடம் விருந்தோம்புவோனுக்கு இருக்க வேண்டிய கண்ணோட்டம் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரிக்கின்றது (சிறுபஞ்.: 52). தன்னை நாடிவந்தார்க்கு கைப்பிடி அளவுள்ள அல்லது உண்டோ இல்லையோ என ஐயுறும்படியாக விரலிறையுள் அடங்கும் பிச்சைச் சோற்றினையோ கூழையோ கொடுத்தாலும் அதன் பயன் மிகுதியானது என அந்நூல் மேலும் விபரிக்கின்றது. அதாவது இரவலரைக் கண்டு மனமிரங்கி ஒருவன் சிறு பொருளைக் கொடுத்தாலும் அதனால் வரும் பயன் குன்று போலப் பெரியதாய்க் கூடும் என்பது இதனாற் புலனாகின்றது (சிறுபஞ்.: 64,65). ஆசாரக்கோவை புன்முறுவலோடு இனியசொற்களைக் கூறி வரவேற்றல், கால் கழுவ நீரளித்தல், அமர்வதற்குப் பாயை அளித்தல், படுக்கப் பாயைத் தருதல், தங்க இடம் கொடுத்தல் என்பனவற்றையும் விருந்தோம்புவோர் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது (ஆசார: 54). மேலும் விருந்தினர் உணவுண்ணும்போது விருந்தளிப்போர் உயர்பீடங்களிலே அமரக்கூடாது என்றும் (ஆசார: 40) விருந்தைச் சிறப்பிப்பன உருக்கு நெய்யும் கட்டித் தயிருமாகலின் கன்றோடு கூடிய பசுவினை உடையானது விருந்து மிக இனிது என்றும் (இன்னா: 38) அறநூல்கள் சுட்டுவதைக் காணலாம். நான்மணிக்கடிகை விருந்தினர்க்கு உண்கலம் வைத்து விருந்தளித்தால் அவர்கள் மிக மகிழ்வர் எனக் குறிப்பிடுகின்றது (நாண்மணி: 63). இல்லறவாழ்வில் இல்லாளின் பெரும் பணி தனது கணவன் செய்கின்ற விருந்தோம்பலுக்கு உறுதுணையாக இருப்பதாகும் என்கிறது திரிகடுகம் (திரி: 64).

இம்மையும் மறுமையும்

இம்மைப் பயன்களையும் மறுமைப் பயன்களையும் ஒருங்கே தரவல்ல உயர்ந்த அறமாக விருந்தோம்பலை அறநூல்கள் குறிப்பிடுகின்றன. தன்னை நாடி வந்தவனுக்கு உணவோ பொருளோ கொடுத்து அதனைப் பெற்றதால் அவன் முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி ஒன்றைக் காண்பதே வள்ளல் ஒருவனுக்கு உவப்பான பயன் எனக் கூறப்படுகின்றது (குறள்: 228). அதற்காக விருந்தினர்க்குக் பொருளையும் உணவையும் கொடுக்கின்றவன் ஒருகாலத்திலும் வறுமைப்பட மாட்டான்; அவன் செல்வம் எப்போதும் பெருகிக்கொண்டேயிருக்கும். வள்ளலிடத்துள்ள செல்வம் வயிரம் பாய்ந்த மரத்துக்கு ஒப்பாகும் என திரிகடுகம் கூறுகின்றது (திரி.: 75). வள்ளுவரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று (குறள்: 83)

என்றும்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவா னில் (குறள்: 84)

என்றும்

வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் (குறள்: 85)

என்றும்

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது (குறள் 227)

என்றும் கூறியிருத்தல் காண்க. செல்வம் ஒருவனிடம் எப்போதும் நிலைத்து நிற்பதில்லை; இதனால் ஒருவனிடம் செல்வம் உள்ள காலத்திலேயே உயர்ந்த அறங்களைச் செய்து, நிலையான பயன்களைத் தேடிக் கொள்ள வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது (நாலடி: 93). அதிலும் வறியோரின் பசியைத் தீர்த்துத் தேடிக் கொள்ளும் பயனே வள்ளல் தன் செல்வத்தை அழியாமல் பாதுகாக்கக் கூடிய கருவூலம் என்கிறார் வள்ளுவர் (குறள்: 226).

சிறுபஞ்சமூலம் பஞ்ச காலத்தில் பலர்க்கும் பகிர்ந்தளித்து உண்பவன்; தன்னிடத்துப் பொருளை வீணாக யாருக்கும் பயன்படாமல் காத்துக் கொண்டிருக்காது பிறர்க்கு கொடுத்து உதவுபவன்; தானுண்பதைப் பிறர்க்கு ஈந்து உண்பவன்; பசித்த குழந்தைக்கு உணவளிப்பவன் ஆகிய இவ்வைவரும் எண்பது வயதுக்கு மேல் நீண்ட காலம் சுகமாக வாழ்வார்கள் எனக் குறிப்பிடுகின்றது (சிறுபஞ்: 79). மேலும் சிறந்த துறவறத்தாருக்குச் சமைத்துப் பகிர்ந்துண்டு மிகவும் இனிதாக முற்பிறப்பில் வாழ்ந்தவர்களே இப் பிறப்பில் சமைத்துப் பலரோடு பகிர்ந்துண்டு பிறர் போற்ற வாழ்வார்கள் எனக் குறிப்பிடுகின்றது (சிறுபஞ்: 93). முதுமொழிக்காஞ்சி பகுத்துண்டு வாழ்வான் இவ்வுலகில் தன் புகழை நிலைநிறுத்துவான் என்கின்றது. ஏலாதி இரவிலும் வருந்தி முயன்று பொருளீட்டி உணவுகளைச் சமைத்து அளித்தவர் பலவகையான யானைகளையுடைய அரசர்களாய் மதிக்கப்பட்டு மனைவி மக்களுடன் கூடி இன்சுவை உணவுகளை மகிழ்வுடன் ஒருசேர உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வர் எனப் புகழ்கின்றது (ஏலாதி: 52). மேலும் யார்யாரையெல்லாம் இல்வாழ்வான் விருந்தோம்பிப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறிவிட்டு அங்ஙனம் விருந்தோம்புவோர் இவ்வுலகத்தில் சுற்றத்தினருடன் கூடி அளவளாவி மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் (ஏலாதி: 53) என்றும் உலகத்தை ஆண்டு செல்வம் தம்மைச் சூழ்ந்திருக்க இன்பத்துடன் வாழ்வார்கள் (ஏலாதி.55) என்றும் மன்னவராய் யாவராலும் போற்றப்படும் படி பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆண்டு வருவார்கள் என்றும் (ஏலாதி: 42, 44, 45, 56, 57) பெருந்தவத்தினர்க்கு உணவு கொடுத்தவன் சுறாமீன் போன்று அமைக்கப்பட்ட தோரண வாயிலையுடைய மாளிகையில் வாழ்வான் (ஏலாதி: 43) என்றும் ஏலாதி சுட்டுகின்றது.

விருந்தோம்புவோர் அடையத் தக்க இம்மைப் பயன்கள் பற்றி விரிவாகப் பேசிய அறநூல்கள் அதனால் ஏற்படும் மறுமைப் பயன்குறித்து மிகவும் சிக்கனமாகவே பேசியிருக்கின்றன. இம்மைப் பயன்கள் இலகுவில் ஒருவரால் உணரத்தக்கனவாக இருப்பதாலும் மறுமைப் பயன்கள் புலன்களால் அறியமுடியாதனவாக இருப்பதாலும் ஒருவேளை அறநூல்கள் அவைபற்றி விரிவாகக் கூறுவதைத் தவிர்த்திருக்கலாம் போலத் தெரிகின்றது. எனினும் நாலடியாரும் வள்ளுவமும் விருந்தோம்பலின் மறுமைப் பயன்கள் குறித்த தகவல்களைத் தருகின்றன. விருந்தோம்பலின் மறுமைப் பயன் சுவர்க்கப் பதவியே என அவை உறுதிபடக் கூறுவதைக் காணலாம். நாலடியார் 'கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு அடையாவாம் மாண்டைக் கதவு' என்கின்றது (நாலடி: 91). சுவர்க்கத்தின் பாதைகள் விருந்தோம்புவோர்க்கு எப்போதும் திறந்தேயிருக்கும் என்பது இதனாற் தெளிவாகின்றது. வாரிக்கொடுத்த செல்வர்க்கேயல்லாமல் சிறிய தருமத்தினைச் செய்தவர்க்கும்கூட இச் சுவர்க்கப் பதவி சாத்தியமாகும் என்கிறது நாலடியார் (நாலாடி: 272). வள்ளுவர் இதற்கும் ஒருபடி மேற்சென்று,

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்போன்
நல்விருந்து வானத் தவர்க்கு *(குறள்: 86)*

எனக் குறிப்பிடுகின்றார். விருந்தோம்பலின் சிறப்பு தேவர்களாலேயே கௌரவிக்கப்படும் சிறப்பினைப் பெறுவதாகும் என்பது இதன் பொருள். ஆக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும், பயன்களை வாரித்தரவல்ல ஓர் அறமாக விருந்தோம்பலை அறநூல்கள் விதந்துரைத்துள்ளதைக் காணலாம். விருந்தோம்பலினால் கிடைக்கக் கூடிய பயன்கள் இத்துணை என வரையறுக்க முடியாது எனச் சுட்டும் வள்ளுவர் விருந்தோம்பல் குறித்த ஓர் எச்சரிக்கையினையும் செய்திருக்கின்றார். விருந்தோம்பல் தகுதியானவரிடத்தில் செய்யப்படவேண்டும் என்பதே அதுவாகும் (குறள்: 87). பாத்திரமறிந்து செய்யப்பட்ட விருந்தோம்பலினாலேயே பயன் உண்டு என்கிறார் வள்ளுவர். ஒருவர் செய்யும் விருந்தின் பயனை அளந்தறியக் கூடிய கருவி அவர் யாருக்கு விருந்தினைச் செய்கின்றார் என்பதேயாகும். இதனையே நாலடியாரும் வறியார்க்குக் கொடுத்தலே கொடையாகும்; செல்வர்க்குக் கொடுப்பது கடனாகும் எனச் சுட்டுகின்றது (நாலடி:98).

இவறன்மை

விருந்தினரை அவமதிப்பதால் ஏற்படக் கூடிய தீமைகள் குறித்தும் அறநூல்களின் விரிவான கருத்துக்கள் உள. திரிகடுகம் விருந்தினர் இல்லாமல் தனித்து உண்ட பகற்பொழுது மனத்திண்மையுடையார்க்கு நினைக்கும் தோறும் நோயாம் என்றும், இரப்பவர்க்கு இல்லையென்று அன்பின்றி மறைப்பவன் நரகத்தில் சென்று வீழ்வான் என்றும் கூறுகின்றது. (திரி:44,45). முதுமொழிக்காஞ்சி ஈயாத கையுடையான் புகழ்மாலை உடையவன் ஆகான் எனச் சுட்டுகின்றது (முதுமொழி.180). இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலாகச் சென்று நாலடியார் கொடுத்து உண்ணாதார் சுடுகாட்டில் இருக்கும் ஆண்பனைக்கு ஒப்பாவார் என்கின்றது (நாலடி:96). ஆண்பனை காய்ப்பதில்லை; அதனால் பயனற்றது; அதுவும் சுடுகாட்டில் நிற்குமெனின் அதனை எவருமே திரும்பிப் பாரார் எனும் பொருள் தொனிக்கும் வகையில் இவறண்மையை நாலடியார் கடிந்திருக்கும் நயம் படித்தின்புறத்தக்கதாகும். மேலும் பிறருக்கு கொடுத்து வாழாதவர்களுக்குச் சுவர்க்கக் கதவுகள் எப்போதும் மூடப்பட்டிருக்கும் என்றும் (நாலடி: 271), தானும் உண்ணாமல் துறவோருக்கும் கொடாமல் பொருளைத் தேடிவைத்த லோபியை அப்பொருளும் சிரிக்கும் உலகமும் கண்டு நகைக்கும் என்றும் (நாலடி: 273), வீட்டிற் பிறந்த பெண்ணை அயலான் அநுபவிப்பது போல கொடாதவன் பொருளைப் பிறன் அநுபவிப்பான் என்றும் (நாலடி.:274), கொடாத செல்வர்களைப் பார்க்கிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்திரர் பலமுறையாலும் பிழைத்தவர்கள் என்றும் (நாலடி.: 277) நாலடியார் விருந்தோம்பாதோரைப் பலவாறு சாடியிருப்பதைக் காணலாம். திருவள்ளுவரும்,

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்கண் உண்டு (குறள்: 89)

என இவறண்மையைச் சுட்டிக்காட்டியிருத்தல் நோக்கத்தக்கது. விருந்தோம்பி வேளாண்மை செய்யாத இல்வாழ்வோரைப் 'பேதையர்' என வள்ளுவர் இங்கு குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

இவற்றால் விருந்தோம்பி வாழும் வாழ்க்கையே அர்த்தமுடையது என்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழவிரும்புவோர் விருந்தோம்பலை விடாது பேணிவர வேண்டும் என்றும் அறநூல்கள் குறிப்பிடுவது தெரிகின்றது. இங்ஙனம் விருந்தோம்பும் அறத்திணைத் துறவறத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் வள்ளுவர்,

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள்: 225)

எனக் கூறியிருப்பதை நோக்குகின்றபோது விருந்தோம்பலின் முக்கியத்துவம் மேலும் தெளிவாகின்றது. இவற்றுகெல்லாம் மேலாக விருந்தோம்பலின் சிறப்பினை முத்தாய்ப்பு வைத்தாற்போல்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்: 322)

என்று வள்ளுவர் கூறியிருத்தலைக் காணும் போது அறங்களுக்குள் எல்லாம் பேரறமாகக் கருதத்தக்க முக்கியத்துவத்தினை விருந்தோம்பல் பெற்றிருந்தமை தெரிகின்றது. தமிழர் பண்பாட்டில் ஊறிப்போன ஓர் அம்சமாகவும், ஒரு சமூகத் தேவையாகவும் விளங்கிய விருந்தோம்பலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநூல்கள் வரையறுத்து, ஒழுங்குபடுத்தியுள்ளன; அதனைப் பிற்காலச் சமூகத்துக்கு ஆவணப்படுத்தியும் தந்துள்ளன.

உசாத்துணை

1. சிதம்பரனார், சாமி., பதினென் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், அறிவுப் பதிப்பகம், சென்னை, 2003.
2. நான்மணிக்கடிகை மூலமும் பழையவுரையும், (பாதி.) மாதவன், இரா., தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (2001).
3. பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1956.
4. பதினெண் கீழ்க்கணக்குத் தெளிவுரை, (பதி.) சண்முகப்பிள்ளை, மு., முல்லை நிலையம், சென்னை, 2003.
5. பொன்னுச்சாமி., மு., தமிழ் நீதி இலக்கிய வரலாறு, இந்து பதிப்பகம், கோயம்புத்தூர் – 2003
6. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரிபுத்தகப் பண்ணை, சென்னை, 1985.
7. சந்திரசேகரன். இரா. சரவணன், ப., நலடியாரில் அறவாழ்வு, சீதை பதிப்பகம், சென்னை, 2007.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்

ம. பாலகைலாசநாத சர்மா

வடமொழி இலக்கியப் பரப்பு இருபகுதிகளை அடிப்படையாகக் கொண்டது. வேதகால இலக்கியப்பகுதி அல்லது வைதிகப் பகுதி என்றும் சம்ஸ்கிருத இலக்கியப்பகுதி அல்லது செம்மொழிச் கால இலக்கியப் பகுதி எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. வேதகால இலக்கியப் பகுதியிலே வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள் ஆகியவையும் செம்மொழிக்கால இலக்கியப் பகுதியிலே இதிகாச புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், காவியங்கள், நாடகங்கள், சமய சாஸ்திரங்கள், பக்தி இலக்கியங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன.

இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளாக மக்களின் சிந்தனையில் நிலவி வாய் மொழியாக வந்து எழுதாமறையாயிருந்து பின்னர் எழுத்தில் வெளிவந்த நான்கு வேதங்களும் இற்றைவரையும் கால வரலாற்று நோக்கிலே மிகவும் பழையனவாகக் கொள்ளப்படுகின்றன. இதனால் அவை பாடப்பட்ட மொழியும் தெய்வீகத்தன்மை நிறைந்த மிகப் பழையதாய் இருக்கின்றது. அதே வைதிக (வேத) மொழியில் இருந்து தோன்றி காலப்போக்கில் மாற்றமடைந்து செம்மைப்படுத்தப்பட்டு வேறாகத் தோன்றும் சம்ஸ்கிருதம் காலத்தாற் பிற்பட்டது. எனவே வடமொழி இலக்கியப் பரப்பு எனக் கருத்திற் கொள்ளும் போது அது வைதிக மொழியையும், சம்ஸ்கிருத மொழியையும் உள்ளடக்கிய மிகவும் விரிவான இலக்கியப் பரப்பாகும். சமஸ்கிருதம் என்ற சொல்லின் பொருள் செம்மைப்படுத்தப்பட்டது என்பதாகும். அது செம்மொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமொழியிலிருந்து பெரிதும் வேறுபட்டதாய் பாணினியின் இலக்கண விதிகளுக்கு அமைய வளர்ந்தது. இவ்வாறு பிரித்துக் கூறும் மரபு பாணினி காலத்திலே தோன்றி வளர்ந்து நாளடைவில் இலக்கிய வரலாற்று நூல்களிலும் வேரூன்றி விட்டது.[2]

ஆரம்ப காலத்தில் அர்த்தம் (பொருள்) பற்றிய குறிப்பு

இந்துக்களின் வாழ்க்கை இலட்சியங்களாக நான்கு புருஷார்த்தங்கள் கூறப்பட்டன. தர்மம் (*அறம்*), அர்த்தம் (*பொருள்*), காமம் (*இன்பம்*), மோட்ஷம் (*வீடு*) என தர்மார்த்தகாமமோட்ஷஹா என்று சிறப்பிக்கப்பட்டன. இவற்றுள் முதல் மூன்றும் (*தர்ம, அர்த்த, காம*) திரிவர்க்க என பிற்பட்ட வேதகாலம் வரையும் வழங்கப்பட்டு வந்தன. இங்கு காமம் அல்லது இன்பம் எல்லாவகையான உலகியல் இன்பங்களையும் குறிக்கும். மூன்றாவதான இன்பத்திலேயே நான்காவதான முத்தியின்பமும் அடங்கும் என்ற கருத்தும் நிலவியது. நான்காவதான மோட்ஷம் (*வீடு*) பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் தெரியவருகின்றது. எனினும் திரிவர்க்கங்களிலே பொருளின் முக்கியத்துவம் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

அறம் செய்வதற்கும், இன்பத்தினை அனுபவிப்பதற்கும் பொருள் அவசியம். எனினும் வடமொழி இலக்கியப் பரப்பிலே இம்மூன்றும் பற்றிய நூல்கள் தனியாக எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. குறிப்பாக அறத்தினைப் பற்றிக் கூறும் தர்ம சாஸ்திர நூல்களும் பொருளைப்பற்றிக் கூறும் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் காமம் பற்றிக்கூறும் வாத்ஸ்யாயனரின் காமசூத்திரமும் நன்கு குறிப்பிடற்பாலன. இந்நூல்கள் தமக்கு முற்பட்ட நூல்கள், அறிஞர்கள் பற்றியும் குறிப்பிடுவதை நோக்கும் போது காலங்காலமாக நிலவிவந்த அறிவுத் தொகுப்புக்கள் போலக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் இந்தியாவின் பொது மொழியாக நீண்ட காலமாக நிலவிவந்துள்ள சம்ஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டவையாகும். இவற்றுக்கு வடமொழியிலே உரைகளும் உள்ளன. உதாரணமாக அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் பட்டசுவாமியின் உரையும் மாதவயஜ்வாவின் உரையும் காணப்படுகின்றன.[3] இக்கட்டுரையும் அர்த்தசாஸ்திர நூலை ஒரு பொது நோக்காகக் கொண்டு அந்நூலின் பல்வேறுபட்ட அம்சங்களையும் செல்வாக்கையும் எடுத்துக்கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தசாஸ்திர நூலின் தோற்றுவாய்

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் ஆங்கிலேய ஆட்சி சார்ந்த ஒருசார் அறிஞர்கள் இந்துக்கள் உலகியல் பற்றிச் சிந்திக்காது ஆத்மீகம் மறுவுலகம் போன்றவற்றையே சிந்தித்து வந்துள்ளனர் எனக் கூறிவந்த கருத்துக்களை மேற்குறிப்பிட்ட தர்மசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், காமசூத்திரம் போன்ற நூல்களும் பிறவும் தவறானவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன.[4] அத்துடன் பல நூற்றாண்டுகளாக அர்த்தசாஸ்திரத்தினை இந்துக்களிற் பலர் மறந்தும் விட்டனர். நூலின் பெயர் தெரிந்தும் நூலைப் பற்றி அறியாதிருந்தனர்.

இந்நிலையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அர்த்தசாஸ்திர ஏட்டுச்சுவடி ஒன்று தமிழ் நாட்டின் தஞ்சாவூர் பகுதியைச் சேர்ந்த ஒரு சமஸ்கிருத பண்டிதரால் மைசூரில் உள்ள அரசாங்க கீழைத்தேச நூலகத்திற்கு வழங்கப்பட்டது. அப்போது அந்நிறுவனத்திற்குப் பொறுப்பாக இருந்த ஆர்.சாமசாஸ்திரியின் முயற்சியால் 1909 ஆம் ஆண்டு கீழைத்தேச ஆய்வு நிறுவனத்தின் பதிப்பாக வெளியிடப்பட்டது. பின்பு அர்த்தசாஸ்த்திரத்திற்கு வேறு சில சுவடிகளும் கிடைக்கப்பெற்று திருத்தங்களும், ஒப்பீடுகளும் செய்யப்பட்டு மறு பதிப்புக்களும் வெளிவந்தன. இந்நூலின் முதற் சுவடி தமிழ் நாட்டிலே பேணிப்பாதுகாக்கப்பட்டு வேறு சில பதிப்புகளும் ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் வெளிவந்தன. எனினும் 1955இல் பண்டிதமணி கதிரேசச்செட்டியாராலும், வித்துவான் பி.ஸ்ரீ.இராமானுஜாச்சாரியாராலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அண்ணாமலை பல்கலைகழகப் பதிப்பாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.[5]

அர்த்தசாஸ்திரம் - நூற்பெயர் விளக்கம்

அர்த்தசாஸ்திரம் என்பது அர்த்தம், சாஸ்திரம் என்னும் இரண்டு சொற்களால் ஆனது . அர்த்தம் என்னும் சொல் செல்வம், கருத்து, நோக்கம், பொருள், காரணம், உத்தேசம், உபயோகம் எனப் பல கருத்துப்படுமாயினும் இங்கே அரசியலும் சேர்ந்த பொருளியலே வர்ணிக்கப்படுகின்றது.[6] பொருளியலை அர்த்தசாஸ்திரம் எனவும், ராஜசாஸ்திரம் எனவும் ஸ்மிருதிகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசாஸ்திரம் இதம் புண்ணியம் அர்த்தசாஸ்திரம் இதம் பரம்1
மோக்ஷ சாஸ்திர இதம் ப்ரோக்தகு வ்யாசேநாமிதபுத்திநா11 [7]

சாஸ்திரம் என்னும் பதம் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட அறிவியலைக் குறித்துவரும். சங்கீத சாஸ்திரமும், நாட்டிய சாஸ்திரம், பாக சாஸ்திரம் (*சமையற் கலை*) முதலியன போன்றே அர்த்த சாஸ்திரமும் அர்த்தம் (*பொருள்*) பற்றி வரையறை செய்யப்பட்ட அறிவியலைக் குறிக்கின்றது. அர்த்தசாஸ்திரம் என்னும் சொல் பொதுக்கருத்திலே அர்த்தசாஸ்திரம் பற்றிய பொதுவான அறிவியலையும், சிறப்பாக கௌடில்யரின் நூலையும் குறிக்கும். மேலும் நூல் முடிவிலே (15.1) மனிதகுலம் உயிர்வாழ்வதற்கான பிழைப்பூதியமே அர்த்தம் (*பொருள் – செல்வம்*) மனித குலத்தை கொண்டுள்ள பூமியும் அர்த்தமே. பூமியை வென்று பெறுவதற்கும் பாதுகாத்தற்குமான உபாயத்தினைக் கூறும் அறிவியலே அர்த்தசாஸ்திரம் என ஆசிரியர் இதற்கு வரைவிலக்கணம் கூறியுள்ளார்.[8]

அர்த்தசாஸ்திரம் அரசனுக்கு நன்மை பயப்பதையே நோக்கமாகக் கொண்டமைந்தது. எது நாட்டிற்கும் அரசனுக்கும் இலாபம் தருமோ அதனையே அர்த்தசாஸ்திரம் மேற்கொள்ளும்.[9] அரசனுடைய சபையிலே ஆஸ்தான கவிகளாய் விளங்கினோர் அர்த்தசாஸ்திரத்தைப் பயின்றிருந்ததோடு அதற்குத் தனி மதிப்பும் கொடுத்துவந்தனர். பாஷர், காளிதாஸர், பாரவி, மாகர், தண்டி போன்ற வடமொழிக் கவிகள் தம் நூல்களில் அர்த்தசாஸ்திரத்தில் தமக்குள்ள ஆழ்ந்த அறிவைக் காட்டத்தவறவில்லை. அர்த்தசாஸ்திரத்திற்கு ராஜதந்திரம், நீதிசாஸ்திரம், ராஜநீதி, தண்டநீதி என்ற வேறு சிறப்புப் பெயர்களும் உண்டு.[10]

நூலாசிரியரும், நூலின் நோக்கங்களும்

அறம் பொருள் இன்பம் பற்றி ஒரு இலட்சம் சூத்திரங்களை பிரம்மன் ஆதியில் அருளினான் என்றும் பின்பு விசாலாட்சானான சிவன் அதைச் சில நாட்களுக்குப் பல்பிணி சிற்றறிவினோர்க்குப் பயன்படும்படி பத்தாயிரம் சூத்திரங்களைக் கொண்டு ஆக்கினான் என்றும், இந்திரன் அதை ஐயாயிரம் சூத்திரமாகச் செய்தான் என்றும் பின்பு ப்ருகஷ்பதி மூவாயிரம் சுலோகமாகவும் உஷானாஸ் ஆயிரம் பிரிவுகளாகச் செய்தான் என்றும் மகாபாரதம் கூறுகின்றது.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தசாஸ்திர நூலின் ஆசிரியர் கௌடில்யர், சாணக்கியர், விஷ்ணுகுப்தர் எனப் பல பெயர்களால் பொதுவாக அழைக்கப்படினும் கௌடில்யர் என்னும் பெயரே பரவலாக வழக்கில் உள்ளது. இவர் குடவர் என்னும் முனிவர் குலத்திலே பிறந்தபடியால் கௌடில்யர் என்ற பெயர் பெற்றார் என ஒரு சாரார் கருதுவர். சணக என்னும் இடத்தில் பிறந்தபடியால் சாணக்கியர் எனவும் விஷ்ணு பக்தராகிய இவரின் தந்தையார் இவருக்கிட்ட பெயர் விஷ்ணுகுப்தர் (*விஷ்ணுவால் காப்பாற்றபட்டவர்*) எனவும் மற்றுமொரு சாரார் கருதுவர். இந்நூலாசிரியரின் காலம் கி.மு 300 ஆகும்.[12] இக்காலத்திலே மௌரியரின் கீழ் இந்தியாவின் பெரும் பகுதி கொண்டு வரப்பட்டது. அத்தணராகிய கௌடில்யர் சந்திரகுப்த மௌரியரின் பிரதம மந்திரியாக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் பொருளாதார வளர்ச்சி, விவசாயம், கைத்தொழில், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், அரசியல், சமுதாயநிலை என்பன குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றிருந்தன. சமகால மேற்காசிய கிழக்கு ஐரோப்பிய உலகிலே மௌரியப் பேரரசு பெரும் மதிப்பு பெற்றிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலேதான் அர்த்தசாஸ்திரம் குறிப்பாக அதன் மையப்பகுதி எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. இன்றுள்ள நிலையில் இந்நூலின் சில பகுதிகள் மௌரியருக்குப் பிற்பட்டதென ஒரு சாரார் கருதுவர். நூலாசிரியர் தமக்கு முற்பட்ட கால சமகால விற்பன்னர்கள், ஆசிரியர்கள், கவிகள் ஆகியோர்களின் கருத்துக்களை மட்டுமன்றி தமது கருத்துக்களையும் இடையிடையே நன்கு குறிப்பிடுகின்றார். இதனால் சில பகுதிகள் உரையாடல் போன்று காணப்படுகின்றன. பிறர் கருத்தினை நிராகரித்துத் தம் கருத்தினை நிலைநாட்டும் இந்திய அறிவியற் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் கருத்துக்கள் மட்டுமன்றி கருத்துக்குரியவர்களின் பெயர்களும் சில இடங்களில் வந்துள்ளன. அத்துடன் வரலாற்றுத் தன்மையும், கூறுவோரின் அறிவியல் நேர்மையும் புலப்படுகின்றன.

இந்நூலாசிரியர் குறிப்பிடும் சமகால அர்த்தசாஸ்திர பாரம்பரியங்களில் மானவ (மனு) பார்ஹஸ்பத்ய (ப்ருகஸ்பதி) ஔஸனஸ (உஷனஸ்–சுக்கிரர்) பாரத்துவாஜ (துரோணாச்சாரியார்) விசாலாக்ஷ (யாரென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை) பராசர (புகழ் பெற்ற பராசரர்) பிசுன (நாரதர்) கௌனபதந்த (பீஷ்மர்) வாதவியாதி (உத்தவர்) பாகுதந்திபுத்ர (இந்திரன்) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[13] எனவே இவ்வறிவியல் பலவட்டங்களில் கருத்துக்களையும் ஆராய்ந்து மரபு வழியாக வந்த அர்த்தசாஸ்திரக் கருத்துக்களையும் நன்கு ஆராய்ந்து தேவையானவற்றைத் இந்நூலாசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார் எனலாம்.

நூலின் நோக்கத்தைக் கூறவந்த ஆசிரியர் நூலின் இறுதிப்பகுதியிலே இவ்வுலகினைப் பெறுவதற்கான வழிகாட்டியாக இந்நூல் எழுதப்பட்டது எனவும், சாஸ்திர மூலம் அறம், பொருள், இன்பம் ஆகியன பாதுகாக்கப்படும் எனவும், அதர்மம் பொருளில்லாத துன்பம் வெறுப்பு ஆகியன நீங்கும் எனவும் கூறுகிறார். கொடுங்கோல் வேந்தரான நந்தரிடமிருந்து பூமியையும், அரசையும் கைப்பற்றி சாஸ்திரங்களையும் புனித நூல்களையும், ஆயுதக்கலையையும் விரைவிலே காப்பாற்றிய கௌடில்யரால் இது இயற்றப்பட்டதாகும் என வரும் பகுதிகளிலே நூலில் நோக்கங்களும், நூலாசியரின் சாதனைகளும் கூறப்பட்டுள்ளன.[14]

நூலமைப்பு முறை

கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் சம்ஸ்கிருதத்தில் தோன்றிய மிகப் பெரிய நுண்மையான அரசியல் பொருள் நூலாகும். கலைகள் யாவும் கைவந்த கௌடில்யர் நுண்ணிதின் ஆராய்ந்து இந்நூலினை இயற்றியுள்ளார்.[15] இந்நூலானது பதினைந்து அதிகரணங்களும் நூற்றைம்பது அத்தியாயங்களும், நூற்றியெண்பது பிரகணங்களும், ஆறாயிரம் சுலோகங்களும் கொண்டுள்ளது என நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பெரும் பிரிவுகள் அதிகரணங்கள் எனப்படும். பிரகரணம்அத்தியாயம் என்ற உட்பிரிவுகளும் காணப்படுகின்றன.[16] பதினைந்து அதிகரணங்களிலும் கூறப்பட்ட விடயங்களை பின்வரும் தலைப்புக்களில் சுருக்கமாகக் கூறலாம்.

1. பயிற்சி பகர்தல்
2. தொழில் தலைவன் செயல்முறை
3. ஆறநிலை ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிறுபகை களைதல்
5. வஞ்சித்தொறுத்தல்
6. மண்டலயோனி (உறுப்புக்களின் தொகுதிப்பொருள்)
7. அறுவகைக் குணங்கள்
8. விதனம்விளம்பல் (துன்பம் தரும் செயல் கூறல்)
9. போர் செலவு மேற்கொள்வோன் செயல்
10. போர் நிகழ்ச்சி
11. குழு உச்செயல்
12. ஆற்றலிலான் செயல்
13. பகையரசை வெல்லும் வழி
14. மறைவுச் செயல்
15. தந்திரயுக்தி

அரசன், அமைச்சு, நட்பு, ஆள்வோரின் தன்மை, பொருள் வருவாய், குடிமக்கள், அவர்தம் இயல்பு, குற்றங்களைக் களையும் வகை, பகை, நொதுமலர், உறவுமுறைகள் என அரசியல் நடாத்துவதற்குரிய செயல்களும், திட்டங்களும் கொண்டு ஒரு சட்டநூல் போல விளங்குவது சிறப்பான அம்சமாகும்.[17]

பதினைந்தாவது தந்திரயுக்தி அதிகரணத்திலே நூலின் பகுப்புமுறை எடுத்துரைக்கப்படுகின்றது. இந்நூலின் அமைப்பு முறை பற்றிய தகவல்கள் ஆர்.சாமாசாஸ்திரியின் முதல்நூல் பதிப்பையும் ஆங்கில மொழி பெயர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டுள்ளன.நூலில் வரும் பிரகரணம் என்ற பிரிவினைத் தவிர்த்து அதிகரண அத்தியாய பிரிவுகளே தரப்பட்டுள்ளன.

முதலாவது அதிகரணம் அரசனுடைய கல்வி, பயிற்சி முதலியவை பற்றிக் கூறும். அரசன் வேத வேதாங்கங்களையும், சாங்கியம், யோகம், லோகாயதம், மீமாம்சை என்பன உட்பட்ட சகல தரிசனங்களையும் பயிலவேண்டும் எனவும் பொருளியல், விவசாயம், பண்ணைத் தொழில், வியாபாரம், கைத்தொழில், அரசநீதி, தண்டநீதி என்ற துறைகளில் எல்லாம் பயிற்சிபெற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் அதிகரணத்திலே ராஜ்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகத்தினை நடாத்தும் பரீட்சகர்களின் கடமைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் அதிகரணத்திலே சட்டம், ஒழுங்கு என்பன ஆராயப்பட்டுள்ளன. நாலாம் அதிகரணம் தண்ட நீதியைக் கூறுகின்றது. ஐந்தாம் அதிகரணத்தில் தாம் விரும்பாத ஒரு மந்திரியை எவ்வாறு அகற்றலாம் என்ற முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆறாம் அதிகரணத்திலே படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், அரசன், என்ற ஏழு அங்கங்களும் ஆராயப்படுகின்றன. ஏழாம் அதிகரணத்திலே யுத்தத்தின் ஆறு ஏதுக்களும், சமாதானமும், போரும் நடுநிலைமையும், படையெடுத்ததற்கான ஆயத்தமும், நட்பும், நொதுமலான முறையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எட்டாம் அதிகரணத்திலே அரசன் வேட்டையிலும், சூதாட்டத்திலும் பிரியமுடையவனாய், காமம் கொண்டவனாய், குடிவெறியில் ஈடுபட்டிருப்பதால் உண்டாகும் தீமைபற்றியும் கூறப்பட்டுள்ளன. ஒன்பதாம், பத்தாம் அதிகரணங்கள் போரைப் பற்றியும், பதினோராம் அதிகரணம் அரசன் தனக்கு மாறாய் உள்ள பிரபுக்கள் இடையே பகை உண்டாக்கும் முறையையும் அதற்காகப் பெண்களைப் பயன்படுத்தும் முறையையும் கூறுகின்றன. பன்னிரண்டாம் அதிகரணத்திலே பலமற்ற அரசனின் சூழ்ச்சிகளும், பதின்மூன்றாம் அதிகரணத்திலே பலமுள்ள அரசனின் சூழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. பதின்னான்காம் அதிகரணத்திலே ஔஷதிகள் பற்றிய *(மருத்துவ அறிவுபற்றிய)* பிரிவும் மறைவுச் செயல்களும், சூனிய முறைகளும், முப்பத்திரண்டு யுக்திகளும் விரிவாக எடுத்துக்கூறப்படுகின்றன. அர்த்தசாஸ்திரமானது சூத்திரமாகவும், பாஷ்யமாகவும் அமைந்துள்ளது. பாஷநடை, இலக்கணமரபு தவறாததாயிருந்த போதிலும் பல சாஸ்திரங்களில் பயிலும் பரிபாஷைச் சொற்கள் காணப்படுகின்றன. பல சூத்திரங்கள் திருக்குறளைப்போல திட்பநுட்பம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

பதிப்பு முயற்சிகள்

ஆரம்பகாலத்தில் இந்நூலின் ஏட்டுச்சுவடியானது சென்னமங்கலம், கொச்சின் பகுதிகளிலே பாளிமொழியிலும் தொகுப்புக்களிலே மலையாள மொழியிலும் காணப்பட்டதாக அறியமுடிகின்றது.[18] ஆரம்ப காலங்களில் கே.சாம்பசிவசாஸ்திரி என்பவர் 1930இல் முதல் அதிகரணத்தையும் 1938இல் இரண்டாம் அதிகரணத்தினைத் தொகுத்தார் எனவும் வி.ஏ. இராமசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–சாஸ்திரி 1945இல் மூன்றாம் அதிகரணத்தையும் கே.என்.எழுதாசன் என்பவர் 1960இல் நான்கு தொடக்கம் ஏழுவரையுள்ள அதிகரணங்களையும் தொகுத்தார் எனவும் அறியப்படுகிறது.[19] அர்த்தசாஸ்திரம் மூலநூல் ஒன்று பிராட்சயவித்யா சம்சோதனாலய மைசூர் விஸ்சத்தியாலயப் பதிப்பாக 1960இல் வெளிவந்தது. எனினும் ஆர். சாமாசாஸ்திரிகளால் 1902இல் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த முதற்பதிப்பும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் 1955இல் வெளியிடப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புப் பதிப்பும் நன்கு குறிப்பிடத்தகுந்த பதிப்பு முயற்சிகளாகும்.

அர்த்தசாஸ்திரம் பெறும் செல்வாக்கு

1. சமுதாய பின்னணி

கௌடில்யர் கூறும் சமுதாயப் பின்னணியில் முக்கிய பங்கு வகிப்பது விநயமாகும். இங்கு விநயம் எனில் பண்பு சீரொழுக்கம் எனப் பொருள்படும். இந்நூலில் முதலாவதாக உள்ள விநயாகி கரணம் இருபத்தொரு அத்தியாயங்கள் கொண்டதாகும். இதில் இளவரசர்களின் வாழ்க்கை முறை, கற்கவேண்டிய கல்வி, பெறவேண்டிய பயிற்சி, வர்ணாசிரமக் கடமைகள், வார்த்தா எனப்படும் பொருளியல், அரச அறிவியல், வயதுமுதிர்ந்த அறிஞர்கள் நட்புணர்வு, புலனடக்கம், மந்திரிமாரைத் தெரிந்து நியமித்தல், ஆலோசகர்கள், புரோகிதர், ஒற்றர், தூதர், அமைச்சர் என்போர் பற்றிய விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

அரச கடமைகளாக மந்திரிமாரைத் தெரிந்து நியமித்தல், இளவரசைப் பாதுகாத்தல், கட்டுப்படுத்தப்பட்ட இளவரசர், மன்னரின் நாட்கடமைகள், அந்தப்புரம், அரசரின் பாதுகாப்பு, அரசிற்கு உள்நாட்டில் ஏற்படக்கூடிய எதிர்ப்பினை வெல்லுதல், எதிரியினை வெல்லுதல் போன்ற கடமைகள் கூறப்பட்டுள்ளன. பல்வேறு திணைக்கள மேற்பார்வையாளரது கடமைகளாக புதிய கிராமங்களை உருவாக்கல், நிலத்தைப் பகிர்ந்தளித்தல், கோட்டைகளை அமைத்தல் அவற்றின் கட்டிடங்களைப் பராமரித்தல் என்பனவும் அரசரின் அந்தரங்க அதிகாரியின் கடமைகளாக வருமான சேகரிப்பு, கணக்குகளை வைத்திருத்தல், அரச வருமானத்தைப் பாதுகாத்தல், அரச ஊழியர்களின் நடத்தைகளைக் கவனித்தல், சுரங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை எடுத்தல் என்பனவும் கூறப்பட்டுள்ளன. பண்டகசாலை, வர்த்தகம், காட்டுப் பொருள், படைக்கருவிகள், நிறைகள், அளவுகள், ஆயவரிகள், நெய்தல் தொழில், விவசாயம், மதுபானம், இறைச்சி வெட்டும் இடம் என்பவற்றிற்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவது பற்றியும், தேர், காலாட்படை, குதிரைகள், யானைகள், பசுக்கள், கப்பல்கள், பொதுமகளிர், கடவுச்சீட்டு (பிரயாண அனுமதி), புற்றரைகள், நகரம் என்பனவற்றிற்கு தனித்தனியாக மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்படுதல் பற்றியும் ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறுகின்றார்.[20]

விவாக முறைகள், பெண்களின் நிலைப்பாடு, சொத்துரிமை, நிலத்தை விற்றல் வாங்குதல், கொடைகள், உரிமைகள், களவு, நற்புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தல், தாக்குதல், சூதாடுதல், பிற குற்றங்கள், இவற்றிற்கான விசாரணை முறைகள், தண்டனை வழங்கல், சட்டத்தை மீறுவோருக்கு கடும் தண்டனை என்பன சமுதாய நலனையும், முன்னேற்றத்தையும் குறித்து முன்வைக்கப்பட்ட முக்கியமான சமூக அமைப்பு முறைகள் ஆகும்.

2. பொருளியற் சிந்தனைகள்

கௌடில்யர் பொருளியல் சிந்தனைகளுக்கும் முக்கியத்துவமான இடத்தினைக் கொடுத்துள்ளார். அரசியல் யதார்த்தவாதியான அவர் அரசுக்குப் பொருளாதாரம் அவசியம் என்பதைப் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். வார்த்தா என்னும் பதமே பொருளாதாரத்தைக் குறித்து வருகின்றது. விவசாயம், மந்தை வளர்ப்பு, பாதுகாப்பு, வர்த்தகம், ஆகியனவே வார்த்தா என்பதை *"க்ருஷி பசுபால்யேவணி ஜ்யாச வார்த்தா"* (1.4) என்று குறிப்பிடுவதில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.[21] இவ்வார்த்தா – பொருளாதாரம், தானியம் மந்தை, பொன், காட்டுத்திரவியங்கள், அல்லது பொன், வெள்ளி தவிர்ந்த உலோகங்கள், வேதனம் அற்ற தொழில், தொழிற்சிறப்பு முதலியவற்றை அளிப்பதால் நன்மை பயக்கும். இதனை *"தான்ய பசுஹிரண்ய குப்ய விஷ்டி ப்ரதானா தௌபகாரிகீ"* எனக் குறிப்பிடுகிறார்.[22]

தற்காலத்தில் இந்தியா ஓரளவு தொழில் மயமாக்கப்பட்டு வந்தாலும் விவசாயமும், வர்த்தகமுமே இன்றுவரை முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் அடைந்த பின்பு இந்திய அரசு விவசாயத்திலே பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி வருவது தெரிந்த விடயமாகும். பொருளின் சில அடிப்படைக் கருத்துக்களை ஆசிரியர் நன்கு உணர்ந்து கூறியுள்ளார். ஒருவன் (அரசனாகவும் இருக்கலாம்) இல்லாத பொருளைப் பெற முயற்சிக்க வேண்டும். பெற்றதோடு திருப்தியடையாமல் அதனை மேலும் பெறவேண்டும். பொருளை வீணாக்கச் செழவழிக்காது அழிக்காது, குறைக்காது பேணிப் பாதுகாத்தல் வேண்டும். அவ்வாறே பேணிப்பாதுகாத்து அபிவிருத்தி செய்து வந்த பொருளை, தக்கோருக்குக் கொடுக்க வேண்டும். ஊழியர்களாயின், சம்பளமாகவும், வறியோராயின் நன்கொடைகளாகவும் வழங்கல் வேண்டும். இவற்றிலேதான் உலகில் உள்ள வாழ்க்கை முறை தங்கியுள்ளது என்ற உண்மைநிலையை ஆசிரியர் எடுத்துக்கூறுகின்றார்.

அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் ஒப்பீடுகளைக் கூறவந்த கௌடில்யர் அறத்திற்கும், பொருளுக்கும் விரோதமின்றி இன்பத்தை அனுபவிக்க வேண்டும் எனவும், இன்பநுகர்ச்சி இருக்கலாகாது எனவும் கூறுகின்றார். அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை மிகுதியாகப் பின்பற்றினால், ஏனைய இரண்டும் பாதிக்கப்படும், மூன்றையும் (அறம், பொருள், இன்பம்) ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் கொண்டு சம அளவிலேயே பின்பற்ற வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். எனினும் இம்மூன்றிலும் பொருளே மிக முக்கியமானதென்பதை "அர்த்த ஏவ ப்ரதானஹ" என்று கூறுவதில் இருந்தும் தர்மமும், காமமும் பொருளையே அடிப்படையாகக் கொண்டவை என்பதை "அர்த்த மூலக ஹி தர்ம காமாவ்" என்று கூறுவதில் இருந்தும், தர்மத்தின் மூலம் பொருளே என்பதை "தர்மஸ்ய மூலம் அர்த்தஹ" என்று கூறுவதில் இருந்தும், ஆசிரியர் பொருளுக்கும், பொருளியல் சிந்தனைக்கும் முக்கியமான இடத்தைக் கொடுத்துள்ளார் எனலாம்.[23]

3. நிலக்கொள்கை

உற்பத்திக்கான பிரதான மூலமான நிலத்தில் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தவும், குடிசன அடர்த்தியுள்ள மையப்பகுதிகளுக்கு வெளியே புதிய நகரங்களை உருவாக்கவும், புதிய கிராமங்களை அமைக்கவும் அரசு முழுமையாக ஆதரிக்கும் என்று கௌடிலயர் கூறியிருக்கின்றார். புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புக்களில் வேற்று நாட்டவர்கள் வந்து குடியேறுவதற்கு அரசு அனுமதியளிக்கும். விவசாய நிலங்களில் உள்ள புதிய குடியிருப்புக்கள் அரசுக்குச் சொந்தமானவை. இந்நிலங்களை அரசு மூன்று நிலைகளில் வழங்கிவந்தது. வரியிறுப்போருக்கு வாழ்நாள் முழுவதுமான நிலம் எனவும் அரசின் கிராமப் பணியாளர்களினால் பயிரிடுவதற்கு வழங்கப்பட்ட நிலம் எனவும், வணிகர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலம் எனவும் ஆசிரியர் பாகுபடுத்திக் கூறியிருக்கின்றார்.

4. சுரங்கக் கனிப் பொருட்கள்

சுரங்கக் கனிப் பொருட்களும், அரசின் தனியுரிமையாகக் காணப்படுகின்றது. இதனையும் அரசு மூன்று வழிகளில் செயற்படுத்துமென கௌடில்யர் வலியுறுத்தியிருக்கிறார். அவையாவன அரசுக்குச் சொந்தமானவை, அரசுக்கும் தனியார் குழுக்களுக்கும் (Private Companies) உரியன, தனிப்பட்ட குழுக்களுக்கு (Personal Companies) மட்டும் உரியன என பிரித்துக் கூறப்பட்டுள்ளன. எனவே இயற்கை அளிக்கும் சிறந்த கொடைகளான விவசாய நிலங்கள், சுரங்கங்கள், காடுகள், குளங்கள், ஆறுகள், மீன்பிடி நிலைகள், காய்கறி வகை உற்பத்திசெய்யும் இடங்கள் என்பவற்றை அரசு தனது நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்.

5. உற்பத்திப் பொருட்கள்

அரசின் கீழ் இருக்கும் உற்பத்திப் பொருட்களுக்குப் பொறுப்பான பல்வேறு மேற்பார்வையாளர்கள் அரசால் நியமிக்கப்படுவர். குறிப்பாக விவசாய உற்பத்திற்கு சீதாத்யட்சகரும், காடுகள் சார்ந்த உற்பத்திக்கு குப்யாத்யஷியும், மதுபான உற்பத்திக்கு சுராற்யட்சகரும், பண்டங்களின் உற்பத்திக்கு கோஷ்டாகாரத்யட்சகரும், நூல் நெய்தல், புடவை, கயிறு ஆகிய உற்பத்திக்கு சூத்ராயட்சகரும் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப் படுவார்கள். அத்துடன் உலோக உற்பத்தி, சுரங்கப் பொருள் உற்பத்தி, உப்பு உற்பத்தி என்பவற்றுக்கும் அரசின் தனியுரிமை உண்டு.

6. வர்த்தக வியாபாரங்கள்

வர்த்தக வியாபாரம் உள்நாட்டிலும், கடல்கடந்த வெளிநாட்டிலும் நிலவியது என்பதை அர்த்தசாஸ்திரம் எடுத்துக்காட்டுகின்றது. உள்நாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுக்கு ஐந்து வீதமும், வெளிநாட்டுப் பொருட்களுக்கு பத்து வீதமும் இலாபம் பெறலாம் என அரசு, அனுமதி வழங்கியது. வர்த்தக வியாபாரத்தில் எல்லா மட்டத்திலும் அரசின் முனைப்பான தலையீடுகளும் காணப்படுகின்றன. அரசு உற்பத்தி செய்த பொருட்களுக்கும், ஏனையவற்றிற்கும் பாதுகாப்பு வரிகள் விதித்தது. அரசால் தடைசெய்யப்பட்ட அல்லது அரசின் தனியுரிமையாக உள்ள உலோகங்கள், படைக்கலங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் இறக்குமதி செய்ய தனியாருக்கும் உரிமை வழங்கப்படும். பொருட்களை விற்காமல் தடை செய்யும் வர்த்தகர்களும் அவற்றை அதிக விலைக்கு விற்பவர்களும் தண்டிக்கப்படுவார்கள். விரும்பியவாறு வர்த்தகர்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலையை நிர்ணயிப்பதற்கும் அவற்றை விற்பதற்கும் அரசு சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

7. தொழிலாளர்கள் பற்றிய கொள்கை

நேர்மையான உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் மேம்பாட்டினையும், நலனையும், நன்மையையும் முன்வைத்து அரசு செயற்படும். தொழிலாளர் தாம் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஊதியத்தை தொழில் செய்விப்போர் வழங்காத பட்சத்தில் தண்டிக்கப்படுவர். அடிமைகள் போல வேலைசெய்விப்பதைத் தவிர்த்து, தொழிலாளர்களின் நலன்பேணும் திட்டங்களை அமுல்படுத்தி சிறந்த ஒழுங்காற்று நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

8. அரச ஊழியர்களின் சம்பள முறை

அரசிடம் இருந்து அரசு குடும்பத்தவர்களும், அரசு ஊழியர்களும் மாதாந்த சம்பளம் பெறுவர். குறிப்பாக கிரியை செய்யும் குருமார்களான ருத்விக்கள், ஆசிரியர், அமைச்சர், புரோகிதர், தளபதி, முடிக்குரிய இளவரசர், அரசரின் தாய், அரசி ஆகியோர் மிகக்கூடிய சம்பளமாக ஆண்டிற்கு குறிப்பிட்ட தொகைப் பணமாக 48,000 பெறுவர். அடுத்து அரண்மனை வாயிற்காப்போன், அந்தப்புரம் மேற்பார்வையாளன், தளபதி, வருவாய்த்துறை தலைமை அதிகாரி, கஞ்சுகி ஆகியோர் ஆண்டிற்கு 24,000 பணமும், செவலித்தாய், பிரதம காவலாளி, நகரப் பொறுப்பதிகாரி, தொழிலக மேற்பார்வையாளர்கள் ஆகியோர் 12,000 பணமும், படைக்குழுக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள், யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்படை தலைவர்கள் முதலியோர் 8.000 பணமும், சிற்றூழியர் ஒருவர் நாளொன்றுக்கு 60 பணமும் பெறுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இறக்கும் ஊழியர்களுக்கு ஊதியமும், மரணம், மகப்பேறு, நோய் ஆகியவற்றால் பீடிக்கப்படும்போது அரசனின் நிதியுதவியும் கிடைக்கும். ஊழியர்களின் கவனிப்பு, கல்வி, வினைத்திறன், சம்பள உயர்வு என்பவற்றையும் அரசே நேரடியாகச் செய்து வரும்.

9. அரசின் பொதுநல சேவைகள்

அரச ஊழியர்களுக்கு மட்டுமன்றி அரச மட்டத்தில் இருந்து முதியோர், அநாதைகள், துன்புற்றோர், நோய்வாய்ப்பட்டோர், உதவியற்றோர் ஆகியோருக்கு அரச உதவிகள் ஊதியமாக வழங்கப்படும். பெண்களுக்கு பண உதவி, தொழில்வாய்ப்பு வசதி, விதவைகளுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் நெசவுத் தொழிலில் வாய்ப்பு என்பனவும் வழங்கப்படும். இயற்கை அழிவுகள் ஏற்படும்போது அரசு இயன்றளவு உதவிகளை மக்களுக்குச் செய்யும்.

10. சட்டத்தின் முன் சம அந்தஸ்து என்ற நிலைப்பாடும் கூட்டுப் பொறுப்பும்

அரசினால் சுயநலவாதிகளும், கடமைகளைச் சரியாகச் செய்யாதவர்களும், குடும்பத்தையும் மனைவியையும் கவனிக்காது துறவறம் மேற்கொண்டவர்களும், குற்றம் செய்யும் பிராமணர்களும் தண்டிக்கப்படுவார்கள். சட்டத்தின் முன் சம அந்தஸ்து என்ற நிலைப்பாடு கௌடில்யர் காலத்தில் நிலவியிருந்தது.

குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும், அசம்பாவிதங்கள், களவுகள் செய்யும் குற்றவாளிகளை இனங்கண்டு கொள்வதற்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அரசால் கூட்டுப் பொறுப்பு ஏற்படுத்தப்படும். அரசுடன் ஒத்துழைக்காவிடத்து முழுக்கிராமமே தண்டிக்கப்படும்.

முடிவுரை

கௌடில்யர் தனது அர்த்த சாஸ்திரத்திலே கூறியுள்ளவற்றை சமகால சூழ்நிலையில் பார்க்கும்போது சிறப்பான முன்னேற்றம் உள்ள சமுதாயப் பின்னணி காணப்படுவதையும், மனிதநேயம், பொதுநல நோக்கு, பண்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்கள் காணப்படுவதையும் காணலாம். கௌடில்யர் கூறும் பொருளியல் கருத்துக்களை இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசியர் கேமச்சந்திரராவ் ஆயிரத்தித் தொள்ளாயிரத்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ஜேர்மனியில் நிலவிய கருத்துக்களுடன் நன்கு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.[24] இற்றைய உலகில் நிலவும் பொதுநல அரசுபற்றிய கருத்துக்களின் பல அம்சங்கள் பழங்கால இந்திய அரசியல், பொருளியல் சிந்தனைகளில் வேரூன்றி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.[25]

எனவே, அர்த்தசாஸ்திர நூலாசிரியரான கௌடில்யர் மரபுவழியாக வந்த அர்த்தசாஸ்திரக் கருத்துக்களின் பல்வேறுபட்ட அம்சங்களை நன்கு ஆராய்ந்து தேவையானவற்றை மிகவும் திறம்படத் தொகுத்துக்கூறியுள்ளார். அர்த்தசாஸ்திர நூலின் தொடக்கத்திலேயே "*முன்னைய ஆசிரியர்கள் இயற்றியுள்ள பெரும்பாலான அர்த்தசாஸ்திரங்கள் கூறும் பல்வேறுப்பட்ட கருத்துக்களின் பிழிந்தெடுக்கப்பட்ட சாரமாகவே அர்த்தசாஸ்திரம் இயற்றப்பட்டுள்ளது*" என தெட்டத்தெளிவாக நூலாசிரியர் வலியுறுத்திக் கூறியிருப்பதையும் நோக்க முடிகின்றது.

அடிக்குறிப்புக்கள்

01. சுப்பிரமணியசாஸ்திரி.பி.எஸ், வடமொழிநூல் வரலாறு, அண்ணாமலைநகர், 1946, ப–1.
02. கைலாசநாதக் குருக்கள். கா. வடமொழி இலக்கிய வரலாறு, கலாநிலையம், 175 ,செட்டியார் தெரு, கொழும்பு, 1962, ப–19.
03. கோபாலகிருஷ்ணஐயர். ப. (பதிப்பாசிரியர்), கைலாசநாதம் கா. கைலாசநாதக்குருக்கள் பவளவிழா மலர் வெளியீடு, யாழ்ப்பாணம், 2000, ப–177.
04. மேற்படி. நூல், ப–177
05. மேற்படி. நூல், ப–178.
06. Sir Monier William, "Unitility - generally named with karma and dharma tri-varga used in wishing well to another". Sankrit-English Dictionary,, Oxford at-the Clarendon, press 1899, p-90.
07. சுப்பிரமணியசாஸ்திரி.பி.எஸ்., வடமொழி நூல் வரலாறு, மேலது, ப–329
08. கோபாலகிருஷ்ணஐயர்.ப. (பதிப்பாசிரியர்), மேலது, ப–178.
09. நடராஜன். சோ, வடமொழி இலக்கிய வரலாறு, செம்மொழிக்காலம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு 1966, ப– 283

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. Berriedale Keith ,A. Classical Sanskrit literature, Oxford University press, 1936. p-97
11. Desgupta .S.N,A History of Sanskrit literature, classical period, Vol-1, University of Calcutta, 1947, Pp-706 - 707
12. Ibid, p-701.
13. கோபாலகிருஷ்ணஐயர். ப. (பதிப்பாசிரியர்)மேலது, ப–182.
14. மேற்படி நூல் ப–182 – 183.
15. கதிரேசச் செட்டியார். மு. இராமனுஜசாரி.பீ.ஸ்ரீ. கௌடலீயம், பொருணூல் - தமிழ்மொழி பெயர்ப்பு, இரண்டாம் பகுதி, அண்ணாமலை நகர், 1980, ப–1.
16. மேற்படி நூல், ப–1 – 2 .
17. மேற்படி நூல், ப–1 – 2.
18. Kangle. R . P, The Kautiliya Arthasatra, Motital Banaridass Publishers Private Limited, Dehil, 1965 part- 1, P-xv.
19. Ibid, P-xv.
20. Ibid, P-xvi.
21. கோபாலகிருஷ்ணஐயர்.ப. (பதிப்பாசிரியர்), ப–183.
22. மேற்படி நூல், ப–183.
23. மேற்படி நூல், ப–184.
24. மேற்படி நூல் ப–190.
25. Krishna Roa. M.V. Studies in Kautiliya Mandali Mysore, 1953, P-vii-viii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலாதியும் மனிதநேயமும்

சாந்தி கேசவன்

இறை, உயிர், உலகம், வாழ்க்கை இவை பற்றிய அறிவாராய்ச்சி இந்தியாவில் தோன்றியதையொட்டி வேதஉபநிடதங்களும் , பௌத்த, சமண தத்துவநூல்களும் தோன்றின. கிரேக்கம், ரோமாபுரி, சீனா போன்ற நாடுகளிலும் மெய்ப்பொருள் ஆராய்ச்சி, கணிதவியல், வானியல், பௌதீகம், அளவையியல், அறிவியல் போன்றவை தோன்றின. இத்தகைய ஒரு குறிப்பிட்ட காலப்பரப்பை தத்துவஞானிகளின் காலம் (The period of the philosophers) எனலாம். இக்காலத்தில் தோன்றி வளர்ந்த தத்துவக் கூறுகளில் ஒன்றுதான் **அறவியல்** எனலாம். இவ்வறவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே உலகெங்கும் அற இலக்கியங்கள் எழுச்சியுற்றன.

மனிதன் சக மனிதனை நேசிக்கின்ற, சக மனிதன் துன்பம் போக்கி வாழ்கின்ற மனித நேயத்தை, உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுகின்ற, எல்லா உயிர்களின் துன்பம் துடைக்கின்ற உன்னத வாழ்க்கை நெறியை அறநெறிக்கால நூல்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தவகையில் இங்கு தமிழில் எழுந்த அறநூற்கால இலக்கியமான ஏலாதி முதன்மைப்படுத்தப்படுகின்றது.

அறநூலான ஏலாதி உடலுக்கு வலிமையையும், பொலிவையும் தரக்கூடிய மனிதநேயப் பண்புகளைத் தன்னுள் முழுவதுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியுள்ளது என்பதைப் பலர் அறிந்திலர். எனவே அவற்றைச் சமூகத்திற்கு வெளிக்கொணர்தலே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

அறநூற்காலத்திற்கு முன்னிருந்த அறவியல்

தமிழில் எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறத்தை முதன்மையாகப் போதிப்பது இலக்கிய வரலாற்றிலோ, சமூகவரலாற்றிலோ தற்செயலாகவோ திடீரென்றோ நிகழ்கின்ற காரியமில்லை. இந்நூல்களின் தோற்றத்திற்கு முன்பே தமிழ் இலக்கிய நூல்கள், அறக்கூறுகளின் தோற்றத்தைக் கொண்டிருந்தன.

வாழ்க்கை நெறிக் கொள்கைகளை முழுமையாக விளக்கும் அறநூல்கள் தோற்றம் பெறுவதற்கு முன் உலகில் பல்வேறு பகுதிகளில் வழக்காற்று ஒழுக்கநெறியைச் (customary morality) சிறப்பாக விளக்கும், **மூதுரைகள், முதுமொழிகள், பழமொழிகள்** தோன்றிப் படிப்படியாக வளர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. தமிழ்நாட்டில் அறநூற்காலத்திற்கு முன் (கி.பி.3ஆம் நூற்றாண்டு வரை) கடையெழு வள்ளல்கள் என்று அழைக்கப்படுகின்ற காரி, பாரி, ஓரி, ஆய், அதியமான், பேகன், நள்ளி போன்றவர்கள் மனிதநேயப்பண்புடையவர்களாக திகழ்ந்தார்கள் என அக்கால இலக்கியங்கள் பதிவுசெய்கின்றன.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா[1]

உலகளாவிய மனிதநேயத்துக்கு முதல் முதலில் வித்திட்ட ஒப்பற்றவர் கணியன் பூங்குன்றனாரது பொன் எழுத்துக்கள் புறநானூற்றிற்கு பெருமை சேர்க்கும் சான்றாகின்றன.

தமிழ்ச் சமணர்

சமணசமயத்தைச் சார்ந்த தமிழர்கள் தமிழ்ச் சமணர்கள் எனப்படுவர். தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட எண்பத்தையாயிரம் மக்கள் சமணசமயத்தைப் பின்பற்றுகிறார்கள். காஞ்சியில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பருத்திக்குன்றம் இவர்களுடைய பிரசித்தமான கோயிலாகவும் வழிபாட்டுக்குரியதாகவும் திகழ்கின்றது. இன்றும் கோயிலை அண்மித்த பகுதியைச் சுற்றித் தமிழ்ச் சமணர்கள் வாழ்கின்றமையைக் காணலாம். **சமணர்கள், அறம், துறவு, கொல்லாமை, அகிம்சை என்ற சொற்பதங்களினூடாக மனிதநேயப் பண்புகளை தமிழ்ச் சமூகத்திடம் வேரூன்றச் செய்வதில் முக்கிய பங்கு வகித்தனர்.** தமிழ் மொழிக்கும் அவர்களின் பங்கு முக்கியமானது. 'இலக்கிய வளமிக்க மொழி' என்னும் அந்தஸ்த்தைத் தமிழ் அடையப் பெருமளவு காரணமாகினர்.[2] சமணர்களது அறநெறிகள் இன்றுவரைத் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றுள்ளன.[3]

ஏலாதி - ஆசிரியர், பெயர்க்காரணம், நூல் அமைப்பு

கணிமேதாவியார், கணிமேதை என்றும் இவர் அழைக்கப் பெறுவார். சோதிட நூற் புலமை மிக்கார் என்பதால் கணிமேதை எனப்பட்டார் என கொள்வாரும் உண்டு. இவர் அருகக் கடவுளுக்கு வாழ்த்துக் கூறியுள்ளமையினாலும், இந்நூலில் சமண சமயத்தின் சிறப்பு, அறம் என்பன கூறப்பட்டதனாலும் இவரைச் சமண சமயத்தவர் எனக் கூறுவதில் தவறில்லை. திணைமாலை நூற்றைம்பது எனும் அகப்பொருள் நூலை இயற்றியவரும் இவரே.

பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பில் அடங்கிய பண்டைத் தமிழ் நீதி நூல்களில் ஒன்றாகிய ஏலாதி, ஏலத்தை முதலாக கொண்ட ஆறு பொருள்களை (சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், சிறுநாவல், ஏலம்) பயன்படுத்திச் செய்யப்பட்ட ஏலாதி என்னும் மருந்து ஒன்றின் பெயரை அடியொற்றியே இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. இந்நூலின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஆறு நீதிகளை கூறி **மக்களின் ஒழுக்கக் குறைவுக்கு மருந்தாவதால்** இந்நூலுக்கு **ஏலாதி** என்று பெயர் ஏற்பட்டது. சில இடங்களில் கண்டசர்க்கரையையும் சேர்த்து ஏழு ஆக்கிக் கொள்வது போல் ஏழு நீதிக் கருத்துக்களும் உண்டு. (எ-டு – 18ஆம் செய்யுள்).

சிறப்புப்பாயிரம், கடவுள் வாழ்த்து உட்பட 82 பாடல்கள் இதில் உள்ளன. இவை ஒவ்வொன்றும் நான்குஅடிப் பாடல்களாகும். மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவான தமிழில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் பெரும்பாலும் பெண்ணை விளித்துப் பாடும் வகையில் அமைந்துள்ளன. சமண சமயத்துக்குரிய சிறந்த மனிதநேயப்பண்புகளான கொலை, களவு, பொய், காமம்,கள் என்பனவற்றை நீக்க வேண்டியதன் அவசியத்தை இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இல்லறம், துறவறம், விருந்தோம்பல், ஒழுக்கமுடைமை போன்ற உயர்ந்த மனித நேயப்பண்புகளையும் கூறி நிற்கின்றது.

மனிதன் - மனிதநேயம்

மனிதர்களுக்கு மிகவும் வளர்ச்சியடைந்த மூளை உண்டு. இது பண்பியல் பகுப்பாய்வு (abstract reasoning), மொழி உண்முக ஆய்வு பிரச்சனைகளைத் தீர்த்தல், உணர்வுகள் போன்றவற்றைக் கையாளக்கூடிய வல்லமை கொண்டது. இத்தகைய வல்லமை கொண்ட மூளையும், நிமிர்ந்த உடலும் மனித வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. **மனம் படைத்தவனே மனிதனாகின்றான்**. இதன் மூலம் நல்ல உடல் வளர்ச்சியுடன் நல்ல மனம் படைத்தவனே **மனிதன்** என்பது புலனாகின்றது.

மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டிக்காட்டும் சொல்லே **மனித நேயம்** எனப்படுகின்றது. நேயம் என்ற சொல் நேசம் என்றும் வழங்கப்படுகின்றது. நேசம் என்ற சொல்லுக்கு அன்பு என்றும் பொருள் உண்டு.

மனிதத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட உலகநோக்கு மனிதநேயம் ஆகும். மனிதனின் பகுத்தறிவை, அறத்தை, ஆற்றலை மனிதநேயம் முன்னிறுத்துகின்றது. அனைத்து மனிதர்களையும் அது மதிப்போடு நோக்குகின்றது. **தமிழில்** மனித நேயத்தை **மனிதாபிமானம், மனிதத்துவம்** என்றும் குறிப்பிடுவர்.

மனித நேயம் என்பதற்கு "மனிதர்களுக்குள் ஏற்படும் மன இணக்கம்" எனத் **தமிழ்ப் பேரகராதி** பொருள் கூறுகின்றது. இதனை ஆங்கிலத்தில் Humanism என்கின்றார்கள்.மனித நேயம் என்பது **"பிறர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர் கொண்ட போது உதவுதலும் பிறருக்காக வாழ்தலுமாகும். நாடு, இனம், மொழி வேறுபாடு கருதாது அனைவருக்கும் பொதுவாக வாழும் வாழ்வே மனிதநேய வாழ்வாகும்."[4]

"ஒருவரின் மனம் நெகிழும்படியாக மற்றொருவர் அவர்மேல் வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வு" என **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி** இதனைக் குறிப்பிடுகின்றது.

இரா.சக்குபாய் "உலகம் போரின்றி வாழவும், உலக மக்களிடையே அன்பு தழைக்கவும், ஏற்றத் தாழ்வுகள் இல்லாது ஒழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனித நேயம்" என விளக்கம் தருகிறார்.

மனிதத் தன்மை வளர்கின்றதென்றால் எம்மிடம் அன்பு, அருள், ஈகை போன்ற அடிப்படையான பிற பண்புகள் (Milk of human Kindness) உருவாக வேண்டும்.

ஏலாதியும் மனிதநேயப்பண்புகளும்

மிகச் சிறந்த மனிதநேயப்பண்புகளை ஏலாதி கூறுகின்றது. கொலை புரியாமை எனும் மனிதநேயப்பண்பை பல இடங்களில் ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார்

கொலைபுரியான், கொல்லான், *புலால் மயங்கான் கூர்த்த*
அலைபுலியான் வஞ்சியான் யாதும் நிலை திரியான்
மண்ணவர்க்கும் அன்றி - மது மலி பூங்கோதாய்
விண்ணவர்க்கும் மேலாய் விடும்[5]

தேன் சிந்தும், பூவையணிந்த கூந்தலையுடையவளே, கொலைத்தொழில் விரும்பாதவனும், பிற உயிர்களைக் கொல்லாதவனும், புலால் உண்ணாதவனும், பிறர் வருந்தும் தொழிலை செய்யாதவனும், பொய் பேசாதவனும்,எந்த நிலையிலும் தன் நிலையிலிருந்து விலகாதவனுமான ஒருவன், பூமியில் மட்டுமல்லாமல் தேவலோகத்திலும் போற்றப்படுவான்.இதனையே திருக்குறளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என மொழிகின்றது.

அடுத்து மனிதனின் மனிதநேயத்தை மறைக்கும் வன்போக்கினையும் மேல்வரும் செய்யுளில் கூறுகின்றார் நூல் ஆசிரியர்.

கொலைக்களம்** வார்குத்துச் **சூதாடும் எல்லை
***அலைக்களம் போர்யானை ஆக்கும்** - நிலைக்களம்*
முச்சாரிகை யொதுங்கும் ஓரிடத்தும் இன்னவை
*நச்சாமை **நோக்காமை நன்று***[6]

கொலைபயிலும் இடம், சூதாடும் இடம், பிறரை வருத்தும் சிறைச்சாலை, போர் செய்யவல்ல யானைகளைப் பழக்குகின்ற இடம் என்பவை சென்று பார்க்கக் கூடாத இடங்களென்கிறார்.

இன்று உலகில் பல நாடுகள் போர் புரிவதற்கென்றே ஆயுதங்களுடன் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அயின்ஸ்டீன் அணுவைப் பிளக்கலாம் எனக் கண்டுபிடித்ததனால் ஹீரோஷீமா, நாகசாகி அழிந்தன. நவீனம், அறிவியல் என்று மனித அறிவு வளர்ச்சி அடைந்திருந்தும் முழுமையாக மனிதம் வளரவில்லை. மாறாக மோசமாகிக் கொண்டே போகின்றது. இன்று மனிதநேயம் இல்லாத அறிவியல் வளர்ந்திருக்கின்றது. மனிதனை அழிக்கின்றது. மகிழ்ச்சியை அழிக்கின்றது. வீழ்த்துகின்றது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டுதான் ஏலாதி ஆசிரியரும் உலகமக்களுக்காக அன்றே இப்பேர்ப்பட்ட மனிதனை அழிக்கும் இடங்களை பார்க்க வேண்டாம் என்ற கருத்தை வழங்கினார் எனலாம். வினா எழுகிறது.

மகாத்மாகாந்தி கூறிய ஏழு பாவங்களுள் மூன்று பாவங்கள் ஏலாதி கூறும் மனிதநேயத்துடன் தொடர்புபட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மனிதநேயமில்லாத அறிவியல்
2. மனிதத்தன்மையில்லா வியாபாரம்
3. ஒழுக்கமில்லாத அறிவு.

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தவம் எளிது, தானம் அரிது, தக்கார்க்கேல்
அவம் அரி(து) ஆதல் எளிதால் - *அவமிலா*
இன்பம் பிறழின், இயை எளிது, மற்றதண்
துன்பம் துடைத்தல் அரிது [7]

யாவருக்கும் தவம் செய்தல் எளிது, கைப்பொருள் வழங்கல் அரிது, பெரியோரின் குற்றத்திற்கு ஆளாதல் எளிது, **நன்நெறியில் ஒழுகுதல் அரிது** என்று கூறும் கணிமேதாவியார் நன்நெறியில் ஒழுகுவதற்கு தகுந்த உபாயத்தையும் கூறிநிற்கின்றார்.

பிறரின் துன்பத்தை நீக்குதல், பிறரை இகழாதிருத்தல், கீழ்மக்களோடு சேராதிருத்தல், அனைவரதும் பசித்துன்பத்தை நீக்குதல், உலகம் பழித்தற்குரிய ஒழுக்கத்தினின்று நீங்குதல், எதிர்ப்பட்டவர் யாராயினும் அவரிடத்து இன்சொல் கூறுதல் ஆகிய இப்பண்புகளை ஒருவன் மேற்கொள்வானானால் அவனுக்குக் கல்வியறிவில் சிறந்த சான்றோர்களின் அறநூல்களும் வேண்டாதவை[8] எனக் கூறுகின்றார். ஆசிரியரின் இக்கருத்து உலகமக்களுக்குச் சொல்லப்பட்ட மனிதநேயப் பண்புகளாகும்.

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம் - போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க் கீந்தார்
வைத்து வழங்கி வாழ்வார் [9]

தன் தாயை இழந்த பிள்ளை, தலைவனை இழந்த பெண்டாட்டி, பேச்சு இழந்த ஊமை, வணிகத்தால் செல்வம் இழந்தவர்கள், கண் இழந்த குருடர்களுக்கு வேண்டுவனவற்றை வழங்கியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளினைச் சேர்த்துவைத்தும் பிறர்க்கும் கொடுத்தும் தாம் அனுபவித்தும் இனிதே வாழ்பவர்கள் என்று காட்டுகின்றார். ஒருவன் சேர்த்து வைத்த அல்லது சம்பாதித்த பொருள்களையோ, செல்வத்தையோ மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவது மனிதநேய பண்பாகும் என்பதை ஏலாதி சுட்டிக்காட்டுகின்றது.

இடை வனப்பும், தோள் வனப்பும், ஈடில் வனப்பும்
நடை வனப்பும், நாணில் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ(டு)
எழுத்தின் வனப்பே வனப்பு [10]

இடையின் அழகோ, தோளின் அழகோ, அல்லது ஈடு இல்லாத வேறு அழகுகளோ, நடை அழகோ, நாணத்தினால் ஏற்படும் அழகோ, கழுத்தின் அழகோ, உண்மையான அழகாகா. எண்ணும் எழுத்தும் சேர்ந்த **கல்வியழகே அழகு** என்ற உயர் செய்தியை ஆசிரியர் விளக்கி கூறியிருக்கின்றார்.

களியான் கள்ளுண்ணாண் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற்(கு) உலையான் - *எளியாரை*
எள்ளான் ஈத்துண்பானேல் ஏதமில் மண்ணாண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து [11]

செருக்கு கொள்ளாமலும், கள்ளுண்ணாமலும், பிறரைச்சார்ந்து இராமலும், விருந்தினருக்குப் பொருள்களை மறைக்காமலும், வறியவரை இகழாமலும், பிறருக்கு அளித்து உண்பவன் குற்றமற்ற வளமிருக்க நாட்டைப் பெற்று ஆட்சி செய்வான்; குடும்பம் பெருகி வாழ்வான் என்று கூறுகிறார்,

இளமை கழியும் பிணிமூப்(பு) இயையும்
வளமை வலியிவை வாடும் - உளநாளால்
பாடே புரியாது *பால்போலும் சொல்லினாய்!*
வீடே புரிதல் விதி [12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைப்பருவம் நிலையற்றது, பிணியும், மூப்பும் வந்து சேரும், செல்வம், உடம்பின் வலிமை குன்றும், எனவே கழிந்தது போக எஞ்சியிருக்கும் நாட்களில் துன்பம் தரும் செயல்களைச் செய்து கொண்டிருக்க வேண்டாம் என்கிறது ஏலாதி.

ஏலாதி ஆசிரியர் பிறர் மனைவியை விரும்பாமை சான்றோர்க்குரிய உயரிய பண்பாகக் கூறுகின்றார்.

................பிறர்மனை மேல்
செல்லான் சிறியார் இனம்சேரான்.....[13]

என்கின்றார்.

மனிதநேயத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியவனை எல்லா உயிர்களுக்கும் தாயாக ஏலாதி சிறப்பிக்கின்றது. அதாவது மனவடக்கமுடைமை, நற்பண்புகள் உடைமை, பிறர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுத்தல், பொறுமையோடிருத்தல், பொய் கூறாதிருத்தல் முதலிய நற்பண்புகளுடைவனை உலகின் ஒப்பற்ற அன்பினையுடைய தாய்க்கு ஒப்பிட்டுக் கூறுகின்றது. இதனை

நிறையுடைமை நீர்மையுடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண் மறையுடைமை
வேயன்ன தோளாய் இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன என்னத் தகும்.[14]

எனும் செய்யுளினூடாகக் கண்டுதெளியலாம்.

மானிடப்பண்புகளுள் பிறர்பசி தீர்க்கும் விருந்தோம்பல் உன்னதமானதாகும். ஏலாதியின் ஏழாவது செய்யுள் இவ்வுலகில் விருந்தோம்பி, விருந்திற்கு வருகின்றவரிடம் இன்சொல் பேசி வரவேற்பவர்களைத் தேவர்கள் விருந்தினராக ஏற்றுக்கொள்வர் என்று கூறி நெறிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சொல் அளாவல் இடம் இனிதூண் யாவர்க்கும்...
...விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து[15]

ஒருவன் மானிடப்பண்புகளுடன் வாழ நெறிப்படுத்துவதில் நண்பர்களின் வகிபங்கு முக்கியமானது. நண்பன் எத்தகையவனாக அமைவானாகில் நல்லொழுக்கங்கள் கூடிவரும் என கணிமேதையார் கூறுகின்றார். அவை பிறரைக் கொல்வதற்கு உடன்படாதிருப்பதோடு தானும் ஒருவரைக் கொல்லாமலிருத்தல், நோயால் வருந்துபவருக்கு அதனைப்போக்க உதவுதல், அறியாமையில் மயங்காமை, சான்றோர் கூறிய நற்பண்புகள் தனக்குப் பொருந்தும்படி வாழ்தல் முதலிய பண்புகளை உடைய நண்பனைப் பெற்றோனுக்கு ஒழுக்கங்கள் எல்லாம் பொருந்தி மேம்படும் என்றுரைக்கின்றார்.

உடன்படான் கொல்லான் உடன்றார் நோய் தீர்ந்து
மடம் படான் மாண்டார் நூல் மாண்ட -இடம் பட
நோக்கும்வாய் நோக்கி...[16]

அறியாமையில் மயங்கி குடி, போதைவஸ்து போன்ற சமூகம் விரும்பாத செயல்களை புரியும் நண்பர்களை விடுத்து நல்ல மனிதநேய பண்புடையவர்களை நண்பராக்கிக்கொள்ளல் நம் வாழ்வில் மிக முக்கியமான ஒன்று. அதேவேளை அறியாமையினால் சமூகம் விரும்பாத மேற்கூறிய செயல்களை செய்துகொண்டிருக்கும் சக மனிதர்களையும், நல்லவர் ஆக்கும் பொறுப்பு ஒரு நல்ல நண்பனுக்கே உரிய கடமையாகும்.

ஒருவன் தன் இல்லறக்கடமையைச் செவ்வனே செய்யுமிடத்து அவனது இல்வாழ்வு துறவறத்திலும் சிறந்ததாகும் என்று கூறி அத்தகைய சிறப்பான வாழ்வினை வாழ இரப்போர்க்குக் கொடுத்தல், துணையற்றவர்களையும், தனக்குத் துன்பம் செய்பவர்களையும், உறவினர்களையும் பாதுகாத்தல் முதலியன துறவறத்தைவிட மேலானதாகும் என்று கூறி இதனூடாக மனிதநேயப்பண்புகளைப் பேணவேண்டும் என்று இயம்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்தார்கண் துன்னித்துறவார்க்(கு) இடுதல்
இரந்தார்க்கு இனிய இசைத்தல்-இந்தார்
மறுதலை சுற்றம் மதித்தோம்புவானேல்
இறுதலின் வாழ்வே இனிது.[17]

இன்று உலகில் பல செல்வந்தர்கள் பணமிருந்தும், தூயஅன்பும் நற்சுற்றமுமின்றி மனஅழுத்தங்களோடும் அல்லல்களோடும் அவதியுறுகின்றனர். இதற்கு மானிடப்பண்பின் வீழ்ச்சியே காரணமாகும். மேல் வரும் செய்யுள் கடன்பட்டவர்களுக்கும், காப்பவர் எவரும் இல்லாதவர்களுக்கும், தம்முடைய கை, கால்களை இழந்து முடம் பட்டவர்க்கும் செல்வம் இல்லாதார்க்கும், பெற்றார், மூத்தவர் இல்லாருக்கும் உதவும் மனிதநேயமிக்கவனுக்கு உலகைத்தில் சுற்றமே சுற்றி நிற்கும் என்கிறது.

கடன்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்காண்..........
படையராய் வாழ்வார் பயின்று[18]

எனக்கூறி மனிதநேயத்தின்பால் எம்மை ஆற்றுப்படுத்துகின்றது.

கருஞ்சிரங்கு வெண்தொழு நோய் கல்வளி காயும்பெருஞ் சிரங்கு.........
போற்றியூண் உண்பார் புரந்து[19]

எனும் செய்யுளிலே கொடிய சிரங்கு நோயும், வெள்ளைத் தொழுநோயும், கல்லடைப்பு நோயும், வாதநோயும், வருத்துகின்ற பெருங்சிரங்கு, பெரிய வயிற்றுத் தீ நோயும் உடையவர்களுக்கு அவர்களது துன்பங்களைத்தணித்து, உணவளித்து நோய் தீர்ப்போர் மன்னர்களால் போற்றப்பட்டு உலகாண்டு வாழ்வார்கள் என்று சிறப்பிக்கின்றது.

மாண்டவர் மாண்ட அறிவினான் மக்களைப்
பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால்-பூண்ட
ஔரதனே கேந்திரசன் கானீனன் கூடன்
கிரிதன்பென ஏற்பவன் பேர்''[20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் செய்யுள் மூலம் சான்றோர்கள் தம் சிறந்த அறிவினால் தம்மக்களைக் காத்தல் மேற்கொண்டு அவர்களை விரும்பி வளர்க்குங்கால் ஔரதன், கேந்திரசன், கானீனன், கூடோத்துபன்னன், கிரிதன், பௌநற்பவன் என்பன அம்மக்கள் பெறும் பெயர்களாகும்.

ஔரதன்-கணவனுக்குப் பிறந்தவன்
கேந்திரசன்-கணவனிருக்கையில் பிறனுக்குப் பிறந்தவன்
கானீனன்-திருமணமாகாதவட்குப் பிறந்தவன்.
கூடன்- கணவனுக்குத் தெரியாமல் பிறனுக்குப் பிறந்தவன்.
கிரீதன் - விலைக்கு வாங்கப்பட்டவன்
பௌநற்பவர் - கணவன் இறந்த பின்னர் மறுமணம் செய்து கொண்டு பெற்றமகன்.

இன்று இவ்வாறாக பிறந்த குழந்தைகள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இவ்வாறான பிள்ளைகளையும் தம்மக்களாகக் கொண்டு விரும்பி வளர்க்க வேண்டும் என்ற ஆசிரியரின் பரந்தநோக்கு இத்தால் தெரியவருகின்றது.

ஏலாதி இலக்கிய விருது வழங்கும் விழாக்கள்

தமிழ் நாட்டில் ஏலாதி இலக்கிய விருது வழங்கும் விழாக்கள் வருடாவருடம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விலக்கிய விருதிற்குச் சிறந்த படைப்புகள் தெரிவுசெய்யப்பட்டு பணமுடிப்பு, ஞாபகச் சின்னம் பாராட்டுச் சான்றிதழ்கள் கொடுக்கப்படுகின்றன. அண்மையில் ஈழத்தைச் சேர்ந்த இளம்படைப்பாளி இளங்கோ என்பவரின் 'நாடற்றவனின் குறிப்புகள்' என்ற கவிதை நூலுக்கு ஏலாதி இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் ஈழத்தின் போர் எழுந்தபோது உள்நாட்டிலே அகதியாய் அலைந்து கனடாவுக்குப் புலம் பெயர்ந்தவரின், போர்க்கால அவலங்களும், புலம் பெயர் வாழ்வின் அலைக்கழிதலும், மனிதநேயம் இல்லாத அழிவுகளும் இக் கவிதை நூலில் சாட்சியாய்ப் பதிவாகியுள்ளன. .

நிறைவுரையாக...

உலக நாடுகளின் சிந்தனைக் களஞ்சியங்களை ஆராய்ந்து கிழக்கின் தத்துவம் எனும் நூலில் (The Philosophy of the East) தமிழ் நாட்டிலே பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையைப் போல் சிந்தனை உலகில் எங்கும் தோன்றவில்லை என்கிறார் நோபல் பரிசு பெற்றவரும் மனித நேயத்தைக் கடைப்பிடித்தவருமான ஆல்பட் ஸ்வீட்சர்.

வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அறிஞர் எழுதி வெளியிட்ட 'ஓர் உலகம்' எனும் நூலில் அவர் நம் சிந்தனை உலகளாவிய முறையில் பரந்திருத்தல் வேண்டும் என்கின்றார். பெருகும் குற்றச் செயல்கள் சமூகநல அக்கறையின்மை, தெய்வ நம்பிக்கையின்மை, என்பன காரணமாக சமூகச் சீரழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன.

மனிதநேயம் என்பது ஓர் உயரிய பண்பாடு. இது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரிகப்பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது. இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும். ஏற்றத்தாழ்வுகள் நீங்கும். மனித மதிப்புக்கள் (Human Values) பெருகும். இவ்வாறான பண்புகளை ஏலாதி விளக்கி நிற்கிறது, தமிழர் பண்பாட்டியலிலும் இந்நூல் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளது என்பது தெளிவு.

அடிக்குறிப்புக்கள்

1. புறம்.192
2. வேலுப்பிள்ளை.ஆ.,1985, தமிழர் சமய வரலாறு, பக்.36
3. கணேசலிங்கன்.செ, 2001, நவீனத்துவமும் தமிழகமும், பக்.50
4. **http://www.thinnai.com**
5. ஏலாதி, செய்.02
6. மேலது. செய்.12
7. மேலது. செய்.03
8. மேலது. செய்.04
9. மேலது. செய்.78
10. மேலது. செய்.74
11. மேலது. செய்.46
12. மேலது. செய்.21
13. மேலது. செய்.19
14. மேலது. செய்.06
15. மேலது. செய்.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மேலது. செய்.08
17. மேலது. செய்.16
18. மேலது. செய்.53
19. மேலது. செய்.57
20. மேலது. செய்.30

உசாத்துணை

1. நாரயணவேலுப்பிள்ளை.எம், 2000, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், நர்மதா பதிப்பகம்.
2. சண்முகம்பிள்ளை,மு , 2001, பதினெண்கீழ்கணக்கு, முல்லை நிலையம், தி.நகர், சென்னை.
3. சண்முகம்.ஆர், 2002, எத்தனம் தமிழியல் ஆய்வுகள், அன்னம் நிர்மலாநகர், தஞ்சாவூர்.
4. வேலுப்பிள்ளை.ஆ, 1985, தமிழர்சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை.
5. கணேசலிங்கன்.செ., 2001, நவீனத்துவமும் தமிழகமும் , குமரன் பதிப்பகம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘நன்றே வாழ்க அன்றேல் மாழ்க’

அறத்தை வலியுறுத்த
வள்ளுவர்கையாளும் அதீத உத்தி

மா. ரூபவதனன்

திருக்குறள் பற்றி பல்வேறு கோட்பாடுகளின் பின்னணியில் பல்வேறு ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்திப் பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. எத்தகைய ஆய்வு முறையியலைப் பிரயோகித்தும் திருக்குறளை ஆய்வு செய்ய முடியும். அதன் உள்ளடக்கம் அத்தகையது. அந்த வகையில் சமூகவியல் அடிப்படையில் திருக்குறளில் சமுதாய நெறி குறித்தும் ஆய்வு செய்யமுடியும்.

சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களுள் ஒன்று திருக்குறள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அக்காலத்தை அறநூற்காலம், அறநெறிக்காலம் என்று கூறுவர். அதற்குக் காரணம் அறநூல்கள் அதிகம் எழுந்தமையும் அறக்கருத்துக்கள் சமூகத்தில் முதன்மை பெற்றிருந்தமையும் ஆகும். அத்தகைய நூல்களுள் திருக்குறள் முதன்மை இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றது. அது உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, தமிழ்மறை, பொதுமறை என்ற மறு பெயர்களால் அறியப்பட்டது.

திருக்குறள் ஓர் அறநூல் என்ற வகையில் அது மனித சமுதாயத்துக்கு உரிய நெறிகளை – அறக் கருத்துக்களைத் – தாராளமாய்த் தந்து நிற்கின்றது என்பது வெளிப்படை. அதிகார அடுக்கமைப்பில் ஆள்வோர், ஆளப்படுவோர் என அனைத்து நிலையினரையும் திருக்குறள் நெறிப்படுத்த முனைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் ஏதாவது பகுதிக்கு குறள் சிலவோ, பலவோ நெறிகளைக் கூறியவண்ணமே உள்ளது. அந்நெறிகள் மக்களுக்கு அவர்களின் சூழமைவுகளுக்கு ஏற்பப் பயன்படுத்தக் கூடியனவாக, கடைப்பிடிக்கக் கூடியனவாக, மகிழ்வடையக் கூடியனவாக எனப் பல்வகைப்பட்டனவாக அமைந்து காணப்படுகின்றன.

திருவள்ளுவர் கூறிய சமுதாய நெறிகளுக்குள் மக்களுக்கு மிகக் கடினமானதாக – அழுத்திக் கூறப்பட்டதாக – அறத்தைப் பேணுவதற்காக உயிரையும் விடலாம் என வலியுறுத்தப்படுகின்ற முறைமை குறித்து சமூகவியல், மானுடவியல் மற்றும் மொழியியல் அடிப்படையில் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது.

அறம் - சமுதாய நெறி

தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் 'அறம்' என்னும் பதம் தாங்கி நிற்கும் 'பொருண்மை' ஆழமானது, விசாலமானது. நல்லது, சரியானது, வேண்டுபவை, உரியவை, உரிமை, நியதி என அனைத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது. தனி நபர் தொடக்கம் நாடாளும் குழுமம் வரைக்கும் அவரவர்களுக்குரிய அனைத்து வாழ்வியல் அம்சங்களிலும் சரியானதைச் செய்யும் விடயங்களை அறம் உள்ளடக்கியுள்ளது.

சமூகவியல் அடிப்படையில் பொதுவாக ஒரு சமூகப் பண்பாடு என்பதை நோக்குகின்ற போது, பண்பாட்டுக்குள் பொருள்சார் பண்பாடுகள் (Material Culture), பொருள்சாராப் பண்பாட்டுகள் (Non-Material Culture) என்ற இரு வகைபாடுகள் உள்ளன. பொருள்சாராப் பண்பாட்டுக்குள் (1) அறிதல்சார் கூறுகள் (Cognitive Component) – அவை மக்கள், குடும்பம், வாழ்க்கை, வாழ்வியல் அம்சங்கள் பற்றிய அறிதல் தன்மை உள்ளவை என்பனவும், (2) நெறியியல் கூறுகள் (Normative Component) என்பனவும், உள்ளடங்கியுள்ளன. நெறியியல் கூறுகளில் பின்வரும் அம்சங்களை விடயங்களைச் சமூகவியலாளர்கள் உள்ளடக்கி நோக்கியுள்ளனர்.

விழுமியங்கள் – (Values), நெறிமுறைகள் அல்லது நியமங்கள் – (Norms), விதிகள் – (Laws), குடிவழக்குகள் – (Falkways), வழக்குகள் – (Customs), பழக்கங்கள் – (Habits)[1]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வகைப்பாடுகள் அனைத்திற்கும் நாம் திருக்குறளில் எடுத்துக்காட்டுகளைப் பார்க்க முடியும். அந்த வகையில் இப் பண்பாட்டுக் கூறுகளைப் புலப்படுத்தி நிற்கும் சில திருக்குறள் அதிகாரங்கள் எடுத்துக்காட்டாகப் பின்வருமாறு அமைகின்றன.

பொருள் சார் பண்பாடுகள் – அரண்

பொருள் சாரா பண்பாடுகள்

அறிதல்சார் கூறுகள் – மக்கட்பேறு, வாழ்க்கைத் துணை.....

நெறியியல் கூறுகள் – பிறனில் விழையாமை, இனியவை கூறல்

விழுமியங்கள், நெறிமுறைகள் அல்லது நியமங்கள் (Norms), விதிகள், குடிவழக்குகள், வழக்குகள், பழக்கங்கள் எனப் பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு விடயமே 'சமுதாய நெறி' என்று மேலோட்டமாகப் பார்க்கின்றபோது தென்படுமாயினும் அறிவியல் நிலை நின்று மானுடவியல் மற்றும் சமூகவியல் அடிப்படையில் கூர்ந்து நோக்குகின்ற போது Norms என்ற விடயங்களையே அது குறிப்பிட்டு நிற்கின்றது. இதனை அறிவியல் பூர்வமாக வகுத்து நோக்கிய துருக்கி நாட்டைச் சேர்ந்த நவீன சமூக உளவியல் துறையின் மூலகர்த்தா எனப் போற்றப்படும் முசாபர் ஷெரிப் (Muzafer Sherief 1906-1988) "சமுதாய நெறிகள் என்பது சமூக அங்கத்தினரின் பொதுவான திட்ட நிலைகள் என்றும் அதன் மூலம் அவர்கள் நிர்மாணிக்கப்பட்ட குழுக்களுடன் அவர்களுக்கு ஏற்றவாறு இயங்கும் முறை" என்றும் வரையறை செய்தார்.[2]

இவ் விடயங்களைத் தொகுத்து நோக்குகின்றபோது மக்களின் நடத்தை முறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிகள் (Norms) என நாம் வரையறுத்துக்கொள்ள முடியும். இவை விழுமியங்கள் போல் கருத்தியல்களோடு (Ideology) நிற்பவை அல்ல. இவற்றைச் செய்ய வேண்டும் – இவற்றைச் செய்யக் கூடாது, சரி – தவறு, நல்லது – கெட்டது என்பவற்றை நேரடியாகக் கூறுபவை; நடைமுறையில் பின்பற்றக்கூடியவாறு இருப்பவை. அந்த வகையில் இவற்றுக்குச் சில பொதுப்படையான பண்புகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இவை சமூகத்திற்கு சமூகம் மாறுபடலாம்.

2. காலங்காலமாகச் சமூகத்தால் உறுதியாகப் பின்பற்றப்படுகின்றன.

3. சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகள் கொண்டவை.

4. ஒரு தராதரத்தை பேணுபவை.

பொருள் சாராப் பண்பாடான நெறிகள் (Norms) சமூக வளர்ச்சி, நிலைபேறு என்பவற்றைக் கருத்திற் கொண்டு பெரும்பாலும் எந்தவொரு குறைவோ, வேறுபாடுகளோ இல்லாமல் பரம்பரையாகக் கடத்தப்படுகின்றன. இவை எளிதில் அழிந்துவிடக்கூடியவையுமல்ல. இதன் காரணமாகத்தான் இவற்றை தாங்கிவந்த திருக்குறள் காலகாலமாகப் பேணப்படுகிறது; இன்றும் போற்றப்படுகின்றது; உலகிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது; தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகக் காட்டப்படுகின்றது; பொது முறையாக எடுத்துக்கூறப்படுகின்றது.

கொல்லாமை: காலமும் கருத்துத்துணிபும்

திருவள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்துச் சமூகம், கருத்தியல், அரசியல் முதலிய தாக்கங்களினால் உருவான ஒரு புலமையாளர். அவர் காலத்திலிருந்த சமய தத்துவ கருத்தியல் ஆதிக்கத்தின் தளத்தில் நின்றுகொண்டு சமூக நன்னெறிகளுக்கு விரோதமான பல விடயங்களுக்காக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். 'கொலையை' எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார் வள்ளுவர். 'கொல்லாமை' என்ற அதிகாரத்தையே அமைத்து 10 குறள்கள் பாடியுள்ளார். உயிர்களைக் கொல்லக்கூடாது, 'கொல்லாமையே அறமாகிய செயல்' என்று கூறியுள்ளார். உன் உயிர் உடம்பிலிருந்து நீங்கும் வேளையிலும் பிற உயிரைக் கொல்லாதே என்பதை,

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை (குறள் 327)

எனக் கூறியுள்ளார். மனிதனை மனிதன் கொலைசெய்வது மட்டுமன்றி மனிதன் பிற உயிர்களைக்கூட கொலைசெய்வதை நிறுத்த வேண்டும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கும் வள்ளுவர் கொலைசெய்ததிலில் ஈடுபடாதவரை உலகம் தொழும் என்று அதன் உன்னதத் தன்மையைக் காட்டியுள்ளார்.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி (குறள்324)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (குறள் 260)

ஆட்சி அதிகார ஆசைகள் மலிந்திருந்த அந்தக் காலங்களில் இனக் குழுமங்களிடையே போட்டிகள், போர்கள் பல்கிப் பெருகியிருந்த காலங்களில் இனம், சமயம், தேசம், பிரதேசம் எனப் பல்வேறு அடையாளங்களாலும் மோதிக்கொண்டிருந்த காலப்பகுதியில் கொலையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் துணிபு சமூக அக்கறைகொண்ட, உயிர்களை நேசிக்கும் ஓர் இலக்கியப் படைப்பாளிக்கு இருக்குமாயினும் அத்துணிபு புறக்காரணிகளாலேயே படைப்பாளியிடம் தாக்கம் செலுத்த வாய்ப்புகள் அதிகம். அப் புறக்காரணி வள்ளுவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஒரு தத்துவமாக இருக்கவேண்டும்.

வள்ளுவர் வாழ்ந்த காலப்பகுதியில் ஓரளவு பகுத்தறிவுத் தன்மை கொண்ட தத்துவங்களாக மக்கள் மத்தியில் தாக்கஞ் செலுத்திக்கொண்டிருந்தவை பௌத்தம், சமணம் ஆகிய சமய தத்துவங்களேயாகும்.

சமண தத்துவம், அது கூறும் சமூக நெறிகள் கடுமையானவை, சமணம் அறிவுடன் ஒழுக்கத்தையும் வற்புறுத்தும் ஒரு சமயம். சமணம் கூறும் 'ஐந்து நோன்பு' என்ற கோட்பாட்டில் முதலிடத்தில் இருப்பது 'பிற உயிருக்கு இன்னா செய்யாமை' என்பதாகும் (ஏனையவை: பொய்யாமை, கள்ளாமை, துறவு, உலகைத் துறத்தல்)[3].

பௌத்தம் ஊன் உண்பதற்கு அனுமதி கொடுத்துள்ளது. ஆனால் சமணத்தில் அது முற்றாகவே தடைசெய்யப்பட்டது. வைதிக சமயங்களில் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருக பலி, உயிர்க்கொலை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே வள்ளுவர் சமணத் தளத்தில் இருந்தே அக்காலத்தில் இதைப் படைத்திருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகின்றது.

மானங்காக்க மடிதல்- ஒரு நெறி

திருவள்ளுவர் கூறிய சமுதாய நெறிகளுள் 'நன்றே வாழ்க, அவ்வாறு வாழ முடியாவிடின் மடிக' என்ற நெறியும் ஒன்று. இப்படித்தான் வாழ வேண்டும், இப்படியாக வாழக் கூடாது. நெறிதவறினால் இவ்வாறான இழுக்குகள் வரும் என்றெல்லாம் கூறிப் பார்த்த வள்ளுவர், அவற்றின் உச்சக்கட்டமாக அறத்தைப் பேணமுடியா நிலையில் 'மடிதல்' நன்று என்று கூறிவிடுகிறார்.

மேற்கூறியவாறு, கொல்லாமை எனும் எதிர்ப்பு குரல் கொடுத்த வள்ளுவர் நற்செயலின் பொருட்டு, மானத்தை காத்தற் பொருட்டு உயிர்விடுதல் நல்லது என்ற 'நெறியை' பல்வேறு இடங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் (குறள், 420)

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலைக்கு பொறை (குறள், 572)

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று (குறள், 967)

மருந்தோ மற்று ஊன் ஒம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து (குறள், 968)

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின் (குறள், 969)

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு (குறள், 970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்பொருட்டால்
நாண்துறவர் நாண் ஆள்பவர் *(குறள், 1017)*

மேற்கூறிய குறள்களில் முதல் இரண்டில் செவியுணர்வு, கண்ணோட்டம் இல்லாதோர் இறப்பது நல்லது என்பதும் ஏனையவற்றில் மானத்துக்காக, நாணத்துக்காக 'உயர் விடுவது' நல்லது என்றும் கூறப்பட்டுள்ளன. இவை தனிநபர் ஒருவரை நோக்கிக் கூறியவையாகவே காணப்படுகின்றன. மானங்காக்கக் குடியோடு மடிதல் பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை. அவர் தன்னுடைய மானத்துக்காக (தன்மானத்துக்காக) மடிதல் பற்றியே குறிப்பிட்டுள்ளார். இவற்றைச் சமூகவியலாளர்கள் பண்பாட்டுச் செயற்பாட்டுக்குள் (Functions of Culture) தனிநபர் செயற்பாடு என வகுத்து நோக்குகிறார்கள்.

இக்குறட்பாக்கள் அனைத்தும் அறத்துப்பாலில் அன்றிப் பொருட்பாலின்அதுவும் குடியியலில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இவை யாருக்குக் கூறப்பட்டவை என்ற பிரச்சனை எமக்கு எழுகிறது.

பொதுவாக, பொருட்பால் அதிகார வர்க்கத்திற்கே கூறப்பட்டது. சமூகத்தில் உயர் நிலையில் இருப்பவர்களுக்கே கூறப்பட்டது, என்பது சில சமூகவியலாளர்களது கருத்து. பொருட்பால் அதிகாரங்கள் வைக்கப்பட்டுள்ள முறைமை இதற்கு வலுச்சேர்த்திருக்கிறது. 'உயர் குடி' யில் பிறந்தவர்கள் என்ற தொடர் இப் பகுதிகளில் பல தடவைகள் கையாளப்பட்டுள்ளமை பொருட்பால் அவர்களுக்கே உரியது என்பதை நிரூபிப்பதாக உள்ளதை நம்மால் அறிய முடிகிறது.

அவ்வாறாயின் பொருட்பாலில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் ஆளப்படுவோருக்கு, சமூக அடுக்கமைவில் விளிம்பு நிலையில் வாழ்வோருக்கு உரியதில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பே.

பூசல்கள், பிரச்சனைகள், செல்வம் (Wealth), (தன்) மானம் (Prestige), அதிகாரம் (ஆட்சி உரிமை–Powers), ஆகியவற்றின் அடிப்படையிலேதான் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன என்கிறார், சமூகவியலாளர் மக்ஸ் வெபர் (Max Weber).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெபர் 'மானம்' பற்றி மேலும் விளக்குகையில் "உயர்ந்த தன்மானத்தையும் கௌரவத்தையும் உடையவர்கள் உயர்ந்தவர்கள். குறைந்த மானத்தையும், கௌரவத்தையும் உடையவர்கள் தாழ்ந்தவர்கள். உயர்ந்த தன்மானத்தை உடையவர்களுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கை முறை உள்ளது" என்று குறிப்பிடுகின்றார்.[4]

மொழிக்கூறு என்ற நிலையில் தன்மானம், கௌரவம் என்பவற்றில் உயர்வு தாழ்வு இல்லாவிட்டாலும் அதாவது குறைந்த தன்மானம், கௌரவம் என்ற அளவீட்டு வழக்கு இல்லையாயினும், வெபர் கூறுவதுபோல் சமூக அடுக்கமைப்பில் அவர்களின் வாழ்க்கை முறையில் இவை வேறுபட்டனவாகவே காணப்படுகின்றன.

வரலாற்றுப் பின்புலம் சார்ந்த சமூகவியல் அணுகுமுறையில் திருக்குறளை அணுகுகின்றபோது இச் சமூக நெறிகள் 'உயர் குடியினருக்கே' கூறப்பட்டவையாகத் தோற்றமளிக்கின்றமையை அவதானிக்க முடிகிறது. ஆனால் கால ஓட்டத்தினால் ஏற்படும் சமூக மாற்றங்களுடன் திருக்குறளைப் பொருத்திப் பார்க்கும் போது அது காலத்துக்குக் காலம் மக்களால் 'போற்றப்பட்டே' உள்ளது. உயர்குடி தாழ்குடி என்ற பதங்களுக்கு அப்பால் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியவை என்று ஆகிவிடுகின்றன. அத்துடன் சமூக அடுக்கமைப்பில் விளிம்பு நிலை மக்களைக்கூடச் 'சான்றோராக' வாழ வைக்கும் நெறியை இன்று மட்டும் அன்றி என்றும் எடுத்துச் செல்லக்கூடியதாக திருக்குறள் உள்ளது.

இதற்கு அதன் பிரதித்தன்மை (Textuality) காரணம் என்றால் அது மிகையாகாது. வள்ளுவரை, அவர் சமூகத்தை, அவர் வாழ்ந்த காலத்தை எனப் பின்புலங்களை நீக்கிவிட்டுப் பார்க்கும் போதும் அவர் கூறும் நெறிகள் மக்களால் எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ள கூடிய ஒன்றாகவே உள்ளன. "There is nothing ouside the text" என்ற பின் நவீனத்துவ சிந்தனை கூட, திருக்குறளை அப்படியே ஏற்றுக் கொள்கிறது. பின் நவீனத்துவத்தின் சிந்தனைகளான அமைப்பியல், பின் அமைப்பியல் கருத்தாடல்களிற்கூடத் திருக்குறள் குலையாமல் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேதான் திருக்குறள் தனி இனப் பண்பாட்டைத் தாண்டி மனிதசமுதாயம் என்ற பொதுப் பண்பாட்டை – உலகை நோக்கிச் செல்லக் கூடியதாகவும் உள்ளது. தமிழ்ச் சமூகத்துக்கு அறத்தை கூறிய நிலையில் இருந்து உலகத்துக்கு அறம் – நெறியை கூறும் பிரதியாக மாற்றமடைந்து 'உலகப் பொதுமறை' என்ற சிறப்புப் பெயரையும் அது பெறலானது.

முடிவுரை

அறநூல் என்ற வகைப்பாட்டுக்குள் திருக்குறள் கூறும் அறக்கருத்துக்கள் பல சமுதாய நெறிகள் என்ற பொருள்சாராப் பண்பாட்டுக்குள் அடக்கக்கூடியவையாகக் காணப்படுகின்றன.

சமுதாய நெறிகளைக் கூறுவதில் புறக்காரணிகளின் தாக்கம் படைப்பாளியிடம் வெளிப்படும் எனும்போது மதங்களின் தாக்கமும் விதிவிலக்கானது அல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து கொல்லாமை எனும் நன்நெறியை அழுத்திக்கூறிய சமணம் வள்ளுவரில் செல்வாக்கு செலுத்தியதை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

கொல்லாமையை ஆதரித்தவர் தனிமனித தற்கொலையை ஏற்க வாய்ப்பில்லை. அது நன்நெறியை – மானத்தை மிகவும் உயர்த்திப் போற்றுவதற்குப் பதிலீடாகப் பாவிக்கப்பட்ட ஓர் உத்தியாகும். தன்னைத்தான் மாய்த்துக் கொள்ளல் பற்றிக் கூறுவது ஒரு வகைப் 'பயமுறுத்தல்' பாணியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மானம் உயிரிலும் மேலானது என்பது உயர்குடிக்கு மட்டுமல்ல எல்லா உயிர்களுக்கும் உரியது என்பதும் புலப்படுகிறது. அது உலகம் முழுமைக்கும் பொதுமையானது என்பது வள்ளுவம் ஊடாக வெளிவருகிறது.

ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது, நல்லொழுக்கத்தின் சிறப்பான மானங்காத்தலில் மானம் என்பது சமூக நெறிகள் அல்லாதவற்றை செய்யாமல் இருப்பதற்கான ஒன்றாகும். தீயவை, நன்றல்லாதவை, பிழையானவை என எவை சமூகத்தால் 'இனங்காணப்படுகின்றனவோ' அவற்றைச் செய்வது இறப்பதற்கு சமம் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

1 பக்தவத்சல பாரதி (2003) பண்பாட்டு மானிடவியல் சென்னை மெய்யப்பன் பதிப்பகம் ப. 158

2 மேற்கோள், சமூகவியல் கொள்கைகள் (2000) அண்ணாமலைப் பல்கலைக்கலைக்கழகம் ப. 44

3 மேலதிக வாசிப்புக்கு சோ. கிருஷ்ணராஜா (2005) ஹரியண்ணாவின் இந்திய மெய்யியல், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு

4 மேற்கோள், சமூகவியல் கொள்கைகள் (2000) அண்ணாமலைப் பல்கலைக்கலைகழகம் ப. 184, 185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள இலக்கியங்களில் தமிழ் நீதி இலக்கியங்களின் செல்வாக்கு

தம்மிக்க ஜயசிங்க

சிங்கள இலக்கியங்களின் வளர்ச்சியிற் பாளி மற்றும் சமஸ்கிருத இலக்கியங்களின் செல்வாக்கு மட்டுமன்றித் தமிழ் இலக்கியத்தின் செல்வாக்கும் காணப்படுகிறது. பழமையான சிங்கள சிலாசாசனங்களிலும் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றது.[1] குடீன், மிடி, பாட்ட, பதி, முதல், கணக்கர், மருமகனெ, உள்வாடு, முழு, முதல், மெகாப்பர் போன்ற சொற்கள் சிங்கள வடிவம் பெற்ற தமிழச் சொற்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.[2]

தமிழ் மொழியிற் பாண்டித்தியம் பெற்ற சிங்கள அறிஞர்கள் பலர் அனுராதபுர காலகட்டத்தில் (கி.மு. 437–கி.பி. 1058) கூட வாழ்ந்தார்கள் என்று கொள்ளலாம். அது மட்டுன்றித் தென்னிந்தியத் தமிழ் பௌத்த பிக்குமார்களும் இலங்கையை வந்தடைந்தனர். வோகாரதீஸ அரசனின் அரச சபையில் இருந்த கபிலர் என்ற அமைச்சரும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்.[3] சோழ நாட்டிற் பிறந்த புத்ததத்தர், தருமபாலர் போன்ற பிக்குமார்கள் அனுராதபுரத்திற்கு வந்து பாளி நூல்களுக்கு தெளிவுரைகள் எழுதினார்கள்.[4] அதைப்போல பௌத்த பள்ளிக்கூடங்களில் தமிழும் கற்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலன்னறுவைக் காலத்தில் (கி.பி. 1070–1234) அதிக அளவிற் சிங்கள மொழியிலும் இலக்கியத்திலும் கட்டடக்கலையிலும் திராவிடச் செல்வாக்கைக் காணலாம். ஒட்டக்கூத்தர் என்ற தமிழ்ப் புலவர் கி.பி 12.ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தார் என்று கூறப்படும் பரம்பரைக் கதையொன்று இருக்கிறது.[5] இப்படியாக பல தமிழ் அறிஞர்களும் புலவர்களும் இலங்கைக்கு வந்து சிங்களப் புலவர்களோடும் தொடர்புகளை ஏற்படுத்தியதால், தமிழ் இலக்கியத்தின் செல்வாக்கு சிங்கள இலக்கியத்திற்கு ஏற்பட்டது. பொலன்னறுவைக் காலத்திலே எழுதப்பட்ட சிங்கள நூல்களான ஜாதக அட்டுவா கெட்டபதய (ජාතක අටුවා ගැටපදය) வெஸத்துருதா சன்னய (වෙසතුරු දා සන්නය), புத்சரண (බුත්සරණ) போன்ற நூல்களிலும் தமிழ் வாக்கிய அமைப்புகள் காணப்படுகின்றன.

தம்பதெனிய காலகட்டத்தில் (கி.பி 1220–1293) தருமசேனர் என்ற பௌத்த தேரரால் எழுதப்பட்ட சத்தருமரத்னாவலி (සද්ධර්මරත්නාවලි) என்ற நூலில் அதிக அளவில் தமிழ்ச் செல்வாக்கைக் காணலாம். அதே காலகட்டத்தில் அநோமதஸ்ஸி தேரரால் எழுதப்பட்ட பழமையான சிங்கள இலக்கண நூலான சிதத் சங்கராவவும் (සිදත් සඟරාව) புத்தமித்திரரின் வீரசோழியத்தின் செல்வாக்குக்கு உட்பட்டதாகும். இந்தக் காலத்தில் தீபங்கரர், புத்த மித்திரர், மகா காசியப்பர் போன்ற பிக்குமார்கள் சோழ நாட்டிலிருந்து இலங்கையை வந்தடைந்து, பாளி மொழியையும் பௌத்த சமயத்தையும் கற்றுக் கொண்டார்கள்.

குருணாகல் இராசதானிக் காலத்தில் (கி.பி. 1293–1347) எழுதப்பட்ட சிங்கள நூல்களிலும் மிகுந்த தமிழ்ச் செல்வாக்கைக் காணலாம். சிங்கள ஜாதகக் கதைகள் (සිංහල ජාතක කථා), தலதா சிரித (දළදා සිරිත) போன்ற நூல்களிலே தமிழ்ச் சொற்களும் தமிழ் வாக்கிய அமைப்புகளும் காணப்படுகின்றன.

சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என்று கருதப்படும் கோட்டை காலத்தில் (கி.பி. 1412–1580) தூதுக்காவியங்கள் போன்ற கவிதை நூல்களிலே தமிழ் இலக்கியத்தின் செல்வாக்கை மிகுந்த அளவிற் காணலாம். தமிழ் மொழியும் இலக்கியமும் பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டன. சிங்களப் புலவர்களும் அறிஞர்களும் தமிழ் மொழி கற்ற பண்டிதர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினார்கள். ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் அமைச்சரான நல்லூர்த் துணையார் சிங்களம், பாளி மொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற தமிழ்ப் புலவர் ஆவார். ஸ்ரீ ராகுல தேரர் பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவர். அவர் தமிழும் நன்றாகக் கற்றிருந்தார்.

சீத்தாவக்க காலத்திலும் (கி.பி. 1530–1592) தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் செல்வாக்கைச் சிங்கள இலக்கியங்களிற் காணலாம். இக்காலத்தில் வாழ்ந்த அழகியவண்ண முகவெட்டி என்னும் புலவர் சிங்களம், சமஸ்கிருதம், பாளி, பிராகிருதம் போன்ற மொழிகளில் மட்டுமல்லாமல் தமிழ் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தவர். சீத்தாவக்க அரசனான முதலாம் இராஜசிங்கன் இந்து மதத்தைத் தழுவியவர். இந்த அரசனும், அரிட்ட கீ வெண்டு பெருமாள் என்பவரும் தமிழின் வளர்ச்சிக்கு மிகவும் தொண்டாற்றினார்கள்.

இதைப்போல, கண்டி அரசர் காலத்திலும் (கி.பி. 1480–1815) தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர மட்டத்திலும் கலாசார ரீதியாகவும் தொடர்பு இருந்ததனாலே தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் செல்வாக்கினால் சிங்கள மொழியும் இலக்கியமும் வளர்ச்சி அடைந்தன.

இவ்வாறாக ஒவ்வொரு காலகட்டமாக நோக்கும் போது, தமிழிலக்கியம் சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சியிற் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது சந்தேகமின்றித் தெரியவரும்.

சிங்கள இலக்கியங்களிலே தமிழ் அறநூல்களின் செல்வாக்கு

தமிழ் மொழி சிங்கள இலக்கியத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தமை பற்றி முன்பு குறிப்பிடப்பட்டது. விசேடமாகத் தமிழ் அறநூல்களின் செல்வாக்கு சிங்கள இலக்கியத்தில் எப்படி இருந்தது என்று ஆராய்வது அவசியமானதாகும்.

சிங்களத்தில் 'உபதேச சாஹித்ய' என்று அழைக்கப்படுகின்ற ஒரு வகையான இலக்கிய அமிசம் இருக்கிறது. உபதேச சாகித்தியம் தருமம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, கருணை, பக்தி போன்ற சீரிய குணங்கள் வாழையடி வாழையாக வளர்வதற்கு உதவும் ஒழுக்க நெறிகளை மக்களிடம் அறிமுகஞ் செய்கின்றது. பாளி இலக்கியத்தின் மிகுந்த செல்வாக்குக்கு உட்பட்டு வளர்ச்சி அடைந்த இலக்கியம்தான் சிங்கள இலக்கியம். சிங்கள ஜாதகக் கதைகள் (සිංහල ජාතක කථා), புத்சரண(බුත්සරණ), அமாவத்துர(අමාවතුර), தர்மபிரதீபிகா (ධර්මප්‍රදීපිකා), சத்தருமரத்னாவலி (සද්ධර්මරත්නාවලි), சத்தர்மாலங்காரய (සද්ධර්මාලංකාරය) போன்ற உரைநடை நூல்களிலும் உபதேசம் அல்லது நீதி கூறப்படும். அதே மாதிரிச் செய்யுள் வடிவில் எழுதப்பட்ட லோவெட சங்கராவ (ලෝවැඩ සඟරාව), சுபாஷிதய (සුභාෂිතය), லோகோபகாரய (ලෝකෝපකාරය), கணதெவி ஹேல்ல (ගණදෙවි හෑල්ල), வதன் கவி பொத்த (වදන් කවි පොත), சிரித்மல்தம (සිරිත් මල්දම) போன்ற நூல்களை நீதியைப் புகட்டும் நூல்களாகக் கருதலாம்.

சிங்கள உபதேச காவியங்கள் அல்லது நீதி இலக்கியங்கள் கோட்டை காலத்தில் முதன்முதலாகச் செய்யுள் வடிவில் எழுதப்பட்டன. அப்படி முதன்முதலாக எழுதப்பட்டநூல் தான் *லோவெட சங்கராவ*. உலக நீதிகள் தொகுப்பு என்பது அதன் கருத்தாகும். வீதாகம மைத்திரி என்ற பௌத்த தேரரால் இந்த நூல் அருளப்பட்டது. தருமபதம் போன்ற பௌத்த நூல்களின் நீதிகள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டுள்ளன.

சீத்தாவக்க காலத்தில் சிங்கள இலக்கியம் சீராகத் திகழவில்லை. அழகியவண்ணன் முகவெட்டியும் அவரின் தந்தையாரான தருமத்துவஜன் பண்டிதரும் இலக்கியப்பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். *சுபாஷிதய* என்ற நீதி நூலை எழுதியவர் அழகியவண்ணன் முகவெட்டி பண்டிதர். அவரின் இந்தப் பணி அக்காலகட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் உடையதாக இருந்தது. அவர் இந்த நீதி இலக்கியத்தை உருவாக்கும் பொழுது பாளி, சமஸ்கிருதம், தமிழ் போன்ற மொழிகளிலுள்ள கருத்துக்களை நன்றாகத் தழுவியிருக்கிறார். சுபாஷித நூலின் ஆரம்பத்தில் மேல்வருமாறு கூறுகிறார் அழகியவண்ணன் முகவெட்டிப் புலவர்.

පසළ පොරණ ඉසිවර මුවෙනි මන නඳ
දෙමළ සකු මගද නොහසල සතට දද
පුවළ නිති සත ගත පද අරැත් ලෙද
සිහළ බසින් සැකෙවින් කියමි පද බැඳ [6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் ''தமிழ், சமஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளை அறியாத பாமர மக்களுக்காக புராதன முனிவர்கள் அருளிய நீதிகளைப் பொருள் மாறுபடாமற் சிங்களத்திற் பாடுகிறேன்'' என்பதாகும்.

மேலே குறிப்பிட்ட பாடலில் அழகியவண்ணன் தமது நீதிகளை வெளிப்படுத்துவதற்குத் தேவையான எண்ணக்கருக்களைப் பாளி, சமஸ்கிருத நீதி நூல்களிலிருந்தும் தமிழ் அறநூல்களிலிருந்தும் எடுத்தாண்டுள்ளார்.

ஔவையார் அருளிய நீதிநூல்களாகக் கருதப்படும் மூதுரை, நல்வழி என்ற நூல்களிலிருந்தும் நீதி வெண்பாவிலிருந்தும் பெறப்பட்ட நீதிக் கருத்துக்களை சுபாஷித நூலிற் காணலாம். அழகியவண்ணன் மூதுரையிலிருந்து எடுத்த நீதிகளில் ஒன்றைக் கீழே வரும் சுபாஷித பாடலிற் காணலாம்.

සත්ගුණයුත් සතන් හට වැඩ කළොත් සරු
අත්පිට දියුණුවම පලදේය නිරතුරු
වත් කළ දිය නෙරළු තුරු මුලට පියකරු
දෙත් මුදුනෙන් පල රැස රැගෙන අමයුරු [7]

இந்தச் சிங்களப் பாடலின் கருத்து: நல்ல குணங்கள் கொண்ட ஒருவனுக்கு நீங்கள் உதவியொன்று செய்தால் அந்த உதவிக்குப் பதிலாக உங்களுக்கும் சிறந்த உதவியொன்று கிடைக்கும். எப்படியாக கிடைக்குமென்றால் தென்னை மரத்தடியில் ஊற்றிய வெற்று நீர் சுவை மிகுந்த அமிழ்தமான இளநீராகத் திரும்பக் கிடைப்பதைப் போலாகும். இந்தத் கருத்தையும் அதே உவமைகளையும் கொண்ட மூதுரைப் பாடலைப் பார்ப்போம்.

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால் [8]

சுபாஷித என்ற நூலில் வரும் மூதுரையின் செல்வாக்கைப் பெற்ற இன்னுமொரு பாடலைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නැණැති දනන් හට මඳ ගුණයක් කළද
පවති ගල කෙටූ අකුරක් මෙන් නිබඳ
විමති දනන් හට කිසි ගුණ නොමඳ
එනැති වේය දිය පිට ඇඳි ඉරක් ලෙද[9]

இந்தப் பாடலின் கருத்து இவ்வாறாக வரும்: நல்ல குணமுடையவர்களுக்குச் செய்த சிறிய உதவியானது கல்லிற் செதுக்கிய எழுத்தைப் போல நிலைத்திருக்கும். ஆனால் தீயவர்களுக்குச் செய்த உதவி நீரில் வரைந்த கோடு போல உடனே அழிந்து விடும்.

சிங்கள் நூலிற் காணப்படும் நீதிக் கருத்து மூதுரையில் மேல் வருமாறு வரும்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல் மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத
ஈரமில்லாத நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்[10]

சுபாஷித நூலில் வருகின்ற மற்றொரு பாடல்:

කුස ඔත සිය සොහොවුරු වුවද තම හට
හිත නැත යෙහෙ දුරු කළ පොකුරඹ ලෙසට
තම ගත වා පිත් සෙම් කිපෙනුය මරට
වන ගත ඔසු වග හිත වෙයි සුව පතට[11]

"உடன் பிறந்த தனது சகோதரன்மீது தனக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தால் தாமரையிலையில் விழுந்த சொட்டுகள் போலக் கை விட வேண்டும். வனங்களில் பிறந்த மூலிகையானாலும் உடல் நோயின் துன்பத்தை அகற்றும்." இந்தக் கருத்துக்கு சமமான கருத்துக்களை அடங்கியுள்ள மூதுரையின் நீதிக் கருத்தைப் பார்ப்போம்.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்தே போல்வரும் உண்டு"[12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதுரையிலிருந்து எடுத்த கருத்துக்கள் மட்டுமின்றி நல்வழியிலிருந்து எடுத்த நீதிகளும் சுபாஷித நூலில் உண்டு. அப்படியான சுபாஷித பாடல் ஒன்று:

තැන තැන නිදන් කොට නොතබා හැම දනම
කව පොව යදින් හට දන් දෙව වඩා පෙම
මිහි බැඳි බිඟුන් හට වන ලෙස දැක දැකම
තව තව ලොබින් දන රැස් කොට තබනු කිම්[13]

இந்தப் பாடலின் கருத்து மேல்வருமாறு வரும்.

"உங்கள் பணத்தைப் புதைத்து வையாமல் நன்றாகச் சாப்பிடுங்கள், குடியுங்கள், யாசகர்களுக்கு அன்ன தானம் செய்யுங்கள். இல்லாவிட்டால் தேனீக்கள் பாடுபட்டுச் சேகரித்த தேனை இழந்து போவதைப் போல எல்லாவற்றையும் இழக்க நேரும்."

இந்த பாடலின் நீதிக் கருத்து சிறிது மாறுபட்ட வடிவில் நல்வழியில் இப்படியாக வரும்:

பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டுஇங்கு
ஆவிதான் போயின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள்அந்தப் பணம்[14]

இப்பாடல் கூறும் கருத்தை அபூர்வமாக வேறு விதத்திலே அழகியவண்ணன் பாடினார்.

தமிழ் மொழியில் மிகுந்த ஆர்வம் கொண்ட அழகியவண்ணன் என்னும் புலவர் நீதி வெண்பா என்ற அறநூலிலிருந்தும் சில நீதிக்கருத்துக்களை எடுத்து, தன்னுடைய நீதி நூலான சுபாஷிதயவை அலங்கரித்துள்ளார். முதலில் சுபாஷித நூலில் வரும் இந்தப் பாடலைப் பார்ப்போம்.

කුරිරු ගොර සපුන්ගේ දළ'ගෙහි විසය
මදුරු මැසි කැලන්ගේ තුඩ'ගෙහි විසය
රුදුරු නුහුසුවන්ගේ වල'ගෙහි විසය
නපුරු දුදනන්ගේ සියල'ගෙහිම විසය[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடலின் கருத்து: பாம்பின் விஷம் அதன் பல்லில் இருக்கும். நுளம்பு கொசு போன்றவற்றின் விஷம் அவற்றின் கொடுக்கில் இருக்கும். ஆனால் தீயவனின் முழு உடலிலும் விஷம்தானே.

இந்தக் கருத்துக்களோடு மேல்வரும் நீதி வெண்பாவின் செய்யுளைப் பார்ப்போம்.

துர்ச்சனரும் பாம்பும் தலையொக்கினும் பாம்பு
துர்ச்சனரை ஒகுமோ தோகையே – துர்ச்சனர்தாம்
எந்த விதத்தாலு மிணங்காரே பாம்பு மணி
மந்திரத்தாலாமே வசம் [16]

மூதுரை, நல்வழி, நீதி வெண்பா போன்ற தமிழ் நீதி நூல்களின் மிகுந்த செல்வாக்கை அழகியவண்ணன் முகவெட்டி பாடிய *சுபாஷிதய* நூலிற் காணலாம். அவர் தமிழ் நூல்களின் நீதிக்கருத்துக்களை எடுத்து அவற்றைச் சிங்களக் கவிநயத்தோடு அபூர்வமாக கலக்கி அருமையான நீதிகளைக் கொண்ட பாடல்களைப் படைத்துள்ளார்.

கண்டி மன்னர் காலத்திற் எழுந்த சிங்கள நீதி நூல்களினும் தமிழின் செல்வாக்கை அதிக அளவிற் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தக் காலத்தில் தமிழ் மொழி அரச சபையிலும் போற்றப்பட்ட மொழியாகத் திகழ்ந்தது. அதே போல, தமிழிற் பாண்டித்தியம் பெற்ற சிங்களப் புலவர்களும் வாழ்ந்தார்கள். சீத்தாவக்க காலத்தில் வாழ்ந்த அழகியவண்ணனை விட தமிழிலே மிகத் துறை போகியவராக விளங்கியவர் ரணஸ்கல்லே தேரர். இவராற் பாடப்பட்ட *லோகோபகாரய* என்ற நீதி நூலில் அற நூல்களின் செல்வாக்கை மிகுந்த அளவிற் காணலாம். இவர் திருக்குறள் போன்ற அறநூல்களின் நீதிகளையும் அறம் சார்ந்த கருத்துகளையும் எடுத்து இந்த அருமையான நூலைப் படைத்துள்ளார்.

லோகோபகாரய என்ற நூலில் இருக்கும் மேல்வருஞ் செய்யுள் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අමාරසයට වැඩි
රසයෙක් නොමැත සුරන් බුදිනා
ඊටත් වැඩි රසෙකි
තමා දරුවන් හැනූ සුබොජුන්[17]

இந்தச் செய்யுளின் கருத்துப் மேல்வருமாறு அமையும்: தமது மக்கள் சிறுகை அளாவிய கூழ், அமிழ்தினை விடச் சுவையாக இருக்கும். இந்தக் கருத்தை மேல்வரும் குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ் [18]

லோகோபகாரய நூலிற் காணப்படும் இந்தச் செய்யுளிலும் திருக்குறளின் செல்வாக்கைக் காணலாம்.

දෙගුරුන් විසින් තම
දරුවන්ට දෙන නොමඳ දන නම්
වියතුන් සබා මැද
ඉන්ට ඉදිරිව සිල්ප දෙනු මැයි[19]

இந்தச் செய்யுளின் பொருள் இவ்வாறு அமையும்: பெற்றோர்களாலே தமது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறையாத செல்வம் கல்விதான். கற்றோர்களின் சபையிலே நடுவே பயமின்றி இருக்க அது உதவும். பின்வரும் குறளின் செல்வாக்குத்தான் மேலே குறிப்பிட்ட செய்யுளிற் காணப்படுகிறது.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் [20]

லோகோபகார நூலில் ரணஸ்கல்லே தேரர் மற்றொரு செய்யுளின் நீதிக் கருத்தை அபூர்வமான முறையில் ஆக்கம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සවන පිනවන සව්
නදට තුටු වන දනෝ ලෙව් හි
තම දරුවන් බොළඳ
වදන් නෑසූ කෙනෙකි එදනෝ [21]

செவியிலே படும் இனிமையான இசை கேட்டுத் தம்மக்களின் மழலைச் சொற்கள் கேளாதவர்கள் அந்த இசை இனிமையானது என்று சொல்கிறார்கள். மேல்வரும் குறளிற் பிரிதிபலிக்கின்ற கருத்தோடு இந்தக் கருத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் [22]

ரணஸ்கல்லே தேரர் திருக்குறளில் கூறப்படும் கருத்துகளை மட்டுமன்றி நல்வழி, மூதுரை போன்ற அறநூல்களிலிருந்தும் கருத்துகளை எடுத்துள்ளார். *லோகோபகாரய* நூலில் வரும்

ඉසුරෙන් පිරිහුණත්
සුදන තම ගුණය අඩුනොකරත්
බිඳුනත් රන් බඳුන
ඇති බර අගය අඩු නොවන මෙන් [23]

என்னும் செய்யுளின் பொருள் இவ்வாறு வரும்: பொற்குடம் உடைந்தாலும் அதன் பெறுமதி குறையாமல் நிற்கும். அதே போல நல்லவர் வறுமை அடைந்து விட்டாலும் அவரின் நற்குணம் இருக்கும்.

இந்தக் கருத்து, மேல் வரும் மூதுரையின் நீதிக் கருத்தாகும்.

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும் – சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால் [24]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக ரணஸ்கல்லே தேரர் தமிழ் அறநூல்களிலிருந்து கருத்துகளை எடுத்து, அதேபோலக் கூறாமல் சிங்கள மொழி நடைக்கு ஏற்ற வகையில் அபூர்வமாகப் பாடியுள்ளார். *லோகோபகாரய* நூலிலே தமிழ் அறநூல்களின் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம்.

கண்டி அரசர் காலத்தில் வாழ்ந்த புலவரான அத்தரகம ராஜகுரு பண்டாரவும் தமிழ் நன்றாகக் கற்று அதில் பாண்டித்தியம் பெற்றவர். கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறும் *வதன்கவி பொத்த* என்ற நூலில் நாலடியார், திருக்குறள் போன்ற தமிழ் அறநூல்களின் கருத்துகளைக் காணலாம். அந்த நூலில் வரும் இந்தப் பாடலை அவதானிப்போம்.

තිබූ තැනක සොරසතුරන් ගත නොහෙනා
එසැඩ මහා වතුරෙන්වත් වල නොහෙනා
කෝප වූවත් රජ මැතිඳුන් ගත නොහෙනා
උගතමනා ශිල්පයමයි මතු රැකෙනා [25]

நாலடியாரில் வரும் இந்தச் செய்யுளை நோக்கலாம்.

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற [26]

இதிலே வருகின்ற கருத்தைப் பொருள் நயத்தோடு அபூர்வமாகப் படைத்துள்ளார் ராஜகுரு பண்டார.

இவ்வாறு, சீத்தாவக்க, கண்டி காலங்களில் எழுதப்பட்ட பலநூல்களிலே தமிழ் அறநூற்செல்வாக்கை மிகுந்த அளவிற் காணக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சிங்கள மொழியுடன் தமிழ் மொழி தொடர்பு கொண்டது. சிறப்பாக குருணாகல், தம்பதெனிய, கோட்டை, சீத்தாவக்க, கண்டி கால கட்டங்களில் எழுதப்பட்ட பல சிங்கள நூல்களிலே தமிழின் செல்வாக்கைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள்

1 ධම්මරතන හිමි, හිස්සැල්ලේ සිංහලයේ ද්‍රවිඩ බලපෑම්, මානව හිතවාදී ලේඛක පර්ෂදය, කොළඹ, 2001, පිටුව 61.

2 ජයසිංහ, ධම්මික, සිංහල ව්‍යාකරණයෙහි දෙමළ බලපෑම්, ශාස්ත්‍රවේදී නිබන්ධනය, 2004, පිටුව 62.

3 ධම්මරතන හිමි, හිස්සැල්ලේ, සිංහලයේ ද්‍රවිඩ බලපෑම්, මානව හිතවාදී ලේඛක පර්ෂදය, කොළඹ, 2001, පිටුව 65.

4 එම.

5 එම, පිටුව 66.

6 සුභාෂිතය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව කොළඹ 2011, පිටුව 04.

7 එම, පිටුව. 33

8 சின்னசாமி, தே. ப. அவ்வையாரின் நீதி நூல்கள், நாச்சியார் பதிப்பகம், சென்னை, 2009, பக்கம் 35.

9 සුභාෂිතය, අධ්‍යාපන ප්‍රකාශය දෙපාර්තමේන්තුව, කොළඹ, 2011, පිටුව 34.

10 சின்னசாமி, தே. ப. அவ்வையாரின் நீதி நூல்கள், மேலது, பக்கம் 36.

11 සුභාෂිතය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව, කොළඹ 2001, පිටුව 32.

12 சின்னசாமி, தே. ப. அவ்வையாரின் நீதி நூல்கள், மேலது, பக்கம் 43.

13 සුභාෂිතය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව, කොළඹ 2001, පිටුව 68.

14 சின்னசாமி, தே. ப. அவ்வையாரின் நீதி நூல்கள், மேலது, பக்கம் 58.

15 සුභාෂිතය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව, කොළඹ 2001, පිටුව 29.

16 பாலசந்திர முதலியார், கு. நீதிநூல் தொகை, ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை, பக்கம் 16.

17 ලෝකෝපකාරය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව කොළඹ, 2005, පිටුව 05.

18 திருக்குறள், பரிமேலழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2002, பக்கம் 28.

19 ලෝකෝපකාරය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව කොළඹ, 2005, පිටුව 05.

20 திருக்குறள், பரிமேலழகர் உரை, மேலது, பக்கம் 29.

21 ලෝකෝපකාරය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව කොළඹ, 2005, පිටුව 09.

22 திருக்குறள், பரிமேழலகர் உரை, மேலது, பக்கம் 29.

23 ලෝකෝපකාරය, අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව කොළඹ, 2005, පිටුව 08.

24 சின்னசாமி, தே. ப. அவ்வையாரின் நீதி நூல்கள், மேலது, பக்கம் 42

25. ගණදෙවි හෑල්ල සහ වදන් කවි පොත අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව, කොළඹ 2001, පිටුව 12.

26. நாலடியார், ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், சென்னை, 2007, பக்கம் 54.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தமிழர் சமூகப் பண்பாட்டு வரலாற்றில் முதலாவது காலப்பகுதியாக விளங்கும் சங்க காலம் எனக் குறிப்பிடப்படுகின்ற காலத்தை அடுத்து வருகின்ற காலப்பகுதியை சங்கமருவிய காலம் எனத் தமிழ் வரலாற்றாசிரியர்கள் அழைத்தாலும் அதனை ‘அறநெறிக் காலம்’ என்று அழைப்பதே பொருத்தமுடையதாகும். இக்காலத்திலே தோன்றிய அறநூல்களும், அறக்கருத்துக்களின் எழுச்சியும், பக்தி நெறியின் தோற்றமும், இலக்கண நூலின் தோற்றமும், காப்பியங்களின் உருவாக்கமும் இக்காலப்பகுதியைத் தமிழக வரலாற்றின் ஓர் உன்னதமான காலப்பகுதியாகக் காட்டி நிற்கின்றன. அறம் என்ற சொல் பல்வேறு அர்த்தங்களைக் கொண்ட பொருள் பொதிந்த ஒரு சொல் ஆகும். சமண, பௌத்த மதங்களின் தமிழ்நாட்டு வருகை, அம்மதங்கள் போதித்த உன்னதமான அறக்கருத்துக்கள், அவை தமிழகச் சமயங்களில் ஏற்படுத்திய செல்வாக்கு, கலை மரபுகளின் வளர்ச்சி என்று சகல துறைகளிலும் ஏற்பட்ட அபிவிருத்திக்கு வித்திட்டது இந்த அறநெறிக்காலமே.”

ISBN: 978-955-9233-18-3

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org